வெளியீடு : 8-1-2018 Issued : 8-1-2018

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

செவ்வாய்க்கிழமை, ஜூன் 20, 2017—தொகுதி 25—எண் 1

Tuesday the 20th June 2017—Volume 25—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

20–6–2017

உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
Governor and Council of Ministers	xi-xv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvi-x ix
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xx-xxix
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-52
2. தகவல் கோரல்—	
(அ) மாட்டிறைச்சி குறித்து மத்திய அரசு வெளியிட்ட விதிகளுக்கு எதிராக சிறப்புத் தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தல்	52-64,78
திரு. மு.க. ஸ்டாலின்	52-54,62
திரு. கரி. இராமசாமி	54-55,63
*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்	55-56,63
*திரு. எம். தமிமுன் அன்சாரி	57-58
திரு. உ. தனியரசு	58-60
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	60-61,64
(ஆ) கோயம்புத்தூர், காந்திபுரம் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி அலுவலகம்மீது பெட்ரோல் குண்டு வீச்சு	64-66
திரு. நா. கார்த்திக்	65
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	65-66
(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு	66-67
*முனைவர் கோவி. செழியன்	67

பக்கங்கள்

3. கவன ஈர்ப்பு—

மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குதல் 67-77

**திரு. அர. சக்கரபாணி* 67,70-72, 75-77

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா* 68-70, 72-75

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2017 77-78

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்* 77-78

5. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி* 79-240

(அ) *கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை*

(ஆ) *கோரிக்கை எண் 42– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை*

(இ) *கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 79,99-100, 120-121,130, 134-135, 138-141, 144-150, 152-155, 158-159,162, 189-190, 200-202, 220-225, 232-233

திரு. கு. பிச்சாண்டி 130-131,137-138,143-147, 150-151, 153-161

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
திரு. துரைமுருகன்	131,133-134, 136-137, 159
மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்	132,238,240
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	133, 136
திரு. மு.க. ஸ்டாலின்	135-136, 139-140, 142,145
மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்	142-143
மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்	156-157
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	161-162
திரு. மு. சக்ரபாணி	162-169
திரு. அ. நடராஜன்	169-183
**திரு. ஆர். கணேஷ்*	105-106, 128,183-188
**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்*	85,106,128, 190-200
**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்*	197
மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்	198-199
திரு. V.T. கலைச்செல்வன்	202-209, 211-215
திரு. அர. சக்கரபாணி	95-96,116,210
**திரு. எஸ்.ஆர். இராஜா*	94,115,124-125,215-220, 223-232, 235-240
**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்*	234
மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி	235
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	237-238
6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	240-241

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—திரு. சிஎச். வித்யாசாகர் ராவ்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**
பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

2. **வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:**
வனம்

3. **பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**
பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

4. **கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:**
கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

5. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்

6. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்

7. மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)

8. சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்

9. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**
தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

10. **சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

11. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

12. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**
சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

13. **உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**
உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

14. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**
கைத்தறி மற்றும் துணிநூல்

15. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

16.	**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்*
17.	**வேளாண்மைத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*
18.	**செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்*
19.	**வருவாய்த் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு*
20.	**சுற்றுலாத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
21.	**வணிக வரித் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்*

22.	**பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
23.	**ஊரகத் தொழில் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** *குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்*
24.	**தொழிலாளர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்*
25.	**போக்குவரத்துத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*
26.	**தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** *தகவல் தொழில்நுட்பம்*
27.	**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

28. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** *கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்*
29. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *இந்து சமய மற்றும் அறநிலையங்கள் மற்றும் தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு*
30. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்*
31. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *கால்நடை பராமரிப்பு*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – THIRU Ch. VIDYASAGAR RAO

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

 Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports

2. **Minister for Forests** .. **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:**

 Forests

3. **Minister for School Education & Sports and Youth Welfare** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**

 School Education, Archaeology, Youth Welfare and Sports Development Department

4. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**

 Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

5. **Minister for Electricity, Prohibition & Excise** .. **The Hon. Thiru P. Thangamani:**

 Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act

6.	**Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme**	..	**The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme
7.	**Minister for Fisheries, Finance and Personnel & Administrative Reforms**	..	**The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation, Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training)
8.	**Minister for Law, Courts & Prisons**	..	**The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons
9.	**Minister for Higher Education**	..	**The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
10.	**Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme**	..	**The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme

11.	**Minister for Industries**	..	**The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives
12.	**Minister for Environment**	..	**The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control
13.	**Minister for Food & Civil Supplies**	..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
14.	**Minister for Handlooms & Textiles**	..	**The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles
15.	**Minister for Housing & Urban Development**	..	**The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority
16.	**Minister for Health & Family Welfare**	..	**The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare
17.	**Minister for Agriculture**	..	**The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

18. **Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru Kadambur Raju:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press
19. **Minister for Revenue**	..	**The Hon. Thiru R.B. Udhayakumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies
20. **Minister for Tourism**	..	**The Hon. Thiru Vellamandi N. Natarajan:** Tourism, Tourism Development Corporation
21. **Minister for Commercial Taxes**	..	**The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act
22. **Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development
23. **Minister for Rural Industries**	..	**The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries
24. **Minister for Labour**	..	**The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board

25. **Minister for Transport** .. **The Hon. Thiru M.R. Vijayabhaskar:**

 Transport, Nationalised Transport and Motor Vehicles Act

26. **Minister for Information Technology** .. **The Hon. Dr. M. Manikandan:**

 Information Technology

27. **Minister for Adi Dravidar & Tribal Welfare** .. **The Hon. Tmt V.M. Rajalakshmi:**

 Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

28. **Minister for Khadi & Village Industries Board** .. **The Hon. Thiru G. Baskaran:**

 Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan

29. **Minister for Hindu Religious & Charitable Endowments** .. **The Hon. Thiru Sevvoor S. Ramachandran:**

 Hindu Religious & Charitable Endowments and Tamil Official Language & Tamil Culture

30. **Minister for Backward Classes & Minorities Welfare** .. **The Hon. Tmt S. Valarmathi:**

 Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare

31. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P. Balakrishna Reddy:**

 Animal Husbandry

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. சு. ரவி

திரு. பி.எம். நரசிம்மன்

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

திரு. சு. குணசேகரன்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. P. வெற்றிவேல்

செயலாளர் (பொறுப்பு)

திரு. க. பூபதி

#14–06–2017 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர்
திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	..	இணைச் செயலாளர்
திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	..	பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	துணைச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. ஜி. பாண்டுரங்கன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திரு. ஜி. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)

திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	..	குழு அலுவலர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி சீ. உஷா, பி.காம்.	..	சார்புச் செயலாளர்
திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்.	..	தலைமை நிருபர்
திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி சு. சந்தனமதி, பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ.	..	சார்புச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்.சி., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திரு. க. முரளீதரன் நாயர்	..	சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அம்பேத்குமார், திரு. எஸ்.	..	வந்தவாசி (செ.வ.)
2.	அம்மன் கே. அர்ச்சுணன், திரு.	..	கோயம்புத்தூர் தெற்கு
3.	அரசு, டாக்டர் ஆர்.டி.	..	செய்யூர் (செ.வ.)
4.	அரவிந்த் ரமேஷ், திரு. எஸ்.	..	சோழிங்கநல்லூர்
5.	அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி.	..	கோயம்புத்தூர் வடக்கு
6.	அலெக்சாண்டர், திரு. வீ.	..	அம்பத்தூர்
7.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	..	திருச்செந்தூர்
8.	அன்பரசன், திரு. தா.மோ.	..	ஆலந்தூர்
9.	அன்பழகன், திரு. க.	..	கும்பகோணம்
10.	அன்பழகன், திரு. கே.பி.	..	பாலக்கோடு
11.	அன்பழகன், திரு. ஜெ.	..	சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
12.	அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.	..	திருவெறும்பூர்
13.	ஆடலரசன், திரு. ப.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
14.	ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ.	..	நத்தம்
15.	ஆறுக்குட்டி, திரு. வி.சி.	..	கவுண்டம்பாளையம்
16.	ஆறுமுகம், திரு. பா.	..	கந்தர்வகோட்டை (செ.வ.)
17.	ஆஸ்டின், திரு. எஸ்.	..	கன்னியாகுமரி
18.	இரத்தினசபாபதி, திரு. ஏ.	..	அறந்தாங்கி
19.	இரவிச்சந்திரன், திரு. கே.எஸ்.	..	எழும்பூர் (செ.வ.)
20.	இராதாமணி, திரு. கு.	..	விக்கிரவாண்டி

21.	இராமசாமி, திரு. கரி.	..	காரைக்குடி
22.	இராமச்சந்திரன், திரு. ஆர்.டி.	..	குன்னம்
23.	இராமச்சந்திரன், திரு. எம்.	..	ஒரத்தநாடு
24.	இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	..	அருப்புக்கோட்டை
25.	இராமலிங்கம், திரு. கே.வி.	..	ஈரோடு மேற்கு
26.	இராஜன் செல்லப்பா, திரு. வி.வி.	..	மதுரை வடக்கு
27.	இராஜா, திரு. எஸ்.ஆர்.	..	தாம்பரம்
28.	இராஜேந்திரன், திரு. இரா.	..	சேலம் வடக்கு
29.	இராஜேந்திரன், திரு. சி.வி.	..	பர்கூர்
30.	இன்பசேகரன், திரு. பி.என்.பி.	..	பெண்ணாகரம்
31.	இன்பதுரை, திரு. ஐ.எஸ்.	..	ராதாபுரம்
32.	ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல்.	..	ஆற்காடு
33.	ஈஸ்வரன், திரு. எஸ்.	..	பவானிசாகர் (செ.வ.)
34.	உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	..	உடுமலைப்பேட்டை
35.	உதயகுமார், திரு. ஆர்.பி.	..	திருமங்கலம்
36.	உதயசூரியன், திரு. தா.	..	சங்கராபுரம்
37.	உமா மகேஸ்வரி, திருமதி கு.	..	விளாத்திகுளம்
38.	எடப்பாடி கே. பழனிசாமி, திரு.	..	எடப்பாடி
39.	எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன், திரு.	..	சாத்தூர்
40.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	..	காஞ்சிபுரம்
41.	ஏழுமலை, திரு. டி.எ.	..	பூந்தமல்லி (செ.வ.)
42.	கடம்பூர் ராஜு, திரு.	..	கோவில்பட்டி
43.	கணேசன், திரு. வெ.	..	திட்டக்குடி (செ.வ.)
44.	கணேஷ், திரு. ஆர்.	..	உதகமண்டலம்
45.	கதிர்காமு, டாக்டர் கா.	..	பெரியகுளம் (செ.வ.)
46.	கருணாநிதி, கலைஞர் மு.	..	திருவாரூர்

47.	கருணாநிதி, திரு. இ.	..	பல்லாவரம்
48.	கருணாஸ், திரு. சே.	..	திருவாடனை
49.	கருப்பணன், திரு. கே.சி.	..	பவானி
50.	கலைச்செல்வன், திரு. V.T.	..	விருத்தாசலம்
51.	கனகராஜ், திரு. ஆர்.	..	சூலூர்
52.	கஸ்தூரி வாசு, திருமதி வி.	..	வால்பாறை (செ.வ.)
53.	காந்தி, திரு. ஆர்.	..	ராணிப்பேட்டை
54.	காமராஜ், திரு. இரா.	..	நன்னிலம்
55.	கார்த்திகேயன், திரு. க.	..	ரிஷிவந்தியம்
56.	கார்த்திகேயன், திரு. ப.	..	வேலூர்
57.	கார்த்திக், திரு. நா.	..	சிங்காநல்லூர்
58.	காளிமுத்து, திரு. வி.எஸ்.	..	தாராபுரம் (செ.வ.)
59.	கிரி, திரு. மு.பெ.	..	செங்கம் (செ.வ.)
60.	கீதா, திருமதி, ம.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
61.	கீதா ஜீவன், திருமதி பி.	..	தூத்துக்குடி
62.	குணசேகரன், திரு. சு.	..	திருப்பூர் தெற்கு
63.	குமரகுரு, திரு. இரா.	..	உளுந்தூர்பேட்டை
64.	கோதண்டபாணி, திரு. மு.	..	திருப்போரூர்
65.	கோவிந்தராசு, திரு. மா.	..	பேராவூரணி
66.	சக்கரபாணி, திரு. அர.	..	ஒட்டன்சத்திரம்
67.	சக்திவேல், திரு. எ.பி.	..	சேலம் தெற்கு
68.	சக்ரபாணி, திரு. மு.	..	வானூர் (செ.வ.)
69.	சண்முகநாதன், திரு. எஸ்.பி.	..	ஸ்ரீவைகுண்டம்
70.	சண்முகம், திரு. அ.	..	கிணத்துக்கடவு
71.	சண்முகம், திரு. சி.வி.	..	விழுப்புரம்
72.	சத்திய நாராயணன், திரு. ப.	..	தியாகராய நகர்

73.	சத்யா, திருமதி ப.	..	பண்ருட்டி
74.	சந்திரசேகரன், திரு. சி.	..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
75.	சந்திரசேகரன், திரு. துரை.	..	திருவையாறு
76.	சந்திரசேகர், திரு. இரா.	..	மணப்பாறை
77.	சந்திரபிரபா, திருமதி மு.	..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
78.	சம்பத், திரு. எம்.சி.	..	கடலூர்
79.	சரவணன், திரு. எஸ்.எஸ்.	..	மதுரை தெற்கு
80.	சரஸ்வதி, திருமதி பொன்.	..	திருச்செங்கோடு
81.	சரோஜா, டாக்டர் வி.	..	ராசிபுரம் (செ.வ.)
82.	சாமி, திரு. கே.பி.பி.	..	திருவொற்றியூர்
83.	சித்ரா, திருமதி கு.	..	ஏற்காடு (ஆ.வா.)
84.	சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	..	திரு.வி.க. நகர் (செ.வ.)
85.	சிவசுப்பிரமணி, திரு. வே.பொ.	..	மொடக்குறிச்சி
86.	சின்னதம்பி, திரு. ஆர்.எம்.	..	ஆத்தூர் (செ.வ.)
87.	சின்னராஜ், திரு. ஓ.கே.	..	மேட்டுப்பாளையம்
88.	சீத்தாபதி, திருமதி, பெ.	..	திண்டிவனம் (செ.வ.)
89.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	..	விருதுநகர்
90.	சுதர்சனம், திரு. எஸ்.	..	மாதவரம்
91.	சுந்தரராஜ், திரு. ஆர்.	..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
92.	சுந்தர், திரு. க.	..	உத்திரமேரூர்
93.	சுப்பிரமணியன், திரு. மா.	..	சைதாப்பேட்டை
94.	சுப்ரமணி, திரு. பெ.	..	தருமபுரி
95.	சுரேஷ் ராஜன், திரு. என்.	..	நாகர்கோவில்
96.	செங்குட்டுவன், திரு. டி.	..	கிருஷ்ணகிரி

97.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	..	கோபிச்செட்டி-பாளையம்
98.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	..	பழனி
99.	செந்தில்பாலாஜி, திரு. V.	..	அரவக்குறிச்சி
100.	செம்மலை, திரு. S.	..	மேட்டூர்
101.	செல்லூர் கா. ராஜு, திரு.	..	மதுரை மேற்கு
102.	செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ்.	..	தென்காசி
103.	செல்வம், திரு. கு.க.	..	ஆயிரம் விளக்கு
104.	செல்வராசு, திரு. எம்.	..	முசிறி
105.	செழியன், முனைவர் கோவி.	..	திருவிடைமருதூர் (செ.வ.)
106.	சேகரன், திரு. கே.வி.	..	போளூர்
107.	சேகர், திரு. C.V.	..	பட்டுக்கோட்டை
108.	சேகர்பாபு, திரு. பி.கே.	..	துறைமுகம்
109.	சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு.	..	ஆரணி
110.	சௌந்தரபாண்டியன், திரு. அ.	..	லால்குடி
111.	தங்கதுரை, திரு. ஆர்.	..	நிலக்கோட்டை (செ.வ.)
112.	தங்கப்பாண்டியன், திரு. சௌ.	..	ராஜபாளையம்
113.	தங்கமணி, திரு. பி.	..	குமாரபாளையம்
114.	தங்கம் தென்னரசு, திரு.	..	திருச்சுழி
115.	தமிமுன் அன்சாரி, திரு. எம்.	..	நாகப்பட்டினம்
116.	தமிழ்ச்செல்வன், திரு. தங்க.	..	ஆண்டிப்பட்டி
117.	தமிழ்ச்செல்வன், திரு. ரா.	..	பெரம்பலூர் (செ.வ.)
118.	தனபால், திரு. ப.	..	அவினாசி (செ.வ.)
119.	தனியரசு, திரு. உ.	..	காங்கேயம்
120.	திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	..	திண்டுக்கல்
121.	திராவிடமணி, திரு. மு.	..	கூடலூர் (செ.வ.)

122.	துரை. கி. சரவணன், திரு.	..	புவனகிரி
123.	துரைக்கண்ணு, திரு. இரா.	..	பாபநாசம்
124.	துரைமுருகன், திரு.	..	காட்பாடி
125.	தூசி கே. மோகன், திரு.	..	செய்யாறு
126.	தென்னரசு, திரு. கே.எஸ்.	..	ஈரோடு கிழக்கு
127.	நடராஜன், திரு. அ.	..	பல்லடம்
128.	நடராஜ், திரு. ஆர்.	..	மயிலாப்பூர்
129.	நந்தகுமார், திரு. ஏ.பி.	..	அணைக்கட்டு
130.	நரசிம்மன், திரு. பி.எம்.	..	திருத்தணி
131.	நல்லதம்பி, திரு. அ.	..	திருப்பத்தூர்
132.	நிலோபர் கபில், டாக்டர் (திருமதி)	..	வாணியம்பாடி
133.	நீதிபதி, திரு. பா.	..	உசிலம்பட்டி
134.	நேரு, திரு. கே.என்.	..	திருச்சிராப்பள்ளி மேற்கு
135.	பரமசிவம், டாக்டர் V.P.B.	..	வேடசந்தூர்
136.	பரமேஸ்வரி, திருமதி மு.	..	மணச்சநல்லூர்
137.	பலராமன், திரு. ப.	..	பொன்னேரி (செ.வ.)
138.	பவுன்ராஜ், திரு. எஸ்.	..	பூம்புகார்
139.	பழனி, திரு. கே.	..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
140.	பழனியப்பன், திரு. பெ.	..	பாப்பிரெட்டிப்பட்டி
141.	பழனிவேல் தியாக ராஜன், திரு.	..	மதுரை மத்தி
142.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	..	குறிஞ்சிப்பாடி
143.	பன்னீர்செல்வம், திரு. ஓ.	..	போடிநாயக்கனூர்
144.	பன்னீர்செல்வம், திரு. வி.	..	கலசப்பாக்கம்
145.	பாண்டி, திரு. ச.	..	முதுகுளத்தூர்
146.	பாண்டியராஜன், திரு. க.	..	ஆவடி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

147.	பாண்டியன், திரு. கே.ஏ.	..	சிதம்பரம்
148.	பாரதி, திரு. பி.வி.	..	சீர்காழி (செ.வ.)
149.	பார்த்திபன், திரு. என்.ஜி.	..	சோளிங்கர்
150.	பாலகிருஷ்ணா ரெட்டி, திரு. பா.	..	ஓசூர்
151.	பாலசுப்பிரமணி, திரு. ஆர்.	..	ஆம்பூர்
152.	பாஸ்கரன், திரு. க.	..	சிவகங்கை
153.	பாஸ்கர், திரு. கே.பி.பி.	..	நாமக்கல்
154.	பிச்சாண்டி, திரு. கு.	..	கீழ்பெண்ணாத்தூர்
155.	பிரகாஷ், திரு. ஒய்.	..	தளி
156.	பிரபு, திரு. அ.	..	கள்ளக்குறிச்சி (செ.வ.)
157.	பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	..	குளச்சல்
158.	புகழேந்தி, திரு. சு.	..	மதுராந்தகம் (செ.வ.)
159.	பூங்கோதை, டாக்டர் (திருமதி)	..	ஆலங்குளம்
160.	பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	..	திருப்பத்தூர்
161.	பெரியசாமி, திரு. இ.	..	ஆத்தூர்
162.	பெரியண்ணன் அரசு, திரு.	..	புதுக்கோட்டை
163.	பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	..	மேலூர்
164.	பென்ஜமின், திரு. பா.	..	மதுரவாயல்
165.	பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	..	பொள்ளாச்சி
166.	பொன்முடி, முனைவர் க.	..	திருக்கோவிலூர்
167.	போஸ், திரு. ஏ.கே.	..	திருப்பரங்குன்றம்
168.	மணிகண்டன், டாக்டர் எம்.	..	இராமநாதபுரம்
169.	மணியன், திரு. ஓ.எஸ்.	..	வேதாரண்யம்
170.	மதிவாணன், திரு. உ.	..	கீழ்வேளூர் (செ.வ.)
171.	மருதமுத்து, திரு. அ.	..	கெங்கவல்லி (செ.வ.)

172.	மனோகரன், திரு. அ.	.. வாசுதேவநல்லூர் (செ.வ.)
173.	மனோ தங்கராஜ், திரு. த.	.. பத்மநாபபுரம்
174.	மனோரஞ்சிதம், திருமதி நா.	.. ஊத்தங்கரை (செ.வ.)
175.	மனோன்மணி, திருமதி ப.	.. வீரபாண்டி
176.	மஸ்தான், திரு. கே.எஸ்.	.. செஞ்சி
177.	மாசிலாமணி, டாக்டர் இரா.	.. மயிலம்
178.	மாணிக்கம், திரு. கி.	.. சோழவந்தான் (செ.வ.)
179.	மாரியப்பன் கென்னடி, திரு. சோ.	.. மானாமதுரை (செ.வ.)
180.	முத்தையா, டாக்டர் எஸ்.	.. பரமக்குடி (செ.வ.)
181.	முருகன், திரு. ஆர்.	.. அரூர் (செ.வ.)
182.	முருகன், திரு. பி.	.. வேப்பனஹள்ளி
183.	முருகுமாறன், திரு. என்.	.. காட்டுமன்னார்-கோவில் (செ.வ.)
184.	முருகையா பாண்டியன், திரு. ஆர்.	.. அம்பாசமுத்திரம்
185.	முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம்.	.. கடையநல்லூர்
186.	மூர்த்தி, திரு. கே.எஸ்.	.. பரமத்தி–வேலூர்
187.	மூர்த்தி, திரு. பி.	.. மதுரை கிழக்கு
188.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	.. ஆலங்குடி
189.	மைதீன்கான், திரு. டி.பி.எம்.	.. பாளையங்கோட்டை
190.	மோகன், திரு. எம்.கே.	.. அண்ணா நகர்
191.	ரகுபதி, திரு. எஸ்.	.. திருமயம்
192.	ரங்கநாதன், திரு. ப.	.. வில்லிவாக்கம்
193.	ரவி, திரு. சு.	.. அரக்கோணம் (செ.வ.)
194.	ராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி

195.	ராதாகிருஷ்ணன், திரு. வி.	..	மயிலாடுதுறை
196.	ராமர், திரு. எ.	..	குளித்தலை
197.	ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என்.	..	ஜெயங்கொண்டம்
198.	ராமு, திரு. அ.	..	குன்னூர்
199.	ராஜலெட்சுமி, திருமதி வி.எம்.	..	சங்கரன்கோவில் (செ.வ.)
200.	ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம். ஆர்.	..	அந்தியூர்
201.	ராஜா, திரு. சி.	..	சங்கரி
202.	ராஜா, திரு. டி.ஆர்.பி.	..	மன்னார்குடி
203.	ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி.	..	சிவகாசி
204.	ராஜேந்திரன், திரு. சு.	..	அரியலூர்
205.	ராஜேந்திரன், திரு. வி.ஜி.	..	திருவள்ளூர்
206.	ராஜேஷ் குமார், திரு. செ.	..	கிள்ளியூர்
207.	ரெங்கசாமி, திரு. எம்.	..	தஞ்சாவூர்
208.	லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ்.	..	திருநெல்வேலி
209.	லோகநாதன், திரு. கோ.	..	கீழ்வைத்திணான்-குப்பம் (செ.வ.)
210.	வசந்தகுமார், திரு. எச்.	..	நாங்குநேரி
211.	வரலட்சுமி, திருமதி ம.	..	செங்கல்பட்டு
212.	வளர்மதி, திருமதி சீ.	..	ஸ்ரீரங்கம்
213.	வாகை சந்திரசேகர், திரு.	..	வேளச்சேரி
214.	விருகை V.N. ரவி, திரு.	..	விருகம்பாக்கம்
215.	விஜயகுமார், திரு. க.நா.	..	திருப்பூர் வடக்கு
216.	விஜயதரணி, திருமதி எஸ்.	..	விளவங்கோடு
217.	விஜய பாஸ்கர், டாக்டர் சி.	..	விராலிமலை
218.	விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர்.	..	கரூர்

219.	விஜியகுமார், திரு. கே.எஸ்.	..	கும்மிடிப்பூண்டி
220.	வீரமணி, திரு. கே.சி.	..	ஜோலார்பேட்டை
221.	வெங்கடாச்சலம், திரு. என்.டி.	..	பெருந்துறை
222.	வெங்கடாஜலம், திரு. கோ.	..	சேலம் மேற்கு
223.	வெல்லமண்டி ந. நடராஜன், திரு.	..	திருச்சிராப்பள்ளி கிழக்கு
224.	வெற்றிவேல், திரு. ச.	..	ஓமலூர்
225.	வெற்றிவேல், திரு. P.	..	பெரம்பூர்
226.	வேலு, திரு. எ.வ.	..	திருவண்ணாமலை
227.	வேலுமணி, திரு. எஸ்.பி.	..	தொண்டாமுத்தூர்
228.	ஜக்கையன், திரு. எஸ்.டி.கே.	..	கம்பம்
229.	ஜெயக்குமார், திரு. டி.	..	இராயபுரம்
230.	ஜெயந்தி பத்மநாபன், திருமதி சி.	..	குடியாத்தம் (செ.வ.)
231.	ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா.	..	மடத்துக்குளம்
232.	ஸ்டாலின் குமார், திரு. செ.	..	துறையூர் (செ.வ.)
233.	ஸ்டாலின், திரு. மு.க.	..	கொளத்தூர்
234.	நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி)		நியமனம்
235.	வெற்றிடம்	..	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். முத்துக்குமாரசாமி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 6, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூன் 20, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.”

மழை நீர் வானத்திலிருந்து பெய்வதால்தான் இந்த உலகம் வளமாக உள்ளது. எனவே, உலகத்திலுள்ள அனைத்து உயிர்களுக்கும் மழை நீர் அமுதம் போன்றது என்பதை உணர வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள்.* *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

வன விலங்குகளைப் பாதுகாத்தல்

***4508—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலைப் பகுதிகளிலுள்ள வன விலங்குகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள், மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலைப்பகுதிகளிலுள்ள வன விலங்குகளைப் பாதுகாக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேள்வி கேட்டிருக்கிறார். மதுரை மாவட்டத்திற்கும், திண்டுக்கல் மாவட்டத்திற்கும் நடுவிலே அமைந்திருக்கின்ற, திண்டுக்கல் வனக் கோட்டத்திற்குட்பட்ட நத்தம் வட்டத்தில் 6,811.61 ஹெக்டேர் பரப்பளவுள்ள வனப் பகுதி, அழகர்கோவில் காப்புக் காடாக அறிவிக்கை செய்யப்பட்டு, வனத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் காட்டு மாடுகள், கேளை ஆடுகள், நரி, உடும்பு, முயல், குரங்கு, மயில் மற்றும் பாம்புகள் என பல்வேறு வகையான உயிரினங்கள் வாழ்கின்றன. அழகர்மலை காப்புக் காட்டுப் பகுதிகளில் உள்ள வன உயிரினங்களைப் பாதுகாக்கும்வகையில் 2012-2013 ஆம் ஆண்டு, நிதிக் குழுமத் திட்டத்தின்கீழ் 4.7 இலட்சம் ரூபாய் செலவில் 2 தடுப்பணைகளும், வன உயிரினங்களுக்கு நீர் ஆதாரத்தை மேலும் மேம்படுத்தும் பொருட்டு 2015-2016 ஆம் ஆண்டில் 1.50 இலட்சம் ரூபாய் செலவில் மற்றொரு தடுப்பணையும் கட்டப்பட்டுள்ளன. வன உயிரினங்களைப் பாதுகாப்பதுபோல், வனப் பகுதிகளிலுள்ள மருத்துவ தாவர இனங்களையும் பாதுகாக்கும் நோக்கத்தோடு, 2013-2014 ஆம் ஆண்டு ரூ.10.63 இலட்சம் செலவில், 200 ஹெக்டேர் பரப்பளவில் உண்ணிச் செடிகள் அகற்றப்பட்டு, 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.10.16 இலட்சம் செலவில், 10,000 மருத்துவத் தாவரங்கள் நடப்பட்டுள்ளன. இவ்வாறு உண்ணிச் செடிகளை அகற்றியதாலும், மருத்துவத் தாவரங்களை நடவு செய்ததாலும் வன உயிரினங்களின் வாழ்விடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வன உயிரினங்களுக்குத் தேவையான குடிநீர், தீவனங்கள் மற்றும் சிறந்த வாழ்விட வசதிகளை அழகர்மலை வனப் பகுதிகளிலேயே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்திக் கொடுத்து, விலங்குகளைப் பாதுகாத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

2017 ஜூன் 20]

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மறைந்த முதல்வர்கள் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில், அழகர்மலை அடிவாரத்தில் பிரசித்தி பெற்ற பெருமாள் கோயிலும், பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி திருக்கோயிலும், மலையின் மேல் முருகப் பெருமானின் ஆறாவது படை வீடான பழமுதிர்ச்சோலையும், நூபரகங்கை ராக்காயி அம்மன் திருக்கோயிலும் உள்ளன. அழகர் மலைப் பகுதியில் குரங்குகளும், காட்டு மாடுகளும் அதிக அளவில் உள்ளன. கோயிலுக்கு வரும் பக்தர்கள் ரோட்டில் சுற்றித் திரியும் குரங்குகளுக்கு வாழைப் பழம், பொரி போன்ற உணவுப் பொருட்களைப் போடுவதால் குரங்குகள் ரோட்டிலேயே அமர்ந்துள்ளன. இதனால் ரோட்டில் வருகின்ற வாகனங்களில் குரங்குகள் அடிபட்டுவிடுகின்றன. மேலும், வேறு மாவட்டங்களிலிருந்து விவசாயப் பொருட்களைச் சேதப்படுத்தும் குரங்குகளைப் பிடித்து வாகனங்களில் ஏற்றி வந்து அழகர் மலைப் பகுதிகளில் விட்டுவிடுகின்றனர். இதனால், ஏற்கெனவே அங்குள்ள குரங்குகள், அவற்றை சண்டைபோட்டு விரட்டிவிடுகின்றன. ஆனால், அந்தக் குரங்குகள் அனைத்தும் அழகர் மலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் விளைகின்ற விவசாயப் பொருட்களான மாங்காய், கொய்யா போன்ற பொருட்களைச் சேதப்படுத்துவதுடன், வீட்டின் மேலுள்ள ஓடுகளைப் பிரித்து, வீட்டிற்குள் இறங்கி அங்கிருக்கும் உணவுப் பொருட்களையும் சேதப்படுத்திவிடுகின்றன. பள்ளிக்கூடங்களின் அருகிலும் குரங்குகள் சுற்றித் திரிவதால், மாணவர்கள் குரங்குகளைப் பார்த்து மிகவும் அச்சப்படுகின்றனர்.

முற்பகல் 10-05

நான் எனது ஊரில் ஊராட்சிமன்றத் தலைவராக இருந்தபோது, ஒரு மாணவனைக் குரங்கு கடித்துவிட்டது. அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளித்தபின், இன்று நலமுடன் உள்ளார். குரங்குகள் தனியாக வரும்போது அவற்றை கிராமங்களில் உள்ள நாய்கள் கடித்து விடுகின்றன. அதனால், குரங்குகளைப் பாதுகாக்கும் வண்ணம், குரங்குகள் உண்பதற்கு மலைகளில் பழவகை மரங்களை நடுவதற்கும், அழகர் மலையைச் சுற்றியுள்ள கிராமங்களிலும், அ.வல்லாளபட்டி பேரூராட்சி, மேலூர் நகராட்சிப் பகுதிகளிலும் சுற்றித் திரியும் குரங்குகளைப் பிடித்து

வனப் பகுதிகளில் பாதுகாப்பாக விடுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியபுள்ளான் அவர்கள் குரங்குகளைப் பற்றி ஒரு பெரிய* research-*ஏ நடத்தி, அவை என்னென்ன செய்கின்றன என்று* Ph.D *படிப்பில்* thesis *சமர்ப்பிப்பதுபோல் பல அரிய கருத்துகளை இந்தச் சபைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். முதலில் அதற்கு நன்றி. குரங்குகள் பொதுவாகவே கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. அந்தக் குரங்குகளுக்குத் தேவையான உணவுகள், கனிகள், பழவகைகள் எங்கு இருக்கிறதோ அங்கு தாவித் தாவி அதிகமாக அங்கு இருக்கும். நமது உறுப்பினர் குறிப்பிட்ட அழகர் மலையில் குரங்குகள் சாப்பிடுகிற உணவுப் பொருட்கள் மற்றும் அதிகமான பழவகைகள் கிடைப்பதனால், அவை அங்கு குடியேறிவிடுகின்றன. அழகர் மலைக்குப் போனவர்களுக்குத் தெரியும். போகாதவர்கள் அருள்கூர்ந்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு போகிற யாத்ரிகர்கள் குரங்குகளை ஆஞ்சநேயருடைய வாரிசாகப் பார்த்து, தாங்கள் கொண்டு போகிற பழங்களையெல்லாம் எடுத்துக் கொடுக்கிறார்கள். சிறு குழந்தைகளை விட்டு கையில் கொடுத்து, அந்தக் குரங்குகளைப் பிடிக்கச் சொல்லி, வேடிக்கை காட்டுகிறார்கள். அதனால் அந்தக் குரங்குகள் விடுமுறை நாட்களில் யாத்ரிகர்கள் வராத நேரங்களில், சுற்றிச் சுற்றிப் பார்த்து உணவு கிடைக்காதபோது கிராமங்களுக்குச் சென்று, உறுப்பினர் சொன்னபடி, வீடுகளில் இறங்கி, எங்கே, யார் ஏமாந்து இருக்கிறார்களோ, அங்கே போய் வேண்டாத வேலைகளை எல்லாம் செய்வது உண்மை. அது அழகர் மலையில் மட்டுமல்ல, எங்கெங்கு குரங்குகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இந்த அநியாயம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதில் ஒரு பெரிய அதிசயம் என்னவென்றால், 'ஆல்பா' என்று ஒரு குரங்கு இருக்கும். அது டி.வி-யில்* WWF-*ல் கடோத்கஜன் மாதிரி வருவார்களே, அந்தமாதிரி, 10 பெண் குரங்குகளைச் சேர்த்துக்கொண்டு, பல குரங்குக் குட்டிகளைப்போட்டு, யாரையும் அண்டவிடாமல் செய்யும். புதிய நாட்டுக் குரங்குகள் உணவுக்காகப் போகும்போது,*

2017 ஜூன் 20]

அவற்றுக்கு உணவு கிடைக்காதபோது, அவற்றுக்குள் சண்டை வந்து, கிராமப் பகுதிகளுக்குப் போகின்றன. இருந்தாலும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, எப்படி எலிகள் மற்றும் பறவைகளைப் பிடிக்கிறோமோ அதேபோல பெரிய கூண்டுகளை வைத்துப் பிடித்து, அவற்றை வெளியேற்றி, அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்றுகின்ற சூழ்நிலையை வனத் துறை ஏற்படுத்தும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்திலிருந்தும், திருவிழாக் காலங்களில் திருச்சி மாவட்டம், மணப்பாறையிலிருந்தும் அழகர்கோயிலுக்கு சாமி கும்பிட வரும் பக்தர்கள் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், பட்டணம்பட்டி வழியாக பழைய லாரிப் பாதை வழியாக மலையில் நூபரகங்கை ராக்காயி அம்மன் கோயிலுக்கு வருகிறார்கள். சுமார் 5 கிலோ மீட்டர் உள்ள அந்தப் பாதையைச் சீர்செய்து தார்ச் சாலை அமைத்து, அங்கு வரும் பக்தர்களுக்கு அரசு வசதி செய்து கொடுக்குமா என்றும், பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலுக்கு வரும் வாகனங்களை ரோட்டிலேயே நிறுத்துவதால் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுகிறது என்பதால் வாகனங்களை நிறுத்துவதற்கு வனப் பகுதியிலே இடம் கொடுக்க வனத் துறை உதவி செய்யுமா என்றும் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பெரியபுள்ளான் அவர்கள் குறிப்பிட்ட பட்டணம்பட்டி என்ற அந்தப் பகுதியிலிருந்து மற்ற பகுதிகளுக்கு ஜீப் மூலம்தான் செல்ல முடியும். அது மக்கள் மட்டுமே நடந்து சென்று வருகிற ஒற்றையடிப் பாதையாக இருக்கிறது. அங்கு ரோடு போடப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்கள். அந்தப் பகுதி அடர்த்தியான வனப் பகுதி. அந்த வனப் பகுதியில் யாரையும் அனுமதிப்பதில்லை என்கிற கொள்கை முடிவை வனத் துறையினர் எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், அந்தத் தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்*

திரு. பெரியபுள்ளான் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கு ரோடுகள் போட சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதை வனத் துறை மூலம் ஆய்வு செய்து, நிதி நிலைமையை அனுசரித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் குரங்குகளினுடைய குணநலன்களைப் பற்றியெல்லாம் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். நான் இப்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி, கூவக்காபட்டி கிராமத்தில் எங்களுடைய குல தெய்வம் அக்னியம்மன் கோயில் உள்ளது. அங்கே ஆல மரம், அரச மரம் போன்ற 4, 5 மரங்கள் உள்ளன. ஆரம்பத்திலே 2, 3 குரங்குகள் இருந்தபொழுது, அங்கு வருகிற பக்தர்களெல்லாம் அவற்றை வேடிக்கை பார்த்து, சாமியாக வணங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது இனப்பெருக்கம் ஏற்பட்டு, 50-க்கும் மேற்பட்டு குரங்குகளின் எண்ணிக்கை பெருகியவுடன், அங்கு வருகிற பக்தர்கள் சமைத்து சாப்பிடுவதற்கோ அல்லது தங்களுடைய அன்றாடக் கடமைகளைச் செய்வதற்கோ அவை இடையூறாக இருக்கின்றன. எனவே, கூவக்காபட்டியில் இருக்கிற 50-க்கும் மேற்பட்ட *அடங்காத குரங்குகளை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அடக்கி, வனத்திலே கொண்டுசென்று விடுவதற்கான ஏற்பாட்டை உடனடியாகச் செய்வாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏனென்றால், இது அவருடைய மாவட்டம், அவருடைய பகுதியைச் சேர்ந்த குரங்குகளை அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

2017 ஜூன் 20]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலங்குகள் மட்டுமல்ல **. நம்மிலே பல *அடங்காதவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட அந்த *அடங்காத குரங்குகளைப் பிடிக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதி சாமி தரிசனம் செய்கின்ற பகுதி; அவர்களுக்கு மட்டுமல்ல, எல்லா மதத்தினரும், எல்லா இனத்தவரும் அங்கே சென்று சாமி கும்பிடுகிறார்கள். சென்ற வாரம் நானும், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்களும் அங்கு சென்று சாமி கும்பிட்டோம். குல வழக்கப்படி சாமி கும்பிடுகிற நிகழ்ச்சியில் அமைச்சர் என்ற முறையிலும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் எங்களை அங்கு அழைத்திருந்தார்கள். எங்களுடைய பைகளையும் அந்த *அடங்காத குரங்குகள் எடுத்துக் கொண்டு போய்விட்டன. அப்பொழுதே வனத் துறை D.F.O. மற்றும் இதர அதிகாரிகளிடம் சொல்லி, குரங்குகளைப் பிடிக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதன்பேரில், சுமார் 5 குரங்குகளை நேற்றைக்குப் பிடித்ததாக தகவல் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இப்படி திடீரென்று கேள்வியைக் கேட்பார் என்று தெரியாது. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்களுக்குச் சொன்னதைப் போல குரங்குகளைப் பிடித்து, அவற்றை வெளியேற்றுகின்ற நடவடிக்கைகளை எடுத்து, சாமி கும்பிடுகிற நிகழ்ச்சி நல்லபடியாக நடக்க வனத் துறை உதவும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களிடத்திலிருந்து வன உயிரினங்களையும், வன உயிரினங்களிடத்திலிருந்து மனிதர்களையும் காக்கக்கூடிய ஒரு பெரும் பணியினை anti poaching watchers என்றழைக்கக்கூடிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

வேட்டைத் தடுப்புக் காவலர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். அவர்கள்தான் முன்வரிசைப் பணியாளர்கள், frontline warriors. *வன உயிரினங்களோடு ஏற்படக்கூடிய மோதல்கள் வருகிறபோது, அவர்கள்தான் முன்வரிசையில் நின்று அவற்றிலிருந்து பாதுகாக்கிறார்கள். அவர்கள் இப்போது பெறக்கூடிய சம்பளம் மிக, மிகக் குறைவாக இருக்கிறது. ரூ.6,750/- அவர்களுக்குச் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அடர்ந்த வனப் பகுதியிலே அவர்கள் பணியாற்றுகிறார்கள். இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு மருத்துவப் படி, இன்னல் படி போன்ற எந்தச் சலுகைகளும் கிடையாது. அவர்களுக்கு மருத்துவ விடுப்புகூட கிடையாது. இவ்வளவு இன்னல்களுக்கிடையே பணியாற்றக்கூடிய வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு குறைந்தது ரூ.10,000/- அளவிற்காவது ஊதிய உயர்வை வழங்கிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சமீபத்திலே கோவையிலே கார்த்திகேயன் என்கின்ற ஒரு வேட்டைத் தடுப்புக் காவலர் யானையால் கடுமையாகத் தாக்கப்பட்டு, காயமடைந்து, சிகிச்சை கொடுப்பதற்குக்கூட மிகவும் சிரமப்படக்கூடிய நிலைமை இருந்தது. எனவே, அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, தாங்கள் அன்புகூர்ந்து அதைச் செய்யவேண்டும். நிதித் துறைக்குக்கூட அதுகுறித்து முன்மொழிவுகள் வந்திருப்பதாக நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக் கருத்திலேகொண்டு அவர்களுக்கு ஊதிய உயர்வை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

இன்னொரு விஷயம். வன உயிரினங்களைப் பொறுத்தமட்டில், National Parks, wildlife sanctuaries and reserve forests *என்று மூன்று விதமான காடுகளில் இருக்கின்றன. இவை தவிர, இருக்கக்கூடிய காப்புக் காடுகள் எதுவாக இருந்தாலும் அவற்றிலும், அவற்றையும் தாண்டி, இப்போது சமவெளிப் பிரதேசங்களிலேகூட, வன உயிரினங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டீர்களென்றால், விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி போன்ற பகுதிகள், பக்கத்தில் இருக்கின்ற சிவகங்கை மாவட்டம் போன்ற பகுதிகளிலெல்லாம்கூட தற்போது மான்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. மயில்களினுடைய எண்ணிக்கை பெருகியிருக்கிறது. காப்புக் காடுகளிலே இருக்கக்கூடிய வன உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு எப்படி நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்களோ, அதே வகையில், சமவெளிப் பிரதேசங்களில் பெருகிவரக்கூடிய வன உயிரினங்களையும் காப்பதற்கு ஏதேனும்*

2017 ஜூன் 20]
சிறப்பு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதையும் நான் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் anti-poaching watchers, வேட்டைத் தடுப்புக் காவலர்களின் சம்பள உயர்வு பற்றி பேசியிருக்கிறார்கள். மூன்று தினங்களுக்கு முன்பு அவர்களுடைய சங்கத்தின் சார்பாக எங்களை வந்து பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த சம்பள உயர்வு வேண்டுமென்ற கோரிக்கை குறித்து கேட்டிருக்கிறார்கள். நேற்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் விதி 110-ன்கீழ், வனத் துறையில் பணியாற்றக்கூடிய தோழர்களுக்கு anti-poaching watchers மற்றும் மற்றவர்களுக்கெல்லாம் காவல் துறையில் பணியாற்றுகிறவர்களுக்குச் சமமாக compensation உயர்த்திக் கொடுக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை அறிவித்தார்கள்.

முற்பகல் 10-15

தற்போது காவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற compensation போலவே, வன உயிரினத் தாக்குதலின்போது உயிரை விடுகின்ற மற்றும் தற்காலிகமாகவும், எதிர்பாராத வகையிலும் ஏற்படுகின்ற நிகழ்வுகளுக்கு, ரூ.4 இலட்சத்திலிருந்து பணக் கொடை உயர்த்தி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற Anti poaching watchers-உடைய நியாயமான கோரிக்கைகளுக்கு ஒரு குழு அமைத்து, நிதி ஆதாரத்தைப் பொறுத்து, நல்லவிதமாகப் பரிசீலனை செய்யப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது, மான்கள் மற்றும் வனவிலங்குகளைக் காப்புக் காடுகளில் காப்பதைப்போல, சமவெளியில் வசிக்கும் உயிரினங்களையும் காக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற விருதுநகர் மாவட்டப் பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட வன அதிகாரிகளிடம் தகவலை எடுத்துச்சொல்லி, அவற்றையும் காக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது ** என்ற வார்த்தையை பயன்படுத்தினார்கள். நானும் அந்த வார்த்தையை சொன்னேன். ** எடுத்துவிட்டு, அடங்காத என்ற வார்த்தையை மட்டும் என்னுடைய உரையில் மாற்றம் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. அதற்குப் பதிலாக 'அடங்காத குரங்குகள்' என்று மாற்றம் செய்யப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, என்னுடைய உரையிலும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உரையிலும் உள்ள அந்த வார்த்தையை நீக்கிவிட்டு, மாற்றம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***12035—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு ஒன்றியம், T. கைலாசம்பாளையம் ஊராட்சியிலுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூன் 20]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஒன்றியம், T. கைலாசம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி நிறைவு செய்யாததால் அப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற ஆக்கப்பூர்வ பாதையில் அனுதினமும் மக்கள் நலத் திட்டங்கள் பல தந்து அரவணைத்து காத்திட்ட அன்னையே! மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று தவ வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்னை, தங்கத்தாரகை எங்கள் அம்மா, வெற்றித் திருமகள் எங்கள் அம்மா, வீரத் திருமகள் எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) மங்காத புகழ்பெற்ற ஏற்றமிகு சாதனை, சரித்திரத்தின் போற்றுதலுக்குரிய முன்னாள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு மறையாமல் என்றென்றும் எங்கள் மனதில் இருக்கும் எங்கள் அம்மாவை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சிய தீபத்தைக் கையில் ஏந்தி, நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற அம்மா அவர்களின் கனவை நனவாக்க, அம்மா அவர்களின் தெய்வ ஆசியுடனும், தலைமைப் பண்புடனும் சிறப்பாகப் பணியாற்றும், அமைதியின் வடிவாய் விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் பணிவுடன் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் கல்வித் துறையில் சிகரம் தொட்டு, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்க பாடுபடும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு ஒன்றியம், T. கைலாசம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, 2015-2016 ஆம் ஆண்டில் தமிழ் மற்றும் ஆங்கிலவழிக் கல்வியை பயிற்றுவிக்கும் பள்ளியாக தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. இந்தப் பள்ளியில் 96 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். மேலும், ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த ஊராட்சிக்குட்பட்ட அப்பூர்பாளையம் தொடக்கப் பள்ளியில் 50 மாணவ, மாணவிகளும், நெய்க்காரபட்டியில் 60 மாணவ, மாணவிகளும் கல்வி பயின்று வருகின்றார்கள். இந்த மூன்று பள்ளிகளிலும் படிக்கும் மாணவ, மாணவிகள் நடுநிலைப் பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டுமென்றால், 4 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, T. கைலாசம்பாளையம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு ஒன்றியத்திலுள்ள T. கைலாசம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்றார்கள். திருச்செங்கோடு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் நிதியுதவிபெறும் புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளும், 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இருக்கின்றன. 3 கிலோ மீட்டருக்குமேல் இருந்தால் மட்டுமே தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வாய்ப்பிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூன் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதனை, மேற்கொண்டு ஆய்வு செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று தொடக்கப் பள்ளிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஏதாவது ஒரு தொடக்கப் பள்ளியாவது மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் இருக்குமானால் தரமுயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதில் மறையாத பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது தொகுதிக்குட்பட்ட கோவை மாநகராட்சி, 15-வது வார்டு, பாப்பநாயக்கன்புதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மற்றும் 41-வது வார்டு, மணியக்காரம்பாளையம் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 44-வது வார்டு, இராமசாமி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்குமேயானால் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குவதற்குமான மாண்புமிகு உறுப்பினருடைய இரண்டு கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் மக்கள் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை அமைச்சராகவும், இரண்டாவது முறையாக சட்டப்பேரவை உறுப்பினராகவும் அமர வைத்து அழகு பார்த்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நினைவுகளுடன், திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்டிருக்கிற பெருந்துறை தொகுதியில் இருக்கிற ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த மொரட்டுப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனவும், எங்கள் மாவட்டத்தினுடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பாரா எனவும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்திலிருக்கிற மொரட்டுப்பாளையத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா என்று கேட்டார்கள். இந்த ஆண்டே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜுன் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் உள்ள கொட்டையூர் மற்றும் கொற்கை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்காக முன்வைப்புத் தொகையாக இரண்டு பள்ளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் இரண்டு இலட்சம் ரூபாயை பொதுமக்கள் பங்களிப்பாக 2013 ஆம் ஆண்டே அரசுக்குச் செலுத்திவிட்டனர். இந்தக் கேள்வி மூல வினாவாக இல்லாவிட்டாலும், பல ஆண்டுகளாக பொதுமக்கள் பெரும் எதிர்பார்ப்பில் உள்ளதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொட்டையூர் மற்றும் கொற்கை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருந்தால்தானே அமைச்சர் பேசுவது கேட்கும். உறுப்பினர்கள் பேசுவதும் கேட்கும்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இரண்டு பள்ளிகளைத் தரம் உயர்த்தவேண்டும் என்று சொன்னார்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்களை கொஞ்சம் அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஒரு பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்காக பணம் செலுத்தி பல ஆண்டுகளாகியும் இன்னமும் பல உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நெய்வாசல் உயர்நிலைப் பள்ளி 2, 3 ஆண்டுகளாகியும், இன்னமும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவில்லை. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தைச் சேர்ந்த நெய்வாசல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைக்கேற்ப, இந்த ஆண்டு 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்குவதற்கும், 150 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்குவதற்கும் அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பள்ளிகளையும் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூன் 20]

43—

புதிய மின்மாற்றி

***1598—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வடகாடு ஊராட்சி, வடக்குப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலங்குடி தொகுதியில், வடகாடு ஊராட்சி, வடக்குப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அங்கு ஏற்கெனவே 9 மின்மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. 9-8-2016 அன்று புதிதாக 100 KVA திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியினுடைய மின் பளு மொத்தமே 49.5 KVA தான். எனவே, இப்போது அந்தப் பகுதியில் மின்னழுத்தக் குறைவு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்ட மருத்துவக் கல்லூரி ஒன்று வேண்டும் என்ற அந்த மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, 2010 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி தந்த, சட்டமன்ற வரலாற்றின் சரித்திர நாயகர், வைரவிழா காணும் முத்தமிழ் அறிஞர் அய்யா கலைஞர் அவர்களுக்கும்,*

(மேசையைத் தட்டும் ஒலி) ஐயா தலைவர் கலைஞர் அவர்கள் தந்த மருத்துவக் கல்லூரிக்கான இடத்தை புதுக்கோட்டையில் தேர்வு செய்து, அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்து, இன்றைக்கு மருத்துவக் கல்லூரி அமைவதற்குக் காரணமாக இருந்த அன்றைய துணை முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், நாளைய தமிழகம் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆலங்குடி தொகுதி, வடகாடு ஊராட்சி, வடக்குப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை ஏற்றுக்கொள்கிறேன்.

மேலும், ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயம் செழித்த பகுதிகள் உள்ளன. அங்கு குறைந்த மின்னழுத்தம் உள்ள கீழ்க்கண்ட பகுதிகளில் புதிய மின்மாற்றிகளை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொடிவயல் ஊராட்சியிலுள்ள மணிவிளான்வயல், மாங்காடு ஊராட்சியில் உள்ள பூச்சிகடை தெரு, பூவரசக்குடி ஊராட்சியிலுள்ள அழகம்மாள்புரம், கைக்குறிச்சி ஊராட்சியிலுள்ள அம்பேத்கார் நகர், K.V. கோட்டை ஊராட்சியிலுள்ள தவளைப்பள்ளம், பாத்தம்பட்டி ஊராட்சியிலுள்ள பிள்ளையார்கோயில், கோவிலூர் ஊராட்சியிலுள்ள கோவிலூர், குளவாய்ப்பட்டி ஊராட்சியிலுள்ள மேலகுளவாய்ப்பட்டி, கள்ளநத்தம் பகுதி, புள்ளான்விடுதி ஊராட்சியிலுள்ள சிறியதெரு, நொண்டிகோயில் தெரு, L.N. புரம் ஊராட்சியிலுள்ள செங்கொள்ளை தெரு, நெடுவாசல் மேற்கு ஊராட்சியிலுள்ள பவளத்தாள்புரம், மணியம்பலம் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனி, வாண்டாகோட்டை ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனி, வேங்கடகுளம் ஊராட்சியிலுள்ள மாதாகோயில் தெரு, அரசர்குளம் தென்பாதி ஊராட்சியிலுள்ள பேட்டை, வடகாடு ஊராட்சியிலுள்ள மாரியம்மன்கோயில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், தொகுதியிலுள்ள அனைத்து ஊர்களையும் படித்தால் எப்படி?

2017 ஜூன் 20]

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: நான் குறிப்பிட்ட இந்த ஊர்களில் புதிய மின்மாற்றிகள் அமைத்துக் கொடுக்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மேலும், ஆலங்குடி பகுதியானது, ஒரு காலத்தில் தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஆலங்குடியானது காவேரி பாசனத்தின் ஒரு பகுதியாகும். காவேரி பாசனப் பகுதி என்ற அடிப்படையில், தஞ்சை மாவட்டத்தில் 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அதே காவேரி பாசனப் பகுதியைப் பயன்படுத்துகின்ற ஆலங்குடி பகுதியில் இரவில் 3 மணி நேரமும், பகலில் 3 மணி நேரமும், என ஒரு நாளைக்கு 6 மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் அடிக்கடி மின்மாற்றிகள் பழுதடைகின்றன. மேலும், ஆலங்குடி பகுதிக்கு 20 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென அரசாணை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், நான் சொல்வதைக் கேளுங்கள். இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு கேள்வி கேட்கும் உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டால், மற்ற உறுப்பினர்களுக்கு எப்படி துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்கமுடியும்? சுருக்கமாகக் கேள்வி கேட்டு முடியுங்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். விவசாயிகளின் மிக முக்கியமான கோரிக்கை. அந்த விவசாயிகளின் கோரிக்கையான, ஆலங்குடி பகுதியில் 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதியில் இருக்கின்ற கிட்டத்தட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் மின்மாற்றிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளில், எந்தப் பகுதியில் மின்னழுத்தம் குறைவாக

இருக்கிறது என்று குறிப்பாகச் சொன்னால், முன்னுரிமை அடிப்படையில் அங்கு உடனடியாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது.

நேற்றையதினம்கூட நான் மின்சாரத் துறை மானியக் கோரிக்கையின்போது சொல்லியிருக்கிறேன். தற்போது 12 மணி நேரம் மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதேபோல, ஆலங்குடி பகுதியைப் பொறுத்தவரையில், 6 மணி நேரம் மின்சாரம் கொடுத்துக்கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார். 9 மணி நேரம் மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 6 மணி நேரம்தான் மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், அதை 9 மணி நேரமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது காற்றாலை மின்சாரத்தின் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், 12 மணி நேரம் என்பதை 18 மணி நேரம் என்ற அளவிற்கு அதிகரித்து நாங்கள் மின்சாரத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆக, எந்தப் பகுதியில், உங்களுக்குத் தேவை இருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால், அங்கு மின்சாரம் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடித்து விடுகிறேன். ஆலங்குடி தொகுதியில் விவசாயம் மட்டும்தான் தொழில். அங்கு வேறு தொழில்கள் கிடையாது. தொழிற்சாலைகள் கிடையாது. அந்தத் தொகுதியில் உள்ள 80 ஊராட்சிகள் முழுக்க முழுக்க விவசாயம் நிறைந்த பகுதி. விவசாயத்தை நம்பித்தான் மக்கள் வாழ்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் இந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேனே தவிர, வேறொன்றும் இல்லை. கொத்தமங்கலம் ஊராட்சி, வல்லாதிரக்கோட்டை ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான இடத்தை நாங்கள் தேர்வு செய்து வைத்திருக்கின்றோம். சம்பந்தப்பட்ட நிருவாகம் தொடர்பு கொண்டால், அதை வழங்கக் காத்திருக்கின்றோம். அதேபோல், வம்பன்,* L.N.

2017 ஜூன் 20]

புரம் ஊராட்சிப் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க இடத்தைக் கொடுத்திருக்கின்றோம். அந்தப் பகுதியிலும் துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வல்லவாரிப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான வேலை நடந்துகொண்டிருக்கின்றது. அதை விரைவாக முடித்து, மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டு, இந்த 5 துணை மின் நிலையங்களையும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த முறை வைத்த கோரிக்கையின் அடிப்படையிலேதான் அறந்தாங்கி பகுதியிலிருந்து புதிய கோட்டம் நேற்றையதினம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பார்ப்பது இல்லை. ஏனென்று சொன்னால், எங்கே மக்களுக்குத் தேவையோ, அதைச் செய்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது துணை மின் நிலையம் வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். துணை மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களிலும் தேவைதான். தேவை என்ற அடிப்படையில் அங்கு அதிகாரிகள் சென்று, அந்த இடத்தை ஆய்வு செய்கின்றபோது, அங்கே இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நீங்கள் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், ஒரு மாத காலத்திற்குள்ளாகவே அந்தப் பணியை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது. நான் இல்லையென்று சொல்லவில்லை. அங்கே புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட*

வேண்டும். ஆனால், அதற்குண்டான இடத்தைத் தேர்வு செய்கின்றபோது, அங்கே இடம் கிடைப்பதில்லை. அங்கே முழுக்க முழுக்க விவசாய பூமியாக இருக்கின்ற காரணத்தினால், இடத்தை எடுக்கச் சென்றோம் என்று சொன்னால், விவசாயிகள் போராட்டம் செய்கின்றார்கள். ஆகையினால், எங்களுடைய அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நீங்களும் சேர்ந்து சிறிது உதவி செய்வீர்கள் என்று சொன்னால், அந்தப் பகுதி மக்களுக்குச் சீரான மின்சாரம் வழங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனக்கு துணைக் கேள்விக்கு வாய்ப்பு அளித்த உங்களையும் வணங்கி, நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். சென்னைக்கு வயது 420 வருடங்களுக்கு மேல் என்றால், மயிலைக்கு வயது 2,000 வருடங்களுக்கு மேல். தொன்மையான இடம் என்பதற்கு ஏற்ப, அங்குள்ள மின்மாற்றிகளும் பழமையானவை. அதனால் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. நேற்றுகூட மந்தைவெளி மற்றும் மாட வீதிகளில் மின்தடை ஏற்பட்டுள்ளது. இரவு முழுவதும் மின்தடை ஏற்பட்டதால், அங்குள்ள மக்கள் அவதியுறுகின்றார்கள். இந்த மின்மாற்றிகளை உடனடியாக மாற்றித் தர வேண்டும். அதுமட்டுமல்லாமல், பல இடங்களில் மின் இணைப்புப் பெட்டிகள் பழுதடைந்துள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த வருடம் பேரவை விதி 110-ன்கீழ் சென்னையில் கிட்டத்தட்ட 3,800 மின் இணைப்புப் பெட்டிகள் மாற்றப்படும் என்று அறிவித்தார்கள். பல இடங்களில் underground cables பூமிக்கு அடியில் இல்லாமல், கரு நாகங்களைப்போல் பூமிக்கு மேல் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் அபாயகரமான நிலையில் இருக்கின்றன. அவற்றையும் சீர் செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூன் 20]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியில் மின்மாற்றிகள் பழுதடைந்துள்ளன, அவற்றை மாற்றித் தர வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அதுபோல மின் பகிர்மானப் பெட்டிகளையும் மாற்றித் தர வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல்,* underground cables *மேலே இருப்பதனால், ஆபத்தான நிலையில் இருக்கின்றன. அவற்றையும் சீர் செய்ய வேண்டும் என்று மூன்று கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவை விதி 110-ல் அறிவித்து, அதை மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, டெண்டர் எடுக்கின்றவர்கள் உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கைப் போட்டுவிட்டார்கள். ஆதலால் புதிய மின்மாற்றிகளை வாங்குவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. அந்த வழக்கு இப்போது நடந்துகொண்டிருக்கின்றது. இருந்தாலும் உயர் நீதிமன்றத்திலே என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்று சொன்னால், இப்போதைய தேவைக்கு நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள், முழுமையாக வாங்குவதற்கு நாங்கள் டெண்டர் குறித்து ஆணையிட்ட பிறகு வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவசரத்திற்கு எங்கெங்கு தேவையோ, அதை வாங்கிக்கொண்டிருக்கின்றோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியைப் பொறுத்தவரையில், மழைக் காலங்களில் இதுபோன்று மின்தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஏனென்று சொன்னால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்தப் பகுதியில் காற்று அடிக்கின்றபோதும், மழை பொழிகின்றபோதும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதை நிறுத்தி வைப்பார்கள், மழை நின்றதற்குப் பின்னால் அதை மறுபடியும் சீர் செய்துவிடுவார்கள். அந்தக் காரணத்தினால்தான் மின்தடை ஏற்பட்டிருக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் பழுதினால் மின்தடை ஏற்படுவதில்லை. இருந்தாலும் இதுபோன்ற பகுதிகளும் இருக்கின்றன. அதை இல்லையென்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து சீர் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

முற்பகல் 10-35

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்குகிறேன். எனது பூம்புகார் தொகுதிக்குட்பட்ட மேல்மாத்தூரில் ஆளில்லாத 33/11 KV துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இதற்கு கூடுதலாக 8 MVA திறன் உள்ள புதிய மின்மாற்றி அமைத்து, ஆளுள்ள துணை மின் நிலையமாக தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். அதேபோல், எனது தொகுதிக்குட்பட்ட, கிடாரங்கொண்டான் ஊராட்சியில் 33/11 KV துணை மின் நிலையம் உள்ளது. அதை 110/11 KV துணை மின் நிலையமாக தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளில்லாத துணை மின் நிலையத்தை ஆள் இருக்கின்ற துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே அந்தப் பகுதியில் மின்னழுத்தம் எந்த அளவிற்கு உள்ளது என்பதை ஆய்வு செய்து, தேவை இருப்பின், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுக்கும். அதேபோல், 33/11 KV துணை மின் நிலையத்தை 110/11 KV துணை மின் நிலையமாக தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தயாராக இருக்கின்றது. அங்கு துணை மின் நிலையம் தேவை என்பது எங்களுக்கும் தெரியும். நான் ஏற்கெனவே அவையில் சொன்னதுபோல் அந்த மூன்று மாவட்டங்களில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் அதற்குரிய இடத்தை மட்டும் தேர்வு செய்துகொடுப்பார்களேயானால், இந்த ஆண்டே எந்தெந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் தேவையோ, அந்தந்த இடங்களில் செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தயாராக இருக்கிறது. அதற்குத்தான் நான் நேற்றையதினம் பதிலுரையில் சொன்னபோதும்கூட, சொன்னேன், மத்திய அரசு மாநில அரசிற்கு 95,000 கோடி ரூபாய் கடன் தருகிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில், அப்பணிகளை மேற்கொள்வதற்கு நிதிநிலையில் பிரச்சினை இல்லை என்பதையும்,

2017 ஜூன் 20]

இடத்தை மட்டும் தேர்வு செய்து கொடுக்குமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

44—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***16653—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து, கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதியாக உள்ளது. இந்தப் பகுதியில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், சிறுபான்மையினர் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மக்களின் பிள்ளைகள், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு படிப்பிற்கு மேல் இடைநிற்றலைத் தவிர்ப்பதற்கும், இந்தத் தொகுதியில் உள்ள மாணவர்கள் உயர்நிலைப் படிப்பைத் தொடருவதற்கு*

அரசுக் கல்லூரி ஏதும் இங்கு இல்லாத காரணத்தால், 80 கி.மீ. பயணம் செய்து, மாவட்டத் தலைநகரான திருச்சிக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, துறையூர் தொகுதியில் உள்ள துறையூர், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியங்கள், உப்பிலியாபுரம், பாலகிருஷ்ணன்பேட்டை பேரூராட்சிகள், துறையூர் நகராட்சி, முசிறி ஒன்றியத்தில் உள்ள நான்கு கிராமங்களில் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்கும், தங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொள்வதற்கும், இந்தப் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 2 அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில்நட்பக் கல்லூரிகள் மற்றும் 25 சுய நிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், என மொத்தம் 29 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடிமலை என்ற இடத்தில் ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல், மாணவர்கள் திருச்சிக்குச் செல்ல வேண்டியதில்லை. உப்பிலியாபுரத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில் துவாக்குடிமலையில் கல்லூரி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகா, சேதுராம்பட்டி கிராமத்தில், 2012-2013 ஆம் கல்வியாண்டில் புதிதாக ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியானது துவங்கப்பட்டது. மேற்படி கல்லூரியானது, உப்பிலியாபுரத்திலிருந்து 38 கி.மீ. தொலைவில் மட்டுமே உள்ளது. மேலும், 2015-2016 மற்றும் 2016-2017 ஆகிய இரண்டு ஆண்டுகளில் கணக்கெடுத்துப் பார்த்தோமேயானால், அரசுக் கல்லூரிகளிலே ஒப்பளிக்கப்பட்ட இடத்தின் சேர்க்கை சதவிகிதத்தைப் பார்க்கும்போது, 194 இடங்கள் காலியாகவே உள்ளன. அதேபோல், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பார்க்கும்போதும்,

200-க்கும் மேற்பட்ட இடங்கள் காலியாகவே உள்ளன. ஆகவே, வரக்கூடிய காலக்கட்டங்களில், மாணவர்களுடைய சேர்க்கைக்குத் தகுந்தாற்போல், அங்கு தேவை இருப்பின், அரசானது பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

முற்பகல் 10-40

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் 5-ம், ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் 2-ம், அரசு மேல்நிலைப் பள்ளிகள் 3-ம், பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளி 1-ம், அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் 3-ம் உள்ளன. அதேபோல் துறையூர் பகுதியில், அரசு உயர்நிலைப் பள்ளிகள் 3-ம், ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் 2-ம், பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகள் 2-ம், நகராட்சி உயர்நிலைப் பள்ளி 1-ம், அரசு மேல்நிலைப் பள்ளிகள் 4-ம், அரசு நிதி உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி 2-ம், அரசு நிதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகள் 3-ம், ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் 2-ம், ஆக உயர்நிலைப் பள்ளிகள் 17-க்கும், அரசு மேல்நிலைப் பள்ளிகள் 16-க்கும் தமிழக அரசு நிதிநிலை ஒதுக்கீட்டில் முன்னுரிமை கொடுத்தால், அது கல்வியின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். என் தொகுதியில்தான் இயற்கை வளம் நிறைந்த பச்சைமலை உள்ளது. ஆனால், மேல்படிப்பைப் படிப்பதற்கும், பசுமையான அறிவை வளர்த்துக்கொண்டு பட்டதாரியாவதற்கும் கல்லூரி இல்லை. எனவே, அரசுக் கல்லூரி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

உப்பிலியாபுரத்திலிருந்து துறையூருக்கு 30 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. துறையூரிலிருந்து திருச்சி செல்வதற்கு 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஆனால், துவாக்குடிமலையிலிருந்து உப்பிலியாபுரம் செல்வதற்கு 30 கிலோ மீட்டர் தூரம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறுதலாக சொல்லியிருக்கிறார்கள். துறையூரிலிருந்து திருச்சி செல்வதற்கு 50 கிலோ மீட்டர் தூரமும், உப்பிலியாபுரத்திலிருந்து துறையூர் செல்ல 30 கிலோ மீட்டர் தூரமும், ஆக திருச்சி செல்வதற்கே 80 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

திருச்சியிலிருந்து துவாக்குடிமலைக்கு 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஆக மொத்தம், 95 கிலோ மீட்டர் நெடுந்தூரம் பயணம் செய்துதான் என்னுடைய தொகுதியிலுள்ள மாணவர்கள் கல்லூரிப் படிப்பைப் படிக்க வேண்டியிருக்கிறது. எனவே, துறையூர் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் தேவைகளுக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கடந்த 6 ஆண்டு காலத்திலே 4 பொறியியல் கல்லூரிகள், 16 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் என 65 கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. நேற்றையதினம், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் குறிப்பிட்டதுபோல, உயர் கல்வித் துறையினுடைய தரத்தை உயர்த்த வேண்டும்; உயர் கல்வியிலே மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது செயல்பட்டு வருகிறது. இன்றைக்கு திருச்சி மாவட்டத்திலே இருக்கக்கூடிய 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 194 இடங்கள் காலியாக இருக்கின்றன. அரசு நிதி உதவிபெறும் கல்லூரிகளிலே 378 இடங்கள் காலியாக இருக்கின்றன. சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்கள் 10,620. அதில் மாணவர்களுடைய சேர்க்கை மட்டும் 4,000. அதிலே 6,620 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, மாணவர்களுடைய சேர்க்கை கூடுதலாக இருக்கின்றபட்சத்திலே, மாணவர்களுடைய உயர் கல்வியைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. (குறுக்கீடு) அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் பகுதியிலே ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக்

கல்லூரி தொடங்குவதற்கு தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தொடர்ந்து செயல்பட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அரசானது பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே அவையில் அறிவித்த பல திட்டங்களில் குறிப்பாக, பட்டாபிராம் ஐ.டி. பார்க் போன்ற திட்டங்கள் ஆவடி தொகுதியில் நிறைவேற்றப்பட்டு வருவதால், அந்த இடத்தில் வணிகத்தை மையப்படுத்தி அரசு கலை, அறிவியல் மற்றும் வணிகக் கல்லூரியை, அதாவது Commerce, Corporate Secretaryship, Business Administration போன்ற பாடப் பிரிவுகளைக் கொண்ட கல்லூரியை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்றும், இந்தக் கல்லூரியையும் TN-GIVE (TN Global Innovators Village Enclave) என்ற திட்டத்திற்காக எடுத்திருக்கிற அதே பட்டாபிராம் பகுதியிலே அமைக்க அரசு முன்வருமா என்றும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்குப் பின்பு சென்னை மாநகர் பகுதியிலே புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படாமல் இருந்த நேரத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சிக் காலத்தின்போது ஆர்.கே. நகரில் புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியாக, சென்னை மாநகரிலே புதிய கல்லூரிகள் தொடங்க வேண்டுமானால், அந்தப் பகுதி மாணவர்களுடைய சேர்க்கை விகிதத்தைப் பொறுத்து, தேவைக்கேற்ப ஆய்வு செய்து, இன்றைக்கு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற பேராசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா? கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற பேராசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு தயவுசெய்து இந்த அரசு பரிசீலிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற பேராசிரியர்களை நிரந்தரம் செய்வதற்கு அரசினுடைய பரிசீலனையில் எந்தக் கருத்துருவும் இல்லை. இப்பொழுது நடந்து முடிந்த உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரையின்போது,* T.R.B. *மூலமாக 1,966 உதவிப் பேராசிரியர்களைத் தேர்வு செய்வதற்கான உத்தரவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது வெளியிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கல்வியைப் பொறுத்தவரையில் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ள மாவட்டம். கன்னியாகுமரியில் கலைக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் என மொத்தமாக 50-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மீன் வளம் மற்றும் இயற்கை இரப்பர் வளம் அதிகளவில் இருக்கின்றன. ஆனால், அங்கே படித்தவர்கள்கூட வேலைவாய்ப்புகள் இல்லாமல் கஷ்டப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. வேலைவாய்ப்புகள் கிடைக்கின்ற வகையில் மீன் வளமோ அல்லது இரப்பர் வளமோ சார்ந்த புதிய தொழில்நுட்பக்*

கல்லூரியை ஏற்படுத்தினால், மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அப்படிப்பட்ட கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப முன்பிருந்த பாடப் பிரிவுகளையும் சேர்த்து, கடந்த 6 ஆண்டுகளில் 961 புதிய பாடப் பிரிவுகளையும் தோற்றுவித்து, அதன்மூலமாக பல்வேறு வகைகளில் மாணவர்களுடைய வளர்ச்சி விகிதத்தை உயர்த்துகின்ற வகையிலும், வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற வகையிலும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நேற்றையதினம், பேரவை விதி 110-ன்கீழ், 268 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படுகிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதன்பேரில் அந்தப் பாடப் பிரிவுகளையும் கல்லூரிகளில் தோற்றுவிப்பதற்கும், அதன்மூலமாக தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

45—

ஜவுளிப் பூங்கா

***12098—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், அப்பகுதியிலுள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், நடைமுறையிலுள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ், அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் மற்றும் அருகில் இருக்கக்கூடிய புளியங்குடி பகுதிகளில் முன்பு கைத்தறி நெசவாளர்கள் அதிகளவில் இருந்தார்கள். அந்தப் பகுதிகளில் லுங்கி போன்றவற்றை தயாரிக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து வந்தது. அந்தத் தொழில் முழுமையாக நலிவடைந்து, மக்கள் அந்தத் தொழிலையே விட்டுப் போக வேண்டிய ஒரு சூழ்நிலையும், பல்வேறு சூழ்நிலைகளினால் அந்தப் பகுதிகளில் வேலைவாய்ப்பு இல்லாமல் வெளிநாடுகளுக்கு கூலி வேலைக்குச் செல்லும் ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நன்கு ஆராய்ந்து, அந்தப் பகுதியிலே, குறிப்பாக, கடையநல்லூரிலே கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைப்பதற்குண்டான அனைத்து*

ஏற்பாடுகளையும் செய்து தரவேண்டுமென்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் 61 ஜவுளிப் பூங்காக்கள் இருக்கின்றன. அதில், தமிழ்நாட்டில் 13 ஜவுளிப் பூங்காக்கள் இயங்கி வருகின்றன. ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலம் வேண்டும். அடுத்து, 60 முதல் 65 கோடி ரூபாய் வரை திட்ட மதிப்பீடு தேவைப்படுகிறது. இந்தத் தொகையில் 40 சதவிகிதம் அல்லது 40 கோடி ரூபாயை மத்திய அரசு மானியமாகத் தருகிறது. முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 9 சதவிகிதம் அல்லது 9 கோடி ரூபாயை, மாநில அரசு வழங்கும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 51 சதவிகித முதலீட்டுத் தொகையை தொழில் முதலீட்டாளர்கள் கடனாகப் பெற்றோ அல்லது அவர்களின் சொந்த நிதியிலிருந்தோ கொடுத்தால்தான், அங்கே ஜவுளிப் பூங்காவை அமைக்கமுடியும்.*

முற்பகல் 10-50

அந்த வகையில், தொழில்முனைவோர்கள் முன்வருவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையோடு அது செய்துதரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் இவ்வளவு பெரிய தொகையை வைத்து ஒரு பூங்கா அமைப்பதில் சாத்தியம் இல்லாத நிலை இருப்பதை உணர்ந்து, ரூ.2 கோடியே 50 இலட்சத்தை மாநில அரசு மானியமாகத் தரும் என்றும், மீதித் தொகையை தொழில்முனைவோர்கள் முதலீடு செய்வதற்கு முன்வருவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பூங்கா அமைப்பதற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள ஆணையிடும் என்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி. என்னுடைய தொகுதியில் தொழிற்சாலைகளே இல்லை. இங்கு படித்த பட்டதாரிகள் உரிய வேலை இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, நவீன தொழில்நுட்பத்தோடுகூடிய இந்தத் தொழில் பூங்காவை, நீங்கள் ஏற்கெனவே சொன்னதுபோல, மத்திய அரசின் மானியத்தோடும், மாநில அரசின் நிதிப் பங்களிப்போடும் அமைக்க தொழில்முனைவோர்களின் ஆலோசனைகளைப் பெற்று, நான் உங்களுடைய நேரடி கவனத்திற்கு எடுத்து வருகிறேன். ஒரு வருடமாக சொல்லிக்கொண்டிருக்கிறேன். கடையநல்லூர் தொகுதிக்கு ஏதாவது ஓர் அறிவிப்பு எப்படியாவது வரவேண்டும் என்பதுதான் எனது ஆசை. அதை கண்டிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, செய்துதர வேண்டும் என்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் அடிப்படை பிரச்சினையைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, கைத்தறி என்பது முழுக்க முழுக்க ஒரு குடிசைத் தொழில். தொழிற்சாலையில் செய்யக்கூடிய தொழில் அல்ல. ஏற்றுமதியைப் பெருக்குகின்ற நோக்கத்தோடு உட்கட்டமைப்பு வசதிகளான சாயமிடுதல் போன்ற அனைத்துப் பணிகளையும் ஒரே இடத்தில் அமைத்துக் கொடுப்பதுதான் பூங்கா ஏற்படுத்தப்படுவதன் நோக்கமாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சாலை வேண்டுமென்று விரும்பினால், தனிக் கேள்வி போட்டு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்மூலம் பதில் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூன் 20]
46—

சமுதாயக் கூடம்

***12631—திரு. கு.க செல்வம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, 9-வது மண்டலம், 112-வது வட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்குத் தொகுதி, 9-வது மண்டலம், 112-வது வட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லாததால், சமுதாயக்கூடம் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) அனைவரும் அமைதியாக இருக்கிறார்கள். நீங்களும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் அமைதியாக இருந்தால், சபை முழுக்க அமைதியாக இருக்கும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சாமி அவர்களது பெயரை விட்டுவிட்டேன். (குறுக்கீடு) திரு. கே.பி.பி. சாமி, திரு. ப. ரங்கநாதன் மற்றும் திரு. ஜெ. அன்பழகன் ஆகிய மூன்று பேரும் அமைதியாக இருந்தால், சபை நன்றாக இருக்கும். உட்காருங்கள். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள். (குறுக்கீடு) அதுபோல் இருந்தால் சொல்கிறேன்.*

திரு. கு.க. செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்த அவையில் 60 ஆண்டுகள் வைர விழா கண்ட*

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், ஒட்டுமொத்த தமிழகத்தின் உரிமைக் குரல், கழகச் செயல் தலைவர் பாசமிகு தளபதியார் அவர்களுக்கும் வணக்கம். டிரஸ்ட்புரம் பிரதான சாலை, டிரஸ்ட்புரம் 4-வது தெரு, 5-வது குறுக்குத் தெருவில் உள்ள வீட்டு வசதி வாரிய இடத்தில் சட்ட விரோதச் செயல்கள் அதிக அளவில் நடக்கின்றன. இதற்கு அருகில் இருந்த ஒரு சமுதாய நலக் கூடம் ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்தது. இப்போது அந்த இடத்தினை குடியிருப்புப் பகுதியாக மாற்றிவிட்டார்கள். ஆயிரம் விளக்கு பகுதியில் சுபேதார் தோட்டம், வரதராஜப்பேட்டை, டிரஸ்ட்புரம், 6 முதல் 10 குறுக்குத் தெரு வரை உள்ள பகுதி நடுத்தர, ஏழை மக்கள் வசிக்கின்ற பகுதி. எனவே, இந்தப் பகுதி மக்கள் பயன்படுத்தும்வகையில் இங்கு திருமண மண்டபம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், கலைஞர் நகரில் திருமதி ராணி அண்ணா பெயரில் திருமண மண்டபம் கட்டப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்தது. அந்த திருமண மண்டபம் தற்போது மெட்ரோ இரயில் போக்குவரத்திற்காக இடிக்கப்பட்டுள்ளது. மேலும், ஜவஹர்லால் சாலை, கோயம்பேடு பேருந்து நிலையம் அருகில் வீட்டு வசதி வாரியத்தினால் ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு குடியிருப்புகள் கட்டப்பட்ட இடத்தில் உள்ள திருமண மண்டபமும் தற்போது பயன்பாட்டில் இல்லை. நந்தனம் லோட்டஸ் காலனியில் உள்ள திருமண மண்டபம், பராமரிப்பு செய்யப்படாமல் மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் பாழடைந்துள்ளது.

முற்பகல் 10-55

பட்டினப்பாக்கத்தில் உள்ள திருமண மண்டபமும் பயன்பாட்டில் இல்லை. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட திருமண மண்டபங்கள் தற்போது இடிக்கப்படுகின்றன. நடுத்தர வருவாய் உள்ள மக்கள், தனியார் திருமண மண்டபங்களில் அதிகக் கட்டணம் கொடுத்து தங்கள் குடும்ப நிகழ்ச்சிகளை நடத்த வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு) சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. கு.க. செல்வம்: *இன்னொரு கேள்வி இருக்கிறது. அதைத் தனியாகக் கேட்கிறேன். வீட்டு வசதி வாரியத்தின் சார்பில்*

TRUTH ALONE TRIUMPHS

2017 ஜுன் 20]

திருமண மண்டபங்களை கட்டித் தர அரசு முன்வருமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக சென்னை மாநகரில் கொரட்டூர், அம்பத்தூர், பருத்திப்பட்டு, வேளச்சேரி மற்றும் மதுரை கிழக்கு, அண்ணா நகர் ஆகிய இடங்களில் அம்மா திருமண மண்டபங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டு, கட்டடங்களைக் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.*

அதேபோல், திருவான்மியூர், பெசன்ட் நகர், இந்திரா நகர் மற்றும் ஈரோடு பெரியார் நகர் ஆகிய இடங்களிலுள்ள சமுதாய நலக்கூடங்கள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் மகாகவி பாரதியார் நகர், நந்தனம் லாயிட்ஸ் காலனி, மேற்கு சி.ஐ.டி. நகர்; மதுரையில் பசுமலை, அவனியாபுரம், அனுப்பானடி, தோப்பூர், உச்சப்பட்டி; சேலத்தில் நீதிபதி மாளிகை வளாகம்; திருநெல்வேலியில் நாரணம்மாள்புரம், குலவணிகபுரம் மற்றும் தூத்துக்குடியில் மீளவெட்டான், சங்கரப்பேரி, திருப்பூரில் முதலிபாளையம், கோவையில் எஸ்.எஸ்.ஐ.டி., காலனி, காந்தி மாநகர் ஆகிய இடங்களில் உள்ள சமுதாய நலக்கூடங்கள்தான் இடிக்கப்படவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற சமுதாய நலக்கூடங்கள் இடிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரையில், ஏழையெளியோருக்கு குறைந்த வாடகையில், திருமண மண்டபங்கள் அமைக்கப்பட வேண்மென்ற எண்ணத்தின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த காலங்களில், அம்மா திருமண மண்டபங்கள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப திருமண மண்டபம் கட்டப்படும் என்று இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், இன்னொரு கேள்வி கேட்க வேண்டாமா? (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.*

[2017 ஜூன் 20

திரு. கு.க. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு கேள்வி கேட்க வேண்டும். 112-வது வட்டத்தில் உள்ள புலியூர் வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகளில் சுமார் 400 வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. அந்த இடத்தில் புதிதாக வீடுகள் கட்டித் தர முன்வர வேண்டும். குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கியவர் கலைஞர் அவர்கள். குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வரதராஜப்பேட்டை, வாலஸ்கார்டன், அம்பேத்கர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் புதிதாகக் குடியிருப்புகள் கட்டும் பணி துவங்கப்பட்ட நிலையில், ஏற்கெனவே அந்தக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு தற்காலிகமாக அவ்விடத்திலேயே இருப்பிடம் அமைத்துத் தரவேண்டும் என்றும், அந்தப் பணிகளை முடிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வீட்டு வசதி வாரியம் குறித்து பல்வேறு கேள்விகளைக் கேட்டார். அடுத்து, குடிசை மாற்று வாரியம் குறித்துப் பேசுகையில் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற வீடுகள் பழுதடைந்துள்ளன. அவற்றை இடித்து, மாற்று வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்கின்றார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்துகின்றபோது சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், அனைத்துப் பகுதிகளையும் ஆய்வு செய்து பழுதடைந்திருக்கும் குடியிருப்புகளை ஒவ்வொன்றாக இடித்து விட்டு, புதிதாக வீடுகளைக் கட்டுவதற்கு எங்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். எந்தெந்தப் பகுதிகளில் பழுதடைந்த கட்டடங்கள் இருக்கின்றனவோ, அவற்றை இடித்து விட்டு, உடனடியாக கட்டுவதற்கு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அந்த வகையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியையும் சேர்த்து, கட்டடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட C.I.T. காலனி பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் ஒரு ரேஷன் கடை இருக்கிறது. ஆனால், அந்தக் கடை மிகவும் பாழடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான கட்டடத்தைக் கட்டுவதற்கு நான் சென்னை மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். ஆனால், அவர் வீட்டு வசதி வாரியம் அந்த இடத்தை மாநகராட்சிக்குத் தந்தால்தான் கட்டடத்தைக் கட்ட முடியுமென்று சொல்கிறார். C.I.T. காலனியிலே காட்டுக்கோயில் பகுதியில் இருக்கிற அந்த ரேஷன் கடைமூலம் குடிசைப் பகுதி மக்களில் ஏறத்தாழ 1,000 குடும்பங்கள் பயன்பெறுகிற நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ரேஷன் கடை இயங்கி வந்திருக்கிற அந்த வீட்டு வசதி வாரிய இடத்தில் மீண்டும் புதிய ரேஷன் கடை கட்டுவதற்கு அனுமதியை வழங்குவாரா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் இருக்கின்ற ரேஷன் கடை பாழடைந்திருக்கின்றது. அதைக் கட்டுவதற்கு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தான் நிதி கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்றைக்குமே மக்கள் நலன் காக்கின்ற அரசு என்கின்ற வகையிலே, மக்களின் பயன்பாட்டிற்காக அந்த இடத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு துறை மூலமாக ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

ஆரம்ப சுகாதார நிலையம்

***51—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, கடத்தூர் ஒன்றியம், தாளநத்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, கடத்தூர் ஒன்றியத்திலே மக்கள் தொகைக்கேற்ப 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. ஆக, விதிமுறைகளின்படி மக்கள்தொகைக்கும் கூடுதலாக ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்ற காரணத்தினாலே புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டிஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பெருமை வாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத்*

தொகுதியில் (குறுக்கீடுகள்) நாங்கள் பல பேருக்கு பெருமை பெற்றுத் தந்திருக்கிறோம். மன்னை நாராயணசாமி அவர்கள் கொடுத்த பெருமை. அதில், வடுவூர், நீடாமங்கலம், கோயில்வேணி, உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை, தலையாமங்கலம் போன்ற பல பகுதிகளில் ஆரம்ப சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன. பொதக்குடி போன்ற பகுதிகளில் 24 மணிநேரமும் மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் மக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். அது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, அதைச் சரிசெய்ய வேண்டும். இந்தப் பகுதியிலே உள்ள பரவக்கோட்டை, மிகப் பெரிய ஊராட்சி. அது ஏறத்தாழ 15,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமம். அந்தப் பகுதிக்கென தனியாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று மக்கள் நீண்ட நாட்களாகக் கோரி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டிஆர்.பி. ராஜா, சீக்கிரம் உரையை முடியுங்கள், நிறைய உறுப்பினர்கள் கேட்கிறார்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: ஆக, உள்ளிக்கோட்டை, தலையாமங்கலம் மற்றும் திருமக்கோட்டையில் மக்கள்தொகை அதிகமாக இருக்கிறது. ஆக, அங்கிருந்து பிரித்தெடுத்து புதிதாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை பரவக்கோட்டையில் அமைத்துத் தர வேண்டும். மேலும், மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு புதிய C.T. scan வசதிகள் எல்லாம் தேவை என்று நீண்ட நாட்களாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரி வருகிறேன். அதையும் உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். முதல் கேள்விக்கான பதில். ஆரம்ப சுகாதார நிலையத்திலே பொதுவாக 2 மருத்துவர்கள் இருப்பார்கள். காலையிலிருந்து மாலைவரைதான் அவர்கள் பணிபுரிவார்கள். Upgraded P.H.C.-ல்தான் 5 மருத்துவர்கள்

இருப்பார்கள். அங்கே 24 x 7 சேவைகள் இருக்கும். அதைப்போல, பரவக்கோட்டை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு C-arms, C.T. scan வசதி ஆகிய இரண்டும் வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கிறீர்கள். C-arms, உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே erection செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. C.T. scan-க்குரிய tender எல்லாம் போடப்பட்டு, நடவடிக்கையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளியவன், சிறியவனான எனக்கு பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது முறையாகத் தொடர்ந்து பணியாற்றுகின்ற அரிய சந்தர்ப்பத்தை வல்லமையோடு வாரி வழங்கிய வான்மேகம் கொண்ட தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா தகுதிகளையும் நிரம்பப் பெற்றிருக்கிற, ஒருங்கே பெற்றிருக்கிற எளிமையின் சிகரம், தமிழ்த் திருநாட்டின் மாட்சிமை பொருந்திய மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களையும் வணங்குகிறேன். பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதியதாக உருவாக்கப்பட்டிருக்கிற ஆலத்தூர் வட்டத்தில் 20,000-க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்டு பத்துக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கிற தேனூர் ஊராட்சியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூன் 20]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் 4 மாதங்களுக்கு முன்புதான், நானும் அவரும் சேர்ந்து ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தொடங்கிவைத்தோம். அப்போது, அவர் இதே கோரிக்கையை வைத்து, நிறைவேற்றித் தர வேண்டும் என்று கோரினார். அப்பொழுதே, அவருக்கு "நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்" என்ற பதிலைச் சொல்லியிருக்கின்றேன். இந்த மாமன்றத்திலும், அவருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொறுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரர், திரு. மெய்யநாதன் அவர்கள் கேள்வி நேரத்தில் கேள்வி கேட்டபோது, "புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியை தொடங்குவதற்காக அரசாணையை வெளியிட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றும், எங்களுடைய துணை முதல்வராக, எதிர்க்கட்சித் தலைவர் இருந்தபொழுதுதான், அதற்கான நிதியை ஒதுக்கினார். அடிக்கல் நாட்டினார்" என்ற கருத்துகளையெல்லாம் சொன்னார்கள். நான் கூறுவதை ஓர் ஆரோக்கியமான விவாதமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உங்களிடம் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.*

பொதுவாக 'வார்த்தை ஜாலங்களால் வரலாறுகளை மாற்றிவிட முடியாது' என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவேளை, மக்கள் மன்றத்தில் தவறான கருத்தை நீங்கள் பதிய வைக்க முற்பட்டால்கூட, அதை இந்த மாமன்றமும் ஏற்றுக்கொள்ளாது, மக்கள் மன்றமும் ஏற்றுக்கொள்ளாது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரசாணையை வெளியிட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னார்கள். அந்த அரசாணையை நான் கையில் வைத்திருக்கின்றேன். அதன் நகலை உங்களுக்கும் நான் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன். 2011 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சி மாற்றம் ஏற்படுகின்றது. ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு அதாவது, 12-2-2011 அன்று ஓர்

அரசாணையை வெளியிட்டீர்கள். அந்த அரசாணையில், "கடலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்" என்ற ஓர் அறிவிப்பை நீங்கள் வெளியிட்டீர்கள். இதுகுறித்து, ஏற்கெனவே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு, அன்றைக்கே மற்றொரு அரசாணையை வெளியிட்டீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வந்தார்கள்; ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். அப்போராட்டத்தில் அவர்கள் பேசியதை நானும் நேரடியாகத் தொலைக்காட்சியில் பார்த்தேன். அப்போது அவர் என்ன சொல்லியிருந்தார் என்றால், (குறுக்கீடு) இல்லை, இதுகுறித்து உங்கள் சட்டமன்ற உறுப்பினர்தான் கிளப்பினார். கேள்வி நேரத்தில், உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்தான் இதுகுறித்துப் பேசினார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் உறுப்பினர் பேசியதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: நான் பேசியதற்குப் பிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்லலாம். அதனால்தான், இதை ஓர் ஆரோக்கியமான விவாதமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எதைச் செய்திருந்தாலும் நிச்சயமாக நாங்கள் ஒத்துக்கொள்வோம். ஆனால், இந்த விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு துரும்பைக்கூட கிள்ளிப்போடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்களே புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வந்தீர்கள்; புதுக்கோட்டை மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, "ரூ.400 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னீர்கள். நீங்கள் வெளியிட்ட அரசாணையில் என்ன சொல்லியிருக்கிறீர்களென்றால், "5 மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்" என்ற ஓர் அறிவிப்பைத்தான் செய்தீர்கள். அந்த அரசாணை, 12-2-2011 அன்று, அதாவது ஆட்சி முடிவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு வெளியிடப்பட்டது. அந்த அரசாணையில், "The expenses required in respect of other infrastructure such as construction of building,

2017 ஜூன் 20]

equipments, furniture and staff will be assessed and orders will be issued separately" *என்று சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் இந்த 5 மருத்துவக் கல்லூரிகளுக்கான அரசாணையை வெளியிட்டீர்களேதவிர, கஜானாவிலிருந்து ஒரு ரூபாய் நிதியைக்கூட நீங்கள் ஒதுக்கவில்லை என்பதை ஆணித்தரமாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஓர் அரசாணை வெளியிட்டுவிட்டு, "புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரிக்காக நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்தோம், அடிக்கல் நாட்டினோம்" என்று சொல்கிறீர்கள். நீங்கள் போகின்ற போக்கில் ஓர் அரசாணையை வெளியிட்டீர்கள். நான் மற்றொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து ஒரு நிமிடம் . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) நான் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) "மாண்புமிகு உறுப்பினர் திரு. மெய்யநாதன் அவர்கள் கேள்வி நேரத்தில் பேசியதற்கு விளக்கம் அளிக்க வேண்டும், அவர் குறிப்பிட்ட அரசாணை குறித்துப் பேச அனுமதியளிக்க வேண்டும்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அவருக்கு பேச நான் அனுமதி அளித்தேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஏதாவது பேச வேண்டுமென்று கோரினால், அவருக்கும் நான் பேச வாய்ப்பு தருகிறேன். முதலில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கட்டும்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் துறை சம்பந்தப்பட்ட கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவத் துறை பற்றிப் பேசினார். அப்போது நான் அமைதியாக இருந்தேன். எனக்கு வாய்ப்பு வருகின்றபோது, அதுகுறித்து நான் விளக்கம் அளிக்கலாம் என்றிருந்தேன். அந்த அரசாணையில், அந்த 5 மருத்துவக் கல்லூரிகளிலும்* "annual intake of 100 students per college, from the academic year 2012" *என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, நீங்கள் வெளியிட்ட அரசாணையில், ஒரு வருடத்திற்கு 100 மாணவர்கள்தான்* intake *என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் வெளியிட்ட அரசாணையின்படி, கல்லூரி ஆரம்பிக்கப்பட்டால்,* intake of 100 students *என்று தமிழ்நாடு அரசு வெளியிட்ட*

அரசாணைக்கு, Government of India-*ன்* Medical Council of India *எப்படி 150* seats-*ஐ கொடுக்கும்? அதற்கு வாய்ப்பு உள்ளதா? ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளத்தோடு, அரசாணையைப் பிறப்பித்து, 239 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, இடத்தைத் தேர்வு செய்து, இந்திய வரலாற்றிலேயே எந்த அரசும் செய்யாத அளவிற்கு . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லிவிட்டேன் அல்லவா! உட்காருங்கள்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *ஒரு வருடத்திற்கு 150* seats-*க்கான உத்தரவைப் பெற்று, இதுவரை கடந்த ஐந்தாண்டு காலத்தில் 1,000* seats-*ஐப் பெற்றிருக்கிறோம். 10 மாதம் சுமந்து பெற்றெடுத்து, பாலூட்டி, தாலாட்டி, குழந்தையை வளர்த்ததற்குப் பின்னாலே பெயர் வைக்க மட்டும் வருகின்றோம் என்று சொல்வது எந்தவிதத்திலே நியாயம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுகுறித்து கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகளை 2, 3 நாட்களுக்கு முன்பு தங்களுக்கு அளித்திருக்கிறேன். புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியினுடைய திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்ற நேரத்தில், அந்த மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய தி.மு.கழகத்தினுடைய 3 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அழைப்பிதழிலே பெயரும் போடப்பட்டிருக்கிறது. ஆக, அவர்கள் அந்த நிகழ்ச்சிக்குப் புறப்படுகின்ற நேரத்தில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதைக் கண்டித்துதான் புதுக்கோட்டை நகரத்திலே ஓர் ஆர்ப்பாட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் நடத்தினோம். அதிலே நாங்கள் போய் கலந்துகொண்டோம். சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயரைப்போட்டுவிட்டு, அதுமட்டுமல்லாமல்*

2017 ஜூன் 20]

அமைச்சரே தொலைபேசியில் தொடர்புகொண்டு நீங்கள் நிகழ்ச்சிக்கு வரவேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே பேசியிருக்கிறார். ஆனால், அதற்குப் பிறகு அவர்கள் புறப்படுகின்ற நேரத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். எனவே, இது தவறு என்று நாங்கள் கண்டனக் கூட்டத்தை நடத்தியது மட்டுமல்ல; இந்த அவையிலே அதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று நான் தங்களுக்கு ஏற்கெனவே எழுதித் தந்திருக்கிறேன். அதற்கு இதுவரை எங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இருந்தாலும் அமைச்சர் அவர்கள் இப்போது எடுத்து வைத்திருக்கக்கூடிய அடிப்படையிலே இந்த நேரத்தை நான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

26-2-2011 அன்று புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரிக்கு தலைவர் கலைஞர் அவர்கள் இதே சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே தன்னுடைய முதலமைச்சர் அறையிலே உட்கார்ந்து அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிக்கல் நாட்டு விழாவில் அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். ஏன், இங்கே தலைமைச் செயலாளராக இருக்கக்கூடியவர், அன்றைக்கு அந்தத் துறையிலே உயர் அதிகாரியாக இருந்திருக்கின்றார். அவரும் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டிருக்கின்றார். அதேபோல அந்தத் துறையினுடைய செயலாளரும் கலந்துகொண்டிருக்கின்றார். அவையெல்லாம் புகைப்படங்களாகத் தொலைக்காட்சியிலே வெளியிடப்பட்டிருக்கின்றன. பத்திரிகையிலே வந்திருக்கின்றன. ஆகவே, அடிக்கல் நாட்டப்பட்டது என்பது உண்மை. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று நான் அன்றைக்கு தெரிவித்ததும் உண்மை. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தால் அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு அதைக் கிடப்பிலே போட்டது.

அதற்குப் பிறகு இதே அவையிலே மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் விதி 110-ஐப் பயன்படுத்தி, அந்தத் திட்டத்தைத் தொடங்கப் போகிறோம் என்று சொல்லி அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அப்போதே நாங்கள் அதைக் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். ஏற்கெனவே அடிக்கல் நாட்டப்பட்ட விழாவிற்கு விதி 110-ஐப் பயன்படுத்தி, முதலமைச்சர் அம்மையார் அவர்கள் விதி 110-ன்கீழ் எப்படிப் படித்தார் என்றுகூட நாங்கள் அன்றைக்கு கேட்டிருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் அந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறதே தவிர, வேறு

அல்ல. அதைத்தான் எங்களுடைய உறுப்பினர்கள் அடிக்கல் நாட்டு விழா நடத்தி, திட்டம் தீட்டப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்று குறிப்பிட்டார்கள். ஆக, செயல்வடிவிற்கு வந்தது உங்கள் ஆட்சிக் காலத்தில் நடந்திருக்கலாம். இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், அந்த நிகழ்ச்சிக்கு முறைப்படி அழைப்பிதழிலே எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களைப் போடாமல் விட்டிருந்தால்கூட இந்தப் பிரச்சினை வந்திருக்காது. நாங்கள் வரவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கமாட்டோம். ஆனால், பெயர்களையும் போட்டுவிட்டு, அதற்குப் பிறகு அமைச்சரே தொலைபேசியிலே சம்பந்தப்பட்ட எங்களுடைய உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துவிட்டு, அவர்கள் புறப்படுகின்ற நேரத்திலே கைது செய்து, அவர்களை ஒரு மண்டபத்திலே கொண்டுபோய் கைதியாக வைத்திருந்து, அதற்குப் பிறகு மாலையிலே விடுதலை செய்திருக்கிறார்கள். ஆகவே, இது கண்டனத்திற்கு உரியது. இது கேள்வி நேரமாக இருந்தாலும் கண்டனம் போன்ற பிரச்சினைகளெல்லாம் கேள்வி நேரத்திலே வரக்கூடாது என்பது விதி என்று எனக்கும் தெரியும். இருப்பினும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை கிளப்பிய காரணத்தால்தான் நான் இதையெல்லாம் விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன இரண்டு கருத்துகளுக்குமே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் தொடர்ந்து இந்த அவையிலே என்ன சொல்லி வருகின்றேன் என்றால், நீங்கள் அரசாணை வெளியிட்டீர்கள். யார் அடிக்கல் நாட்டினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும், மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். எப்போது அடிக்கல் நாட்டினார்கள்? அரசாணை பிறப்பித்து, நிதியொதுக்கம் செய்யப்பட்டு, அதற்கான டெண்டர் விடப்பட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டதற்குப் பின்னால்தான் அடிக்கல் நாட்டுவார்கள். ஆனால், நீங்கள் ஓர் அரசாணையை மட்டும் வெளியிட்டு, எந்த நிதியுமே ஒதுக்கவேயில்லை. இந்த மாமன்றத்திலே நீங்களே அதை ஒத்துக்கொண்டீர்கள். இப்போது

2017 ஜூன் 20]

உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபோது நிதியை ஒதுக்கியது எங்களுடைய முன்னாள் துணை முதலமைச்சர் என்று சொன்னார். அதனால்தான் சொல்கிறேன்; நீங்கள் நிதியை ஒதுக்கவில்லை, முழுக்க முழுக்க அப்போது நீங்கள் 100 students intake *என்று போட்டீர்கள். இப்போது விதி 110-ன்கீழ், அம்மா அவர்கள் அறிவித்து, 239 கோடி ரூபாய் நிதியொதுக்கி, இடம் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு காலக் கட்டங்களில் 126 ஏக்கர் இடம் வழங்கப்பட்டு, மருத்துவக் கல்லூரி கொண்டு வந்ததற்குப் பிறகு இந்த மருத்துவக் கல்லூரியைச் சொந்தம் கொண்டாடுவதற்கு உங்களுக்கு எந்தவித வழிவகையும் இல்லை என்பதை அன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-15

இரண்டாவதாக, இப்போது இன்னொரு பிரச்சினையைச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கும் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசினுடைய சார்பாக முறையாக அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டது. நான் திருவண்ணாமலையில் ஆய்வு செய்தேன். நம்முடைய மரியாதைக்குரிய செங்கம் சட்டமன்ற உறுப்பினர் வந்தார். மரியாதைக்குரிய அண்ணன் திரு. பிச்சாண்டி அவர்கள் எல்லாம் வந்தார்கள். அவர்கள் எல்லாம் எங்களோடுதான் ஆய்விற்கு வந்தார்கள். எல்லா இடங்களுக்கும் நாங்கள் போகிறபோது, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் என்றெல்லாம் பார்க்கவில்லை. நீங்கள் சொல்கின்ற பணிகளையும் இணைத்துக்கொள்கின்றோம். அந்தவகையில்தான் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தருவதாக இருந்தது. அந்த விழா அழைப்பிதழ் அடிக்கப்பட்டது. அதிலே அனைவருடைய பெயர்களும் இடம்பெற்றன. நான் மூன்று உறுப்பினர்களையும் கலந்துகொள்ளவேண்டுமென்று தொலைபேசியின்மூலம் அன்போடு அழைத்தேன். அதைத்தான் நீங்கள் பதிவு செய்தீர்கள். அதேபோல அரசுச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களும் மூன்று சட்டமன்ற உறுப்பினர்களையும் அன்போடு அழைத்தார். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அன்போடு அழைத்தார்; தாசில்தார் மூலமாக அழைப்பிதழும் அனுப்பப்பட்டது. முதலமைச்சர் வருகைக்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாக, மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்துகொள்கின்ற நோக்கத்தைத் தாண்டி முதலமைச்சர்

வருகின்ற வழியிலே அவர்களுக்கு கருப்புக்கொடி காட்டுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக வந்த செய்தியின் அடிப்படையில்தான் (குறுக்கீடுகள்) இல்லை, இதுதான் உண்மை. (குறுக்கீடுகள்) கிட்டத்தட்ட ஒட்டுமொத்த புதுக்கோட்டை மாவட்டமும் திருவிழா கோலம் பூண்டிருந்தது. அங்கே பதினைந்தாயிரம் மக்கள் இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதுதான் உண்மை. (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை மறுக்கவேமுடியாது. "எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ரகுபதி அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். முதலமைச்சர் வருகிறபோது கருப்புக்கொடி காட்ட நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று சட்டமன்ற உறுப்பினர் சொன்னார். அந்த அடிப்படையில்தான் நான் அவர்களுக்கு அனுமதி கொடுத்தேன். தலைமைக் கழகத்தினுடைய அனுமதியைக் கொடுத்தேன்" என்று நீங்களே புதுக்கோட்டையிலே அந்த ஆர்ப்பாட்டத்திலே பேசியிருக்கிறீர்கள். டி.வி.-யில் வந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை எப்படி நீங்கள் மறுக்கமுடியும்? நான் அழைத்திருக்கின்றேன்; மாவட்ட ஆட்சித் தலைவர் அழைத்திருக்கின்றார்; அரசுச் செயலாளர் அழைத்திருக்கின்றார்; நேரடியாக அழைப்பிதழ் கொடுக்கப்பட்டிருக்கின்றது; அந்த விழாவிலே கலந்துகொள்வதற்கு நோக்கமின்றி, நீங்கள் அங்கே குந்தகம் விளைவிக்கவேண்டும் என்று திட்டமிட்டதால், காவல் துறை தன்னுடைய கடமையைச் செய்திருக்கின்றது. எங்களுக்கே விஷயம் தெரியாது. மேடையில் இருந்தபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏன் வரவில்லையென்று கேட்டபோது, "இல்லை, அவர்கள் கருப்புக்கொடி காட்ட முயன்றார்கள். அதனால் அவர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்" என்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. இதுதான் உண்மை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நானும் அதற்குரிய விளக்கத்தைச் சொல்லவேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். அவர் கருப்புக்கொடி பிரச்சினையைப்பற்றி சொன்னார்.

2017 ஜூன் 20]

ஆக, குந்தகம் விளைவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினால்தான் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அவர் இங்கே சொல்லியிருக்கிறார். உண்மையில் நடந்தது என்னவென்று சொன்னால், நான் கூட்டத்திலே பேசியது உண்மை. அப்படிப் பேசுகிறபோது தெளிவாக நான் அந்தக் கூட்டத்திலே பேசியிருக்கிறேன். அவரே பார்த்தார் என்று சொல்லியிருக்கிறார். ஆக, என்னுடைய கண்டன உரையை ஆவலோடு பார்த்த அமைச்சருக்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். ஆனால், அதேநேரத்தில் நான் தெளிவாகச் சொல்ல விரும்புவது, எந்தச் சூழ்நிலையில் நாங்கள் கருப்புக்கொடி காட்டுவோம் என்று சொன்னோம் என்று சொன்னால், "அழைக்கவில்லை என்று சொன்னால், அழைப்பிதழில் பெயர் போடவில்லை என்று சொன்னால், கருப்புக் கொடி காட்டுங்கள்" என்று தலைமைக் கழகத்தின் சார்பில் நாங்களே எங்களுடைய சட்டமன்ற உறுப்பினருக்குச் சொல்லியிருந்தோம். ஆனால், அழைப்பிதழிலே பெயரைப் போட்டுவிட்டார்கள். முறையாக அழைப்பும் விடுத்திருக்கிறார்கள் என்ற செய்தி எங்களுக்கு வந்த பிறகு, நாங்கள் எந்தக் குந்தகமும் விளைவிக்க வேண்டாம், நேராக நிகழ்ச்சிக்குச் செல்லுங்கள்; அதிலே சென்று கலந்துகொள்ளுங்கள்; உங்கள் தொகுதியில் இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை, குறைபாடுகளை, கோரிக்கைகளைச் சொல்லுங்கள்; அங்கே நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தால் பேசுங்கள் என்று சொல்லித்தான் அவர்களை விழாவில் கலந்துகொள்ள நாங்கள் அனுமதித்தோம். அதற்குப்பிறகு அவர்கள் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். இதுதான் நடந்திருக்கிறதே தவிர, உள்ளபடியே அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல குந்தகம் விளைவிப்பது எங்கள் விருப்பம் அல்ல. எங்களைக் கைது செய்ததற்கு என்ன காரணம் என்று சொல்கிறேன். நாங்கள் அடிக்கல் நாட்டல் விழாவைப் பற்றி பேசுவோம்; அந்த நிகழ்ச்சி எப்படி தொடங்கப்பட்டது என்று நாங்கள் பேசுவோம். அதுமட்டுமல்ல, ** அதைப்பற்றியெல்லாம் எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த நிகழ்ச்சியிலே பேசுவார்கள் என்ற சூழ்நிலையிலேதான் வேண்டுமென்றே, திட்டமிட்டு அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்ளக்கூடாது என்ற எண்ணத்திலேதான் அவர்கள் எங்களை கைது செய்திருக்கிறார்களே தவிர, வேறு அல்ல என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ** எல்லாம் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நான் பதிவுசெய்து விட்டேன். நீங்கள் சொன்ன ** என்ற வார்த்தையை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) மற்றவையெல்லாம் இருக்கும். உட்காருங்கள். போதும் உட்காருங்கள். இதோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். இந்தப் பிரச்சினை இன்றைக்கு கேள்வி நேரத்திலே எதிர்பாராமல் இப்படி வந்துவிட்டது. ஆகவே, இதுவே முதலும் கடைசியுமாக இருக்கட்டும் என்று சொல்லி, இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் அப்போதே மறுத்திருந்தால், அதை நான் எடுத்திருக்க முடியும். விட்டுவிடுங்கள். அது ஒன்றும் பிரச்சினை இல்லை. மீதம் இருக்கிற வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-20

2. தகவல் கோரல்

(அ) மாட்டிறைச்சி குறித்து மத்திய அரசு வெளியிட்ட விதிகளுக்கு எதிராக சிறப்புத் தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக, தனித் தீர்மானமாக, மாட்டிறைச்சிமீது போட்டிருக்கக்கூடிய தடைச் சட்டத்திற்கு இந்த அவையிலே ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையிலே, ஒரு தனித் தீர்மானம் தந்திருக்கிறேன். அதுகுறித்துப் பேசுவதற்கு நீங்கள் அனுமதி தரவேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூன் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: அரசியல் சட்டம் வழங்கியிருக்கக்கூடிய தனி மனித உரிமை, விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய வாழ்வுரிமை, சிறுபான்மைச் சமுதாயத்திற்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடிய மத சுதந்திரம் ஆகியவற்றை பறிக்கக்கூடிய வகையிலே ஒரு கொடுமையான சட்டத்தை, மத்திய அரசு மாட்டிறைச்சி தடைச் சட்ட விதிகளை 23-5-2017 அன்று பிறப்பித்திருக்கிறது. ஆக, இந்தத் தடைச் சட்டமானது, நாடு முழுவதும் இன்றைக்கு ஒரு பெரிய எதிர்ப்பை உருவாக்கி இருக்கிறது. இதனால், விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய, விவசாயப் பெருங்குடிமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; இது நாட்டினுடைய பொருளாதாரத்தை, குறிப்பாக வேளாண் பொருளாதாரத்தை மிகப் பெரிய அளவிலே பாதிக்கும். எனவே, மாநில உரிமைகளைப் பாதிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை எதிர்த்து இன்றைக்கு நாடு முழுவதும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாநில பட்டியலில் இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பாதிக்கக்கூடிய இந்தச் சட்டத்தைப்பற்றி நம்முடைய தமிழகத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, நான் இந்த நேரத்தில், இந்த அவையின் மூலமாக நினைவுபடுத்த விரும்புவது, கேரள சட்டமன்றத்தில் 8-6-2017 அன்று சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு, இதை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். அதேபோல, மேகாலயா மாநில சட்டமன்றத்தில் 12-6-2017 அன்று ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இதற்காக, அங்கேயும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அண்மையில் 16-6-2017 ஆம் தேதி அன்று புதுச்சேரி மாநிலத்திலும், அங்கிருக்கக்கூடிய அரசு இதை எதிர்த்து ஒரு சிறப்புத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறது.

அதுமட்டுமல்ல; பா.ஜ.க.-வினுடைய கூட்டணிக் கட்சியாக இருக்கக்கூடிய Goa Forward Bloc Party, கோவாவிலே இந்த மாட்டிறைச்சிக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும், விவசாயிகளுக்கும், தனி மனித உரிமைகளுக்கும் எதிரானது

என்றும் சொல்லி மிகத் தெளிவாக அவர்களும் தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கோவா மாநிலத்தினுடைய பா.ஜ.க. முதலமைச்சரே மாட்டிறைச்சி குறித்த சட்டத்திலே சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, பல மாநில முதல்வர்களும், பா.ஜ.க.வை சார்ந்திருக்கக்கூடிய சில மாநிலங்களினுடைய முதலமைச்சர்களும் இதை எதிர்த்து வரக்கூடிய நிலையில், அ.தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், இங்கு இந்த அரசு ஏன் மௌனம் சாதிக்கிறது? இது உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமன்றத்தில் இதை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று ஒரு தனித் தீர்மானத்தை, சிறப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் வாழக்கூடிய அத்தனை பேரும், என்ன உணவு உண்ண வேண்டும் என்பது ஒரு தனி நபரினுடைய உரிமை. அந்த உரிமையைப் பாதிக்கின்றவகையிலே மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்கிறது; அமல்படுத்த முயற்சி செய்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், இதற்கு கேரள அரசு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது; புதுச்சேரி அரசு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது; அதேபோல, மேகாலயா அரசும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. பா.ஜ.க. ஆளுகின்ற கோவா மாநிலத்திலும் இதற்கு எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், நம்முடைய அரசினுடைய நிலை என்ன? இந்த அரசு, இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பதை நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

முற்பகல் 11-25

மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற சட்டத்தை தமிழகத்திலே நிறைவேற்றக்கூடாது என்று இந்தச் சட்டமன்றத்திலே நீங்கள் ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம். இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஏதோ

ஓர் உள்நோக்கத்துடன் நடக்கக்கூடிய காரியத்திற்கு தமிழக அரசு உடந்தையாக இருக்கக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம். எனவே, மத்திய அரசை எதிர்த்து தீர்மானம் கொண்டுவர உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். என்னதான் இருந்தாலும், ஒரு தனி மனிதனுடைய உரிமையை எந்தவிதத்திலும் பறிக்கக்கூடாது என்பது எங்களுடைய கருத்து. அதற்குரிய தீர்மானத்தை இந்தச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது காங்கிரஸ் கட்சியினுடைய நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்டிறைச்சி பிரச்சினையைப் பொறுத்தவரை, தனி மனித உரிமையிலே தலையிடுவதாக இருக்கிறது. இதை சற்று தொலைநோக்கோடு சிந்தித்து, நாம் தமிழக அரசின் சார்பாக நல்ல முடிவை எடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். இது பொருளாதார ரீதியிலும், பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும். குறிப்பாக ** உணவாக மாட்டிறைச்சி இருக்கிறது. இதிலே எந்தக் கட்டாயமும் இல்லை, விரும்புகிறவர்கள் சாப்பிடலாம், விரும்பாதவர்கள் விட்டுவிடலாம்.*

அதேநேரத்தில், இதை அரசியலாக்கி Beef Festival *போன்ற ஒரு நிலையை எடுத்ததை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சிறிய வியாபாரிகளாக இருக்கக்கூடியவர்களுக்கு இதனால் பாதிப்பை ஏற்படுத்தி, பெரிய முதலாளிகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உதவுவதாகத்தான் இது அமையுமே தவிர, வேறு எந்த நன்மையும் இதிலே இருக்க முடியாது என்பதை பல்வேறு நிலைகளிலே சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். பெரிய* beef exporters *உத்தரப்பிரதேசத்திலே இருக்கின்றார்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் மத்தியிலே ஆளக்கூடியவர்கள் இதைச் சட்டமாக இயற்றியிருக்கின்றார்கள். அதிலும், குறிப்பாக மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சிக்கு துணை நிற்கக்கூடாது. ** அவசர கோலத்தில் இந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் கொண்டுவந்திருக்கின்றது. இதனால் பல்வேறு*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

விளைவுகளைச் சந்தித்து வருகின்றோம். இதன்காரணமாக உத்தரப்பிரதேசத்திலே முசாபர் நகரிலே அஹலாக் என்ற ஒரு சகோதரர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். குஜராத்திலும் அதுபோன்ற கொடுமையான சூழ்நிலைக்கு அவர்களெல்லாம் ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்படியாக இந்த மாட்டிறைச்சி பிரச்சினையைச் சொல்லி, அதன்பிறகு மாடுகளையெல்லாம் கோசாலையில் வைத்துப் பாதுகாப்போம் என்று சொல்கின்றார்கள். கோசாலையில் எப்படிப் பாதுகாக்க முடியும் என்பது பற்றி நாம் விளக்கம் சொல்ல வேண்டியதில்லை. 1926 ஆம் ஆண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இந்தச் சட்டத்தைப்பற்றி மட்டும் பேசுங்கள். அதன் நோக்கம் ** மத்திய அரசாங்கம் உதவி செய்வதற்காகத்தான் இந்தச் சட்டம் என்று சொல்வதெல்லாம் பாராளுமன்றத்தில் பேச வேண்டியது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு பேசுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: ஏற்கெனவே அவைக் குறிப்பில் உள்ளதைத்தான் பேசுகிறேன். கேரள சட்டமன்றத்திலும் மற்ற சட்டமன்றங்களிலும் இதைப்பற்றிப் பேசியிருக்கின்றார்கள். இல்லையென்று சொல்ல முடியாதே. They are one of the best exporters.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அந்தச் சட்டத்திற்கு உங்களுடைய எதிர்ப்பை மட்டும் தெரிவியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மகாத்மா காந்தி அவர்கள் 1926 ஆம் ஆண்டிலேயே தனது 'யங் இந்தியா' பத்திரிகையில் கோசாலையில் இருக்கக்கூடிய மாடுகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை; அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பால் தரமற்றதாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். இப்பொழுது என்னவாகும் என்று சொன்னால், முறையாகப் பராமரிக்கப்படும் பசுக்கள் எல்லாம் பராமரிப்பின்றி ரோட்டுக்கு வந்துவிடும். எனவே, தயவுகூர்ந்து இந்தச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. கேரளா, மேகாலயா, புதுச்சேரி மற்றும் கோவா அரசுகள் எவ்வாறு இச்சட்டத்தை நிராகரித்திருக்கின்றனவோ, அதேபோன்று இந்தச் சட்டத்தை தமிழக அரசும் நிராகரிக்க வேண்டுமென்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூன் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

முற்பகல் 11-30

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா என்பது ஒரு கதம்ப மாலை. பல்வேறு இனங்கள், மதங்கள், மொழிகள் பேசக்கூடிய மக்களுடைய ஒரு துணைக் கண்டம் என்று உலகம் முழுக்க வர்ணிக்கப்படுகிறது.*

அப்படிப்பட்ட ஒரு இந்தியத் துணைக் கண்டத்திலே ஒற்றைக் கலாச்சாரத்தைத் திணிக்க யார் முற்பட்டாலும், மதச்சார்பின்மையின்மீது அக்கறை கொண்ட அறுதிப் பெரும்பான்மை மக்கள் அதை முறியடிப்பார்கள் என்பதை இந்தப் பேரவையின் வாயிலாக முதலிலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1955 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே பசு பாதுகாப்பு மசோதா குறித்த விவாதம் நடந்தது. அப்போது ஜனநாயகத்திற்கும், மதச்சார்பின்மைக்கும், சமூக நீதிக்கும் முன்னோடி தலைவராகத் திகழக்கூடிய முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் என்ன கூறினார்கள் என்பதை இந்த அவைக்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். "நான் பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவும் விரும்புவேன்; ஆனால் இதற்கு ஒப்புதல் தரமாட்டேன். பொருளாதாரத்தையும், விவசாயத்தையும் புரிந்துகொள்ளாதவர்களுக்கு எனது அறிவுரை என்னவென்றால், கால்நடைச் செல்வத்தை அழிக்கக்கூடிய முன்னெடுப்புகளில் இறங்காதீர்கள்" என்று இவர்களுக்கு எதிராக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் நாடாளுமன்றத்திலே தனது கருத்தை வலுவாக, ஆதாரப்பூர்வமாகப் பதிவு செய்தார்கள். 23-5-2017 அன்று மத்திய அரசு வெளியிட்டிருக்கக்கூடிய இந்த அறிவிப்புச் சட்டம் என்பது காளை, பசு, எருமை, ஒட்டகம், கன்று போன்றவற்றை இறைச்சிக்காக வாங்கவோ, விற்கவோகூடாது. விற்பவரும், வாங்குபவரும் 5 கடித நகல்களை (5 Copies of proof of Sale*) கொண்டு வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது முற்றிலுமாக கால்நடை வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய, அழிக்கக்கூடிய ஒரு செயலாகும். மாட்டுச் சந்தைகள் இந்தியாவில் நடைபெறுவதே ஒரு வகையான கிராமியப் பொருளாதாரச் சுழற்சி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்தச் சுழற்சி பெரிய அளவிலே பாதிக்கப்படக்கூடிய ஓர் அபாயம் உருவாகியிருக்கிறது.*

அதுமட்டுமல்லாமல், நம்முடைய பாரதப் பிரதமராக மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள் வந்தபிறகு, மாட்டுக் கறி விற்பனையிலே முன்னெப்போதையும் விட இந்தியா சாதனை படைத்திருக்கிறது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சீனாவுக்கும், பிரேசிலுக்கும் அடுத்தபடியாக, இந்தியாவிலிருந்துதான் மாட்டுக் கறி ஏற்றுமதி அதிகமாக இருக்கிறது. உலகச் சந்தையில் இந்தியாவினுடைய மாட்டுக் கறி ஏற்றுமதி என்பது 30 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். 18 வயதைக் கடந்த மாடுகளை வைத்துப் பராமரிப்பதற்கு எந்த விவசாயியும் விரும்புவதில்லை. இந்த நிலையிலே இறைச்சிக்காக மாடுகளை விற்பதற்கு, ஒட்டகங்களை அறுப்பதற்குத் தடை என்று சொல்வதில், மறைமுகமாக ஏதோ சதித் திட்டம் இருப்பதாக நாங்கள் கருதுகின்றோம். எனவே, கேரள சட்டமன்றம், புதுச்சேரி சட்டமன்றம், மேகாலயா சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியதைப் போல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைமையிலான மத்திய அரசு, இந்தியாவில் மாடுகளை விற்பதற்கும், வாங்குவதற்குமான சில கட்டுப்பாடுகளை, விதிமுறைகளை வகுத்துத் தந்திருக்கிறது. 23-5-2017 அன்று கொண்டு வந்திருக்கிற அந்த அறிவிப்பு தமிழ்நாட்டினுடைய வாழ்வியல் சூழலுக்கு, நம்முடைய பாரம்பரிய உரிமைகளான மாடுகள், கால்நடைகளை வளர்ப்பது, விற்பது, குறிப்பாக,*

2017 ஜுன் 20] [திரு. உ. தனியரசு]

மாடுகளினுடைய இறைச்சியை உண்ணுவது என்கின்ற அந்த மரபு வழி உரிமையை, உணவு உரிமையை, தனி மனித உரிமையைப் பறிப்பதாக இருக்கின்றது. நம்முடைய தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமியார் தலைமையில் இருக்கிற அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தமிழ்நாட்டில் கால்நடைகளான ஆடு, மாடு, கோழிகளை வளர்ப்பது, கடற்கரையிலே மீனவர்கள் மீன்களை வளர்ப்பது, மீன்களை விற்பது, அதனை உணவாகப் பயன்படுத்துவது என்பது நம்முடைய மரபு வழி உரிமை. ஆகவே, கோழி உணவை, மீன் உணவை, ஆடுகளினுடைய உணவை நாம் எப்படி ருசித்து, மகிழ்ந்து நம்முடைய விருப்பத்திற்கேற்ப உண்ணுகிறோமோ, அதைப்போன்று தமிழ்நாட்டில் மாடுகளினுடைய இறைச்சியை உண்ண விரும்புகிறவர்களைத் தடை செய்வதற்கு மத்திய அரசு முற்பட்டிருப்பதை நாம் எந்தக் காலத்திலும், ஒரு முடியளவும், கடுகளவும் ஏற்கக்கூடாது. அதிலும் குறிப்பாக மனிதனுடைய உணவு உண்ணுகிற உரிமையை இது பாதிக்கிறது. அடிப்படை உரிமையைப் பாதிக்கிறது. இரண்டாவதாக, தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆடு, மாடு வளர்த்தால்தான் விளைச்சல் இல்லாத காலத்தில் விவசாயிகளுக்கு பிழைப்புக்கான வருமானம் கிடைக்கிறது. ஆகவே, விவசாயிகள், குறிப்பாக மேற்கு மண்டலத்திலே இருக்கிற விவசாயப் பெருமக்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முதலில் 50 ஆயிரம் ரூபாய்க்கு மாடு விற்கப்பட்டது. இப்போது 20 ஆயிரம் ரூபாய்க்குக்கூட மாடு வாங்குவதற்கு ஆளில்லை. மிக முக்கியமான மாட்டுச் சந்தைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய தமிழ்நாடு அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாட்டினுடைய எந்த மூலைக்கும் மாடுகளை, எருதுகளை, காளைகளை, கன்றுக்குட்டிகள் உட்பட எதனையும் எந்த வாகனத்தில் வேண்டுமானாலும் தடையில்லாமல் எடுத்துச் செல்வதற்கு உடனடியாக உரிய சட்டத் திருத்தங்களை, சட்ட ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

முற்பகல் 11-35

அதேமாதிரி சந்தைகள் வழக்கம்போல இயங்க அனுமதிக்க வேண்டும். இதில் காவல் துறையோ, வருவாய்த் துறையோ, வேறு எந்தத் துறையோ, தடுக்காமல் மாடுகளை வளர்ப்பதற்கும்,

மாடுகளை வழக்கம்போல அவர்கள் எவருக்கு வேண்டுமானாலும் விற்பதற்கும், மாட்டினை இறைச்சிக்காக வளர்க்கின்ற சிறுபான்மையின, தாழ்த்தப்பட்ட மக்கள் மாட்டிறைச்சியை உண்பதற்கும் வழக்கம்போல என்ன நடைமுறை இருக்கிறதோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தனியரசு, சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. உ. தனியரசு: *அதே நடைமுறையைப் பின்பற்ற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து, மத்திய அரசின் மாட்டிறைச்சி மீதான இந்தக் கட்டுப்பாட்டை உடனடியாக நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசு, நம்முடைய அரசு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, மரபு வழியாக உணவு உண்ணுகிற உரிமையை, கால்நடைகளை வளர்ப்பதற்கும், விற்பதற்கும், வாங்குவதற்கும், மாட்டிறைச்சியை உண்ணுவதற்கும், ஆடு, கோழி, மீனை உண்ணுவதற்கு என்ன உரிமை இருக்கிறதோ, அதே உரிமையை மாட்டிறைச்சியை உண்ணுவதற்கும் அனுமதிக்க வேண்டும் என்று நம்முடைய அரசின் கவனத்தை ஈர்த்து, உரிய சட்டங்களைப் பிறப்பிக்க ஆவன செய்யுமாறு வேண்டி, விரும்பிக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும் எழுதித் தரவில்லை. உட்காருங்கள். அறிவிப்பு கொடுத்தவர்களுக்குத்தான் அனுமதி. அறிவிப்பு கொடுக்காதவர்கள் திடீரென்று கேட்டால் எப்படி? உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பசு வதைத் தடுப்புச் சட்டம் கடந்த 40 ஆண்டுகளாக அமலில் உள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது சந்தைகளில் கால்நடைகளைச் சந்தைப்படுத்துவதை முறைப்படுத்தும் நோக்கோடு மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் துறையின்மூலம் 1960 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தில் கடந்த 23-5-2017 அன்று கால்நடைகள் சந்தைப்படுத்துதல் விதிகள் 2017 வெளியிடப்பட்டன. இந்த விதிகள் பசு, எருது, எருமை, கன்றுகள் மற்றும் ஒட்டகங்கள் ஆகியவற்றிற்குப் பொருந்தும். இவ்விதிகளின்*

2017 ஜூன் 20] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*22(*b*) (2), 22* (d) *(2) மற்றும் 22* (e) *பிரிவுகளின்படி, சந்தைகளில் விற்கப்படும் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விதிகளின் பிரிவு 22* (d) *(4)-ன்படி, மாடுகளை வாங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்கு விற்பனை செய்யக்கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதிகளின் 8-வது பிரிவின்படி, மாநில எல்லைகளுக்கு 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் மாட்டுச் சந்தைகள் செயல்படக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விதிகளின் பிரிவு 22 (*e*) (3)-ன்படி, மாட்டினைக் கொள்முதல் செய்தவர் அதனை மதம் சார்ந்த நிகழ்வுகளுக்காக பலியிடக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

மேற்கூறிய விதிகளைச் செயல்படுத்த தடையாணை கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் கடந்த 23-5-2017 அன்று மனுக்கள் WP No.*10128/2017 மற்றும்* WP No.*10127/2017 தாக்கல் செய்யப்பட்டு, உயர் நீதிமன்ற அமர்வு இவ்விதிகளைச் செயல்படுத்துவதற்கு நான்கு வாரத்திற்கு இடைக்காலத் தடை வழங்கியுள்ளது.*

இந்த விதிகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஐதராபாத்தைச் சேர்ந்த திரு. அப்துல் ஹகீம் குரேஷி என்பவர் வழக்கு பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு வரும் 11-7-2017 அன்று விசாரணைக்கு வரவுள்ளது. மேலும், இவ்விதியால் விவசாயிகள் பலவிதங்களில் பாதிக்கப்படுவார்கள் என்பதால், விதிகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்ததைக் கருத்தில் கொண்டு, விதிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. ஹர்ஷ்வர்தன் தெரிவித்துள்ளதாக பல பத்திரிகைகளில் செய்திகளும் வந்துள்ளன. உச்ச நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் இதுகுறித்த வழக்குகள் நிலுவையில் உள்ளன. தீர்ப்புக்குப்பின் உரிய நிலைப்பாட்டினை இவ்வரசு எடுக்கும் எனவும், பெரும்பான்மையான மக்களின் கோரிக்கையை ஏற்று அரசு செயல்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்கிறேன். நீங்கள் கொடுத்திருந்தீர்கள். நீங்கள் கொடுத்ததை, எல்லோரும் என் அறையில் வந்து வற்புறுத்தியதால்,*

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 'தகவல் கோரல்' என்கிற முறையில் அவைக்கு விவரத்தைச் சொல்லுங்கள் என்று சொல்லியிருந்தேன். அவர் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான், அதோடு அதை விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11-40

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட சில கட்சிகளினுடைய தலைவர்கள் தனித் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கைக்கு, பதிலுரை ஆற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "அதுசம்பந்தமாக தீர்மானத்தை நிறைவேற்றுவோம்" என்று சொல்வார் என்று நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தோம். தீர்மானத்தை நிறைவேற்றுவோம் என்று சொல்லவில்லையென்றாலும், அதைக் கண்டிக்கின்றவகையில் ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்வார் என்றுகூட எதிர்பார்த்தோம். அந்த நிலை இல்லாத காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலே, அதைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டபடி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக்கை அவையில் அமரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) என்ன, அவர்களைத் தொடர்ந்து வெளியேறுகிறீர்களா? (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. கு. பிச்சாண்டி, திரு. அர. சக்கரபாணி, முனைவர் கோவி. செழியன், திரு. நா. கார்த்திக் ஆகியோர் தகவல் கோருவதற்காக அவையில் அமர்ந்திருந்தனர்.)

திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் சொல்லுங்கள், மைக் தருகிறேன். (குறுக்கீடுகள்)

2017 ஜுன் 20]

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது சொன்னேன், இந்த அரசினுடைய நிலைப்பாடு என்ன என்பதை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் அறிக்கையை அளித்துவிட்டார். (குறுக்கீடுகள்) அதை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்களோ, அதைச் சொல்லுங்கள். தேவையில்லாமல், விளக்கம் சொல்வதற்கெல்லாம் நேரம் தர முடியாது.*

திரு. கரி. இராமசாமி: *தேவையில்லாமல் ஒன்றும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மேல் இதில் விவாதம் கூடாது என்பது. . .(குறுக்கீடு)*

திரு. கரி. இராமசாமி: *இது விவாதமே கிடையாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, விடுங்கள். என்ன சொல்ல வருகிறீர்களோ, சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *இப்போது நாங்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கையின்மீது, உங்களுடைய நிலைப்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடு) விளக்கமெல்லாம் கேட்க முடியாது, உட்காருங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல விளக்கங்களைக் கொடுத்தார்கள். இதுகுறித்து இந்த அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு என்ன என்பதைச் சொல்லட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதானே, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தமிமுன் அன்சாரி உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

(உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவையிலிருந்து வெளியேறினார்.)

(அவையிலிருந்து வெளிநடப்புச் செய்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் லாபியில் நின்று தொடர்ந்து கோஷமிட்டனர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள் லாபியில் நின்று கொண்டு கோஷமிடுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) லாபியில் நின்று கொண்டு கோஷமிடுவது முறையல்ல. 'வெளிநடப்புச் செய்கிறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றீர்கள். வெளிநடப்புச் செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்) லாபியில் நின்று சத்தம் போடும் மாண்புமிகு உறுப்பினர்கள், 'வெளிநடப்புச் செய்கிறோம்' என்று சொன்னீர்கள். நீங்கள் அமைதியாக வெளிநடப்புதான் செய்ய வேண்டும். லாபியிலே நின்று கொண்டு அவையை நடத்துவதற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடாது. நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். வெளிநடப்பு என்றால், நீங்கள் தாராளமாக வெளிநடப்புச் செய்யலாம். வெளியே போய் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், இங்கு லாபியிலே நின்று கொண்டு, நான் அவையை நடத்துவதற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடாது என நான் அவர்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கார்த்திக், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக விளக்கம் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கமாகக் குறிப்பிட்டேன். இதுகுறித்து உச்ச நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்து, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வழக்கின்மீது உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் என்ன தீர்ப்பு வழங்கப்படுகின்றதோ, அதை அரசு நடைமுறைப்படுத்தும் என்பதைத் தெளிவாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(ஆ) கோயம்புத்தூர், காந்திபுரம் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி அலுவலகம்மீது பெட்ரோல் குண்டு வீச்சு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கார்த்திக், என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.*

2017 ஜூன் 20]

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம், காந்திபுரம் பகுதியில் நூறு அடி சாலையிலுள்ள இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியினுடைய மாவட்டக் குழு அலுவலகம் மீது கடந்த 17-6-2017 அன்று பெட்ரோல் குண்டு வீசப்பட்டுள்ளது. இரு சக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டு வீசியதால் மார்க்சிஸ்ட் கட்சியின் அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் அந்த அலுவலகத்தின் ஜன்னல் பகுதிகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. தமிழ்நாட்டில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பது அரசின் கடமை. கோவையில் நடைபெற்றுள்ள இந்தச் சம்பவம் குறித்து. . .*

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கார்த்திக், நீங்கள் கவனத்தை ஈர்த்துவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தகவல் கோரல் என்ற முறையில்தான் நான் உங்களை அனுமதித்திருக்கிறேன். நீங்கள் விளக்கமாகப் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்)*

திரு. நா. கார்த்திக்: *சரி. இதுபோன்ற சம்பவங்களை. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் பேசாமல் இருங்கள். நான் அவரைப் பார்த்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் என்னைப் பாருங்கள். நான் அவரைப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) திரு. கார்த்திக், சொல்லுங்கள்.*

திரு. நா. கார்த்திக்: *இந்தச் சம்பவம் குறித்து கோவை மாநகர காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க தமிழக அரசும், காவல் துறையும் விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம், இரத்தினபுரி காவல் நிலைய சரகம், காந்திபுரம் 2 ஆம் விரிவு என்ற முகவரியில்*

இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி கோவை மாவட்ட குழு அலுவலகம் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்தில் திரு. ஆனந்தன் என்பவர் முழுநேர ஊழியராகவும், ஓட்டுநராகவும் பணிபுரிந்து வருகிறார். கடந்த 17-6-2017 அன்று காலை வழக்கம்போல் திரு. ஆனந்தன் நடைபயிற்சிக்குச் சென்றுவிட்டு 7-00 மணியளவில் கட்சி அலுவலகம் வந்தபோது தீப் பற்றி எரிந்தது போன்ற வாசனையை உணர்ந்திருக்கின்றார். அவர் அலுவலக வளாகத்திற்குள் சென்று பார்த்தபோது அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் வலது பக்கக் கதவுகளில் கரும்புகை படிந்திருந்ததையும், அதேபோன்று அலுவலக ஜன்னல் ஒன்றில் கரும்புகை படிந்திருந்ததையும் பார்த்துள்ளார். மேலும் கீழே மண்ணெண்ணெய் வாசனையுடன் கூடிய ஒரு கண்ணாடி பாட்டில் மற்றும் கருகிய நிலையில் பெட்ரோல் வாசனையுடன்கூடிய ஒரு பிளாஸ்டிக் பாட்டில் கிடந்ததையும் பார்த்துள்ளார். இது தொடர்பாக திரு. ஆனந்தன் இரத்தினபுரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் குற்ற எண் 480/2017, சட்டப் பிரிவுகள் 435 இ.த.ச. மற்றும் பிரிவு 3, இந்திய வெடி பொருட்கள் சட்டம், 1908-ன்கீழ், வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்று, தடய அறிவியல் நிபுணர் குழுவினரையும், துப்பறியும் மோப்ப நாய் பிரிவினரையும் மற்றும் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயல் இழக்கச் செய்யும் குழுவினரையும் அங்கு வரவழைத்து தடயங்களைக் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். இது தொடர்பாக காவல் துறையினர் 3 தனிப் படைகள் அமைத்து, எதிரிகளைக் கண்டுபிடித்து கைது செய்ய பல்வேறு கோணங்களில் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், என்ன ? இரண்டு நாட்களாக இதையே கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடம். அவ்வளவுதான். ஆனால், அமைச்சரிடம் நீங்கள் பதில் எதிர்பார்க்கக்கூடாது. ஏனென்றால் நான் அமைச்சரிடம் எதுவும் தெரிவிக்கவில்லை.

2017 ஜூன் 20]

***முனைவர் கோவி. செழியன்:** *சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கதிராமங்கலத்தில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் புதிய பைப் லைன்கள் புதைக்க முற்பட்டது. விவசாய நிலங்களைப் பாதுகாக்க அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த விவசாயிகள் போராடினர். நானும், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினரும் களத்தில் நின்று அவர்களைச் சமாதானப்படுத்தி, எந்த அளவுக்கு ஊரில் அமைதி ஏற்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு அமைதியை நிலைநாட்டினோம். இந்தவகையில் பல பேர் போராடினர். குறிப்பாக, பேராசிரியர் ஜெயராமன், கதிராமங்கலம் ராஜி, வழக்கறிஞர் கரிகாலன், சமூக ஆர்வலர் விஜயராகவன் மீதெல்லாம் வழக்கு போடப்பட்டுள்ளது. ஊர் பதட்ட நிலையில் இருக்கிறது. எனவே, அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்று . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

3. கவன ஈர்ப்பு

மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகுதியான மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்" வழங்க வேண்டிய அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

இரண்டு கால்களும் ஊனமுற்று, வலுவிழந்து, இரண்டு கைகளும் நல்ல முறையில் செயல்படும், கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய ஸ்கூட்டர்கள், பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிடவும், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க அரசாணை (நிலை) எண் 30, மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந.2.1) துறை, நாள் 14-3-2012 வெளியிடப்பட்டு, பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மாவட்டம் வாரியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ், ஓட்டுநர் உரிமம் பெறத் தகுதியுடைய 18 வயது நிறைந்த, நல்ல மனநிலையுடன் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு, தகுதியுடைய அனைத்து பயனாளிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, படிப்படியாக அனைவருக்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் பயன்பெறும் மாற்றுத் திறனாளிகள், மாவட்ட ஆட்சியர் தலைமையில்,

(அ) எலும்பியல் மருத்துவர் (Orthopedic Surgeon)

(ஆ) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (RTO)

(இ) மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் (DDAWO)

ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவின்மூலம் தெரிவு செய்யப்படுகிறார்கள். தேர்வு செய்யப்பட்ட, தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் ஸ்கூட்டர்கள் மாவட்ட அளவில், அந்தந்த மாவட்ட ஆட்சியரின் நேரடிக் கண்காணிப்பில் மாவட்டங்களிலேயே வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளித்தும், தனியார் நிறுவனங்களில்

2017 ஜூன் 20] [டாக்டர் வி. சரோஜா]

பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளுக்கும், சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படுகின்றன.

மத்திய, மாநில அரசுகளில் பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கு பயணப்படி வழங்கப்பட்டு வருவதால், இத்திட்டத்தின்கீழ் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படுவதில்லை.

இதுவரை இத்திட்டத்தின்கீழ், ஒவ்வோர் ஆண்டும் அதிக நிதி ஒதுக்கப்பட்டு, அதிக எண்ணிக்கையில் பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். இதுவரை 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 4,824 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம்:

வ. எண்	ஆண்டு	அரசிடமிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் எண்ணிக்கை
1.	2011-2012	370
2.	2012-2013	400
3.	2013-2014	969
4.	2014-2015	985
5.	2015-2016	1,083
6.	2016-2017	1,017
	மொத்தம்	4,824

இதுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்வாயிலாக 2011 ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 1288 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மாவட்டங்களிலிருந்து, இத்திட்டத்தின்மூலம் பயன்பெறக்கூடிய தகுதியுள்ள பயனாளிகள் மொத்தம் 2,447 நபர்கள் உள்ளனர் என்பது கண்டறியப்பட்டு, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மறுவாழ்வு ஏற்படுத்தும் வகையிலான உன்னத நோக்கில் 2017-2018 ஆம் நிதியாண்டில்

ரூ.11.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 20, மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந.2.1) துறை, நாள் 22-5-2017-ன்படி, 2,000 மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள 447 தகுதியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கும் அரசிடமிருந்து உரிய நிதியினைப் பெற்று, இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 வயது நிறைந்த ஓட்டுநர் உரிமம் பெற்ற நபர்களில் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளித்தும், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளுக்கும், சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதை நான் அவைக் குறிப்பிலே பதிய வைக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இன்னும் 2,447 நபர்களுக்கு அந்த ஸ்கூட்டர்கள் வழங்கப்பட வேண்டும்.

முற்பகல் 11-50

இந்த ஆண்டு 2,000 பேருக்கு ஸ்கூட்டர்கள் வழங்குவதற்கு சுமார் ரூ.11.97 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், மேலும் 447 தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் அரசிடமிருந்து நிதியைப் பெற்று ஸ்கூட்டர்கள் வழங்கப்படுமென்றும் அறிவித்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, தற்போது தமிழ்நாட்டில் 2,447 பேர்தான் தகுதியானவர்கள் இருக்கிறார்களா என்பதுதான். மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரையில், இரண்டு கைகள் நல்ல நிலையிலும், இரண்டு கால்கள் மட்டும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மட்டும் தற்போது ஸ்கூட்டர் வழங்கப்பட்டு வருகின்றன. நான் அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஒரு கால் முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கும் நீங்கள் ஸ்கூட்டர்

வழங்குவதற்கு மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான்.

அதேபோன்று, மாவட்டத்திற்கு ஒரு மாற்றுத் திறனாளி நல அலுவலகம்தான் இருக்கிறது. உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். வாரத்தில் ஒரு முறை, திங்கட்கிழமை அன்று மாற்றுத் திறனாளிகளுக்காக ஒரு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. அன்றைக்கு M.S., Ortho doctor, Regional Transport Officer மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அந்தப் பயனாளிகளைத் தேர்வு செய்கிறது. உதாரணத்திற்கு, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல், மேல்மலை, பூண்டி, கிளாவரை, கவுஞ்சி போன்ற இடங்கள் சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றன. அங்கிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு மாற்றுத் திறனாளிகள் வாரந்தோறும் எப்படி வர முடியும்? ஆனால், சமூக நலத் துறையின் மூலமாக ஊட்டச் சத்து அலுவலர் என்றும், சமூக நல அலுவலர் என்றும் 385 வட்டார அலுவலகங்களிலும் ஒரு அலுவலரை பணி அமர்த்தியிருக்கிறார்கள். அதேபோன்று, மாற்றுத் திறனாளிகளுக்கென்று அலுவலர் பணியிடங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் புதிதாகத் தோற்றுவிக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. நான் வாய்ப்பு தருகிறேன். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: வேறொன்றும் இல்லை, சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். மன வளர்ச்சி குன்றிய நபர்களுக்கு மட்டுமே தற்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மன நலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாத பராமரிப்பு உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகையாக ரூ.1,000/-தான் தற்போது வழங்கப்படுகிறது. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அலுவலகத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற உதவித் தொகை ரூ.1,500/- ஆகும். எனவே, வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையான ரூ.1,000/- என்பதை ரூ.1,500/- என உயர்த்தித் தரவேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். தற்போது இரண்டு கண்களிலும் பாதிப்புள்ள நபர்கள் மட்டுமே மாற்றுத் திறனாளிகளாகக் கருதப்படுகிறார்கள். ஒரு கை, ஒரு கால் மற்றும் ஒரு காது பாதிப்புள்ளவர்கள் மாற்றுத் திறனாளியாகக் கருதப்படும்பொழுது, ஒரு கண் பாதிக்கப்பட்ட நபர்களையும் மாற்றுத் திறனாளிகளாக அங்கீகரித்து அவர்களுக்கும் நலத் திட்ட உதவிகள் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள், தடையினை வென்று சமுதாயத்தில் பிறரைப்போல சம உரிமையுடன் ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, மறைந்த மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1993 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கென்று தனியாக ஓர் இயக்குநரகத்தை உருவாக்கினார்கள். 1994 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கென்று ஒரு மாநிலக் கொள்கையை உருவாக்கினார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013-2014 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கென்று சிறப்பாகச் செயல்பட்ட மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான்—'The best performing State' என்ற தேசிய விருதையும் பெற்றுத் தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க முடியுமா என்ற ஒரு கேள்வியை கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 11,79,303 பேர் மாற்றுத் திறனாளிகளாகக் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாற்றுத் திறனாளிகள் ஒவ்வொருவரையும் தனி நபராகக் கணக்கிட்டு, அவர்கள் எந்த வகையில் மாற்றுத் திறனாளிகளாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை கண்டறிந்து, அதற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு உபகரணங்கள் மற்றும் உதவித் தொகையை வழங்கி, அவர்களுடைய பொருளாதாரத்தை

முன்னேற்றுவதற்காக நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 11-55

அந்தவகையிலே, கை, கால்கள் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகள் மட்டும் 2 இலட்சத்து 87 ஆயிரத்து 241 பேரும், பார்வையற்றோர் 1 இலட்சத்து 27 ஆயிரத்து 405 பேரும், வாய் பேசாத மற்றும் காது கேளாதோர் 3 இலட்சத்து 318 பேரும், மன நலம் பாதிக்கப்பட்டோர் 32 ஆயிரத்து 964 பேரும், மன வளர்ச்சி பாதிப்படைந்தோர் 1,00,189 பேரும், பல்வகை மாற்றுத் திறனாளிகள் 92 ஆயிரத்து 796 பேரும் இதர வகை 2 இலட்சத்து 38 ஆயிரத்து 392 பேரும் என மாற்றுத் திறனாளிகளை அரசு வகைப்படுத்தியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்களுடன்கூடிய பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க முடியுமா என்ற கேள்வியை கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். துறையின் மானியக் கோரிக்கையின்போது அவர் கேட்டிருக்கின்ற அத்தனை வினாக்களுக்கும் பதிலளிப்பேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க முடியுமா என்று உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தமாக, என்னுடைய விவர அறிக்கையில் விரிவாகவும், வகைப்படுத்தியும், எளிமையாகவும், புரியும்படியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மாற்றுத் திறனாளிகளுடைய வாழ்க்கையில் அக்கறை கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தற்போது இரு கால்களும் பாதிக்கப்பட்டு, மனநிலையில் எந்தவித மாற்றமும் இல்லாத மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் இணைப்புச் சக்கரங்களுடன்கூடிய பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க முடிவெடுத்து படிப்படியாக 2011-லிருந்து 2017 வரை 4,824 பேருக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இதுமட்டுமல்ல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் பயனாளிகளைத் தேர்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தத் தேர்வின் அடிப்படையில், இரு கைகளும், இரு கால்களும் மிகவும் பாதிப்படைந்த

நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த இணைப்புச் சக்கரங்களுடன்கூடிய பெட்ரோல் ஸ்கூட்டர் மிக, மிக அவசியம் என்பதை உணர்ந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டு 11 கோடியே 97 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, 2,000 நபர்களுக்கு இணைப்புச் சக்கரங்களுடன்கூடிய பெட்ரோல் ஸ்கூட்டர் கொடுக்கப்படும் என்ற ஆணையை வெளியிட்டுள்ளார்கள். 2,000 பேருக்குக் கொடுத்தது போக, 447 பேருக்கு இணைப்புச் சக்கரங்களை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவுபேர்தான் கால்கள் பாதிப்படைந்திருக்கிறார்களா என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டிருக்கின்றார்கள். மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தக் குழு தேர்வு செய்த நபர்களை வகைப்படுத்தி, ஒவ்வொருவருக்கும் இந்த பெட்ரோல் ஸ்கூட்டர் கொடுப்பது மட்டுமல்ல, அவர்களுடைய தேவையைக் கருத்திற்கொண்டு, உதவி உபகரணங்கள், மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் ஊன்றுகோல்களும் கொடுக்கப்படுகின்றன. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாற்றுத் திறனாளிகளுக்கென்று வகுக்கப்பட்ட அந்த விதிமுறைகளில், மாற்றுத் திறனாளிகளுடைய ஊனம் 60 சதவிகிதம் என்றிருந்ததை 40 சதவிகிதமாகக் குறைத்தது. அதே சமயத்தில், அவர்கள் உதவித் தொகையைப் பெறுவதற்கு ஆதரவற்றவராக இருக்க வேண்டுமென்ற அந்த நிபந்தனையையும் தளர்த்தி, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகையாக மட்டும் ரூ.243 கோடியே 55 இலட்சத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன நலம் பாதிக்கப்பட்டோர்களுக்கும் இந்த உதவித் தொகையை வழங்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊன்றுகோல் கொடுக்கமுடியும். மீண்டும் சொல்கிறேன் அவர்களுக்குத் தேவையின் அடிப்படையில் எந்த உறுப்பு பாதிக்கப்பட்டிருக்கிறதோ, எந்த அளவுக்குப்

2017 ஜூன் 20] [டாக்டர் வி. சரோஜா]

பாதிக்கப்பட்டிருக்கிறதோ, இன்னும் சொல்லப்போனால் 40 சதவிகிதத்திற்குக் கீழே உடல் ஊனமென்றால் அவர்களுக்கு உதவித் தொகையோ, அரசின் நலத் திட்டங்களோ வழங்குவதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் வளம்பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 159 மனுக்கள் வந்தன. அதில் உறுப்பினருடைய ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து 11 மனுக்கள் மட்டுமே வந்தன. அந்த 11 மனுக்களுக்கும் வண்டிகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். மீதி இருப்பவற்றை மானியக் கோரிக்கையில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கம் சொன்னார்கள். இரண்டு கால்கள் செயலிழந்தவர்களுக்குத்தான் இப்பொழுது ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு கால் இழந்தவர்களும் தமிழகத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். எங்கள் தொகுதியைப் பொறுத்தவரை, 17 பேர் விண்ணப்பம் அளித்துள்ளார்கள். அத்தனை பேருக்கும் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் நான்கு ஆண்டுகாலமாக இன்னும் நான்கு பேருக்கு அந்த ஸ்கூட்டர் வழங்கப்படவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அதேபோல தமிழகத்தில் 2,447 பேர் என்று கணக்கெடுத்திருக்கிறீர்கள். இன்னும் தெளிவாகக் கண்டறிந்து இன்னும் எத்தனை நபர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அத்தனை நபர்களுக்கும் ஸ்கூட்டர்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நன்றாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வெகுதொலைவில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு பேச்சுப் பயிற்சி, தசைப் பயிற்சி, முடநீக்கு உபகரணங்கள் வழங்க நடமாடும் சிகிச்சை வாகனம் என்ற திட்டம் தொடங்கப்பட்டு, செயல்பட்டுவருகிறது. அலுவலகத்தில் பணிபுரியும் தசைப் பயிற்சியாளர், முடநீக்கு வல்லுநர் மற்றும் பேச்சுப் பயிற்சியாளர் என மூவர் நடமாடும் சிகிச்சை வாகனங்களில் செல்கிறார்கள். மாவட்ட அலுவலகத்தில் 10, 14 பேர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் மூவர் மட்டும் மாவட்ட அலுவலகத்தில் பணிபுரியாமல் நடமாடும் சிகிச்சை வாகனத்தில் செல்வதால், அங்கு சிகிச்சைக்கு வருபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, நடமாடும் சிகிச்சை வாகனத்தில் செல்வதற்கென தனியாக அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மன வளர்ச்சி குன்றிய காது கேளாதோர் சிறப்புப் பள்ளி மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டோர் இல்லம் ஆகியவை செயல்பட்டுவரும் நிலையில், Autism, புற உலக சிந்தனையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பள்ளிகள் ஏதும் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Autism, புற உலக சிந்தனையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு முறையாக சிகிச்சை அளிக்கப்படாத பட்சத்தில், எதிர்காலத்தில் அவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, சமுதாயத்திலிருந்து விலக்கிவைக்கப்படுவார்கள். எனவே, தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களிலும் புற உலக சிந்தனையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்புப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, அப்படிப்பட்ட மாணவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்டந்தோறும் 50 பேர் தங்குகின்ற இல்லம்தான் இருக்கிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மாவட்டங்களில் அதிகமாக இருக்கிறார்கள். தேவைப்படுகின்ற இடங்களிலே அந்தக் காப்பகங்களை கூடுதலாகத் திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் மூலம், MR above 40 சதவிகிதம் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்கள், LD above 75 சதவிகிதம் உள்ள கடும் உடல் பாதிக்கப்பட்டவர்கள்

2017 ஜூன் 20] [திரு. அர. சக்கரபாணி]

மற்றும் தசை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு மாதம் ரூ.1,500/- வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1,000/- தான் வழங்கப்பட்டு வருகிறது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து வரவிருக்கின்ற சமூக நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீதான பதிலுரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, நல்ல அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கைகளுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்போது பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். அதோடு விட்டுவிடுங்கள்.*

பிற்பகல் 12-05

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(அ) மாட்டிறைச்சி குறித்து மத்திய அரசு வெளியிட்ட விதிகளுக்கு எதிராக சிறப்புத் தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் மாட்டிறைச்சி சம்பந்தமாகப் பேசுகின்றபோது, ** உணவாக மாட்டிறைச்சி இருக்கிறது என்று குறிப்பாகப் பேசினார். ஒரு குறிப்பிட்ட இனத்தைக் குறிப்பிடுவது போல் அவர் பேசியது இருக்கிறது. எனவே, அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் மாட்டிறைச்சி சாப்பிடுகிறார்கள் என்று சொல்லுங்கள், அதில் ஒன்றும் பிரச்சினையில்லை.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

5. மானியக் கோரிக்கைகள், 2017-2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(இ) கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

- - - -

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017-2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்டு, தமிழ் மண்ணுக்கு தன்னுடைய வாழ்வை ஈந்து, தவ வாழ்வு வாழ்ந்த, எங்கள் தாய்; இருண்டிருந்த தமிழகத்தில் ஒளி வெள்ளம் பாய்ச்சி, மறந்திருந்த மக்களுக்கு மாட்சிமையைக் கூட்டிய மக்கள் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) மறைந்தும், மறையாமலும் எங்கள் உடனுறையும் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.274,32,82,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 870, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2017 ஜூன் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2258, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2334, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3946, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4298, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4794, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4921, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5368, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன்.

திரு. எம்.கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5377, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5764, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6052, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6135, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6146, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6526, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6652, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6677, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1126, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1174, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1793, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4383, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 485, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

பிற்பகல் 12-10

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 579, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சி, தம்மத்துக்கோணம், ஞானம் நகர் காலனி பகுதியில் ஜவஹர் சாலை மற்றும் பிற சாலைகளில் தெரு நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1305, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் நெல்லியாளம் நகராட்சிகளில் குடிநீர் வழங்குதல், தெருவிளக்கு, குப்பை அகற்றுதல் போன்ற பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1430, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மதுரை கிழக்குத் தொகுதி, ஆனையூரில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1754, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், 61-வது வட்டம், நெசவாளர் காலனி, மாநகராட்சி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1863, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2037, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2118, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2171, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சிக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2184, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி தொகுதி, லால்குடி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம் மற்றும் கல்லக்குடி, புள்ளம்பாடி பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2196, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி நகராட்சியை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2511, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகராட்சி, செட்டிச்சாவடி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2603, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2654, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் நகருக்கு தாமிரபரணி கூட்டுக்

குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து தொடங்குவது குறித்தும், ராஜபாளையம் ஆறாவது மைல் இரண்டாவது குடிநீர்த் தேக்கம் பழுதுபார்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2665, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி, செங்கம் பேரூராட்சியில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2968, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்தை வேறு இடத்தில் விரிவுபடுத்தி, புதியதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2713, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி, கூடநாணல் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2795, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் நகரின் அருகில் அமைந்துள்ள வெங்கத்தூர், காக்களூர், ஈக்காடு, சேலை, தலக்காஞ்சேரி, புல்லரம்பாக்கம், திருப்பாச்சூர் ஆகிய ஊராட்சிகளை திருவள்ளூர் நகராட்சிப் பகுதிகளோடு ஒருங்கிணைத்து, திருவள்ளூர் நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3018, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் நகராட்சியில் உள்ள 45 வார்டுகளில் உள்ள முக்கிய சாலைகள், தெரு சாலைகள் அனைத்தையும் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3078, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி.*

திரு. கு. இராதாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விக்கிரவாண்டி பேரூராட்சியில் 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3137, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பேரூராட்சியில் பழுதடைந்துள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3231, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாநகராட்சியில் பல்வேறு பகுதிகளில்*

இருக்கும் சமுதாய நலக்கூடங்களை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3561, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3596, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “இராணிப்பேட்டை தொகுதி, வாலாஜாபேட்டை மற்றும் இராணிப்பேட்டை நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3611, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3684, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “போளூர் தொகுதியிலுள்ள போளூர் ஒன்றியம், சேத்துப்பட்டு ஒன்றியம், பெரணமல்லூர் ஒன்றியங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3732, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4027, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட புதிதாக மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட வார்டு எண்கள் 61, 62, 63, 64, 65 ஆகியவற்றில் வீடுகள் கட்ட கட்டட அனுமதி விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4050, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4190, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியில் இயற்கைச் சீற்றத்தின்போது சேதமடைந்த குடிநீர்த் தொட்டிகளுக்கு மாற்றாக புதிதாகக் குடிநீர்த் தொட்டிகள் அமைத்து முறையாக குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4196, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4469, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஒட்டன்சத்திரம் தொகுதியின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4645, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4908, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, காயல்பட்டணம் நகராட்சியில் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5076, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குளம் தொகுதியில் உள்ள கடையம், பாப்பாகுடி, கீழப்பாவூர் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5245, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்திவேலூர் தொகுதிக்குட்பட்ட செங்கரை பேரூராட்சி, ஜேடர்பாளையம் வேலூர் சாலையிலிருந்து செங்கரையம்மன் கோயில் வழியாகச் செல்லும் சாலையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5584, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.*

திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சி பேருந்து நிலையம் அருகில் உள்ள 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5601, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், குறிப்பாக, வட சென்னை பகுதிகளில் குடிநீருடன் சாக்கடை நீர் கலந்து வருவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5695, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதி முழுவதும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5809, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சியில் குடிநீரின் தரத்தை ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5919, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் மற்றும் பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சிகளில் பூங்காக்கள் அமைக்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5967, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 6041, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகராட்சி குப்பைக் கிடங்கை முறையாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,918,98,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,803,05,23,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,32,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 42- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.*

திரு. பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 886, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2266, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2335, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4015, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4785, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4795, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5367, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன்.

திரு. எம்.கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5380, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5680, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5725, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6134, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6534, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6676, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6653, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1127, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1175, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1794, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1843, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4384, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 488, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 570, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சி சிறு, சிறு ஊராட்சிகளாகப் பிரிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1306, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் ஒன்றியத்தில் உள்ள சேரஸ்கோடு, நெலாக்கோட்டை ஆகிய ஊராட்சிகளைப் பிரிப்பதன் அவசியம் குறித்தும், குடிநீர் வழங்கல், தெருவிளக்கு,*

குப்பை அகற்றுதல் போன்ற பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2166, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆப்பரேட்டர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2185, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி ஊராட்சி ஒன்றியம், திண்ணியம் ஊராட்சி, திண்ணியம் மற்றும் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், வந்தலைகூடலூர் ஊராட்சி, வந்தலைகூடலூரில் பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குப் பதிலாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2194, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணகிரி ஒன்றியம், மோதமடுகு, சூலப்பட்டி, வெலகலசுள்ளி, கிக்கப்பூவத்தி ஆகிய ஊராட்சிகளில் கூடுதலாகக் குடிநீர் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2342, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, பொய்யுண்டார்கோட்டை ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2468, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மைலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், கருவம்பாக்கம் கிராண்டிபுரம் புதூர் செல்லும் சாலையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2488*, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள நூலகங்களில் தொடர்ந்து நல்ல நூல்களை வைத்து பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2512*, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கீழப்பழையார் ஊராட்சி, குடியான தெரு மற்றும் ஆதி திராவிடர் தெருக்களில் *30* ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2606*, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள பழுதடைந்த தொகுப்பு வீடுகள் மற்றும் இந்திரா குடியிருப்பு வீடுகளுக்குப் பதிலாக புதிய கான்கிரீட் வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2624, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் ஏகாநல்லூர், நாச்சியார்கோயில், திருநறையூர், கோவனூர், துலாச்சி ஆகிய ஊராட்சிகளில் உள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2666, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.*

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி, நீப்பத்துறையை மையமாக வைத்து இளங்குள்ளரி, கட்டமடுவு, புளியம்பட்டி, ஆண்டிப்பட்டி, மேல்வணக்கம்பட்டி, மேல்பள்ளிப்பட்டு, மேல்ராவந்தவாடி, மேல்செயம், அந்தனூர், சென்னசமுத்திரம், காயம்பட்டு, மேல்புழுதியூர், தீர்த்தவார்பட்டு, வளையாம்பட்டு ஆகிய பகுதிகளுக்கு கூடுதலாக குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2704, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, மனையேறிப்பட்டி-கடம்பங்குடி ஒன்றியச் சாலை, வழி கோட்டரப்பட்டி, அய்யனாபுரம், தொண்டராயன்பாடி, மாரனேரி சுமார் 14. கி.மீ. சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2793, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதி, திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சி, பழையனூர் ஊராட்சி, வீரராகவபுரம் ஊராட்சிகளை உள்ளடக்கிய கிராமங்களுக்கு திருவாலங்காட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2909, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி தொகுதியில் உள்ள இந்திரா நகர் ஊராட்சியில் வரிவசூல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2969, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, பூட்டை ஊராட்சிக்குட்பட்ட பாவளம் துணை கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3079, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம் நத்தமேடு-கல்பட்டு சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3151, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, தாந்தாணி ஊராட்சி, செட்டிங்காடு-சிட்டங்காடு இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3492, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரகக் குடியிருப்புத் திட்டமான முதலமைச்சரின் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3562, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில் குமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3604, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3679, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில், களம்பூர், சேத்துப்பட்டு மற்றும் பெரணமல்லூர் பேரூராட்சிகளில் குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3763, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு தொகுதி, சக்குடி பகுதியில் அமைந்துள்ள மயானத்தை இணைக்கும் இடத்தில் உள்ள ஓடையில் பாலம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3910, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் திருக்கொள்ளிக்காடு, ஆண்டாங்கரை, பொன்னிரை, இளவரசநல்லூர், கொருக்கை, விளக்குடி, இராயநல்லூர், அய்யங்கட்டி, விட்டுக்கட்டி, கொக்கலாடி ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4019, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமங்களில் வசிக்கும் வீடு இல்லாதவர்களுக்குப் புதிய வீடு கட்டித் தருவது குறித்தும், கிருஷ்ணாபுரம், தளவாய்புரம் ஊராட்சிகளில் உள்ள குளங்கள் தூர்வாரப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4049, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முடிச்சூர் ஊராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4199, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு

வழங்குவதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4302, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4473, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஒட்டன்சத்திரம் தொகுதியில் வடகாடு ஊராட்சியில் உள்ள பரப்பலாறு அணை அருகே ஒரு சமுதாயக் கிணறு வெட்டி ஊராட்சி முழுவதும் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4502, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செஞ்சி நகரில் உள்ள B ஏரிக்கரையை வலுப்படுத்தி, நடைபாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4646, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4700, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன்.

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4718, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அனைத்துக் கிராமங்களுக்கும் செயல்படுத்தி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4736, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதியில் உள்ள ஊராட்சி சாலைகளைச் சீர்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5231, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்திவேலூர் தொகுதியில் மனப்பள்ளி, பாலப்பட்டி, பாண்டமங்கலம், பில்லிகல்பாளையம், ஜேடர்பாளையம், சோளசிராமணி, மணியனூர், சுந்தம்பாளையம், நடந்தை, வேலூர், காவிரிபாலம், வேலூர் நான்கு ரோடு ஆகிய இடங்களில் உயர்மின் கோபுரம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5793, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.*

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினைகளைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5815, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், லாடாவரம், எசையனூர் ஊராட்சிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5889, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5920, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதி, துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியங்களில் புதிய ஒன்றிய அலுவலகங்கள் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6013, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி, பரவாக்கோட்டை ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,236,98,50,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,428,44,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மானியக் கோரிக்கை எண் 53-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ. 1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 908, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2267, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2332, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4200, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4287, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4649, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4796, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4922, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5072, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5369, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன்.*

திரு. எம்.கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5373, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5587, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5724, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6062, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6133, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6145, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6201, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 6533, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6571, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6618, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.*

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6651, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6675, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1128, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1176, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1795, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1836, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4340, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 467, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 561, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளிர்சாதனப் பெட்டி (Fridge) இல்லாத ஏழை குடும்பத்தாருக்கு விலையில்லா குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2625, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைமூலம் புதிய திட்டங்கள் துவக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5229, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.760,85,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை ஆகிய துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இப்பேரவையில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், மக்கள் பணி செய்வதையே கடமையாகக் கொண்டு செயல்பட்டு வரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது சட்டமன்றப் பேரவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அவர்களின் வழித் தோன்றல், ஓய்வறியா சூரியன் சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித்

@ 243 முதல் 686 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர், திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் சட்டமன்றத்தில் ஆளுநர் உரை வாசிக்கப்பட்ட பின்பு, ஒரு சில நாட்கள் இடைவெளியில் துறைவாரியான மானியக் கோரிக்கைகளை விவாதிப்பதற்கு சட்டமன்ற வரவு-செலவு கூட்டத் தொடர் நடைபெறும். இந்த ஆண்டு, ஆளுநர் உரைக்குப் பிறகு, கிட்டத்தட்ட 5 மாதங்கள் கழித்து, நீண்ட இடைவெளிக்குப் பிறகு, இக்கூட்டத் தொடர், அதுவும் தி.மு.க., காங்கிரஸ் போன்ற எதிர்க்கட்சிகளின் வலியுறுத்தலுக்கும், போராட்டத்திற்கும் பின்னர் நடைபெறுகிறது. துறைவாரியான மானியக் கோரிக்கைகள் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படாமல் மக்கள் நலத் திட்டங்கள் எதையும் நிறைவேற்றிட இயலாது. ** தலைவர் தளபதி அவர்கள் குற்றம் சாட்டுகிறார். (குறுக்கீடுகள்) இந்த காலதாமதம் தவிர்க்கப்பட்டு, . . (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, ஆறு மாதங்களுக்கு மானியக் கோரிக்கைகளுக்கு உண்டான தொகையை ஏற்கெனவே இந்தப் பேரவை அளித்துவிட்டது. 6 மாத காலத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் சபையைக் கூட்டி நாம் விவாதம் நடத்தலாம் என்று ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நடைமுறைதான் இப்பொழுதும் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அதை ஒரு குறையாகச் சொல்ல வேண்டாம், அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு)

திரு. கு. பிச்சாண்டி: ஏற்கெனவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறிய அத்தனை வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) நேரமில்லை, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) அவர் சொன்னதை நீக்கி விட்டேன். நீங்கள் அவர் சொன்னதையும்* record *செய்கிறீர்கள். (குறுக்கீடு) ஒன்றும் வேண்டாம் (குறுக்கீடு) நீங்கள் ஓர் அரசாங்கத்தைப் பற்றி அப்படியெல்லாம் சொல்லக்கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், விவாதத்திலே பேசலாம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய செயல்பாடுகளைப் பொறுத்தவரையில், நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக பல்வேறு சாதனை சரித்திரங்களை அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்; பத்திரிகைகளும் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள்தான் பாராட்டவில்லை. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுங்கள். (குறுக்கீடு) அது வேண்டாம், விடுங்கள். (குறுக்கீடு) அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) மக்கள் பாராட்டுகின்றார்கள் என்றுதானே சொன்னார். மக்களும் இதைப் பாராட்டுகின்றார்கள் என்றுதானே சொன்னார். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, உட்காருங்கள்.* Unparliamentary *வார்த்தை அல்ல. ஓர் அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, நல்லவிதமாகச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். வாய்ப்பு வரும்போது பின்னர் பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) அது ஒன்றுமில்லை, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) திரு. கு. பிச்சாண்டி அவர்கள் பேசட்டும், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நேற்று சபைக்கு வராமல், இன்றைக்கு வந்து எல்லாவற்றையும் சேர்த்துப் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) இது ஒரு பெரிய விஷயம் இல்லை. (குறுக்கீடு) இதுவொரு பெரிய விஷயமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் ஒரு தீர்ப்பைச் சொல்லிவிட்டேன், அதோடு அதை விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) அதையும் சேர்த்து அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுகிறேன், விடுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதை (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையை இந்த அவையிலே எழுப்பி, குழப்பத்தை விளைவிக்கின்ற அடிப்படையிலேதான் இப்படிப்பட்ட கருத்துகளைச் சொல்கிறார் என்று நான் கருதுகின்றேன். ஆகவே, தேவையற்ற கருத்தைத்தான் நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அது ஒன்றும் தவறில்லை. ஆகவே, இதை வேண்டுமென்றேதான் அவர் பேசுவதாக நான் கருதுகின்றேன். ஏனென்றால், எனக்கு முன்னால் இங்கே பேசிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், 'அரசு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது' என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். ஆகவே, வேண்டுமென்றே திட்டமிட்டு, அவர் இப்படிப் பேசுவதாகத்தான் நான் கருதுகின்றேன். தாங்கள் நீக்கியது சரிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அவர் பேசியதும் இருக்கட்டும், நான் பேசியதும் இருக்கட்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீதிபதி, நியாயம் சொல்லுங்கள். இந்த இருக்கையில் அமர்ந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) நியாயத்தைத்தான் சொல்கிறேன், உட்காருங்கள். அதாவது, இந்த அரசு. . . (குறுக்கீடு)*

பிற்பகல் 12-25

திரு. துரைமுருகன்: நான் கேட்பது என்னவென்றால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசிய கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக் குறிப்பில் இருக்கட்டும் என்று சொல்கிறார். இப்போது உங்களுடைய தீர்ப்பு என்னவென்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று (குறுக்கீடுகள்) நீங்கள் அரசாங்கம் ** என்று சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ** என்று சொல்வது—(குறுக்கீடுகள்) அரசு சிறப்பாகச் செயல்படுவதாக அவர்கள் சொன்னார்கள். நீங்கள் சிறப்பாகச் செயல்படவில்லை என்று சொல்லுங்கள். அது இருக்கட்டும். ** என்று சொல்வது அவைக் குறிப்பில் வேண்டாம் என்பது என்னுடைய கருத்து. சிறப்பாகச் செயல்படவில்லை என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சிறப்பாகச் செயல்படவில்லை என்று சொல்லுங்கள்; நான் அதைப் பதிவுசெய்து கொள்கிறேன். ** என்று சொல்வது வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவையின் மூத்த உறுப்பினர். சட்டமன்ற விதிகளுக்குட்பட்டு, மரபுகளுக்குட்பட்டுதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவையை நடத்திக்கொண்டிருக்கிறார். அது மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றபிறகு இன்றைக்கு அற்புதமான திட்டங்களை நாட்டு மக்களுக்குத் தந்து, அதை மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து என்கின்ற அற்புதமான திட்டம் துவங்கப்பட்டு அதற்காக ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, மேலும் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒலி) அதைப்போல, வண்டல் மண் எடுக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதால் விவசாயிகள் அந்தத் திட்டத்தை பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, கோயம்புத்தூர் அத்திக்கடவு-அவினாசி திட்டத்திற்கு 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், சரித்திரத்திலே இடம் பெறக்கூடிய அளவிற்கு 2,000 கோப்புகளில் கையொப்பமிட்டு, சிறப்பான முறையிலே ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எதை வைத்து ** என்று சொல்கிறீர்கள்? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியதையும்தான் நான் பதிவு செய்து விட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆளும் கட்சி. நாங்கள் எதிர்க்கட்சி. ஆளும் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் அரசைப் பாராட்டிப் பேசுவது இயற்கை. அதைப்போல, எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய நாங்கள் ஆளும் கட்சியினுடைய குறைபாடுகளை, மக்களுடைய பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவது எங்களுடைய கடமை. எப்படி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை நடத்தக்கூடிய வகையில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்களோ, அதைப்போல, இதுவரையில் தமிழக வரலாற்றில் இல்லாத அளவிற்கு, பெரும்பான்மை பெற்றிருக்கக்கூடிய எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு இங்கே அமர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் திறமையாக ஆட்சி செய்கிறீர்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ** என்று சொல்லக்கூடிய உரிமை எங்களுக்கு இருக்கிறது. அதை நாங்கள் சொல்வது எங்களுடைய கடமை. அவைக் குறிப்பில் வைத்திருப்பதும், நீக்குவதும் மாண்புமிகு பேரவைத் தலைவரினுடைய உரிமை; அவருடைய முடிவிற்கே நான் விட்டுவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைப்பார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்றுதான் நான் எதிர்பார்த்தேன். ஆனால், எங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசி, ஏதோ குழப்பம் விளைவிக்க முயற்சிப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வார்த்தையைச் சொல்வது மரபு அல்ல. ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போது அந்த வார்த்தையை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்ற ஓர் உத்தரவைப் பிறப்பித்து விட்டீர்கள். அதற்குப்பிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேச எழுந்திருக்கிறார் என்றால், என்ன சொல்வது? ஏற்கெனவே நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி, அதற்கு ஓர் உத்தரவும் வழங்கிவிட்டீர்கள். அதற்குபிறகு, அதே கோரிக்கையை வலியுறுத்துவது எந்த விதத்தில் நியாயம்? அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நீண்டகாலமாக அமைச்சராக இருந்தவர். அவையின் மூத்த உறுப்பினர், அனுபவம் பெற்றவர். அவையில் என்ன கருத்தைச் சொல்ல வேண்டுமென்று நன்கு தெரிந்தவர். மரபுகளைக் கடைப்பிடிக்கக்கூடியவர். அவரே இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவது சரிதானா என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்மீது வைத்திருக்கும் மரியாதைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஒன்றே ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் பேசியது* unparliamentary word *அல்ல. (குறுக்கீடு)*

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Unparliamentary word *என்று நான் அதை நீக்கவில்லை. ஓர் அரசாங்கத்தை அப்படிச் சொல்ல வேண்டாம் என்று நான் விரும்புகிறேன். (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *அதற்குத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். சார், நான் சொல்வதைக் கேளுங்கள். அவர் பேசினார். நீங்கள் பதில் சொன்னீர்கள் நான் எழுந்தேன். நான் எழுந்ததே குழப்பம் என்கிறார். அப்படிப் பார்த்தால் பேரவை முன்னவர் அவர்கள் பதில் சொன்னார். அதற்குமேல் அவர் எழுந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழப்பம் செய்கிறார், என்று நான் சொல்வதா? இது தேவையில்லாத விவகாரம். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி விடுங்கள். (குறுக்கீடுகள்) இதோடு விட்டுவிடலாம் விடுங்கள். போதும். நீங்கள் சொன்னதைப் பதிவு செய்துவிட்டேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் குற்றம் குறைகளைத் தேடிக் கண்டுபிடித்து புழுதிவாரித் தூற்றுவது என் நோக்கம் அல்ல. ஆனால், அரசு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றாமல் தவறிடும்போதும், அப்பணிகளைச் சரியாகச் செய்யாத போதும் அதனைச் சுட்டிக்காட்டி, குறைகளைக் களைந்திட தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்த வேண்டியது எதிர்க்கட்சியின் கடமையாகும். "கையிலே பணம் இருந்தால், கைதட்ட ஆள் இருந்தால், பொய்யிலே நீந்தி வந்தால் புளுகுபவனெல்லாம் தலைவனடி; பூசாரி வேலை செய்யும் ஆசாமி சூரனடி" என்பதற்கேற்ப, தமிழகத்திலே உள்ள இன்றைய அரசியல் நிகழ்வுகள் கவியரசு கண்ணதாசனின் மேற்சொன்ன வரிகளை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. சத்தியத்தைப் பேசி, சிலுவைகளைச் சுமப்பதைவிட, சௌகரியங்களைப் பேசி சந்தோசங்களை அடையலாமே என்ற மனநிலை இன்றைக்கு நிலவுகிறது.*

மக்களாட்சியின் மாண்பும், பண்பும், சிறப்பும் மக்களிடத்தில் அதிகாரத்தினைப் பகிர்ந்தளிப்பதில்தான் இருக்கின்றது. In a democracy, the Government is 'of the people, by the people and for

the people.' *மக்களே தங்களுக்காக, தங்களது பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்து, தங்கள் நலனைப் பேணும் வகையில் ஆட்சி செய்வதுதான் மக்களாட்சியின் மகிமை. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்படாமல், அதிகாரத்தினை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்துவிட்டு, அவர்களை ஆட்சியாளர்கள் விருப்பப்படி ஆட்டி வைப்பது ஜனநாயகத்திற்கு எதிரானதாகும். அது ஒரு ஜனநாயகப் படுகொலை. எதிர்க்கட்சிகள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தக் கோரி வலியுறுத்தியும், உயர் நீதிமன்றமே பலமுறை தேர்தல் நடத்துமாறு பணித்து, குட்டி, உரைத்தும், உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் இருப்பது ஆளும் அண்ணா தி.மு.க-வினருக்கு ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை இல்லை என்பதைத்தான் காட்டுகின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தத் தேர்தல் என்ன காரணத்தால் நின்றது என்பது நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல், இதில் யார் நீதிமன்றத்திற்குச் சென்றது? மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தேர்தலை நடத்தத் தயாராக இருந்தது. தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்பு 1996 மற்றும் 2006-ல் உங்களால் பின்பற்றப்பட்ட அதே முறையில்தான் இப்பொழுதும் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, இதில் பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடுகூட கூடுதலாகத்தான் இருந்தது. இன்றைக்கு உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுத்துத் தேர்தலைத் தடுத்து நிறுத்தியது நீங்கள்தான். இது சம்பந்தமாக வழக்கு நிலுவையில் இருக்கின்றது. ஆகவே, அதைப்பற்றி நாம் பேசக்கூடாது. எனவே, தனி அலுவலர்களைப் பற்றி பேசலாம். தனி அலுவலர் நியமனம் குறித்து நிலுவையில் இருக்கின்றது. உள்ளாட்சிகள் செயல்பட தனி அலுவலர்கள் தேவை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் எல்லாப் பணிகளும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி பேசுங்கள். நீங்களே நீதிமன்றத்திற்குச் சென்று தேர்தலை நிறுத்திவிட்டு, நீங்களே அதைப்பற்றிப் பேசுவதுதான் எனக்குப் புரியவில்லை.*

2017 ஜூன் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் பேசியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அந்த விளக்கம் சரியான விளக்கமாக இல்லை என்பதை இந்த அவையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தேர்தலை நிறுத்தியதாகச் சொல்கிறார்கள். நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றது தேர்தலை நிறுத்துவதற்காக அல்ல. தேர்தலை முறையோடு, rotation அடிப்படையில், வாக்காளர்கள் சரிபார்ப்பு பட்டியல் அடிப்படையில், இட ஒதுக்கீடு அடிப்படையில் அந்தத் தேர்தலை நடத்திட வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றோம். நீங்கள் செய்திருக்கின்ற தவறை நீதிமன்றம் உணர்ந்த காரணத்தினால்தான் தேர்தலைத் தள்ளி வைத்திருக்கின்றது என்பதுதான் உண்மை. ஆகவே, ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு நம்முடைய அமைச்சர் அவர்கள் தி.மு.க.-தான் வழக்குப் போட்டு தேர்தலை நிறுத்திவிட்டது என்ற தவறான தகவலைப் பதிவு செய்திருக்கிறார். அது உண்மை அல்ல என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் தவறு செய்தது என்று சொல்லவில்லை,மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உள்ளாட்சியில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்க சட்டம் கொண்டுவந்தார்கள். இதையெல்லாம் அறிவித்தபோது, சட்டமாக வருமா என்றெல்லாம் கேட்டார்கள். அதனைச் சட்டமாக்கி தேர்தல் நடத்துவதற்குத் தயாராக இருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடுகூட 2001-ல் மக்கள் தொகை அடிப்படையில் 1.496 விழுக்காடு இருந்தது. ஆனால் 2011 ஆம் ஆண்டில் மக்கள்தொகை அடிப்படையில் 1.653 விழுக்காடாக கூடுதலாகி இருந்தது. அதைப் பற்றியெல்லாம் நீதிமன்றம் ஒன்றும்

சொல்லவில்லை. அதனை நீதிமன்றம் accept செய்து கொண்டது. ஆனால், அந்த நேரத்தில் எதற்காக நீதிமன்றம் சென்றீர்கள் என்பது தெரியவில்லை. அதற்குள் போக நான் விரும்பவில்லை. இப்போது வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கும் தேர்தலை நடத்தத் தயாராகத்தான் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால், நீதிமன்றத்தில் அதனைக் கொண்டு சென்று நிறுத்தியது தி.மு.க.தான் என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு உங்கள் ஆட்சியில் வந்ததை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை, இந்தியாவிலேயே முதன்முதலில் வழங்கிய ஆட்சி தி.மு.க. ஆட்சிதான் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். நீதிமன்றத்தில் தி.மு.க.தான் தேர்தலுக்குத் தடை வாங்கியதாக, மீண்டும் அதே குற்றச்சாட்டை இங்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வது உள்ளபடியே தவறாகும். பலமுறை நீதிமன்றத்தில், தேர்தல் ஆணையத்தின் வழக்கறிஞர் அவர்கள் வாதிடும்போது, அவர்கள் தந்த பதிலான 'அரசு இன்னும் தயாராகவில்லை, பல பணிகள் இன்னும் முடிவடையவில்லை; நேரம் வேண்டும்' என்பதைக் கேட்டுத்தான், இந்தத் தேர்தல் தள்ளிப் போய் இருக்கிறதே தவிர, இந்தத் தேர்தலை நிறுத்தியதற்கும், தி.மு.க-வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. முறையாகத் தேர்தலை நடத்திட வேண்டும் என்றுதான் தி.மு.க. அப்போது நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறது. இப்போதும் சொல்லிக்கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 33 சதவிகிதம் இட ஒதுக்கீட்டினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்று நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை*

அமைச்சர் அவர்கள், இதற்கு முன்னால் அவர் கேட்டபோது, அதற்கு பதில் சொல்லியிருக்கின்றார்கள். Cabinet meeting-ல் தானும் இருந்ததாகச் சொல்லியிருக்கின்றார். உள்ளாட்சி அமைப்பில் தமிழ்நாடு தேர்தல் ஆணையம் தனி Body; Independent body. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தேர்தலை நடத்தத் தயாராகத்தான் இருக்கிறது. அந்தத் தேர்தல் ஆணையம் Independent-ஆக செயல்படக்கூடிய அமைப்பு. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) முறையில்லாமல் இப்படி உட்கார்ந்து கொண்டு, சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி பேசினார். அவர் பேசியதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். அதில் விளக்கம் வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாய்ப்புக் கேட்டார், வாய்ப்புக் கொடுத்து, அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, விவாதம் போய்க் கொண்டிருக்கும்போது, நீங்கள் பின்னால் உட்கார்ந்து கொண்டு ஆளாளுக்கு ஏதோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் எப்படி சபையை நடத்த முடியும்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி கேட்கிறார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். விவாதம் இப்போது ஆரோக்கியமாகப் போய்க் கொண்டிருக்கும்போது, நீங்கள் உங்களுடைய கருத்துகளை உட்கார்ந்து கொண்டு பேசினால், நான் சபையை எப்படி நடத்துவது? எல்லோரும் அமைதி காக்கவும். விவாதம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது. நான்தான் அனுமதி கொடுக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அனுமதி கொடுக்கிறேன். உங்கள் தலைவர் அவர்களுக்கும் அனுமதி கொடுக்கிறேன். நான் எல்லோருக்கும் அனுமதி கொடுக்க வேண்டும் என்றால், நான் எப்படி சபையை நடத்த முடியும்? உங்களுடைய கருத்துகளைச் சொல்ல உங்கள் தலைவர் பேசுகிறார். பின்னர், நீங்களும் பேச வேண்டும் என்றால், நான் எப்படி சபையை நடத்துவது? மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு யாருடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது என்ற விவாதம் நடந்தபோதே, நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், அதுவும் 1994 ஆம் ஆண்டு,* Cabinet-ல் discuss *செய்யப்பட்டு, அதற்கான மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், 1996 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, அம்மா கொண்டு வந்த அந்தச் சட்டத்திற்கு செயல் வடிவம் தந்தவர்கள் நீங்கள். ஆனால், அதற்கான விதையைப் போட்டு, மரமாக வளர்த்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நீங்கள் கனியைப் பறித்து விட்டீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டில் நாங்கள் கொண்டு வந்தோம் என்பதை நீங்கள் ஏற்றுக் கொண்டதற்கு முதலில் நன்றி. ஆனால், "நாங்கள் கொண்டு வந்து, நாங்கள்தான் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினோம்" என்று சொன்னார். நான் கேட்கின்ற கேள்வி, நீங்கள் சட்டத்தை நிறைவேற்றியிருக்கலாம். ஆனால், நிறைவேற்றிய அந்தச் சட்டம் தொடர்பாக, அன்றைக்கு பாரதப் பிரதமராக இருந்த திரு. நரசிம்மராவ் அவர்கள், அரசுக்குப் பல கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால், பல ஆண்டுகளாக, 1991-லிருந்து 1996 வரைக்கும், தேர்தலை நடத்துகிற முயற்சியிலே உங்கள் ஆட்சி ஈடுபடவில்லை. ஆனால், 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர்தான், முதன்முதலாக, இந்தியாவிலேயே உள்ளாட்சி அமைப்புகளுக்கு பஞ் சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிரு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12-40

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். பஞ்சாயத்து ராஜ் சட்டம் என்பதே, 1994 ஆம் ஆண்டிற்குப் பிறகு வந்தது. (குறுக்கீடுகள்) அதற்கு முன் அதனை Cabinet-ல் கொண்டு வந்து, அதற்குச் செயல் வடிவம் கொடுத்து, சட்டமன்றத்தில் மசோதாவாக உருவாக்கி, சட்டத்தை இயற்றியவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். எனவே, 1996 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி மலரும் என்று எண்ணியபட்சத்தில், நிச்சயமாக அதற்குச் செயல் வடிவம் கொடுத்திருப்போம். ஆனால், 1996 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிக்கு வந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அந்த எண்ணத்தை, கனவை நீங்கள் நனவாக்கினீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு அனுமதி தரவில்லை. நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு அனுமதி தரவில்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே ஜனநாயக முறையிலே உள்ளாட்சி மன்றத்திலே பதவியில் இருப்பவர்கள் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, ஆட்சி முடிகின்ற 6 மாதத்திற்குள்ளாக அதற்கான பணிகளை எல்லாம் முடித்து, தொடர்ந்து உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி, இன்றைக்கு இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் உள்ளாட்சித் தேர்தல்கள் குறிப்பிட்ட நேரத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், சட்டமன்றத்திலேகூட இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளைப் பிரிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு பல சட்டமன்ற தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டன. நான்கூட டெல்லிக்குச் சென்று, தேர்தல் அலுவலகத்திலே அந்தக் குழுவில் உறுப்பினராக இருந்தேன். ஆக, அப்படியெல்லாம் முன்னெச்சரிக்கையாக இவற்றையெல்லாம் செய்ய வேண்டும். ஆனால், இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், 15 வருடங்களுக்கு முன்பாக எவ்வளவு மக்கள்தொகை இருந்ததோ, அதே அளவை வைத்துதான் இன்றைக்கு நீங்கள் உள்ளாட்சித்

தேர்தலை அறிவித்தீர்கள். 5,000 மக்கள் தொகை இருந்த வார்டில் இன்றைக்கு 9,000 பேர் இருக்கிறார்கள். ஒரு வார்டில் 2,000 பேர் இருக்கிறார்கள். ஒரு வார்டில் 11,000 பேர் இருக்கிறார்கள். ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 69 கிராமங்கள் இருக்கின்றன. ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 30 கிராமங்கள் இருக்கின்றன. இதற்கெல்லாம் சட்டமன்றத்தில் வரையறை செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் தொகுதிகள் மறுவரையறை செய்யும் ஆய்வுக் குழுவில் உறுப்பினராக இருந்ததாகச் சொன்னார். வரையறை செய்யப்பட்டது என்றாலும் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகமாகவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 234. இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. அதுபற்றி* deep-*ஆக உள்ளே போகவில்லை. மேலோட்டமாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் வழக்கிற்கு உள்ளே போகாமல் பேசுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வழக்கிற்கு உள்ளே போகவில்லை. சட்டமன்றத் தொகுதிகள் வரையறைக்குட்பட்டு, பிரிக்கப்பட்டால்தான், ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சி அடைய முடியும். அதேமாதிரி, 5,000 மக்கள்தொகையோடு பிரிக்கப்பட்ட வார்டுகளில் இன்றைக்கு 7,000, 8,000 பேர் ஆகிவிட்டார்கள். முனிசிபாலிட்டியில் ஒரு வார்டில் 2,000 பேர் இருக்கிறார்கள். ஒரு வார்டில் 12,000 பேர் இருக்கிறார்கள். தேர்தலில் நிற்பவர்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும். போன ஆட்சியிலேயே ஒரு வருடத்திற்கு முன்பே, இந்தத் துறை எல்லாவற்றிற்கும் தயாராக இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இங்கே சொன்னார். ஆனால், இன்றைக்கும் தயாராக இல்லை.* Rotation *முறையில் பிரித்திருந்தால், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, இருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். 1996-லும், அதற்குப் பின்னால் வந்த 2006 தேர்தலிலும் நீங்கள் என்ன வரைமுறையைக் கடைப்பிடித்தீர்களோ, அதே வரைமுறைதான் கடைப்பிடிக்கப்பட்டது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, அதெல்லாம் வழக்கு இருக்கிறது. வேறு சப்ஜெக்ட் குறித்து பேசுங்கள். பேசுவதற்கு வேறு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. அதை விட்டுவிடுங்கள். வேறு பொருள் குறித்து பேசுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதைப் பார்த்தால், உள்ளாட்சித் தேர்தல் சம்பந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால், உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே அதுகுறித்து அவையிலே பேசக்கூடாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வழக்குக்குள்ளே போகக்கூடாது. அதுகுறித்து பேசக்கூடாது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வழக்குக்கு உள்ளே போகவில்லை. இருக்கக்கூடிய பிரச்சினைகளைத்தான் சொல்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நானும் அதையேதான் சொன்னேன். வழக்குக்கு உள்ளே போகாமல் பேசுங்கள் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்) அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு இருக்கும் நிலைமை வேறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு* census *எடுத்துவிட்டார்கள்.*

இன்றைக்கும் நாம் 1996 census-ஐ வைத்து தேர்தல் நடத்தினால், அது எப்படி சரியாக இருக்கும்? இதை உள்ளாட்சித் துறை கவனித்து, இந்த வழக்கு முடிந்து, தேர்தல் வருவதற்குள்ளாகவாவது, இட ஒதுக்கீட்டை rotation முறையில் சீர்படுத்தி, அதை வெளிப்படையாக, எல்லோருக்கும் தெரியும்படியாக செய்தால், யாரும் நீதிமன்றத்திற்குப் போகமாட்டார்கள். இரகசியமாகச் செய்வதால்தான் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். பல இடங்களில் எஸ்.சி. வார்டுகள் இல்லவே இல்லை. அதற்குப் பதில் எஸ்.டி. வார்டுகளாகக் கொண்டு வந்து விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விதிமுறைக்குட்பட்டுதான் செயல்பட்டது. எந்த இரகசியமும் கிடையாது. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் கேட்பதுபோன்று 1996-லும், 2006-லும் 9,000 பேர்கள் கொண்ட வார்டுகளை இரண்டு வார்டுகளாக நீங்கள் பிரித்துக் கொண்டு வந்தீர்களா? என்ன செய்தீர்கள்? நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. அதையேதான், அதே நிலைமையைத்தான் தொடர்ந்து நாங்களும் பின்பற்றுகிறோம் என்றுதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, இதை விட்டுவிட்டு வேறு சப்ஜெட்டுக்குப் போங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, தொகுதியிலுள்ள வார்டு மற்றும் ஒன்றியங்களைப் பிரிப்பதற்கு committee அமைத்து, அதற்கான பணிகள் எல்லாம் நடைபெற்றன. ஆனால், அடுத்து அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகுதான், அதைக் கைவிட்டு விட்டீர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் அவற்றைப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-45

அதேபோன்று, 142 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் 4 ஏரிகளையும் தூர்வார பொதுப் பணித் துறை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தற்போது அந்த ஏரிகளில் தண்ணீரே இல்லை. இப்போது தூர்வாரினால்தான், நீரை அதிகளவு சேமித்து வைக்க இயலும். சென்னைக்குக் குடிநீர் வழங்கும் புழல், பூண்டி, செம்பரம்பாக்கம் மற்றும் சோழவரம் போன்ற ஏரிகள் இன்னும் தூர்வாரப்படவில்லை. தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. அந்த ஏரிகளைத் தூர்வாரினால்தான், அதிகளவு தண்ணீரைச் சேமித்து வைக்க முடியும். ஆந்திர அரசால், கிருஷ்ணா நதி நீர் திறந்துவிடப்படுகிறது. ஆனால், அந்த நீரைத் தேக்கி வைப்பதற்கான போதிய வசதிகள் நம்மிடம் இல்லை. இரண்டு ஏரிகளில், அணைகள் போன்று நீர்த்தேக்கம் கட்டுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், பல ஆண்டுகளாகியும் அவை கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை விரைவில் கட்டி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் பல ஏரிகளை உருவாக்க வேண்டும். ஆந்திர அரசு அதிகமான தண்ணீரைத் திறந்துவிட்டாலும்கூட, அதைத் தேக்கி வைப்பதற்கான வசதிகள் நம்மிடம் இல்லை. அந்த நிலையை மாற்ற, பல ஏரிகளை உருவாக்க வேண்டும். சென்னை நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தெலுங்கு-கங்கை திட்டத்தைப் பற்றி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பிச்சாண்டி, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னையின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்தவற்காக, கிருஷ்ணா நதி நீரைத் தேக்குவதற்காக, தேர்வாய்க்கண்டிகையில் நீர்த்தேக்கம் கட்டுவதற்கான பணியை அறிவித்தார்கள். தற்போது பைப் லைன் போடும் பணி நடைபெற்று வருகின்றது. தமிழகம் முழுவதும் 142 ஆண்டுகளில் ஏற்படாத வறட்சி தற்போது ஏற்பட்டுள்ளது. தற்போது, தமிழகத்தில் இரண்டு முறை monsoon

failure ஏற்பட்டுள்ளது, மழைப் பொழிவு 62 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளது. இவ்வாறான மிக மோசமான நிலை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சுனாமி, 'தானே' புயல் போன்ற கடுமையான சூழ்நிலைகள் வந்தபோதும் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டது. தற்போது 142 ஆண்டுகளில் ஏற்படாத வறட்சி ஏற்பட்டுள்ளது. 142 வருடங்களுக்கு முன்பு நாம் யாருமே இருந்திருக்க மாட்டோம். அப்போதுதான் இதுபோன்ற வறட்சி வந்தது. இதுபோன்று கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளபோதிலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையிலான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையிலே அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுகுறித்து உங்களுக்கும் நன்றாகத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் கிட்டத்தட்ட 6 ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அதற்குப் பிறகு, எங்களுடைய துறையாலும் பல ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இன்றைக்கு சென்னை உட்பட தமிழகம் முழுவதும் கோடைக் காலங்களில் குடிநீர்த் தேவையைச் சமாளிக்க, 1,077.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மின் மோட்டாரின் திறனை அதிகரித்தல், ஆழ்குழாய்க் கிணறுகளைச் சுத்தப்படுத்துதல் மற்றும் ஆழப்படுத்துதல், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் உள்ளிட்ட 30,221 நீர் வள ஆதார புனரமைப்புப் பணிகள் எடுக்கப்பட்டு, அதில், இதுவரை 24,000 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னையில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இன்றைக்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலை குறித்து உங்களுக்கும் நன்றாகத் தெரியும். நீங்களே, "142 வருடங்களில் ஏற்படாத வறட்சி ஏற்பட்டுள்ளது; போதிய மழைப் பொழிவு இல்லை" என்று சொன்னீர்கள். இந்தச் சூழ்நிலையிலும்கூட, ஒரு நாளைக்கு 470 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள ஏரிகளின் மொத்தக் கொள்ளளவு 12,522 மில்லியன் கன அடி ஆகும். தற்போது 164 மில்லியன் கன அடி தண்ணீர்தான் இருப்பு உள்ளது. கடந்த ஆண்டு, இதே காலகட்டத்தில் 4,774 மில்லியன் கன அடி நீர்

இருப்பு இருந்தது. இந்தச் சூழ்நிலையிலும்கூட, சென்னைக்கு 470 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதாவது, சென்னைக்கு பரவனாற்றிலிருந்து நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுத்து விநியோகம் செய்யப்படுகிறது. நெய்வேலி நீர்ப்பரப்புப் பகுதியிலுள்ள ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் 35 மில்லியன் லிட்டர் குடிநீரும், திருவள்ளூர் மாவட்டத்தில் 300 விவசாயக் கிணறுகளை வாடகைக்கு எடுத்து, அதன்மூலம் 100 மில்லியன் லிட்டர் குடிநீரும் விநியோகம் செய்யப்படுகிறது. அதேபோன்று, 520 குடிநீர் லாரிகளுடன், கூடுதலாக 150 லாரிகள் அமர்த்தப்பட்டுள்ளன. இதுவரையில் 4,200 trips தான் இயக்கப்பட்டன. தற்போது 700 லாரிகள் மூலம் 7,000 trips மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடிசைப் பகுதி உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் 7,000 trips மூலம் விலையில்லாமல் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. அதேபோன்று, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் 180 எம்.எல்.டி. குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. இவ்வாறெல்லாம் சமாளித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 830 மில்லியன் லிட்டர் குடிநீரை விநியோகம் செய்து வந்தது. கடந்த தி.மு.க. ஆட்சியின்போது 570 மில்லியன் லிட்டர்தான் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. தற்போது ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையிலும் 470 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து 5 ஆண்டுகளாக சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 21,988.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு முன்பு, உங்களுடைய 5 ஆண்டுக்கால ஆட்சியில், 7,280 கோடி ரூபாயை மட்டும்தான் ஒதுக்கீடு செய்தீர்கள். இரண்டிற்கும் 14,708 கோடி ரூபாய் வித்தியாசம் உள்ளது. அந்த அளவிற்கு அம்மா அவர்களால் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. (குறுக்கீடு)

அதேபோன்று, தி.மு.க.-வின் கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியின்போதும், அதற்கு முன்பும் சேர்த்து, 4,945 மில்லியன் லிட்டர் குடிநீர்தான் வழங்கப்பட்டது. (குறுக்கீடு) ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக,

அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 6,831 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாக வழங்கப்படுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், இது சரியில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: 1,886 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாக வழங்கப்படுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் முறையல்ல. நீங்கள் செய்வது முறையல்ல. உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கின்றார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12-50

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான வறட்சியைச் சமாளிக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே சிறப்பான முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏரிகளைத் தூர்வாருதல் மற்றும் குடிமராமத்து போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மேட்டூர் அணை மற்றும் ஆழியார் அணை எல்லாம் இதுவரை தூர்வாரப்பட்டதே இல்லை. இப்போது, பார்த்தீர்களென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான பணிகளை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். ஆழியார் அணைக்கு நான் மற்றும் நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் எல்லாம் சென்று பணிகளை ஆரம்பித்து வைத்திருக்கிறோம். எனவே, எல்லா இடங்களிலும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை உருவாக்கினார்கள்.

அதன்மூலமாகத்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டிலே மட்டும்தான் எல்லா இடங்களிலும் குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், இப்போது கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 73 உப கோட்ட அலுவலகங்களும், 8 கோட்ட அலுவலகங்களும் மூடப்பட இருப்பதாகச் சொல்லப்படுகிறது. B.D.O.s-யே கிராம குடிநீர்த் திட்டப் பணிகள் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள உள்ளாட்சித் துறை பணித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய B.D.O.s எல்லாம் meeting போட்டு பணிகளைச் செய்வதில் busy ஆகிவிடுவதால் எப்போது தொலைபேசியில் அழைத்தாலும் அவர்களிடம் பேச முடியவில்லை. B.D.O.s சென்னைக்கு அடிக்கடி வந்து விடுகிறார்கள். அவர்களை எந்த இடத்திலும் நேரடியாகச் சென்று பார்க்க முடியவில்லை. அவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. இருப்பினும், குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த் திட்டங்களை எல்லாப் பகுதிகளிலும் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. பல கிராமங்களில் குடிநீர் இல்லாத நிலையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டால், அவர்கள் என்ன சொல்கிறார்கள், என்றால் எங்களிடம் பணம் இல்லை; அவற்றையெல்லாம் B.D.O. அலுவலகத்தில்தான் கேட்க வேண்டுமென்று சொல்லக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, குடிநீர் வாரியக் கோட்ட அலுவலகங்களையெல்லாம் மூடக்கூடாது. குடிநீர் வடிகால் வாரியம்தான் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையெல்லாம் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறது. இன்றைக்கு அவற்றையெல்லாம் தனியாரைக் கொண்டு பராமரிக்கச் சொல்கிறீர்கள். தனியாருக்கு 4 மாதமாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. தண்ணீர் இல்லாத வறட்சியான நேரத்தில் குடிநீர்த் தொட்டி இயக்குபவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்களிடம் கேட்டால் தங்களுக்கு 5 மாதங்களாக சம்பளமே வரவில்லை, நாங்கள் எப்படி மோட்டாரை இயக்க முடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளைச் செய்து முடிப்பதில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு சொன்னதற்கு பதில் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சம்பளம் கொடுக்கவில்லை என்று சொன்னார். அதற்குப் பதில் சொல்கின்றார்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த B.D.O.-ஐயும் நாங்களோ, அரசுச் செயலாளரோ, கமிஷனரோ கூப்பிடுவது இல்லை. மாதாமாதம் 2 நாள் ஆய்வுக் கூட்டத்திற்கு திட்ட அலுவலரைத்தான் கூப்பிடுவோம். பொறியாளர்கள் வருவார்கள். மாவட்டத்திலே ஆட்சித் தலைவர் திங்கட்கிழமை கூட்டம் நடத்துவார்கள். சென்னைக்கு B.D.O.s-ஐ கூப்பிடுவது இல்லை.*

அதேபோல இன்றைக்கு பல்வேறு நிதியிலிருந்து 1,077 கோடி ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள்கூட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை இதற்குத்தான் பயன்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதிகமான நிதியை குடிநீருக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உத்தரவிட்டார்கள். எனவே, போர்வெல் போடுவதற்கும், குழாய் அமைப்பதற்கும், சின்டெக்ஸ் டாங்க் வைப்பதற்கும் நிதி இல்லை என்கின்ற சூழ்நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் கிடையாது. எல்லா இடங்களிலும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தில் சில பிரிவுகளை மூடுகிறார்கள் என்று சொன்னார். ஏதாவது ஒரு பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் அல்லது 3 ஆண்டுகள் வரை நடக்கும். அந்தத் திட்டம் முடிந்த பின்னர் அங்கே இருப்பவர்களை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வார்கள். அப்படித்தான் செய்வார்களேயொழிய வேறு ஒன்றும் இல்லை. அதை மாநகராட்சி, நகராட்சியிடம்தான் ஒப்படைப்பார்கள். எந்தப் பிரிவையும் மூடுவது என்பது கிடையாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் பசுமை வீடுகளில் சூரிய மின் சக்தி விளக்குகள் போட வேண்டுமென்று சொல்லி எல்லா பசுமை வீடுகளிலும் போட்டிருக்கிறார்கள். நான் பல்வேறு கிராமங்களுக்குப் போனேன். என்னிடம் ஒரு விவசாயிகூட மனு கொடுத்திருக்கிறார். போட்டோவெல்லாம்கூட இங்கே எடுத்து வந்திருக்கிறேன். போட்டோ காப்பியெல்லாம் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்படியெல்லாம் காட்டாதீர்கள். பேசுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *ஒரு பசுமை வீட்டில்கூட சூரிய ஒளி மின் இணைப்புக்கான வேலை செய்யப்படவில்லை. எல்லோரும் இருட்டில் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியாகக் கவனித்து, அந்தக் கம்பெனி சரியாகப் போடுகிறார்களா, இல்லையா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் விளக்கு எரியவில்லை என்று சொல்கிறார்கள். நாங்கள் போகும் எல்லா ஊர்களிலும் கேட்கிறார்கள். ஆகவே, இதை கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமை வீடுகள் என்பது இந்தியாவிலேயே யாரும் அறிவிக்காத அற்புதமான திட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அற்புதமான திட்டம். (குறுக்கீடு) கேட்ட கேள்விக்குத்தானே பதில் சொல்கிறேன். நீங்களும் அமைச்சராக இருந்தவர்தானே, (குறுக்கீடு) அப்படியெல்லாம் இல்லை. அப்படி கண்டிஷன் போடமுடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அமைச்சராக இருந்தவர். நானும் 2006 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர்தான். நாங்கள் கேட்டபோது, நீங்கள் அப்படி பதில் சொன்னீர்களா? அதெல்லாம் வேண்டாம். அது எங்களுடைய உரிமை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்குப் பதில் சொல்கிறேன். விடுங்கள். (குறுக்கீடு) 2006 ஆம் ஆண்டில் நாங்களும் பார்த்தோம். நீங்கள் அடிக்கடி எழுந்து, எங்களை உட்காரவைத்து விடுவீர்கள். சரி, விடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதாவது, 300 சதுர அடியிலே ஓர் அற்புதமான வீட்டை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டிக்கொடுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பசுமை வீடுகள் மட்டும் அல்ல. நீங்களும் உங்களுடைய தலைவர் பெயரில் ஒரு வீடு வழங்கும் திட்டத்தை அறிவித்தீர்கள். அது வெறும் 200 சதுர அடி வீடுதான். அதுவும் வெறும் ரூ.75 ஆயிரம் மதிப்பில்தான் அறிவித்தீர்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அற்புதமான திட்டத்தை அறிவித்து, கிட்டத்தட்ட மூன்று இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதிலே சோலார் விளக்கைப் பற்றி சொன்னார். அது புதிய திட்டம். அந்தத் திட்டம் இப்போது விரைவுபடுத்தப்பட்டு விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளில் ஆரம்பத்தில் அந்த மாதிரியான சூழ்நிலை இருந்தது. TEDA போன்ற பெரிய கம்பெனிகள் எல்லாம் பணிகளை முடித்தார்கள். அந்தத் திட்டம் இன்றைக்கு விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களும், நானும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு, கூட்டங்கள் எல்லாம் நடத்தப்பட்டு, விடுபட்ட அந்த வீடுகளுக்கும் போட்டுத் தரப்படுகிறது. பசுமை வீடுகளைப் பொறுத்தவரை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ.30 ஆயிரம் ஒதுக்கி, போர்டு, பேனல் செய்வதெல்லாம் ஒரு புதிய திட்டம். நான் இருக்கிற சூழ்நிலையைப் பற்றிப் பேசுகிறேன். பசுமை வீடுகளைப் பொறுத்தவரை முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நீங்கள் சொல்வதுபோல் ஒரு சில வீடுகள் விடுபட்டாலும்கூட, விடுபட்ட இடத்தில் உடனடியாகக் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய விளக்கு அமைக்க இயலாவிட்டாலும், மின் விளக்கு வசதியைச் செய்து கொடுத்தாலே போதும் என்பது அந்த மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பேரூராட்சிகளை எடுத்துக்கொண்டால், அவை பல கிராமங்களை உள்ளடக்கியதாகத்தான் இருக்கின்றன. ஆனால், எங்கு சென்றாலும் பக்கத்தில் இருக்கின்ற கிராமத்தில் 100 நாள்

வேலை திட்டத்திற்குச் செல்கிறார்கள்; எங்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதே பேரூராட்சிகளில் மிகப் பெரிய குறையாக இருக்கிறது. எங்கள் ஆட்சியில் தளபதி திரு. ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, பல பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றினார்கள். அதன்மூலம் மத்திய அரசாங்கத்தினுடைய நிதி வந்தது. இந்த MGNREGS திட்டத்தில்கூட எல்லோரும் வேலை செய்யக்கூடிய நிலை உருவானது. ஆகவே அதையும் அரசு கவனத்தில்கொண்டு, மத்திய அரசாங்கத்திடம் சொல்லி, அந்த மாதிரி கிராமப்புறங்களைச் சூழ்ந்த பேரூராட்சிகளை 100 நாள் வேலை திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்பது மத்திய அரசாங்கத்தின் திட்டம் என்பது தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுதான் அந்தத் திட்டத்தை இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக செயல்படுத்தியது. இதற்கு முன்னால் காங்கிரஸ் அரசுதான் கொண்டுவந்தது. மத்தியில் இன்றைக்கு பி.ஜே.பி. அரசுதான் செயல்படுத்துகிறது என்றெல்லாம் இல்லை. இந்தியாவிலேயே அந்தத் திட்டத்தைச் சிறப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு செயல்படுத்தியதால் இதுவரை, 173.81 கோடி மனித சக்தி உருவாக்கப்பட்டு, இந்திய நாட்டிலேயே தமிழக அரசுதான் முதலிடம் வகிக்கிறது. ரூ.21,720/- கோடி இன்றைக்கு அதற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு கிட்டத்தட்ட 10-க்கும் மேற்பட்ட விருதுகளை மத்திய அரசாங்கம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கத்திற்கு கொடுத்திருக்கிறது.

அதேபோல, பேரூராட்சி என்பது மத்திய அரசாங்கத்தினுடைய norms அடிப்படையில் சேர்க்கப்படுகிறது. அதை நாங்கள் பலமுறை வலியுறுத்தினோம். ஆனால், அவர்கள் அதை எடுத்துக்கொள்ளவில்லை. இது நமக்கு மட்டுமல்ல. எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடியது. இதை நாம் வலியுறுத்தியும்கூட, அவர்கள் அதை எடுத்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அவர் எவ்வளவு தாள்களை வைத்துக் கொண்டு பேசியிருக்கிறார் என்பதை பார்த்தீர்களா?*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளுக்கு மின் கட்டணத்தைக் கட்டுவதற்கு தமிழக அரசு தொகை கொடுக்கிறது. (குறுக்கீடு) ஆனால், சராசரி தொகையைவிட ஒரே மாதிரியான தொகையை சிறிய மற்றும் பெரிய ஊராட்சிகளுக்கு வழங்கும் நடைமுறை உள்ளது. பெரிய ஊராட்சிகளுக்கு அதிக தொகை வழங்காததனால் மின் கட்டணம் கட்டமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, பெரிய ஊராட்சிகளுக்கு மின் கட்டணம் கட்டுவதற்கு அதிக நிதி ஒதுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1-00

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் பேசுகிறபோது, 100 நாள் வேலை பேரூராட்சிகளில் இல்லாமல் இருக்கிறது என்கிற ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக, மறைந்த திரு. கோ.சி. மணி அவர்கள் இருந்தபோது, எந்தெந்த பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்ற வேண்டுமென்று, ஊராட்சிகளின் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், சில இடங்களில் மட்டும் பேரூராட்சிகள் ஊராட்சிகளாக மாற்றப்பட்டன என்பது உண்மை. ஆனால், அதற்குப் பிறகு, 100 சதவிகிதம் பேரூராட்சிகளைச் சிறப்பு ஊராட்சிகளாக மாற்றியும், (குறுக்கீடுகள்) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் 100 நாள் வேலை கிடைப்பதற்கும், மைய அரசினுடைய மானியம் சிறப்பு ஊராட்சிகள்மூலம் கிடைப்பதற்கும் முழு ஏற்பாட்டைச் செய்தவர், எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு நான் வாய்ப்பு தருகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *அந்த சிறப்பு ஊராட்சிகளை மீண்டும் பேரூராட்சிகளாக மாற்றி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமும், மைய அரசினுடைய உதவித் தொகையும் கிடைக்காமல் செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன மாதிரி, மறைந்த திரு. கோ.சி. மணி அவர்கள் மாற்றினார்கள். ஆனால், இவர்கள் அனுப்பினார்களே தவிர, மத்திய அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வரவில்லை. இதுவரைக்கும் எந்த பேரூராட்சிகளிலும் வேலை உறுதித் திட்டம் இல்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மத்திய அரசு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு முன்னோடி கிராமத்தைத் தேர்வு செய்து, அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதுபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கான அடிப்படை வசதிகளைச் செய்யக்கூடிய பணியை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று, எல்.இ.டி. பல்புகள். மின் கட்டணத்தைக் குறைக்கும் நோக்கில் ஊராட்சிகளுக்கு அரசின்மூலம் எல்.இ.டி. பல்புகள் வழங்கப்பட்டன. அவை, எங்கள் கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பல கிராமங்களில் இன்னமும் முழுமையாகப் பொருத்தப்படவில்லை. இதில் அரசு கவனம் செலுத்தி, எல்.இ.டி. பல்புகளை முழுமையாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, MGNREGS திட்டப் பணிகளை வேளாண்மைத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து முழுமையாக தனி நபர் விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தால்தான், விவசாய உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையிலே, விவசாயிகளுக்கு நாம் நன்மை செய்தவர்களாக இருப்போம். ஆகவே, அதைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்து ஆய்வு செய்வதாக, நீங்கள் சட்டமன்றத்தில் அறிவித்தீர்கள். அதையும் விரைந்து என்னுடைய தொகுதிக்கு நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்குபவர்கள் நிலையில், பல்வேறு காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. ஊரக வளர்ச்சித் துறையின் தடை காரணமாக இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கு. பிச்சாண்டி, ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலே விவசாயப் பணிகளை எடுத்துச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே டெல்டா பகுதிகளிலே 15,000 பண்ணைக் குட்டைகளும், டெல்டா அல்லாத பிற பகுதிகளிலே 40,454 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் எங்களுடைய துறை அதிகாரிகளை அழைத்து, ஆய்வுக் கூட்டம் நடத்தி, இந்த ஆண்டும் பல திட்டங்களைச் செய்திட எங்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். கண்டிப்பாக அவையும் விரைவில் செயலாக்கத்திற்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, இன்றைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலிருந்து திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றி பேசினார்கள். இதற்கு முன்மாதிரியே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு திட்டத்திற்கு என்று நிதியெல்லாம் கிடையாது. இருக்கக்கூடிய நம்முடைய மாநில

அரசினுடைய திட்டங்களை ஒருங்கிணைத்து மத்திய அரசினுடைய நிதியைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதற்கு முன்பே, 2011-லேயே 'தாய்' திட்டம் என்ற அற்புதமான திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். தமிழ்நாட்டில் 79,394 குக்கிராமங்கள் இருக்கின்றன. 12,524 ஊராட்சிகளில் உள்ள அத்தனை பகுதிகளுக்கும், குக்கிராமங்களை அலகாகக் கொண்டு குக்கிராமங்கள் வாரியாக அற்புதமான திட்டத்தைக் கொண்டுவந்து, எல்லாவற்றையும் இன்றைக்கு முழுமையாக முடித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் தங்களிடம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல உரிமையுண்டு. மாண்புமிகு அவை முன்னவர், திரு. செங்கோட்டையன் அவர்கள், நீண்ட நெடுங்கால உறுப்பினராவார். இப்படியும் ஒரு மந்திரி அடிக்கடி குறுக்கிடுவது முறைதானா? நீங்கள் நியாயம் என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்கிறேன். காரணம், நீங்கள் நீண்ட அனுபவம் உள்ளவர். எந்நேரத்திலும் சபையில் இருக்கிறவர். இது, நியாயம்தானா என்பதை மட்டும் சொல்லுங்கள். இல்லாவிட்டால், உங்கள் அமைச்சருக்கு இது குறித்து அறிவுறுத்துங்கள். நீங்கள் அவை முன்னவர். நீங்கள்தான் இந்த அவையின் தலைவர். எனவே, நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். வேறு வழி கிடையாது.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், போதும், விடுங்கள். உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, பேசுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள மங்கலம் கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டும். பல்வேறு கிராமங்களுக்கு நாங்கள்

சென்றபோது ஒவ்வொரு வீட்டிற்கு முன்னரும் ஒரு குட்டை இருந்தது. அதிலும் குறிப்பாக ஆதி திராவிடர் காலனிகளுக்குச் சென்றபோது, அங்குள்ள மக்கள் இதனால் எங்களுக்கு டெங்கு போன்ற வியாதிகள் வருகின்றன என்று சொன்னார்கள். கிராமத்திலுள்ள தூய்மைப் பணியாளர்கள் குப்பைகளை அகற்றுகிறார்கள், ஆனால் கால்வாய்களை யாரும் சுத்தம் செய்வது இல்லை. எல்லாப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய கிராமப்புற மக்கள், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எங்களிடம் வைக்கும் முதல் கோரிக்கை, அங்குள்ள கால்வாய்களைச் சுத்தப்படுத்த வேண்டும் என்பதுதான். அரசாங்கம் அதற்குத் தனியே நிதி ஒதுக்கி, எல்லா கிராமங்களிலும் கால்வாய் வசதி செய்து, கொசு உற்பத்தியைத் தடுத்து, மக்களை வியாதிகளிலிருந்து பாதுகாக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நகர்ப்பகுதிகளில், அடையாறு மற்றும் கூவம் பகுதிகளைச் சுத்தப்படுத்துவதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகளால் கொசுக்கள் உற்பத்தி குறைந்துள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். அதேபோன்று கிராமப்புற மக்களும் பயன்பெற கால்வாய் அமைக்கும் நடவடிக்கைகளை, கிராமப்புறங்களிலும் மேற்கொள்ள வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேட்டவலம் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால், அங்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். நாங்கள் பரிந்துரைக்கும் ஊராட்சிகளை புதிய ஊராட்சிகளாகப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை நகராட்சிக்கு கட்டடம் அமைத்துத் கொடுத்திருக்கிறீர்கள். அதில் ஒரு floor மட்டுமே இருக்கிறது. மற்றொரு floor கட்டுவதற்கு நிதி இல்லாமல் இருக்கிறது. திருவண்ணாமலையில் பேருந்து நிலையம் கட்டுவதாக அறிவித்தீர்கள். இதுவரை அதற்கான எந்தவொரு பணிகளும் நடைபெறவில்லை. இவற்றையெல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். யூனியன்களைப் பிரிக்க வேண்டும், ஐந்தாயிரம் வாக்காளர்கள் கொண்ட ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒரு கதையைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கதையெல்லாம் வேண்டாம். உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மும்பை, குஜராத், தமிழ்நாடு போன்ற பல மாநிலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட நண்டுகளை விமானத்தில் கொண்டுசெல்வதற்காக விமான நிலையத்தில் தனித்தனி ஜாடிகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. மும்பை நண்டுகளை ஜாடியில் போட்டு மூடி, அவை உடைத்துக்கொண்டு வெளியே வந்துவிடும் என்று பாதுகாப்பாக சீல் வைத்தனர். குஜராத் நண்டுகள் அப்படி உடைத்துக்கொண்டு வராமல் கட்டுப்பாடாக இருக்கும் என்று ஜாடியில் போட்டு மூடி மட்டும் வைத்தனர். ஆனால், தமிழ்நாட்டு நண்டுகளை மூடி போட்டு மூடவும் இல்லை, பாதுகாப்பதற்கு சீல் வைக்கவும் இல்லை. இதைப் பார்த்த விமான நிலைய அதிகாரி ஒருவர், ஏன் இவற்றை மூடவும் இல்லை, சீல் வைக்கவும் இல்லை என்று கேட்டார். நண்டுகளைக் கொண்டுசென்ற நபர், மும்பை நண்டுகளை மூடிபோட்டு சீல் வைத்தால்தான், அவை பாதுகாப்பாக இருக்கும். இல்லையென்றால் அவை சண்டையிட்டு ஜாடிகளை உடைத்துவிடும். குஜராத் நண்டுகளை மூடிபோட்டு மூடினால் போதும்; அவை கட்டுக்கோப்பாக ஒற்றுமையுடன் ஜாடிக்குள்ளேயே இருக்கும். ஆனால், தமிழ்நாட்டு நண்டுகளை ஜாடிக்குள் போட்டு மூடி போடவும் வேண்டாம்; மூடியைப் பாதுகாக்க சீல் வைக்கவும் வேண்டாம். ஏனென்றால், ஜாடிக்குள் இருக்கும் நண்டு ஒன்று வெளியேற முயற்சித்தால், உள்ளிருக்கும் மற்றொரு நண்டு அதன் காலைப் பிடித்து உள்ளே இழுத்துவிடும். இதனால் எந்த நண்டும் ஜாடிக்குள்ளிருந்து வெளியே வர முடியாது. எனவேதான் ஜாடிக்கு மூடியும் தேவையில்லை, சீல் வைக்கவும் தேவையில்லை என்று விளக்கம் கூறினார். மூடியில்லாத ஜாடியிலுள்ள நண்டுகள் யார் என்பதையும், இதில் எந்த நண்டும் கரை சேராது என்பதையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லி, இந்தப் பேரவையிலே மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி. விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

உரையை முடிக்கின்றபோது, தமிழ்நாட்டு நண்டுகளுக்கு மூடியும் வேண்டியதில்லை, சீல் வைக்கவும் வேண்டியதில்லை என்று சொன்னார். ஆம். ஏனென்றால், தமிழ்நாடு அமைதியான இடம். அந்த அமைதியைக் காட்டுவதற்காகத்தான் அவை அப்படி இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கதையை நீங்களே சொல்லிவிட்டீர்கள். அதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கிராமங்களிலே வாய்க்கால்களைத் தூர்வாரி, தூய்மைப்படுத்துவது பற்றிக் கூறினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைக் காவலர்களைப் பயன்படுத்தி கிராமங்களிலே தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, அமைச்சர்கள் அதிகமாக குறுக்கிட்டுப் பதிலளிக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால், நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே அவையில் பேசியபோது, 53 முறைகளுக்கும்மேல் நீங்கள் குறுக்கிட்டுப் பேசியுள்ளீர்கள். ஆகவே, நீங்கள் குற்றச்சாட்டு சொல்லும்போது, அமைச்சர்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

பிற்பகல் 1-10

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எல்லாமும் ஆகி நின்ற ஒளிவிளக்காய், எந்நாளும் அருள் செய்த திருமகளாய், எப்போதும் துயர் களைந்த*

பேரருளாய், எதிர்ப்போரே இல்லாதாக்கிய பெரும் துணிவாய், எட்டாவது அதிசயமாய் வாழ்ந்த திருவுருவாய், எழில் அனைத்தும் தமிழகத்தில் விதைத்திட்ட திருமகளாய், எதிர்மறைகள் இல்லாத புதுமறையாய், எதிரிகளைச் செயலின்று ஓடி ஒளிய வைத்த வீரத் திருமகளாய், வாழ்வாங்கு வாழ்ந்து இன்று தெய்வத்துள் தெய்வமாய் எங்களைக் காத்து நிற்கும், இந்த எளியவன் குடும்பத்தின் குல தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம், வாழ்ந்த மனித தெய்வம் உலகத் தமிழர்களின் நெஞ்சில் நீக்கமற நிறைந்திருக்கும் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சராகவே (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வத்துள் தெய்வமான உங்கள் திருவடி பாதத்தை சொல்லொணா துயரத்துடன் தொட்டு வணங்குகிறேன், உத்தமத் தாயே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெய்வத்திரு அம்மா, காலம் வழங்கிய கற்பகவிருட்சம், காணக் கிடைக்காத கனகமணிப் பெட்டகம், செயல்படும் எதிரிகள் எல்லோரும் பொன்னையும், பொருளையும் மட்டுமே சேமித்துக் கொண்டிருக்கும்போது, தெய்வத்திரு அம்மா, நீங்கள் புகழையும், புண்ணியத்தையும் சேமித்து, உத்தமத் தாயாய் எங்களைக் காத்தீர்கள். தமிழரின் நல்வாழ்வென்னும் விருட்சத்திற்கு, தீய சக்திகள் வெந்நீரைப் பாய்ச்சியபோது தெய்வத்திரு அம்மா, நீங்கள் உங்கள் வியர்வையைப் பாய்ச்சி காத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லங்களில் உலைபொங்க, உத்தரவாதமில்லாத ஏழையெளிய மக்களுக்கு இரட்டை இலை போட்டு பரிமாறிய இமயமாக இருந்து, இந்த நூற்றாண்டின் மனித நேயத்திற்கும், மாபெரும் வீரத்திற்கும் அடையாளமாய் விளங்கி, தமிழினத்தைக் காத்திட்ட தெய்வத்திரு புரட்சித் தலைவரின் மனசாட்சியாய், தெய்வத்திரு அம்மா அவர்கள் காட்டிய நல்வழியில் கோடி நட்சத்திரத்தை குழைத்தெடுத்த குளிர் நிலவாய், அகம்பாவம் கொண்ட எதிரிகளை புறங்காணச் செய்யும் புன்னகைப் பூவாய், தெய்வத்திரு அம்மாவைப்போலவே 'இல்லை' என்ற சொல்லை இல்லாமல் ஆக்கி, களத்திலே கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதிரிகளை நில்லாமல் ஆக்கி, தமிழகத்திலே நல்லாட்சியை அமைதி, வளம், வளர்ச்சி என்ற குறிக்கோள்களுடன் (குறுக்கீடு). . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன், உட்காருங்கள்.

திரு. மு. சக்ரபாணி: சேலத்திற்கே உரிய சேவை உள்ளமும், வீரமாய் உள்ள மனோதிடத்திற்கு ஏற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) எளியவர்களின் மாங்கனி சுவையாய், எதிர்ப்பவர்களுக்கு எஃகின் உறுதியாய், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அம்மாவின் ஆட்சியை நடத்திவரும் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை வணங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு தெய்வத்திரு அம்மா அவர்களின் கல்வெட்டு என்று தெரியாமல், காகித அம்புகளால் தகர்த்துவிடலாம் என்று நினைத்து சிலர் தாங்களாகவே செயல்பட்டு தகர்ந்து, தளர்ந்து, முடிவில் மேலும் சிலர் சட்டையைக் கிழித்துக் கொண்டு போனார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வரலாறு என்றும் வரலாற்றுப் பக்கங்களில் இருக்கும். 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே சத்தியம் ஒலிக்கும்' என்பதற்கிணங்க தெய்வத்திரு அம்மா அவர்களின் ஆட்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்தி வருவதை உள்ளங்கை நெல்லிக்கனியாக தமிழக மக்கள் பாராட்டி வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, நீங்கள் கருத்துக்குப் போங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மானியக் கோரிக்கை மீது பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன், நீங்கள் உட்காருங்கள். உங்களை ஏதாவது சொன்னாரா? நீங்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள். உங்களைப் பற்றி யாரும் பேசவில்லை. (குறுக்கீடு) எதிர்க்கட்சி, எதிரி இல்லை. உறுப்பினர் திரு. பெரியகருப்பன், உங்கள் இடத்திற்குப் போங்கள். உட்காருங்கள். என்ன சொன்னார்? அவர் உங்களை ஒன்றும் சொல்லவில்லை. உட்காருங்கள்.

திரு. மு. சக்ரபாணி: மானியக் கோரிக்கையில் தானே பேசுகிறேன். எந்தவித மாற்றமும் இல்லாமல், மாண்புமிகு அமைச்சராக எப்படி மக்களோடு மக்களாகப் பழகினாரோ, அதற்கு இம்மியளவேனும் குறையாமல் இன்னும் சொல்லப்போனால் மிக மிக சாதாரண மக்களோடு மக்களாகப் பழகுகின்ற, குறைகளை உடனுக்குடன் களைகின்ற, உற்சாகத்துடன் எதனையும் எதிர்கொள்கின்ற

புன்சிரிப்புடன் நல்லாட்சி புரிகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையில் சட்டமன்ற உறுப்பினராக உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதில் உள்ளபடியே பெருமைகொள்கிறேன். விழுப்புரம் மாவட்டச் செயலாளரும், மாவட்ட அமைச்சருமான, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி என்றால் உள்ள ஆட்சி, மக்கள் மனதில் உள்ள ஆட்சி, மக்கள் மனதில் உள்ள ஆட்சி என்றால் எல்லாம் நிறைவாக இருக்கின்றது என்று அர்த்தம் மட்டுமில்லாமல், உண்மையும் அதுவே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 142 ஆண்டுக்கால வரலாற்றில் இந்த வருடம் வரலாறு காணாத வறட்சி என்று தமிழக மக்கள் மட்டுமில்லாமல், ஒட்டுமொத்த இந்தியாவே தவித்துக்கொண்டிருக்க, தெய்வத்திரு அம்மாவின் அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் போர்க்கால செயல் திட்டங்களாலும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீவிர நடவடிக்கையாலும் குடிநீர்ப் பஞ்சம் என்ற நிலைமையை மாற்றி, குடிநீர்த் தேவையை நிறைவாக, மக்களுக்கு மனமகிழ்வாகக் கொடுத்ததே மக்கள் மனதில் உள்ள ஆட்சிக்கு சாட்சி.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'அனைத்து மக்களுக்கும் தரமான குடிநீர் தருவதே இந்த வரலாறு காணாத வறட்சி ஆண்டின் இலக்கு' என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் அதற்கு முன்னுரிமை அளித்து, குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனச் செயல்படும் தெய்வத்திரு அம்மாவின் அரசால் இன்று மக்கள் நிம்மதியுடன் வாழ்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அனைத்து நீர் ஆதாரங்களையும் வளம்மிக்கதாய் ஆக்கிட போர்க்கால நடவடிக்கையுடன் செயல்படும் தெய்வத்திரு அம்மாவின் அரசைக் குற்றம் சுமத்த வேண்டுமென்றே சிலர் சில செயல்களைச் செய்துகொண்டிருப்பதை தமிழக மக்கள் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்த தெய்வத்திரு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு, இன்று 'மக்களின் நலனே மாநிலத்தின் நலன், மக்களின் வளமே மாநிலத்தின் வளம், மக்களின் மகிழ்ச்சியே மாநிலத்தின் மகிழ்ச்சி' எனச் செயல்படும் அரசாக விளங்குகிறது. செயல்படுவதைப்போல செயல்படுபவர்களின் ஐந்து நிமிட தூர்வாரும் நாடகத்தினை மதிநுட்பத்தால் வென்றிடும் அரசாக இருப்பதால், மீண்டும் மூன்றாவது முறையாக தமிழக மக்கள் தெய்வத்திரு அம்மாவின் அரசை அரியணையில் அமர வைத்து, சிலரது சினிமாத்தனமான கனவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பார்கள் என்பது காலத்தின் கட்டாயம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக மற்றும் உள்ளாட்சிகளில் மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, கடந்த ஐந்து ஆண்டுகளில் 3,00,000 வீடுகள் ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் 20,000 வீடுகள் சுமார் ரூ.420 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், ஊரகப் பகுதிகளில் அனைத்து குக்கிராமங்களுக்கும் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.3,680 கோடி மதிப்பீட்டில் 2,31,807 பணிகள் எடுக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டு ரூ.300 கோடி ஒதுக்கீட்டில் 1,200 சிறு பாசன ஏரிகள் புனரமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை சூரிய மின் சக்தியுடன்கூடிய தெரு விளக்குகள் அமைப்பதற்கான 40,000 பணிகள் ரூ.90.12 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை ரூ.6.05 கோடி செலவில் 85 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் மின்சாரச் செலவினைக் குறைத்திட, சூரிய மின்சக்தி கலன்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடம் கட்டுதல், சமையலறை, குடிநீர் வசதி செய்தல், கழிவறை போன்ற 48,021 உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.497.29 கோடியில் எடுக்கப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளன.

நகர்ப் பகுதிகளுக்கு இணையாக ஊரகப் பகுதிகளில் 2016-2017 ஆம் ஆண்டு முதல், அம்மா பூங்காக்கள் மற்றும் அம்மா உடற்பயிற்சிக் கூடம் (Amma park with gym) *அமைக்கும் திட்டத்திற்காக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புற சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தினை மேற்கொள்ள பெண்கள் சுகாதார வளாகம் அமைத்ததுபோல, ஆண் மற்றும் இளம் சிறார்களுக்காகவும் தனியாக ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்க முதற்கட்டமாக 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 2 வீதம் 770 சுகாதார வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, ஊரகப் பகுதி மக்கள் தங்களது தேவைகளைத் தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.454.75 கோடி செலவில் பள்ளிக் கட்டடங்கள், நூலகங்கள், பாலங்கள், குடிநீர் ஆதாரம் உருவாக்குதல், சாலை மேம்பாடு, சமுதாயக்கூடம் கட்டுதல், நியாய விலை அங்காடிக் கட்டடம் கட்டுதல் போன்ற பணிகள் எடுக்கப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 1-20

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1,460.60 கோடி மதிப்பீட்டில், 5,937.54 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு, சாலைகள் அமைத்திடும் திட்டத்தின்கீழ் சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை 9,191.24 கிலோ மீட்டர் நீளமுள்ள, 5,291 சாலைகள், ரூ.1,167.97 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியின் கீழ்க்கண்ட ஓரிரு கோரிக்கைகளை இந்தச் சபையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

வானூர் தொகுதியில் உள்ள வானூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, கிளியனூரை தலைமையிடமாகக் கொண்டு, புதிய ஊராட்சி ஒன்றியத்தை மாண்புமிகு தெய்வத்திரு அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். வானூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் இரண்டாகப் பிரிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில், அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளை உள்ளடக்கி மூன்று முறை கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தி, தலைமைச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. மாண்புமிகு தெய்வத்திரு அம்மா அவர்களின் அரசு, கிளியனூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை அமைத்து, அலுவலகத்தைக் கட்டி, தனி ஊராட்சி ஒன்றியமாகச் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், 1967 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பழமையான கட்டடமாக உள்ளது. எனவே, வானூர் ஒன்றியத்திற்கு ஒரு புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வானூர் தொகுதியில் உள்ள வானூர் வட்டத்தில் அதிகப்படியான விவசாயிகள் நெல் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்தப் பகுதியில் மூன்று போகம் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்தப் பகுதியானது சுமார் 120 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே, கிளியனூரைத் தலைமையிடமாகக் கொண்டு, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு விவசாய விளைபொருட்கள் கொள்முதல் நிலையம் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வானூர் தொகுதியில் உள்ள வானூர் ஒன்றியத்தில், 9 மேல்நிலைப் பள்ளிகளும், 8 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. கண்டமங்கலம் ஒன்றியத்தில் 7 மேல்நிலைப் பள்ளிகளும், 8 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இங்கு படிக்கும் மாணவ, மாணவிகள் கல்லூரிப் படிப்பைப் படிப்பதற்கு 40 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள விழுப்புரத்திற்கும்,

30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள புதுவை மாநிலத்திற்கும், 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திண்டிவனத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, இப்பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும், அரசு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வானூர் தொகுதி, புதுச்சேரி மாநில எல்லையை ஒட்டியுள்ளது. அந்த மாநிலத்தின் குப்பைகளையும் இறைச்சிக் கழிவுகளையும் மற்றும் அசுத்த கழிவுநீரையும் தொகுதிக்குள் கொட்டிவிடுகின்றனர். பலமுறை வலியுறுத்தியும் கண்டுகொள்ளவில்லை. எனவே, அம்மாவின் வழியில் செயல்படும் அரசு, மேற்படி செயலைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் அசைத்தாலும் அசையாத, அசைக்க முடியாதது இமயமலை. அதுபோல, யார் கர்ஜித்தாலும், கனவு கண்டாலும் மாண்புமிகு தெய்வத்திரு அம்மா அவர்களின் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஆட்சி, நான்கு ஆண்டு காலம் மட்டுமல்லாமல், அம்மா அவர்களின் அருள் வாக்கின்படி நூறாண்டுகள் தொடர்ந்து நடக்கும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

பிற்பகல் 1-25

***திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்தில் வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நின்றவர் யார்? அவர்தான் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணுலகை விட்டு மறைந்தாலும் நாட்டு மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் அம்மா அவர்கள், நாட்டு நலன் கருதி, மக்களின் நலன் கருதி, கருவறை முதல் கல்லறை வரை மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்திய திட்டங்களால் இன்று தமிழகமே தலைநிமிர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது. சமூக நீதி காத்த சரித்திரத் தலைவி அம்மா அவர்களின்

பொற்கால ஆட்சியில்தான் பெண்கள் சமுதாயம், அனைத்துத் துறைகளிலும் முன்னேறியிருக்கிறது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என தன் வாழ்நாளை மக்களுக்காக அர்ப்பணித்து நம்மை எல்லாம் வழிநடத்திய இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவிடம் நோக்கி வணங்கி, பல்லடம் தொகுதி மக்களின் சார்பாகவும், என் குடும்பத்தார் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்கு அரசியல் வாழ்வில் அடையாளம் தந்த இதய தெய்வம் அவர்களின் நினைவிடத்தில் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்துறையாயினும், அத்துறையில் முத்திரை பதிக்கும் குணம் கொண்ட எங்கள் அம்மாவின் போர்க்குணத்தை தன்னுள் கொண்ட தலைமகன், தொண்டர்களை அரவணைத்து, அன்பாய் பழகும் அம்மாவின் பாசம், அம்மாவின் இதயம், இயக்கத்தின் புதிய உதயம், தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே எனக்கு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, எனது உரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலே ஊரக வளர்ச்சி, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய 3 துறைகளும் முக்கியப் பங்காற்றுகின்றன. மக்களுடைய அடிப்படைத் தேவைகளான குடிநீர், சுகாதாரம், சாலை வசதி, தெரு விளக்கு வசதி, சமூகப் பொருளாதாரத்திலே முன்னேற்றம் போன்ற அனைத்துத் திட்டங்களிலும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நல்ல முறையிலே செயலாற்றியும், பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியும் கடந்த 5 ஆண்டுகளிலே நல்லாட்சி நடத்தியது என்பதை இங்கே நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே 142 ஆண்டுகளுக்குப் பிறகு கடுமையான வறட்சி நிலவுகின்ற நேரத்திலே, போர்க்கால அடிப்படையிலே அம்மாவினுடைய வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் ஊரகப் பகுதிகளுக்கு 460 கோடி ரூபாயையும், நகராட்சிப் பகுதிகளுக்கு 150 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கித் தந்து, பழுதடைந்த ஆழ்குழாய்க் கிணறுகளைச் சீரமைத்தும், புதிய ஆழ்குழாய்க் கிணறுகளையும் அமைத்துத் தந்ததன் மூலமாகவும், குடிநீர் லாரிகள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்ததன் மூலமாகவும், தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்த அரசு எங்கள் அம்மாவினுடைய அரசு என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்கின்ற அந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கடந்த 5 ஆண்டுகளிலே நல்ல முறையிலே செயலாற்றியதன் காரணமாக, அதிலே பணியாற்றுகின்ற பணியாளர்களெல்லாம் நல்ல முறையில் பணியாற்றியதன் காரணமாகத்தான், கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை இருந்த நேரத்திலேகூட, ஆற்று நீர் கிடைத்தது. பல்லடம் போன்ற கிராமங்களிலெல்லாம் ஆற்று நீர் இல்லையென்று சொன்னால், குடிப்பதற்கே நீர் இல்லை. ஆனால் அந்த ஆற்று நீரை வழங்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டம் என்கிற திட்டத்தை எங்களுக்குத் தந்ததன் காரணமாக, அதன் பயனைப் பெற்றதன் காரணமாகத்தான் இன்று எங்கள் பல்லடம் தொகுதி முழுவதும், ஏன், கோவை மாவட்டத்தில் இருக்கின்ற 4 தொகுதிகளும் இன்று தண்ணீர்ப் பிரச்சினை இல்லாத அளவுக்கு இருக்கிறது. அதற்குக் காரணம் அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்தான் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள் நல்ல முறையிலே நிருவாகம் நடத்த வேண்டுமென்று சொன்னால், அதற்கு மிக முக்கியமான ஒன்று நிதி. அந்த நிதியைப் பொறுத்த அளவிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்த ஆண்டு மட்டும், ஊரக வளர்ச்சித் துறைக்கு 16,665 கோடி ரூபாயும், நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு

13,996 கோடி ரூபாயும் நிதியுதவி வழங்கியிருப்பதை மனதாரப் பாராட்டி வரவேற்கின்றேன்.

பிற்பகல் 1-30

உள்ளாட்சி அமைப்புகளிலேயிருந்து நிறைய பேர் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கலாம். உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தளவிலே சிறிய உள்ளாட்சி அமைப்புகள், பெரிய உள்ளாட்சி அமைப்புகள் என்று இருக்கின்றன. அவற்றிலே, சில ஊராட்சிகளில் குறைவான வருவாய் இருக்கும், சில ஊராட்சிகளில் அதிகமான வருவாய் இருக்கும். ஆனால், கடந்த காலங்களில் ஊராட்சிகள் தங்கள் தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ள முடியாமல், அனைத்து ஊராட்சிகளுக்கும் ஒரே விதமான மானியங்கள் வழங்கப்பட்டன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அனைத்து ஊராட்சிகளுக்கும் 5 இலட்சம் ரூபாய் என்று மானியம் வழங்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடக்கும் இந்த ஆட்சியில், தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் அண்ணன் எடப்பாடியார் தலைமையில் இயங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஐந்தாவது நிதிக் குழுவினால் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.5 இலட்சம் என்றிருந்த அந்த மானியத்தை ரூ.7 இலட்சம் என உயர்த்தி வழங்கியது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.30 இலட்சத்திலிருந்து, ரூ.40 இலட்சமாக மானிய நிதியை உயர்த்தி வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மக்களுடைய அடிப்படைத் தேவை, சுகாதாரம். கிராமப்புறங்களிலே சுகாதாரத்தைப் பேணுவதிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு ஈடு இணையாக வேறு எந்த அரசுமே செயல்பட்டது கிடையாது. நான் அதற்கு சில உதாரணங்களைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது,

கிராமப்புறங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட நேரங்களில், கிராமப்புறங்களில் இருக்கின்ற பெண்களெல்லாம் தங்களுடைய உபாதைகளைக் கழிப்பதற்கு கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்ததை உணர்ந்து அவர்களுக்காக, அவர்கள் சுகாதாரமாக இருக்கவேண்டும் என்பதற்காக பெண்கள் சுகாதார வளாகங்களை ஒவ்வொரு ஊராட்சியிலும் துவக்கினார். ஆனால், அதற்குப் பின்னர் வந்த ஆட்சியாளர்கள் அந்தச் சுகாதார வளாகங்களைக் கண்டுகொள்ளாமல் இருந்த காரணத்தால், 2006-2011 வரை அந்தச் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படாமல் இருந்தன. அதற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டிலே மீண்டும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப் பிறகு பார்க்கலாம். அவர் பேசி முடித்தவுடன், வாய்ப்பு தருகிறேன்.

திரு. அ. நடராஜன்: 2011 ஆம் ஆண்டிலே தமிழக முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, மகளிர் சுகாதார வளாகங்களெல்லாம் புனரமைக்கப்பட்டதோடு, மகளிர் சுகாதார வளாகங்களுக்கு இணையாக, அதேபோன்ற சுகாதார வளாகங்கள், ஆண்களுக்கும் வேண்டுமென்று கேட்டதற்கிணங்க, 1,199 ஆண்கள் சுகாதார வளாகங்கள் இந்த ஆட்சியிலே கட்டப்பட்டுள்ளன என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்ண உணவு, உடுக்க உடை, குடிப்பதற்கு நீர், இருப்பதற்கு இடத்தையும், அதிலே வீடுகளையும் கட்டிக் கொடுத்த ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறங்களுக்குச் செல்கின்றபோது அங்குள்ள மக்கள் எல்லோரும் கேட்கின்ற கேள்வி என்னவென்றால், 'எங்களுக்கு அம்மா வீடு தாருங்கள், அம்மா வீடு தாருங்கள்' என்றுதான் கேட்கின்றார்கள். நாங்கள் எல்லாம் என்ன வீடு என்று கேட்டோம். அம்மா வீடு என்றால் பசுமை வீடு என்றுதான் அர்த்தம். ஆக அந்தளவுக்கு அம்மா அவர்களுடைய திட்டமான

பசுமை வீடுகள் திட்டம் இன்று கிராமப்புறங்களிலே மிகப் பிரபலமாகப் பெயர்பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அந்தப் பசுமை வீடுகள் திட்டத்திலே நெசவாளர்களுக்கும் 360 சதுர அடியிலே 10,000 வீடுகளைக் கட்டிக் கொடுத்தது நமது அம்மா அவர்களுடைய அரசு என்பதை நான் இங்கே மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சிப் பகுதிகளில், கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சாலை மேம்பாடு என்பது மிக முக்கியம். அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இதுவரையில் இல்லாத வகையிலே ஒவ்வொரு சாலைக்கும் தனித்தனியாக குறியீடுகளை வழங்கி, ஒன்றியத்தில் இருக்கிற அனைத்து சாலைகளையும் ஒரு தொகுப்பாக ஏற்படுத்தி, அதற்கென்று ஒரு திட்டத்தை, தமிழ்நாடு கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்கிற ஒரு மேம்பாட்டுத் திட்டத்தைத் தீட்டி, அதற்காக ரூ.800 கோடி அளவிற்கு நிதியினை ஒதுக்கி, அந்த நிதியில் ரூ.400 கோடி நிதியை மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கும், ரூ.400 கோடி நிதியில் தார்ச் சாலைகளை மேம்படுத்துவதற்கும் திட்டத்தைத் தீட்டி செயல்படுத்துகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைப் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

அதுபோல 'தாய்' திட்டம். கடந்த காலங்களிலெல்லாம் சிறிய ஊராட்சி, பெரிய ஊராட்சிகளுக்கென்று ஒரே அளவில் நிதியைத் தந்து அனைத்துப் பணிகளையும் அந்த நிதியிலேயே செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே, தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களும், ஊராட்சிகளும் பயன்பெறும்விதமாக, கிராமங்களின் எண்ணிக்கைக்கேற்பவும், அங்கே வாழ்கின்ற மக்கள்தொகைக்கேற்பவும், குறைந்த மக்கள்தொகையுள்ள குக்கிராமம், குறிப்பாக, மக்கள்தொகை ஐந்தாயிரத்திற்கும் கீழே உள்ள குக்கிராமங்களுக்கு ரூ.20 இலட்சமும், அதிகபட்சமாக 25,000 குக்கிராமங்களுக்குமேலும், மக்கள்தொகை பத்தாயிரத்திற்கும்மேலும் இருக்கின்ற ஊராட்சிகளுக்கு ரூ.50 இலட்சம் வழங்குகின்ற திட்டமான 'தாய்' திட்டத்தைக் கொண்டுவந்து, அந்தக் கிராமங்களுக்குத் தேவையான பணிகளையெல்லாம் ஒரு

தொகுப்பாக எடுத்துக்கொண்டு, கடந்த ஐந்தாண்டுகளிலே அந்தத் திட்டப் பணிகளையெல்லாம் நிறைவேற்றினார்கள். 2016 ஆம் ஆண்டிலும் 'தாய்' திட்டத்தை தொடர் திட்டமாக எடுத்து, 'தாய்' திட்டத்தின்மூலம் குடிநீர்ப் பணிகளுக்காக, இந்த ஆண்டு தாய் II திட்டத்திற்கு மட்டும் 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 சிறுபாசன ஏரிகள் புனரமைத்தல், மேம்படுத்துதல் போன்ற பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. குடிநீர் விநியோகம், சாலைகள், தெரு விளக்குகள், சுடுகாடு, இடுகாடு மேம்பாடு செய்தல், சுடுகாடு இடுகாட்டிற்குச் சாலை வசதிகள் போன்ற 7,282 அடிப்படை உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.150 கோடி மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 1,369 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதை நான் மனதார வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராம ஊராட்சிகள் தூய்மையாக இருப்பதற்காகவும், சுகாதாரமாகப் பராமரிப்பதற்காகவும் அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகளைப் பிரித்தெடுத்து, பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக, 2015 ஆம் ஆண்டு முதல் 'தூய்மைக் காவலர்கள்' என்ற ஒரு புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டு, 12,524 கிராம ஊராட்சிகளிலும் இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஊராட்சிகளில் திடக்கழிவுகளைச் சேகரித்தல், பிரித்தல், பாதுகாப்பாக அகற்றுதல் மற்றும் மறு சுழற்சி ஆகியவற்றுக்கும் மூன்று சக்கர மிதிவண்டிகள், தள்ளு வண்டிகள் மற்றும் குப்பைத் தொட்டிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, இந்தியாவிலேயே அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவரும் முதல் மாநிலம் என்ற நோக்கோடு, சிறப்பாகச் செயலாற்றி வருகிறது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்

திட்டத்தை தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. கிராம அளவிலேயும், மாவட்ட அளவிலேயும் பல விருதுகளைப் பெற்று, சிறப்பாக ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற அரசு, அம்மா அவர்களுடைய அரசு என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அந்தத் திட்டத்திற்காக மட்டும் இந்த ஆண்டு 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு அந்தத் திட்டத்தின்மூலம் கிராமப்புறங்களில் இருக்கின்ற குளம், குட்டைகளைத் தூர்வாருதல், சாலையோரங்களில் பசுமையான மரங்களை நட்டு, பராமரித்தல் போன்ற பணிகளை எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றது என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சியிலே நல்லாட்சி நடத்தி வருகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. தமிழகத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் வசிக்கும் குழந்தைகள், பெண்கள், பெரியோர்களுக்கு பொழுதுபோக்கு, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி சாதனங்கள், நடைபாதைகள், சிமென்ட் பெஞ்சுகள், குடிநீர் வசதி, புல்தரை, பசுமைத் தோட்டம் மற்றும் கழிப்பறை ஆகிய அம்சங்களுடன், 15,000 முதல் 20,000 சதுர அடி பரப்பளவில் 500 அம்மா பூங்காக்களை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்திற்காக தலா ரூ.20 இலட்சம் வீதம் ரூ.100 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதியான தெரு விளக்குகள் அமைப்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் முக்கிய பங்காகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதிச் சுமையைக் குறைக்கும்பொருட்டு, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தெரு விளக்குகளை, மின் சிக்கனம் வாய்ந்த L.E.D. தெரு விளக்குகளாக மாற்றி, சிறப்பாகச் செயல்படுத்திவரும் அம்மா அவர்களுடைய அரசு பாராட்டுதலுக்குரியது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற உள்ளாட்சிப் பணியாளர்களில் 70 சதவிகிதம் பேர் துப்புரவுப் பணியாளர்களாகும். நகர்ப்புற உள்ளாட்சிகளின்

முக்கிய பணிகளான அடிப்படை சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் இவர்களுடைய பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான குடியிருப்புகள் கட்டித்தருவதற்கு கடந்த 5 ஆண்டுகளில் 33 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 902 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குநர் மற்றும் பராமரிப்பு திட்டம் மற்றும் பகுதி II திட்டம் நிதியிலிருந்து 39.11 கோடி ரூபாய் வழங்கி செயல்பட்டுவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் தொகுதிக் கோரிக்கைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகளைச் சொல்லி முடியுங்கள். தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக்கொடுங்கள், பதிவுசெய்து கொள்ளலாம். உங்கள் தொகுதிக்குண்டான ஒரு சில கோரிக்கைகளைச் சொல்லிவிட்டு, மீதமுள்ளவற்றை எழுதிக்கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், பேசுங்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டங்களைப் பற்றிப் பேசும்போது ஊரக வளர்ச்சித் துறை பற்றி பேசிவிட்டேன். நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றி பேசிவிட்டேன். அம்மாவினுடைய சிறப்புத் திட்டங்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச அனுமதி தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகள் ஒருசிலவற்றைச் சொல்லி முடியுங்கள். முக்கியமான கோரிக்கைகள் ஒன்றிரண்டைச் சொல்லி உரையை முடியுங்கள். மற்றவற்றைப் பதிவு செய்துகொள்ளலாம். 2 நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், பேசுங்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதியானது

39 கிராம ஊராட்சிகள், ஒரு நகராட்சி, பத்து நகராட்சி வார்டு பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். இங்கு வசித்துவரும் மக்களின் பிரதான தொழில்கள் விவசாயம், விசைத்தறி, பனியன் சார்ந்த தொழில்களாகும். இது தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். இங்கு உயர் கல்வி கற்பதற்குப் போதுமான கல்லூரிகள் இல்லை. பள்ளிப் படிப்பை முடிக்கும் மாணவ-மாணவியர் உயர் கல்விக்காக, திருப்பூர் அல்லது கோயம்புத்தூர் போன்ற நகரங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. அதனால் கால விரயம், பொருள் விரயம் ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் மன அழுத்தத்தால் இவர்களின் கல்லூரிப் படிப்பு பாதிக்கப்படுகிறது. எனவே இப்பகுதி மாணவ-மாணவியரின் நலன் கருதி, இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் பல்லடம் தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரி துவக்க ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடம் சட்டமன்றத் தொகுதியில், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் இருபது கிராம ஊராட்சிகள், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்தில் பதினாறு கிராம ஊராட்சிகள், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கிராம ஊராட்சிகள், திருப்பூர் மாநகராட்சியில் பத்து வார்டுகள், பல்லடம் நகராட்சியில் பதினெட்டு வார்டுகள் உள்ளன. தொழில் நகரமான திருப்பூர் மாநகராட்சியை ஒட்டி இருப்பதாலும், விசைத் தறி மற்றும் பனியன் தொழில்களின் மையப் பகுதியாக இருப்பதாலும், மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டும், வருங்காலத்தைக் கணக்கில்கொண்டும் பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்கு பில்லூர் நீராதாரத்தைக் கொண்டு புதிய அத்திக்கடவு மூன்றாவது குடிநீர்த் திட்டம் அல்லது திருமூர்த்திமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லடம் ஒன்றியம் கரைப்புதூர், கணபதிபாளையம், ஆறுமுத்தாம்பாளையம், திருப்பூர் ஒன்றியம் மங்கலம், இடுவாய், முதலிபாளையம் ஆகிய 6 ஊராட்சிகளும் திருப்பூர் மாநகராட்சியை ஒட்டியுள்ள பகுதிகளாகும். மேற்படி 6 ஊராட்சிகளில் உள்ள 155 குடியிருப்புப் பகுதிகளை பவானி ஆற்று நீராதாரத்தைக் கொண்டு செயல்படுத்தவுள்ள அன்னூர்-அவிநாசி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்க

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லடம் வட்டம், நாரணாபுரம் கிராமம், மஜரா அறிவொளி நகர் கிராமத்தில் க.ச.எண் 103, 104 மற்றும் 105 புலங்களில் சுமார் 1,500 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் 1993 ஆம் ஆண்டுவரை, திருப்பூர் நொய்யல் ஆற்றங்கரையோரம் வசித்து வந்தவர்கள். குடிசை மாற்று வாரியத்திற்கு மேற்படி இடத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டு, 1993 ஆம் ஆண்டு முதல் அவர்கள் குடியமர்த்தப்பட்டு வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. குடிசை மாற்று வாரியம் தற்போது நிர்ணயித்துள்ள தொகையை அவர்கள் செலுத்த இயலாத நிலையில் உள்ளனர். இவர்கள் அனைவரும் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே, மேற்படி இடத்தை நில உரிமை மாற்றம் செய்து இலவசப் பட்டா கிடைக்க ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் விசைத்தறி தொழில் பிரதான தொழிலாக உள்ளது. பல்லாயிரக்கணக்கானவர்கள் இத்தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளைச் சந்தைப்படுத்துவதற்கு இப்பகுதியில் போதுமான வசதிகள் இல்லை. எனவே, விசைத்தறியாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று பல்லடத்தில் ஜவுளிச் சந்தை ஏற்படுத்த ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடம் நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், பல்லடம் நகருக்கு சுற்றுச் சாலை அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டும். பல்லடம் நகராட்சிப் பகுதியில், பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த ஆவன செய்யவேண்டும். பல்லடம் நகரம் நான்கு ரோடு சந்திப்பில் S.H.116 சாலையையும், S.H.19 சாலையையும் இணைக்கும் வகையில் ஒரு பறக்கும் பாலம் அமைத்துத்தர ஆவன செய்யவேண்டும்.

பல்லடத்தில் செயல்பட்டுவரும் கால்நடை மருந்தகத்தை வட்டார கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவேண்டும்.

பிற்பகல் 1-45

பல்லடம் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் அழகுமலை பாலதண்டாயுதபாணி திருக்கோவிலுக்கு சுற்றுலாத் துறை அல்லது இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக கிரிவலப் பாதை அமைக்க ஆவன செய்யவேண்டும்.

பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டம்பட்டி கொடுவாய் சாலை சந்திப்பு முதல் வேலப்பகவுண்டன்பாளையம், தவசிகோவில் வரை செல்லும் மண் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றித்தர ஆவன செய்யவேண்டும்.

பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கருடமுத்தூர், கழுவேரிபாளையம் இணைப்பு மண்சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித்தர ஆவன செய்யவேண்டும்.

கோவை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பல்லடம் தொகுதி, பொங்கலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க ஆவன செய்யவேண்டும்.

பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் கிராம பொதுமக்கள், பத்திரப்பதிவிற்காக பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகம் சென்று வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மீதமுள்ள கோரிக்கைகளை என்னிடம் கொடுத்தால், நீங்கள் பேசியதாக, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதனால் ஏற்படும் சிரமங்களைப் போக்கும்வகையில், அருகில் உள்ள நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் முதலிபாளையம் கிராமத்தைச் சேர்க்க ஆவன செய்யவேண்டும்.

பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பல்லடம் பனப்பாளையம்

பிரிவிலிருந்து குண்டடம் வழியாக தாராபுரம் செல்லும் மாநில நெடுஞ்சாலை, போக்குவரத்து நிறைந்த சாலையாகும். போக்குவரத்து நெரிசலைக் கணக்கில் கொண்டு, மேற்படி சாலையை குண்டடம் வரையிலும் அகலப்படுத்தித் தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் நன்றி சொல்லி, என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன். நான் புது வாழ்வுத் திட்டம் பற்றியும், அம்மாவின் திட்டங்கள் பற்றியும் பேசலாம் என்றால், நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அவற்றையெல்லாம் இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசலாம். இப்போது நன்றி சொல்லி உங்கள் உரையை முடியுங்கள். இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேசவேண்டும்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையில் ஆற்றிய ஒரு சில பணிகளை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் எழுதிக் கொடுங்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் உள்ள பல்வேறு பிரிவினர், குறிப்பாக, பின்தங்கிய நலிவுற்ற பிரிவில் உள்ள ஏழை மக்கள் மற்றும் மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், ஏழைகளுக்கு கறவைப் பசு வழங்குதல், வறியவர்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்குதல், திருமண உதவித் தொகையுடன், திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 8 கிராம் விலையில்லா தங்க நாணயம் வழங்குதல் மற்றும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைமூலம் 1.75 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு ரூபாய் 7,622 கோடி மதிப்பில் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.*

தனிச் சிறப்புவாய்ந்த மாணாக்கர்களுக்கு கணினி அறிவைப் போதிக்க இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம். 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அரசு கலைக் கல்லூரி மற்றும் பொறியியல் படிக்கும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு, 2013-2014 ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கும், அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை ரூ.4,832.30 கோடி மதிப்பில் 31.78 இலட்சம் மடிக்கணினிகள், விலையேதும் இல்லாமல் வழங்கப்பட்டன. 2016-2017 ஆம் ஆண்டிற்கு 5.35 இலட்சம் மடிக்கணினிகளை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு ரூ.867 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மடிக்கணினி வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மாண்புமிகு அம்மாவின் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திட, மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 2017-2018 ஆம் ஆண்டில் விலையில்லா மடிக்கணினி வழங்குவதற்கு ரூ.758 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைகளின்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தியதன்மூலம் அந்தத் திட்டங்கள் அனைத்தும் படித்தவர்கள் முதல் பாமரர்கள்

வரை சென்றடைந்து, பாராட்டைப் பெற்று, அதற்கு நற்சான்றிதழாக ஆளுகின்ற கட்சியே மீண்டும், 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து ஆட்சி புரிவதற்கு மக்கள் வாக்களித்து, வெற்றி பெறச் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கரைப்புதூர் ஊராட்சி, உப்பிலிபாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டும். பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, அருள்புரம் உயர்நிலைப் பள்ளி மற்றும் பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், உகாயனூர் ஊராட்சி, பொல்லிக்காளிபாளையம் உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டும். பல்லடம் ஒன்றியம், பொங்கலூர் ஒன்றியம் பகுதிகளுக்கு பில்லூர் குடிநீர்த் திட்டத்தில் வழங்க வேண்டிய முழுமையான அளவு குடிநீரை தடையின்றி வழங்க வேண்டும்.

அம்மாவின் திட்டங்களைச் சீரிய முறையில் செயலாற்றிவரும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இயங்கும் இந்த அரசுக்கு, மாண்புமிகு அம்மாவின் கூற்றுப்படி 100 ஆண்டுகள் இந்த ஆட்சி தொடர நான் என்றென்றும் உறுதுணையோடு இருப்பேன் என்பதைத் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

***திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இங்கு சட்டமன்றத்தில் முதன்முதலாகப் பேச வாய்ப்பளித்த ராகுல் காந்தி அவர்களுக்கும், மரியாதைக்குரிய முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பிரபு அவர்களுக்கும் இந்த நேரத்தில் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற மாதம் உதகை நகருக்கு வந்தார். அருமையான அந்தச் சூழலில், அதே இடத்தில், நான் கேட்ட ஒரு கோரிக்கையான இரண்டு கோடி ரூபாய்க்கான நவீன பேருந்து நிலையம் ஒன்றை கட்டிக் கொடுப்பேன் என்று உறுதி அளித்தார்கள். அதற்காக இந்தச் சபையில் நான் நன்றி

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நமது சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் உதகமண்டலத்திற்கு வந்தார்கள். அருமையாகப் பேசி, அவர் அதே மேடையில் கிட்டத்தட்ட 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 3 நவீன கழிப்பிடங்களை, பொது மக்களுக்கு, குறிப்பாக, சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டித் தருகிறேன் என்று கூறி, உடனே மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து அவரிடம் ஏற்பாடு செய்யச் சொன்னார்கள். அதற்காக அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய கூட்டத்தின் சிறப்பு அமைச்சரான நமது மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும், மரியாதைக்குரிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சரான மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களும் எனது வேண்டுகோளை ஏற்று, உடனே உதகை மாவட்ட ஆட்சித் தலைவரை தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு, ஒன்றரை அல்லது இரண்டு கோடி ரூபாய் செலவில் கோடப்பமந்து கால்வாயினைத் தூர் வார உத்தரவிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மரியாதைக்குரிய வீட்டு வசதித் துறை அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகிய இருவரும் சேர்ந்து எங்கள் தொகுதிக்கு எவ்வளவு நிதி வேண்டுமோ அதைப் பெற்றுத் தருகிறோம் என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியிலே நான் மாவட்ட ஊராட்சிமன்ற உறுப்பினராக இருந்தபோது, அருமையான துணை முதலமைச்சர் அவர்களை நேரடியாகச் சென்று பார்த்தேன். தி.மு.க.வின் தற்போதைய மரியாதைக்குரிய செயல் தலைவர் அவர்கள் 'உங்களுக்கு என்ன வேண்டும்' என்று எங்களைக் கேட்டார். 'உங்கள் ஆட்சிக் காலத்தில், எங்களுக்கு சிறு தொகையை ஒதுக்கீடு செய்யுங்கள், எங்களால் எந்தக் கட்டுமானப் பணியையும் மேற்கொள்ள இயலாது' என்று கூறினேன். காரணம் என்னவென்றால், அதிக சுற்றுலாப் பயணிகள் வந்துகொண்டிருக்கின்றார்கள். இன்றைய காலக்கட்டத்தில் மழை பொழிந்துகொண்டிருக்கின்றது. 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் வரையிலான எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வந்துகொண்டிருக்கின்றார்கள். இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு வேண்டுமே என்று கேட்டபோது, தி.மு.க.வின் செயல் தலைவர் அவர்கள், அன்றைய உள்ளாட்சித் துறை

அமைச்சராக இருந்தபோது, Slum Clearance Board-மூலம் 12 கோடி ரூபாயை ஒதுக்கி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள். அடுத்து ஒரு வாரம் கழித்துச் சென்றோம். சாலைகள் சரியில்லை என்று சொன்னபோது, அதற்கும் 12 கோடி ரூபாயை எங்களுக்கு ஒதுக்கித் தந்தார்கள். ஊட்டி நகராட்சியினுடைய அனைத்துச் சாலைகளும் சீரமைக்கப்பட்டன. அடுத்த இரண்டு மாதங்கள் கழித்து, அவரிடம் சென்று உதகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக இருக்கின்றது என்று கூறியபோது, 27 கோடி ரூபாயை Parsons Valley மூன்றாவது குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கி எங்களை மகிழ்விக்கச் செய்தார். நான் இதையெல்லாம் எதற்காகக் கூறுகின்றேன் என்றால், அந்த இரண்டு மூன்று மாதங்களில் 50 கோடி ரூபாயை எங்களுக்கு அளித்தார்கள்.

இன்று நமது மரியாதைக்குரிய அமைச்சர் பெருமக்கள் கடந்த வாரத்தில், 274 கோடி ரூபாயை ஈரோடு மாவட்டத்திற்கு நாங்கள் வழங்குகின்றோம் என்று கூறியபோது, எங்களுக்கு வருத்தமும் இருந்தது, மகிழ்ச்சியும் இருந்தது. காரணம் என்னவென்றால், நீங்கள் 234 பேரும் மலைகளின் அரசி என்று அழைக்கப்படக்கூடிய உதகையிலே தங்கியிருப்பீர்கள். அங்கு சில அவலங்கள் உள்ளன. அதாவது, அடிப்படை வசதிகள் குறைவாக இருக்கின்றன. அங்கு தினமும் ஒரு இலட்சம் பேர் வருகின்றார்கள். தினமும் அங்கே வரக்கூடிய ஒரு இலட்சம் பேருக்கு வேண்டிய குடிநீர் வேண்டும். சிலசமயம் 20 ஆயிரம் பேர்கள் வருவார்கள். அவர்களை நாங்கள் கூட்டிக்கொண்டு வந்து, திருப்பி அனுப்ப வேண்டும். அந்தத் தொகையினை ஈடுகட்ட நகராட்சியிடம் வருவாய் இல்லை. இதற்கு மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கலந்தாலோசித்து, நமது செயல் தலைவர் சொன்னதைப்போல், ஒரு package ஆக, 50 முதல் 100 கோடி ரூபாயை ஒதுக்கினால்தான் நீங்கள் வந்து செல்வதற்கு வசதியாக இருக்கும். இங்கிருக்கிற 234 உறுப்பினர்களும் குடும்பத்தினருடன் அங்கு வந்து தங்கியிருப்பீர்கள். கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். குப்பைகளை அள்ள வசதிகள் இல்லை, சாலைகள் இல்லை. தெரு விளக்கு வசதிகளை மிக அற்புதமாக செய்து கொடுத்திருக்கின்றீர்கள். அதற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அங்கு Boat House-ஐ தூர்வாரியதற்காகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-55

அடுத்தபடியாக இரண்டு, மூன்று அமைச்சர்கள் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு, 'ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 40,000-லிருந்து 50,000 வாகனங்கள் உள்ளே வந்துகொண்டிருக்கின்றன, பார்க்கிங் வசதி என்ற ஒன்று இல்லை, நீங்கள் எப்படி சமாளிக்கிறீர்கள்' என்று வினவினார்கள். அதற்கு உடனடியாக உதகை மத்திய பேருந்து நிலையத்திலிருந்து, முத்துமாரியம்மன் கோயில் சாலையிலுள்ள கால்வாயைத் தூர்வாரி, அதன்மேல் ஒரு பார்க்கிங் வசதி அமைத்தால்தான் அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்பதை மாண்புமிகு மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களிடம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றபடி, ஒரு வருத்தம் என்னவென்றால், நாம் இன்பச் சுற்றுலாவிற்காக ஊட்டிக்கு வருகிறோம். ஆனால், நீலகிரி மாவட்டத்தில் அந்தச் சுற்றுலாத் தலத்தில், கிட்டத்தட்ட 5,000 மக்கள் அதிக வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காலையில், வேலைக்குப் போவது இல்லை. ஏன் போவதில்லை என்று கேட்டீர்களானால், 'சீல் வைக்கப் போகிறார்கள், முனிசிபாலிடியிலிருந்து வந்து வீட்டிற்கு சீல் வைக்கப் போகிறார்கள்', என்று சொல்கிறார்கள். காரணம் என்ன? 1993 ஆம் ஆண்டு, மாண்புமிகு மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களுடைய Master plan *திட்டத்தில் 1999 முதல் 2007 வரை ஏழை மக்கள் அறியாமையினால் கிட்டத்தட்ட 5000 வீடுகளைக் கட்டிவிட்டார்கள். நீங்கள் எடுத்த* One Time Settlement *என்பது மலைப் பிரதேசத்திற்குப் பொருந்தவில்லை. சமவெளிப் பிரதேசத்திற்குதான்,* One Time Settlement *ஆனாலும் சரி,* regularization *ஆனாலும் சரி, செய்துவிடுகிறீர்கள். எங்களுக்கு, நீலகிரி மாவட்டத்திற்கு* Master plan-*ஐ தவிர எந்த ஒரு* DTCP approval-*ம் அமைப்பும் கிடையாது. சென்ற மாதத்திலேயே அந்த 5,000 குடும்பங்களில் வாழும் இருவருக்கு* Heart Attack *வந்துவிட்டது.* Municipality-*லிருந்து* TPO, *இன்றைக்கு* seal *வைக்க வருகிறேன் என்று சொல்கிறார்கள், அதைக் கேட்டவுடனே அங்கு இறந்து விடுகிறார்கள். மறுபடியும் நம்மை அழைக்கிறார்கள், ஓடுகிறோம். தயவுசெய்து, ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சித் தலைவர், மரியாதைக்குரிய செயல் தலைவரானாலும் சரி, நீலகிரி மாவட்ட மக்களிடம் நீங்கள் அனைவரும் நல்லதொரு நம்பிக்கையை வைத்திருக்கிறீர்கள். அந்த 5,000 குடும்பங்கள் காப்பாற்றப்பட*

வேண்டும் என்றால், தயவுசெய்து நீங்கள் அனைவரும் சேர்ந்து One Time Settlement என்கின்ற regularization-ஐ மலைப்பிரதேசத்திற்கு தயவுசெய்து அமல்படுத்த வேண்டும். நான்காண்டுகளுக்கு ஒரு முறை தளர்வு செய்ய ஒரு சட்டமே இருக்கிறது. Tamil Nadu Municipality Act, 217(Q)-ன்படி பார்த்தீர்களேயானால், மாநில அரசுகளுக்கு அந்த உரிமை இருக்கிறது. நீங்கள் ஒருமுறை வரன்முறைப்படுத்தும் அந்தச் சட்டத்தை இயற்றி, அந்த 5,000 குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். நீலகிரி மக்களுக்குத் தேவையான அற்புதமான திட்டங்களுக்கு, 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல் தலைவர் அவர்கள் கொடுத்து, அந்தப் பணி நிறைவடையும் வேளையில், 10 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டபோது மாண்புமிகு மரியாதைக்குரிய முதலமைச்சர் அம்மா அவர்கள் அதனைக் கொடுத்து, அது நிறைவடையும் நிலையில் இருக்கிறது. இன்னும் 2 மாதங்களில் தண்ணீர் வந்துவிடும். ஆகவே, தயவுசெய்து அனைத்து உறுப்பினர்களும் ஏக மனதாக தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். 5,000 குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். அது உங்களால்தான் முடியும். இந்த 5,000 குடும்பங்களைக் காப்பாற்றி விட்டீர்களானால், எங்கள் நீலகிரி மாவட்டத்தில் வேறு பிரச்சினையே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பிரச்சினையைச் சொல்வதற்கே அதிக நேரமாகிவிட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடித்துவிடுகிறீர்களா?

திரு. ஆர். கணேஷ்: மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு சிமென்ட் மற்றும் கம்பிகள் கிடைப்பதில் சிறிதளவு மெத்தனப் போக்கு இருக்கிறது. அதை அரசு உடனடியாகச் சரி செய்ய வேண்டும். நீங்கள் சொல்வதுபோல், அனைத்து குளங்களையும் தூர்வாரினாலும், பஞ்சாயத்து குளங்களைச் சீரமைக்க, சிறிது சிரமத்தை எடுத்து, அதனைச் சரி செய்ய வேண்டும். பஞ்சாயத்து குளங்கள் நிறைய இருக்கின்றன. முதற்கட்டமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், B.D.O அவர்களும் ஏதோ ஒரு கணக்கை எடுத்துவிடுகிறார்கள். இந்த ஊருக்குத் தண்ணீர் இல்லை; அந்த ஊருக்குத் தண்ணீர் இல்லை;அதைக் கொடுக்க வேண்டும்; இதைக் கொடுக்க வேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். நாங்கள் programme ஒன்று போட்டு அதன்படி அதிகப்படியான இடங்களுக்குச் செல்கின்றோம். சில ஊர்களுக்கெல்லாம் தண்ணீர் இல்லை என்று நினைக்கிறோம். நாங்கள் போடுவதும், அவர்கள் போடுவதும், clash ஆகி

விடுகின்றது. உள்ளாட்சித் தேர்தலை நடத்தாததால், ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் இல்லை. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், B.D.Oவும் ஆங்காங்கே இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து, ஒரு குழு அமைத்து, எங்கெங்கு தண்ணீர் இல்லை, எங்கெங்கு தண்ணீர் தேவை என்று ஆலோசித்தால், நிச்சயமாக குடிநீர் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். அது ஒன்று.

அடுத்தபடியாக, கேரள மாநிலத்தில் கிட்டத்தட்ட 6.00 கோடி ரூபாயை, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியாகத் தருகிறார்கள். அதனை மனதில் வைத்து, இங்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்த வேண்டும். ஏனென்றால், இந்த 2.00 கோடி ரூபாய் எங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, தயவுசெய்து அதனை உயர்த்த வேண்டும்.

மேலும், MLA Hostel-ல், சென்ற வாரத்திலிருந்து நாங்கள் மோசமான குடிநீரை உபயோகித்துக்கொண்டிருக்கிறோம். தயவுசெய்து அதைச் சரி செய்ய வேண்டும்.

அடுத்ததாக, State Highways. Highways-ல் எல்லாம் speed breakers போடுவதற்கு ஓர் ஆணையைப் பெற்றிருக்கிறோம். மரியாதைக்குரிய நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். உள்ளாட்சித் துறைக்குட்பட்ட சாலைகளிலேயே குழந்தைகள் அதிக அளவில் கீழே விழுந்து அடிபடுகிறார்கள். ஏனென்றால், பள்ளிப் பகுதிகளில் speed breakers போட முடியவில்லை. தாங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் அதற்கு எத்தகைய விண்ணப்பப்படிவம் பெற வேண்டும் என்று அறிவுறுத்தி, அவ்விடத்தில் சட்டமன்ற உறுப்பினரை வைத்துக்கொண்டு ஆய்வு செய்து, உடனடியாக அதற்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தனை நேரம் என்னை அரவணைத்ததற்கும், ஒரு சலசலப்பு இல்லாது இருந்ததற்கும் நன்றி. இத்தனை உறுப்பினர்களும் சேர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற அந்த 5,000 குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். எங்களுக்கு 100 கோடி ரூபாய் Budget-ல் நிதி ஒதுக்க வேண்டும் என்று கோரி, நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மிகவும் நன்றி. பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் பல்வேறு திட்டங்களுக்காகப் பாராட்டினார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியிலே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிதி ஒதுக்கினார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஊட்டி சட்டமன்றத் தொகுதிக்கு கடந்த 5 வருடங்களில் 16,922 பணிகள் அறிவிக்கப்பட்டு, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக 166.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் 3 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன.* Slum Clearance Board, Housing Board *மற்றும் எல்லா* departments-*ம் இருக்கின்றன. ஊட்டியில் எங்களுடைய துறைக்கு மட்டும் 166.73 கோடி ரூபாயை அம்மா அவர்கள் ஒதுக்கினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீலகிரி மாவட்டத்தின்மீது எப்போதுமே தனிக் கவனம் செலுத்துவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு சிமெண்ட், கம்பி போன்றவை கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். நீங்கள் சொல்கிற ஊராட்சியிலே, ஒரு குறிப்பிட்ட இடத்திலே அவை கிடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏதாவது ஒரு இடத்திலே bore *போட வேண்டுமென்று சொன்னாலும் எந்தப் பணியாக இருந்தாலும் உள்ளாட்சித் துறையின்மூலம் கொடுத்தால், துறை அதிகாரிகள்தான் அதைச் செய்து முடிப்பார்கள். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதாவது இருந்தால், உங்களுடைய தொகுதி* union office-*ல் இருக்கும் அதிகாரிகளை அழைத்துப் பேசுகிறேன்.*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய 5,000 buildings-ஐப் பற்றிப் பேசினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதை நாங்கள் எடுத்துச் சென்றிருக்கிறோம். உங்களைப் போலவே, ஊட்டியில் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களும் அந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். அங்கேயிருக்கும் Association-ஐ சார்ந்திருந்தவர்களும் வந்திருந்தார்கள். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கூடிய விரைவில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நகராட்சி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலே, ஜெர்மன் மேம்பாட்டு நிதியின் மூலமாக கடையநல்லூர் நகராட்சியிலே புதிய குடிநீர் இணைப்புகளுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் 400 புதிய இணைப்புகள்தான் கொடுக்க வேண்டியிருக்கின்றது. TWAD Board-ல் அந்த இணைப்புகளைக் கொடுக்காமல் 6 மாதங்களாகக் காலம் தாழ்த்தி வருகின்றார்கள். எனவே, அதை விரைவுபடுத்தி, புதிய இணைப்புகள் மூலமாக அனைத்து மக்களும் சீரான தண்ணீரைப் பெறுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சென்ற தி.மு.க. ஆட்சியிலே அறிவிக்கப்பட்ட கடையநல்லூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது. இதனால், ஆங்காங்கே தண்ணீர் தேங்கி, சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகின்றது. எங்கள் தொகுதியிலே சாம்பவர் வடகரை பேரூராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால், ஒரு இலட்சம் மக்கள்தொகை கொண்ட கடையநல்லூர் நகராட்சியில் 6 வருட காலமாக அறிவிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டம், இதுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அங்கு டெங்கு

காய்ச்சல், மர்மக் காய்ச்சல் போன்றவற்றால் அபாயம் அதிகமாக இருக்கின்றது. அங்கே கழிவுநீர் செல்ல வழியில்லாமல் ஆங்காங்கு தேங்கியிருப்பதால் ஏற்படும் அபாயத்தை போக்கும் வகையிலே, இந்த அரசாங்கம் அந்த ஊர் மக்களுடைய சுகாதாரத்தையும் கருத்தில்கொண்டு பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவாக கடையநல்லூர் நகராட்சியிலே நிறைவேற்றித் தர வேண்டுமென்பதை இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏற்கெனவே, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதை வலியுறுத்தி, அந்தக் கால்வாய்களை எல்லாம் சுத்தம் செய்யக்கூடிய பணிகளுக்கு 15 இலட்சம் ரூபாய் நிதி வழங்கியும், அந்தப் பணிகள் இன்னமும் முழுமை பெறவில்லை. அந்தக் கால்வாய்களில் தண்ணீர் தேங்கி, சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது. கடையநல்லூர் நகராட்சியிடம் கேட்டால், நிதி இல்லை என்று சொல்கின்றார்கள். அங்கே இருக்கும் பூங்கா பராமரிப்பில்லாமல் இருப்பதால் இரவு நேரங்களில் சமூக விரோதச் செயல்கள் எல்லாம் நடைபெறுகின்றன. அதைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்டோம். அதற்கு அனுமதி தராததால் கடைசியாக அங்கேயுள்ள தன்னார்வ நண்பர்களுடைய, குறிப்பாக, குவைத் நாட்டில் பணிபுரியும் கடையநல்லூரைச் சேர்ந்த நண்பர்களுடைய சொந்தப் பணத்திலிருந்து ரூபாய் 3 இலட்சம் செலவு செய்து சீர் செய்திருக்கிறார்கள். எனவே, கடையநல்லூர் நகராட்சிக்குப் போதுமான நிதியை அளித்து, சுகாதார பிரச்சினைகளுக்கும் மற்ற பிரச்சினைகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதை பணிவன்போடு உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 2-05

கடையநல்லூர் நகராட்சியிலே மின் கம்பங்களிலுள்ள wire வெளியில் தொங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக சிறு பிள்ளைகள் அந்தப் பகுதியில் செல்லும்போது அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. அங்கே box அமைத்துக் கொடுத்தால், அந்த wires எல்லாம் வெளியில் தொங்காமல் இருக்கும். அபாயகரமான சூழ்நிலையிலிருந்து அந்தப் பகுதி மக்களைப் பாதுகாக்க முடியும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடையநல்லூர் நகராட்சியில் பல்வேறு குடியிருப்புகளுக்கு நகர்மன்றத்தின் சார்பாக இன்னமும் approval வழங்கப்படாததால், குடிதண்ணீர் இணைப்பு இதுவரையில்

வழங்கப்படவில்லை. குடிதண்ணீர் இணைப்புகள் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, Approval இல்லாத இடங்களில் விரைவாக approval வழங்கவும், குடிதண்ணீர் இணைப்பு விரைவாக வழங்கவும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட, செங்கோட்டை நகராட்சி என்பது திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த இடம். அந்த நகராட்சிக்கு வருவாய் இல்லை. அதற்காக, அந்த நகராட்சி நிருவாகத்தினுடைய அதிகாரிகளைச் சந்தித்து, கலந்துரையாடும்போது, அங்கே மெயின் ரோட்டில் ஒரு பழமையான திருமண மண்டபம் காமராஜர் பெயரில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதை ஒரு வணிக வளாகமாக அமைத்துக் கொடுத்தால், அந்த நகராட்சிக்கு வருவாய் வரும் என்ற ஒரு யோசனையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்; அதையும் இந்த அரசு செயல்படுத்த வேண்டுமென்பதையும் இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடையநல்லூர் வட்டத்திலே குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வெகுநாட்களாகவே சொல்லப்பட்டு வருகிறது. அதையும் இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்பதையும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடையநல்லூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 5,000 ஹெக்டேருக்குமேல் நஞ்சை நிலங்கள் உள்ளன. விவசாயக் குழுக்களுக்கு நெல் அறுவடை இயந்திரங்களை நடப்பாண்டிலே வழங்கினால், அந்த நிலங்களை செம்மையான முறையிலே பராமரிக்க முடியும் என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கும் இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையம். அந்தப் பகுதியிலே அடிக்கடி தண்ணீர் தேங்கி இருப்பதன் காரணமாக சுகாதார சீர்கேடுகள் அவ்வப்போது ஏற்படும்போது, சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும், மற்ற அதிகாரிகளையும் சந்தித்துப் பேசி அவர்களும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், என் தொகுதிக்குட்பட்ட வடகரை பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான வசதிகள் இல்லை. பிரசவத்திற்கான Operation theatre இல்லை. மருத்துவர்களும் தேவை என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்; அங்கே அதைச் செய்து தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வடகரை பேரூராட்சிக்குட்பட்ட வாவநகரத்திலே 2,000 மக்கள் வாழ்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத காரணத்தினால் பல்வேறு

2017 ஜூன் 20] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அதனால், அந்தப் பகுதியிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 10 ஊர்களை உள்ளடக்கிய கண்மணியாபுரத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித்தர வேண்டும். கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட இக்பால் நகரிலே ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று தொடர்ந்து ஒரு வருடமாக நான் வலியுறுத்தி வருகின்றேன். அதற்குரிய இடத்தையும் வழங்கியிருக்கிறார்கள்; அதையும் விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சொக்கம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய சுற்றுச்சுவர் முற்றிலுமாக உடைந்திருக்கின்ற காரணத்தினால், பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றது; அதைக் கட்டித்தர வேண்டுமென்று அன்போடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, பல்வேறு ஊர்களைச் சார்ந்த நமது சகோதர சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் அங்கேயுள்ள கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். பண்பொழி, திருமலைக் கோயிலுக்குட்பட்ட நகரீஸ்வரமுடையார் திருக்கோயில் கும்பாபிஷேகம் நடந்து 42 வருடங்கள் ஆகின்றன. அங்கே, அம்மன் சன்னதி, மண்டபம், கோபுரம், நைவேத்தியம் தயாரிக்கும் இடம், தெப்பக்குளம் எல்லாம் முழுமையாகப் பழுதடைந்து அங்கே, கும்பாபிஷேகமே 42 வருடங்களாக நடைபெறவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே கும்பாபிஷேகம் நடத்துவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, இலத்தூர் மதுநாதீஸ்வரர் திருக்கோயிலுக்கு வெளியூர்களிலிருந்து அதிகமான பக்தர்கள் வருகிறார்கள். அங்கே கழிப்பிட வசதி மற்றும் உடை மாற்றும் வசதிகளைச் செய்து கொடுக்குமாறு வேண்டுகிறேன். சொக்கம்பட்டி காசி விஸ்வநாதர் கோயிலில், நிதி உதவி இல்லாத காரணங்களினால் பல ஆண்டுகளாக திருப்பணி நடைபெறவில்லை; அதையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

கருப்பாநதி உரைகிணறு பக்கத்தில் பெரியசுவாமி ஐயனார் கோயில், திரிகூடபுரம் மேற்குப் பகுதியில் இருக்கின்றது. அங்கு செல்ல

ஒரு பாலம் அமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கையை அந்தப் பகுதி மக்கள் வெகுநாட்களாக வைத்திருக்கின்றார்கள். அதனை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமலை குமாரசாமி கோயிலைச் சேர்ந்த சுந்தரராஜப் பெருமாள் கோயில் சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டதன் காரணமாக அங்கே கால்நடைகள் செல்வதும், இரவு நேரங்களில் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலையிலும் இருக்கின்றது. இக்கோயிலுக்கு இந்த அரசு சுற்றுச்சுவர் கட்டித்தர வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடவிநயினார் அணைக்கட்டு மேட்டுக்கால் பகுதியில் நிரந்தரமாக நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதனையும் விரைவாக இந்த அரசு ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதை இங்கே பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், தாலுகா அலுவலகம் பிரச்சினையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை, தொடர்ந்து 13 மாத காலமாக வலியுறுத்தி வருகிறேன். மாண்புமிகு அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே அவர்கள் செய்து தருவதாக உறுதி அளித்தார்கள். வனப் பகுதியில் வேண்டாம் என்று அனைவரும் சொல்கின்றனர். இது எனது தனிப்பட்ட கருத்து இல்லை. ஒட்டுமொத்த அந்தப்பகுதி மக்களுடைய கருத்து. இரண்டு நகராட்சி மக்களுடைய ஒட்டுமொத்த கருத்து. 33 வருவாய் கிராமங்களின் கருத்து. ஏற்கெனவே வனப் பகுதிக்கு உறுப்புக் கல்லூரியினைக் கொண்டு சென்றுவிட்டார்கள். அரசின் திட்டங்களை மக்கள் பாராட்ட வேண்டும் என்று சொன்னால், மக்கள் விரும்பக்கூடிய இடத்தில் இருக்க வேண்டும். மேலும், காலதாமதம் இல்லாமல் செய்யுங்கள். நான் இங்கு போராடிக்கொண்டிருக்கும்போது, வேறு யாராவது ஒருவர் அமைச்சருடன் ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டு பத்திரிகையில் போடுவதால் அதுவும் பிரச்சினையாகி விடுகிறது. எனவே, தயவுகூர்ந்து மேலும் காலந்தாழ்த்தாமல் கடையநல்லூர் தாலுகா அலுவலகத்தினை நகர எல்லையிலேயே அமைக்க இந்த மானியக் கோரிக்கை விவாதத்திற்கான பதிலுரையிலேயே அதற்கான அறிவிப்பைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அம்மா அவர்கள் அறிவித்ததை நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். அம்மா அவர்களின் ஆன்மா சாந்தியடைய

வேண்டும் என்று சொன்னால், நீங்களே அதை அறிவிக்க வேண்டும் என்று தொகுதி மக்களின் சார்பாக வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல், டாஸ்மாக் கடை குறித்த கோரிக்கையையும் வைத்துள்ளேன். அதையும் நிறைவேற்றித்தருவதாகக் கூறியுள்ளார்கள். நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் பகுதியில் கேரளாவினுடைய கழிவுகளை எல்லாம் தமிழகத்திற்குள் வராமல் தடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதுபோல் எங்களது பகுதியில் இருக்கக்கூடிய புளியறை பகுதியிலும் கேரளாவிலிருந்து வரக்கூடிய மனிதக் கழிவுகளையும், மருத்துவக் கழிவுகளையும் தடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல் வடகரை கீழ்பதாகை பேரூராட்சியிலுள்ள செங்குளம் தூர்வாரப்படவேண்டும் என்று பல நாட்களாகச் சொல்லப்பட்டு வருகின்றது. அவ்வாறு தூர்வாரினால், நிலத்தடி நீர் அங்கு உயரும். அதன்மூலம் அங்குள்ள நீராதாரங்களையெல்லாம் பெருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே, இதையும் தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டும்.

சிறுபான்மையினர் நலன் சம்பந்தமாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கவில்லை என்ற ஆதங்கத்தினைத் தெரிவித்தபோது, நிதியமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்போது நாங்கள் அறிவிக்கிறோம் என்று சொன்னார்கள். அதை நினைவுபடுத்தி நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் நான் மனு கொடுத்துள்ளேன். எனவே, இந்த மானியக் கோரிக்கையில் சிறுபான்மையினர் நல அமைச்சகத்திற்கான அறிவிப்புகளில் உலமாக்கள் பணியாளர் நல வாரியத்திற்கு உரிய நிதியினை வழங்க வேண்டும். வக்ஃபு வாரியச் சொத்துகள் பாதுகாக்கப்படாத சூழ்நிலையில் உள்ளன. அதனைப் பாதுகாத்து, ஆவணப்படுத்தி முறையாக கல்வி ஸ்தாபனங்கள் தொடங்குவதற்கான ஒரு திட்டத்தினையும், அரசு அறிவிக்க வேண்டும். ஏற்கெனவே மறைந்த முதல்வர் அவர்கள் சென்ற வருடம் அறிவித்தபடி, காஜிக்களுக்கு உண்டான ஊதியத்தை வழங்கக்கூடிய ஓர் அறிவிப்பையும் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், முஸ்லிம் பெண்கள் உதவும் சங்கத்திற்கு இணைமானியத் தொகையைப் பெறுவதற்கு அவர்களுக்கு காலதாமதம் ஏற்படுகிறது. எனவே,

அதற்கு விரைவாகவும் அதிகப்படியான நிதியை வழங்கக்கூடிய சூழ்நிலையையும் மானியக் கோரிக்கையில் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15

சென்ற ரமலானில் நோன்பு கடைப்பிடிக்கக்கூடிய காலத்தில் ஒரு பிரச்சினை வந்தது. கூம்பு வடிவிலான ஒலிபெருக்கியில் பாங்கு சொல்லக்கூடாது என்று கெடுபிடி செய்தார்கள். சென்னையில் உள்ள 36 பள்ளிவாசல், 2 கோயில், 2 சர்ச் ஆகிய 40 இடங்களில் சப்தம் எழுப்பக்கூடாது என்று அறிவிப்பு செய்தார்கள். ரமலான் நோன்புக்காக தொழும் காலத்தில் இவ்வாறு செய்கிறார்கள் என்று சொல்லி, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்றபோது, அவர்கள் அந்தக் கெடுபிடிகளையெல்லாம் நிறுத்தக்கூடிய வகையில் ஆவன செய்தார்கள் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அதேபோல் திருநெல்வேலி மாவட்டத்தில் காவல் துறை சொல்லியிருக்கிறது. ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டில் என்ன அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால், பொது மக்களுக்கு இடையூறாக noise pollution இருக்கக் கூடாது. அந்த அடிப்படையில், சென்னையில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அது தொடர்பாக, மாநில அரசாங்கத்தின் அறிவுரைகளை நீதிமன்றம் எதிர்பார்த்திருக்கின்றது. எல்லா மைக்குகளுமே கூம்பு வடிவிலான குழாய் போன்ற அமைப்பில்தான் இருக்கின்றன. நாங்கள் உயரமான கோபுரத்தில்தான் அவற்றை வைத்திருக்கின்றோம். நாங்கள் பாக்ஸ்-ல் வைத்தோம் என்றால், மழை பெய்யும்போது, அதனுள் தண்ணீர் போய் வீணாகி விடும். எனவே, கூம்பு வடிவிலான குழாயில் 70 டிசிபிலில்தான் sound வைத்திருக்கின்றோம். அப்படியிருந்தும்கூட, இந்த வருடம் மறுபடியும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கின்றார்கள். உயர் நீதிமன்றமும் அரசின் அறிவுரைகளை எதிர்பார்த்திருக்கின்றது. எனவே, தமிழக அரசு உரிய முறையில் அறிவுரை வழங்கி, கூம்பு வடிவிலான குழாய் வைத்து, 70 டிசிபிலுக்குள் பாங்கின் ஒலியை பரப்புவதற்கான காரியங்களை தொடர்ந்து செய்திட வேண்டும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதுகுறித்துச் சொல்லியிருக்கின்றோம்.

திருப்பூரில் குருவாயூரப்பன் காலனி பகுதியில் ஒரு பள்ளிவாசலில் தொழுகையெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், அந்தப்

பகுதியில் தொழுகையை நடத்தாமல், மற்றொரு பகுதியில் நடத்துங்கள் என்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, வேறொரு இடத்தையும் தேர்வு செய்து கொடுத்தார்கள். இப்போது அந்த இடத்திலேயும் தொழுகை நடத்த இயலாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், நீங்கள் அதற்குரிய மானியம் வரும்போது பேசலாம். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை இரண்டு நிமிடங்களில் சொல்லி முடித்துவிடுகிறேன். எனக்கு 6 நிமிடங்கள்தான் பேச வாய்ப்பு தந்திருக்கிறீர்கள். எனவே, தயவுகூர்ந்து அதனைச் செய்து தர வேண்டும். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இல்லை, அது தவறு. (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முறை பேசுகின்றபோதே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், திருப்பூரில் குருவாயூரப்பன் காலனியில் இருக்கின்ற பள்ளிவாசலில் நடந்த பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், இதற்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்தவர்களும் இருசாராரையும் அழைத்துப் பேசி, அந்தப் பகுதியில் சுமுகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர், அவர்களது கோரிக்கை குறித்து அங்கிருப்பவர்களுடன் கலந்தாலோசித்த பின்பு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு முடிவினை எடுப்பார்கள். இப்போது அங்கு அமைதி நிலவுகிறது. இப்போது அனைவரும் அங்கு தொழுகை செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மொத்தத்தில் நன்றி சொல்லி, உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: இதோ சீக்கிரம் முடித்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று தொழுகை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கு shed போடாமல் தொழுகை செய்ய முடியவில்லை. வெயிலினால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். அங்கு shed போடுவதற்கு நீங்கள் அனுமதி கொடுங்கள்.

சட்டமன்ற விடுதியில் இருக்கும் தண்ணீர் பிரச்சினை பற்றி உறுப்பினர்கள் என்னிடம் சொன்னார்கள். சட்டமன்ற அவைக் குழு ஏற்படுத்தப்பட்டு, இதுவரை எந்தக் கூட்டமும் கூட்டப்படவில்லை. எனவே, விரைவாக சட்டமன்ற அவைக் குழுவைக் கூட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறிக்கொள்கிறேன். வாணியம்பாடி இஸ்லாமியர் கல்லூரி என்பது 1919 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலேயருடைய ஆட்சியில் அங்கே விளையாட்டு மைதானத்திற்கென்று நிலம் ஒதுக்கப்பட்டது. அது வருடத்திற்கு ஒரு ரூபாய் என்ற ஒப்பந்தத்தின்மூலம் வழங்கப்பட்டது. இப்போது திடீரென மாவட்ட நிருவாகம் நான்கு கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என அறிவிப்பு செய்து, அந்த நிலத்தைக் கையகப்படுத்தும் சூழ்நிலை இருக்கின்றது. ஏற்கெனவே, சிறுபான்மையினரான முஸ்லிம்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக பல்வேறு ஆய்வறிக்கைகள் எல்லாம் தெரிவித்திருக்கின்றன. எனவே, வாணியம்பாடியில் 100 வருட குத்தகையில் உள்ள இஸ்லாமியர் கல்லூரியினுடைய அந்த இடத்திற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், (குறுக்கீடு) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி இஸ்லாமிய பெண்கள் கல்லூரிக்கு அந்த இடம் வாங்கப்படவில்லை. ஆண்கள் கல்லூரிக்கு அந்த இடம் lease-க்கு வாங்கப்பட்டது. அந்த lease period முடிந்து விட்டது. மேலும், அரசு அந்த lease தொகையை அதிகரித்திருக்கிறது. அதிகரித்த தொகையான நான்கு கோடி ரூபாயைத்தான் அவர்கள் கட்டாமல் நிலுவையில்

வைத்திருக்கின்றார்கள். அந்த நான்கு கோடி ரூபாயை அந்த இஸ்லாமியர் கல்லூரி கட்டவில்லை என்பதை நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி, உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *இதோ முடித்து விடுகிறேன். தொகுதி சார்ந்த பிரச்சினை என்பதால் சொல்கிறேன். அவர்கள் நான்கு கோடி ரூபாயை எப்படிக் கட்டுவார்கள்? கல்லூரியை நடத்துவதே பெரிய விஷயம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,* that is the rate fixed by the Government. *வேறு எதுவும் செய்ய முடியாது.* Government fix *செய்த* rate *தான்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இதுகுறித்து தனியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறையில் போய் கேட்டுக்கொள்ளுங்கள். இப்போது, நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *ஒரே ஒரு விஷயம்தான். வேறு ஒன்றுமில்லை. கடைசியாக ஒரு கோரிக்கைதான். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும், உங்கள் உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *சிவகங்கை மாவட்டம், கன்னங்குடி யூனியனில் உள்ள 21 தண்ணீர் பம்ப் செட் மோட்டார்களைக் காணவில்லை. அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது சம்பந்தமான உரிய விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்கிறீர்களா, வேறொரு உறுப்பினரைக் கூப்பிடவா?*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *கன்னங்குடி யூனியனில் 21 மோட்டார் பம்ப் செட்டுகள் காணவில்லை என்ற குற்றச்சாட்டு*

எழுந்திருக்கின்றது. அதிகாரிகளை அணுகியபோது, அவர்கள் எந்தத் தகவலையும் தரவில்லை. எனவே, இது சம்பந்தமாக உங்களுடைய மேலான விளக்கத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி.

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக உறுப்பினர் 21 மோட்டார்களைக் காணவில்லை என்பது குறித்து என்னவென்று தெரியவில்லை. (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி அவர்கள் சொல்லி பேசினீர்களா? அப்படி ஏதாவது தவறு நடந்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாதிரி எங்களுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. அப்படி நடந்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கடையநல்லூர் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்குரிய pipe connection பற்றி பேசினார். கடையநல்லூர் நகராட்சியினுடைய மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 90,344. நகராட்சியின் குடிநீர்த் தேவைக்கு, நகராட்சிக்குச் சொந்தமான கருப்பாநதி திட்டத்திலிருந்து 8 இலட்சம் லிட்டர் குடிநீரும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமான புளியங்குடி. கடையநல்லூர் தாமிரபரணி ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 30 இலட்சம் லிட்டர் குடிநீரும் ஆக, நாள்தோறும் 38 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பொது மக்களுக்கு 12 வார்டுகளில் 2 நாட்களுக்கு ஒரு முறையும், 21 வார்டுகளில் 4 நாட்களுக்கு ஒரு முறையும், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70-லிருந்து 80 லிட்டர் வரை தண்ணீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

மேலும், பொது மக்களுக்குச் சீரான முறையில் குடிநீர் வழங்க சிறிய மற்றும் பெரிய நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 21 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 திறந்தவெளிக் கிணறுகள், 3 தரைமட்டத் தொட்டிகள் மற்றும் 7 மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 13,921 எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகள் புதிதாகப் பதிக்கப்படுவதுடன், பெரும்பாலான குழாய்களை மாற்றியமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 13,030 இணைப்புகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இணைப்புகள் வரும் செப்டம்பர் 2017-க்குள் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இத்திட்டம் பயன்பாட்டிற்கு வரும்போது கூடுதலாகக் கிடைக்கும் 43.30 இலட்சம் லிட்டர் குடிநீரை பயன்படுத்தி, நகராட்சிக்கு மொத்தம் 81.30 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கும். இதனால் பொது மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படும்.

அடுத்து, கடையநல்லூர் நகராட்சி பகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று சொன்னார். கடையநல்லூர் நகராட்சி பகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மொத்தம் 59 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. திட்ட அனுமதி மற்றும் நிதி ஆதாரங்கள் இறுதி செய்யப்பட்டவுடன், இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தண்ணீர் பிரச்சினைபற்றி சொன்னார். சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு நாள்தோறும் 9,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 16 லாரிகள்மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதுவரை சரியாக வழங்கப்பட்டு வருகிறது. அதில் ஏதாவது குறையிருந்தால் உடனடியாகத் தீர்த்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கு R.O. Plant பொருத்தி ஒழுங்கு செய்தாகிவிட்டது. அதனால் தண்ணீர் நன்றாக வரும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அப்படி ஏதாவது சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் பிரச்சினை வந்தாலும் கண்டிப்பாக உடனடியாகச் சரிசெய்யப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இப்போது அங்குபோய் நீங்கள் பயன்படுத்திப் பாருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: இதுவரையில் அப்படி இல்லை. அந்தமாதிரி இருந்தால், நீங்கள் சொல்வதை ஆய்வு செய்து, உடனடியாக சரிசெய்யப்படும். அதைப்போல, அண்ணன் பிச்சாண்டி அவர்கள் பேசும்போது நகராட்சி அலுவலகக் கட்டடத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் இப்போது போய் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: திருவண்ணாமலை நகராட்சி, திருக்கோவிலூர் சாலை, நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதிய அலுவலகம் கட்ட உட்கட்டமைப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் திட்டம், 2013-2014-ன்கீழ் ரூ.150 இலட்சம் நிதி பெறப்பட்டதில் தரைதள பணிகளுக்கு மட்டுமே வழிவகை செய்யப்பட்டுள்ளது. தரைதளப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதனால், நகராட்சி அலுவலகத்தில் முதல் தளம் அமைக்க உட்கட்டமைப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் திட்டம், 2016-2017-ன்கீழ் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிருவாக அனுமதி பெறப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்து, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செந்தமிழே! தீந்தமிழே! காலமெனும் தீக்கடலை நீந்தி நின்ற என் தமிழே! ஏழுகடல் வண்ணமாகி ஏழிசைப்

பயனுமாகி, ஒப்பிலா சக்தியாகி, தத்துவ வாணியாகி, பொன்மனச் செல்வியாகி, யாவரின் இதயமாகி, யாழிசைப் பண்ணுமாகி நின்ற என் தாயே! எழுத்துகளில் அகரமாய், சித்தர்களில் கபில முனியாய், சொற்களில் பிரணவமாய், தேவர்களில் இந்திரனாய், நதிகளில் கங்கையாய், மகரிஷிகளில் பிருகுவாய், மாதங்களில் மார்கழியாய், விண்மீன்களில் வெண்ணிலவாய், வேதத்தில் சாமமாய் விளங்கிய என் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) அருந்தமிழ் மறையுமாகி, இயலிசை கூத்துமாகி, இருளுடன் பகலுமாகி, உருவொடு அருவமாகி, உரைதரு இசையுமாகி, கனிந்திடும் அருளுமாகி, குன்றா குணமுமாகி, சுடரொளி அமுதமாகி, சுருதியின் சுகமுமாகி, பொன்றாப் பொருளுமாகி, பொன்மனச் செல்வியாகிய எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) சத்தியத் தாயின் நித்தியப் புதல்வியே! ஞானத்தின் சுடர் விளக்கே! தங்களை ஒருபோதும் மறவேன் அம்மா! தங்கள் திருப்பாதம் தொழுவேன் அம்மா! உயிர்மூச்சே நீதான் அம்மா! பொற்பதமே, தங்களின் பொற்பாதங்களைப் போற்றி வணங்குகின்றேன்.

பிற்பகல் 2-25

என் நெஞ்சிற்கினிய மாண்புமிகு முதல்வர் அவர்களை மனதார வாழ்த்தி வணங்குகின்றேன். கண்களை இமைகள் காப்பதுபோல் கழகத்தைக் காக்கும் மகேஸ்வரியாம், அன்னையின் மன ஓசையாம், எங்கள் பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களை வணங்கி, உள்ளாட்சி சிறந்தோங்க, நல்லாட்சி மேலோங்க, சொல்லாட்சி ஏதுமின்றி, சுவையாட்சி நல்கி வரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, எனது விருத்தாசலம் தொகுதி வாக்காளப் பெருமக்களே, கழக முன்னணியினர் மற்றும் கழக நிருவாகிகளே, அத்துணை நல் உள்ளங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் துறைகள்மீதான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதங்களில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின்மீதான மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த எல்லா உள்ளங்களுக்கும் என் நன்றிகளை காணிக்கையாக்குகிறேன்.

கடந்த 16-3-2017 ஆம் நாளன்று இப்பேரவையில், மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்

துறை அமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கை அளிக்கப்பெற்றது. அந்த அறிக்கையிலே, எல்லா துறைகளுக்கும் ஏராளமான பயன்கள் அளிக்கப்பட்டிருந்தது கண்டு, என் போன்ற உறுப்பினர்களும், எங்களைத் தேர்ந்தெடுத்த பொது மக்களும் ஒருசேர மகிழ்வுற்றோம்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நீங்கா நினைவோடு, நிறைவோடு தொடரும் இந்த ஆட்சியில், மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் சாதனைகள், அம்மா அவர்களின் சிந்தனைகளை, செயல்பாடுகளை செயலாக்கம் செய்வதுபோல் உள்ளது கண்டு எல்லோரும் மகிழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரின் 100 நாள் சாதனைகளில், முத்தான சாதனைகள் இதோ!

மணல் குவாரிகளை அரசே ஏற்று, அரசு மூலமாகவே மணல் விற்கப்படும் என்று அறிவித்தார். 84 ஆண்டுகளுக்குப் பிறகு மேட்டூர் அணையைத் தூர்வாரும் பணியைத் தொடங்கி வைத்தார். நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு குடிமராமத்து பணிக்கு புத்துயிர் அளித்து, ஊர்கள்தோறும், கிராமங்கள்தோறும், குடிமராமத்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். கிராமத்துக் குளங்களிலும், குட்டைகளிலும், ஏரிகளிலும் படிந்துள்ள வண்டல் மண்ணை எடுத்து, அந்தந்த ஊர் மக்கள் அவரவர் நிலங்களில் பயன்படுத்திக்கொள்ள ஆணையிட்டார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில், கேபிள் டி.வி.-யை டிஜிட்டல்மயமாக்க ஆணை பெற்றார். அப்படிப்பட்டவரின் ஆட்சியில், ஊராட்சித் துறையில், இம்மாநிலத்தில் செயல்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் செயல்பாடுகளை மத்திய அரசு வெகுவாகப் பாராட்டியுள்ளது. இத்திட்டத்தில் நமது மாநிலத்தின் புதுமையான பணிகளைத் தழுவி, தேசிய அளவில் அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வரும் வேலைநாட்களின் எண்ணிக்கையோ 100 நாட்களிலிருந்து 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராமப்புறச் சாலைகள் திட்டத்தின்கீழ், 792 சாலைகள் மற்றும் 12 பாலங்களை மேம்படுத்துவதற்கான பணிகளை கழக அரசு மேற்கொண்டுள்ளது

பாராட்டுக்குரியது. இத்திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் 758 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் பாராட்டுக்குரியதே!

ஊரக வளர்ச்சித் துறைக்காக, இந்த நிதிநிலை அறிக்கையில், 16,655 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிருவாகத் துறையில், கடந்த நிதியாண்டில் Smart Cities Mission எனப்படும் திறன்மிகு நகரங்கள் இயக்கத்தின்கீழ், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதேபோன்று, AMRUT எனப்படும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின்கீழ், கடந்த நிதியாண்டில் 3,834.49 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் 27 நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு இந்த நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 563 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிருவாகத் துறையின் மேம்பாட்டிற்கு மட்டுமே, இந்த நிதிநிலை அறிக்கையில் 13,996 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதைப் பார்க்கும்போது, அத்துறையில் இந்த அரசின் அக்கறை உளப்பாடோடு இருப்பது கண்டு உள்ளம் மகிழ்கின்றேன்.

பிற்பகல் 2-30

கிராமப்புறங்களில் வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, 2011-2012 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட பசுமை வீடுகள் திட்டமானது மாண்புமிகு அம்மா அவர்களின் நெஞ்சில் பசுமரத்தாணியாய் பதிந்த ஒரு திட்டம் என்றால் அது மிகையல்ல. இந்தத் திட்டம் நாட்டிலேயே செயல்படுத்தப்படும் ஒரு முதன்மைத் திட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகால ஆட்சியில் விலையில்லா வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் 5,940 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் 2016-2017 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு, வருடத்திற்கு 20 ஆயிரம் வீடுகள் வீதம் 1 இலட்சம் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் 2.10 இலட்சம் ரூபாய் அலகுத்தொகையில்

கட்டப்படவுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 2017-2018 ஆம் ஆண்டில் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெஞ்சில் நிழலாடிய இன்னொரு அருமையான திட்டம், 'தாய்' திட்டம். குக்கிராமங்களை அலகாகக்கொண்டு 'தாய்' என்று அழைக்கப்படும் இந்த தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டமானது 2011-2012 ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 750 கோடி ரூபாய் வீதம் மாநில அரசு நிதியுதவியுடன் துவங்கப்பட்டு, கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 3,680 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 79,394 குக்கிராமங்களில் 2,31,807 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 'தாய்' திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சாலைகள், இடுகாட்டிற்கான சாலை வசதிகள் போன்ற அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து,தூய்மைக் காவலர்களை ஈடுபடுத்திச் செயல்படுத்தப்படும் புதுமையான மாதிரி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்குச் சிறந்த நடைமுறைக்கான நல்ல ஆளுமை விருது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 15-8-2016 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டம் தேசிய அளவில் பாராட்டுகளைப் பெற்றதுடன், மத்திய அரசு இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களைப் பிற மாநில அரசுகளுக்கு அனுப்பி, இதனை முன்மாதிரியாகக் கொண்டு செயல்படுத்த அறிவுரை வழங்கியுள்ளது.

மகளிரை ஆற்றல்படுத்துவதும், கிராமப்புற வறுமையை திட்டப் பகுதியில் குறைப்பதுமான தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம், 2005 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவக்கப்பட்டு, தற்போது மாநிலத்தின் 26 மாவட்டங்களில் உள்ள 120 பின்தங்கிய வட்டாரங்களில் 4,174 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'நீரின்றி அமையாது இவ்வுலகு' என்பதை நெஞ்சில் நிறுத்தியுள்ள இந்த அரசால், 2016-2017 ஆம் ஆண்டில் 51,895 குடிநீர் பணிகள் 544.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பின் வரிசையில் உள்ள உறுப்பினர்கள், அங்கே தனியாக கூட்டம்

நடத்திக்கொண்டிருக்கிறீர்களே! அதன் நோக்கம் என்ன? அதைக் கொஞ்சம் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் முக்கியமான கருத்துகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்; கவனியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: அதுபோல் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெறப்பட்ட 15 கோடி ரூபாயானது குடிநீர் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது என்பதும் நினைவுகூரத்தக்கதாக உள்ளது.

2016-2017 ஆம் ஆண்டு 'தாய்' திட்டம்-2, 750 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் 'தாய்' முதலாவது திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள் பல செய்யப்பட்டுள்ள நிலையில், 2016-2017 ஆம் ஆண்டில் 'தாய்' 2-வது திட்டத்தில் சிறுபாசன ஏரிகள் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலைகள் உள்ளிட்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னையுடன் இணைக்கப்பட்ட 27 பகுதிகளில், 599.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர் விநியோகம் செய்யும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 'அம்ருத்' திட்டத்தின்கீழ், ஐந்து மாநகராட்சிகள் மற்றும் இரண்டு நகராட்சிகளில் வசிக்கும் 23.17 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 7 குடிநீர் வழங்கும் திட்டங்கள் 1,823.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்படி மக்களின் உயிர்மூச்சே இவ்வரசின் மூச்சு என விளக்கும் இவ்வாட்சியை சிலர் பரிகாசம் பண்ணுகிறார்கள். தினமும் காலையில் எழுந்தவுடன் அதை ஒரு 'சுப்ரபாதமாகவே' பாடுகிறார்கள்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் பேனா முனையில் பிறவாத திட்டங்கள் இங்கே விக்ரகம் ஆகாத வெறும் கற்கள். அதனால்தான் அவரை மக்கள் விரும்பினார்கள், விரும்புகிறார்கள். அம்மா அவர்களால்தான் மகுடத்திற்கே இங்கு மரியாதை. (மேசையைத் தட்டும் ஒலி) மகுடமே உன்னைக் காப்பாற்றவே நாங்கள் கவலைப்படுகிறோம்.

ஆனால், உன்னைக் கைப்பற்றவே சிலர் கவலைப்படுகிறார்கள். தனது ஆட்சிக் கனவை தூர் வார முடியாதவர்கள், அரசியலை விட்டே ஒதுங்கலாமா என்று பார்த்தவர்களெல்லாம் மக்களிடம் கொஞ்சம் ஒட்டிப் போவதற்காக ** (குறுக்கீடுகள்) இவர்களை நினைக்கும்போது ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: ஒருவர் இரயில் தண்டவாளங்களுக்கு நடுவில் நடந்து கொண்டிருந்தார். (குறுக்கீடுகள்) அந்தப் பக்கம் வந்த ஒருவர் ஏன் இப்படி நடக்கிறீர்கள்? இரயில் வந்தால் ஆபத்து இல்லையா? என்று கேட்டார். இரயில் வந்தால் வரட்டும். அதில் விழுந்து தற்கொலை பண்ணிக்கத்தான் இப்படி நடக்கிறேன் என்றார் அவர். (குறுக்கீடுகள்) அதுசரி, கையில் என்னமோ பார்சல் வைத்திருக்கிறீர்களே, அது என்ன என்று வந்தவர் கேட்டார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடிக்கச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் அவரை முடிக்கச் சொல்கிறேன்.

திரு. V.T. கலைச்செல்வன்: அதற்கு அவர், இட்லி வாங்கி வைத்திருக்கிறேன். ஒருவேளை இரயில் தாமதமாக வந்தால், வயிறு பசிக்குமே என்றார். இறந்து போக நினைத்த இவருக்கும், அரசியலை விட்டே ஒதுங்கப் போகிறேன் என்று சொல்கிறவர்களுக்கும் என்ன வித்தியாசம்? ஒன்றுமே விளங்கவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: இவர்களின் ஆட்சிக் கனவுகள் சமுத்திரத்திலே ஏற்றம் போட்ட மாதிரி அல்லவா இருக்கிறது!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. V.T. கலைச்செல்வன்: *நான் ஏன் நன்றி சொல்லி முடிக்க வேண்டும். கூறுகெட்ட மாட்டிற்கு ஆறு கட்டுப் புல்லுமாதிரி இவர்களை நம்பி ஏழு, எட்டு கட்சிகள். (குறுக்கீடுகள்) சகுனம் நன்றாக இருக்கிறது என்று பொழுது விடிகிற வரைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கன்னம் வெச்சாலும், (குறுக்கீடுகள்) இவர்கள் சுகப்படப் போவதில்லை.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மக்களுக்காக சில சமயம் விரதம் வேறு, இவர்களின் விரதம்தான் தெரிந்ததாயிற்றே!*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *இன்று ஞாயிற்றுக்கிழமை; அதனால் நண்டு வேணாம், சாறு மட்டும் விடு என்பதுதானே இவர்களின் விரதம், (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிப் பிரச்சினைகளை தங்கள் முன்வைத்து பரிசீலனைக்கு உட்படுத்தி, பரிகாரம் காண விழைகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *முதலில் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க்கட்சிக் கொறடா நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. V.T. கலைச்செல்வன்: நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால், விருத்தாசலம் பகுதிக்கு நீர்மட்டம் குறைந்து வருகிறது. எனவே, அப்பகுதி விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யவும், நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்கொள்ளவும், மணிமுத்தாறு *(குறுக்கீடுகள்)* . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். உட்காருங்கள் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பார்க்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் இப்போதுதான் என்னுடைய அறையிலிருந்து வந்தேன். என்னவென்று நான்*

பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உட்காருங்கள். உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உட்காருங்கள். நான் என்னவென்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைச்செல்வன், நீங்கள் உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன். திரு. சக்கரபாணி, என்ன பிரச்சினை என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அமைதியாக இருங்கள்.

பிற்பகல் 2-40

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவர் தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு ஏரிகளைத் தூர் வாரவேண்டுமென்று சொல்லி, நாங்கள் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றோம்.*

*மாண்புமிகு விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற சமயத்திலே அதைக் கொச்சைப்படுத்துகின்ற விதத்திலே கட்சியையும், அதேமாதிரி ** என்ற வார்த்தையையெல்லாம் தவறாகப் பயன்படுத்துகிறார். அதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொல்கிறோம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். திரு. கலைச்செல்வன் உட்காருங்கள். நான் உங்களைக் கூப்பிட்டால்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். இப்போது, மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி அவர்கள், திரு. கலைச்செல்வன் பேசுகிறபோது, தங்கள் கட்சித் தலைவரை குறிப்பிட்டுச் சொன்னதாகச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் சொல்கிறேன் அல்லவா? நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைச்செல்வன், 'நான் சொல்லவில்லை' என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதாகச் சொல்கிறீர்கள். உங்களுடைய தலைவரைக் குறிப்பிட்டு அந்த வார்த்தையைச் சொல்லியிருந்தால், நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அதுவல்லாமல், இந்த ** என்ற வார்த்தையை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

இதோடு இந்தப் பிரச்சினையை விடுங்கள். திரு. கலைச்செல்வன், உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கலைச்செல்வன், பேசியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள்; நான் அவைக் குறிப்பில் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) எழுதிக் கொடுங்கள், நான் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) சரி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர். இராஜா, இரண்டு நிமிடங்கள், உட்காருங்கள். திரு. கலைச்செல்வன், இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: *அதில் ஏதாவது* repeat *செய்து சொல்ல வேண்டுமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதையெல்லாம், நீங்கள்* repeat-*ம் செய்ய வேண்டாம்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *நான் யார் பெயரையும் குறிப்பிடவில்லை. அதனால், கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கலைச்செல்வன், இங்கே பாருங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்பீர்களா, கேட்கமாட்டீர்களா? (குறுக்கீடு) திரு. கலைச்செல்வன். . .*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யார் பெயரையும் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) அதை அவர்கள் காதில் வாங்கிக்கொள்ளட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்தான் சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) திரு. கலைச்செல்வன், நீங்கள் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை என்று சொல்லிவிட்டீர்கள். அதோடு விட்டுவிடுங்கள். தொகுதிக் கோரிக்கைகளைச் சொல்லுங்கள். இரண்டே இரண்டு நிமிடங்களில் தொகுதிக் கோரிக்கைகளைச் சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *எனது தொகுதிப் பிரச்சினைகளை தங்கள் திருமுன் வைத்துப் பரிசீலனைக்கு உட்படுத்தி பரிகாரம் காண விழைகிறேன்.*

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால் விருத்தாசலம் பகுதியில் நீர்மட்டம் குறைந்துவருகிறது. எனவே, அப்பகுதி விவசாயிகளின்

தேவையைப் பூர்த்தி செய்யவும், நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்கொள்ளவும், மணிமுத்தாற்றின் குறுக்கே விருத்தாசலம் நகரில் உள்ள பூதாமூர் என்னும் இடத்தில், பொதுப் பணித் துறையின் வாயிலாக ஒரு தடுப்பணையைக் கட்டித் தர வேண்டுகிறேன். இதுகுறித்த கருத்துருவும் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலம் நகராட்சியில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை. சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகமாக ஏற்படும் இப்பகுதியில் இந்தத் திட்டம் அவசியம் வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதனை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

தற்போதுள்ள நகராட்சிக் கட்டடமானது 40 ஆண்டுகளுக்கு முன்பு ஊராட்சியாக இருந்தபோது கட்டப்பட்ட கட்டடம் ஆகும். தற்போதைய விரிவாக்கத்திற்கு இந்த இடம் போதுமானது அல்ல. எனவே, அங்கு புதிய கட்டடம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

விருத்தாசலத்தில் சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் 100-க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பணிபுரிகிறார்கள். முந்திரி முதல் பிற பயிர்களின் பெரும்பாலான புதிய விதைகள் இங்குதான் கண்டுபிடிக்கப்படுகின்றன. எனவே, அந்த வளாகத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அல்லது பொறியியல் கல்லூரி அமைத்தால், அப்பகுதி மாணவர்களுக்கும், அங்குள்ள விவசாயப் பெருமக்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று வேப்பூரில் மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பெயரால் அமைய வேண்டும் என சுற்றுவட்டாரப் பெற்றோர்களும், மாணவிகளும் விரும்புகிறார்கள். எனவே, புதிய கல்லூரி தொடங்கிட வேண்டுகிறேன்.

வட்டத் தலைமையிடமான வேப்பூரில் ஒரு பேருந்து நிலையமும், மங்கலம்பேட்டை பேரூராட்சியில் ஒரு பேருந்து நிலையமும் அமைத்துத் தர வேண்டுகிறேன். மேலும், மங்கலம்பேட்டை பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்க போதிய இடம் உள்ளது. எனவே, அங்கு புறவழிச் சாலையை ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

முதல்நிலை நகராட்சியாக உள்ள விருத்தாசலம் நகராட்சியில் புறவழிச் சாலையில் மக்களின் பயண வசதியைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய புறநகர் பேருந்து நிலையம் துவக்க வேண்டுகிறேன்.

விருத்தாசலம் நகரம், 16-வது வார்டு, பெரியார் நகரில் சுமார் 7,000 மக்கள்தொகை இருப்பதால் மக்கள் நல்வாழ்வு மையம் ஒன்று துவங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில் வங்கிக்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

விருத்தாசலம் நகரில் ஜங்ஷன் ரோட்டில் நகராட்சிக்குச் சொந்தமான “ஆடு தொட்டி” என அழைக்கப்படும் நகரின் மையமான பகுதியில், புதிய வணிக வளாகம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

பிற்பகல் 2-45

அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நந்தவனம் என்னும் காலியிடத்தில் அடுக்குமாடி வணிக வளாகம் அமைத்துத் தர வேண்டுகிறேன். நகரின் மையப் பகுதியில் இவ்வளாகம் அமைவதால் மக்கள் மிகவும் பயன்பெறுவார்கள்.

கடலூரில் உள்ள நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைப் பிரித்து, விருத்தாசலம் தொகுதி, திட்டக்குடி தொகுதி, காட்டுமன்னார்கோவில் தொகுதி ஆகிய தொகுதிகளை உள்ளடக்கி, விருத்தாசலத்தை தலைமையிடமாகக்கொண்டு கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன். விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் விடுபட்டுள்ள மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலைகளை சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்துத் தர வேண்டுகிறேன். விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட கடலூர் மெயின் ரோட்டில் உள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணை முதல் சேலம் மெயின் ரோடு இரயில்வே மேம்பாலம் வரை உள்ள 5 கி.மீ. குடிநீர் பகிர்மானக் குழாய்கள், தேசிய நெடுஞ்சாலைத் துறையின் வேலைகள் நடைபெறும்போது பழுதடைந்துள்ளன. அந்தக் குழாய்களை ரூ.1.50 இலட்சம் செலவில் புதுப்பித்துத் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைச்செல்வன், உரையை நிறைவு செய்யுங்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *இரண்டே நிமிடங்களில் நிறைவு செய்து விடுகிறேன். விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் 45 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடமும், கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வசதியுடன் உள் விளையாட்டரங்கம் ஒன்றும் அமைத்துத் தர வேண்டுகிறேன்.*

நல்லூர் ஊராட்சி ஒன்றியமானது, 64 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய பகுதியாக உள்ளது. இதில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. மங்களூர் ஒன்றியத்தில் 66 ஊராட்சிகள் உள்ளன. நிருவாக வசதிக்காக மங்களூர் ஒன்றியத்தில் உள்ள 13 ஊராட்சிகளை, நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தோடு இணைத்தும், திட்டக்குடி தொகுதியிலுள்ள சில ஊராட்சிகளைப் பிரித்து பெண்ணாடத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கியும் தர வேண்டுகிறேன்.

விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட விளாங்காட்டூர் கிராமத்திலிருந்து இடையூர் கிராமம் செல்லும் சாலையில் பெரிய ஓடையின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தர வேண்டுகிறேன். விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட கருவேப்பிலங்குறிச்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இடப் பற்றாக்குறையோடு உள்ளது. அருகிலேயே போதுமான காலியிடம் உள்ளது. 30 படுக்கையோடு 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அளவில் அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்தித் தர வேண்டுகிறேன்.

விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட எம்.பரூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கிட வேண்டுகிறேன். விருத்தாசலம் ஒன்றிய அலுவலகம் 33 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் பழமையான நிலையில் உள்ளது. இந்தக் கட்டடத்திற்குப் பதிலாக, புதிய கட்டடம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்) இதோ உரையை முடிக்கப்போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதிக் கோரிக்கைகள்தான் சொல்கிறார். விடுங்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி தற்போது ரூ.2 கோடியாக உள்ளது. அதை ரூ.5 கோடியாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கும் சேர்த்துத்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அமைதியாக இருங்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் வழங்குவதுபோன்று, சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி மீண்டும் தொய்வில்லாமல் தொடர, மக்கள் துணையோடும், மகேசன் துணையோடும், 2021-லும் ஆளும் வகையில் இங்கே இணைவோம் என்ற எனது பேரவாவைத் தெரிவித்து, இப்பேரவையில் எனது உரையைப் பெருமையோடு நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

***திரு. எஸ்.ஆர். இராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த, தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர், சட்டமன்றத்தின் வைர விழா நாயகர் தலைவர் கலைஞர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் வணங்குகிறேன். இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக இடம்பெறுவதற்கு வாய்ப்பு வழங்கி, நான் வெற்றி பெறுவதற்குப் பிரச்சாரம் செய்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களையும் இந்த நேரத்திலே நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டக் கழகச் செயலாளருக்கு பல்வேறுபட்ட பணிகள் இருந்தாலும், என்னுடைய குடும்பச் சூழ்நிலை காரணங்களினால் என்னுடைய தொகுதியில் தேர்தல் பணி செய்யமுடியாத ஒரு நிலை இருந்தது. அந்த நேரத்திலே, தனது தேர்தல் பணியையும்*

விட்டுவிட்டு, என் தொகுதிக்கு வந்து தேர்தல் பணியாற்றிய ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எனது வெற்றிக்காக உழைத்த திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், காங்கிரஸ் பேரியக்கத் தோழர்களுக்கும், இந்திய முஸ்லிம் லீக் கட்சித் தோழர்களுக்கும், மனிதநேய மக்கள் கட்சித் தோழர்களுக்கும், தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, என்னை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2-50

ஓராண்டு கழித்து இப்போதுதான் எனக்கு உள்ளாட்சித் துறை மானியத்திலே பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. நல்லநேரமோ என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, கொஞ்சம் எங்களுக்குக் கூடுதலாக நேரம் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர் மறைந்த ராஜீவ் காந்தி அவர்கள் பெரும் முயற்சி எடுத்து, பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இப்போது demonetisation *வந்தது. இப்போது மத்திய அரசு, ஜி.எஸ்.டி. போன்ற பல்வேறு சட்டங்களைக் கொண்டு வருவதைப் போல, அப்போது பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அவர் சொன்ன கருத்து என்னவென்று சொன்னால், மக்களுக்கு அரசாங்கம் ஒரு ரூபாய் ஒதுக்கினால் அது 15 காசு அளவில்தான் கீழே உள்ள மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்று சொன்னார். குழந்தைகளுக்கு ஐஸ் வாங்கிக் கொடுத்தால் குழந்தைகளுக்கு குச்சிதான் போய்ச் சேருகிறது என்ற இன்னொரு கருத்தையும் சொன்னார்.*

ஆனால், 1991-லிருந்து 1996 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த காலத்தில், பல்வேறு தடவை மத்திய அரசாங்கம் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அன்றைக்கு அ.தி.மு.க. அரசு நடத்தவில்லை. நீதியை நிலை நிறுத்துவேன்

என்று சொல்லி, அப்போதும் நடத்தவில்லை. கடைசிவரை 5 ஆண்டுகளிலே உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமலே அவர்கள் சென்றுவிட்டார்கள்.

1996-லே நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் முதன்முதலாக தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தினார்கள். நடத்தியது மட்டுமல்ல, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீட்டையும் அவர்கள்தான் வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, முதல் கூட்டம் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கெல்லாம் சென்னையிலே போட்டு, எப்படிப் பணியாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். நான் அன்றைக்கு நகர மன்றத் தலைவராக இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்திலே நிருவாகப் பொறுப்பிலே இருந்த எங்களைப் போன்றவர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் சொன்ன அறிவுரை என்னவென்றால், “உள்ளாட்சியிலே நீங்கள் மக்கள் பணியாற்ற வந்திருக்கிறீர்கள். ஆக. மக்கள் பணியைச் செய்யுங்கள். நீங்கள் கரன்சி எண்ண வேண்டும் என்று ஆசைப்பட்டால், கம்பி எண்ணுவதற்குத் தயாராக இருங்கள்” என்ற வார்த்தைகளை அன்றைக்கு எங்களுக்குச் சொன்னார். அன்றிலிருந்து இன்றுவரை திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து நாங்கள் வெற்றிபெற்று வந்திருக்கிறோம் என்று சொன்னால், அந்த வார்த்தைகள்தான் காரணம் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பிச்சாண்டி அவர்கள் பேசுகின்றபோது, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கான காரணங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது குறித்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், உள்ளாட்சி எவ்வளவு முக்கியம் என்பதற்கு மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் சொன்ன கருத்தை மையமாக வைத்து, இந்த அரசு உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாம்பரம் நகராட்சியைப் பொறுத்தவரை இன்றைக்கு மிகப் பெரிய நகராட்சியாக இருக்கின்றது. மக்கள்தொகை அதிகமாக இருக்கின்றது. வந்து செல்கின்றவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அன்றாடம் நிருவாகம் செய்வதற்கே கஷ்டமாக இருக்கிறது.

2006 ஆம் ஆண்டிலும் நான் என்னுடைய கன்னிப் பேச்சிலே தாம்பரம் நகராட்சியை, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்ற முதல் கோரிக்கையை வைத்தேன். இன்றைக்கு ஓரளவுக்கு அந்தப் பணிகள் எல்லாம் ஆய்வு செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்கு வந்திருக்கிறது என்று கேள்விப்பட்டேன். ஆகவே, உடனடியாக நீங்கள் தாம்பரம் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும் என்பதை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி நிதிப் பற்றாக்குறை என்ற ஒரு நிலைமை ஏற்பட்டால், உடனடியாக ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியை தாம்பரம் நகராட்சிக்கு நியமித்து, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த காலத்தில் மிகப் பெரிய அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18 நாட்களாக தாம்பரத்திலே இருந்து பணியாற்றினார்கள். மேற்குத் தாம்பரம், பீர்க்கன்கரணை, பெருங்களத்தூர் போன்ற பகுதிகளில் குறைந்தது 10 ஆயிரம் குடும்பத்தினர் அதனால் பாதிக்கப்பட்டார்கள். பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்வதைவிட அவர்களது உடைமை மொத்தமுமே போய்விட்டது. ஒரு கட்டடம் 8 அடி, 10 அடிக்குமேல் இருந்தால் முதல் மாடிக்குப் போகிற அளவுக்குத் தண்ணீர் இருந்தது. ஆக, அன்றிருந்த அரசு உடனடியாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ராஜாராம் மற்றும் திருமதி அமுதா ஆகிய இரண்டு பேர்களைப் போட்டு, ஆய்வு செய்து, பணியை மேற்கொண்டார்கள். அந்தப் பணி பாதியிலே நிற்கின்றது. அவர்கள் கொடுத்த ஆய்வறிக்கையை முழுமையாகச் செய்தால், இனி வருங்காலத்திலே நம்மை மழை வெள்ளத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2-55

பாதாள சாக்கடைத் திட்டம். 2009-லே தொடங்கப்பட்ட தாம்பரம் பாதாள சாக்கடைத் திட்டம் இதுவரை முடிவடையாத நிலையில் இருக்கின்றது. நாங்கள் விஜயவாடாவில் கொண்டு வரப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டத்தை ஆய்வு செய்து வந்தோம். இப்போது அந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் தாம்பரத்திலே தொய்வாக நடைபெறுகிறது. இந்த ஆண்டு கடைசிக்குள் அந்தத்

திட்டம் முடிவு பெறும் என்று அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே குறிப்பிட்டிருப்பதை நான் படித்துப் பார்த்தேன். பதில் சொல்லியிருக்கின்றார்கள். அங்கு Sewage Treatment Plant தரமானதாக இல்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல, கிழக்குத் தாம்பரம், மேற்கு தாம்பரம் என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. மேற்கு தாம்பரத்தில் 90 சதவிகித பணிகள் முடிந்துவிட்டன. அதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். கிழக்குத் தாம்பரத்தில் metro water கிடையாது. ஒப்பந்தம் செய்ய தகுதியில்லாத ஓர் ஒப்பந்தக்காரரிடத்திலே அந்தப் பணி இருக்கிறது. அவரிடமிருந்து அதை மாற்றித் தர வேண்டுமென்று அன்போடு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பழைய பேருந்து நிலையம் தாம்பரத்திலே இருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தைப் பொறுத்தவரையில், அதுதான் தாம்பரம் பகுதிக்கான பேருந்து நிலையம். அது தாம்பரத்தின் மையப் பகுதியிலே இருக்கிறது. இப்போது அங்கு parking-க்கு வசதி ஏற்படுத்துவதற்காக tender விடப்பட்டிருக்கிறது. முன்பு நகராட்சிக்கு வருமானம் இல்லை என்ற நிலையிலே கடைகளைக் கட்டி, வாடகைக்கு விட்டார்கள். அந்த ஒப்பந்தத்தை cancel செய்துவிட்டு பழைய பேருந்து நிலையமாக மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கோரிக்கை வைக்கிறேன். ஜி.எஸ்.டி. சாலையிலேயிருந்து முத்துரங்கன் சாலை வழியாக மீண்டும் ஜி.எஸ்.டி. சாலைக்கு வருவதற்குண்டான வழி இருக்கிறது. ஆகவே, வாகன நிறுத்தத்திற்கான டெண்டரையும் cancel செய்துவிட்டு, அந்தக் கடைகளையும் அப்புறப்படுத்திவிட்டு பொதுமக்களுக்கு வசதிகள் செய்து தர வேண்டும். ஏனென்றால் மிகவும் costly place. தாம்பரத்தில் சென்னையைவிடக் கூடுதலாக விலை உள்ளது. அதேபோல் மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ளது. இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பேருந்திலே வந்து காலையிலே இறங்குபவர்களுக்கு bathroom வசதியே இல்லை. ஆக, அதை உடனடியாக இந்த அரசு செய்து தர ண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நம்முடைய தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது மத்திய பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான 5 ஏக்கர் இடத்தை பேருந்து நிலையம் அமைப்பதற்கு

air force- இடமிருந்து உங்களுக்குப் பெற்றுக் கொடுத்தோம். நீங்கள் அதைப் பயன்படுத்தவில்லை. உடனடியாக அந்த 5 ஏக்கர் நிலத்தை தாம்பரம் நகராட்சிக்கு நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே அரசுக்குச் சொந்தமான 34 ஏக்கரில் Narendra place, Civilians quarters இருக்கிறது. அது ஜி.எஸ்.டி. ரோட்டிலேயே இருக்கிறது. அந்த 34 ஏக்கர் இடத்தில், அரசுக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலத்தை நீங்கள் பெற்று நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று நினைக்கிறேன். 1996-லேயிருந்து நான் follow செய்கிறேன். முதலிலே, மறைந்த திரு. என்.வி.என். சோமு அவர்கள் Defence Minister ஆக இருந்தார். பிறகு, திரு. முலாயம் சிங் யாதவ் Defence Minister ஆக இருந்தார். அதன் பின்னர் திரு. ஜார்ஜ் பெர்னான்டஸ் Defence Minister ஆக இருந்தபோது அந்த இடத்தைக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னார். அதற்குப் பின்னால் நம்முடைய திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் Defence Minister ஆக இருந்தார். அதற்குப் பின்னர் திரு. ஏ.கே. அந்தோணி Defence Minister ஆக இருந்தார். நாங்கள் எடுத்த முயற்சி என்பது சாதாரணம் இல்லை. தலைவர் கலைஞர் அவர்களால் நேரடியாக திரு. மன்மோகன் சிங் அவர்களிடத்திலே மனு கொடுக்கப்பட்டு, அந்த இடத்தைப் பெற்றுத் தந்தோம். அதை இந்த அரசு பயன்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மழை வெள்ளம் வந்ததைப்பற்றி குறிப்பிட்டார்கள். அப்போதுகூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க ஒரு மாதம் நானும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களெல்லாம் அங்கிருந்து பணியாற்றினோம். தாம்பரத்தில்தான் இருந்தோம். தாம்பரத்தில் நகராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் Chairman ஆக இருந்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், அவர் ஒரு

பெரிய தொழிலதிபர். அந்தப் பகுதியில் அவர் வசிக்கும் building எல்லாம் பார்த்தோம். அங்கு இருக்கக்கூடிய பல ஆக்கிரமிப்புகளை அப்போது எடுத்தோம். அதற்குப் பின்னாலும்கூட பெரு வெள்ளம் வரக்கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையாக என்ன பணி செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். தாம்பரத்தில் நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைக்காக ரூ.246 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உபரி கால்வாய் அமைக்க பொதுப் பணித் துறைமூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 1,000 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் கட்டப்பட்டு வருகிறது. அது உறுப்பினருக்குத் தெரியும். 90 சதவிகிதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன .

பிற்பகல் 3-00

பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருக்கும் அதுகுறித்து நன்றாகத் தெரியும். பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தளவில், அவர்களுடைய கடந்த ஆட்சியிலே 55 பாதாள சாக்கடைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால், அவற்றில் 20 திட்டங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதில் ஒரேயொரு திட்டத்தை மட்டும் தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்ற முடிந்தது. மீதமுள்ள 35 திட்டங்களில் 18 திட்டங்களுக்கு மட்டும் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட நிலையில், 17 திட்டங்கள் கைவிடப்பட்டன. தாம்பரம் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டத்தின் மதிப்பீடு ரூ.160 கோடியே 97 இலட்சம் ஆகும். இத்திட்டப் பணியானது, 4 சிப்பப் பணிகளாகப் பிரிக்கப்பட்டு, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 30-11-2009-ல் தகுதியில்லாத ஒப்பந்ததாரருக்கு உத்தரவு வழங்கப்பட்டது. கழிவுநீர் அகற்றும் நிலையங்கள் அமையும் இடங்கள் குறித்து அவசர கோலத்தில் தவறான முடிவு எடுக்கப்பட்டது. அதுகுறித்தெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதையும்கூட, சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். மீண்டும் 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் திட்டத்தில் நிலவிய குளறுபடிகளையெல்லாம் பனிபோல விலகச் செய்து, பணிகளை முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. இதன் பயனாக, மேற்கண்ட திட்டப் பணிகள் 4 சிப்பப் பணிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு சிப்பப் பணி முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 சிப்பப் பணிகளுள்

ஒன்றில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவுள்ள இடத்தில் பணி மேற்கொள்ள முடியாமல், தனியாரால் பெறப்பட்ட நீதிமன்ற தடையாணையை நீக்கம் செய்து, அங்கிருந்த 7 குடும்பத்தினருக்கு மாற்று இடம் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, 95 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிப்பம் 2 பணியின்கீழ் மேற்கு தாம்பரம் பகுதியில் கழிவுநீர்க் குழாய் அமைக்கும் பணி, 90 சதவிகிதம் முடிக்கப்பட்டு, நெடுஞ்சாலைக்குச் சொந்தமான சாலைகளில் மட்டும் பொதுமக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாவண்ணம் இரவு நேரத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 1 சிப்பப் பணியைப் பொறுத்தவரையில், கிழக்கு தாம்பரம் பகுதியில் கழிவுநீர்க் குழாய் அமைக்கும் பணியில் எதிர்பாராதவிதமாக பூமிக்கடியில் கடினப் பாறைகள் அமைந்துவிட்டதால் எதிர்பார்த்த அளவிற்கு பணியில் முன்னேற்றத்தைக் கொண்டுவர இயலாத நிலை உருவான காரணத்தினால், மிகுந்த கவனத்துடன் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, அங்குலம் அங்குலமாக பணி நடைபெற்று வருகிறது. நாளதுவரையில் இந்தச் சிப்பப் பணியில் 68 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளும் வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவர, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போது 2 இலட்சம் மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்து நிலையத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். அவர் தாம்பரம் நகராட்சியின் சேர்மனாக இருக்கும்போதிலிருந்தே இந்தப் பணிக்காக முயற்சி செய்து வருகிறார். தாம்பரம் நகராட்சி, சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 20.72 சதுர கிலோ மீட்டராகும். 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள்தொகை 1,74,784 ஆகும். (குறுக்கீடு) இதுகுறித்துதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இந்தப் பேருந்து நிலையம் அமைந்த இடத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள் இல்லையா? (குறுக்கீடு) அந்த இடம் நம்மிடத்தில் ஒப்படைக்கப்படவில்லை. மாண்புமிகு

உறுப்பினர் அது குறித்துச் சொன்னார்கள். இதுவரையிலும் விமானப் படையினுடைய இடம் வரவில்லை. (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். இதற்கு மாற்றுக்கருத்து வேறேதும் இருந்தால் சொல்லுங்கள். வளர்ந்துவரும் இந்நகராட்சியின் எதிர்காலத் தேவையை முன்னிட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.495 இலட்சம் செலவில் தாம்பரம் கடப்பேரி கிராமம் புல எண்கள் 143/1, 143/2 மற்றும் 144-ல் அடங்கிய 3.77 ஏக்கர் பரப்பளவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு, கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. அப்பேருந்து நிலையம் 19 பேருந்து நிறுத்துமிடங்கள், 30 எண்ணிக்கையிலான கடைகள், உணவு, பாதுகாப்புப் பெட்டக அறைகள், தேவையான கழிப்பிட வசதி, 2 உயர் மின் கோபுர விளக்குகள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகளுடன் இயங்கி வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் புதிய பேருந்து நிலையம் அமைக்கவேண்டுமென்று கோரிய அந்த இடமானது நரேந்திர வளாகம் என அழைக்கப்படும் சுமார் 34.76 ஏக்கர் பரப்பளவில் அமைந்த இந்திய விமானப் படைக்குச் சொந்தமான இடமாகும். இந்த வளாகத்தின் ஒரு பகுதியான 13.76 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை நகராட்சி வசம் பெற்று, பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு உறுப்பினர் கோரினார். இந்த புதிய பேருந்து நிலையம் அமைக்கத் தேவையான இடத்தை இந்திய பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறுவதற்கு மாநில அரசு தொடர்ந்து கோரி வருகிறது. இதுவரையில் அந்த நிலத்தை அவர்கள் கொடுக்கவில்லை. இதுதான் காரணம். அதனால் தற்போது இயங்கிவரும் பேருந்து நிலையம் போதுமான வசதிகளுடன் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அன்போடு சொல்லிக்கொள்கிறேன். ** தனியாகக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறையில் பேசச் சொன்னால், நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே, (குறுக்கீடு) இன்னும் எவ்வளவு நேரம் பேச வேண்டுமென்றாலும், நான் பேசுவேன். (குறுக்கீடு) ** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படிக்கிறார். ** (குறுக்கீடு) அந்தக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கருத்தை நான் விட்டு விடுகிறேன். நான் அந்த சப்ஜெக்ட்டை விட்டு விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் ** பற்றி அவ்வாறெல்லாம் சொல்லாதீர்கள். அதுவெல்லாம் தவறு. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *அது தவறுதான். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** பற்றி அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *சரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை விட்டு விடுங்கள். (குறுக்கீடுகள்) நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். அவ்வளவுதான். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 3-05

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரும் chairman-ஆக இருந்திருந்தால் அதிகாரிகள் சொல்வதை கேட்டுத்தான் வேலை செய்யமுடியும். நானும் chairman-ஆக இருந்திருக்கிறேன். Chairman-ஆக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும் அதிகாரிகள் மூலமாகத்தான் நாம் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முடியும். நேரடியாகச் சென்று நாம் எதையும் செய்ய முடியாது. எல்லாவற்றையும் அதிகாரிகள் மூலமாகத்தான் செய்ய முடியும். இன்னொன்று 5 ஏக்கர் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நான் 13.7 ஏக்கர் என்று சொல்லியிருக்கிறேன். அதிலே வித்தியாசம் இருக்கிறது. அதில், ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால், அது கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தமிழ்நாட்டில் பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களை நேரடியாகச் சென்றும் சந்தித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அருமை*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அண்ணன் அவர்கள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பிரதமரை மட்டுமல்ல, மத்திய அமைச்சரவையில் உள்ள ஒவ்வொரு துறையின் அமைச்சர்களையும், எங்களையும் உடன் அழைத்துச் சென்று சந்தித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஏதாவது ஒரு பிரச்சினை என்றால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தை ஒட்டியிருக்கின்ற சிட்லப்பாக்கம் பகுதி இன்றைக்கு நகராட்சி அளவிற்கு வளர்ந்திருக்கிறது. அந்தப் பகுதியில் குடிதண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அரசு அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கு தாம்பரத்திலிருந்து கிழக்கு தாம்பரம் செல்வதற்கும், ஜி.எஸ்.டி. சாலையைக் கடப்பதற்கும், நடந்து செல்வதற்கும் மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கும் வழியில்லை. அதை உடனடியாக ஏற்படுத்தித் தருவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளச்சேரி சாலை அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. Air force சாலையில், ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பக்கத்தில் இருக்கின்ற Christian College வரைக்கும் உள்ள குறிப்பிட்ட இடத்தில் மட்டும் அந்தப் பணிகள் நடைபெறவில்லை. அந்தச் சாலையை அகலப்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

Eastern By-pass சாலை பாதியிலே நிற்கின்றது. அதை உடனடியாக முழுமைப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தாம்பரத்தில் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டது. ஜி.எஸ்.டி. சாலையிலிருந்து முடிச்சூர் சாலையை இணைக்கின்ற இடத்தில் சர்வீஸ் லைன் போடும் பணி 6 ஆண்டுகளாக தொய்வில் இருக்கின்றது. அதை முடித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்குத் தெரிந்தவரையில், இன்றைக்கு ஒரு நாளைக்கு குறைந்தது 8 இலட்சம் பேருக்குமேல் தாம்பரத்திற்கு வந்து செல்கின்றார்கள். எனவே, Bus stand-லிருந்து Railway station செல்வதற்கும், ஜி.எஸ்.டி. சாலையைக் கடப்பதற்கும், ஒரு escalator அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குத் தாம்பரம் Railway Station-லிருந்து Christian College-க்கு செல்வதற்கு, வேளச்சேரி சாலையைக் கடப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதற்கும் ஒரு escalator அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம்-சண்முகம் சாலை என்பது மிகப் பெரிய சாலையாகும். மிகப் பெரிய சாலை மட்டுமல்ல, ரங்கநாதன் தெருவுடன்கூட ஒப்பிட முடியாத அளவிற்கு எந்த நேரமும் ஒரு நாளைக்கு 50,000 பேர் வந்து செல்லக்கூடிய இடமாகும். கடந்த முறை அந்த மேம்பாலத்தைக் கட்டுகின்றபோது பல கோரிக்கைகள் வந்தன. அதாவது அந்த மேம்பாலத்திலிருந்து வருபவர்கள் சண்முகம் சாலையில் திரும்ப வேண்டுமென்ற கோரிக்கைகளை வியாபாரிகள் வைத்தார்கள். கடந்த தேர்தலிலே நான் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கு அதுவும் ஒரு காரணமாகும். வியாபாரிகளுடைய மனம் மிகவும் கஷ்டப்பட்டது. மேம்பாலத்திலிருந்து சண்முகம் சாலை திரும்புவதற்குண்டான முயற்சியை அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சி சாலைகள் பாதி Highways-லும், பாதி நகராட்சியிலும் இருக்கின்றன. திருநீர்மலை சாலை, பேரூராட்சி எல்லைக்குள் இருக்கின்றது, Highways-லும் இருக்கின்றது. தாம்பரம் நகராட்சியில் உள்ளதை Highways எடுத்துக்கொள்ள வேண்டும். பாரத மாதா தெருவை Highways-ல் இணைக்க வேண்டும். தாம்பரத்தில் உள்ள காந்தி சாலையின் ஒரு பாதி, ஜி.எஸ்.டி. சாலையிலிருந்து கக்கன் சாலை வரைக்கும் Highways சாலையாகும். கக்கன் சாலையிலிருந்து முடிச்சூர் வரைக்கும் இணைக்கின்ற அந்தச் சாலைப் பணியையும் Highways இலாகா எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெருங்களத்தூர் மேம்பாலம். தாம்பரத்தையொட்டி ஜி.எஸ்.டி. சாலை வழியாக பெருங்களத்தூர் செல்கின்ற மேம்பாலப் பணிகளை இரயில்வே இலாகா முடித்துவிட்டார்கள்.

இன்றைக்கு நம்முடைய Highways *இலாகா அந்தப் பணியை எடுத்துக்கொள்ளவில்லை, டெண்டர் விடவில்லை. இரயில்வே இலாகா முடிக்கின்ற சூழ்நிலையில் உள்ளது. அதை உடனடியாக முடித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் விதி 110-ன்கீழ் தாம்பரம்-முடிச்சூர் சாலையை அகலப்படுத்துவேன் என்ற வாக்குறுதியை இதே அவையில் கடந்த முறை கொடுத்தார்கள். அந்தப் பணிகள் இன்னமும் நடைபெறவில்லை. அதற்குண்டான பணிகள் துரிதமாக நடைபெற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரத்தில் வீடு இருந்தாலும் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நான் சென்று வருவேன். அப்படி சென்று பார்த்தபோது, இன்றைக்கு போக்குவரத்து நெரிசல் எங்கு அதிகமாக இருக்கின்றது என்று சொன்னால், முதலில், மேற்கு தாம்பரம். அடுத்தது, வண்டலூர், கூடுவாஞ்சேரி. இந்த இரண்டு பகுதிகளுக்கும் தனிக்கவனம் செலுத்தி, அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-10

அதுபோல வேங்கடமங்கலம் திட்டம் என்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது. தாம்பரம் கன்னரடிபாளையத்தில் இருக்கின்ற குப்பைகள் முழுமையாக வேங்கடமங்கலத்திற்கு கொண்டுசெல்லப்படவில்லை. அப்படி கொண்டுசெல்லப்பட்டால், அங்கே உள்ள 5 ஏக்கர் நிலம் நம்முடைய நகராட்சிக்குப் பயன்படும் என்பதை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சிட்லப்பாக்கம் பகுதியிலே 8-வது வட்டத்திலே மின்சார சுடுகாடு இருக்கிறது. அது சரிவரச் செயல்படவில்லை. தாம்பரம் நகராட்சிக்கென்று ஆட்டுத்தொட்டி ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். முடிச்சூர் என்பது நகரப் பஞ்சாயத்து அளவுக்கு இன்றைக்கு வேகமாக வளர்ந்திருக்கிறது. அங்கு 18,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். ஆகவே முடிச்சூர் மற்றும் அகரம் பஞ்சாயத்துகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமநத்தம் பட்டா. கடந்தமுறை நான் தாம்பரம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தாம்பரம் தொகுதியில் மட்டும் 35,000 பேருக்கு பட்டா வழங்கியிருக்கிறோம். இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள்தான் தனியாக ஒரு அலுவலகமே தாம்பரத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஆனால், அந்த அலுவலகம் இந்த ஓராண்டிலும் சரி, கடந்த 5 ஆண்டுகளிலும் சரி, பொது மக்களுக்குத் தேவையான எந்தப் பணியையும் செய்யவில்லை. தாம்பரம் நகரத்தில் வசிக்கின்ற மக்களுக்கு கிராமநத்தம் பட்டா வழங்குவதற்கான முயற்சியை வேகப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் தாம்பரத்திற்கு ஒரு underground cable . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. இராஜா, தாம்பரத்தை விட்டு வெளியே வரச்சொல்லி உறுப்பினர்களே சொல்கிறார்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *இதற்குமேல் எவ்வளவு சீக்கிரம் வருவது.* Underground cable-*க்கு நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியும் கொடுத்தார்கள். ஒரு கோடி ரூபாய் நிதியளித்தும் அரசு அதைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்ற வருத்தம். ஒரு கோடி ரூபாய் கொடுத்து அதற்கு மதிப்பீடு தயாரித்து அன்றைக்கு சி.பி. சிங் என்ற ஓர் அதிகாரி மின்சாரம் எவ்வளவு வேகமாக வேலை செய்யுமோ, அதைவிட வேகமாக வேலை செய்தார்.* Underground cable-*ஐ தாம்பரம் நகராட்சிக்கு அமைத்துத்தர வேண்டுமென்று எதிரிலே அமர்ந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோல, சென்னை மாநகராட்சியை ஒட்டியிருக்கின்ற முகலிவாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், ஆலந்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கும்* underground cable *அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

பாதாள சாக்கடைத் திட்டம். செம்பாக்கம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பீர்க்கன்கரணை, பெருங்களத்தூர் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கோரிக்கையாக வைக்க கடமைப்பட்டுள்ளேன். சென்னை மாநகராட்சியை ஒட்டியிருக்கின்ற முகலிவாக்கம் மணப்பாக்கம், நந்தம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை என்பது காஞ்சிபுரம் மாவட்டத்திலிருக்கின்ற நியாய விலைக் கடைகளுக்குப் பொருட்கள் வழங்குவதற்கான பண்டகசாலை. அந்தப் பண்டகசாலையின் அலுவலகம் எங்கே இருக்கிறது என்று கேட்டால், பிராட்வேயில் இருக்கிறது. அதற்கான கிடங்கு எங்கே இருக்கிறது என்று கேட்டால், தண்டையார்பேட்டையில் இருக்கிறது. நாங்கள் நியாய விலைக் கடைகளுக்கு ஆய்வு செய்யச் செல்லும்போது, ஏன் எடை குறைவாக இருக்கிறது என்று கேட்டால், லாரியிலே எடுத்துவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். எங்கே வேண்டுமானாலும் கிடங்கை அமையுங்கள். ஆனால், தாம்பரம் தொகுதியில் இந்தக் கிடங்கை அமைத்தால் சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) தாம்பரம் தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகளை போதுமான அளவுக்குப் பேசிவிட்டீர்கள். உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தைச் சுற்றியுள்ள ஏரிகள் அனைத்தும் தூர்வாரப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். 21-வது வட்டத்தில் TASMAC கடை ஒன்று உள்ளது. அதன் ஒரு பக்கத்தில் பாரத் பொறியியல் கல்லூரியும் இன்னொரு பக்கத்தில் சியோன் மெட்ரிகுலேசன் பள்ளியும் அமைந்துள்ளன. கல்லூரியில் 10,000 மாணவர்கள், இன்னொரு பக்கம் பள்ளியில் 10,000 மாணவர்கள் படிக்கின்ற இடத்திலே பெரிய தொந்தரவாக இருக்கிறது; அதை உடனடியாக மாற்றித் தரவேண்டுமென்று மக்கள் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். ஆகவே, அதை உடனடியாக மாற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேற்கு தாம்பரத்திற்கு ஒரு விளையாட்டு மைதானம் வேண்டும். இன்றைக்கு இளைஞர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 7 ஏக்கர் நிலம் இருக்கிறது. அரசாங்கம் சொல்லும் சட்டதிட்டங்களுக்குள் அந்த இடம் இருக்கிறது. அங்கே ஒரு விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல RDMA அலுவலகம் ஒன்று தாம்பரத்திலே இருக்கிறது. அந்த அலுவலகத்திற்கு போர்டுகூட இல்லை. அந்த RDMA அலுவலகத்தை நல்ல இடத்தில் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-15

சிட்லப்பாக்கத்தில் அரசாங்கம் சார்பாக ஒரு Guest House கட்டப்படுகிறது. அதைப்பற்றிப் பேசினால் கோபம் வரும். எனவே, ஊரக வளர்ச்சித் துறை அதில் தனிக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். இராஜா, இதோடு உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியின் உறுப்பினர்களே, பேசியது போதும், போகலாம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன். என்னிடம் ஒரே ஒரு தாள் மட்டும்தான் இருக்கிறது. 1920 ஆம் ஆண்டு நகராட்சிச் சட்டம். அந்தச் சட்டத்தில் உள்ள ஷரத்துகள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அந்தச் சட்டம் ஆய்வு செய்யப்பட வேண்டும். மத்திய அரசாங்கம் ஓர் ஆய்வறிக்கையை அரசாங்கத்திற்குக் கொடுத்தது. 1990 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை ஆய்வு செய்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் மறுபடியும் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு என்னால் பல உதாரணங்களைச் சொல்லமுடியும்.

இன்னொரு முக்கியமான விஷயம் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இப்போது ரோடு போடுகிறார்கள். அம்மாதிரி ரோடு போடும்போது வீடுகள் எல்லாம் பள்ளத்தில் போய்விடுகின்றன. ரோடெல்லாம் மேடாக இருக்கின்றன. இம்மாதிரி இருப்பதால் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சட்டம் என்ன சொல்கிறது என்றால், இருக்கிற ரோட்டை அகற்றிவிட்டு, புதிய சாலைகள் போடவேண்டும் என்று சொல்கிறது. அப்படிப் போடாததால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். யாரோ ஒரு சிலர் அனுபவிப்பதற்காக பழைய சாலையை அகற்றாமல் ரோடு போடுவதால் மழைக்காலத்தில் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நினைத்தால்தான் இது முடியும். அதனால்தான் இதை உங்களிடம் சொல்கிறோம்.

தமிழ்நாட்டில் எவ்வளவு காலிப் பணியிடங்கள் இருக்கின்றன என்று தெரியுமா? உதாரணத்திற்கு செம்பாக்கம் நகராட்சி. ஒரு R.I. *வரவேண்டும் என்றால், ஆவடியிலிருந்து அவர் வரவேண்டும்.* Engineer *வரவேண்டும் என்றால், அனகாபுத்தூரிலிருந்து அவர் வரவேண்டும்.* TPI *அலுவலகத்திலிருந்து வரவேண்டுமென்றாலும்,* S.E. *வரவேண்டும் என்றாலும் செங்கல்பட்டிலிருந்து வரவேண்டும். நகராட்சியிலுள்ள ஒரு அலுவலகத்திற்கு அலுவலர்கள் வரவேண்டும் என்றால், ஐந்து ஊர்களிலிருந்து வரவேண்டும். நிருவாகம் எப்படி நடக்கும்? அதை உங்கள் கவனத்திற்கே விட்டுவிடுகிறேன். இதற்குமேல் நான் பேசமாட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரே ஒரு நிமிடத்தில் என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன். உள்ளாட்சித் துறையில் நிதி எவ்வளவு முக்கியம் என்று உங்களுக்குத் தெரியும். ஐந்து வருடங்களுக்கு முன்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்களால் நிதி கொடுக்கப்பட்டு, மாடம்பாக்கத்தில் ஒரு கல்யாண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. பம்மல் மற்றும் மாடம்பாக்கத்திற்கு அவரால் ஒரு கோடி ரூபாய் நிதி கொடுக்கப்பட்டது. அந்தப் பகுதியைச் சுற்றி ஏழையெளிய மக்கள் வாழ்கிறார்கள். இதுவரையிலும் அந்தக் கட்டடம் திறக்கப்படவில்லை. அதன் பக்கத்தில், ஆதி திராவிடர் விடுதி கட்டி முடிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வாடகை வீட்டில் ஒரு* room-*ல் 10 பேர் வசிக்கிறார்கள். கட்டடம் கட்டி முடிக்கவில்லையென்றால் பரவாயில்லை, கட்டி முடிக்கப்பட்டதை ஏழையெளிய மக்களின் பயன்பாட்டிற்குக் கொடுக்க வேண்டியது யாருடைய பொறுப்பு என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ்.ஆர். இராஜா, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *நான் எவ்வளவு சீக்கிரம் முடிக்கிறேன் என்று பாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலை அமைப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். சாலைகள் மென்மேலும் மேடாகப் போடப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில் சாலைகள் போடப்பட்டன. சென்னை பகுதியில் சாலைகள் எவ்வாறு போடப்பட்டன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். Milling செய்து, பழைய சாலையை அகற்றிவிட்டு, மழைநீர் வடிகால் அமைத்து, மழைத் தண்ணீர் வடிந்து செல்லக்கூடிய வகையில் chamber கட்டி சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அப்படி அமைக்கப்பட்ட சாலைகளில்கூட, மிகப்பெரிய மழை, வெள்ளம் வந்தபோது சில இடங்களில் கிட்டத்தட்ட 20 அடிக்கு மேலும் தண்ணீர் நின்றது. அப்போதுகூட அந்தச் சாலைகளில் சிறிய சேதம்கூட ஏற்படாத வகையில் நல்ல தரமான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம்பரத்தில் எந்தப் பகுதியில் அப்படி இருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டினால், கண்டிப்பாக அந்தச் சாலைகளை milling செய்து, புதிய சாலைகள் போட ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். இராஜா, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மன்னிக்க வேண்டும். நான் தாம்பரம் பகுதியைப் பற்றி பேசி முடித்துவிட்டேன். தற்போது இந்தமாதிரியான பிரச்சினைகள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன என்று நான் சொல்லவருகிறேன். இது நியாயமான பிரச்சினையில்லை என்று சொன்னால், நான் பேசாமல் உட்கார்ந்து விடுகிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். இராஜா, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர் திட்டம் என்பது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இம்மாதிரி பிரச்சினை இருக்கிறது என்று சொல்கிறார். எந்த இடத்தில் அவ்வாறு இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். எங்கேயாவது ஒரு பகுதியில் அவ்வாறு இருக்கலாம். தமிழ்நாடு முழுவதும் அப்படியில்லை. சென்னையில் நான் குறிப்பிட்டதுபோல் செய்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) சாலைகள் பற்றி நான் சொல்லிவிடுகிறேன்.

சரித்திர சாதனையாக, எங்களுடைய துறையிலே மட்டும் பேரூராட்சி, நகராட்சி, ஊரக வளர்ச்சி, மாநகராட்சி போன்றவற்றில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் இதுவரையிலும் 17,972 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு 65,302 கிலோ மீட்டர் சாலைகள் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லா பகுதிகளிலும் சாலைகள் வேண்டுமென்று கேட்பதால் நாங்கள் சாலைகளைப் போடுகிறோம். நீங்களும் கேட்டால் உங்கள் பகுதிக்கும் சாலைகள் போடப்படும். அதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக பாலங்களையும், சாலைகளையும் சிறப்பான முறையில் அதிகமாகக் கட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கேட்கிறார், ஏதாவது ஒரு இடத்தில் பிரச்சினை இருந்தால் குறிப்பிட்டுச் சொன்னால், அது உடனடியாகத் தீர்த்து வைக்கப்படும் என்று. இப்போது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் பகுதிகளில் சாலைகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஊராட்சித் துறையில் பார்த்தீர்கள் என்றால் 1,03,000 சாலைகள்தான் இருந்தன. மாண்புமிகு புரட்சித் தலைவியின் 5 ஆண்டு கால ஆட்சியில் 45 ஆயிரம் சாலைகள் புதியதாக அமைக்கப்பட்டு, இன்றைக்கு கிராமங்களில் உள்ள சாலைகள் எல்லாம் மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இதுபோல் இந்தியாவிலே வேறு எங்கும் இல்லை. ஆகவே, உறுப்பினர் அவர்கள் கூறியது தீர்த்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி சார்ந்த பிரச்சினைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதில், தாம்பரம் தொகுதிக்கு ஒரு கிடங்கு கட்டித் தர வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை வைத்தார். கோரிக்கை வைத்தவர், அந்தக் கோரிக்கையோடு நிறுத்தாமல், தண்டையார்பேட்டையில் கிடங்கு இருப்பதனால், அங்கிருந்து வருகின்ற பொருள் குறைந்துவிடுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். அது தவறான குற்றச்சாட்டு. அதாவது, எல்லா ஆட்சிக் காலத்திலும் என்ன முறை என்று சொன்னால், அந்தக் கிடங்கிற்கு Incharge Clerk, Movement Clerk இருப்பார்கள். இவர்களுடைய முன்னிலையில்தான் எல்லா லாரிகளிலும் சரக்கு ஏற்றப்படுகிறது, இறக்கப்படுகிறது. இதன் அடிப்படையில்தான் தாம்பரத்திற்கும் அந்தப் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைய தினத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் மாதவரத்தில் மிகப் பெரிய ஒரு கிடங்கை அறிவித்திருக்கின்றார்கள். எங்கள் துறைக்குச் சொந்தமான இடம் அங்கு இருக்கின்றது, அதனால் அங்கே 25 கோடி ரூபாய் செலவில் கிடங்கு கட்டப்பட இருக்கின்றது. அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம்பரத்தில் இருக்கும் இடத்தை identify செய்தால், அந்த இடத்தில் உடனடியாக கிடங்கு கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலான ஒரு தகவலை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், 12 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுடன் இருந்த கிடங்குகள் 21 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகளாக மாற்றப்பட்டன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, உங்கள் உரை நீண்டுகொண்டே போகின்றது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை குறித்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் புதிதாகக் கட்டப்பட்ட அனைத்து ஆதி திராவிடர் நல விடுதிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆதி திராவிடர் நல விடுதிகள் இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை என்று சொன்னார். அதற்கு துறை அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆதி திராவிடர் விடுதியானது தாம்பரம் தொகுதி, அகரம் பஞ்சாயத்தில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் நடவடிக்கை எடுக்கின்றேன் என்று கூறிவிட்டார் அல்லவா, அந்தப் பிரச்சினையை விடுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த இலாகாவிற்கு மட்டும் சொல்லவில்லை. இந்த அமைச்சரவையில் எந்த இலாகாவிற்கு, எந்த அலுவலகத்திற்கு, எவ்வளவு இடம் வேண்டுமென்றாலும் அதற்கான அந்த அரசாங்க இடத்தைப் பார்த்துத் தருவது என்னுடைய பொறுப்பு என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் கடந்த முறை தி.மு.க.*

ஆட்சியில், அரசு இடம் 900 ஏக்கர் இருக்கின்றது என்பதை இந்தச் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கின்றேன் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, இதுதான் கடைசி* point. *சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைமூலம் நடக்கின்ற கூட்டத்திற்கான* agenda *வருவதில்லை. அது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வர வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, அது* Local Body-*யா?*

திரு. எஸ்.ஆர். இராஜா: *ஆமாம்,* Local Body-*தான். அது ஒன்றும் இல்லை, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்ப வேண்டும் என்றுதான் சொல்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. இராஜா, இது பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேசுகிறேன்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ட்ரல், எக்மோர், தாம்பரம், திருச்சி இப்படி எங்கெல்லாம் பெரிய இரயில் நிலையங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் நடக்கின்ற* Board Meeting-*ல் உள்ளாட்சித் துறையின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்கு சட்டம் இருக்கின்றது. உதாரணத்திற்கு விமான நிலையத்தில் நடைபெறும் கூட்டங்களில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்கின்றார்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள் அதில் கலந்துகொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிமை பெற்றுத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கின்றேன்.*

உள்ளாட்சித் துறையில், குடியிருப்புகள் பகுதியில் கல்யாண மண்டபம், மருத்துவமனை எல்லாம் கட்டியிருக்கின்றார்கள். தமிழ்நாடு முழுவதும் குடியிருப்புப் பகுதிகளில் commercial usage-*க்கு அனுமதி வழங்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். மக்கள் சாசனம் என்பதை நகராட்சியிலிருந்து தர வேண்டும். அதையெல்லாம்*

நாங்கள் கொடுத்தோம், இப்போது அதை நீங்கள் கொடுக்க வேண்டும். இப்போது ஆந்திர முதல்வர் அவர்கள் ஒரு சட்டம் போட்டிருக்கின்றார். என்ன சட்டமென்றால், 1100 என்ற தொலைபேசி எண்ணிற்கு பொதுமக்கள் யாராவது புகார் செய்தால், அந்தப் புகாரை உடனடியாக நிவர்த்தி செய்வேன் என்று சொல்லியிருக்கின்றார். அதுபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது மாநிலத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சிகளில் போடும் தீர்மானங்கள் வெளிப்படையாக இருக்க வேண்டும். வெளிப்படைத்தன்மை உள்ளாட்சிகளில் இல்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல், உண்ணும் அரிசியில் பிளாஸ்டிக் கலப்பதாகச் சொல்கிறார்கள். முன்னர், Food Inspector என்பவர்கள் அனைத்து முனிசிபாலிடிகளிலும் இருந்தார்கள். இப்போது, Food Inspector என்பவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்பணி வேறு இலாகாவிற்கு மாறி விட்டதா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) உடனடியாக அந்தப் பணியிடங்களுக்கு அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நகராட்சியில் . . .

பிற்பகல் 3-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முக்கியமான பொருள் குறித்துப் பேசியுள்ளார், பிளாஸ்டிக் அரிசி குறித்த பிரச்சினை, நமது மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் இருக்கக்கூடிய (Food Safety) உணவுப் பாதுகாப்புத் துறையின்கீழ் வருகிறது. நேற்றுகூட உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்மூலம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து அரிசி வியாபாரிகள் மற்றும் உரிமையாளர்களை அழைத்து, மிகப் பெரிய கூட்டம் நடத்தப்பட்டது. எங்களிடம் 32 Designated Officers—D.Os. மற்றும் 450 Food Safety Officers இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் களத்தில் இறங்கி 3,124 கடைகளில் ஆய்வு செய்து, அவர்களால் samples எடுக்கப்பட்டன. இவற்றில் ஒரு sample-லிலும் பிளாஸ்டிக் அரிசி இருப்பது உறுதி செய்யப்படவில்லை. எனவே மாமன்ற உறுப்பினர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது,

பிளாஸ்டிக் அரிசி என்பது தமிழ்நாட்டில் எங்கும் கிடையாது. எனவே, தயவுசெய்து வீண் வதந்திகளை நம்ப வேண்டாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏதேனும் புகார் வந்தாலும்கூட, களத்தில் இறங்கி உடனடியாக ஆய்வு மேற்கொள்ள அலுவலர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்* Food Inspector *என்று சொன்னது, இந்த ஒரு காரணத்திற்காக மட்டும் அல்ல. பிளாஸ்டிக் அரிசி இருக்கிறதா, இல்லையா என்கின்ற பிரச்சினையை விட்டுவிடுங்கள். அனைத்து உணவுப் பொருட்களும் தரமாக* (quality) *இருக்கின்றனவா, இல்லையா என்று பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வெளிநாடுகளில் எல்லாம் நாம் அனைத்தையும் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிட்டுவிடலாம். வசதி படைத்தவர்கள்* five star hotels-*ல் சாப்பிட்டுவிடுகிறார்கள். ஆனால், நம் நாட்டில் ஏழை, எளிய மக்கள், யார், எந்த உணவில் கலப்படம் செய்கிறார்கள் என்பது தெரியாமல், உணவு உண்கிறார்கள்; கஷ்டப்படுகிறார்கள். எல்லாவற்றிலும் கலப்படம் செய்கிறார்கள். அதை நிவர்த்தி செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டில் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிடலாம் என்று சொல்கிறார். கண்ணை மூடிக்கொண்டு எங்கேயும் சாப்பிட முடியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. இராஜா, அரை மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. உரையை முடியுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1996 ஆம் ஆண்டில், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஒரு நிமிடம் மணி என்ன ஆயிற்று என்று கண்ணைத் திறந்து கடிகாரத்தைப் பாருங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் உங்கள் தயவுதான். எல்லாம் உங்கள் தயவுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். விரைவாக முடியுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் உங்கள் தயவுதான். இனி இந்த அவையில் நான் உங்களை எதிர்த்துப் பேசுவேனா? நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, அதுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, உட்காருங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-ல் நான் நகர மன்றத் தலைவர் பொறுப்பிற்குத் தேர்தலில் நின்றபோது, ஒன்றே ஒன்றுதான் சொன்னேன். மக்களுடைய வரிப்பணத்தை மக்களுக்குச் செலவு செய்வேன் என்று சொன்னேன். ஆனால், இன்றைக்கு,* Internal Audit *என்பது நகராட்சியில் இல்லை. நகராட்சியில் நடைபெறுகின்ற தவறுகள், அதிலும், குறிப்பாக நான் எந்த ஊரையும் குறிப்பிடவில்லை. என்னால் எந்தப் பொருள் குறித்து வேண்டுமானாலும் எந்த இலாகா குறித்து வேண்டுமானாலும் பேச முடியும். ஆனால்,* ** *எனவேதான், நகராட்சிக்கு மட்டும் 1,100 என்ற தொலைபேசி எண்ணை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்துவாரா என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும், இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உள்ளாட்சித் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்சினை. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 2.00 கோடி ரூபாய் இப்போது

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அளிக்கிறீர்கள். இந்த ஒரு வருடம் மட்டும் 3.00 கோடி ரூபாய் கொடுத்தால் போதுமானது. ரூ.3.00 கோடி மட்டும் கொடுத்தால் போதும் என்பதை மட்டும் எதிர்வரிசையிலிருக்கும் அவர்களுக்கும் சேர்த்து கோரிக்கையாக வைக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ** என்று சொன்னார். அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் பேசுகிறபோது ** என்று சொன்னவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். (குறுக்கீடு) பேச வேண்டுமா? நாளை பேசுங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-6-2017) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

24. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017-2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூன் 20]

25. மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017-2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

26. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய மக்கள் சாசனம், 2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

27. மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017-2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

28. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017-2018. (தமிழ்)

29. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017-2018. (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

இணைப்பு I

(130 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கொள்கை விளக்கக்குறிப்பு, 2017–2018

1. முன்னுரை

நகரமயமாதல் என்பது கிராமப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்கு மக்கள் இடம் பெயர்வதைக் குறிக்கும். இது உலகளாவிய அளவில் மனித சமூக அமைப்புகள் விரைவாகவும் வரலாற்று ரீதியாகவும் மாற்றமடையும் ஒரு போக்காகும். இதன் மூலம் கிராம கலாச்சாரம் மாற்றப்பட்டு எதிர்காலத்தில் நகர கலாச்சாரமே விஞ்சியிருக்கும்.

1.1 நகரமயமாதல் - உலகளாவிய சூழ்நிலை

2016 ஆம் ஆண்டு உலக மக்கள்தொகையில் 54.5 சதவீதம் பேர் நகர்ப்புறத்தில் வசித்து வருகின்றனர். 2030 ஆம் ஆண்டில் உலகளாவிய அளவில் 60 விழுக்காடு மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். மொத்த மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் 5 இலட்சம் பேருக்கு மேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் வாழ்வர்.

தற்போது உலக மக்கள்தொகையில் 23 சதவீதத்தினர் அதாவது 170 கோடி பேருக்கு மேல் 10 இலட்சம் மக்கள்தொகை கொண்ட பெரு நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர். 2030 ஆம் ஆண்டில் உலகளாவிய மக்கள்தொகையில் 27 விழுக்காடு பேர் அவ்வாறான நகர்ப்புறங்களில் வசிக்க வேண்டிய நிலைமை உருவாகும். 2016 மற்றும் 2030 ஆம் ஆண்டுகளுக்கிடையே நகர்ப்புற மக்கள்தொகை நகரத்தின் அளவு மற்றும் பரப்பளவுக்கு தொடர்பில்லாமல் அதிகரிக்கும் என்றும், அதே நேரத்தில் கிராமப்புறத்தில் 2016-ல் 45 விழுக்காடாக இருந்த மக்கள்தொகை 2030 ஆம் ஆண்டு 40 விழுக்காடாகக் குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு உலக மக்கள்தொகையில் 6.8 சதவீதம் பேர், அதாவது, 50 கோடி மக்கள் பெரு நகரங்களில் வசித்தனர். இந்த

நகரங்கள் 2030 ஆம் ஆண்டில் அளவிலும், மக்கள்தொகையிலும் மேலும் பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2030 ஆம் ஆண்டில் 73 கோடி பேர் ஒரு கோடிக்கு மேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் வசிக்கும் நிலை ஏற்படும். ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையின்படி இந்த தொகையானது உலகளாவிய அளவில் 8.7 விழுக்காடு ஆக இருக்கும். 2016 மற்றும் 2030 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகை மற்றும் அவர்கள் வாழும் நிலை ஆகியவற்றை கீழ்க்கண்ட பட்டியலில் காணலாம்:-

	2016			2030		
	குடியிருப்புகளின் எண்ணிக்கை	மக்கள் தொகை (கோடியில்)	உலக மக்கள் தொகை (%)	குடியிருப்புகளின் எண்ணிக்கை	மக்கள் தொகை (கோடியில்)	உலக மக்கள் தொகை (%)
நகர்ப்புறம்	..	403.4	54.5	..	505.8	60.0
1 கோடி அல்லது அதற்கும் மேல்	31	50.0	6.8	41	73.0	8.7
50 இலட்சம் முதல் 1 கோடி வரை	45	30.8	4.2	63	43.4	5.2
10 இலட்சம் முதல் 50 இலட்சம் வரை	436	86.1	11.6	558	112.8	13.4
5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை	551	38.0	5.1	731	50.9	6.0
5 இலட்சத்திற்கும் குறைவானது	..	198.5	26.8	..	225.7	26.8
ஊரகம்	..	337.1	45.5	..	336.7	40.0

உலகின், 31 பெரு நகரங்களில் (அதாவது 1 கோடிக்கும் மேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களில்) 24 பெரு நகரங்கள் குறைந்த

2017 ஜுன் 20]
அளவே வளர்ச்சிபெற்ற உலகின் தென் பகுதியில் (Global South) *அமைந்துள்ளன.*

1.2 நகரமயமாதல் - இந்தியாவின் சூழ்நிலை

நகரங்களை உருவாக்குவதில் இந்தியாவிற்கு மிக நீண்ட வரலாற்றுச் சிறப்பு உண்டு. சிந்து சமவெளி நாகரீக காலத்திலேயே நகரங்களை உருவாக்கும் முதல் கட்டப் பணிகள் துவங்கின. இந்தியா முழு வேகத்துடன் படிப்படியாக வளர்ந்ததுடன், நகர்ப்புற மக்கள்தொகையும் வளர்ச்சி அடைந்தது. இது ஒரு கணிசமான முன்னேற்றமாகக் கருதப்பட்டது. தற்போது இந்தியாவில் 43 கோடி மக்கள் நகர்ப்புறங்களில் வசித்து வருகின்றனர். இது இந்திய மக்கள்தொகையில் 32 விழுக்காடு ஆகும். 2030 ஆம் ஆண்டில் இந்திய நகரங்களில் மக்கள்தொகை 59 கோடியாக உயரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது இந்தியாவின் மக்கள் தொகையில் 40 விழுக்காடு ஆகும். சுருங்கக் கூறினால், இந்தியாவில் 15 ஆண்டுகளில் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்வது அதிக அளவில் இருக்கும். இது சீனாவைத் தவிர உலகில் எங்கும் நடைபெறாததாக இருக்கும்.

இந்தியா முழுவதும் நகரமயமாதல் என்கிற செயல்முறை பரவும். இதன் பிரதிபலிப்பு ஏறத்தாழ அனைத்து மாநிலங்களிலும் தெரியும். இந்திய வரலாற்றில் முதன்முறையாக நகர்ப்புற வளர்ச்சியில் தமிழ்நாடு உட்பட 5 மாநிலங்கள் முன்னணியில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் கிராமங்களை விட நகரங்களிலேயே பெரும்பான்மையான மக்கள் வசிப்பர்.

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 10 கோடி மக்கள்தொகை கொண்ட நகரங்கள் 46 இருந்தன. இவை 2030 ஆம் ஆண்டில் 68 நகரங்களாக அதிகரிக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நகரங்கள், வளர்ச்சிக்கான நிதி ஒதுக்குவதில் முன்னுரிமை பெறும். ஏனெனில், இந்த நகரங்களிலிருந்துதான் இந்தியாவின் வரி வருமானம் சுமார் 80 முதல் 85 விழுக்காடு கிடைக்கிறது. எனினும், பொருளாதார வளர்ச்சிக்கேற்ப நகர்ப்புற வளர்ச்சியையும் மேம்படுத்த முதலீடு செய்வது மிகப் பெரிய சவாலாக இருக்கும். Mckinsey Global Institute-*ன் அறிக்கையின்படி, இந்தியாவில் நகர்ப்புற வளர்ச்சிக்கு 2020 ஆம் ஆண்டில், 60 பில்லியன் டாலர் முதலீடு செய்ய*

வேண்டியிருக்கும். 2020 முதல் 2030 ஆம் ஆண்டு வரை வருடத்திற்கு 90 பில்லியன் டாலர் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1.3 நகரமயமாதல் - தமிழ்நாட்டின் சூழ்நிலை

இந்தியாவில் தொழில் வளர்ச்சியிலும், நகரமயமாதலிலும் வேகமாக வளர்ச்சியடையும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்குள்ள மக்கள்தொகையில் 48.45 விழுக்காடு பேர் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். நகர்ப்புற மக்கள்தொகை மற்றும் நிலப்பரப்பு விகிதாச்சாரத்தில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின், நகர்ப்புற மக்கள்தொகை இந்திய நகர்ப்புற மக்கள்தொகையில் 9.3 விழுக்காடு ஆகும். ஆனால், தமிழ்நாட்டின் மக்கள்தொகை இந்திய மொத்த மக்கள்தொகையில் 6 விழுக்காடு மட்டுமே ஆகும்.

நகர்ப்புற வளர்ச்சியில், அடுத்த 10 ஆண்டுகளிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தொடர்ந்து முன்னிலை வகிக்கும். 2030 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள்தொகை 67 விழுக்காடாக இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. இது, இந்தியாவிலேயே அதிகமானதாகும். பெருகிவரும் மக்கள்தொகைக்கு தேவையான உட்கட்டமைப்புகளையும் அடிப்படை வசதிகளையும் உருவாக்குவதில் கொள்கை அளவிலும் நிருவாகத்திலும் பல சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். திறன் மேம்பாடு, உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உகந்த புதிய பசுமை தொழில்நுட்பங்களைக் கடைபிடித்தல் ஆகியவை இந்நிலைமையை எதிர்கொள்ள சரியான வழிகளாகும்.

தொலைநோக்குத் திட்டம் 2023-ன்படி, மாநிலத்தின் அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் அவசியமாகிறது. நகர்ப்புற போக்குவரத்து நெரிசலை சமாளிப்பது, குடிநீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு, திடக் கழிவு மேலாண்மை, குறைந்த வருவாய் உடையோர் உட்பட அனைவருக்கும் வீட்டு வசதி அளிப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவதன்மூலம் 2023 ஆம் ஆண்டுக்குள் நாம் எதிர்பார்க்கும் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு தொலைநோக்குத் திட்டம்

2017 ஜூன் 20]

2023 வழிவகுக்கிறது. நகர்ப்புற உட்கட்டமைப்புகளை மேம்படுத்த முதலீடு செய்வதின் நோக்கம் நகர்ப்புறத்திலிருந்து மற்ற பகுதிகளுக்கு முறையான இடரில்லாத தொடர்பை ஏற்படுத்துவதே ஆகும்.

உலகத் தரம் வாய்ந்த அடிப்படை உட்கட்டமைப்பு உட்பட பல மேம்பாட்டுத் திட்டங்களை மாநிலம் முழுவதும் செயல்படுத்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. நகர்ப்புற போக்குவரத்து வசதிக்காக ஒருங்கிணைந்த சாலை இணைப்பு முறைகளை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து மக்களுக்கும், உரிய அழுத்தத்துடன் குழாய்கள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 24 மணி நேரமும் வழங்குவதை உறுதி செய்யவும், அனைவருக்கும் பாதுகாப்பான சுகாதார வசதி கிடைத்திட செய்வதோடு, திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலை இல்லாத மற்றும் குப்பை கூளங்கள் இல்லாத சுற்றுச்சூழலை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தொலைநோக்குத் திட்டம் 2023-ன்படி கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்படும்:

(அ) ₹50 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் சென்னையை மிகப் பெரிய நகரமாக வளர்ச்சியடையச் செய்தல்

(ஆ) 10 நகரங்களை ₹1 இலட்சம் கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த நகரங்களாக உருவாக்குவது

(இ) மற்ற நகரங்களின் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை ₹50 ஆயிரம் கோடியில் செயல்படுத்துதல்

1.4 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாநிலத்தில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளை மேம்படுத்துதல், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பொறுப்பாகும். மேலும் திட்டமிடுதல், நிதி வழங்குதல், தரமான சேவை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்தி கண்காணித்தலும் இத்துறையின் பொறுப்பாகும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் குடிநீர் வழங்குதல், சாலைகள் மற்றும் கட்டடங்களை உருவாக்குதல், மழைநீர் வடிகால் வசதி, தெரு விளக்கு, திடக் கழிவு மேலாண்மை,

சுற்றுப்புற சுகாதாரம், பேருந்து நிலையங்கள் மற்றும் வர்த்தகக் கூடங்கள் அமைப்பதற்கு இத்துறை பெருந்தொகையைச் செலவிட வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகள் ஆகியவை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள, மாவட்ட வாரியான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பட்டியல் பின்வருமாறு:

வரிசை எண்	மாவட்டம்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்	பேரூராட்சிகள்
1.	அரியலூர்	0	2	2
2.	சென்னை	1	0	0
3.	கோயம்புத்தூர்	1	3	37
4.	கடலூர்	0	5	16
5.	தருமபுரி	0	1	10
6.	திண்டுக்கல்	1	3	23
7.	ஈரோடு	1	4	42
8.	காஞ்சிபுரம்	0	9	17
9.	கன்னியாகுமரி	0	4	55
10.	கரூர்	0	2	11
11.	கிருஷ்ணகிரி	0	2	6
12.	மதுரை	1	3	9
13.	நாகப்பட்டினம்	0	4	8
14.	நாமக்கல்	0	5	19
15.	பெரம்பலூர்	0	1	4
16.	புதுக்கோட்டை	0	2	8
17.	இராமநாதபுரம்	0	4	7
18.	சேலம்	1	4	33
19.	சிவகங்கை	0	3	12
20.	தஞ்சாவூர்	1	2	22
21.	நீலகிரி	0	4	11
22.	தேனி	0	6	22

2017 ஜூன் 20]

வரிசை எண்	மாவட்டம்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்	பேரூராட்சிகள்
23.	திருவள்ளூர்	0	5	10
24.	திருவண்ணாமலை	0	4	10
25.	திருவாரூர்	0	4	7
26.	தூத்துக்குடி	1	2	19
27.	திருச்சிராப்பள்ளி	1	3	16
28.	திருநெல்வேலி	1	7	36
29.	திருப்பூர்	1	5	16
30.	வேலூர்	1	11	16
31.	விழுப்புரம்	0	3	15
32.	விருதுநகர்	0	7	9
	மொத்தம்	12	124	528

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் பின்வரும் துறைகளும், நிறுவனங்களும் இயங்கி வருகின்றன:

1. நகராட்சி நிருவாக ஆணையரகம்
2. பேரூராட்சிகளின் இயக்குநரகம்
3. சென்னை பெருநகர மாநகராட்சி
4. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
6. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்
7. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை
8. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்
9. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்
10. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நகர்ப்புற நிலப்பரப்பு மற்றும் மக்கள்தொகை குறித்த பட்டியல் பின்வருமாறு:

இனம்	எண்ணிக்கை	நிலப்பரப்பு (ச.கி)	நிலப்பரப்பு (%)	மக்கள் தொகை (இலட்சத்தில்)	நகர்ப்புற மக்கள் தொகை (%)
பெருநகர சென்னை மாநகராட்சி	1	426	4.01	67.27	21.34
மற்ற மாநகராட்சிகள்	11	1,278.31	12.05	80.66	25.59
நகராட்சிகள்	124	2,516.05	23.72	86.39	27.41
பேரூராட்சிகள்	528	6,388.20	60.22	80.90	25.66
மொத்தம்	664	10,608.56	100.00	315.22	100.00

2. நகராட்சி நிருவாக ஆணையரகம்

நகராட்சி நிருவாக ஆணையரகம், நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களை தலைமையாகவும் மற்றும் இணை ஆணையர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர் மற்றும் ஏழு நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்களைக் (மண்டலத்திற்கு தலா ஒருவர் என செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டலங்கள்) கொண்டுள்ளது. சென்னை மாநகராட்சி தவிர, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு கண்காணிப்பது இவ்வலுவலகத்தின் பணியாகும். தமிழ்நாட்டில் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 11 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் 124 நகராட்சிகள், நகராட்சி நிருவாக ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. அனைத்து நகராட்சிகளும் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தரம் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

2017 ஜூன் 20]

வ. எண்	தரம்	ஆண்டு வருமானம் (₹கோடியில்)	நகராட்சிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1.	சிறப்பு நிலை	10.00 க்கு மேல்	18
2.	தேர்வு நிலை	6.00 - 10.00	28
3.	முதல் நிலை	4.00 - 6.00	34
4.	இரண்டாம் நிலை	4.00-க்குகீழ்	44
		மொத்தம்	124

2.1 மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 74-வது திருத்தத்தின்படி, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தப்பட உள்ளது. பிரிவு வாரியாக மாநகராட்சி மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் பதவி விவரம் பின்வருமாறு:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்	தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது)	தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்)	பழங்குடி இனத்தினர் (பெண்கள்)	பெண்கள் (பொது)	பொது	மொத்தம்
மாநகராட்சிகள்(சென்னை மாநகராட்சி உள்பட)						
மேயர்கள்	1	1	--	5	5	12
வார்டு உறுப்பினர்கள்	50	57	--	412	400	919
நகராட்சிகள்						
நகர்மன்றத் தலைவர்கள்	8	9	1	52	54	124
வார்டு உறுப்பினர்கள்	225	286	3	1,551	1,548	3,613

2.2 உட்கட்டமைப்பு மேம்பாடு

உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி பராமரிப்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஒரு முக்கிய செயல்பாடு ஆகும். தரமான, பயனுள்ள உட்கட்டமைப்புகளை உருவாக்க அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் உலக வங்கி, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) முதலான பன்னாட்டு நிறுவனங்கள்மூலம் பெறப்படும் நிதி உதவியினைக் கொண்டு நகர்ப்புற உள்ளாட்சிகளில் உட்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2.3 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

அடிப்படை கட்டமைப்புகளான சாலைகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால்கள், சுகாதார வசதிகள், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்கள் மற்றும் பூங்காக்கள் முதலானவற்றை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டு, அதன்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டுக்கு பெரும் உந்துதல் கொடுக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கடந்த ஆறாண்டுகளில் ₹2,622.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட 6,510 பணிகளில் 6,069 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

2.4 குடிநீர் வழங்கல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்குமான பாதுகாக்கப்பட்ட குடிநீரினை போதிய அளவில் வழங்குவதற்கு அரசு தீவிர முன்னுரிமை மற்றும் முக்கியத்துவம் அளித்துள்ளது. குடிநீர் வழங்கல் நிலைமையை மேம்படுத்துவதற்காக, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA), ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), உலக வங்கி போன்ற பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலமும், ஒருங்கிணைந்த

2017 ஜுன் 20]
நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM), ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JnNURM) மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT) ஆகிய திட்டங்கள் மூலமும் நிதி உதவி பெறப்பட்டு பல்வேறு குடிநீர் வழங்கல் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும், சில நேர்வுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB) போன்ற அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் என்ற அடிப்படையில் குடிநீர் வழங்க, மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனம் (CPHEEO) குறியீடுகளை நிர்ணயம் செய்துள்ளது. இந்த குறியீடுகளை எட்டும் நோக்கோடு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் கீழ்வருமாறு:

உள்ளாட்சிகள்	அளவீடு	தற்போதைய நிலை	உள்ளாட்சிகளின் எண்ணிக்கை
மாநகராட்சிகள்	110 லிட்டர் மற்றும் அதற்குமேல்	நன்று	6
	70-109 லிட்டர் வரை	திருப்திகரமான நிலை	5
மொத்தம்			11
நகராட்சிகள்	90 லிட்டர் மற்றும் அதற்குமேல்	நன்று	59
	40 முதல் 89 லிட்டர் வரை	திருப்திகரமான நிலை	65
	20 முதல் 39 லிட்டர் வரை	பற்றாக்குறை	0
மொத்தம்			124

2011 ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 93 லிட்டர் என்ற வீதத்தில் தினமும் மொத்தம் 1,567.10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி, ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகிய திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தியதன் மூலமாக குடிநீர் விநியோகம் 1869.55 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 112 லிட்டர் வீதம் வழங்கும் அளவுக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III-ன்கீழ் 17 குடிநீர் பணிகள் ₹661.65 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 13 பணிகள் முடிவுற்றுள்ளன. பணிகள் முடிவுற்ற 13 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	திருநெல்வேலி (தச்சநல்லூர்)	5.94	36.72	77	55.00	116
2.	கோபிச்செட்டி பாளையம்	4.05	4.96	90	7.44	135
3.	பொள்ளாச்சி	8.64	10.2	105	12.7	135
4.	போடிநாயக்கனூர்	2.32	5.75	76	6.95	90
5.	சேலம்	24.84	71.00	85	105.72	127
6.	குறிச்சி	49.93	4.00	40	7.5	70
7.	குனியமுத்தூர்		3.5	40	8.00	75

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
8.	கவுண்டம்பாளையம்	30.38	4.56	48	8.00	80
	வடவள்ளி		2.3	55	3.00	70
9.	திருவண்ணாமலை-I	0.32	பகிர்மானம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது			
10.	சிவகங்கை -II	0.16				
11.	துறையூர்	0.14				
12.	கிருஷ்ணகிரி	1.52				
13.	குழித்துறை-II	0.99				

மீதமுள்ள 4 குடிநீர் திட்டங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	சேலம் பகுதி - II	147.12	பணி முடிவுறும் நிலையில் உள்ளது.
2.	பல்லவபுரம்	99.95	பணி முன்னேற்றத்தில் உள்ளது.
3.	பம்மல்	43.10	பணி முன்னேற்றத்தில் உள்ளது.
4.	தேனி அல்லிநகரம்	68.83	பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை (JnNURM-UIG) திட்டத்தின்கீழ் 12 பணிகள் ₹1,169.87 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 9 பணிகள் முடிவுற்றுள்ளன. பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட உள்ளாட்சிகளில் குடிநீர் விநியோக அளவு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	மதுரை (வைகை -II) - 2 பணிகள்	80.37	71.6	67	118.6	110
2.	கோயம்புத்தூர் (பில்லூர்-II)	159.85	176.00	109	216.00	135
3.	தாம்பரம்	32.62	8.77	55	16.12	90
4.	ஆனையூர் (மதுரையுடன் இணைக்கப் பட்டுள்ளது)	7.88	3.48	46	4.12	90
5.	திருப்பரங்குன்றம் மற்றும் ஹார்விபட்டி (மதுரையுடன் இணைக்கப் பட்டுள்ளது)	9.70	2.69	69	3.71	90
6.	திருமங்கலம்	68.13	8.08	90	11.18	135
7.	மதுரை விரிவாக்கப் பகுதி (அவனியாபுரம், திருநகர் மற்றும் விளாங்குடி)	106.99	17.14	90	27.55	135
8.	கோயம்புத்தூர் விரிவாக்கப் பகுதி (துடியலூர், வெள்ளக்கிணறு, காளப்பட்டி, சரவணம்பட்டி மற்றும் சின்னவேடம்பட்டி)	29.03	10.64	70	36.08	135

TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

மீதமுள்ள 3 பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	ஆவடி	103.84	பகுதி பணி முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு மீதமுள்ள பணி முன்னேற்றத்தில் உள்ளது.
2.	அனகாபுத்தூர்	14.88	பணி நடைபெற்று வருகிறது
3.	கோயம்புத்தூர் (24X7)	556.57	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் (JnNURM-UIDSSMT) திட்டத்தின்கீழ் ₹740.47 கோடி மதிப்பீட்டில் 40 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 35 குடிநீர் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன.

பணிகள் முடிவடைந்த 35 உள்ளாட்சிகளில் குடிநீர் விநியோக அளவு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	தேவகோட்டை	0.30	உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மட்டும்			
2.	கரூர்	1.35	6.9	84	8.4	110
3.	வால்பாறை	2.21	0.75	42	2.51	122
4.	திருப்பத்தூர்	7.58	4.9	52	5.75	72
5.	இராமநாதபுரம்	47.70	1.25	20	6.61	70
6.	பரமக்குடி	58.24	6.00	62	8.47	70
7.	கீழக்கரை	20.16	0.6	19	2.88	70
8.	சிவகங்கை	32.80	2.8	50	4.40	70
9.	ராமேஸ்வரம்	33.76	0.75	20	2.66	70
10.	அரக்கோணம்	8.45	6.00	77	9.6	90

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
11.	திருத்தணி	5.12	2.9	69	7.2	90
12.	அறந்தாங்கி	3.46	3.16	85	4.16	112
13.	மறைமலைநகர்	2.54	2.68	55	5.32	135
14.	விக்ரமசிங்கபுரம்	2.46	4.61	83	7.23	90
15.	நாமக்கல்	14.32	4.24	70	10.16	135
16.	ஸ்ரீவில்லிபுத்தூர்	29.49	0.35	47	0.6	90
17.	கூடலூர் (நீலகிரி)	5.25	2.95	60	5.94	135
18.	ஈரோடு	8.00	குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மாற்றி அமைக்கும் மேம்பாட்டு பணிகள்			
19.	ராசிபுரம்	8.25				
20.	தஞ்சாவூர்	9.04				
21.	விழுப்புரம்	9.55	5.4	57	11.25	135
22.	ஒட்டன்சத்திரம்	6.69	1.94	54	3.24	90
23.	மேட்டூர்	12.47	5.00	104	7.2	135
24.	ஆத்தூர்	7.13	குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மாற்றி அமைக்கும் மேம்பாட்டு பணி			
25.	வந்தவாசி	10.90	2.20	70	3.44	110
26.	திருச்செங்கோடு	7.58	7.00	73	10.00	103
27.	காரைக்குடி	18.58	7.98	78	19.94	135
28.	பல்லடம்	17.47	3.18	75	5.56	121
29.	சிதம்பரம்	7.18	4.48	72	5.60	90
30.	தாராபுரம்	14.74	3.50	90	5.50	120
31.	பெரியகுளம்	15.54	4.00	90	6.07	135
32.	திருவத்திபுரம்	13.44	3.07	90	5.77	135
33.	வெள்ளக்கோயில்	17.41	3.00	90	8.00	135
34.	காங்கேயம்	16.07	2.45	90	6.00	135
35.	காயல்பட்டினம்	29.67	2.00	90	7.70	135

2017 ஜூன் 20]

மீதமுள்ள 5 திட்டப் பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்	**உள்ளாட்சியின் பெயர்**	**திட்ட மதிப்பீடு (`கோடியில்)**	**திட்டத்தின் தற்போதைய நிலை**
1.	*கம்பம்*	*18.8*	*பணி முன்னேற்றத்தில் உள்ளது*
2.	*கோவில்பட்டி*	*81.82*	
3.	*திண்டிவனம்*	*52.45*	
4.	*ஆரணி*	*36.26*	
5.	*கொடைக்கானல்*	*46.31*	

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதி உதவியுடன் திருச்சி, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகள், பழனி, குன்னூர், எடப்பாடி, தேவகோட்டை, மேட்டுப்பாளையம் மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சிகளில் ₹663.68 கோடி மதிப்பீட்டில் 9 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில், திருச்சி மாநகராட்சி, தேவக்கோட்டை, எடப்பாடி மற்றும் குன்னூர் நகராட்சிகளில் பணிகள் முடிவுற்றுள்ளன. பணிகள் முடிவுற்ற 4 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல் படுத்துவதற்கு முன்		திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	*திருச்சிராப்பள்ளி*	*221.42*	*90*	*98*	*154*	*135*
2.	*தேவகோட்டை*	*8.32*	*4.06*	*78*	*4.67*	*81*
3.	*எடப்பாடி*	*18.52*	*3.14*	*61*	*6.3*	*113*
4.	*குன்னூர்*	*13.85*	*2.82*	*62*	*3.46*	*76*

மீதமுள்ள 5 திட்டப் பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	பழனி	21.60	பகுதி பணி முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு மீதமுள்ள பணி முன்னேற்றத்தில் உள்ளது
2.	தூத்துக்குடி	282.44	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
3.	திண்டுக்கல்	70.5	பணி முன்னேற்றத்தில் உள்ளது
4.	மேட்டுப்பாளையம்	9.16	பணி முன்னேற்றத்தில் உள்ளது
5.	உடுமலைப்பேட்டை	17.87	பணி முடிவுறும் நிலையில் உள்ளது

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியின்கீழ் ₹793.00 கோடி மதிப்பீட்டில் 14 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில் 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பணிகள் முடிவுற்ற 5 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சிகளின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	திருநெல்வேலி	22.22	40.32	84	47.90	101
2.	கடையநல்லூர்	21.41	4.06	78	4.67	81
3.	திருவண்ணாமலை	36.66	18.30	100	20.50	126
4.	பள்ளிப்பாளையம்	11.66	2.59	63	3.22	91
5.	கரூர்	24.67	10.02	106	16.06	135

2017 ஜூன் 20]

மீதமுள்ள 9 பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	தாந்தோனி	25.16	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
2.	இனாம் கரூர்	18.57	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
3.	உதகமண்டலம்	27.20	பகுதி பணி முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன
4.	திருநெல்வேலி	230.00	பணி துவங்கப்பட்டுள்ளது
5.	கடலூர்	148.09	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
6.	திருச்சிராப்பள்ளி	63.70	பணி முன்னேற்றத்தில் உள்ளது
7.	குன்னூர்	40.19	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது
8.	கோயம்புத்தூர் (விரிவாக்கப் பகுதி) கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம்	108.16	பணி முன்னேற்றத்தில் உள்ளது
9.	பத்மநாபபுரம்	14.87	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது

ஒகேனக்கல் காவேரி கூட்டுக் குடிநீர் மற்றும் ப்ளோரோஸிஸ் சீர்திருத்த திட்டம் ₹1,928.80 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் ஆகிய 3 நகராட்சிகளுக்கு பயனளிக்கிறது. இத்திட்டத்திற்கான மொத்த செலவில் 3 நகராட்சிகளின் பங்கு ₹399.69 கோடியாகும்.

இத்திட்டத்தின் பயனாக மேற்கண்ட 3 நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் பின்வருமாறு அதிகரித்துள்ளன:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	தருமபுரி	132.55	5.50	80	12.76	135
2.	கிருஷ்ணகிரி	93.59	4.00	56	8.00	112
3.	ஓசூர்	149.32	6.50	27	15.50	63

ஆத்தூர் நரசிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ₹270.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடைந்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதன்மூலம் தினசரி குடிநீர் விநியோகம் கீழ்க்கண்டவாறு மேம்படுத்தப்பட்டு உள்ளது:

உள்ளாட்சியின் பெயர்	தினசரி குடிநீர் விநியோக திட்டம்			
	திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்	
	எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
ஆத்தூர்	3.30	52	6.20	100
நரசிங்கபுரம்	1.30	56	1.90	82

வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ₹1,295.00 கோடி மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் முடிக்கப்பட்டு, வேலூர் மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஹட்கோ, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இதில், உள்ளாட்சிகளின் பங்களிப்புத் தொகை ₹104.5 கோடி ஆகும்.

இத்திட்டம் நிறைவுற்றபின் வேலூர் மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளில் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	வேலூர் மாநகராட்சி	529.56	18.5	37	57.73	111

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
2.	ஆம்பூர்	95.25	4.4	39	11.16	97
3.	ஆற்காடு	47.71	4.2	77	5.42	97
4.	இராணிப்பேட்டை	30.22	3.5	69	4.78	94
5.	குடியாத்தம்	86.40	7.3	80	9.62	105
6.	ஜோலார்பேட்டை	16.44	2.58	68	2.75	93
7.	வாலாஜாபேட்டை	6.84	2.22	69	2.80	87
8.	அரக்கோணம்	87.42	6.00	76	7.30	92
9.	திருப்பத்தூர்	36.94	7.03	90	7.14	91
10.	பேரணாம்பட்டு	34.01	1.95	38	4.52	88
11.	மேல்விஷாரம்	26.83	3.02	67	4.00	90
12.	வாணியம்பாடி	47.26	6.7	70	8.3	87

மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் ₹23.80 கோடி மதிப்பீட்டில் மேலூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT) நிதியின்கீழ் ₹2,285.44 கோடி மதிப்பீட்டில் 10 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் தஞ்சாவூர் மாநகராட்சியில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள 9 பணிகள் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு	தற்போதைய நிலை
1.	தஞ்சாவூர் மாநகராட்சி (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி)	48.14	முன்னேற்றத்தில் உள்ளது
2.	ஈரோடு மாநகராட்சி	484.45	பணி ஆணை வழங்கப்பட்டது

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு	தற்போதைய நிலை
3.	கோயம்புத்தூர் மாநகராட்சி (விரிவாக்கப் பகுதியில் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி)	395.41	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது
4.	மதுரை மாநகராட்சி (நீராதாரம் அபிவிருத்தி பணி)	320.00	
5.	திருப்பூர் மாநகராட்சி (விரிவாக்கப் பகுதியில் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி)	250.00	
6.	வேலூர் மாநகராட்சி (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி)	234.93	
7.	நாகர்கோவில் நகராட்சி	241.00	
8.	ஓசூர் நகராட்சி (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி)	87.91	
9.	இராஜபாளையம் நகராட்சி	172.70	
10.	ஆம்பூர் நகராட்சி	50.90	பணி ஆணை வழங்கப்பட்டது
	மொத்தம்	2,285.44	

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (TNSUDP) 6 குடிநீர் அபிவிருத்திப் பணிகள் ₹660.37 கோடி மதிப்பீட்டில் பின்வருமாறு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு	தற்போதைய நிலை
1.	சங்கரன்கோவில், புளியங்குடி, இராஜபாளையம், சிவகாசி மற்றும் திருத்தங்கல் ஆகிய நகராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள்	475.13	ஒப்பந்தப் புள்ளி நிலையில் உள்ளது
2.	நாமக்கல்	185.24	
	மொத்தம்	660.37	

2017 ஜூன் 20]

2.4.1 திறனான குடிநீர் மேலாண்மை அமைப்பு

குடிநீர் வழங்கல் திட்டங்களை இயக்குவதிலும் பராமரிப்பிலும் நல்ல கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பினை மேற்கொள்ள நீர் மேலாண்மை அமைப்புகளை மேம்படுத்துவது மிகவும் அவசியமானது. அரசு அப்பணிகளுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து அவற்றை தொழில்நுட்பத்துடன் செயல்டுத்த பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- *நீருந்து கட்டமைப்பின் திறனை மேம்படுத்த தற்போதுள்ள திறனற்ற மோட்டார்கள் மற்றும் நீருந்து குழாய்களுக்குப் பதிலாக புதிய மோட்டார்கள் மற்றும் குழாய்கள் அமைத்தல்.*

- *சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய தற்போதுள்ள பகிர்மான கட்டமைப்பினைப் புனரமைத்தல்.*

- *மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் திட்டங்களில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன், குடிநீர் தரத்திற்கான இயற்பியல் மற்றும் வேதியியல் தன்மைகள் போன்றவை குறித்த விவரங்கள் சேகரிப்பதை தொடர்ந்து கண்காணித்தல், கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்புகளை (SCADA) நிறுவுதல்.*

- *கோயம்புத்தூர் மாநகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் திட்டத்தில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) நிறுவப்பட்டுள்ளது. பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் இந்த அமைப்பினை (SCADA) நிறுவுவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாநகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) ஒரு சில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

- *நாமக்கல், குமாரபாளையம், திருச்செங்கோடு நகராட்சிகளில் (SCADA) பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டத்தில் உள்ளன. இராசிபுரம் மற்றும் நரசிங்கபுரம்*

நகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணி 2017-18-ம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.
- இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள குடிநீர் திட்டப் பணிகளில் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) சேர்க்கப்பட்டு உள்ளது.

2.4.2 குடிநீர் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் குடிநீர் வழங்கும் நிலையை மேம்படுத்தும் பொருட்டு உட்கட்டமைப்பு மற்றும் நீராதாரத்தின் நிலையினை அறிந்திட நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் உட்கட்டமைப்பு மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணியினை மேம்படுத்தும் பொருட்டு 53 உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றில் 11 உள்ளாட்சிகள் அருகாமையில் உள்ள உள்ளாட்சிகளுடன் இணைக்கப்பட்டுவிட்டன. ஆக, முதற்கட்டமாக 42 உள்ளாட்சி அமைப்புகளில் பகிர்மானக்குழாய் மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான மேல்நிலைத் தொட்டி மற்றும் தரைமட்டத் தொட்டிகள் கட்டும் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் மொத்தம் ₹1,220.15 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

42 திட்டங்களில் 15 உள்ளாட்சிகளுக்கான 15 திட்டங்கள் ₹226.12 கோடி மதிப்பீட்டில், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டம் (UIG) மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) போன்ற திட்டங்களின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள 27 திட்டங்களில் 4 திட்டங்கள் அம்ருத் (AMRUT) மற்றும்

2017 ஜூன் 20]
தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) ஆகியவற்றில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 12 திட்டங்களுக்கு ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) மற்றும் பிற திட்டங்களின் கீழ் நிதி ஆதாரம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 11 திட்டங்களுக்கு நிதி ஆதாரம் இறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது செயல்படுத்தப்படவுள்ள குடிநீர் திட்டங்கள் அனைத்திலும் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

2.4.3 மழை நீர் சேகரிப்பு

மழை நீர் சேகரிப்புத் திட்டம் (Rain Water Harvesting Programme) 2001 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டம் ஆகும். 2001-2006 ஆண்டு காலகட்டத்தில் இத்திட்டம் சிறப்பான முறையில் தீவிரமாக செயல்படுத்தப்பட்டதால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில், நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது.

கட்டட அனுமதி வழங்குவதற்கு, அனைத்து கட்டடங்களிலும் “மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பினை” கட்டாயமாக அமைக்க வழி வகை செய்யும் விதமாக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள், 1973 ஆம் ஆண்டு அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகள், 2002 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி கட்டடங்கள் (நீர் பாதுகாப்பு) விதிகள் ஆகியவற்றில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில், மொத்தமுள்ள 43.05 இலட்சம் கட்டடங்களில், 36.47 இலட்சம் கட்டடங்களில் (26,532 அரசு கட்டடங்கள் மற்றும் 36.21 இலட்சம் தனியார் கட்டடங்கள்) மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர் நிலைகளில் மழை

நீர் சேகரிப்பு பணிகளை மேற்கொள்ள மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. கோயில் குளங்கள் உட்பட மொத்தமுள்ள 1,486 குளங்களில், 744 குளங்களுக்கு மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

உள்ளாட்சி அமைப்புகள் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் தொடர்பாக பல்வேறு புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும் பழுதடைந்த மழை நீர் சேகரிப்பு அமைப்புகளைச் சீர் செய்வதற்கும் உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மழை நீர் சேகரிப்பு அமைப்புகளில் புனரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் புதிய வடிவமைப்புகளில் மாற்றியமைக்கவும் உரிய செயல் திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது.

பருவமழை தொடங்குவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து உள்ளாட்சிகளிலும் மழைநீர் வடிகால், கால்வாய்கள், சிறு பாலங்கள் மற்றும் நீர்நிலைகளுக்குச் செல்லும் வாய்க்கால்கள் ஆகியவை தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன. அனைத்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகளும் புனரமைப்பு செய்யப்பட்டு செயல்படும் நிலையில் உள்ளன.

இந்நடவடிக்கையின்பேரில் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை உள்ள காலகட்டங்களில் 85 சதவீதம் குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் 50 சதவீதம் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் அடங்கும். இவற்றின்மூலம் மழைநீரின் சேகரிப்பு 5.00 டிஎம்சி என கணக்கிடப்பட்டுள்ளது. அரியலூர், நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை, சாத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் ஈரோடு மாநகராட்சிகளில் நீர்வளங்களை மேம்படுத்துவதற்காக ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி (KfW) திட்டத்தின்கீழ் ₹26.67 கோடி நிதியினை அரசு ஒதுக்கியுள்ளது.

2.4.4 கோடையை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2017 (மாநில பேரிடர் நிவாரண நிதி)

2016 ஆண்டைய வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் பெய்த மழையளவு 62% பற்றாக்குறை (சாதாரண மழையளவு 440.4 மிமீ எதிராக 168.4 மிமீ) ஆகும். இது வானிலை ஆய்வு மைய IMD

2017 ஜூன் 20]
பதிவுகள்படி கடந்த 140 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகவும் மோசமான நிலைமையாகும். முன்னெப்போதும் இல்லாத வகையில் இதனால் ஏற்பட்ட வறட்சி நிலைமையால் மொத்த மாநிலமுமே வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் கோடையில் ஏற்படக்கூடிய குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் முன்மொழிவுகள் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நீரியியல் பிரிவில் பெறப்பட்ட புவியியல் வரைபடங்களுக்கு ஏற்றவாறு நீராதாரங்கள் தேர்வு செய்து கூடுதலாக புதிய ஆழ்துளைக் கிணறுகள் கைபம்புகளுடன் அமைத்தல் மற்றும் சிறு மின்விசை பம்புகள் அமைத்தல் பணிகள், கைபம்புகள் பராமரிப்பதற்கான உதிரிபாகங்கள் வாங்குதல், ஆழ்துளை கிணறுகள் / நீர் உறிஞ்சி கிணறுகள் புனரமைப்பு செய்தல், கைபம்புகளுடன்கூடிய ஆழ்துளை கிணறுகளை சிறுமின்விசை பம்புகளாக மாற்றியமைத்தல், டாங்கர் லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், HDPE *டேங்குகள், ஏற்கெனவே உள்ள ஆழ்துளை கிணறுகளைத் தூர்வாருதல் மற்றும் பழுதடைந்த மோட்டார்களை மாற்றுதல் ஆகிய குடிநீர் பணிகள் ₹100.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் ₹65 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை உள்ளாட்சிகளின் பொது நிதியிலிருந்து செலவிடப்படும். மொத்தம் 1,744 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 1,420 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.*

2.5 பாதாள சாக்கடைத் திட்டம் (UGSS)

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடைத் திட்டங்களை (UGSS) *அமல்படுத்துவதற்கான கொள்கையை அரசு நிர்ணயித்துள்ளது. 117 உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கைகள் ₹11,271 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்டுள்ளன. உரிய நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்டபின் இத்திட்டங்கள் பல்வேறு கட்டங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.*

2.5.1 செயலாக்கத்திலுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் பகுதி III-ன்கீழ் ₹1,025.51 கோடி மதிப்பீட்டில் 22 நகராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்களில், உதகமண்டலம், சின்னமனூர், நாமக்கல், தருமபுரி, பெரம்பலூர், திண்டுக்கல் (பகுதி), திருவண்ணாமலை, காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், தேனி-அல்லிநகரம், வேலூர், நாகப்பட்டினம் (பகுதி), புதுக்கோட்டை, திருவள்ளூர், விருதுநகர், கிருஷ்ணகிரி மற்றும் பல்லவபுரம் ஆகிய நகராட்சிகளில் ₹757.04 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் துணைத் திட்டமான நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டத்தின்கீழ் 4 உள்ளாட்சி அமைப்புகளில் (மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள், ஆவடி மற்றும் தாம்பரம் நகராட்சிகள்) ₹925.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மறைமலைநகர், அரியலூர், அரக்கோணம், சாத்தூர், சிதம்பரம், திருப்பத்தூர், பெரியகுளம், மேட்டூர், நாகர்கோவில் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 10 நகரங்களில் ₹954.86 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, மறைமலைநகர் மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சியில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியின் (KfW) கீழ் ஈரோடு மாநகராட்சியில் ₹209.09 கோடி, காரைக்குடி நகராட்சியில் ₹112.53 கோடி, பொள்ளாச்சி நகராட்சியில் ₹109.62 கோடி, மேட்டுப்பாளையம் நகராட்சியில் ₹91.70 கோடி மற்றும் விழுப்புரம் நகராட்சியில் ₹49.36 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதில் விழுப்புரம் நகராட்சியில் பணி முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கும்

2017 ஜூன் 20]

பணி நடைபெற்று வருகிறது. ஈரோடு மாநகராட்சி, காரைக்குடி, மேட்டுப்பாளையம் மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகளில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒசூர் நகராட்சிக்கு தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) *கீழ் ₹283.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்க தேவையான அனுமதிகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

2017 ஆம் ஆண்டு மே மாதம் வரை பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ள கோயம்புத்தூர் (பகுதி), தருமபுரி, திருவண்ணாமலை, திண்டுக்கல் (பகுதி), பல்லவபுரம், மறைமலைநகர், சின்னமனூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, உதகமண்டலம், நாமக்கல், கரூர், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருப்பூர், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, வேலூர், உடுமலைப்பேட்டை, திருவள்ளூர், தேனி-அல்லிநகரம், விருதுநகர், நாகப்பட்டினம் (பகுதி), கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 31 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 5,07,260 (கடந்த ஆண்டு 4,31,895 இணைப்புகள்) வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வ. எண்	மாநகராட்சிகளின் பெயர்கள்	வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை
1.	கோயம்புத்தூர்	*34,898*
2.	திண்டுக்கல்	*5,496*
3.	திருப்பூர்	*15,445*
4.	தஞ்சாவூர்	*26,002*
5.	திருச்சிராப்பள்ளி	*56,296*
6.	திருநெல்வேலி	*24,849*
7.	மதுரை	*1,62,152*
8.	வேலூர்	*3,951*
	மொத்தம்	*3,29,529*

வ. எண்	நகராட்சிகளின் பெயர்கள்	வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை
1.	திருவண்ணாமலை	5,143
2.	விழுப்புரம்	4,561
3.	உடுமலைப்பேட்டை	5,976
4.	உதகமண்டலம்	15,718
5.	கரூர்	9,196
6.	தருமபுரி	2,149
7.	நாமக்கல்	9,059
8.	கிருஷ்ணகிரி	1,188
9.	சின்னமனூர்	5,647
10.	தேனி-அல்லிநகரம்	4,434
11.	இராமநாதபுரம்	8,060
12.	பல்லவபுரம்	25,570
13.	மறைமலைநகர்	4,582
14.	திருவள்ளூர்	1,589
15.	கடலூர்	2,201
16.	காஞ்சிபுரம்	19,375
17.	விருதுநகர்	2,931
18.	கும்பகோணம்	19,136
19.	மயிலாடுதுறை	10,708
20.	திருவாரூர்	5,200
21.	புதுக்கோட்டை	3,910
22.	நாகப்பட்டினம்	1,787
23.	பெரம்பலூர்	9,611
	மொத்தம்	1,77,731
ஆகமொத்தம்		5,07,260

நவீன தொழில்நுட்ப முறைகளான குடைவு தொழில்நுட்பம் (TrenchlessTechnology) மூலம் குழாய் பதித்தல், அச்சு வார்த்த மனித நுழைவு அமைப்புகள், HDPE குழாய்கள் அமைப்பது மற்றும் இதர நவீன முறைகளைப் பயன்படுத்தி பணிகள் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

2017 ஜூன் 20]

2.6 சுகாதாரம்

அடிப்படை சுகாதார வசதிகள் வழங்குதல் அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணிகளில் ஒன்றாகும். நகரங்களில் மக்கள் சுகாதாரமாக வாழ்வதற்கு தேவையான சுற்றுச்சூழலை ஏற்படுத்திட வேண்டும் என்னும் தொலைநோக்குக் கொள்கையை உறுதி செய்ய, திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை ஒழித்தல் மற்றும் குப்பைகள் இல்லாத சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கி, பாதுகாப்பான சுகாதார வசதிகளை ஏற்படுத்திட அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2.6.1 திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே ஒழித்தல்

சுகாதாரம் மற்றும் பொது சுகாதாரம் ஆகியன பாதுகாப்பான சுற்றுச்சூழலுக்கு மிகவும் அடிப்படையாகும். முறையான சுகாதாரம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழல் அமைப்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு சவாலாகவே இருந்து வருகிறது.

பாதாள சாக்கடைத் திட்டத்தில் இணைக்கப்பட்ட போதுமான கழிவறைகள் இல்லாமை, போதுமான மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட பொதுக் கழிப்பறைகள், சமுதாய கழிப்பறைகள் இல்லாமை மற்றும் காலங்காலமாக மக்கள் திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிக்கும் பழக்கம் போன்றவற்றால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளைத் தவிர்க்க, திறந்தவெளியில் மலம் கழிப்பதை முழுமையாக ஒழிக்க வேண்டும் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நெறிமுறைகள் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டு, சமுதாய கழிவறைகள் கட்டுவதற்கு தகுந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

திறந்தவெளியில் மலம் கழித்தலினால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும் மற்றும் அவர்களது பழக்கவழக்கங்களில் மாற்றத்தினை ஏற்படுத்திடவும், பெரிய அளவிலான விழிப்புணர்வுத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் திறந்தவெளியில் மலம் கழிக்கும் இடங்களை கண்டறிய ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆய்வின் அடிப்படையில், 2,24,126 இடங்கள் கண்டறியப்பட்டு, திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்க மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி 18,144 இருக்கைகள் கொண்ட மொத்தம் 3,024 சமுதாய கழிப்பிடங்கள் மேம்பாடு மற்றும் புதிய கழிப்பிடங்கள்

கட்டுவதற்கு இலக்கு நிர்ணயக்கப்பட்டு பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ₹210.60 கோடி மதிப்பீட்டில் 1,205 புதிய சமுதாய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளும், பயன்பாட்டில் உள்ள 2,059 பழைய சமுதாய கழிவறைகளில் புனரமைப்புப் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவற்றில் 1,048 புதிய சமுதாய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளும், 1,930 பழைய சமுதாய கழிப்பிடங்கள் புதுப்பிக்கும் பணிகளும் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 35 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற பல்வேறு பயனாளிகளின் கழிவறை பயன்பாட்டினை மேம்படுத்தும் நோக்கில் நகராட்சி நிருவாக ஆணையரகம்மூலம் "ஒரே மாதிரி கழிவறை - நம்ம டாய்லெட்" என்கிற சிறப்பான கழிவறை வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நவீன கழிப்பிடங்கள் பல்வேறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அமைக்கப்பட்டு அனைத்து பயனாளிகளிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள கழிவறைகளை மேம்படுத்துவதற்கு பொறியாளர்களுக்கான தொழில்நுட்பக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், 265 நம்ம டாய்லெட் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 230 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 35 பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.6.2 கழிவு நீர் கசடு மேலாண்மை

தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 நகரப் பஞ்சாயத்துக்கள் மற்றும் 12,524 பஞ்சாயத்துக்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் அனைத்து மாநகராட்சிகள், 23 நகராட்சிகள் மற்றும் 3 நகரப் பஞ்சாயத்துக்களில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ள இந்த உள்ளாட்சி அமைப்புகளிலும் சில பகுதிகளில் மட்டுமே பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேகமாக வளர்ந்து வரும் நகரமயமாக்கத்தினால் நகரைச் சுற்றி உள்ள பகுதிகளில் மக்கள்தொகை பலமடங்கு உயர்வதால், பாதாள சாக்கடை வசதி இல்லாததால் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் உருவாகும் கழிவுநீரினை சுகாதார முறையில் கையாள அருகே அமைந்துள்ள

2017 ஜூன் 20]

உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து தொகுப்பு முறையில் (Cluster Basis) *செயல்படும் கழிவுநீர் கசடு மேலாண்மைத் திட்டம் அவசியமானதாகிறது.*

நச்சுத் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட கழிவுநீரே பொதுவாக கசடு கழிவு என்றழைக்கப்படுகிறது. இதில் திரவ (Liquid), *திட* (Sludge), *மேலும் கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ்* (Scum) *ஆகியன மிகையாக காணப்படும். கழிவுநீர்த் தொட்டி வடிவமைப்பு, கழிவு சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். நமது துரிதகதியில் நகரமயமாகும் பொருளாதார சூழலில், குறிப்பிட்ட கால இடைவெளியில் நச்சுத் தொட்டியினைச் சுத்தம் செய்தல், கசடு கழிவினை அகற்றி கொண்டு சென்று சுத்திகரிப்பு செய்தல், மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு ஒரு விரிவான திட்டம் மிகவும் இன்றியமையாததாகும்.*

2.6.2.1 கழிவு நீர் கசடு மேலாண்மையின் அவசியம்

கழிவு நீர் கசடினைக் கையாள்வதை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு முழுமையான வழிகாட்டுதலை, அரசாணை (நிலை) எண் 106, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1-9-14 வாயிலாக அரசு வெளியிட்டுள்ளது. இவ்வழிமுறை கீழ்க்காணும் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்:

i. *நச்சுத் தொட்டிகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்*

ii. *உந்துதல் மற்றும் கசடு நீக்குதல்*

iii. *கழிவுநீர் கசடுகளை எடுத்துச் செல்லுதல்*

iv. *சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல்*

v. *கழிவுநீர் கசடு சேகரித்தல், இடம் பெயர்த்தல், சுத்திகரிப்புக்கான கட்டணங்கள்*

vi. *தகவல், கல்வி மற்றும் பரிமாற்றம்*

vii. *மேலாண்மை தகவல் அமைப்பு* (MIS) *மூலமாக ஆவணம் காத்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்*

சேகரிப்பு இடங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து 18 முதல் 20 கிலோ மீட்டர் சுற்றளவில் அமைந்துள்ளவாறு 35 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள்

கண்டறியப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு	சுத்திகரிப்பு திறன் (மில்லியன் லிட்டரில்)	தொழில்நுட்பம்	வரத்து (மில்லியன் லிட்டரில்)	பயன்பாடு விழுக்காடு	வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் (டிசம்பர் 31, 2015 வரை)	வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் (மே 31, 2017 வரை)
1.	சென்னை	-	764.00	ASP	530.00	69	5,18,243	5,75,826
2.	சின்னமனூர்	2012	4.00	ASP	2.40	60	3,905	5,647
3.	கோயம்புத்தூர்	2010	110.00	SBR	27.00	25	27,850	34,898
4.	கடலூர்	2016	12.25	ASP	0.80	7	0	2,201
5.	தருமபுரி	2013	4.86	ASP	1.01	21	1,061	2,149
6.	திண்டுக்கல்	2012	13.65	ASP	1.30	10	2,858	5,936
7.	காஞ்சிபுரம்	2012	14.70	WSP	13.50	92	18,557	19,375
8.	கரூர்	2007	15.00	EAP	6.50	43	6,502	9,196
9.	கும்பகோணம்	2009	17.00	ASP	14.00	82	17,653	19,136
10.	கிருஷ்ணகிரி	2016	9.00	ASP	0.10	1	0	1,188
11.	மதுரை	2011	170.70	SBR	40.00	23	1,45,082	1,62,152
12.	மறைமலைநகர்	2010	2.02	EAP	1.80	89	4,519	4,582
13.	மயிலாடுதுறை	2007	8.50	WSP	4.80	56	9,568	10,708
14.	மாமல்லபுரம்	2016	2.34	ASP	0.45	19	0	200
15.	நாமக்கல்	2012	5.00	ASP	5.00	100	7,618	9,059
16.	நாகப்பட்டினம்	2016	12.59	ASP	0.70	6	0	1,787
17.	ஒரத்தநாடு	2016	1.50	ASP	0.28	19	0	832
18.	பல்லவபுரம்	2011	0.00	ASP	10.58	0	21,020	25,570
19.	பெரம்பலூர்	2013	4.20	ASP	2.50	60	9,169	9,611
20.	புதுக்கோட்டை	2016	10.62	ASP	0.50	5	0	3,910
21.	இராமநாதபுரம்	2013	7.00	ASP	3.40	49	5,352	8,060
22.	தஞ்சாவூர்	2007	28.05	ASP	13.00	46	19,727	26,002
23.	திருவண்ணாமலை	2013	8.76	ASP	2.25	26	3,462	5,143
24.	தேனி-அல்லிநகரம்	2015	12.05	ASP	1.00	8	638	4,434
25.	திருவள்ளூர்	2016	6.20	MBBR	0.30	5	0	1,589
26.	திருவாரூர்	2014	6.92	ASP	1.90	27	3,579	5,200
27.	திருநெல்வேலி	2007	24.20	WSP	11.00	45	23,487	24,849
28.	திருப்பூர்	2008	15.00	EAP	8.00	53	15,140	15,445
29.	திருச்செந்தூர்	2016	3.90	ASP	0.03	0.72	0	135
30.	திருச்சிராப்பள்ளி	2007	58.00	WSP	56.00	97	44,414	56,296

வ. எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு	சுத்திகரிப்பு திறன் (மில்லியன் லிட்டரில்)	தொழில்நுட்பம்	வரத்து (மில்லியன் லிட்டரில்)	பயன்பாடு விழுக்காடு	வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் (டிசம்பர் 31, 2015 வரை)	வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் (மே 31, 2017 வரை)
31.	உதகமண்டலம்	2000	5.00	ASP	3.50	70	15,074	15,718
32.	உடுமலைப்பேட்டை	2016	7.81	ASP	1.15	15	0	5,976
33.	வேலூர்	2015	10.28	ASP	0.85	8	0	3,951
34.	விருதுநகர்	2016	7.65	ASP	0.31	4	0	2,931
35.	விழுப்புரம்	2014	12.50	ASP	3.20	26	3,300	4,567
	மொத்தம்		1395.25		769.11	55	9,27,778	10,84,259

நச்சுத் தொட்டிகளை கணக்கெடுத்தல், சுகாதாரமற்ற கழிவறைகளை கண்டறிதல் மற்றும் பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வடிகட்டி படுகை அமைத்தல் முதலான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கழிவுநீர் நச்சுத் தொட்டிகளிலிருந்து 860 மில்லியன் லிட்டர் கழிவுநீர் 211 எண்ணிக்கையிலான பதிவு செய்யப்பட்ட லாரிகளில் இதுவரை 1,02,299 நடைகளில் அருகிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்டமாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 50,000 மக்களுக்கு பயன்படும் வகையிலான முன்மாதிரியான கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் பில் அண்டு மெலின்டா கேட்ஸ் நிறுவனத்தின் (Bill and Melinda Gates Foundation) உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2.7 விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம்

தெரு நாய்களால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் உடல் நல பாதிப்புகளுக்கு தீர்வுகாணும் நடவடிக்கையாக தெரு நாய்கள் கொல்லப்படுவதைத் தவிர்த்து விலங்கு இனப்பெருக்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தலாமென உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

விலங்குகளுக்கான இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் (நாய்கள்) திட்டம், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பொது சுகாதார பணிகளின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தை மனிதாபிமான முறையில் செயல்படுத்திட, துப்புரவுப் பணியாளர்கள் மற்றும்

நகராட்சி ஊழியர்களுக்கு பெயர் பெற்ற தன்னார்வு தொண்டு நிறுவனங்களின்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டு அரசால் இத்திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட ₹5.40 கோடியில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு (சென்னை தவிர) கருத்தடை அறுவை சிகிச்சைக்காக நாய்களைக் கொண்டு செல்ல ₹3.00 கோடி செலவில் 60 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. மேலும், ₹2.40 கோடி செலவில் 80 அறுவை சிகிச்சை கூடங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. அறுவை சிகிச்சை கூடங்களின் சீரான பராமரிப்பிற்கு 2013 முதல் தற்போது வரை ₹18.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி (சென்னை தவிர) பகுதிகளில் 2013 ஆம் ஆண்டில் தெருவில் சுற்றித்திரியும் நாய்களின் எண்ணிக்கை 2,42,655 என கணக்கெடுக்கப்பட்டது. தற்போது மார்ச் 2017 ஆம் ஆண்டு வரை 1,90,365 நாய்களுக்கு ₹9.57 கோடி மதிப்பில் தனியார் கால்நடை மருத்துவர்கள்மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைக்கு முன்னரும், பின்னரும் நாய்கள் வசதியான கூடங்களில் தீவிர கண்காணிப்பில் வைக்கப்படுகின்றன. அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களுக்கு நோய்கள் ஏற்படாதவாறு நோய்த்தடுப்பு மருந்துகள் அளிக்கப்படுகிறது. மீதமுள்ள தெரு நாய்களுக்கும் தொடர்ச்சியாக அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.8 திடக்கழிவு மேலாண்மை

மாநில அரசு மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் திடக்கழிவு மேலாண்மை ஒன்றாகும். திடக்கழிவு மேலாண்மையின் சிக்கல்கள் பெரு நகரங்களில் மிகவும் கடுமையான அளவில் உள்ளது. மக்கள்தொகை மிகுந்த நகரங்களில் திடக்கழிவு உற்பத்தி அதிகமாவதுடன், அதன் மேலாண்மை மக்கள்தொகை பெருக்கத்தினாலும் இட வசதி மற்றும் நிதி பற்றாக்குறைவுகளாலும் மிகவும் பாதிப்படைகிறது.

தமிழகத்தில் சென்னையைத் தவிர்த்து 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் தினந்தோறும் சுமார் 7,597 மெட்ரிக் டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான முதற்கட்ட சேகரிப்பு, இடமாற்றுதல் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக தூய்மை இந்தியா மற்றும்

2017 ஜூன் 20]

சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டங்களின் நிதியின்கீழ் வாகனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. கழிவு மறுசுழற்சி செய்து உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மறுசுழற்சி மற்றும் கழிவு மீட்பு பொருள் சேகரிப்பு மையம் அமைத்தல், பல ஆண்டுகளாக கொட்டி வைக்கப்பட்டுள்ள குப்பைகளில் உயிரி அகழ்வுமூலம் நிலத்தை மீட்டெடுத்தல் போன்ற பணிகள் செயல்பாட்டில் உள்ளன.

2.8.1 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள்

தாம்பரம், பல்லவபுரம், செம்பாக்கம், அனகாபுத்தூர் மற்றும் பம்மல் நகராட்சிகளுக்காக 300 மெட்ரிக் டன் திறன் கொண்ட ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் தொகுப்பு முறையாக (Cluster Basis) வேங்கடமங்கலம் என்ற இடத்தில் ₹99.00 கோடி மதிப்பீட்டில் கழிவு மறுசுழற்சி மையம் கட்டப்பட்டு திடக்கழிவுகளிலிருந்து உரம் மற்றும் எரிபொருள் (RDF) தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாவது தொகுப்பில் கழிவிலிருந்து 2.9 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு நடைமுறைபடுத்தப்படவுள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 1,506 மெட்ரிக் டன் உரம் தயாரிக்கப்பட்டு அதில் 680 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. திடக்கழிவிலிருந்து எரிபொருள் 43,354 மெட்ரிக் டன் தயாரிக்கப்பட்டு அதில் 3,920 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நிதி நிலைமை நலிவுற்றுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளைச் செயல்படுத்த, ஆண்டுக்கு ₹100 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் "சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதி" ஏற்படுத்தப்பட்டு இதுவரை 116 உள்ளாட்சிகளில் ₹862.32 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,415 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் 394 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2.8.2 உயிரி எரிவாயு கூடங்கள்

நகராட்சிகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் மக்கும் தன்மையுள்ள கழிவுகள் 50 முதல் 60 சதவீதமாகும். மற்றவை மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் மக்காத கழிவுகளாகும். மக்கும் தன்மையுள்ள மொத்த கழிவுகளில், 20 முதல் 25 சதவீதம் குறிப்பாக உணவகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், காய்கறி

அங்காடிகள், இறைச்சிக் கூடங்கள் ஆகியனமூலம் பெறப்படுகிறது. மக்கும் தன்மையுள்ள கழிவுகளை குறைத்திடவும், முறையாக பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் நோக்கத்துடனும், 33 உயிரி எரிவாயு கூடங்கள் 3, 5 மற்றும் 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட மொத்தம் 179 மெட்ரிக் டன் திறனுடன் 8 மாநகராட்சிகள், 28 நகராட்சிகளில் ₹30.39 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், பகுதி-2 திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை அனுமதி அளிக்கப்பட்ட 36 உள்ளாட்சி அமைப்புகளில் 31 உள்ளாட்சிகளில் மொத்தம் 153 மெட்ரிக் டன் திறன் அளவிற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள இதர உள்ளாட்சிகளில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

உயிரி எரிவாயு கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் ஆற்றல் நகராட்சி உரக் கிடங்குகளிலுள்ள மின் விளக்குகளை எரிய வைக்கவும், உரம் தயாரிக்க தேவையான இயந்திரங்களை இயக்குவதற்கும், திரவக்கழிவுகளைச் சுத்தப்படுத்தும் அலகுகளை இயக்குவதற்கும், அம்மா உணவகங்களின் சமையல் எரிவாயு பயன்பாட்டிற்கும், எரிவாயு தகனமேடை இயக்கத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள மின் ஆற்றல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக நிறுவன மின் வடங்களில் ஏற்றம் செய்யப்படும்.

2.8.3 உரம் தயாரித்தல்

உள்ளாட்சி அமைப்புகளில் தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளைக் கொண்டு மக்கும் தன்மை கொண்ட கழிவுகளை உரக்குவியல்கள் அமைத்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 5 மாநகராட்சிகள் மற்றும் 56 நகராட்சிகளில் ஆண்டொன்றுக்கு 60,290 மெட்ரிக் டன் மக்கிய உரம் மற்றும் மண் புழு உரம் தயார் செய்யப்பட்டு விவசாய பண்ணைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி உர உற்பத்தி நிறுவனங்களுடன் உர விற்பனைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி 4 மாநகராட்சிகள் மற்றும் 5 நகராட்சிகள் சென்னை உரத் தொழிற்சாலையுடன் (Madras Fertilizer Limited) முத்தரப்பு ஒப்பந்தம் மேற்கொண்டு

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]
இதுவரை 885 மெட்ரிக் டன் உரமானது விவசாயத் தேவைக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

2.9 சாலைகள்

சாலைகள் நாட்டின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் (MORTH) விவரக் குறிப்புகளின் அடிப்படையில் செலவு மற்றும் பயன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு நீடிக்கும் வகையில் சாலைகள் தரமாக வடிவமைக்கப்படுகின்றன.

மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் மொத்தம் 23,349.93 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 5452.45 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் சாலைகளும், 15,702.80 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலைகளும், 660.308 கி.மீ. நீளத்திற்கு கப்பிச் சாலைகளும், 1,406.71 கி.மீ. நீளத்திற்கு மண் சாலைகளும், மீதமுள்ள சாலைகள் 127.662 கி.மீ. நீளத்திற்கு செதுக்கப்பட்ட கற்கள், பேவர் பிளாக்குகள் போன்றவற்றாலான சாலைகளாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்களினாலும் மற்றும் இயற்கை இடர்பாடுகளாலும் சேதமடைந்த சாலைகளைப் பராமரித்தல், சீரமைத்தல் போன்ற பணிகள் பின்வருமாறு பல்வேறு திட்டங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.9.1 நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (Tamil Nadu Urban Road Infrastructure Porgramme)

நகராட்சிகளின் உட்கட்டமைப்பு விரிவாக்கம், குடிநீர் விநியோக திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்கவும், மேம்படுத்தவும், அரசு நகர்ப்புறச் சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தினை உருவாக்கி சாலைப் பணிகளை செயல்படுத்தி வருகிறது.

பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 4,013.19 கிலோ மீட்டர் நீள சாலைகளைச் சீரமைப்பதற்காக கடந்த ஆறாண்டுகளில் ₹2,098.05 கோடி மதிப்பீட்டில் 4,772

பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 4,520 பணிகள் ₹1,499.76 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. விவரங்கள் கீழ்க் காணுமாறு:

வருடம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (₹ கோடியில்)	நீளம் (கி.மீ.)	மொத்த பணிகள்		நிலுவை
			எடுக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2011-12	200.00	584.394	1035	1035	0
2012-13	186.50	516.115	1084	1084	0
2013-14	265.61	523.313	1063	1061	2
2014-15	263.12	501.610	1084	1081	3
2015-16	258.29	1016.410	248	184	64
2016-17	247.16	871.35	258	75	183
மொத்தம்	1420.68	4013.192	4772	4520	252

2.9.2 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission-IUDM)

2011-12 ஆம் ஆண்டு முதல் 2014-15 வரை, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து 1,416.03 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் ₹501.58 கோடி செலவில் 2,115 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 2,114 பணிகள் ₹530.4 கோடி மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வருடம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (₹ கோடியில்)	நீளம் (கி.மீ.)	மொத்த பணிகள்		
			எடுக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	நிலுவையிலுள்ளவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2011-12	152.11	483.62	829	829	0
2012-13	172.49	496.45	976	976	0
2013-14	172.97	432.86	303	303	0
2014-15	4.01	3.100	7	6	1
மொத்தம்	501.58	1416.03	2115	2114	1

2017 ஜூன் 20]

2.9.3 ஒரே சீரான ஒளிரும் சாலைக் குறியீடு அமைத்தல்

பல்வேறு திட்டங்களின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பெருத்த மறுசீரமைப்பு மற்றும் சாலைகள் சீரமைக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. பொது மக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இந்த சாலைகள் மேலும் பயனுள்ளதாக இருக்கக் கூடிய வகையில் சாலைகளின் பெயர்கள், சாலைக் குறியீடுகள், சுற்றுலா இடங்கள் போன்றவற்றை குறிக்கும் வகையில் ஒரே சீரான குறியீடுகளைக் கொண்ட ஒளிரும் பெயர் பலகைகளை சாலைகளில் அமைக்கும் திட்டத்தை அரசு, செயல்படுத்தி வருகின்றது. மாநகராட்சிகளில் 21,337 தெருக்களும் மற்றும் நகராட்சிகளில் 41,720 தெருக்களும் உள்ளன. இதுவரையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள முக்கியமான சாலைகள் மற்றும் சாலை சந்திப்புகளில் 15,021 சாலை விவரங்கள் குறித்த பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. சாலை சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது இப்பணிகளும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

2.9.4 பிளாஸ்டிக் சாலைகள்

பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் அதனை அகற்றுதல் சுற்றுச்சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்த அரசு, சுற்றுச்சூழல் மாசுபடுவதை குறைக்கும் நோக்கோடு பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பயன்படுத்துவதை வலியுறுத்தி வருகிறது. பிளாஸ்டிக் இல்லாத சுற்றுச்சூழலை உருவாக்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பிளாஸ்டிக் கழிவுகளை இயன்ற அளவுக்கு பாதுகாப்பான முறையில் பயன்படுத்தி கழிவு செய்யப்படவேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பொது நிதியிலிருந்தும் மற்றும் அரசு சிறப்பு நிதி உதவி பெற்றும், கடந்த ஐந்தாண்டுகளில் 1,035.23 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு 1,634.274 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து, தரம் பிரித்து, இயந்திரம் மூலம் துகள்களாக்கும் பணியை ஊக்குவிக்கும்

வகையில், சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

2.10 தெரு விளக்குகள்

தெரு விளக்குகள் நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன. தெரு விளக்குகள் அமைப்பது ஓர் அடிப்படை சேவை என்பதுடன் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மிக முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும். மாநிலத்திலுள்ள 11 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் 124 நகராட்சிகளில் மொத்தம் 7.39 இலட்சம் தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. தெருவிளக்குகளுக்கான மின்கட்டண செலவு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த மின்கட்டண செலவில் 25-30% ஆகும். இது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகுந்த நிதிச்சுமையை ஏற்படுத்துகிறது. ஆகவே, மின் சிக்கனம் கொண்ட தெரு விளக்குகளை அமைப்பது இந்நேரத்தில் மிகவும் அவசியமாகிறது.

மின்சார சேமிப்பு நிறுவனங்களின் (Energy Saving Companies) மூலம் 9 மாநகராட்சிகளிலும் மற்றும் தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மண்டலங்களின் 35 நகராட்சிகளிலும் செயலாக்கம் மற்றும் பராமரித்தல் உட்பட்ட மின்சார சேமிப்பு நடவடிக்கைகள் ஒரு முன்மாதிரி திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலமாக ஆண்டிற்கு சராசரியாக 30-40% மின்கட்டணம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2011-12, 2012-13, 2013-14 மற்றும் 2014-15 ஆம் ஆண்டுகளில் ₹183.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 3,13,507 தெரு விளக்குகளில் 2,16,680 தெரு விளக்குகளை மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி (LED) தெரு விளக்குகளாக மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இதுவரை 1,56,962 தெரு விளக்குகள் மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி (LED) தெரு விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மேலும் திண்டுக்கல் மாநகராட்சி மற்றும் எஞ்சியுள்ள 90 நகராட்சிகளில் உள்ள 3,07,300 அனைத்து வகையான தெரு விளக்குகளையும், மின்சார சேமிப்பு நிறுவனங்களின் 100 சதவிகிதம் முதலீட்டில், மின் சேமிப்பு விளக்குகளாக (LED) மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2017 ஜுன் 20]

2.11 சிறப்பு உட்கட்டமைப்பு திட்டம்

2.11.1 நவீன எரிவாயு தகன மேடை

பெரும்பாலும் சமூக வழக்கங்களின் அடிப்படையில் திறந்தவெளியில் நேரடியாக மரம் எரிக்கப்பட்டு தகனம் நடைபெறுகிறது. மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் காரணமாக நவீன எரிவாயு தகன மேடையில் வழக்கமாக குறைந்தது 4 மணி நேரம் தேவைப்படும் தகனம் இந்த முறையில் 60 முதல் 90 நிமிடங்களில் முடிந்து விடுகிறது. இது விறகுகளின் பயன்பாட்டை 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக குறைக்கிறது.

இதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 135 நகர்ப்புற உள்ளாட்சிகளில் 96 நகர்ப்புற உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ₹37.88 கோடி செலவில் 112 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 86 தகன மேடைகள் கட்டி முடிக்கப்பட்டு பொது நல சங்கங்களின் பராமரிப்பில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 26 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2.11.2 நவீன இறைச்சிக் கூடங்கள்

இறைச்சிக்காக விலங்குகளை பெரிய அளவில் திறந்த வெளியில் கொல்வது நீர் மற்றும் காற்றை அசுத்தப்படுத்தி குறிப்பிடத்தக்க பொது சுகாதாரக் கேடுகளை விளைவிக்கிறது. இறைச்சிக் கூடங்களை நவீனமயமாக்கவும், அவற்றை சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறும், சுகாதார குறைபாடுகளிலிருந்து காக்கவும், கடந்த ஐந்தாண்டுகளில் பகுதி-2 திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றின்கீழ், 8 மாநகராட்சிகள் மற்றும் 26 நகராட்சிகளில் ₹10.81 கோடி மதிப்பீட்டில் 38 நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 28 நவீன இறைச்சிக் கூடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நவீன இறைச்சிக் கூடம் ₹9.85 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் 50 விழுக்காடு நிதி உதவியுடன் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணி வரும் ஆகஸ்டு 2017-க்குள் முடிக்கப்படும்.

2.11.3 கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய எரிசக்தி பலகைகள் நிறுவுதல்

சூரிய சக்தி மூலம் 3,000 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்காக இந்த துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முதற்கட்டமாக நகராட்சிக்குச் சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய ஒளி மின் உற்பத்தி செய்ய பலகைகள் பொருத்தி அதன் மூலம் அன்றாட அலுவலக பயன்பாட்டிற்கு மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், அடுத்த கட்டமாக சூரிய மின்சக்தியை நகராட்சி தெரு விளக்குகளுக்கும், குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் 172 பொறியாளர்களுக்கு புதுச்சேரி மாநிலத்தில் உள்ள ஆரோவில் நிறுவனத்தின் உதவியுடன் சூரிய எரிசக்தி தொடர்பாக தொழில்நுட்ப மேலாண்மை, திட்ட வரைபடம் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 50 கிலோ வாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய சூரியசக்தி (போட்டோவோல்டிக்) பலகைகள் சென்னை நகராட்சி நிருவாக ஆணையர் அலுவலகத்தில் நிறுவப்பட்டு, இதன் மூலம் தினசரி 250 கிலோவாட் (KWh) மின்சக்தி அலுவலக நேரத்தில் உபயோகிக்கப்பட்டு மின் கட்டணம் கணிசமான அளவில் குறைந்துள்ளது. இதுவரை 445 நகராட்சி கட்டடங்களில் சூரிய சக்தி பலகைகள் அமைக்கப்பட்டு 2,198 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர் முயற்சியாக கட்டட மேற்கூரையில் சூரியஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் பலகைகளை (போட்டோவோல்டிக்) அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கட்டடங்கள், குடிநீர் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உரக் கிடங்குகளில் சேர்த்து அமைக்க வருங்காலத்தில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

நகராட்சிகளுக்குச் சொந்தமான கட்டடங்களில் கொள்ளளவு 53,802 கிலோ வாட் திறனுடன் கொண்ட சூரிய ஒளித் தகடுகள் அமைக்க சாத்தியக்கூறு அறிக்கை தயார் நிலையில் உள்ளது.

2017 ஜூன் 20]

2.11.4 இயந்திரம் சாரா போக்குவரத்து

நமது நகர்ப்புறங்களில் பெரும்பாலான சாலைகளில் பாதசாரிகள், மிதிவண்டி பயன்படுத்துவோர், பொது போக்குவரத்து அமைப்புகள் மற்றும் சிறிய சக்கர போக்குவரத்து (சக்கரங்கள், ஸ்கேட் போர்டுகள், தள்ளும் வண்டி, கைவினைப் பொருட்கள்) ஆகியவற்றுக்கு போதுமான வசதிகள் தனித்தனியாக இல்லை. எனவே பெருநகரங்களில் "மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து மூலம் நீடித்த நகரங்களை உருவாக்குதல்" என்ற சாலைகள் போக்குவரத்துத் திட்டத்தினை நகராட்சி நிருவாக ஆணையரகம் தயார் செய்துள்ளது. மேற்கண்ட போக்குவரத்து வசதிகள் தொடர்ந்து கிடைக்கும் வகையில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கு போக்குவரத்து மேலாண்மை மற்றும் அபிவிருத்தி கொள்கை நிறுவனம் (ITDP) மற்றும் உள்ளூர் சுற்றுப்புற சூழல் முயற்சிகளுக்கான பன்னாட்டு குழுமம் - தெற்கு ஆசியா (ICLEI-SouthAsia) உறுதுணை பங்களிப்புடன் திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் மிகவும் பாதுகாப்பான, எளிமையான, நெரிசலற்ற போக்குவரத்து வசதிகள் கிடைக்கும். ஐந்து மாநகராட்சிகளில் ஆய்வு மேற்கொண்டு போக்குவரத்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மிதிவண்டி மற்றும் பாதசாரிகளுக்கான பாதைகள், பாதுகாப்பான சாலைகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் பொது போக்குவரத்து மேம்பாட்டுக்கான திட்ட அறிக்கைகள் தயார் செய்ய நடவடிக்கையில் உள்ளது. இந்த ஆண்டு முதல் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப் படும். கோயம்புத்தூர், திருப்பூர், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 3 மாநகராட்சிகளில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் மாநகராட்சி நிதி பங்களிப்புடன் ₹62.42 கோடி மதிப்பீட்டில் மேற்குறிப்பிட்ட இயந்திரம் சாரா போக்குவரத்திற்கான தனித்தனி கட்டமைப்புகளை உருவாக்க விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யும் நிலையில் உள்ளன.

2.12 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Infrastructure, O&M Gap Filling Fund)

4-வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றை முறையே

3% முதல் 7% மற்றும் 2% முதல் 3% வரை அரசு அதிகரித்துள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ₹1,050.45 கோடி மதிப்பீட்டில் 4,685 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 3,906 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ₹423.58 கோடி மதிப்பீட்டில் 473 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 209 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2.13 அலுவலகக் கட்டடம் கட்டுதல்

பல நகராட்சிகளில் போதுமான அலுவலக இடவசதி இல்லை. எனினும் நிதிப் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான நகராட்சிகளில் புதிய கட்டடங்கள் கட்டவோ ஏற்கெனவே உள்ள கட்டடங்களை நல்ல முறையில் பராமரிக்கவோ இயலாத நிலை உள்ளது. பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு சிறந்த சூழலை உருவாக்கித் தருவது அரசின் நோக்கமாகும்.

கடந்த 2011-12 முதல் 2016-17 வரையில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் பகுதி-2 திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 78 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ₹110.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 42 அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2.14 துப்புரவு பணியாளர்கள் நலன்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மொத்தமுள்ள 43,089 பணியாளர்களில் சுமார் 70 சதவீத அளவுக்கு, அதாவது, 30,109 பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள் ஆவர். நகர்ப்புற உள்ளாட்சிகளின் முக்கிய பணியான அடிப்படை சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் இவர்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இவர்களின் பணியை கண்ணியமிக்கதாக மேம்படுத்துவதுடன் பாதுகாப்பான, ஆரோக்கியமான பணிச்சூழலை ஏற்படுத்துவதும் மிக முக்கியமானதாகும்.

2017 ஜூன் 20]

அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளில் துப்புரவு பணியாளர்களுக்கான 1,036 குடியிருப்புகளை கட்டுவதற்காக 37 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் பகுதி-2 திட்டங்களின் நிதியிலிருந்து ₹49.61 கோடியினை பின்வருமாறு ஒதுக்கீடு செய்துள்ளது:

வருடம்	உள்ளாட்சி களின் எண்ணிக்கை	குடியிருப்பு களின் எண்ணிக்கை	தற்போதைய நிலை	
			முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை
2011-12	3	72	72	0
2012-13	6	80	80	0
2013-14	11	336	318	18
2014-15	8	214	152	62
2015-16	5	200	0	200
2016-17	4	134	0	134
மொத்தம்	37	1036	622	414

2.15 மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்

2.15.1 சீர்மிகு நகரங்கள் (Smart Cities)

சீர்மிகு நகரங்கள் என்னும் திட்டத்தை மத்திய அரசு 25.6.2015 ஆம் தேதியன்று துவக்கியது. மக்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றவாறு அனைத்து வசதிகளுடன் உலகத்தரம் வாய்ந்த நகரங்களை நிர்மாணிப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

சீர்மிகு நகரங்கள் திட்டம் இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது, அவை, பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD) *மற்றும் நகர முழுமைக்கும் திறன்வாய்ந்த தீர்வுகளைப் பயன்படுத்துதல்* (PAN CITY) *ஆகும்.*

பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD) *யின்கீழ் போதிய குடிநீர் வழங்கல், உறுதியளிக்கப்பட்ட மின்சார விநியோகம் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை உட்பட சுகாதாரம், நகர்ப்புற போக்குவரத்து மற்றும் தனிநபர் போக்குவரத்து ஆகியவற்றுக்கான செம்மையான ஏற்பாடு, மக்களுக்கு குறிப்பாக ஏழை மக்களின் பொருளாதார சக்திக்கு*

ஏற்ற குறைந்த விலையில் வீட்டுவசதி, வலுவான தகவல் தொழில் நுட்ப இணைப்பு வசதி மற்றும் டிஜிட்டல் மயமாக்கல், சிறந்த ஆளுகை குறிப்பாக மின் ஆளுகை (e-governance) மற்றும் மக்கள் பங்கேற்பு, நிலையான சுற்றுச்சூழல், மக்களின் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களின் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் கல்வி போன்றவற்றிற்கான வசதிகளை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின்கீழ் அடங்கும்.

நகர முழுமைக்குமான வளர்ச்சி (Pan City Development) என்பது நகரம் முழுவதும் ஏற்கெனவே அமைந்துள்ள உட்கட்டமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பயன்படுத்தி கட்டமைப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்துதல் ஆகும்.

தமிழ்நாட்டில் 2015-16 ஆம் ஆண்டில் நகரங்களுக்கிடையே சவாலான போட்டியின் அடிப்படையில் முதலாவதாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன. சிறப்பு நோக்க அமைப்பு (SPV) ஏற்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்படவேண்டிய திட்டங்களை கண்டறிந்து தெரிவு செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.15.1.1 கோயம்புத்தூர் சீர்மிகு நகரம்

பகுதி சார்ந்த வளர்ச்சியின்கீழ் நீர்நிலைகளைப் புனரமைத்தல், நீர்நிலைகள் மேம்பாடு, நடைபாதை/மிதிவண்டி பாதைகள், இருசக்கர வாகனங்கள் பகிர்வு, நிலம் அழகுபடுத்துதல், வடிகால் அமைத்தல், இயந்திரமில்லா போக்குவரத்து வசதிகள், பாலங்கள், வாகனம் நிறுத்துமிடங்கள், சாலை மேம்பாடு, குடிநீர் விநியோக மேம்பாடு, நச்சுத்தொட்டி கழிவு மேலாண்மை மற்றும் கழிப்பிடங்கள் கட்டுதல், திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல், அரசு கட்டடங்களின் மேற்கூரையில் உரிய மின்சக்தி பலகைகள் நிறுவுதல், மின்சிக்கனம் கொண்ட எல்இடி தெரு விளக்குகள் அமைத்தல், கவுண்டம்பாளையம் மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் இடத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கூடம் அமைத்தல் மற்றும் சீர்மிகு பள்ளிகள் அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்புகள் ₹1,071.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

2017 ஜூன் 20]

நகர முழுமைக்குமான வளர்ச்சியின்கீழ் திறன்மிகு தெரு விளக்குகள், கைபேசி மென்பொருள் பயன்பாடு, கேமராக்கள் மூலம் தெருக்களின் கண்காணிப்பு, காற்று மாசு தர கண்காணிப்பு போன்ற திட்டங்கள் ₹143.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த திட்ட காலத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் தங்களது பங்களிப்பாக தலா ₹500 கோடி அளிக்கும். மத்திய மாநில அரசின் பங்களிப்பாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ₹386 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

2.15.1.2 சீர்மிகு நகரங்களான மதுரை, வேலூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகள்

இதன் தொடர்ச்சியாக இரண்டாம் வருடத்தில் மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு தேவைக்கான அமைப்பு நிறுவப்பட்டு செயலாக்கப்பட வேண்டிய பணிகளைக் கண்டறிந்து தெரிவு செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மதுரை, வேலூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகளுக்கு மத்திய மாநில அரசின் பங்களிப்பாக ₹876 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

புராதன பணிகள், இயந்திரம் சாரா போக்குவரத்து, குடிநீர் மற்றும் திடக் கழிவு மேலாண்மையுடன் கூடிய சுகாதாரம், பொது இடங்களைப் புனரமைத்தல் போன்ற முக்கிய உட்கட்டமைப்பு பணிகள் பகுதிசார் வளர்ச்சியின் கீழும், ஒருங்கிணைந்த நகர நிர்வாக கட்டுப்பாட்டு மையம், மேம்பட்ட போக்குவரத்து வசதி, கண்காணிப்பு கேமிரா வசதி போன்றவை நகரமுழுமைக்குமான வளர்ச்சியின் கீழும் செயல்படுத்தப்படும்.

2.15.2 அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டத்தை மத்திய அரசு 25.6.2015 அன்று துவக்கியது. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள 12 மாநகராட்சிகள், 20 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2015-16 ஆம் ஆண்டில் 9 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 90 பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகள் ₹2,007.90 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பங்களிப்பு அடிப்படையில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய அரசின் பங்கு : ₹ 936.73 கோடி

மாநில அரசின் பங்கு : ₹ 401.58 கோடி

உள்ளாட்சிகளின் பங்கு : ₹ 669.59 கோடி

மத்திய அரசின் பங்களிப்பில் ₹187.35 கோடி மற்றும் மாநில அரசின் பங்களிப்பில் ₹80.32 கோடி சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு விடுவிப்பதற்காக திட்ட இயக்குநரகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

2.15.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (Jawaharlal Nehru National Urban Renewal Mission - JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம், திட்டச் செயலாக்க நகரங்கள் மற்றும் அதன் புறநகர் பகுதிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை குறிக்கோளாகக் கொண்டதாகும். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை திட்டச் செயலாக்க மாநகரங்களாகும். பின்வரும் துணைத் திட்டங்கள் வாயிலாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.15.3.1 நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை (Urban Infrastructure and Governance - UIG)

இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பின்வருமாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	நகராட்சிகள்	ஒதுக்கீடு தொகை (₹கோடியில்)	மேற்கொள்ளப் பட்ட பணிகள் எண்ணிக்கை	முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை
1.	குடிநீர் விநியோகம்	9	1,169.87	12	9
2.	மழைநீர் வடிகால்கள்	2	528.31	2	2

2017 ஜூன் 20]

வ. எண்	திட்டத்தின் பெயர்	நகராட்சிகள்	ஒதுக்கீடு தொகை (₹கோடியில்)	மேற்கொள்ளப் பட்ட பணிகள் எண்ணிக்கை	முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை
3.	திடக்கழிவு மேலாண்மை	4	215.01	3	2
4.	பாதாள சாக்கடை திட்டம்	4	925.49	4	0
	மொத்தம்	19	2,838.68	21	13

மேலே குறிப்பிட்ட 21 பணிகளும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளிலும், அவற்றைச் சுற்றி வளர்ச்சியடைந்துள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள நகராட்சிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 13 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

2.15.3.2 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns-UIDSSMT)

நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டச் செயலாக்க வரம்பிற்குள் வராத நகர்ப்புற உள்ளாட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் வசதி, திடக்கழிவு மேலாண்மை, வடிகால்கள், மழைநீர் வடிகால்கள், சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்பாடு, வாகன நிறுத்தகங்கள் (பொதுமக்கள்/தனியார் பங்களிப்புடன்) புராதன பகுதிகளில் மேம்பாடு மற்றும் நீர்நிலைகளை பாதுகாத்தல் போன்ற அனைத்து நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2017 ஜூன் 20

வ. எண்	திட்டம்	நகர்புற உள்ளாட்சி களின் எண்ணிக்கை	வழங்கப் பட்ட தொகை (₹கோடியில்)	எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள் எண்ணிக்கை	முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை
1.	சாலைகள் (ம) வடிகால்கள்	16	69.41	16	16
2.	குடிநீர் வழங்கல்	40	740.47	40	35
3.	பாதாள சாக்கடைத் திட்டம்	11	607.54	11	2
4.	திடக்கழிவு மேலாண்மை	1	3.58	1	1
	மொத்தம்	68	1,421.00	68	54

2.15.3.3 நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டு வசதி திட்டம்

நகர்ப்புற ஏழைகளுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான வாங்கத்தக்க விலையிலான மற்றும் நீடித்த நிலைத்தன்மை கொண்ட வீட்டு வசதியினை ஏற்படுத்தித் தருவது அரசின் தலையாய நோக்கமாகும். மத்திய அரசு, 2006 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு துணைத் திட்டங்களை துவக்கியுள்ளது:

- நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் (BSUP)-திட்ட செயலாக்க நகரங்களான சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றி வளர்ச்சியடைந்துள்ள நகர்ப்புறப் பகுதிகள்.
- பிற நகரங்கள் அனைத்திலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP).

2.15.3.4 நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (Basic Services to the Urban Poor - BSUP)

அரசால், நகர்ப்புற ஏழைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சுகாதாரம், கல்வி, சமூக பாதுகாப்பு முதலியவற்றுடன் நிலப் பாதுகாப்பு, வாங்கக்கூடிய விலையில் மேம்படுத்தப்பட்ட வீட்டு வசதி மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்குவது நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் குறிக்கோளாகும்.

2017 ஜூன் 20]

இத்திட்டத்தின்கீழ் ₹2,316.02 கோடி மதிப்பீட்டில் 89,720 குடியிருப்புகளை கட்டுவதற்கான 51 திட்டங்களுக்கு இதுவரை மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 79,071 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 10,649 குடியிருப்புகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 3,852 உட்கட்டமைப்பு பணிகளில், 3,792 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 60 பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

பல்வேறு முகமைகள்மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

செயலாக்க முகமையின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	குடியிருப்பு அலகுகள்			அடிப்படை வசதிகள்		
		ஒப்புதலிக்கப்பட்டவை	முடிக்கப்பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை	ஒப்புதலிக்கப்பட்டவை	முடிக்கப்பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	1,370.28	42,318	36,543	5,775	65	42	23
நகராட்சி நிருவாக ஆணையரகம்	679.51	42,010	37,348	4,662	934	932	2
பேரூராட்சி இயக்குநரகம்	43.16	2,348	2348	0	186	186	0
சென்னை மாநகராட்சி	223.07	3,044	2832	212	2,667	2,632	35
மொத்தம்	2,316.02	89,720	79,071	10,649	3,852	3,792	60

2.15.3.5 ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Integrated Housing and Slum Development Programme - IHSDP)

இத்திட்டத்தின் நோக்கம், குடிசைப் பகுதி மக்களுக்கு போதுமான குடியிருப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதன்மூலம் குடிசைப் பகுதிகளை முழுமையாக

மேம்படுத்துவதே ஆகும். இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசால் ₹566.11 கோடி மதிப்பீட்டில் 94 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, ₹400.45 கோடி மத்திய அரசின் நிதியுதவியுடன் 93 நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனுமதிக்கப்பட்ட, 37,715 குடியிருப்புகளில், 37,202 குடியிருப்பு அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 513 அலகுகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட 2,233 அடிப்படை வசதிப் பணிகளில் 2,163 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன.

பல்வேறு முகமைகள்மூலம் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளின் விவரம் பின்வருமாறு:

செயலாக்க முகமையின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	குடியிருப்பு அலகுகள்			அடிப்படை வசதிகள்		
		அனுமதிக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை	அனுமதிக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	20.09	1443	1443	0	0	0	0
நகராட்சி நிருவாக ஆணையரகம்	486.57	31,730	31,217	513	1,957	1,887	70
பேரூராட்சி இயக்குநரகம்	59.45	4,542	4,542	0	276	276	0
மொத்தம்	566.11	37,715	37,202	513	2,233	2,163	70

2.15.4 தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY - NULM)

2014-15 ஆம் நிதியாண்டில் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் துறை, பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு பதிலாக இத்திட்டத்தை துவங்கியுள்ளது. இத்திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு:

2017 ஜூன் 20]

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு.

2. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி.

3. திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.

4. சுய வேலைவாய்ப்புத் திட்டம்.

5. நகர்ப்புற தெரு வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம்.

6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம்.

இதில் 2016-17 ஆம் ஆண்டிற்கு மத்திய மற்றும் மாநில நிதியாக மொத்தம் ₹172.11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மற்றும் பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி 6 திட்ட கூறுகளில் முதல் நான்கு கூறுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள பிற கூறுகள் நகராட்சி நிருவாக ஆணையரகம்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

நகர்ப்புற நடைபாதை வியாபாரிகளுக்கான நலத் திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உட்கூறாகும். நகர்ப்புற நடைபாதை வியாபாரிகள் கணக்கெடுக்கும் பணியில் இதுவரை 63,359 நடைபாதை வியாபாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதாரம் மற்றும் நடைபாதை வியாபாரிகளின் ஒழுங்குமுறை) திட்டங்கள் மற்றும் விதிகள், 2015 தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் திட்ட அங்கீகார குழுவின் மூன்று கூட்டங்கள்மூலம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் 2014-15-ன்கீழ் 141 உறைவிடங்கள் அனுமதிக்கப்பட்டன. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2016-17 ஆம் ஆண்டில் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட 23 சிறப்பு உறைவிடங்கள் இதில் அடங்கும். வீடற்ற 6,546 நபர்களுக்கான 141 உறைவிடங்கள் ₹42.38 கோடி செலவில் அமைக்க திட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 87 உறைவிடங்களில் 3,952 நபர்களுக்கு உறைவிடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. எஞ்சியுள்ள 54 உறைவிடங்களில் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

2.15.5 தூய்மை இந்தியா இயக்கம்

இந்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் 2.10.2014 அன்று தூய்மை இந்தியா இயக்கத்தினை ஐந்து ஆண்டு காலத்திற்கு கீழ்க்கண்ட நோக்கங்களை செயல்படுத்தும் விதமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

(1) திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே ஒழித்தல்,

(2) மனித கழிவுகளை மனிதனே அகற்றும் நிலையினை ஒழித்தல்,

(3) நவீன மற்றும் அறிவியல் சார்ந்த திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளுதல்,

(4) ஆரோக்கியமான சுகாதார பழக்கங்களை உருவாக்குதல்,

(5) சுகாதாரம், மனித ஆரோக்கியம் தொடர்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்,

(6) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திறன் மேம்படுத்துதல் மற்றும் மூலதனச் செலவில் தனியார் துறை பங்களிப்பு ஈர்த்திடும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல்.

இத்திட்டத்தை (1) தனிநபர் கழிப்பிடங்கள் அமைத்தல், (2) சமுதாய கழிப்பிடங்கள் அமைத்தல், (3) திடக்கழிவு மேலாண்மை செயலாக்கம், (4) விழிப்புணர்வு ஏற்படுத்துதல், (5) திறன் மேம்படுத்துதல் போன்ற கூறுகளுடன் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த அரசு 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிருவாக அனுமதியளித்தது. இத்திட்டத்தினை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தவும் பணிகளைக் கண்காணிக்கவும் மாநில அளவிலான உயர்மட்டக் குழு ஒன்று நகராட்சி நிருவாக முதன்மை செயலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

2.15.5.1 தனிநபர் கழிப்பிடம்

ஆண்டு	இலக்கு	முடிக்கப்பட்டவை	கட்டப்பட்டு வருபவை
2015-16	98,048	98,048	0
2016-17	1,26,078	18,692	1,07,386
மொத்தம்	2,24,126	1,16,740	1,07,386

2017 ஜூன் 20]

2017-18 நடப்பு ஆண்டிலேயே, திட்டக்கால முழுமைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கின்படி தனிநபர் கழிவறைகள் கட்டி முடிக்கப்படும்.

2.15.5.2 சமுதாய கழிப்பிடங்கள்

ஆண்டு	கழிப்பறை எண்ணிக்கை	இருக்கைகள்	முடிக்கப்பட்டவை	கட்டப்பட்டு வருபவை
2014-15	*293*	*2,167*	*2,167*	*0*
2015-16	*449*	*4,255*	*3,663*	*562*
2016-17	*217*	*2,196*	*0*	*2,196*
மொத்தம்	*959*	*8,618*	*5,830*	*2,758*

2017-18-க்கான நடப்பு ஆண்டிற்கு 2,575 கழிப்பிட இருக்கைகள் கட்டி முடித்திட இலக்கு நிர்ணயித்து பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

2.15.5.3 திடக்கழிவு மேலாண்மை

தமிழக அரசினால் உருவாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை சிறப்பு நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதி ஆகியவற்றை கொண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை ₹862.32 கோடி மதிப்பீட்டில் 116 உள்ளாட்சி அமைப்புகளில் 1,415 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றில் 382 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2.15.5.4 தகவல், கல்வி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் (IEC)

இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவில் மக்கள் மத்தியில் சுத்தம், சுகாதாரம், தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் 3,046 பரப்புரையாளர்களை நியமித்து நடவடிக்கை எடுத்திட ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ₹154.20 கோடி செலவினத்தில் 2016-17 முதல் 2018-19 வரை 3 ஆண்டுகளுக்கு தகவல், கல்வி, எண்ண பரிமாற்றம் செய்து மக்களிடையே பழக்கவழக்கத்தில் மாறுதல் ஏற்படுத்தி திறந்தவெளியில் மலம், ஜலம் கழித்திடும் பழக்கத்தினை மாற்றிடவும், தினசரி இருப்பிடங்களில் உருவாகும் திடக்கழிவுகளை உயிரிகழிவு மற்றும் மறு சுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவுகளாக பிரித்தாளும் பழக்கத்தை உருவாக்கிடவும் வழி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வகுக்கப்பட்டுள்ளது. இதற்காக 2016-17-ம் ஆண்டிற்காக ₹57.14 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்படி 11 மாநகராட்சிகளில் 360 பரப்புரையாளர்களும், 124 நகராட்சிகளில் 904 பரப்புரையாளர்களும் மனிதவள நிறுவனங்கள்மூலம் நியமித்து நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.15.6 புராதன நகர மேம்பாடு மற்றும் புனரமைப்பு திட்டம் (Heritage City Development & Augmentation Yojana (HRIDAY))

இந்தியாவில் உள்ள புராதன நகரங்களின் முழுமையான வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக (Heritage City Development & Augmentation Yojana (HRIDAY)) திட்டம் இந்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் துவக்கப்பட்டுள்ளது. புராதன நகரங்களின் கலாச்சாரம், கலைநயம் மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றை பாதுகாப்பதுடன், அவற்றின் தனித்தன்மை மாறாமல் மேலும் அழகுப்படுத்துவது பாதுகாப்பான வாழ்வதற்குகேற்ற நீட்டித்த நிலைத்தன்மையுடன் மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்படி இத்திட்டம் மைய மற்றும் மாநில அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி முழுவதும் இந்திய அரசே வழங்கும். மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்தும் காலம் நான்கு வருடங்கள் (ஜனவரி, 2015 முதல் நவம்பர், 2018 வரை) ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் இந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்றாகும். எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களை தலைவராக கொண்ட 10 உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழு (City Level Advisory Monitoring Committee) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதியின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பணி விவரம்	மதிப்பீடு (₹கோடியில்)
1.	அருள்மிகு ஏகாம்பரநாதர் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல்	989.72
2.	அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல்	763.86
	மொத்தம்	1,753.58

2017 ஜூன் 20]

2.16 வெளிநாட்டு நிறுவன உதவித் திட்டங்கள்

தமிழக அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2.16.1 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் (TNUIP)

இத்திட்டத்தின் நிதி உதவியுடன் 9 உள்ளாட்சி அமைப்புகளில் 9 குடிநீர் மேம்பாட்டு பணிகள் ₹663.68 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 4 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2.16.2 ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம் (SMIF)

இத்திட்டத்தின் நிதி உதவியுடன் 18 உள்ளாட்சி அமைப்புகளில் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற 23 பணிகள் ₹1,468.14 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 11 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 12 பணிகள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

2.16.3 தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

உலக வங்கி நிதியுதவியுடன் ₹3,831.00 கோடி செலவில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை (TNSUDP) *செயல்படுத்திட நிருவாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது செயலாக்கத்தில் உள்ளது.*

இந்தத் திட்டம் நகர் ஆளுமை கூறு, நகர்பகுதிக்கான தொழில்நுட்ப உதவி கூறு மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டு கூறு ஆகிய 3 துணைத் திட்டங்களை கொண்டதாகும்.

இத்திட்டத்தில் நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூறு மற்றும் நகர்ப்பகுதிக்கான தொழில்நுட்ப உதவிக்கூறு (Urban Sector Technical Assistance Component) *ஆகிய இரண்டு துணைத் திட்டங்கள் நகராட்சி நிருவாக ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக் கூறு என்ற துணைத் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி

சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. செயலாக்கத்தில் உள்ள பணிகளுக்கு நிதி உதவி பெறக்கூடிய வகையில் (Retro Financing) ₹211.88 கோடி மதிப்பீட்டில் மூன்று குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு அப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் இரண்டு குடிநீர் திட்டங்கள், ஒரு பாதாள சாக்கடை திட்டம் மற்றும் மூன்று நீர்நிலைகள் மேம்பாட்டு பணிகள் ₹976.80 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2.16.3.1 நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூறு

ஈரோடு மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் நகராட்சி ஆகியவை நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூற்றின்கீழ் மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

i. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் கட்டமைப்புத் திறன்

ii. வளர்ச்சித் திட்டங்கள்

iii. நீடித்த நிதி மற்றும்

iv. மின் ஆளுமை மற்றும் பொது தகவல் அமைப்பு

ஆகிய நான்கு இனங்களில் நகர் மேலாண்மையினை மேம்படுத்துவதற்கு நகர்ப்புற ஆளுமை கூற்றின்கீழ் நிதியுதவி அளிக்கப்படும்.

மேற்கண்ட நகர் மேலாண்மை இனங்களில் மேற்கொள்ளப்படும் திருப்திகரமான செயல்பாடுகளின் அடிப்படையில் இந்நகரங்களுக்கு மானியம் வழங்கப்படும். 2016-17 முதல் 2021-22 வரையிலான ஆண்டுகளில் நகர் மேலாண்மையில் எய்தப்படும் சாதனைகளின் அடிப்படையில் ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு தலா ₹153.24 கோடியும், ஓசூர் நகராட்சிக்கு ₹76.62 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014-15 மற்றும் 2015-16 ஆம் ஆண்டுகளில் நகர் மேலாண்மையில் எய்தப்பட்ட சாதனைகளுக்காக 2016-17 ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு தலா ₹25.54 கோடியும், ஓசூர் நகராட்சிக்கு ₹12.77 கோடியும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதே அளவிலான மானியம் 2017-18 ஆம் ஆண்டிலும் இந்நகரங்களுக்கு வழங்கப்படும்.

2017 ஜூன் 20]

2.16.3.2 நகர்ப்பகுதிக்கான தொழில்நுட்ப உதவிக்கூறு

இக்கூறின்கீழ், கீழ்க்கண்ட நான்கு துணைக்கூறுகள் நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

வ. எண்	துணைக்கூறு	மொத்த நிதி	உலக வங்கி நிதி
		(மில்லியன் டாலரில்)	
1.	நகராட்சி மின் ஆளுமை / பொது நிதி மேலாண்மை மற்றும் புவியியல் தகவல் அமைப்பு	21.50	11.50
2.	திறன் மற்றும் நிறுவன மேம்பாடு	7.00	6.00
3.	திட்ட தயாரிப்பு நிதி	2.00	0
4.	திட்ட மேலாண்மை மற்றும் திட்ட செயல்பாட்டு செலவு	3.5	3.5
	மொத்தம்	34.00	21.00

2.16.3.3 நகர்ப்புறங்களில் மின் ஆளுமை

உள்ளாட்சி அமைப்பு பணிகளை மின் ஆளுமைமூலம் கையாள்வதற்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கு விரைவாகவும் தரமாகவும் சேவைகளை செய்வதற்கு 29 எண்ணிக்கையிலான நகராட்சி மின் ஆளுமை சேவைகள் (e-governance modules) கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மையப்படுத்தப்பட்ட மின்னணு ஆளுமை முறை என்ற பெரிய திட்டம் ₹18.31 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2016-17 ஆம் ஆண்டில் 12 மின் ஆளுமை சேவைகள் 11 மாநகராட்சிகளிலும், 124 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த மின் ஆளுமை சேவைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 4,679 பணியாளர்களுக்கு பயன்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. நகராட்சி நிருவாக ஆணையரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 135 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மீதமுள்ள 17 மின் ஆளுமை சேவைகளும் ஆகஸ்டு 2017 இறுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படும்.

2.16.3.4 புவியியல் தகவல் அமைப்பு (GIS)

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III-ன்கீழ் புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படையில் ஒவ்வொரு வீடாக சென்று

சொத்து விவரம் கணக்கெடுத்தல், அடிப்படை வரைபடம் மற்றும் பயன்பாடு வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகள் 7 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டன. செயலாக்கத்திலுள்ள நகர்ப்புற நீடித்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மீதமுள்ள 118 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக 2017-18 ஆம் ஆண்டில் இத்திட்டம் 14 நகராட்சிகளில் ₹4.67 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2.17 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Institute of Urban Studies - TNIUS)

கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவதற்கான ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்திற்காக 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதன் நோக்கங்கள்:

(i) நகராட்சி நிருவாகத்தின் பல்வேறு பிரிவுகளில் நவீன மேலாண்மை நுட்பங்களை பயன்படுத்துவதன் அவசியத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(ii) நகராட்சி நிருவாகம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வெளியீடுகள் மூலமாக அறிவாற்றலை வளர்த்தல்.

(iii) நகர்ப்புற மேம்பாடு, நகராட்சி நிருவாகம் மற்றும் அவை சார்ந்த துறைகளில், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் (Consultancy Services) மேற்கொள்ளுதல்.

(iv) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் அதற்கான உதவிகளைச் செய்தல்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வழங்கும் ஆண்டு பங்களிப்புத் தொகை இந்தப் பயிற்சி நிறுவனத்தின் முக்கிய நிதியாதாரம் ஆகும்.

இந்த நிறுவனம் நகர்ப்புற ஆளுகை தொடர்பான கூட்டு முயற்சிகளுக்கென, மாநில மற்றும் தேசிய அளவிலான கீழ்க்காணும் புகழ்பெற்ற பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது:

2017 ஜூன் 20]

1) இந்திய பொறியியல் பணியாளர் கல்லூரி (ESCI), ஹைதராபாத்.

2) இந்தியன் இன்ஸ்ட்டிடியூட் ஆப் ஹியுமன் செட்டில்மென்ட் (IIHS), பெங்களூரு.

3) தமிழ்நாடு ஐசிடி அகாடமி (ICT Academy), சென்னை.

4) காருண்யா பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் மற்றும்

5) குமரகுரு பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

குமரகுரு பொறியியல் கல்லூரியும் இப்பயிற்சி நிறுவனமும் ஒன்று சேர்ந்து பயிற்சி / கருத்தரங்கு / பயிலரங்கம் / கலந்துரையாடல் / பயிற்சி அட்டவணை/ பட்டப்படிப்பு / வெளிப்புறப் பயணம் ஆகியவற்றை மாணவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களின் மேம்பாட்டிற்காக நடத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ஒப்பந்தம் செய்துள்ளன.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் "வாழ்வதற்கேற்ற சீர்மிகு நகரம்" (Smart and Livable City) என்ற தலைப்பில் தேசிய அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கு கோயம்புத்தூர் குமரகுரு பொறியியல் கல்லூரியில், 24.2.2017 மற்றும் 25.2.2017 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் நகர்ப்புற உள்ளாட்சிகளின் பொறியியல் மற்றும் நகரமைப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2.18 மாநகராட்சிகள்

2.18.1 மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியானது 1.5.1971 அன்று நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 15,61,129 மற்றும், மாநகராட்சியின் பரப்பளவு 147.99 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு வருமானம் ₹348.98 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின்கீழ் 10 பூங்காக்கள்

₹4.86 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் மீதமுள்ள 5 பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) 12,079 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹14.49 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 3,918 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) 122 இருக்கைகளுடன் கூடிய 24 சமுதாய கழிப்பிடங்கள் ₹1.20 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹4.85 கோடியில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 9 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 8 புனரமைப்பு மற்றும் 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹460.25 இலட்சம் மதிப்பீட்டில் 14 நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதிகள் மற்றும் மதுரை இராஜாஜி மருத்துவமனையில் ஒரு "குறுகிய கால தங்கும் விடுதி" கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில் 5 பணிகள் முடிவுற்று, 10 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- மின்விசை பம்புகளுடன் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி, ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளை தூர்வாருதல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல், கோச்சடை மற்றும் மேலக்கல் அருகில் நீர் உறிஞ்சி கிணறுகள் அமைத்தல் போன்ற வறட்சி நிவாரண பணிகள் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநகராட்சி பொது நிதி பங்களிப்புடன் சேர்த்து மொத்தம் ₹30.67 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதில் அனுமதிக்கப்பட்ட 17 பணிகளில் 5 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2017 ஜூன் 20]

- *உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டத்தில் ₹10.00 கோடியும் பொது நிதியும் சேர்த்து மொத்தம் ₹20.00 கோடி மதிப்பீட்டில், 41.85 கி.மீ. பழுதடைந்த சாலைகள் சீரமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டதில் 23.76 கி.மீ. சாலை பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

2.18.2 கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி, 1.5.1981 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 16,01,438 ஆகவும், பரப்பளவு 265.36 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹682.64 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- *அம்ருத் திட்டத்தின்கீழ் ₹395.41 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் குறிச்சி, குனியமுத்தூர், துடியலூர், வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி மற்றும் காளப்பட்டி ஆகிய பகுதிகளில் எடுத்துக்கெள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.*

- *கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளுக்கு குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்துவதற்கு ₹108.16 கோடி மதிப்பீட்டில் ஜெர்மானிய வங்கி* (KfW) *நிதி உதவியின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்* (JnNURM-UIG) *கீழ் ₹556.57 கோடி மதிப்பீட்டில் (24x7) குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.*

- *அம்ருத் திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் ஆண்டில் ₹9.43 கோடி மதிப்பீட்டில் 13 பூங்காக்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 6 பூங்காக்களின் பணிகள் முன்னேற்றத்தில்*

[2017 ஜூன் 20

உள்ளன. மீதமுள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) 6,056 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹7.26 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 3,298 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) 468 இருக்கைகளுடன் கூடிய 18 சமுதாய கழிப்பிடங்கள் ₹4.59 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 3 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹4.20 கோடியில் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 4 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 3 புனரமைப்பு மற்றும் 1 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹178.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதிகள் மற்றும் கோயம்புத்தூர், அரசு மருத்துவமனையில் ஒரு “குறுகிய கால தங்கும் விடுதி” கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் 4 பணிகள் முடிவுற்று, ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் நிதியில் ₹20.00 கோடி மதிப்பீட்டில், 40.922 கி.மீ. பழுதடைந்த சாலைகள் சீரமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டதில் 23.5 கி.மீ. சாலை பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி (TUFIDCO) கடனுதவியின்கீழ் ₹44.07 கோடி மதிப்பீட்டில் 60.76 கி.மீ. நீள சாலைகள் பழுதுபார்க்கும் பணிகள் 20 சிப்பங்களில் மேற்கொள்ளப்பட்டன. 20 சிப்பங்களில்

2017 ஜூன் 20]

13 சிப்பங்கள் பணி முடிவுற்றது. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- *மின்விசை பம்புகளுடன் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி, ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளை தூர்வாருதல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் போன்ற வறட்சி நிவாரண பணிகள் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் பொது நிதியும் சேர்த்து மொத்தம் ₹9.94 கோடி மதிப்பீட்டில் 127 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் 75 பணிகள் மாநில பேரிடர் நிவாரண நிதி 2017-ன்கீழ் ₹5.00 கோடியில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றன. மீதமுள்ள 52 பணிகள் ₹4.94 கோடியில் பொது நிதியின்கீழ் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 38 எண்ணிக்கை பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

2.18.3 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 1.4.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 9,16,857 மற்றும் பரப்பளவு 167.23 சதுர கிலோ மீட்டர் ஆகும். ஆண்டு சராசரி வருமானம் ₹345.66 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

- *ஜெர்மானிய வங்கி* (KfW) *நிதி உதவியின்கீழ் ₹63.70 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *அம்ருத் திட்டத்தின்கீழ் 5 பூங்காக்கள் ₹4.78 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பூங்கா பணி முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.*

- *தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்* (Swachh Bharat Mission) *1,900 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹2.28 கோடி*

மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) 20 இருக்கைகளுடன் கூடிய 2 சமுதாய கழிப்பிடங்கள் ₹20 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) ₹14.82 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம், முதல் நிலை சேகரிப்பு முதல் அடிப்படை கட்டமைப்பு செயலாக்கம் வரை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 23 பணிகள் எடுக்கப்பட்டதில் 4 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹2.35 கோடியில் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 7 புனரமைப்பு மற்றும் 2 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதம் உள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹2.25 கோடி மதிப்பீட்டில் 3 நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதிகள் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனையில் 2 "குறுகிய கால தங்கும் விடுதி" கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில் 3 பணிகள் முடிவுற்று, 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ஆழ்துளைக் கிணறுகள் புனரமைப்பு செய்தல், நீர் உறிஞ்சி கிணறுகள் புனரமைப்பு புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், மின்மோட்டாருடன்கூடிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், கை பம்புகள் சிறு மின்விசை பம்புகளுடன் கூடிய ஆழ்துளைக் கிணறுகளை பழுது பார்க்க தேவைப்படும் உதிரி பாகங்கள் வாங்குதல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், தற்காலிக குடிநீர் தொட்டிகள் அமைத்தல் போன்ற வறட்சி நிவாரண பணிகள் மாநில பேரிடர்

நிவாரண நிதியின்கீழ் மொத்தம் ₹3.15 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு ₹50.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, மீதமுள்ள, ₹2.65 கோடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடப்படும். அனுமதிக்கப்பட்ட 20 பணிகளில் 5 பணிகள் முடிக்கப்பட்டு, 1 பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மீதமுள்ள 14 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2.18.4 சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சி, 1.6.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 8,31,038 ஆகவும், பரப்பளவு 91.34 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹171.45 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன:

- அம்ருத் திட்டத்தின்கீழ் ₹4.57 கோடி மதிப்பீட்டில் 11 இடங்களில் பூங்கா பணிகள் நடைபெற்று வருகின்றன. 4 பூங்கா பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) 1,515 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹1.81 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) 40 இருக்கைகளுடன் கூடிய 5 சமுதாய கழிப்பிடங்கள் ₹0.39 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) ₹17.58 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள், முதல் நிலை சேகரிப்பு முதல் அடிப்படை கட்டமைப்பு செயலாக்கம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 14 பணிகள் எடுக்கப்பட்டு துவக்கப்பட்டுள்ளன.

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹3.70 கோடியில் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 6 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 10 புனரமைப்பு மற்றும் 5 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹1.50 கோடி மதிப்பீட்டில் 5 நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதிகள் மற்றும் சேலம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனையில் ஒரு "குறுகிய கால தங்கும் விடுதி" கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் 5 பணிகள் முடிவுற்று, ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தின் (TUFIDCO) கடனுதவியின்கீழ் ₹74.47 கோடி மதிப்பீட்டில் 121.87 கி.மீ. சாலைகள் பழுதுபார்க்கும் பணி 41 சிப்பங்களாக மேற்கொள்ளபட்டது. 41 சிப்பங்களில் 6 சிப்பங்கள் பணி முடிவுற்றது. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- பேரிடர் மேலாண்மை நிதி மற்றும் பொது நிதியின்கீழ் மொத்தம் ₹2.45 கோடி மதிப்பீட்டில் மின்விசைப் பம்புகளுடன் கூடிய புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளைத் தூர்வாருதல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைத்தல் போன்ற 67 வறட்சி நிவாரணப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் 39 பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள 28 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ₹3.00 கோடி மதிப்பீட்டில் துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டுதல், ₹0.75 கோடி நவீன இறைச்சி கூடம் கட்டுதல் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு திட்டத்தின்கீழ் ₹5.00 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மேம்பாடு ஆகிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

2017 ஜூன் 20]

2.18.5 திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சி, 1.6.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 4,74,838 ஆகவும், பரப்பளவு 108.65 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹122.35 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- *ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் ₹230.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

- *அம்ருத் திட்டத்தின்கீழ் 9 பூங்கா பணிகள் ₹4.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 5 பூங்கா பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.*

- *தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்* (Swachh Bharat Mission) *3,100 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹3.72 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 2,115 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்* (Swachh Bharat Mission) *48 இருக்கைகளுடன் கூடிய 6 சமுதாய கழிப்பிடங்கள் ₹0.47 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹0.90 கோடியில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 7 புனரமைப்பு பணிகள் முடிவுற்றுள்ளன. மீதம் உள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் ₹0.75 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதி ஒன்றும் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் ஒரு "குறுகிய கால தங்கும் விடுதி" கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.*

- வறட்சி நிவாரணப் பணிகளாக மாநகராட்சி நிதியின்கீழ் ஏற்கெனவே உள்ள 90 எண்ணிக்கை ஆழ்துளைக் கிணறுகளில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நகராட்சியின் சொந்த லாரிகள்மூலம் சீராக குடிநீர் வழங்கப்படுகிறது. தலைமை நீரேற்று நிலையத்தில் ஆற்றுநீர் இறைக்கும் பணியை சீரமைக்கின்ற நீர்மூழ்கி மோட்டார் 4 எண்ணிக்கை வழங்குதல் மற்றும் இணைப்பு குழாய் வாங்கி பொருத்துதல், மின் மோட்டார் வழங்குதல், நீர் உறிஞ்சி கிணறுகள் அமைத்தல் போன்ற பணிகள் மாநகராட்சி நிதியிலிருந்து ₹0.84 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட 12 பணிகளில் 5 பணிகள் நிறைவுற்று மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் மாநகராட்சியின் சுகாதார சந்துகளில் 5.279 கி.மீ. நீளத்திற்கு கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி ₹4.70 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

2.18.6 ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சி 1.1.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 4,98,129 ஆகவும், பரப்பளவு 109.52 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹161.45 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- அம்ருத் திட்டத்தின்கீழ் ₹484.45 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் எடுக்கப்பட்டு மேற்படி பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

- அம்ருத் திட்டத்தின்கீழ் ₹4.90 கோடி மதிப்பீட்டில் 8 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 4 பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) 3,554 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹4.26 கோடி

2017 ஜுன் 20]

மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 2,428 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- *தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்* (Swachh Bharat Mission) *50 இருக்கைகளுடன் கூடிய 5 சமுதாய கழிப்பிடங்கள் ₹0.49 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்* (Swachh Bharat Mission) *₹12.77 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம், முதல் நிலை சேகரிப்பு முதல் அடிப்படை கட்டமைப்பு சுழற்சி செய்யத் தேவையான வசதிகள் வரை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 12 பணிகள் எடுக்கப்பட்டு 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹2.75 கோடியில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 5 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 5 புனரமைப்பு பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹44.92 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதி ஒன்றும், மாவட்ட மருத்துவமனையில் "குறுகிய கால தங்கும் விடுதி" கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தின்* (TUFIDCO) *கடனுதவியின்கீழ் ₹86.53 கோடி மதிப்பீட்டில் 87.00 கி.மீ. சாலைகள் பழுதுபார்க்கும் பணி 48 சிப்பங்களாக மேற்கொள்ளப்பட்டது. 48 சிப்பங்களில் 45 சிப்பங்கள் பணி முடிவுற்றது. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *வறட்சி நிவாரணப் பணிகளாக மின்விசை பம்புகளுடன் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளை தூர்வாருதல், லாரிகள்மூலம்*

குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநகராட்சி பொது நிதியையும் சேர்த்து மொத்தம் ₹2.66 கோடி மதிப்பீட்டில் 36 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 32 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- *உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின்கீழ் ₹3.00 கோடி மதிப்பீட்டில் துப்புரவு பணியாளர்களுக்கான குடியிருப்பு அமைத்தல் மற்றும் ₹0.75 கோடி மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடம் கட்டுதல் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன.*

2.18.7 திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி, 1.1.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 8,77,778 ஆகவும், பரப்பளவு 159.35 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹196.23 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

- *அம்ருத் திட்டத்தின்கீழ் ₹250.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் எடுக்கப்பட்டு மேற்படி பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.*

- *அம்ருத் திட்டத்தின்கீழ் ₹6.08 கோடி மதிப்பீட்டில் 10 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் எஞ்சியுள்ள 8 பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.*

- *தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்* (Swachh Bharat Mission) *4,428 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹5.31 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 3,051 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

2017 ஜூன் 20]

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹4.85 கோடியில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 9 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 8 புனரமைப்பு மற்றும் 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹0.75 கோடி மதிப்பீட்டில் 4 நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதி கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தின் (TUFIDCO) கடனுதவியின்கீழ் ₹52.17 கோடி மதிப்பீட்டில் 69.586 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பழுதுபார்க்கும் பணி 38 சிப்பங்களாக மேற்கொள்ளப்பட்டது. 38 சிப்பங்களில், 32 சிப்பங்கள் பணி முடிவுற்றது. எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- புதிய ஆழ்துளைக் கிணறுகள் மின்விசை பம்புகளுடன் அமைக்கும் பணி, ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளை தூர்வாருதல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் போன்ற வறட்சி நிவாரண பணிகள் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் பொது நிதியும் சேர்த்து மொத்தம் ₹1.16 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன அனுமதிக்கப்பட்ட 13 பணிகளில், 10 பணிகள் முடிவுற்று, எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2.18.8 வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சி, 1.8.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 5,04,079 ஆகவும், பரப்பளவு 87.91 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹80.42 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- அம்ருத் திட்டத்தின்கீழ் ₹234.93 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணி எடுக்கப்பட்டு மேற்படி பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

- அம்ருத் திட்டத்தின்கீழ் 8 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் ₹4.48 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சியுள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) 7,250 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹8.70 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 3,550 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) ₹2.48 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் மேற்கொள்ளப்பட்டு, முதல் நிலை சேகரிப்பு, அடிப்படை கட்டமைப்பு அமைத்தல் மற்றும் கழிவுகள் சுழற்சி செய்ய தேவையான வசதிகள் உள்ளிட்ட 5 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 1 பணி முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹2.05 கோடியில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 7 புனரமைப்பு மற்றும் 2 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹83.70 இலட்சம் மதிப்பீட்டில் 2 நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதிகள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2 பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் நிதியில் ₹6.00. கோடி மதிப்பீட்டில், 14.98 கி.மீ. நீளமுள்ள பழுதடைந்த சாலைகளை சீரமைக்கும்

2017 ஜூன் 20]

பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின்கீழ் ₹2.50 கோடி மதிப்பீட்டில் துப்புரவு பணியாளர்களுக்கான குடியிருப்பு அமைத்தல் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ₹5.00 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2.18.9 தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி, 5.8.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 3,70,896 ஆகவும், பரப்பளவு 90.63 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹93.54 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- அம்ருத் திட்டத்தின்கீழ் ₹4.15 கோடி மதிப்பீட்டில் 6 பூங்காக்கள் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் எஞ்சியுள்ள 4 பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) 3,618 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹4.34 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 1,720 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) 48 இருக்கைகளுடன் கூடிய 6 சமுதாய கழிப்பிடங்கள் ₹0.47 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹1.40 கோடி மதிப்பீட்டில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைத்தல் மற்றும் 2 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் நிதியில் ₹17.91 கோடி மதிப்பீட்டில், 24.542 கி.மீ. நீளமுள்ள பழுதடைந்த சாலைகளைச் சீரமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- வறட்சி நிவாரணப் பணிகளாக குடிநீர் லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், தாமிரபரணி ஆற்றின் அருகே நீர் உள்ளோட்ட வாய்க்கால் தூர்வாருதல், நீர் உறிஞ்சி கிணறுகள் புனரமைத்தல் போன்ற 8 பணிகள் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் பொது நிதியும் சேர்த்து மொத்தம் ₹0.69 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2.18.10 தஞ்சாவூர் மாநகராட்சி

தஞ்சாவூர் மாநகராட்சி 19.2.2014 அன்று தரம் உயர்த்தப்பட்டு மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 2,22,943 ஆகவும், பரப்பளவு 36.31 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு வருமானம் ₹89.18 கோடி ஆகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- அம்ருத் திட்டத்தின்கீழ் ₹48.14 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணி எடுக்கப்பட்டு மேற்படி பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- அம்ருத் திட்டத்தின்கீழ் 9 பூங்காக்கள் மேம்பாட்டுப் பணிகள் ₹4.78 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் எஞ்சியுள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) 1,346 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹1.62 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 1,114 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2017 ஜூன் 20]

- *தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹1.80 கோடியில் 9 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹134.50 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற வீடில்லாத ஏழைகளுக்கான விடுதிகள் ஒன்றும் எம். சாவடி, தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில் "குறுகிய கால தங்கும் விடுதி" ஒன்றும் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் ஒரு பணி முடிக்கப்பட்டு, மற்றொன்று முன்னேற்றத்தில் உள்ளது.*

- *புதிய ஆழ்துளைக் கிணறுகள் மின்விசை பம்புகளுடன் அமைக்கும் பணி, ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளை தூர்வாருதல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் போன்ற வறட்சி நிவாரண பணிகள் பொது நிதியிலிருந்து மொத்தம் ₹0.46 கோடி மதிப்பீட்டில் 7 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின்கீழ் ₹7.50 கோடி மதிப்பீட்டில் 20.47 கி.மீ. சாலை மேம்பாட்டு பணி எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின்கீழ் ₹5.00 கோடி மதிப்பீட்டில் அலுவலக கட்டடம் கட்டுதல் மற்றும் ₹1.00 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.*

- *தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் நிதியின்கீழ் ₹11.07 கோடி மதிப்பீட்டில், 23.391 கி.மீ. பழுதடைந்த சாலைகள் சீரமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.*

2.18.11 திண்டுக்கல் மாநகராட்சி

திண்டுக்கல் மாநகராட்சி 19.2.2014 அன்று தரம் உயர்த்தப்பட்டு மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு

கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 2,07,327 ஆகவும், பரப்பளவு 14.01 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹41.00 கோடியாகவும் உள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- அம்ருத் திட்டத்தின்கீழ் 9 பூங்காக்கள் மேம்பாட்டுப் பணிகள் ₹4.81 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் எஞ்சியுள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swachh Bharat Mission) 4,600 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹5.52 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 1,882 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) 16 இருக்கைகளுடன் கூடிய 2 சமுதாய கழிப்பிடங்கள் ₹0.16 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் (Swachh Bharat Mission) ₹13.9 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் மேற்கொள்ளப்பட்டு முதல் நிலை சேகரிப்பு முதல் அடிப்படை கட்டமைப்பு செயலாக்கம் வரையிலான 18 பணிகள் எடுக்கப்பட்டு 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் ₹1.45 கோடியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புனரமைத்தல் மற்றும் 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு புனரமைப்பு பணி நிறைவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் ₹82.20 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற வீடு இல்லாத ஏழைகளுக்கான விடுதிகள் ஒன்றும் மாவட்ட மருத்துவமனையில்

2017 ஜூன் 20]

"குறுகிய கால தங்கும் விடுதி" ஒன்றும் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒரு பணி முடிவுற்றுள்ளது. மற்றொரு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- *தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) திட்டத்தின்கீழ் ₹10.20 கோடி மதிப்பீட்டில் 14.154 கி.மீ. சாலைகளை மேம்படுத்தும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *புதிய ஆழ்துளைக் கிணறுகள் மின்விசை பம்புகளுடன் அமைத்தல், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளை தூர்வாருதல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் போன்ற 109 வறட்சி நிவாரண பணிகள் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் பொது நிதியிலிருந்து ₹0.89 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 42 பணிகள் நிறைவுற்று, 67 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின்கீழ் ₹5.0 கோடி மதிப்பீட்டில் பேருந்து மேம்பாட்டு பணி எடுத்துக்கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.*

2.19 வர்தா புயல் 2016

கடந்த 2016 டிசம்பர் மாதம் 12 மற்றும் 13-ம் தேதிகளில் ஏற்பட்ட வர்தா புயல் காரணமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9 நகராட்சிகள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் 5 நகராட்சிப் பகுதிகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகின. அதிகமான மழை மற்றும் காற்று வீசியதால் வேரோடு மரங்கள் பிடுங்கப்பட்டு குடிநீர் பகிர்மான குழாய்கள், கட்டடங்கள், சுற்றுச்சுவர், சாலைகள், கால்வாய்கள், தெரு விளக்குகள் மற்றும் மின்கம்பங்கள் ஆகியன சேதமடைந்து பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை வெகுவாக பாதிப்புக்குள்ளானது.

நகராட்சிப் பகுதிகளில் சாய்ந்த சுமார் 4,463 மரங்கள் அப்புறப்படுத்தும் பணி, மழைநீர் தேங்கிய இடங்களில் 69 எண்ணிக்கையில் மோட்டார் பம்பு செட்டுகள் கொண்டு மழைநீர் வெளியேற்றும் பணி, 6.25 கி.மீ. நீளத்தில் குடிநீர் குழாய்கள்

சேதமடைந்ததை மாற்றியமைத்தல், 184 எண்ணிக்கையில் எலக்ட்ரிக்கல் பேனல் போர்டுகள் மாற்றியமைத்தல், 28 எண்ணிக்கையில் மோட்டார் பம்புகள் மாற்றியமைத்தல் மற்றும் 10,595 எண்ணிக்கையில் தெரு விளக்குகள் கம்பங்களுடன் மாற்றியமைத்தல் போன்ற மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு மக்கள் இயல்பு வாழ்வு நிலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

2.20 மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி விருது

சிறப்பான முறையில் செயலாற்றும் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு விருது வழங்க, 2012-13 ஆம் ஆண்டில் "மாண்புமிகு முதலமைச்சர் விருது" உருவாக்கப்பட்டது.

2015-16 ஆம் ஆண்டிற்கு திண்டுக்கல் மாநகராட்சி சிறந்த மாநகராட்சியாகவும் (பரிசுத் தொகை ₹25 இலட்சம்) மற்றும் நகராட்சிகளில், பட்டுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் இராமநாதபுரம் நகராட்சிகள் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த நகராட்சிகளாகவும் (பரிசுத் தொகை முறையே ₹15 இலட்சம், ₹10 இலட்சம் மற்றும் ₹5 இலட்சம்) தேர்வு செய்யப்பட்டன.

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2016 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின்போது, மேற்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை நகரமானது தமிழ்நாட்டில் பெரிய முக்கிய மாநகரமாகும். இந்த நகரம் வரலாற்று மற்றும் நவீன சமகால இந்திய கலாச்சாரத்தை சித்தரிக்கிறது. சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம் நாள் அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி, நாட்டின் மிகப் பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும், உலகின் இரண்டாவது பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும் உள்ளது.

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள்தொகை 67.27 இலட்சம் ஆகும். சென்னை மாநகராட்சியுடன், 2011 ஆம் ஆண்டு 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதன்மூலம் மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரில் இருந்து 426 சதுர கிலோ மீட்டராக அதிகரித்து, நாட்டின் நான்காவது மிகப் பெரிய மாநகராட்சியாகத் திகழ்கிறது. 329 வருட வரலாறு கொண்ட சென்னை மாநகராட்சி, தொன்மை வாய்ந்த மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டத்தின்மூலம் சென்னை மாநகராட்சி அதன் சட்டப்பூர்வமான அதிகாரங்களைப் பெறுகிறது. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.1.2016 அன்று முதல் சென்னை மாநகராட்சி "பெருநகர சென்னை மாநகராட்சி" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்னர் இருந்த 155 வார்டுகள், 107 வார்டுகள் மறுசீரமைக்கப்பட்டு, புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புப் பகுதிகள் 93 வார்டுகளாகவும் வரையறுக்கப்பட்டு தற்போது மொத்தம் 200 வார்டுகளாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே இருந்த 10 மண்டலங்கள் 7 மண்டலங்களாக மறுசீரமைக்கப்பட்டு, தற்போது இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகள் 8 புதிய மண்டலங்களாக வரையறுக்கப்பட்டு, மண்டலங்களின் மொத்த எண்ணிக்கை 10-லிருந்து தற்போது 15 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலங்கள், நிருவாக வசதிக்காக 3 வட்டாரங்களாக அதாவது, வடக்கு வட்டாரம், மத்திய வட்டாரம், தெற்கு வட்டாரம் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரமும் 5 மண்டலங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வட்டாரங்கள் துணை/இணை/கூடுதல் ஆணையர் நிலையில், உள்ள அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகின்றன.

அரசு, மாநகராட்சி விரிவாக்கத்திற்குப் பின்னர் கூடுதல் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக, மனிதவள ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் கூடுதலாக 784 பணியிடங்களை உருவாக்கி அனுமதியளித்துள்ளது. இந்த நடவடிக்கை, முடிவுகளை துரிதமாக மேற்கொள்ளவும், பொதுமக்களின் குறைகளைக் களையவும் ஏதுவாக அமைந்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை தற்போது, 11,95,723 ஆகவும், தொழில்வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 1,23,773 ஆகவும் உள்ளது. 2016-17 ஆம் ஆண்டில் சொத்து வரிமூலம் ₹650 கோடி வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31.3.2017 வரையில் ₹695.46 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டில் சொத்து வரி மூலமான வருவாய் ₹586.46 கோடி ஆகும்.

2015-16 ஆம் ஆண்டில் மூலதன செலவினங்கள் ₹1,754.53 கோடி ஆகும். மேலும், 2016-17 ஆம் ஆண்டில் மூலதன செலவினங்கள் ₹2,464.67 கோடி ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் கடந்த 5 ஆண்டுகளில் எவ்வாறு இருந்தது என்று கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

ஆண்டு	வருவாய் வரவினம் (₹ கோடியில்)	உயர்வு விழுக்காடு (%)
2012 - 13	1,591.41	28.43
2013 - 14	2,066.13	29.83
2014 - 15	2,195.90	6.28
2015 - 16	2,347.66	6.91
2016 - 17	2,742.43	16.82

3.1 அம்மா உணவகம்

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்கள், தினக்கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள்

2017 ஜூன் 20]

போன்றவர்கள், சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் உணவு வழங்குவதற்காக, அம்மா உணவகங்கள் துவங்க உத்தரவிட்டார்கள். இதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 400 அம்மா உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்களும், மொத்தம் 407 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் ஐந்து ரூபாய்க்கும், தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும் மற்றும் மாலை நேரத்தில், இரண்டு சப்பாத்தி, பருப்பு கடைசல் மூன்று ரூபாய்க்கும் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இது வரை அம்மா உணவகங்கள் மூலமாக 41.67 கோடி இட்லிகளும், 15.55 கோடி பலவகை சாதங்களும், 19.56 கோடி சப்பாத்திகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு நாளும் சுமார் 3.5 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டமானது சமூக பொருளாதார நிபுணர்களால் உலகில் மிகச் சிறந்த திட்டமாகவும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்குவதாகவும் பாராட்டப்படுகிறது.

3.2 அம்மா குடிநீர்

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.2.2016 அன்று சென்னை பெருநகரில் எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) *மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தாங்களும் பருக வேண்டும் என்ற ஏழை எளிய மக்களின் விருப்பத்திற்கிணங்க "அம்மா குடிநீர் திட்டம்" என்ற புதிய திட்டத்தினைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.*

இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 50 இடங்களில் எதிர்மறை சவ்வூடு பரவுதல்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் ₹5.30 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மணிக்கு 2,000 லிட்டர் நீரை சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.

[2017 ஜூன் 20

மேலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆய்வகங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டு அதன் தரம் உறுதி செய்யப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்மூலம் பொது மக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் ஏழை எளிய மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தானியங்கி நிலையத்தில் ஸ்மார்ட் கார்டு (Smart Card) மூலம் எளிதில் குடிநீர் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின்மூலம் இது வரை சராசரியாக 13,000 குடும்பங்களுக்கு மொத்தம் 5.37 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

3.3 தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மருத்துவ வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு 50,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, 138 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரண்டு சுகாதார நிலையக் கட்டடப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதுநாள் வரை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், தொற்று நோய்கள், தொற்றா நோய்களுக்கு மட்டும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. தற்போது மேற்கூறிய மருத்துவ சேவைகளுடன் கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகளும் ஒரே குடையின்கீழ் அளிக்கப்படுகின்றன. மேலும் 2.5 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையம் என, மண்டலத்திற்கு ஒன்று வீதம் (100 படுக்கைகள், பகுப்பாய்வு கூட வசதியுடன்) 15 நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 14 நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஓர் இடத்தில் கட்டடப் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டமானது சென்னை நகர்ப்புற சுகாதார சங்கத்தின்மூலம் நிருவகிக்கப்படுகிறது. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்திலிருந்து ₹181.62 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2017 ஜூன் 20]

மேலும், 1,025 மகளிர் குழுக்கள் (மகிளா ஆரோக்கிய சமிதி), குடிசை வாழ் பகுதியில் வசிக்கும் பின்தங்கியுள்ள மக்களுக்கும், பெண்களுக்கும் சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

3.4 ஆயுஷ் மருத்துவமனைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 4, 10 மற்றும் 13-ல் 3 ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) ஆரம்பிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஐந்து வகையான இந்திய மருத்துவச் சேவைகள் ஒரே குடையின்கீழ் வழங்கப்படுகின்றன. இதற்கென ஐந்து இந்திய மருத்துவர்களைக் கொண்டு ஐந்து வகையான இந்திய மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த மருத்துவமனைகளில் நாள் ஒன்றுக்கு 200 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றன. மார்ச் 2016 முதல் மார்ச் 2017 வரையில் 2,02,800 புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று பலன் அடைந்துள்ளனர்.

3.5 வீடற்றோருக்கான காப்பகங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி 37 எண்ணிக்கையில் வீடற்றோருக்கான காப்பகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் நோயாளிகளுடன் வருபவர்கள் தங்குவதற்கான 10 சிறப்பு தங்குமிடங்களைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் நடத்தி வருகிறது.

3.5.1 சிறப்பு காப்பகங்கள் (மருத்துவமனை)

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 110 விதியின் கீழான அறிவிப்பின்படி பின்வரும் அரசு மருத்துவமனைகளில் 6 சிறப்பு காப்பகங்கள் (நோயாளிகளுடன் தங்குபவர்களுக்கென) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 4.3.2017 அன்று திறந்து வைக்கப்பட்டன.

- *ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை-1*
- *கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை-2*
- *அரசு தாய்சேய் நல மருத்துவமனை-2*
- *அரசு குழந்தைகள் நல மருத்துவமனை-1*

மேலும், 2 சிறப்பு காப்பகங்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 12.4.2017 அன்று ஸ்டான்லி அரசு மருத்துவமனையிலும் மற்றும் 2 சிறப்பு காப்பகங்கள் 8.5.2017 அன்று ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையிலும் திறந்து வைக்கப்பட்டன.

காப்பகங்களின் விவரம்

வ.எண்	காப்பகத்தின் வகை	மொத்தம்
1.	அனைத்து பிரிவினர் (ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்)	1
2.	சிறுவர்கள்	4
3.	சிறுவர்கள் மற்றும் சிறுமிகள்	1
4.	சிறுமிகள்	3
5.	வயதான ஆண்கள் மற்றும் பெண்கள்	2
6.	ஆண்கள்	11
7.	ஆண்கள் மற்றும் பெண்கள்	1
8.	மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள்	2
9.	மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள்	1
10.	மனநலம் குன்றிய சிறுவர்கள்	1
11.	மாற்றுத்திறனாளி (பெண்கள்)	1
12.	பெண்கள்	8
13.	சிறப்பு காப்பகங்கள் (மருத்துவமனை)	10
14.	திருநங்கையர்	1
	மொத்தம்	47

இந்த காப்பகங்களின்மூலம், பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 5,224 ஆகும். மேலும், தற்போது 1,152 பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகிறார்கள். மீதமுள்ள 23 புதிய காப்பகங்கள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3.6 பொது சுகாதார தடுப்பு நடவடிக்கைகள்

3.6.1 தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சி தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த 3 இனக்கட்டுப்பாட்டு மையங்களில், இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளைச் செய்து வருகிறது.

2017 ஜூன் 20]

சென்னை மாநகராட்சி கால்நடைப் பிரிவின்மூலம் பொதுமக்களின் புகார்களின் அடிப்படையில் தெரு நாய்கள் பிடித்து வரப்பட்டு விலங்குகள் இன கட்டுப்பாட்டு விதிகளின்படி, நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டு, அடையாளக் குறியிடப்பட்டு அவை பிடிக்கப்பட்ட இடங்களிலேயே மீண்டும் சிகிச்சைக்குப் பிறகு விடப்படுகின்றன.

2016-17-ம் நிதி ஆண்டில் மார்ச் மாதம் வரை 21,622 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 16 நாய் பிடிக்கும் வாகனங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், தனியார் நாய் பிடிப்போர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு முறை சிறப்பு திட்டமாக ஆகஸ்ட் 2016 வரையில் 60,826 தெருநாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

3.6.2 பூச்சி தடுப்பு நடவடிக்கைகள்

கொசுக்களின் தொல்லை மற்றும் கொசுவினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கும், நீர்வழித்தடங்களின் அருகில் வசிக்கும் பொது மக்களுக்கு சிறப்பு திட்டமாக 5.90 இலட்சம் விலையில்லா கொசு வலைகள் ₹9.97 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 5 இலட்சம் நொச்சி செடிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

41 வாகனத்தில் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 260 கையினால் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள்மூலம் கொசு மருந்து அடிக்கப்பட்டு கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுடன் 568 கைத்தெளிப்பான்கள் கொண்டு மழைநீர் வடிகால்வாய்களில் கொசுப்புழு மருந்துகள் தெளிக்கப்பட்டு கொசுக்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனுடன் கொசுப் புழுக்களை உண்ணும் கம்புஃசியா என்னும் மீன்கள் நீர்நிலைகளில் விடப்பட்டு கொசுப்புழுக்கள் அழிக்கப்படுகின்றன.

மேலும் நீரிலும் மற்றும் நிலத்திலும் இயங்கும் உயர் தொழில்நுட்பம் கொண்ட இயந்திரம் (Amphibian machine) ஒன்று பின்லாந்து நாட்டிலிருந்து ₹4.44 கோடி செலவினத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் கேப்டன் காட்டன்

கால்வாய் ஆகியவற்றில் தூர்வாரவும், ஆகாயத்தாமரை அகற்றும் பணி மேற்கொள்ளவும் பயன்படுத்தப்பட்டது. கேப்டன் காட்டன் கால்வாயிலிருந்து இது வரையில் 89,270 சதுர மீட்டர் பரப்பளவிற்கு ஆகாயத் தாமரைகளும் தோராயமாக 24,732 கன மீட்டர் வண்டல் / உபரி மண் அகற்றப்பட்டது. இதேபோல, பக்கிங்காம் கால்வாயிலிருந்து இதுவரையில் 1,44,000 சதுர மீட்டர் பரப்பளவிற்கு ஆகாயத்தாமரைகளும் தோராயமாக 29,250 கன மீட்டர் வண்டல்/உபரி மண் அகற்றப்பட்டுள்ளது.

இதன் விளைவாக நீர்நிலைகள் ஆழப்படுத்தப்பட்டு, இந்தக் கால்வாய்களில் சீரான நீரோட்டம் உறுதி செய்யப்பட்டது. இதன் காரணமாக, சென்னை மாநகரில், குறிப்பாக ஆர்.கே. நகர், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, வியாசார்பாடி, ராயபுரம், மைலாப்பூர் மற்றும் பிற பகுதிகளில் கொசுவின் அளவு குறைந்தது.

தற்போது, குறைந்த அகலம் கொண்ட சிறிய கால்வாய்களில் வண்டல்களை அகற்ற 3 எண்ணிக்கை ரோபாட்டிக் மண் தோண்டும் இயந்திரங்கள் (Robotic Excavators) சுவிட்ஸர்லாந்து நாட்டிலிருந்து ₹19.65 கோடி செலவினத்தில் கொள்முதல் செய்யப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து 30 சிறிய கால்வாய்களிலும் இந்த ரோபாட்டிக் மண்தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி முறையான கால இடைவெளியில் வண்டல்களையும் ஆகாயத் தாமரைகளையும், உபரிமண்ணையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் நிதியாண்டில் சென்னை மாநகரில் ஓடும் நீர்வழிபாதைகளில் கொசு மருந்து தெளிக்கவும், ஆகாயத்தாமரை மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றவும் 11 ஃபைபர் படகுகள் ₹3.19 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டன. நீர்வழித்தடங்களில் உள்ள ஆகாயத்தாமரை செடிகள் மற்றும் தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டு, நீரோட்டம் சீராக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் கொசுத் தொல்லை குறித்த புகார்கள் 2015 ஆம் ஆண்டில் 9,005 ஆக இருந்தது 2016 ஆம் ஆண்டில் 4,495 ஆகக் குறைந்துள்ளன.

3.7 இறைச்சிக்கூடங்கள்

பொது மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை அளிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 இறைச்சிக்கூடங்கள்

2017 ஜூன் 20]

நேரடிக் கண்காணிப்பில் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஆடுகள்/ மாடுகள் கால்நடை உதவி மருத்துவர்கள்மூலம் பரிசோதனை செய்த பின்னரே வெட்டப்படுகின்றன. கூடுதலாக மண்டலம் 7-ல் கள்ளிக்குப்பத்தில் ஆட்டிறைச்சிக்கூடம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த இறைச்சிக்கூடங்களில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஒரு நாளைக்கு 5 மெட்ரிக் டன் திறனுடைய இரண்டு சாண எரிவாயு கலன்களை பெரம்பூர் இறைச்சிக்கூடத்தில் நிறுவி, அனைத்து இறைச்சிக்கூடங்களில் ஏற்படும் மொத்த திடக்கழிவுகளை, விஞ்ஞான முறையில் அழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3.8 கல்வித் துறை

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித் துறையில் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 119 தொடக்கப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகள் ஆகும். இதில் 200 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பெருநகர சென்னை பள்ளிகளில், மொத்தம் 88,792 மாணவ / மாணவியர் பயின்று வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முழுமையான மற்றும் தரமான கல்வி, ஒவ்வொரு குழந்தையையும் சென்று அடைய வேண்டும் என்ற உயரிய கொள்கையோடு செயல்பட்டு வரும் சென்னை மாநகராட்சிப் பள்ளிகள், தனியார் பள்ளிகளுக்கு இணையாக போட்டிபோடும் அளவிற்கு உயர்ந்துள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி, பள்ளி மாணவர்களுக்கு, மருத்துவம், பொறியியல், கலை, சட்டம் போன்ற மேல்படிப்புகளைப் படிப்பதற்கு அவர்கள் படித்து முடிக்கும் காலம் வரை ஊக்கத் தொகை வழங்குகின்றது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு, விலையில்லா சீருடை வழங்கப்படுகிறது.

10 மற்றும் 12 ஆம் வகுப்பு, மாணவ, மாணவியர் மாலை சிறப்பு வகுப்பில் சோர்வின்றி படிக்க, புரதச்சத்துமிக்க, சுவையான 100 கிராம் “சுண்டல்” தினமும் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு ஓவியம், இசை மற்றும் நடனம் ஆகியவற்றிற்கு சிறப்புப் பயிற்சிகள்

அளிக்க கலை ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் கற்றல் செயல்பாட்டில் மிகவும் ஆர்வமுடன் ஈடுபடுவதற்கு ஏதுவாக அனைத்து உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் வள வகுப்பறைகள் (Smart Classes) துவக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேல்நிலைப் பள்ளிகளில், கண்காணிப்பு கேமராக்கள் மாணவிகளின் பாதுகாப்பிற்காக பொருத்தப்பட்டுள்ளன. மாணவ, மாணவிகளின் பொது அறிவை வளர்க்கும் வகையில் அனைத்து வகுப்புகளுக்கும் தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகள் வழங்கப்பட்டு செய்தித்தாள் படிக்கும் வழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது. சென்னை மழலையர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் விலையில்லா சீருடை மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

70 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், கற்றல் கற்பித்தல் தொய்வின்றி சிறந்து மேலோங்க மின்னாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆய்வகங்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு கற்றல் சூழ்நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது. 30 சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் விளையாட்டு பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தகுந்த குடும்ப சூழ்நிலை மற்றும் சமுதாய சூழ்நிலை இல்லாத மாணவ / மாணவியர் நலனுக்காக சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை மற்றும் சென்னை மேல்நிலைப் பள்ளி, சுப்பராயன் தெரு, சேத்துப்பட்டு ஆகிய இரண்டு பள்ளிகளில் அம்மா உண்டு உறைவிடப் பள்ளி துவங்கப்பட்டு, அங்கு பயின்ற மாணவர்கள் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சிறப்புத் திட்டங்களான "Spark Programme for Gifted and Talented students" மற்றும் "Spark Programme for Challengers" போன்ற திட்டங்கள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் சிறந்த மாணவ/ மாணவியரை அதிக மதிப்பெண்கள் பெற செய்யும்பொருட்டு பயிற்சி வழங்குவதற்காகவும், மெல்ல கற்கும் மாணவர்கள் அனைவரையும் அரசு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற செய்யவும், அதன்மூலம் சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறுவதற்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2017 ஜூன் 20]

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்று அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள் தொழில்நுட்பம் மற்றும் கலைக் கல்லூரிகளில் சேர்ந்து பயின்று வருகின்றனர். 2016-17 ஆம் வருடத்தில் 200-க்கும் அதிகமான மாணவர்கள் பொறியியல், 649 மாணவர்கள் கலை மற்றும் அறிவியல், 24 மாணவர்கள் செவிலியர் பயிற்சி மற்றும் 7 மாணவர்கள் சட்டப்படிப்பு கல்லூரிகளில் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித் துறையின்கீழ் மண்டலம்-9-ல் தொழிற்பயிற்சி நிலையமானது இயங்கி வருகிறது. இதில் மத்திய அரசின் NCVT அனுமதியுடன் பல்வேறு பாடப்பிரிவுகளான கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர், குழாய் பொருத்துபவர், பிட்டர், கம்மியர் (மோட்டார் வாகனம்), மின் பணியாளர், கம்மியர் (மின்னணுவியல்) ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்து செல்லும் அனைத்து மாணாக்கர்களுக்கும் பல்வேறு தொழில் துறைகளில் வேலைவாய்ப்புகள் தொழில் பயிற்சி நிலையம்மூலம் ஏற்படுத்தித் தரப்படுகிறது.

மாணவர்கள் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. இதன் தொடர்பாக சென்னை பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டு போட்டிகள் விதிமுறைகளின்படி கோலாகலமாக நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணாக்கர்கள் சிறப்பிக்கப்பட்டார்கள். இதன் பயனாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணாக்கர்கள் மாநில அளவில் பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் குத்துச்சண்டை போட்டியில் 19 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான பிரிவில் முதலிடமும், 14 மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவியருக்கான பிரிவில் இரண்டாம் இடமும், 19 வயதிற்குட்பட்ட மாணவியருக்கான பிரிவில் மூன்றாம் இடமும் பிடித்துள்ளனர். மேலும் தேசிய அளவில் பள்ளி விளையாட்டு இந்திய கூட்டமைப்பால் நடத்தப்படும் கைப்பந்து போட்டியில் 17 வயதிற்குட்பட்ட மாணவியருக்கான பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர்.

3.9 பூங்கா, அரங்கத் துறை மற்றும் திறந்தவெளி நிலங்கள்

3.9.1 பூங்கா

பெருநகர சென்னை மாநகராட்சியில் 525 பூங்காக்கள், நகரின் 118 சாலை மையத்தடுப்புக்கள், 128 போக்குவரத்து தீவுத்திட்டு

பூங்காக்கள் மற்றும் 166 சாலையோர பூங்காக்கள் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன.

இப்பூங்காக்களின் மொத்தப் பரப்பில் 70% பசுமைக்கும், மீதமுள்ள 30% பூங்கா தொடர்பான பிற பணிகளுக்கும் பயன்படுத்தலாமென முக்கிய கொள்கை முடிவெடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் பசுமையை நல்ல முறையில் தொடர்ந்து பராமரிக்க தெளிப்பு நீர் பாசன சாதனங்கள் பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள பூங்காக்களில் கோடை காலத்தில் நிலத்தடி நீரை வீணாக்காமலும், லாரிகளில் நீர் கொண்டு வந்து ஊற்றுவதை தவிர்க்கவும் பரிட்சார்த்த முறையில் இரண்டு பூங்காக்களின் அருகில் உள்ள கழிவுநீர் குழாய்களில் உள்ள கழிவுநீரை சுத்திகரித்து செடிகளுக்கு பயன்படுத்துவதற்கான சாதனங்கள் நிறுவப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

3.9.2 அரங்கத் துறை

பெருநகர சென்னை மாநகராட்சி அரங்கத் துறையில் 213 விளையாட்டுத் திடல்கள், 96 நவீன உடற்பயிற்சி கூடங்கள், 5 உள்விளையாட்டரங்கங்கள், 3 நீச்சல் குளங்கள், 7 டென்னிஸ் ஆடுகளங்கள், 11 ஸ்கேட்டிங் தளங்கள் போன்றவற்றுடன் செயல்பட்டு வருகின்றன. இவற்றினை நாளொன்றுக்கு சுமார் 10,000/-க்கு மேற்பட்ட பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்துகின்றனர்.

இதன் காரணமாக உள்ளூர் விளையாட்டு வீரர்கள் குறிப்பாக கால்பந்து, பளுதூக்குதல், உடற்கட்டமைப்பு, கைப்பந்து மற்றும் கூடைபந்து ஆகியவற்றில் இலவசமாக சிறந்த பயிற்சி பெற்று தேசிய மற்றும் உலகளவில் சிறந்த விளையாட்டு வீரராக உருவாகி வருகிறார்கள். குறிப்பாக, கோட்டம்-136, தி.நகர், வெங்கட்நாராயணா சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கூடைப்பந்து மைதானத்தில் பயிற்சி பெற்ற உள்ளூர் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு சார்பாக தேசிய அளவிலும், இந்தியா சார்பில் தென்கிழக்கு ஆசிய விளையாட்டுப் போட்டி மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பல பதக்கங்களைப் பெற்றுள்ளனர். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி உடற்பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெற்ற விளையாட்டு வீரர்கள் பளுதூக்குதல், உடற்கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் உலகளவில்

இந்தியா சார்பில் கலந்துகொண்டு பல பதக்கங்களைக் குவித்துள்ளனர்.

2016-2017 ஆம் நிதியாண்டில் மண்டலம்-6, கோட்டம்-72, கன்னிகாபுரத்தில் ஏற்கெனவே உள்ள விளையாட்டு அரங்கத்தை தேசிய அளவிலான கால்பந்து மைதானமாக தரம் உயர்த்த ₹2.5 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், மண்டலம்-13, கோட்டம்-175 கோட்டூர்புரம், கால்வாய் கரை அருகில் உள்ள ஹாக்கி மைதானத்தை உலக தரத்துடன் கூடிய செயற்கை புல் தரை (Astroturf), பார்வையாளர் அமருமிடங்கள் மற்றும் அரங்கத்திற்கு தேவையான நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஹாக்கி மைதானமாக மாற்ற தோராயமாக ₹4 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

3.9.3 திறந்தவெளி நிலங்கள் (Open Space Reservation Lands)

பெருநகர சென்னை மாநகராட்சியின் வசமுள்ள 752 எண்ணிக்கையிலான திறந்தவெளி நிலங்கள் பெரும்பாலும் விரிவாக்கப்பட்ட பகுதியிலேயே உள்ளன. இவற்றில் 237 திறந்தவெளி நிலங்கள் பூங்காக்களாக மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள திறந்தவெளி நிலங்கள் தேவைக்கு தகுந்தாற்போல் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களாக மாற்றப்படும். கடந்த 2015-16-ம் நிதியாண்டில் 25 பூங்காக்கள் மற்றும் 2 விளையாட்டு திடல்கள் உருவாக்க ₹25.82 கோடியில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ₹5.53 கோடி மதிப்பீட்டில் 7 பூங்காப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2016-17-ம் நிதியாண்டில் 9 பூங்காக்கள் மற்றும்1 விளையாட்டு திடலை திறந்தவெளி நிலங்களில் உருவாக்க ₹18.63 கோடியில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் கூடுதலாக அம்ருத் திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் நிதியாண்டில் 8 பூங்காப் பணிகளுக்காக ₹7.55 கோடி மதிப்பீடும் மற்றும் 2016-17 ஆம் நிதியாண்டில் 24 பூங்காக்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டு, ₹12.92 கோடியில் மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.10 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMCDM)

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் உட்கட்டமைப்பை உலக தரத்திற்கு இணையாக மேம்படுத்த மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட சிறப்பான திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டமாகும். இந்தச் சிறப்பு திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் தமிழக அரசினால் ₹1,488 கோடி நிதி சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் சுமார் 1,146.67 கி.மீ. நீளமுடைய சாலைகளும், 170.69 கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால்வாய்களும், 238.83 கி.மீ. நீளமுடைய நடைபாதை பணிகளும், 12,952 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் அமைக்கும் பணிகளும் ₹1,451.74 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் விரிவாக்கப்பட்ட சென்னை பகுதி மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்

ஆண்டு	சாலைகளின் எண்ணிக்கை	சாலைகளின் நீளம் (கி.மீ.)	செலவினத் தொகை (₹ கோடியில்)	குறிப்பு
2011-12	1,367	344.53	331.06	முடிக்கப்பட்டன
2012-13	1,932	353.67	404.74	முடிக்கப்பட்டன
2013-14	1,215	254.80	388.05	முடிக்கப்பட்டன
2015-16	446	193.67	327.89	முடிக்கப்பட்டன
மொத்தம்	4,960	1,146.67	1,451.74	

3.11 சாலை பராமரிப்பு திட்டங்கள்

3.11.1 பேருந்து தட சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தடசாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேருந்து சாலைப் பணிகள் யாவும் தமிழக அரசு மானிய நிதியான தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி (TURIF) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதி (CMCDM) ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஜூன் 20]

தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டில் ₹50.15 கோடி மதிப்பீட்டில் 84.76 கி.மீ. நீளமுடைய 131 சாலைகளும் மற்றும் 2012-13 ஆம் ஆண்டில் ₹43.71 கோடி மதிப்பீட்டில் 104 எண்ணிக்கையிலான 64.94 கி.மீ. நீளமுள்ள பேருந்து தட சாலைகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றதையொட்டி அனைத்து சாலைகளும் உலகத்தரத்திலான பல்வேறு விதமான செயல்முறைகள் செயல்படுத்தப்பட்டு, சாலைகள் அமைக்கப்பட்டன. அச்செயல்முறைகளே பேருந்து சாலைகள் அமைப்பதில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அச்செயல் முறையில் கீழ்க்கண்ட நவீன முறைகள் உட்படுத்தப்பட்டன.

சாலைப் பணியினை ஆரம்பம் முதல் முடியும் வரை கண்காணிக்கவும், தரத்தினை உறுதி செய்யவும் திட்ட மேலாண்மை கலந்தாளுநர் (Project Management Consultant) நியமித்து அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சாலையின் உயரம் அதிகமாகாமல் இருக்க அனைத்து சாலைகளிலும் நவீன மில்லிங் இயந்திரம் கொண்டு சாலையினை அகழ்ந்தெடுத்து சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சாலைகள் தளம் சரி செய்தல் (Profile Correction), டி.பி.எம். (Dense Bituminous Macadam) மற்றும் பி.சி. Bituminous Concrete) ஆகிய மூன்று அடுக்குகளாக அமைக்கப்படுகின்றன.

அனைத்து பேருந்து தட சாலைகளும் 9 மீட்டர் (30 அடி) அகலம் கொண்ட எலக்ட்ரானிக் சென்சார் பேவர் இயந்திரம்மூலம் அமைக்கப்படுவதால் சாலைகளின் மேற்பரப்பு சீராகவும், வாகன போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமைகின்றன. அனைத்து சாலைகளும் 5 அடுக்கு தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

அனைத்து பேருந்து தட சாலைகளிலும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக தெர்மோ பிளாஸ்டிக் வண்ணக் கோடுகளும், இரவில் மிளிரும் மிளிர்வான்களும் (studs) அமைக்கப்படுகின்றன. மேலும், மரங்களைச் சுற்றிலும் மழைநீர் செல்லும் வகையில் கான்கிரீட் ஜாலிகள், மழைநீர் செல்லும் வகையில் சாலைகளின் இரு ஓரங்களிலும் நீர் தடம் (water table) அமைத்தல், Silt Catch Pit, வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை

பலகைகள் அமைத்தல் போன்ற போக்குவரத்து மேம்பாட்டு பணிகளும் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சிறந்த தொழில்நுட்பத்தில் அனைத்து பேருந்து தட சாலைகளும் மற்றும் 18 எண்ணிக்கையிலான சிறிய பேருந்துகள் செல்லும் சாலைகளும் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மேம்படுத்தப்பட்டுள்ளன:

திட்டம்	ஆண்டு	சாலைகளின் எண்ணிக்கை	சாலைகளின் நீளம் (கி.மீ.)	செலவினத் தொகை (₹கோடியில்)	குறிப்பு
TURIF	2013-14	42	29.35	43.78	பணிகள் முடிக்கப்பட்டன.
TURIF	2014-15	54	46.56	88.07	பணிகள் முடிக்கப்பட்டன.
CMCDM	2015-16	198	152.56	285.19	பணிகள் முடிக்கப்பட்டன.
TURIF	2015-16	92	76.61	117.36	பணிகள் முடிக்கப்பட்டன.
SDRF	2015-16	103	40.83	55.70	பணிகள் முடிக்கப்பட்டன.
TURIF	2016-17	40	24.17	18.30	32 சாலைகள் முடிக்கப்பட்டன. 8 சாலைகள் பணி துவங்கப்பட வேண்டும்
மொத்தம்		529	370.08	608.40	

இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் கடந்த 100 ஆண்டுகளில் சென்னை மாநகர் கண்டிராத அளவில் 2015 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது பெய்த கன மழையிலும் சேதமடையவில்லை.

3.11.2 உட்புறச்சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 33,374 உட்புறச்சாலைகள் 5525 கி.மீ. நீளத்திற்கு பராமரிக்கப்பட்டு

2017 ஜூன் 20]

வருகின்றன. உட்புறச்சாலைப் பணிகள் யாவும் மூலதன நிதி மற்றும் தமிழக அரசு மானிய நிதியான தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்ட நிதி (TURIF), தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதி (CMCDM) ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

உட்புறச்சாலைகள் மேம்படுத்துதல்					
திட்டம்	ஆண்டு	சாலை களின் எண் ணிக்கை	சாலை களின் நீளம் (கி.மீ.)	செலவினத் தொகை (₹ கோடியில்)	குறிப்பு
CMCDM	2011-12	1,367	344.53	331.06	முடிக்கப்பட்டன
	2012-13	1,932	353.67	404.74	முடிக்கப்பட்டன
	2013-14	1,215	254.80	388.05	முடிக்கப்பட்டன
	2015-16	248	41.00	42.70	முடிக்கப்பட்டன
MIDF Phase I	2015-16	3,807	624.98	373.53	முடிக்கப்பட்டன
MIDF Phase II	2015-16	1,585	255.59	149.64	முடிக்கப்பட்டன
TURIF	2016-17	1,471	265.52	84.71	91 நடைபெற்று வருகின்றன. 123 நடைபெறவுள்ளது
மொத்தம்		11,625	2,140.09	1,774.43	
GCC Capital Fund	2011-12	896	176.23	39.40	முடிக்கப்பட்டன
	2012-13	1,174	240.40	81.37	முடிக்கப்பட்டன
	2013-14	2,224	295.09	166.34	முடிக்கப்பட்டன
	2014-15	7,510	1,180.41	923.94	முடிக்கப்பட்டன
	2015-16	1,010	267.87	228.94	முடிக்கப்பட்டன
மொத்தம்		12,814	2,160.00	1,439.99	
ஆக மொத்தம்		24,439	4,300.09	3,214.42	

3.12 இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தை ஊக்குவித்தல்

இந்தியாவிலேயே முதல் முறையாக இயந்திர வாகனம் சாரா போக்குவரத்து திட்டத்தை (Non-Motorised transport) ஏற்று செயல்படுத்தும் முதல் மாநகராட்சியாக பெருநகர சென்னை மாநகராட்சி விளங்குகிறது. பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை

கருத்தில்கொண்டு இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தினை (Non-Motorised Transport) ஊக்குவிப்பதற்காக நடைபாதைகளை உலகத்தரத்திற்கு இணையாக 5 அடியிலிருந்து 10 அடியாக அகலப்படுத்தும் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படுகின்றது. பாதசாரிகளின் உரிமைகளை உறுதி செய்யும்பொருட்டு, குறிப்பாக சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான முதியோர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவ, மாணவியர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோர்களின் வசதிக்காக முதற்கட்டமாக 49 பேருந்து தட சாலைகளில் நடைபாதை மேம்பாட்டு பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2012-13 நிதியின்கீழ் ₹39.50 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 7 நடைபாதை பணிகள் ₹13.61 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

முதன்முறையாக தமிழ்நாடு சாலை நகர்ப்புற உட்கட்டமைப்புத் நிதியின்கீழ் மேம்படுத்தப்பட்ட இந்த 49 நடைபாதைகளும் பாதசாரிகளும், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வீல் சேர்களும் செல்வதற்கு ஏதுவாக எந்த ஏற்றத்தாழ்வுமின்றி சாலையின் முழு நீளத்திற்கும் ஒரே உயரத்தில் அமைந்திருக்கும் வகையில் 15 செ.மீ. மட்டத்தில் அமைக்கப்படுகின்றன. சாலைகளின் சந்திப்புக்களிலும் இதே அளவில் இருக்கும் வகையில் டேபிள் டாப் (Table Top) முறையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டு அவை வேகத்தடைகளாகவும் பயன்படுகின்றன. அனைத்து கட்டடங்களின் முகப்பிலும் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சி செலவிலேயே சாய்தளங்கள் (Ramp) அமைக்கப்படுகின்றன.

நடைபாதைகளில் இடையூறாக அமைந்துள்ள சேவை நிறுவனங்களின் பெட்டகங்கள், மின்மாற்றிகள் ஆகியவை நடைபாதை ஓரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்துவதை தவிர்க்கும்பொருட்டு கிரானைட் தடுப்பான்கள் நடைபாதையின் குறுக்கே அமைக்கப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அமைக்கப்படும் நடைபாதைகள் பாதசாரிகள் மிகவும் பாதுகாப்பாக செல்லும் வகையில் உள்ளதால் இப்பணிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும் இவ்வகையான நடைபாதை பணிகளை மாற்றுத் திறனாளிகளின் அமைப்பு வரவேற்றுள்ளது.

2017 ஜூன் 20]

மேலும் இப்பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 5 தேசிய அளவிலான விருதுகள் மற்றும் ஒரு சர்வதேச விருதும் கிடைத்துள்ளன.

போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு கொள்கை நிறுவனம் (ITDP) *பல்வேறு சாலைகளின் தன்மையை கருத்தில் கொண்டு சாலை வடிவமைப்புகளைக் கொடுத்துள்ளனர். சாலைகளில் வாகனம் செல்வதற்கான ஒவ்வொரு வழியிலும்* (Lane) *அகலம் 3.75 மீ என நிர்ணயம் செய்து வாகனங்கள் நேராக செல்வதற்காக வழிவகை செய்து மற்றும் பாதசாரிகள் செல்வதற்கு நடைபாதையினை அகலப்படுத்தியும் சாலைகளின் அகலம் அதிகமாக உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு வழிவகை செய்தும் வடிவமைத்துள்ளார்கள். இந்தச் சாலை வடிவமைப்பு பேருந்து சாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.*

3.13 மெரினா கடற்கரையைச் சீரமைக்கும் திட்டம்

மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, காமராஜர் சாலை மேற்கு பகுதியில் உள்ள வெவ்வேறு கட்டடங்களின் மதில் சுவர்கள் மற்றும் நடைபாதையை ஒரே மாதிரியாக சீரமைக்க திட்டமிடப்பட்டது. இதில் புதைந்த நிலையிலுள்ள மற்றும் சேதமடைந்த கல்தூண்களை மாற்றி, புதிய கல்தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்கல்தூண்களுக்கிடையே கலைநயம் மிக்க துருபிடிக்காத, வார்த்தெடுக்கப்பட்ட இரும்பாலான கிரில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக மொத்தம் ₹33.10 கோடி மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி இது நாள் வரை 96 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் ஜூலை 2017 இறுதிக்குள் செய்து முடிக்கப்படும்.

3.14 சிறப்பு திட்டங்கள்

3.14.1 சீர்மிகு நகரம் (Smart City)

மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால், சீர்மிகு நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 20 நகரங்களில் ஒன்றாக சென்னை தேர்வாகியுள்ளது. சீர்மிகு நகரத்திட்டத்தை செயல்படுத்த "சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்" என்ற சிறப்பு நிறுவனம் (Special Purpose Vehicle) *தமிழக அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து தலா 50 சதவீத பங்களிப்பில் நிறுவப்பட்டுள்ளது.*

சீர்மிகு நகரத் திட்டத்தின் தொலைநோக்கு பார்வையின்படி, பெருநகர சென்னை மாநகரம் தன்னிறைவுடன், நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீரிய பொருளாதாரத்தைக் கொண்ட உலகத் தரத்துடனான வணிக நகரமாக மாற்றப்படும். பல்வேறு போக்குவரத்து வழிகளான, இரயில் போக்குவரத்து, மாநகர பேருந்துகள் போன்றவற்றை ஒருங்கிணைத்து பாதுகாப்பான நடைபாதை மற்றும் சைக்கிள் தடத்தை மேம்படுத்தி தனிநபர் போக்குவரத்திற்கு சீரான பாதைகளுடன் நகர்ப்புற போக்குவரத்தினை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் சேகரிப்புத் திட்டம் மற்றும் தொடர்ச்சியான நீர் வழங்கல் திட்டம் ஆகியன முன்மொழியப்பட்ட மற்ற திட்டங்கள் ஆகும்.

சீர்மிகு நகரத் திட்டம் (Smart City Project) 5 ஆண்டு காலங்களில் (2015-2020) முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கீடாக முறையே ₹500 கோடி வீதம் வழங்கப்பட உள்ளது. பொதுமக்களின் வாக்கெடுப்பின் அடிப்படையில் தியாகராயா நகர் “பகுதி சார்ந்த வளர்ச்சி” திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பகுதி சார்ந்த வளர்ச்சித் திட்டத்தில் 10 தலைப்பின்கீழ் 40 இனங்கள் ₹877.92 கோடி மதிப்பீட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை முறையே,

1. பாதசாரிகளுக்கு ஏற்ற நடைபாதைகள் மற்றும் மோட்டார் அல்லாத வாகன போக்குவரத்தை மேம்படுத்தும் திட்டம்.
2. போக்குவரத்து மேலாண்மை திட்டம்
3. பூங்கா மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்
4. மழைநீர் வடிகால் மேம்பாடு மற்றும் மழைநீர் சேகரிப்பு
5. திடக்கழிவு மேலாண்மை மேம்பாட்டுத் திட்டம்
6. துகவல் தொடர்பு தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் திட்டம்
7. சுகாதார மேம்பாடு
8. தடையில்லா குடிநீர்த் திட்டம்
9. கழிவு நீர் மேலாண்மைத் திட்டம்
10. மின் இணைப்பு மேம்பாடு மற்றும் சூரிய மின் உற்பத்தி

2017 ஜூன் 20]

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதையும் மேம்படுத்தும் (Pan City Development)) *திட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு தலைப்பின்கீழ் 8 இனங்கள் ₹488.32 கோடி மதிப்பீட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.*

1. *மோட்டார் வாகனமில்லா போக்குவரத்துக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள்*
2. *நீர் மற்றும் பேரிடர் மேலாண்மைக்கான தகவல்தொடர்பு தொழில்நுட்பங்கள்*

பகுதி சார்ந்த வளர்ச்சித் திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் செயல்படுத்தும் திட்டத்திற்காக மொத்தம் ₹1,366.24 கோடி செலவு ஆகும் என தோராயமாக திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சீர்மிகு நகரத் திட்டப் பணிகளைக் கண்காணிக்க கீழ்க்கண்ட 5 திட்ட மேலாண்மை வல்லுனர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. *நகர்ப்புற மேலாண்மை நிபுணர் மற்றும் குழு தலைவர்*
2. *நகர்ப்புற உட்கட்டமைப்பு (நீர் மற்றும் கழிவு நீர்) நிபுணர்*
3. *போக்குவரத்து நிபுணர்*
4. *அரசு மற்றும் தனியார் பங்களிப்பு மற்றும் கொள்முதல் ஒப்பந்த நிபுணர்*
5. *நிதி மேலாண்மை நிபுணர்*

3.14.2 அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

பசுமை இடங்களை அபிவிருத்தி செய்வது மற்றும் திறந்தவெளிகளில் பசுமையை மேம்படுத்தி பராமரிக்கப்படுவதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு பிரிவுகள் அமைத்து நகரங்களின் உன்னதமான மதிப்பை அதிகரிக்க செய்வது அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT scheme) *ஒரு நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில், 2015-16 ஆம் நிதியாண்டில் மத்திய மற்றும் மாநில நிதி உதவியில் 8 புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு எடுத்துக்*

கொள்ளப்பட்டு 4 பூங்கா பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள 4 பூங்கா பணிகளை ஜூலை 2017-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3.15 பாலங்கள்

தங்குதடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்யும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியால், ஆறுகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே உள்ள பாலங்கள், தரைமட்ட பாலங்கள் மற்றும் நடை பாலங்கள், பேருந்து சாலை சந்திப்புகளில் உள்ள மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே உள்ள மேம்பாலங்கள் என மொத்தம் 272 பாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே 16 சுரங்கப்பாதைகளும் மற்றும் முக்கிய பேருந்து சாலைகளில் 6 பாதசாரிகள் சுரங்கப்பாதைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் சிறந்த முறையில் பராமாரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் ₹114.95 கோடி மதிப்பீட்டில், பல்வேறு இடங்களில் புதிதாக 5 மேம்பாலங்கள், 10 சிறு பாலங்கள் மற்றும் 3 சுரங்கப் பாதைகள் கட்டும் பணிகளும் மற்றும் ஏற்கனவே உள்ள பாலங்கள்/மேம்பாலங்களை மேம்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதில் ₹16.66 கோடி மதிப்பீட்டில், கத்திவாக்கம் நெடுஞ்சாலை-காக்ரேன் பேசின் சாலையில், இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28-2-2016 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. இந்த மேம்பாலத்தினால், கொருக்குப்பேட்டை பகுதியில் உள்ள சுமார் 5 இலட்சம் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும், தற்போது ₹21.20 கோடி மதிப்பீட்டிலும், 6 சிறு பாலங்கள் கட்டும் பணிகள் மற்றும் 15 பாலங்களுக்கான அபிவிருத்தி பணிகள் ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன.

2016-17 ஆம் ஆண்டில் ₹130.93 கோடி மதிப்பீட்டில், 27 பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. இதில் 17 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 5 பெட்டக வடிவ பாலங்கள் கட்டுதல், 2 சுரங்கப்பாதைகளில் அபிவிருத்தி பணிகள் மற்றும் 2 பாதசாரிகள் நடைபாலங்களில் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், விதி எண் 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட, ஆர்.கே. நகர் தொகுதிக்கு உட்பட்ட எண்ணூர் நெடுஞ்சாலை இரயில்வே சந்திக்கடவு

2017 ஜூன் 20]
எண் 2A மற்றும் மணலி சாலை இரயில்வே சந்திக்கடவு எண் 2B-யை ஒருங்கிணைத்து மேம்பாலம் அமைக்கும் பணி ₹117.47 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது.

3.16 தெரு விளக்கு

பெருநகர சென்னை மாநகராட்சி 2,77,902 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது. இவற்றில் 1,74,784 விளக்குகள் குறைந்த மின்சாரம் உபயோகிக்கும் எல்.இ.டி. தெரு விளக்குகளாகும். 79,255 சோடியம் ஆவி விளக்குகளாகும். எஞ்சிய 23,863 விளக்குகள் சி.எப்.எல்., மெட்டல் அலைடு, இன்டக்ஷன் மற்றும் பிற விளக்குகளாகும். சோடியம் ஆவி விளக்குகள் குறைந்த மின்சாரம் உபயோகிக்கும் எல்.இ.டி. தெரு விளக்குகளாக படிப்படியாக மாற்றப்படும். பெருநகர சென்னை மாநகராட்சியில் மகளிர், வயதானவர்கள் மற்றும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பு கருதி உட்புற மற்றும் பேருந்து சாலைகளில் சீரான வெளிச்சம் தரும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சீரான வெளிச்சம் தரும் தெரு விளக்குகள் அமைக்கும் நோக்கத்துடன், மின் சக்தி சேமிக்கும் எல்.இ.டி தெரு விளக்குகள் அமைக்கப்படுகின்றன. சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் மெட்டல் அலைடு விளக்குகளைவிட எல்.இ.டி தெரு விளக்குகள் 45% குறைவாக மின்சாரம் உபயோகிக்கும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 1,10,000 எண்ணிக்கையில் எல்.இ.டி. விளக்குகள் அமைக்கும் பணி ₹322 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மின் சக்தி சேமிப்பு தரும் எல்.இ.டி தெரு விளக்குகள் அதிக அளவில் அமைக்கப்பட்டுள்ள மாநகராட்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியும் ஒன்றாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஒவ்வொரு மாதமும் தெருவிளக்கு மின்கட்டணமாக ₹6.00 கோடி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தி வந்தது. புதியதாக எல்.இ.டி விளக்குகளாக மாற்றி அமைத்ததால் மின்கட்டணம் மாதத்திற்கு ₹4.50 கோடியாக குறைந்துள்ளது. இதனால் மின்கட்டணம் செலுத்துவதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதத்திற்கு ₹1.50 கோடியும் வருடத்திற்கு ₹ 18 கோடியும் சேமிப்பாகிறது.

3.17 மழைநீர் வடிகால்

பெருநகர சென்னை மாநகரில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்க, 1,894 கி.மீ. நீளத்திற்கு 7,351

எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் கட்டமைப்பை பெருநகர சென்னை மாநகராட்சி பராமரித்து வருகிறது. மேலும், 48.80 கி.மீ. நீளத்திற்கு 30 நீர்வழிக் கால்வாய்களையும் பராமரித்து வருகிறது. இதில் கொடுங்கையூர் கால்வாய் (5.28 கி.மீ), கேப்டன் காட்டன் கால்வாய் (3.04 கி.மீ), பாடி குப்பம் கால்வாய் (2.78 கி.மீ) போன்ற சில கால்வாய்களும் அடங்கும்.

கடந்த 5 ஆண்டுகளில், விரிவாக்கத்திற்கு முந்தைய சென்னை மாநகராட்சிப் பகுதியில் ₹640 கோடி செலவில் 355 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JnNURM)) மற்றும் தமிழக அரசின் நிதி ஆதாரங்களின் மூலமாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கும் இடங்கள் 300 என்ற எண்ணிக்கையில் இருந்து 50-க்கும் குறைவான இடங்களாகக் குறைந்துள்ளது.

விரிவாக்கத்திற்கு முன்பு இருந்த சென்னை மாநகரின் கட்டமைப்பு வசதிகளுக்கு இணையான வசதிகளை விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் கொள்கைப்படி, மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் மழைநீரை பாதுகாப்பாகச் சேகரித்து, குளம் மற்றும் ஏரிகளில் சென்றடைய இணைப்புகள் ஏற்படுத்துதல், நிலத்தடி நீரை பாதுகாக்க மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான சுத்தமான சூழ்நிலைகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கப்பகுதிகளில் கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் வடிநிலப்பகுதிகளில் 1,069.40 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பை ஏற்படுத்த ₹4,034.30 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, 11 மற்றும் 12-க்குட்பட்ட கூவம் மற்றும் அடையாறு வடிநிலப்பகுதிகளில் 326 கி.மீ. நீளத்திற்கு, மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை ₹1,101.43 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நீடித்த நிலையான நகர வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்தி வருகிறது. இதில் 215 கி.மீ நீளத்திற்கு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2017 ஜூன் 20]

மேலும், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) உதவியுடன், கோவளம் வடிநிலப்பகுதியில் மூன்று கூறுகளாக M1, M2, M3, 360 கி.மீ. நீளத்திற்கு ₹1,243.45 கோடி மதிப்பில், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி மேற்கொள்ள, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி M1 மற்றும் M2 கூறுகளுக்கு திட்ட ஆய்வறிக்கையினை மறு ஆய்வு செய்ய கலந்தாளுநர் அமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளது. M3 கூறுக்கு இந்த வங்கியின் மூலமாக அமர்த்தப்பட்டுள்ள காக்ஸ் கன்சல்டன்ட்ஸ் நிறுவனம், திருத்திய திட்ட அறிக்கையினை தயாரித்துள்ளது.

கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் 429 கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்படவுள்ள ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி ₹1,881.66 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் சர்வதேச நிதி நிறுவனம் (Japan International Cooperation Agency) உதவியுடன் செயல்படுத்த திட்ட அறிக்கையை மறு ஆய்வு செய்யும் பணிக்காக, கலந்தாளுனர் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம் (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited) மூலம் நியமிக்கப்பட்டு, கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, முதல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை தயாரிக்கப்படும்.

3.18 திடக்கழிவு மேலாண்மை

சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றுக்கு 5,400 மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் முதல் கட்டமாக வீடுதோறும் சென்று மாநகராட்சியின் 5,422 மூன்று சக்கர மிதிவண்டிகள்மூலம் சேகரிக்கப்படுகிறது. இரண்டாம் கட்டமாக 369 நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக/இலகுரக வாகனங்கள், 36 அதிக சுமை ஏற்றும் கனரக வாகனங்கள், 157 டிப்பர் வாகனங்கள் மற்றும் 12 இயந்திரப் பெருக்கிகள், 57 சக்கரத்தடை வாகனங்கள் மற்றும் 24 முன்பின்பளு தூக்கிகள் ஆகியவற்றை கொண்டு அகற்றப்பட்டு வருகின்றன.

இப்பணிக்காக 2011-12 முதல் 2015-16 ஆண்டு வரை நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், டிப்பர் வாகனங்கள், இயந்திரப் பெருக்கிகள், சக்கரத்தடை வாகனங்கள், முன்பின் பளுதூக்கிகள், ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர்கள் மற்றும் புல்டோசர்கள் என மொத்தம் 295 வாகனங்கள் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழும் மற்றும்

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் மூலமும் ₹62.25 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் ₹13.26 கோடி செலவில் 7,600 காம்பேக்டர் குப்பைதொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2016-17-ம் நிதியாண்டில் 1,684 காம்பேக்டர் குப்பைதொட்டிகள் ₹3.31 கோடியிலும், 500 மூன்று சக்கர மிதிவண்டிகள் ₹90 இலட்சத்திலும், 15,000 மிதிவண்டிக்கான தொட்டிகள் ₹1.59 கோடியிலும், 2,000 ரோட்டோ மோல்ட் குப்பை தொட்டிகள் ₹43.40 இலட்சத்திலும், கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் தற்போது 9 மண்டலங்களில் லாரி வாகன இயக்கூர்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் இரண்டு வாகன இயக்கூர்தி நிலையங்கள் மணலி மற்றும் சோழிங்கநல்லூரில் ₹7.59 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் மண்டலம் 3 மற்றும் 7-க்காக மதனாங்குப்பத்தில் மூன்று வாகன இயக்கூர்தி நிலையங்கள் கட்டும் பணியும், திருவொற்றியூரில் மண்டலம்-1-க்கான ஒரு வாகன இயக்கூர்தி நிலையம் கட்டும் பணியும் ₹15.89 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன .

பெருநகர சென்னை மாநகராட்சியால் துப்புரவு பணி மேற்கொள்ளப்படும் மண்டலங்களிலும் மற்றும் தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்களிலும் 19,362 துப்புரவுப் பணியாளர்கள் துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். துப்புரவுப் பணியாளர்களின் வருகையினை கை விரல் ரேகை பதிக்கும் இயந்திரம் (Bio metric attendance) மூலம் பதிவு செய்வது அனைத்து மண்டலங்களிலும் அமல்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைத் திறம்பட செயல்படுத்த ஏதுவாக, குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டி வாகனங்கள் செல்லும் விரிவான வழித்தட வரைபடம் தயாரிக்கப்பட்டு களப்பணி கண்காணிக்கப்படுகிறது.

மேலும், துப்புரவு பணியாளர்களுக்குப் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்யும்பொருட்டு அவர்களுக்கு, வாய்க்கவசம், கையுறை, மற்றும் இரவில் ஒளிரும் மேலாடை ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

2017 ஜூன் 20]

சாலைகள், தெருக்கள் மற்றும் நீர்நிலைகளின் கரைகளில் கட்டுமான (ம) இடிபாட்டு கழிவுகளை முறையற்ற வழியில் கொட்டப்படுவதை தடுக்கும் நோக்கத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஒவ்வொரு மண்டலத்திலும் இதற்காக இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அறிவிப்பாக ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் பொது மக்கள் அறியும்பொருட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், விரிவாக்கம் செய்யப்பட்டபோது இணைக்கப்பட்ட 8 மண்டலங்களில் துப்புரவு பணிகளை தனியார் மயமாக்குதலுக்கும் மற்றும் ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல், கட்டட கழிவுகளை பதனிடுதல் மற்றும் விஞ்ஞான ரீதியில் குப்பை வளாகம் சீரமைத்தல் போன்ற பணிகளை ஏற்கெனவே உள்ள குப்பை கொட்டும் வளாகங்களான கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகிய இடங்களில் நிறுவுவதற்கும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detailed Feasibility Report) *தயாரிக்க ஆலோசகர் நியமிக்கப்பட்டார். இது தொடர்பாக வரைவு சாத்தியக்கூறு அறிக்கை ஆலோசகரிடமிருந்து பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.*

3.19 தூய்மை இந்தியா திட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளையும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதிகளாக மாற்ற பெருநகர சென்னை மாநகராட்சி உறுதி பூண்டுள்ளது. அதன் பொருட்டு 2016-17 ஆம் ஆண்டில் 30 வார்டுகளையும், 2017-18 ஆம் ஆண்டில் 70 வார்டுகளையும், மேலும் 2018-19 ஆம் ஆண்டில் மீதமுள்ள 100 வார்டுகளையும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதிகளாக மாற்றவும், பெருநகர சென்னை மாநகராட்சியால் திட்டமிடப்பட்டுள்ளது. 46 வார்டுகள் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட இலக்கை அடைய, சமுதாய கழிப்பிடம் மற்றும் தனி நபர் இல்லங்களில் கழிவறை இல்லாத வீடுகளில் கழிப்பிடம் கட்டுவது போன்ற பணிகள் கீழ்கண்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன:

திட்டம்	நிதியாண்டு	இலக்கு	நிறைவேற்றியது	செலவினத் தொகை (₹கோடியில்)
சமுதாய கழிப்பிடம் (இருக்கைகள்)	இயக்க காலம் (2014-15 முதல் 2018-19 வரை)	1,575	913	13.60
தனி நபர் வீட்டு கழிப்பறை	இயக்க காலம் (2014-15 முதல் 2018-19 வரை)	7,069	4,171	2.79

3.20 வர்தா புயல்-2016

வர்தா புயல் 12-12-2016 அன்று சென்னையில் கரையை கடந்தபோது புயல் காற்று 120-130 கி.மீ வேகத்தில் வீசி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. 17,157 சாலையோர மரங்கள் வேருடன் சாய்ந்தன. 304 பூங்காக்களில் 1,478 மரங்கள் வேருடன் சாய்ந்தன. 558 பேருந்து தட சாலைகளில் மரங்கள் விழுந்ததால் பேருந்து போக்குவரத்து தடைப்பட்டது. 6,133 தெரு மின் கம்பங்கள் சேதமடைந்தன. மேலும் 2,226 தெரு மின் விளக்கு இணைப்புகளும் சேதமடைந்தன. பொதுமக்கள் நலன்கருதி வர்தா புயலால் விழுந்த மரங்கள் உடன் அகற்றப்பட்டன. பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தற்காலிக நிவாரண பணிகளை மேற்கொள்ள ₹75 கோடியை தமிழ்நாடு அரசு வழங்கியது.

வர்தா புயலால் சேதமான மாநகராட்சி சாலைகள், பூங்கா, கட்டடம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பராமரிப்பு பணிகளுக்காக ₹44.09 கோடி செலவில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு 9-3-2017 அன்று ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பேருந்து சாலைகள் சீரமைப்பு, நடைபாதை மற்றும் நிழற்குடை புனரமைப்பு பணிகளுக்காக ₹8.64 கோடி செலவில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. வர்தா புயலால் சேதமடைந்த தெருவிளக்கு கம்பங்களை தற்காலிக சீரமைப்பு செய்ய தோராயமாக ₹10.92 கோடி செலவில் ஒப்பங்கள் கோரப்பட்டு

2017 ஜூன் 20]

6-3-2017 அன்று ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்காக இதுவரை ₹24.71 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையை பசுமை போர்வையாக்க, வர்தா புயலால் மரங்கள் விழுந்த இடத்தில் புதியதாக மரங்களை நடுவதற்கு உயர்மட்ட குழு கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தலைமையில் 31-12-2016, 9-1-2017 மற்றும் 7-2-2017 ஆகிய நாட்களில் நடைபெற்றது. நிலவடிவமைப்பாளர்கள், ஊரகத்திட்ட அமைப்பாளர்கள், தோட்டகலை மற்றும் வனத் துறை அதிகாரிகள் மற்றும் அரசு சாரா பொது நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். சென்னை ஆறுகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT) *மூலம் ஆலோசகர்களின் ஆலோசனை பெற்று விஞ்ஞான பூர்வமாக மரங்களை நட்டு பராமரிப்பது குறித்து விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. மரங்கள் விழுந்த இடத்தில் புதியவகை மரங்கள் நடுவதற்கு பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது நலச் சங்கங்களின் பிரதிநிதிகள்மூலம் மரங்கள் நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

தற்போது வரை 40 முதல் 45 சதவிகித பணிகள் முடிவடைந்துள்ளன. அனைத்து பணிகளும் ஜூலை 2017-க்குள் முடிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. பேரூராட்சிகளின் இயக்ககம்

பேரூராட்சிகள் என்பது மூன்றாம் அடுக்கு உள்ளாட்சி அமைப்பாகவும், கிராம மற்றும் நகர்ப்புற கூறுகளை கொண்ட உள்ளாட்சி அமைப்பாகவும் உள்ளது. வேகமாக அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள்தொகை பெருக்கத்தினை கருத்திற்கொண்டு, மேம்பட்ட சேவை வழங்குதல், கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மூலமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பேரூராட்சிகள் நிருவாகம் முனைப்புடன் செயல்படுகிறது.

4.1 நிருவாக அமைப்பு

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் பேரூராட்சிகள் நிருவகிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 528 பேரூராட்சிகள் உள்ளன.

வ. எண்.	பேரூராட்சிகளின் நிலை	ஆண்டு வருவாய் (₹ இலட்சத்தில்)	பேரூராட்சிகளின் எண்ணிக்கை
1.	சிறப்பு நிலை	200.00 இலட்சத்திற்கு மேல்	64
2.	தேர்வுநிலை	100.00 இலட்சத்திற்கு மேல் 200.00 இலட்சம் வரை	202
3.	முதல்நிலை	50.00 இலட்சத்திற்கு மேல் 100.00 இலட்சம் வரை	200
4.	இரண்டாம் நிலை	50.00 இலட்சத்திற்குள்	62
மொத்தம்			528

பேரூராட்சிகளின் இயக்குநர் துறையின் தலைவராவார். மொத்தமுள்ள 17 மண்டலங்களில், ஒவ்வொரு மண்டலமும் உதவி இயக்குநரின் தலைமையில் இயங்குகிறது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின்கீழ் பேரூராட்சிகளின் நிருவாகம் செயல்பட்டு வருகின்றன. பல பேரூராட்சிகள் சுற்றுலா, வழிபாடு மற்றும் இயற்கையான புராதன நினைவு பண்புக் கூறுகளை உள்ளடக்கிய முக்கியத்துவம் வாய்ந்த தலங்களாக உள்ளன.

2017 ஜூன் 20]

4.2 செயல்பாடுகளும், முக்கிய சேவைகளும்

பேரூராட்சிகள் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரித்தல், பொது சுகாதாரம் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் சீரமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகள் மற்றும் இறைச்சிக் கூடங்கள் பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகள் வழங்குவதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. மேலும் பேருந்து நிலையங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் சந்தைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிப் பராமரிக்கும் பணிகளையும் பேரூராட்சிகள் மேற்கொள்கின்றன. பேரூராட்சிகள் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் மற்றும் வணிக உரிமங்கள் ஆகியவற்றினை வழங்குகின்றன.

பேரூராட்சிகள் சொத்துவரி, தொழில்வரி, கட்டட அனுமதி அளித்தல் போன்ற வரி மற்றும் வரியில்லா இனங்களை விதித்து வசூலித்து வருகின்றன.

4.3 உட்கட்டமைப்பு மேம்பாடு

கிராமப்புரங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள், வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் மற்றும் தரமான வாழ்க்கை ஆகியவற்றுக்காக இடம் பெயர்வதால், மக்கள்தொகை பெருகிவருகிறது. அதன் காரணமாக பேரூராட்சிகளில், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடைத் திட்டங்கள், சாலைகள், தெருவிளக்குகள், எரிவாயு தகனமேடைகள், இறைச்சிக் கூடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் போன்ற தரமான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி அவற்றினை மேம்படுத்திட வேண்டிய மிகப் பெரிய தேவை பேரூராட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இவை தவிர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதி ஆதாரத்தினை உயர்த்துவதோடு, மாநில அரசினால் வழங்கப்படும் மாநில நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்வின்கீழ் வரும் நிதி ஆதாரத்தினை கொண்டும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், நபார்டு கடன் உதவி போன்ற முன்னோடித் திட்டங்களின் மூலமும் அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.4 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு

செய்வதற்காக, முன்னோடித் திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை 2011 ஆம் ஆண்டு துவக்கியுள்ளார்கள்.

பேரூராட்சிகளுக்கு தேவையான அனைத்து வகையான உட்கட்டமைப்பு பணிகளும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ், பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாடு, சாலை மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ₹1,309.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை			ஒதுக்கீடு (₹ கோடியில்)
	எடுக்கப்பட்டவை	முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை	
2011-12	5,275	5,275	0	250.00
2012-13	569	552	17	248.04
2013-14	1,043	905	138	284.96
2014-15	235	211	24	116.66
2015-16	27	0	27	199.88
2016-17	25	0	25	210.34
மொத்தம்	7,174	6943	231	1,309.88

4.5 குடிநீர் வழங்கல்

அரசு, அனைத்து பேரூராட்சிகளிலும் உள்ள மக்களுக்கு குறைந்தபட்ச அளவான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உறுதி பூண்டுள்ளது. பேரூராட்சிகள் 48 தனி குடிநீர் திட்டங்களை பராமரித்து வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. மொத்தமுள்ள 528 பேரூராட்சிகளிலும், நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டருக்கு குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பேரூராட்சிகளில் ஆண்டு வாரியாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு மற்றும் ஆண்டு தோறும் நிலைமைக்கேற்ப கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீர் அளவு பின்வருமாறு:

வ. எண்	வருடம்	பேரூராட்சிகளின் எண்ணிக்கை	குடிநீர் தேவை (மில்லியன் லிட்டரில்)	குடிநீர் விநியோகம் (மில்லியன் லிட்டரில்)	கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டரில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	2011-12	529	564	568.97	4.97
2.	2012-13	529	572	589.20	17.20
3.	2013-14	528	577	610.70	33.70
4.	2014-15	528	585	689.25	104.25
5.	2015-16	528	593	776.23	183.23
6.	2016-17	528	602	686.00	84.00

2011-12 முதல் நாளது வரை நிறைவேற்றப்பட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி, இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி, பகுதி-2 திட்டம், வறட்சி நிவாரணம் மற்றும் பொது நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ், பேரூராட்சிகளில் 5,332 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 5,295 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 37 பணிகள் பல்வேறு நிலைகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செயலாக்கத்தில் உள்ளன. தற்போது மொத்தம் 686 மில்லியன் லிட்டர் குடிநீர் 528 பேரூராட்சிகளில் தினசரி தங்குதடையின்றி விநியோகம் செய்யப்படுகிறது.

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் மழை பொழிவு குறைந்ததன் காரணமாக கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் நீராதாரங்கள் மூலமாக பெறப்பட வேண்டிய குடிநீரின் அளவு கணிசமான அளவில் குறைந்துள்ளது.

2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது போதுமான மழைப்பொழிவு இன்மையாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட முன்னெப்பொழுதும் கண்டிராத குடிநீர் பற்றாக்குறை பேரூராட்சிகளால் நன்கு திட்டமிட்டு சமாளிக்கப்பட்டது. இதனை சரி செய்யும் விதமாக பேரூராட்சிகளில் சீராய்வு செய்து திட்டம் வகுக்கப்பட்டது. மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் பேரூராட் சிகள் பொது நிதியின்கீழ் ₹46.41 கோடி மதிப்பீட்டில்,

3,595 குடிநீர் அபிவிருத்தி பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 3,149 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 446 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

4.6 சுகாதாரம்

528 பேரூராட்சிகளில் இரண்டு வழிமுறைகளில் சுகாதாரப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒன்று பாதாளச்சாக்கடை திட்ட முறை, மற்றொன்று கசடு கழிவு மேலாண்மை திட்டம்.

4.6.1 பாதாள சாக்கடைத் திட்டம்

மக்களுக்கு பாதுகாப்பான சுகாதார வசதிகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் பேரூராட்சிகளில், சுகாதாரத்தையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க பாதாள சாக்கடைத் திட்டம் இன்றியமையாததாக உள்ளது. எனவே, பேரூராட்சிகளில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின்மூலம் பெறப்படும் நிதி ஆதாரங்களைக் கொண்டு பாதாள சாக்கடைத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளது. மாமல்லபுரம், திருச்செந்தூர், திருமழிசை, ஒரத்தநாடு, பழனிச்செட்டிபட்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய 7 பேரூராட்சிகளில் ₹219.86 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், மாமல்லபுரம், ஒரத்தநாடு மற்றும் திருச்செந்தூர் ஆகிய 3 பேரூராட்சிகளில் பணிமுடிக்கப்பட்டுள்ளது. திருமழிசை, திருப்பெரும்புதூர், உளுந்தூர்பேட்டை மற்றும் பழனிச்செட்டிபட்டி ஆகிய 4 பேரூராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வேளாங்கண்ணி பேரூராட்சியில், அம்ரூத் திட்டத்தின் (AMRUT) கீழ் ₹33.51 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைபணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி துவக்கப்பட்டுள்ளது. திருப்போரூர், பொன்னேரி, பெருந்துறை, மண்ணச்சநல்லூர், ஆயக்குடி, வல்லம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 பேரூராட்சிகளில் ₹280.53 கோடி மதிப்பீட்டில் மரபு சார்ந்த பாதாள சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

2017 ஜுன் 20]

4.6.2 கசடு கழிவு மேலாண்மை

கசடு கழிவு என்பது நச்சுத் தொட்டியில், பகுதி சுத்திகரிக்கப்பட்டு, மீதம் தேங்கும் கழிவுகளே ஆகும். இதில் திரவ, திட, கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியன மிகையாக காணப்படும். கசடு கழிவு உற்பத்தியின் அடிப்படையில், முழு செயல்முறை வடிவமைப்பு, சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். குறிப்பிட்ட காலங்களில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், மேலும் கசடுகளை வாகனத்தின்மூலம் இடமாற்றுதல், சுத்திகரிப்பு, மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு கசடு கழிவு மேலாண்மை இன்றியமையாததாகும்.

மக்கள்தொகை குறைவாகவுள்ள 18 பேரூராட்சிகளில், கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்பேரூராட்சிகளாவன:

ஆழ்வார்திருநகரி, செங்கம், ஆலங்காயம், பென்னாகரம், காவேரிப்பட்டணம், ஜலகண்டாபுரம், ஆலம்பாளையம், குன்னத்தூர், நீடாமங்கலம், குரும்பலூர், பரவை, முதுகுளத்தூர், சேத்தூர், சாம்பவார்வடகரை, பெண்ணாடம், தமிழ்நாடு காகித ஆலை, புகளூர், கருங்குழி மற்றும் மாமல்லபுரம் (விரிவாக்கம்).

காஞ்சிபுரம் மாவட்டம் கருங்குழி பேரூராட்சியில் ₹4.93 கோடி மதிப்பீட்டில் கசடு கழிவு மேலாண்மை திட்டம் நவீன தொழில்நுட்பத்தில் சோதனை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிமுடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளது. இந்த முன்னோடி திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில், ஏனைய பேரூராட்சிகளுக்கு படிப்படியாக இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மேலும், கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் பில் அண்ட் மிலிண்டா கேட்ஸ் பவுண்டேசன் (BMGF) *மூலம் ₹3.51 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்த நடவடிக்கையில் உள்ளது.*

இத்திட்டம் முடிவுற்று பயன்பாட்டிற்கு வந்த பின்னர் கோயம்புத்தூர் மாவட்டம் விரிவுபடுத்தப்படும்.

4.6.3 திறந்தவெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல்

தமிழகத்தை திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. மக்கள் நலம், சுற்றுப்புறத் தூய்மை, சுகாதார சீர்கேடு மற்றும் மக்களின் கண்ணியத்தை திறந்தவெளி மனிதக் கழிவு கழித்தல் பாதிக்கிறது. இந்நோக்கத்தை நிறைவேற்ற பேரூராட்சிகளில், புதிய பொது சுகாதார வளாகங்கள் கட்டுதல், பழுதடைந்த பழைய சுகாதார வளாகங்களை சீரமைத்தல் மற்றும் தகவல், கல்வி, தொடர்பு மூலமாக, மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது. திறந்தவெளியில் மனிதக்கழிவு கழிக்கும் இடங்களை கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், அவ்வாறான இடங்கள் 1,095 உள்ளதென கண்டறியப்பட்டது.

இவ்விடங்களில் பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	ஆண்டு	திட்டம்	புதிய கழிப்பிடங்கள் கட்டுதல்	கழிப்பிடங்களை புனரமைப்பு செய்தல்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)
1.	2011-12	திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	52	75	5.53
2.	2011-12	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	80	-	6.04
3.	2012-13	திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	160	221	22.60
4.	2012-13	நபார்டு திட்டம்	376	-	45.20

2017 ஜூன் 20]

வ. எண்	ஆண்டு	திட்டம்	புதிய கழிப்பிடங்கள் கட்டுதல்	கழிப்பிடங்களை புனரமைப்பு செய்தல்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)
5.	2013-14	திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	174	-	22.60
6.	2013-14	அரசு நிதி	77	-	10.00
7.	2013-14	பொது நிதி	-	401	8.01
8.	2014-15	திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	183	-	22.60
9.	2015-16	சுவச்பாரத் திட்டத்தில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல்	432 (2,619 இருக்கைகள்)	-	17.02
10.	2016-17	சுவச்பாரத் திட்டத்தில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல்	320 (2,620 இருக்கைகள்)	-	17.03
மொத்தம்			1,854	697	176.63

இவற்றுள் 1534 புதிய சுகாதார வளாகங்கள் கட்டும் பணிகளும், 697 சுகாதார வளாகங்கள் புனரமைப்பு செய்யும் பணிகளும் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் பலனாக திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கத்திலிருந்த 1,095 இடங்களில் 960 இடங்களில் இப்பழக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது.

3,60,577 புதிய தனிநபர் கழிப்பிடம் கட்டுதல் 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் மற்றும் 28,868 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் பேரூராட்சிகளில், தமிழ்நாடு அரசு மானியம் மற்றும் தூய்மை இந்தியா இயக்கத்துடன் சேர்த்து திட்ட இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	பணிகளின் விவரம்	திட்ட இலக்கீடு	இலக்கீடு (ஆண்டு வாரியாக)			மொத்த இலக்கீடு	முடிவுற்றவை	நிலுவை
			2014–2015	2015–2016	2016–2017			
1.	தனிநபர் கழிப்பிடம்	3,60,577	-	54,100	1,25,000	1,79,100	93,819	85,281
2.	சுகாதாரமற்ற கழிப்பிடத் தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல்	7,794	-	7,794	-	7,794	7,460	334
3.	சமுதாயக் கழிப்பிடம் (இருக்கைகள்)	28,868	2,704	2,619	2,620	7,943	6,180	1,763

முதற்கட்டமாக கீழ்காணும் 21 பேரூராட்சிகள் திறந்த வெளியில் மனிதக் கழிவு கழித்தல் இல்லாத நகரங்களாக மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின்மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன:

வ.எண்	மாவட்டம்	பேரூராட்சி
1.	கன்னியாகுமரி	ஆளூர்
2.		அருமனை
3.		இடைக்கோடு
4.		கருங்கல்
5.		கிள்ளியூர்
6.		குலசேகரம்
7.		குமாரபுரம்
8.		மைலாடி
9.		முளகுமூடு
10.		நல்லூர்
11.		பாலப்பள்ளம்
12.		பளுகல்
13.		பொன்மனை
14.		புதுக்கடை
15.		சுசீந்திரம்
16.		திங்கள்நகர்
17.		திருவிதாங்கோடு
18.		வாழ்வச்சகோஷ்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

வ.எண்	மாவட்டம்	பேரூராட்சி
19.		வேர்க்கிளம்பி
20.		வில்லுக்குறி
21.	தேனி	ஹைவேவிஸ்

இதன் தொடர்ச்சியாக, எஞ்சியுள்ள இதர பேரூராட்சிகளையும் திறந்தவெளியில் மனிதக் கழிவுகள் கழித்தல் இல்லாத நகரங்களாக அறிவிக்கை செய்திட தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திட்ட செயலாக்கம் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது:

வருடம்	இலக்கு எய்தப்படவுள்ள பேரூராட்சிகளின் எண்ணிக்கை
மார்ச் 2017	50
செப்டம்பர் 2017	50
டிசம்பர் 2017	50
மார்ச் 2018	50
செப்டம்பர் 2018	70
டிசம்பர் 2018	75
மார்ச் 2019	75
ஜூலை 2019	87
மொத்தம்	507

4.7 சாலைகள்

பல்வேறு வகையிலான சாலைகள் பேரூராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மொத்த சாலைகளின் நீளம் கீழ்வருமாறு:

வ. எண்	வகைபாடு	நீளம் (கி.மீ.)
1.	தார் சாலைகள்	11,223
2.	சிமென்ட் சாலைகள்	5,349
3.	சிமென்ட் கற்சாலைகள் (Paver block)	1,253
4.	கருங்கல் ஜல்லி சாலை	966
5.	செம்மண் சாலை	395
6.	மண் சாலை	1,862
	மொத்தம்	21,048

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பேரூராட்சிகளில் 2011-12 முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலை மேம்பாட்டுப் பணிகள் பின்வருமாறு:

வ. எண்	ஆண்டு	நீளம் (கி.மீ.)	மதிப்பீடு (₹ கோடியில்)	மொத்த பணிகளின் எண்ணிக்கை	முடிக்கப் பட்டது	முன்னேற்றத்தில் உள்ளவை
1.	2011-12	1,561	285.56	1,908	1,908	
2.	2012-13	1,166	334.40	1,022	1,022	
3.	2013-14	808	248.29	768	768	
4.	2014-15	743	231.02	694	694	
5.	2015-16	699	278.18	713	713	
6.	2016-17	600	269.00	323	143	180
மொத்தம்		5,577	1,646.45	5,428	5,248	180

மொத்தம் எடுக்கப்பட்ட 5,428 சாலைப் பணிகளில், 5,248 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சிய 180 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மொத்தம் 5,577 கி.மீ. சாலைகள், தார் சாலை, சிமென்ட் சாலை மற்றும் சிமென்ட் கற்சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

4.7.1 நபார்டு - தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி- ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD)

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை. இத்திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு, பாலம் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சுகாதார வளாகம் கட்டுதல், நீர் நிலைகள் மேம்பாடு செய்தல் மற்றும் இறைச்சிக் கூடம் அமைத்தல் போன்ற 2,459 பணிகளுக்கு ₹761.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வருமாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (₹ கோடியில்)	குறிப்பு
1.	2011-12	419	97.90	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
2.	2012-13	975	200.14	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (₹ கோடியில்)	குறிப்பு
3.	2013-14	381	118.40	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
4.	2014-15	301	115.07	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
5.	2015-16	232	100.00	231 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது.
6.	2016-17	151	130.00	149 பணிகளுக்கு பணியாணை வழங்கப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 2 பணிகளுக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.
மொத்தம்		2,459	761.51	

4.7.2 தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், உலகத் தரத்திற்கு நகர்ப்புற சாலைகளை உயர்த்தும் நோக்கில் 2011-12 ஆம் ஆண்டிலிருந்து, பேரூராட்சிகளில் சாலைகள் மேம்படுத்தப்படுவதுடன் கூடுதலாக மழைநீர் வடிகால் வசதி மற்றும் நடைபாதை வசதிகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் 1,562 எண்ணிக்கையிலான 1,438.86 கி.மீ. நீளச் சாலைகள் ₹391.91 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

வ. எண்	ஆண்டு	நீளம் (கி.மீ.)	ஒதுக்கீடு (₹ கோடியில்)	பணிகளின் எண்ணிக்கை	முடிக்கப் பட்டது	முன்னேற்றத்தில் உள்ளது
1.	2011-12	247.00	50.57	440	440	
2.	2012-13	222.00	50.00	191	191	
3.	2013-14	159.00	50.57	147	147	
4.	2014-15	198.00	81.76	228	228	
5.	2015-16	328.11	81.76	384	384	
6.	2016-17	284.75	77.25	172	143	29
மொத்தம்		1,438.86	391.91	1,562	1,533	29

நாளது வரை 1,533 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 29 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

4.7.3 பிளாஸ்டிக் சாலைகள்

திடக்கழிவுகளில் கிடைக்கப்பெறும் கழிவுகளில், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் தொடர்பான இதர கழிவுகள் 5 சதவீதம் ஆகும். இவை பல்வேறு வகையாகவும், நச்சுத்தன்மை கொண்டதாகவும் உள்ளன. பிளாஸ்டிக் கழிவுகள் மக்காத தன்மை கொண்டவையாக இருப்பதால் நீரை தேங்கச் செய்கின்றன. இதன்மூலம் சுகாதார சீர்கேடுகளை விளைவிக்கின்றன. இதனை தடுக்கும்பொருட்டு, பிளாஸ்டிக் கழிவுகள் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

2011-12 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் பொது நிதி மற்றும் இதர சாலைப் பணி திட்டங்களான, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சி நிதி, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 1,173.10 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி 1,236.42 கி.மீ. நீளத்திற்கு ₹460.40 கோடி செலவினத்தில் 1,392 பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு முதல் சேகரமான பிளாஸ்டிக் கழிவுகளை விற்பனை செய்ததன் மூலமாக பேரூராட்சிகளுக்கு ₹3.11 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களின்கீழ் (நபார்டு நீங்கலாக) மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை தாரில் கலந்து பயன்படுத்துவதற்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு குறைவதோடு, நகரங்களின் சுற்றுப்புறசூழலும் மேம்பாடு அடைகிறது.

4.8 திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை என்பது, சுகாதாரமான சுற்றுச் சூழலையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது. சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவர்மூலம் 250 கிராம் முதல் 300 கிராம் வரை குப்பைகள் உருவாகின்றன. 528 பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு 2,100 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிறது. இவற்றில், மக்கும் குப்பைகள் 966 மெட்ரிக் டன், மக்காத குப்பைகள் 747 மெட்ரிக் டன்,

2017 ஜூன் 20]

வடிகால் மற்றும் இதர மண் கழிவுகள் 387 மெட்ரிக் டன் ஆகும். பல்வேறு பேரூராட்சிகளில் குப்பைகளின் தன்மை பகுப்பாய்வு செய்யப்பட்டது. விவரங்கள் பின்வருமாறு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன:

வ. எண்	குப்பைகளின் வகை	குப்பையில் விழுக்காடு
1.	மக்கும் குப்பை	47 - 60
2.	பிளாஸ்டிக்	4 - 8
3.	காகிதம்	2 - 5
4.	ரப்பர்	1 - 2
5.	கண்ணாடி	1 - 3
6.	மண் துகள்கள்	15 - 20
7.	உலோகம்	2 - 3
8.	துணி	3 - 5

10,049 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குப்பைகளை சேகரிப்பதற்கும், தரம் பிரிப்பதற்கும் மற்றும் 6,686 துப்புரவுப் பணியாளர்கள் தெருக்களைச் சுத்தம் செய்யும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டு பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது.

4.8.1 இயற்கை / மண்புழு உரமாக்குதல்

தற்பொழுது 466 பேரூராட்சிகளில் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் 100.17 மெட்ரிக் டன் அளவிற்கு இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இயற்கை உரத்தினை விற்பதன்மூலம் பேரூராட்சிகளில் மாதம் ஒன்றுக்கு ₹39.42 இலட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் 1,184 மெட்ரிக் டன் அளவில் இயற்கை உரம் இருப்பில் உள்ளது.

இத்துடன் மண்புழு உரம் தயாரிக்கும் பணி 188 பேரூராட்சிகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் 16.21 மெட்ரிக் டன் அளவிற்கு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மண்புழு உரத்தினை விற்பதன்மூலம் பேரூராட்சிகளில் மாதம் ஒன்றுக்கு ₹10.29 இலட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் 240 மெட்ரிக் டன் அளவில் மண்புழு உரம் இருப்பில் உள்ளது.

[2017 ஜூன் 20

பேரூராட்சிகள்மூலம் தயாரிக்கப்பட்டுள்ள இயற்கை / மண்புழு உரத்தினை பேரூராட்சி செயல் அலுவலர்கள் வேளாண் துறையினருடன் இணைந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட முகவர்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.8.2 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

2013-14 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 395 பேரூராட்சிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்துச் செல்லுதல், உரமாக்குதல், தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகள் பின்வரும் அட்டவணையில் கண்டுள்ளவாறு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	வருடம்	பேரூராட்சிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (₹ கோடியில்)	பணி முடிக்கப்பட்ட பேரூராட்சிகளின் எண்ணிக்கை	பணி முன்னேற்றத்தில் உள்ள பேரூராட்சிகள்
1.	2013-14	77	48.57	76	1
2.	2014-15	214	54.57	209	5
3.	2015-16	104	53.75	5	99
மொத்தம்		395	156.89	290	105

4.8.3 உயிரி எரிவாயு

மேலும், தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் சோளிங்கர், செங்கம், பெரியநாயக்கன்பாளையம், வத்தலக்குண்டு மற்றும் உத்தமபாளையம் ஆகிய 5 பேரூராட்சிகளில் ₹1.00 கோடி மதிப்பீட்டில் (ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ₹20.00 இலட்சம் வீதம்) காய்கறி கழிவு மற்றும் உணவுக் கழிவிலிருந்து, உயிரி எரிவாயு கலன்மூலம் எரிவாயு தயாரிக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

2017 ஜுன் 20]

வ. எண்	மாவட்டம் / பேரூராட்சிகளின் பெயர்	உட்செலுத்தப் படும் அளவு	கிடைக்கப் பெறும் திறன்	உயிரி எரிவாயுவின் பயன்பாடு
1.	தேனி மாவட்டம் /உத்தமபாளையம் பேரூராட்சி உள்ளீடு- 1 டன் வெளியீடு-120 M^3	400 முதல் 550 கிலோ உணவு, காய்கறி கழிவுகள்	50-55 M^3 உயிரி எரிவாயு உருவாக்குதல்	அருகிலுள்ள அங்கன்வாடி மையம் மற்றும் பொது சமையல றைக்கு பயன் படுத்தப்படுகிறது
2.	கோயம்புத்தூர் மாவட்டம் / பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி உள்ளீடு- 1 டன் வெளியீடு -120 M^3	1000 கிலோ உணவு, காய்கறி கழிவுகள்	50-55 M^3 உயிரி எரிவாயு உருவாக்குதல்	நவீன எரிவாயு தகனமேடையில் உள்ள விளக்குகளை எரியூட்ட பயன்படுத்த திட்டமிடப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளது
3.	திண்டுக்கல் மாவட்டம் / வத்தலக்குண்டு பேரூராட்சி உள்ளீடு- 1 டன் வெளியீடு -120 M^3	700 முதல் 1100 கிலோ உணவு, காய்கறி கழிவுகள்	100-120 M^3 உயிரி எரிவாயு உருவாக்குதல்	அருகிலுள்ள சமுதாய சமையலறைக்கு பயன்படுத்தப் படுகிறது
4.	வேலூர் மாவட்டம் / சோளிங்கர் பேரூராட்சி உள்ளீடு-2 டன் வெளியீடு-120 M^3	சோதனை ஓட்டம்		
5.	திருவண்ணாமலை மாவட்டம் / செங்கம் பேரூராட்சி உள்ளீடு-1 டன் வெளியீடு-120 M^3	சோதனை ஓட்டம்		

இவை தவிர கூடுதலாக 11 பேரூராட்சிகளில் சிறிய அளவிலான உயிரி எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டு, உருவாகும் எரிவாயுவின் பயன்பாடு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2017 ஜூன் 20

வ. எண்	மாவட்டம் / பேரூராட்சிகளின் பெயர்	உட்செலுத் தப்படும் அளவு / நாளொன் றுக்கு	கிடைக்கப் பெறும் திறன் (நாளொன் றுக்கு)	உயிரி எரிவாயுவின் பயன்பாடு
1.	காஞ்சிபுரம் மாவட்டம் / மாமல்லபுரம் பேரூராட்சி	0.500 டன் உணவுக் கழிவுகள்	10 கி.வா. உருவாக்குதல்	வளமீட்பு பூங்காவில் உள்ள விளக்குகளை எரியூட்ட பயன் படுத்தப்படுகிறது
2.	தருமபுரி மாவட்டம் / பாப்பாரபட்டி பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன் பாட்டுக்கு பயன் படுத்தப்படுகிறது
3.	சேலம் மாவட்டம் / கன்னங்குறிச்சி பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன் பாட்டுக்கு பயன் படுத்தப்படுகிறது
4.	திருச்சி மாவட்டம் / முசிறி பேரூராட்சி	0.100 டன் கழிவறை கழிவுகள்	700 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன் பாட்டுக்கு பயன் படுத்தப்படுகிறது
5.	கரூர் மாவட்டம் / புலியூர் பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன் பாட்டுக்கு பயன் படுத்தப்படுகிறது
6.	கரூர் மாவட்டம் / புஞ்சைத் தோட்டக் குறிச்சி பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப் படுகிறது

வ. எண்	மாவட்டம் / பேரூராட்சிகளின் பெயர்	உட்செலுத் தப்படும் அளவு / நாளொன் றுக்கு	கிடைக்கப் பெறும் திறன் (நாளொன் றுக்கு)	உயிரி எரிவாயுவின் பயன்பாடு
7.	மதுரை மாவட்டம் / சோழவந்தான் பேரூராட்சி	0.005 டன் காய்கறி கழிவுகள் மற்றும் கழிவறை கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	சமுதாயக்கூட சமையல் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப் படுகிறது
8.	தேனி மாவட்டம் / உத்தமபாளையம் பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன் பாட்டுக்கு பயன்படுத்தப் படுகிறது
9.	திருச்சிராப்பள்ளி மாவட்டம் / சிறுகமணி பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப் படுகிறது
10.	கரூர் மாவட்டம் / புஞ்சைபுகளூர் பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன்பாட்டுக்கு பயன்படுத் தப்படுகிறது
11.	திண்டுக்கல் மாவட்டம் / சின்னாளப்பட்டி பேரூராட்சி	0.005 டன் உணவுக் கழிவுகள்	400 கிராம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப் படுகிறது	பேரூராட்சி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமையல் பயன்பாட்டுக்கு பயன்படுத் தப்படுகிறது

[2017 ஜூன் 20

4.9 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் ஏற்படும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாயக் கூடம் அமைத்தல், பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர்த் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் உள்ளிட்ட 805 பணிகள் ₹327.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (₹ கோடியில்)	குறிப்பு
1.	2011-12	155	20.99	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
2.	2012-13	94	25.62	
3.	2013-14	185	69.45	184 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. எஞ்சிய 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது.
4.	2014-15	230	85.38	229 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது.
5.	2015-16	58	65.44	52 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 6 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
6.	2016-17	83	60.42	22 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 61 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
மொத்தம்		805	327.30	

2017 ஜூன் 20]

4.10 இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பதில் ஏற்படும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, மாநில நிதி பகிர்வு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின்கீழ் அலுவலகக் கட்டடம் கட்டுதல், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், சாலை, சமுதாயக் கூடம் அமைத்தல், பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர்த் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் உள்ளிட்ட 603 பணிகள் ₹125.74 கோடி ஒதுக்கீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (₹ கோடியில்)	குறிப்பு
1.	2011-12	84	13.99	
2.	2012-13	169	17.09	
3.	2013-14	112	27.42	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
4.	2014-15	111	34.25	
5.	2015-16	127	32.99	
மொத்தம்		603	125.74	

4.11 பதினான்காவது மத்திய நிதி குழு மானியம்

பேரூராட்சிகளுக்கு 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை பதினான்காவது நிதி ஆணைய மானியம் ஆண்டு தோறும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த ஒதுக்கீடு, அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு கூறுகளாக வழங்கப்படும். 2015-2016 ஆம் ஆண்டு, அடிப்படை மானியமாக ₹229.11 கோடி ஒதுக்கப்பட்டு, அத்தொகை இரு தவணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 2016-17 ஆம் ஆண்டு அடிப்படை மானியம் ₹317.25 கோடி இரு தவணைகளாகவும் மற்றும் செயல்திறன் மானியம் ₹93.63 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளன. மேற்படி மானியத் தொகை, குடிநீர்த் திட்ட பங்குத் தொகை, பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான பங்குத் தொகை, மின்வாரியத்திற்கு மின்கட்டணம் செலுத்துதல், குடிநீர்க் கட்டணம் செலுத்துதல், திடக்கழிவு மேலாண்மை

திட்டம், சாலைகள் மற்றும் நடைபாதை அமைத்தல் மற்றும் பூங்கா விளையாட்டுத் திடல் பராமரித்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

4.12 மழைநீர் சேகரிப்பு

2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டமானது, நிலத்தடி நீரை செறிவூட்டுவதில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 215 (a) மற்றும் 1973 ஆம் ஆண்டு கட்டட விதிகளில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின்மூலம் அனைத்து புதிய கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் பயனை ஒருங்கிணைக்க, புதிதாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்புகள் தவிர, தனியார் மற்றும் பொதுக் கட்டடங்களில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் இத்திட்டத்தினை தொய்வின்றி உத்வேகப்படுத்திட அனைவருக்கும் இது தொடர்பான செய்தி, கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பேரூராட்சிகளால் 6,286.84 ஏக்கர் பரப்பளவிலான 1,916 நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகளில் மொத்தமுள்ள 24,99,893 கட்டடங்களில், 24,31,525 கட்டடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் குறித்த விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன:

வ. எண்	கட்டடத்தின் வகைப்பாடு	கட்டடங்களின் எண்ணிக்கை	மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட கட்டடங்கள்
1.	அரசுக் கட்டடங்கள்	24,226	23,926
2.	குடியிருப்புக் கட்டடங்கள்	23,12,331	22,45,842
3.	வணிகக் கட்டடங்கள்	1,51,404	1,49,825
4.	தொழிற்சாலைக் கட்டடங்கள்	11,932	11,932
மொத்தம்		24,99,893	24,31,525

2017 ஜூன் 20]

பேரூராட்சிகளில் மொத்தமுள்ள 1,916 நீர்நிலைகளில் 807 நீர்நிலைகள் பல்வேறு திட்டங்களின்கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி வெள்ளத் தடுப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக 2016 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பேரூராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து நீர் நிலைகளின் வரத்து கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

4.13 விலங்குகள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்

மத்திய அரசு, 1960 ஆம் ஆண்டு பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 38, உட்பிரிவு 1 (9) ன்கீழ் 2001 ஆம் ஆண்டு பிராணிகள் (நாய்கள்) கருத்தடை அறுவை சிகிச்சை விதிகளை அறிவிக்கை செய்துள்ளது.

இவ்விதிகளை தீவிரமாக செயல்படுத்தும் விதமாக, அனைத்து பேரூராட்சிகளிலும் தெருநாய் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில், 1,06,559 தெருநாய்கள் உள்ளதென கண்டறியப்பட்டது. இவற்றில், 2016-17 ஆம் ஆண்டு வரை, 96,062 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 10,497 தெருநாய்களுக்கு 2017-18 ஆம் ஆண்டில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.14 துணை நகரம்

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பேரூராட்சி துணை நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. துணை நகரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பெருநகர இணைப்புகளில் ஏற்படும் நெரிசலை குறைப்பது மற்றும் துணை நகரங்களில் அவர்களை நிலை நிறுத்துவது ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இதற்கென மின்னாற்றல் தணிக்கை, குடிநீர் தணிக்கை, செலவு குறைந்த தொழிற்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பதில் மேம்பட்ட திறன் வளர்ப்பு போன்ற சீர்திருத்தங்களை துணை நகரங்களில் மேற்கொள்ள இத்திட்டம் வழி வகை செய்கிறது. வீட்டு மனைகளில் 10 முதல் 15 விழுக்காடு வரை நகர்ப்புற ஏழைகளுக்காக

ஒதுக்கீடு செய்வதும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதும் இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும். இத்திட்டத்தின்கீழ் குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய மூன்று திட்டப் பணிகள் ₹123.75 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

வ. எண்	பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணிகளின் முன்னேற்ற நிலை
1.	திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்புகள்	4.44	பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
2.	ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம்	42.20	பணிகள், அக்டோபர் 2017-க்குள் முடிக்கப்படும்
3.	ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம்	77.11	பணிகள், அக்டோபர் 2017-க்குள் முடிக்கப்படும்
	மொத்தம்	123.75	

4.15 வீட்டு வசதி திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023-ல் குடிசை இல்லா நகரங்கள் என்ற இலட்சியத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வீடு ஒன்றுக்கு ₹2.10 இலட்சம் நிதியுதவியுடன், மொத்தம் ₹420.00 கோடி நிதி ஒதுக்கீட்டில், 20,000 சூரிய ஒளி மின்சக்தியுடன் கூடிய கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் திட்டம் அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சி பகுதிகளில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற நிலையில் உள்ள குடிசை / மண் வீடுகளில் வாழும் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் 3,946 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டும், எஞ்சிய 16,054 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலும் உள்ளன. இத்திட்டம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினை மாநில அளவிலான முகமையாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2017 ஜூன் 20]

4.15.1 அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம்

பேரூராட்சி பகுதிகளில் 2016-17 ஆம் ஆண்டில் அனைவருக்கும் வீடு வழங்கும் (நகர்ப்புறம்) திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக பொருளாதாரத்தில் நலிவுற்ற 50,170 குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு ₹2.10 இலட்சம் நிதியுதவியுடன், மொத்தம் ₹1053.57 கோடி மானிய ஒதுக்கீட்டில் பணி மேற்கொள்ள பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 'நகர்ப்புறத்தில் அனைவருக்கும் வீடு' திட்டத்தின் (பகுதி-II)-ன்கீழ் மொத்தம் ₹950.61 கோடி மானிய ஒதுக்கீட்டில் பேரூராட்சி பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பயனாளிகளுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா ₹2.10 இலட்சம் நிதியுதவியுடன் 45,267 வீடுகள் கட்டித்தர பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 18-1-2017 அன்று நடைபெற்ற மத்திய அங்கீகாரம் மற்றும் கண்காணிப்புக் குழுவின் 18-வது கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

4.16 பேரூராட்சிகளில் புவிசார் தகவல் முறை அடிப்படையிலான சொத்து வரி விதித்தல்

பேரூராட்சிகளில், வரி விதிக்கப்படாத மற்றும் மதிப்பு குறைத்து வரிவிதிக்கப்பட்ட சொத்துக்களை கண்டறிந்து அவற்றிற்கு வரிவிதிப்பு செய்து அதன்மூலம் வருவாய் பெருக்கிட புவி தகவல் அடிப்படையிலான சொத்து வரி விதித்தல் திட்டத்தினை அரசு கொள்கை அளவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை பொன்னேரி பேரூராட்சியில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்த 2013 ஆம் ஆண்டில் ₹32.84 இலட்சத்தினை அனுமதித்து வழங்கியுள்ளது. இத்திட்டம் முடிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ₹6.00 இலட்சம் வருமானம் பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற்று வருகிறது. இந்த புவிசார் தகவல் முறை அடிப்படையிலான சொத்து வரி விதித்தல் திட்டம் இதர பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

4.17 தெரு விளக்குகள்

பேரூராட்சிகளில், 1,230 உயர்கோபுர விளக்குகள், 2,544 மெர்க்குரி விளக்குகள், 36,692 சோடியம் விளக்குகள், 2,60,670 குழல் விளக்குகள், 96,570 சி.எப்.எல். விளக்குகள் 3,066 சோலார் விளக்குகள் மற்றும் 25,011 ஆற்றல் மிகு தெரு மின் விளக்குகள் (எல்.இ.டி.) உள்ளிட்ட 4,25,783 தெரு விளக்குகள் பராமரிக்கப் படுகின்றன. அனைத்து தெரு விளக்குகளையும் ஆற்றல் மிகு மின் விளக்குகளாக (எல்.இ.டி.) படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.18 வர்தா புயல்

வர்தா புயல் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கடுமையான காற்று மற்றும் மழையால் ஏராளமான பசுமையான மரங்களை வேரோடு சாய்த்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. இது போதுமான மழையையும் வழங்கவில்லை. இதனால் பேரூராட்சி பகுதிகளிலுள்ள சாலைகள், வடிகால்கள், சிறு பாலங்கள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் போன்ற பல அடிப்படை கட்டமைப்புகளில் பெரும் சேதம் ஏற்பட்டது.

சாலைகளில் விழுந்த 6,399 மரங்களும், கிளைகளும் உடனடியாக வெட்டி அகற்றப்பட்டன. சேதமடைந்த 2,247 மின் கம்பங்கள் மற்றும் 2,761 தெரு விளக்குகள் உடனடியாக சீர் செய்யப்பட்டன.

நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்ட மக்களுக்கு ₹2.86 இலட்சம் செலவில் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. மேற்கண்ட சேதங்களிலிருந்து இயல்பு நிலைக்கு திரும்ப போர்க்கால அடிப்படையில் உடனடியாக நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

குடிநீர் வழங்கல் தொடர்பாக, மின் ஆக்கிகள் உதவியுடன் மோட்டார் மற்றும் பம்புகள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்பட்டு, பொது மக்கள் இயல்பு நிலைக்கு திரும்புவது உறுதி செய்யப்பட்டது.

4.19 விருது

பேரூராட்சிகளில் சுகாதார நிலை, குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் இதர அடிப்படை வசதி பணிகளின் இலக்கீட்டினை எய்தும் வகையில் திறம்பட செயல்படும் பேரூராட்சிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், மூன்று சிறந்த பேரூராட்சிகளுக்கான விருதுகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதற்கான விருது தொகை முறையே ₹10.00 இலட்சம், ₹5.00 இலட்சம் மற்றும் ₹3.00 இலட்சம் ஆகும்.

2015-2016 ஆண்டிற்கான முதல் மூன்று பரிசுகள் முறையே நாமக்கல் மாவட்டம் வேலூர் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2017 ஜூன் 20]

5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது, 1978 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவ்வாரியமானது சென்னைப் பெருநகர் பகுதியின் தேவைக்கேற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளை தற்போதைக்கும், எதிர்காலத்திற்கும் திட்டமிட்டு மேம்படுத்தி செயற்படுத்துதல், தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை நடைமுறைபடுத்துதல் போன்ற முக்கிய பொறுப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தற்சமயம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தனது சேவைகளை 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனைகள் வாயிலாக 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள 67.27 இலட்சம் மக்களுக்கு (2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி) வழங்கி வருகிறது. மேலும், சில உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மொத்த நுகர்வோர்களுக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் தனது குடிநீர் வழங்கல் சேவையை வழங்கி வருகிறது.

5.1 சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள்

சென்னை நகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய நில மேற்பரப்பு நீர், கடல் நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நிலத்தடி நீர்மூலம் நீர் பெறப்படுகிறது.

5.1.1 நில மேற்பரப்பு நீர்

சென்னைக்கு அருகாமையிலுள்ள நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி மற்றும் தெலுங்கு கங்கை திட்டம் ஆகியவை சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் முதன்மை மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும். சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவுகள் பின்வருமாறு:

வ. எண்	நீர்த்தேக்கங்கள்	மொத்தக் கொள்ளளவு (மில்லியன் கன அடியில்)
1.	பூண்டி	3,231
2.	புழல்	3,300
3.	செம்பரம்பாக்கம்	3,645
4.	சோழவரம்	881
5.	வீராணம்	1,465
	மொத்தம்	12,522

புதிய வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம் சென்னை நகருக்கு கூடுதல் நீர் ஆதாரமாக 2004-ல் துவங்கப்பட்டது. இதன்மூலம் வீராணம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் நகருக்கு கிடைக்கப் பெறுகிறது.

ஆந்திரபிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்தின்மூலம் கிருஷ்ணா நதி நீர் சென்னை நகருக்கு பெறப்பட்டு வருகிறது. ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழக அரசுகளிடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி சென்னையின் குடிநீர்த் தேவைக்கு ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் வழங்கப்பட வேண்டும். முந்தைய பல வருடங்களில் அதிகபட்சமாக ஓராண்டில் 8.2 ஆயிரம் மில்லியன் கன அடிவரை மட்டுமே நீர் கிடைக்கப்பெற்றது. 2016-17ஆம் ஆண்டில் பெறப்பட்ட நீரின் அளவு 2.278 ஆயிரம் மில்லியன் கன அடி ஆகும்.

சென்னை நகர ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின்அளவு

வருடம்	மழையின் அளவு (மி.மீ.)		வித்தியாசம் %
	இயல்பான அளவு (30 வருட சராசரி)	பெய்த அளவு	
2012	1293.42	981.80	-24.09
2013	1297.50	1064.87	-17.93
2014	1286.21	1025.80	-20.25
2015	1273.17	2155.23	+69.28
2016	1308.05	837.00	-36.03

2017 ஜூன் 20]

5.1.2 கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

கிடைக்கக்கூடிய நில மேற்பரப்பு நீர், பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவமழை தேவையான அளவு பொழியாதபோது நீர்த்தேக்கங்களில் கிடைக்கக்கூடிய நீரின் அளவில் அதிக பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் சென்னை நகரின் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. சென்னைக்கு அருகே வற்றாத ஆறுகள் இல்லாததும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கூடுதல் சவாலாகிறது. வளர்ந்து வரும் சென்னை மாநகருக்கு குடிநீர் பற்றாக்குறையை நீக்கும் வண்ணம் 2003-2004 ஆம் ஆண்டிலேயே தொலைநோக்குப் பார்வை கொண்டு மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவிட அறிவித்தார்கள். அரசு தற்சமயம் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் இரண்டு நிலையங்களை மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் நிறுவி இயக்கி வருகிறது. இந்நிலையங்கள் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

5.1.2.1 கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்-மீஞ்சூர்

மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (DBOOT) இயங்கி வருகிறது. இந்த நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன்மூலம் வடசென்னை பகுதிகளாகிய மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

5.1.2.2 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் -நெம்மேலி

நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ₹805.08 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 22-2-2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன்மூலம் தென் சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர்,

வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

2012-2014 மற்றும் 2016-17 ஆண்டுகளில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை தேவையான அளவு பொழியாத நிலையில் கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நாம் சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை அதிகமாகியதுடன் நகரின் குடிநீர் தேவையை சமாளிக்க இந்த நிலையங்கள் உதவிகரமாக இருந்தது.

5.1.3 நிலத்தடி நீர்

நிலத்தடி நீரை சென்னைக் குடிநீர் வாரியம் மேலும் ஒரு குடிநீராதாரமாக கொண்டுள்ளது. இந்த நீராதாரம் தேவைக்கேற்றபடி மாறுபடும். தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் நெய்வேலி ஆகிய நிலத்தடி நீராதாரங்களில் இருந்து சுமார் நாளொன்றுக்கு 215 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் நகருக்கு பெறப்படும்.

5.1.4 குடிநீர் விநியோக இயக்கம் மற்றும் பராமரிப்பு

குடிநீரினை சென்னை நகருக்கு விநியோகம் செய்திட சென்னைக் குடிநீர் வாரியம், கீழ்ப்பாக்கம், புழல், செம்பரம்பாக்கம், சூரப்பட்டு, வடகுத்து ஆகிய இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும், மேலும் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களையும் இயக்கி வருகிறது.

குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்புத் திறன்

குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்	சுத்திகரிப்புத் திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)
கீழ்ப்பாக்கம்	270
புழல்	300
செம்பரம்பாக்கம்	530
வடகுத்து	180
சூரப்பட்டு	14
கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்- (காட்டுப்பள்ளி)- மீஞ்சூர் மற்றும் நெம்மேலி	200
மொத்தம்	1494

2017 ஜூன் 20]

1978-ல் வாரியம் துவங்கப்பட்ட நாளிலிருந்து, குடிநீர் விநியோக இயக்கத்தில் வாரியம் பல படிகளில் முன்னேற்றம் கண்டுள்ளது.

குடிநீர் விநியோக சேவையில் முன்னேற்றங்கள்

விவரங்கள்	1978ஆம் ஆண்டில்	2017ஆம் ஆண்டில்
செயலாக்கப் பகுதி (ச.கி.மீ.)	*174*	*426*
மக்கள்தொகை (இலட்சத்தில்)	*28.60*	*74.38*
குடிநீர் குழாய்களின் நீளம் (கி.மீ.)	*1250*	*6,697*
குடிநீர் பகிர்மான நிலையங்கள்	*3*	*74*
குடிநீர் சுத்திகரிப்பு திறன் (நா.மி.லி.)	*182*	*1,494*
நுகர்வோர்களின் எண்ணிக்கை	*1,16,000*	*6,82,681*

5.2 குடிநீர் வழங்கல் - புதிய திட்டங்கள்

சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளுக்கு, சென்னைக் குடிநீர் வாரியமானது சிறப்பு கவனம் செலுத்தி குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு குடிநீர் வழங்கிட பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

திருவொற்றியூர், கத்திவாக்கம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம், போரூர், ஆலந்தூர், மீனம்பாக்கம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் ஆகிய இணைந்த 9 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளது.

இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், சின்னசேக்காடு, மாதவரம், ராமாபுரம், நொளம்பூர், காரம்பாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், முகலிவாக்கம், உள்ளகரம்-புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம், ஆகிய இணைந்த 26 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாத்தூர், ஜல்லடம்பேட்டை, மடிப்பாக்கம், நீலாங்கரை, செம்மஞ்சேரி மற்றும் உத்தண்டி ஆகிய இணைந்த 6 பகுதிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியின் கீழ் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

[2017 ஜூன் 20

5.2.1 சென்னை, கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ் மற்றுமொரு நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, ஏற்கெனவே நெம்மேலியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள 10.50 ஏக்கர் காலி இடத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நெம்மேலியில் 150 எம்.எல்.டி. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க முதற்கட்டமாக ₹1371.86 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது (சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை நகருக்கு கொண்டு செல்லும் குழாய்கள் உட்பட). இந்த விரிவான திட்ட அறிக்கைக்கான நிருவாக ஒப்புதலை தமிழக அரசு அளித்துள்ளது. விரிவான திட்ட அறிக்கையின் மதிப்பீடு ₹1,258.88 கோடிக்கு மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது KfW *எனும் ஜெர்மானிய நிதி நிறுவனத்தால் நிதி உதவி பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஜெர்மானிய நிதி நிறுவனம் இந்த திட்டத்திற்காக மத்திய அரசுடன் கடன் ஒப்பந்த ஆவணத்தில் அதிகபட்சமாக 100 மில்லியன் யூரோ (தோராயமாக ₹700 கோடி) மேலும் அளவிற்கு 28-6-2016 அன்று கையொப்பமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ₹505.62 கோடி மத்திய மற்றும் மாநில அரசின் அம்ரூத் நிதி உதவியின்கீழ் மானியமாக பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.*

இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் குடிநீரால் தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், சின்னமலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில் நுட்ப பகுதிகளில் குடிநீர் விநியோகம் மேம்படும்.

5.2.2 சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் தென் சென்னை பகுதியில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பட்டிபுலத்தில் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதற்காக உத்தேசிக்கப்பட்ட நிலம், சட்டப்

2017 ஜூன் 20]

பிரச்சனைக்குட்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டதால் இந்த இடத்திற்கு அருகாமையில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூர் என்ற இடம் மாற்றாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

பேரூரில் 400 எம்.எல்.டி. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க ₹4,070.68 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. திட்ட அறிக்கை பரிசீலனையின்போது ₹2,891.70 கோடி மதிப்பீட்டிற்கு திருத்தி அமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை மூலம் நிதி உதவி பெறும் வகையில் மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் வரும் மத்திய பொது சுகாதாரப் பொறியியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பின் ஆய்விற்கு பின் ஜப்பான் பன்னாட்டு முகமைக்கு அனுப்பப்பட்டது.

ஜப்பான் பன்னாட்டு ஆய்வுக் குழுவினர் இத்திட்டத்தினை மதிப்பாய்வு செய்து பிரதான சென்னை மாநகரின் குடிநீர் விநியோகக் கட்டமைப்பில் சில மாறுதல்களையும் இத்திட்டத்தில் சேர்க்கும்படி அறிவுறுத்தி உள்ளனர். இத்திட்டத்தினை செயல்படுத்த ₹5,312.47 கோடி திருத்திய மதிப்பீடாகும். இதனடிப்படையில் திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஆய்விற்கும் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் குடிநீரால் தென் சென்னை மற்றும் மத்திய சென்னை பகுதிகளான தாம்பரம், பம்மல், பொழிச்சலூர், பல்லாவரம் (பகுதி), மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கண்காரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டாங்குளத்தூர், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள், வளசரவாக்கம், ஆலந்தூர், விருகம்பாக்கம் (பகுதி), மாத்தூர், மற்றும் மாதவரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 22.67 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

5.2.3 செம்பரம்பாக்கத்திலிருந்து, பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரை குடிநீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய் பதித்தல்

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு சுத்திகரிப்பு நீரின் அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை சென்னைக்கு வழங்க ஏதுவாக செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2,000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது குடிநீர் குழாயை 6.5 கி.மீ. நீளத்திற்கு, ₹41.35 கோடி மதிப்பீட்டில் பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நவம்பர் 2017 ஆம் ஆண்டிற்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2017 ஜூன் 20

5.2.4 புதியதாக அமைக்கப்பட்டுவரும் கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி

புதிதாக அமைக்கப்பட்டுவரும் தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கி.மீ. நீளத்திற்கு 900 மி.மீ. விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க ₹93.77 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நவம்பர் 2017-ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.2.5 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர் திட்டப் பணிகள் (CMCDM)

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும், உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சிறப்பு கண்ணோட்டத்துடன் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை தொடங்கினார்கள். இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள்:

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள்

வ. எண்	ஆண்டு	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	*2011-12*	*குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல்*	*23.56*	*பணிகள் முடிவுற்றுள்ளன*
		புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல்	*12.23*	
		அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல்	*20.71*	

வ. எண்	ஆண்டு	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
2.	*2012-13*	நொளம்பூர்	*18.00*	டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		காரம்பாக்கம்	*20.56*	
		இராமாபுரம்	*32.54*	
		மணப்பாக்கம்	*10.92*	
		நந்தம்பாக்கம்	*6.00*	
		ஒக்கியம்-துரைப்பாக்கம்	*46.00*	மார்ச் 2018-க்குள் முடிக்கப்படும்.
		ஈஞ்சம்பாக்கம்	*22.30*	பணிகள் முடிவுற்றன
		சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம்	*35.70*	அக்டோபர் 2017-க்குள் முடிக்கப்படும்.
3.	*2013-14*	சடையான்குப்பம்	*28.21*	டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		இடையான்சாவடி		
		கடப்பாக்கம்		
		மணலி	*21.33*	
		சின்னசேக்காடு	*11.00*	
		வடபெரும்பாக்கம் மற்றும் தீயம்பாக்கம்	*20.00*	
		கொட்டிவாக்கம்	*23.00*	செப்டம்பர் 2018-க்குள் முடிக்கப்படும்.
		பெருங்குடி	*45.00*	டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		பாலவாக்கம்	*30.00*	செப்டம்பர் 2018-க்குள் முடிக்கப்படும்.
		சூரப்பட்டு	*82.61*	டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்
		கதிர்வேடு		
		புத்தகரம்		
		புழல்		
		பள்ளிக்கரணை	*42.82*	செப்டம்பர் 2018-க்குள் முடிக்கப்படும்.
		முகலிவாக்கம்	*31.37*	
		மொத்தம்	*583.86*	

[2017 ஜூன் 20

5.2.6 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	சென்னை மாநகரின் குடிநீர் விநியோக அமைப்பில் மேம்பாட்டுப் பணிகள்	322.00	பணிகள் முடிவுற்றுள்ளன.
	குடிநீர் வழங்கல் திட்டம்		
2.	மதுரவாயல்	23.30	பணிகள் முடிவுற்றுள்ளன.
3.	திருவொற்றியூர்	85.11	
4.	அம்பத்தூர்	267.08	
5.	ஆலந்தூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள்	64.39	
6.	உள்ளகரம்-புழுதிவாக்கம்	24.24	இறுதி கட்ட பணிகள் அக்டோபர் 2017-ல் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
7.	நெற்குன்றம்	19.17	70 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளது. தாமத பணியின் காரணமாக ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தம் கோரப்பட்டு உள்ளது.
	மொத்தம்	805.29	
இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்பு நிதிப் பணிகள்			
1.	ஆவடி	103.84	ஒரு பகுதி பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
2.	அனகாபுத்தூர்	14.87	பணிகள் ஜூன் 2018-க்குள் முடிக்கப்படும்.
3.	ஸ்ரீ பெரும்புதூர்	42.20	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
மொத்தம்		160.91	

5.2.7 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) திட்டம்

மாதவரம் பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பணியின் விவரம்:

திட்டம்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
மாதவரம்	55.00	பணிகள் நவம்பர் 2017 –க்குள் முடிக்கப்படும்.

5.2.8 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்- III (TNUDP-III)

இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	திட்டம்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	பம்மல்	43.10	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
2.	பல்லாவரம்	99.95	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
மொத்தம்		143.05	

5.2.9 சென்னை மாநகரில் பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம் (I&A Fund)

சென்னை நகரில் 914 கிலோ மீட்டர் நீளத்திற்கான குடிநீர் குழாய்கள் 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானது. இந்த பழமையான குடிநீர் குழாய்கள் பல்வேறு திட்டத்தின்கீழ் படிப்படியாக புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. மறைந்த மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்களால், பழமையான குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிக்கும் பணிகளும், குடிநீர் கொண்டு செல்லும் புதிய பிரதான குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு 310 கி.மீ. நீளத்திற்கு புதிய குழாய்கள் பதிக்கும் பணிகளும் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை மேலும் மேம்படுத்துவதற்காக மொத்தம் ₹116.04 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2017-ல் முடிவுறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

5.2.10 தாம்பரம், பல்லாவரம் மற்றும் பம்மல் பகுதிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்தல்

பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பில் இருந்து தாம்பரம் வரை 22 கி.மீ. நீளத்திற்கு 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்து, தாம்பரம், பல்லாவரம், பம்மல் மற்றுமுள்ள உள்ளாட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தினை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின்கீழ் ₹93.48 கோடியில் அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

5.3 கழிவுநீரகற்று சேவைகள்

சென்னை மாநகரில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமானது கழிவு நீர் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவு நீரகற்றல் வசதிகளை செய்து வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 764 மில்லியன் லிட்டர் ஆகும்.

குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 4250 கி.மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் அமைப்பின்மூலம் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுநீர் 250 கழிவுநீரேற்றும் நிலையங்களின் மூலம் அனுப்பப்படுகிறது. சென்னை மாநகரின் கழிவுநீர் அமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் தனித்தனியான சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. கழிவு நீரேற்று

2017 ஜூன் 20]

நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் கழிவுநீர் 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்:

வ. எண்	சுத்திகரிப்பு நிலையம்	திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)
1.	நெசப்பாக்கம் (3 பிரிவுகள் 23+40+54)	117
2.	கொடுங்கையூர் (3 பிரிவுகள் 110+80+80)	270
3.	கோயம்பேடு (3 பிரிவுகள் 34+60+120)	214
4.	பெருங்குடி (2 பிரிவுகள் 79+72)	151
5.	ஆலந்தூர் (1 பிரிவு 12)	12
மொத்தம் (12 பிரிவுகள்)		764

கட்டுமானப் பணியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

வ. எண்	அமைவிடம்	சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	திருவொற்றியூர்	31	26.33	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்
2.	சோழிங்கநல்லூர்	18	33.71	பணிகள் ஆகஸ்ட் 2017-க்குள் முடிக்கப்படும்
3.	சோழிங்கநல்லூர்	54	65.97	பணிகள் ஜனவரி 2019-க்குள் முடிக்கப்படும்
மொத்தம்		103	126.01	

வாரியம் துவங்கிய 1978 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கழிவுநீரகற்றும் சேவைகள் கீழ்கண்டவாறு பன்மடங்காக வளர்ச்சி அடைந்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

கழிவுநீரகற்றும் சேவையில் முன்னேற்றங்கள்

வ. எண்	விவரங்கள்	1978ஆம் ஆண்டில்	2016ஆம் ஆண்டில்
1.	கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ.)	1,223	4250
2.	கழிவுநீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை	58	250
3.	கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (நாளொறுக்கு மில்லியன் லிட்டரில்)	57	764
4.	நுகர்வோர்களின் எண்ணிக்கை	1,14,000	8,15,557

5.3.1 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின்கீழ் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (CMCDM)

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பழைய சென்னை மாநகருக்கு இணையாக பாதாள சாக்கடை திட்டங்களை சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டத்தின்கீழ் மேற்கொள்ள சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தின்மூலம் சென்னை வாழ் மக்களின் வாழ்க்கை தரம், சுற்று சூழல் மற்றும் சுகாதாரம் பெருமளவில் மேம்படும். இந்நிதியின்கீழ் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூடுதலாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளில் 4 பகுதிகளான மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர் மற்றும் மீனம்பாக்கம் ஆகியவற்றில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன.

இணைந்த 15 பகுதிகளான திருவொற்றியூர், கத்திவாக்கம், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, அம்பத்தூர், நொளம்பூர், மதுரவாயல், போரூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, ராமாபுரம், பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம் ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நெற்குன்றம் மற்றும் முகலிவாக்கம் பகுதிகளுக்கான பாதாளசாக்கடை திட்டப் பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன.

இணைந்த 8 பகுதிகளான மணலி, சின்னசேக்காடு, இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், காரம்பாக்கம்,

2017 ஜூன் 20]

மணப்பாக்கம், ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகியவற்றிற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. மீதமுள்ள இணைந்த 13 பகுதிகளான புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், செம்மஞ்சேரி மற்றும் உத்தண்டி, ஜல்லடம்பேட்டை மற்றும் ஈஞ்சம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கழிவு நீரகற்று பணிகள்

வ. எண்	ஆண்டு	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	2011-12	கழிவு நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல்	9.26	பணிகள்நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளது.
		பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை பெரிதாக்குதல்	20.39	
		முகப்பேரில் பாதாள சாக்கடை அமைப்பின் திறப்பு வாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன்கூடிய சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல்	14.08	
		தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள்	11.24	
		கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல்	31.18	
		35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்	9.90	இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

வ. எண்	ஆண்டு	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
		வேளச்சேரி பகுதியில் பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் தொடர்புப் பணிகள்.	36.55	பணிகள் ஆகஸ்ட் 2017-க்குள் முடிக்கப்படும்.
2.	2012-13	கத்திவாக்கம்	86.15	பணிகள் செப்டம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம்	110.90	பணிகள் அக்டோபர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		இராமாபுரம்	48.50	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல்	15.20	இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
3.	2013-14	திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்)	8.51	பணிகள்நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளது.
		நொளம்பூர்	26.01	பணிகள் செப்டம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		சூரப்பட்டு	35.00	பணிகள் செப்டம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		புத்தகரம் மற்றும் கதிர்வேடு	60.00	பணிகள் செப்டம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
		முகலிவாக்கம்	75.24	மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது.
மொத்தம்			598.11	

5.3.2 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள்:

2017 ஜூன் 20]

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	ராஜீவ் காந்தி சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள்	41.77	பணிகள் முடிவுற்றுள்ளன.
	பாதாள சாக்கடைத் திட்டம்		
2.	உள்ளகரம்-புழுதிவாக்கம்	28.08	பணிகள் ஜூலை 2017-க்குள் முடிக்கப்படும்.
3.	அம்பத்தூர் (சிப்பம்-II, III, IV & V)	130.91	சிப்பம் III, IV & V ஆகியவற்றின் பணிகள் முடிவுற்றுள்ளன். சிப்பம் II-ல் மீதமுள்ள பணிகளுக்கு மறு ஒப்பந்தம் கோரப்பட உள்ளது.
4.	மதுரவாயல்	57.45	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
5.	போரூர்	38.29	ராமாபுரம் பகுதியின் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் டிசம்பர் 2017-ல் முடிக்கப்பட்ட பிறகே போரூர் பணிகள் முடிவுறும்.
6.	பெருங்குடி	20.19	பணிகள் அக்டோபர் 2017-க்குள் முடிக்கப்படும்.
7.	பள்ளிக்கரணை	58.61	பணிகள் அக்டோபர் 2017-க்குள் முடிக்கப்படும்.
	மொத்தம்	375.30	
இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள்			
8.	ஆவடி நகராட்சி	158.05	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
9.	தாம்பரம் நகராட்சி	160.97	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
10.	திருமழிசை பேரூராட்சி	20.47	பணிகள் முடிவுற்றுள்ளன
11.	ஸ்ரீ பெரும்புதூர் பேரூராட்சி	47.40	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
	மொத்தம்	386.89	

[2017 ஜூன் 20

5.3.3 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்--III - (TNUDP-III)

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III-ன்கீழ், கீழ்க்கண்ட 3 பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	மாதவரம்	50.22	பணிகள் முடிவுற்றுள்ளன.
2.	திருவொற்றியூர்	87.63	பணிகள் டிசம்பர் 2017-க்குள் முடிக்கப்படும்.
3.	அம்பத்தூர் (பகுதி-I)	65.75	பணிகள் முடிவுற்றுள்ளன.
	மொத்தம்	203.60	

5.3.4 தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம் (TNIPP) சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம்

விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகரத்தின் தெற்கு பகுதிகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு சோழிங்கநல்லூரில் கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ₹65.97 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையம் நவீன தொழில்நுட்பத்துடன் மின்சாரம் தயாரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.3.5 கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திரயமயமாக்குதல்

சென்னை மாநகரில் கழிவுநீர் அகற்றும் அமைப்பை சுத்தம் செய்யும் பணிகளில் இயந்திரமயமாக்கலை வாரியம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதற்கு தேவையான இயந்திரங்களை சென்னைக் குடிநீர் வாரியம் வாங்கியுள்ளது. தற்போது 113 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 238 தூர் வாரும் இயந்திரங்கள், 30 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் கழிவு நீர் அமைப்பினை பராமரித்திட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

5.3.6 கழிவுநீரகற்ற முன்னெச்சரிக்கை பராமரிப்பு பணிகள்

சென்னைக் குடிநீர் வாரியம், 8,15,557 கழிவுநீரகற்று இணைப்புள்ள நுகர்வோரின் பயன்பாட்டிற்காக 4250 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் குழாய்களை பராமரித்து வருகிறது. சென்னை மாநகரின் புவி தளம் சமமாக உள்ளதால் கழிவுநீர் கட்டமைப்பை பராமரிப்பு செய்தல் சவாலான பணியாக உள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம், கழிவுநீர் அமைப்புகளில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதை நடைமுறைபடுத்தியுள்ளது. இதன்மூலம் கசடுகள் தேங்குவது முன்கூட்டியே தவிர்க்கப்படுகிறது. தேவையான நிலையை பொறுத்து கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு காலம் வகைப்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் உரிய இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அமைப்பினை வாரியம் பராமரித்து வருகிறது.

மேற்கண்ட அறிவியல் முறையிலான முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணியினால் மாநகரில் கழிவுநீர் அடைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன.

5.3.7 நீர்வழிப்பாதையில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

சென்னை நகர நீர் வழிப் பாதைகளில் 337 இடங்களில் கழிவு நீர் கலப்பதை நிறுத்த 2012-13 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ₹300 கோடி ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்க இயலும். இக்கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும்.

முதல் கட்டமாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து ₹150 கோடி ஒப்பளிக்கப்பட்டு, மொத்தமுள்ள 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 82 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் செப்டம்பர் 2017-ல் முடிக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக சென்னை நகரின் நீர் வழித் தடத்தில் கழிவுநீர் கலக்கும் மீதமுள்ள 158 இடங்களில் 7 சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ள ₹163 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 சிப்பங்களில், 4 சிப்பங்களுக்கு

பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 3 சிப்பங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன.

5.3.8 சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளுக்கு மறு பயன்பாட்டுக்கு அளித்தல்

இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது நாளொன்றுக்கு 28.53 மில்லியன் லிட்டர் அளவு சுத்திகரிப்பு செய்து சென்னை பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட், சென்னை உரத் தொழிற்சாலை லிமிடெட் மற்றும் மணலி பெட்ரோ இராசயன பொருட்கள் தொழிற்சாலைக்கு வழங்கி வருகிறது. இதன்மூலம் வாரியத்திற்கு 2016-17 ஆம் ஆண்டில் ₹17.54 கோடி வருமானம் கிடைத்தது.

5.3.8.1 கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல் - கோயம்பேட்டில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்

தமிழக அரசானது கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Tertiary Treatment Reverse Osmosis) ஒன்றை ₹486.21 கோடி மதிப்பீட்டில், இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்க நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டு திட்டத்தின்கீழ் ₹231.50 கோடியை கடனாகவும் ₹208.82 கோடியை மத்திய மற்றும் மாநில அரசின் அம்ரூத் திட்டத்தின்கீழ் மானியமாகவும் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.3.8.2 கொடுங்கையூரில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்

வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட

2017 ஜூன் 20]
நீரை பயன்படுத்துவதற்கு பதிலாக இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து வழங்குவதற்காக, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். இதற்காக கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் `330 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் ₹229.50 கோடியை கடனாகவும் ₹118.67 கோடியை மத்திய மற்றும் மாநில அரசின் அம்ருத் திட்டத்தின் மூலமாக மானியமாக பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.4 நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நீர் மேலாண்மையில் நீடித்த செயல்முறைகளை ஊக்குவிப்பதற்காக நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின்கீழ் பெருவளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவி அதன்மூலம் மழைநீரை சேமித்தல், நகரை சுற்றியுள்ள ஏரிகளை சீரமைத்தல் மழைநீர் வடிகால்களில் இருந்து பெறப்படும் மழைநீரை சேகரித்து நீரூற்று கிணறுகள்மூலம் நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்துதல், நீர் நிலைகளின் எல்லைகளை வரையறை செய்தல், மறுசுழற்சிமூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கொண்டு குடிநீரல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்தவும் நீர்நிலைகளின் நீராதாரங்களை மேம்படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் நோக்கமானது நீர்மேலாண்மையில் நல்ல செயல்முறைகளை செயல்படுத்துவதன் வாயிலாக பொது மக்களையும் இதில் பங்கேற்க செய்வதாகும்.

5.5 மழை நீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மழைநீர் சேகரிப்பினை சென்னைக் குடிநீர் வாரியம் 2002 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்மூலம் சென்னை நகரம் மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக திகழ்கிறது. சென்னைக் குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை

மக்களிடையே பிரபலமடையச் செய்ய கையேடுகள், குறிப்பேடுகள், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியவைமூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் புது இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அனைத்து கட்டடங்களுக்கும் கட்டடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 7,92,700 கட்டடங்களில், மொத்தம் 8,62,700 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 2016-17 ஆம் ஆண்டு 15,200 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்மூலம் நிலநீர் செறிவூட்டு திறன் 2.70 ஆயிரம் மில்லியன் கனஅடி (TMC) ஆக உள்ளது. முறையாகவும், தொடர்ச்சியாகவும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பராமரிக்க நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் சிறப்பு முகாம்கள் வருடந்தோறும் நடத்தப்படுகிறது. சென்னை நகரில் உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பகுதிப் பொறியாளர்களும், பணிமனை பொறியாளர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

மழைநீர் சேகரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியதால், ஒவ்வொரு வருடமும் குறிப்பாக மழைக்காலத்தில் நிலத்தடி நீரின் மட்டமும் தரமும் ஆண்டுதோறும் மேம்பட்டு வருகிறது.

5.6 வறட்சி நிவாரணப் பணிகள்

2016 ஆம் ஆண்டு பருவ மழை பொய்த்ததின் காரணமாக 1-1-2017 முதல் குடிநீர் விநியோகத்தை மறு சீரமைத்து நாளொன்றுக்கு சராசரியாக 550 மில்லியன் லிட்டராக விநியோகம் செய்யப்பட்டது. 1-4-2017 முதல் ஏரிகளின் குடிநீர் இருப்பை கருத்திற்கொண்டு குடிநீர் விநியோகம் நாளொன்றுக்கு 500 மில்லியன் லிட்டராக மாற்றப்பட்டது. தற்போது நாளொன்றுக்கு 470 மில்லியன் லிட்டராக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. ஏரிகளின் நீர் இருப்பு நிலையை கருத்தில்கொண்டு இந்த ஆண்டு பருவமழை காலம் வரை தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு திட்டமிடப்பட்டு கீழ்கண்ட அவசர கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2017 ஜுன் 20]

5.6.1 நீராதாரங்களை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை

5.6.1.1 விவசாய கிணறுகள்மூலம் நீர் பெறுவது

திருவள்ளூர் மாவட்டத்தில், தனியார் விவசாய கிணறுகளிலிருந்து நாள் ஒன்றிற்கு 100 மில்லியன் லிட்டர் நீர் பெறுவதற்கு திட்டமிடப்பட்டு தற்போது 240 கிணறுகளிலிருந்து 100 மில்லியன் லிட்டர் நீர் பெறப்படுகிறது.

5.6.1.2 நெய்வேலி, பரவனாறு மற்றும் கடிலம் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகள்மூலம் நீர் பெறுவது

நெய்வேலி நீர்ப்பரப்பு பகுதியில் கடந்த ஆண்டு (2016) இறுதியில் வீராணம் ஏரி முற்றிலும் வறண்ட நிலையில் கடிலம் பகுதியில் பயன்பாட்டில் இருந்த ஆழ்துளை கிணறுகள்மூலம் நெய்வேலி சுரங்கங்களிலிருந்தும், பரவனாறு ஆற்றிலிருந்தும் நாளொன்றுக்கு சுமார் 25 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்பட்டு வீராணம் குடிநீர் குழாய்மூலம் சென்னைக்கு எடுத்து வரப்பட்டது. மேற்கூறிய நீர் ஆதாரங்களிலிருந்து மொத்தம் நாளொன்றிற்கு 85 மில்லியன் லிட்டர் பெறுவதற்கு திட்டமிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 90 மில்லியன் லிட்டர் சென்னைக்கு விநியோகிக்கப்படுகிறது.

5.6.1.3 சோழவரம் ஏரி மற்றும் செங்குன்றம் ஏரியில் கடைநிலை நீர் எடுத்தல்

சோழவரம் ஏரியிலிருந்து கடைநிலை நீரை பம்ப் செட்டுகள் மூலம் உறிஞ்சப்பட்டு செங்குன்றம் ஏரிக்கு கால்வாய்மூலம் அனுப்பப்பட்டு பயன்பாட்டிற்கு விநியோகம் செய்யப்பட்டது. செங்குன்றம் ஏரியின் நீர் இருப்பு குறைவாக இருப்பதால், இந்த கடைநிலை நீரையும் பம்ப் செட்டுகள்மூலம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுகின்றது.

5.6.1.4 கல்குவாரியிலிருந்து நீர் பெறுதல்

சென்னை அருகில் குன்றத்தூர் அருகாமையில் உள்ள சிக்கராயபுரத்தில் உள்ள 22 உபயோகப்படுத்தாத குவாரிகளில் தேங்கி உள்ள சுமார் 3,000 மில்லியன் லிட்டர் நீரை ஆய்வு செய்து, ஆய்வின்படி குடிநீருக்கு உகந்ததென அறியப்பட்டு செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான குழாய்கள் பதித்தல் மற்றும் பம்புகள் அமைப்பதற்கான

பணிகளுக்கு ₹13.63 கோடி திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன. தற்போது இக்குவாரிகளிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீர் கொண்டு வரப்படுகின்றது.

5.6.1.5 சென்னை நகரின் அருகிலுள்ள சிறிய ஏரிகளிலிருந்து நீர் பெறுதல்

போரூர் ஏரியிலுள்ள நீரை சுத்திகரிப்பு செய்து நாளொன்றுக்கு 4 மில்லியன் லிட்டர் வீதம் சென்னையின் குடிநீர் தேவைக்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிக்கப்பட்டு, ஜூன் மாத இறுதியில் இந்த ஏரியிலுள்ள நீர் சுத்திகரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

5.6.2 சென்னை நகரில் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள்

5.6.2.1 குடிநீர் லாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

கோடைகால குடிநீர்த் தேவையை சமாளிக்க குழாய்கள் மூலம் குடிநீர் வராத தெருக்களுக்கு ஏற்கெனவே உள்ள 520 குடிநீர் லாரிகளுடன் மேலும் 180 லாரிகளை வாடகைக்கு அமர்த்தி 700 குடிநீர் லாரிகள்மூலம் நாளொன்றுக்கு 7,000 நடைகள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

5.6.2.2 இந்தியா மார்க் 2 பம்புகள் நிறுவுதல் மற்றும் புனரமைத்தல்

சென்னை மாநகரில் சுமார் 5,100 இந்தியா மார்க் 2 பம்புகள் பயன்பாட்டில் உள்ளன. இதில் 566 இந்தியா மார்க் 2 பம்புகள் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், புதிதாக 150 இந்தியா மார்க் 2 பம்புகள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

5.6.2.3 பிளாஸ்டிக் (HDPE) குடிநீர் தொட்டிகள் நிறுவுதல் மற்றும் புனரமைத்தல்

குழாய்களின்மூலம் குடிநீர் வராத தெருக்களுக்கு 10,800 குடிநீர் தொட்டிகள் நிறுவப்பட்டு லாரிகளின்மூலம் குடிநீர் நிரப்பி விநியோகிக்கப்படுகிறது. கோடைகால வறட்சியை கருத்திற்கொண்டு மேலும் 660 புதிய பிளாஸ்டிக் குடிநீர்த் தொட்டிகள் நிறுவ திட்டமிடப்பட்டு 535 தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. மீதமுள்ள தொட்டிகளை நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2017 ஜூன் 20]

5.6.2.4 கூடுதலாக லாரிகளுக்கு நீர் நிரப்பும் அமைப்புகள் நிறுவுதல்

தற்போது 41 இடங்களில் உள்ள குடிநீர் பகிர்மான நிலையங்களில் 169 நீர் நிரப்பும் அமைப்புகள்மூலம் லாரிகளில் குடிநீர் நிரப்பப்படுகிறது. மேலும், கூடுதலாக 22 நீர் நிரப்பும் அமைப்புகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

சென்னையைச் சுற்றியுள்ள பூண்டி, சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகள் அனைத்திலும் நீர் வற்றிப் போகும் சூழ்நிலையை எதிர்பார்த்து மேற்கூறிய வறட்சி நிவாரண பணிகள் சுமார் ₹105 கோடி மதிப்பீட்டில் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.7 நிதி நிலைமை

2016-17 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் செலவினம் ₹1,084.25 கோடி. வாரியத்தின் மொத்த வருமானம் ₹786.04 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின்மூலம் ₹165.38 கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின்மூலம் ₹280.45 கோடியும், இதர வருவாய் ₹53.85 கோடியும் ஆகும். கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும் மற்ற நோக்கத்திற்காகவும் குடிநீர் வாரியத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2016-17 ஆம் ஆண்டு ₹286.36 கோடி நிதியினை வாரியம் மானியமாக பெற்றுள்ளது.

5.8 குறைகளை களைதல்

வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோர்களின் குறைகளை விரைந்து களையவும், வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

5.8.1 24X7 புகார்களைப் பதிவு செய்தல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் குறைகள் களையும் பிரிவு 24 மணி நேரமும் வாரத்தின் எல்லா நாட்களும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும், கண்காணிக்கவும் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 45674567 மூலமாகவோ, நுகர்வோர் தங்களது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

புகார்களையும்/ குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள்/ குறைகள் அந்தந்த பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. புகார் பிரிவில் சராசரியாக ஒரு நாளைக்கு 160 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன. குறைநிவர்த்தி அமைப்பு பொதுமக்களால் எளிதாக பயன்படுத்தும் விதத்தில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனியான நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவு தலைமை அலுவலகத்தில் நுகர்வோர்களுக்கு சேவை செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் தங்களது புகார்களை பதிவு செய்தவுடன், புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையை வாரியத்திடமிருந்து குறுந்தகவல் சேவை மூலமாக பெற சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையை (SMS) செயல்படுத்தியுள்ளது. புகார்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள் குறித்து நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக தகவல் தரப்படுகிறது.

5.8.2 இணையதளம்மூலம் புகார்களை நிவர்த்தித்தல்

நுகர்வோர் தங்களின் புகார்களை வாரியத்தின் இணையதளத்தின் மூலம் பதிவு செய்ய சென்னைக் குடிநீர் வாரியமானது www. chennaimetro.tn.nic.in எனும் இணைய தளத்தை கொண்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்களை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்கள் சாசனத்தில் குறிப்பிட்டபடி நிவர்த்திக்கப்படுகிறது.

5.8.3 திறந்தவெளி குறைதீர்க்கும் கூட்டம்

வாரியம், சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, திறந்தவெளி குறைதீர்ப்பு கூட்டங்கள் (Open House Meeting) வாரியத்தின் அனைத்துப் பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடத்தப்பட்டு வாரியத்தின் மூத்த அதிகாரிகள் இந்த கூட்டங்களில் தலைமை தாங்குகின்றனர். இக்கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு அரசு, சென்னை மாநகர் நீங்கலாக மாநிலம் முழுவதும் உள்ள உள்ளாட்சிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை சட்டபூர்வமான ஒரு நிறுவனமாக 14.4.1971 அன்று தோற்றுவித்தது. சென்னையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், தொழில்நுட்பம், நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுகளுடன் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களை தலைவராகவும், மேலாண்மை இயக்குநரை தலைமை அதிகாரியாகவும், கொண்டுள்ளது. வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களை தலைமையிடமாகக் கொண்டு, நான்கு தலைமைப் பொறியாளர்கள் உள்ளனர். தருமபுரியில் ஒரு திட்ட தலைமைப் பொறியாளர் உள்ளார்.

6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்

அ. குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்டமிடுதல், ஆய்வு, வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல்.

ஆ. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்

இ. குடிநீர் தரக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

ஈ. குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மைக்கான செயல்பாடுகள்

உ. பயிற்சி நடவடிக்கைகள்

6.2 ஊரகக் குடிநீர்த் திட்டம்

ஊரகப் பகுதி மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவின் வரைமுறையை மத்திய அரசு 12-வது ஐந்தாண்டு திட்டகாலத்திற்கு 40 லிட்டர் என்ற அளவிலிருந்து நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டராக உயர்த்தியுள்ளது.

தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவிற்கும், வரையறுக்கப்பட்ட அளவிற்குமான இடைவெளி ஆய்வை

[2017 ஜூன் 20

அடிப்படையாகக் கொண்டு ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்டம், மத்திய அரசின் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம் மற்றும் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர், பயனாளி ஒரே ஒரு உள்ளாட்சி அமைப்பாக இருந்தால், பராமரிப்பிற்காக அந்த உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப்படுகின்றன. ஒரு உள்ளாட்சி அமைப்பிற்கு மேல் பயனாளிகள் இருந்தால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே திட்ட பராமரிப்பை மேற்கொள்கிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 1,00,018 ஊரக குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 93,463 ஊரக குடியிருப்புகள், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு, முழுமையான குடிநீர் வசதி பெற்றுள்ளன. குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகளோடு சேர்த்து 6,555 குடியிருப்புகள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ளன.

குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளோடு சேர்த்து 3,269 பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக 2016-17 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2,769 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

6.3 குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மை

குடிநீர்த் திட்டங்களை செயலாக்குவதோடு மட்டுமல்லாமல், குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மையை மேம்படுத்தும் நடவடிக்கையாக தடுப்பணைகள், செறிவூட்டுக் குழாய்கள், கசிவுநீர் குட்டைகள் போன்ற நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் நிர்மாணிக்கும் பணிகளையும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

2011-12 முதல் ₹228.24 கோடி மதிப்பீட்டில் 3,348 நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் நிறுவப்பட்டுள்ளன.

2017 ஜூன் 20]

6.4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்குடன் மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீர் தேவை உள்ள பகுதிகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய பொதுவான நீராதாரங்களுடன் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நகரங்கள் மற்றும் ஊரக குடியிருப்புகள் இரண்டும் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

24 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 22.71 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹901.33 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலையில் உள்ளன. இவற்றுள் 1.00 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹54.66 கோடி மதிப்பீட்டில் இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் குறைந்தபட்ச தேவைத் திட்டம், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கப்படுகின்றன. திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை கோடியில்	பயன்பெறும் மக்கள்தொகை இலட்சத்தில்	பணி முன்னேற்ற விவரம் (%)
1.	கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஒன்றியத்திலுள்ள 9 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 185 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	42.94	0.81	நிறைவுற்றது
2.	ஈரோடு மாவட்டம், பவானிசாகர், நம்பியூர் ஒன்றியங்களைச் சார்ந்த காரப்பாடி மற்றும் 5 இதர கிராம ஊராட்சிகளிலுள்ள 88 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	11.72	0.19	நிறைவுற்றது

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை கோடியில்	பயன்பெறும் மக்கள்தொகை இலட்சத்தில்	பணி முன்னேற்ற விவரம் (%)
3.	திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	54.14	1.23	98%
4.	அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 281 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	26.06	1.09	95%
5.	ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த வெள்ளக்கோயில், காங்கேயம் நகராட்சிகள் மற்றும் 528 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	91.40	2.00	95%
6.	கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 60 குடியிருப்புகள், 59 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் லால்பேட்டை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	18.16	0.60	93%
7.	திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அருகிலுள்ள இராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஒன்றியங்களைச் சார்ந்த கூடங்குளம் மற்றும் 12 ஊராட்சிகளைச் சார்ந்த 100 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	68.10	0.88	92%

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை கோடியில்	பயன்பெறும் மக்கள்தொகை இலட்சத்தில்	பணி முன்னேற்ற விவரம் (%)
8.	தேனி மாவட்டம், கடமலைகுண்டு - மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சார்ந்த ஆத்தங்கரைப்பட்டி மற்றும் 14 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	2.65	0.07	85%
9.	தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் (பகுதி), ஸ்ரீவைகுண்டம் (பகுதி) மற்றும் தூத்துக்குடி (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 90 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	17.17	0.48	78%
10.	நீலகிரி மாவட்டம், முள்ளிகூர், இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிகளைச் சார்ந்த முள்ளிகூர் மற்றும் 54 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	25.85	0.30	73%
11.	திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	31.32	1.56	72%
12.	திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி (பகுதி), பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	46.55	1.55	70%

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை கோடியில்	பயன்பெறும் மக்கள்தொகை இலட்சத்தில்	பணி முன்னேற்ற விவரம் (%)
13.	தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி (பகுதி), கயத்தார் (பகுதி), ஒட்டபிடாரம் (பகுதி), விளாத்திகுளம் (பகுதி) மற்றும் புதூர் (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 248 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	94.04	1.25	64%
14.	திருநெல்வேலி மாவட்டம், மானூர் (பகுதி) மற்றும் பாளையங்கோட்டை (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	32.40	1.13	63%
15.	திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம், காங்கேயம் ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 1262 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (பகுதி-2)	91.16	2.72	20%
16.	தேனி மாவட்டம் வடுகபட்டி பேரூராட்சி, பெரியகுளம் ஒன்றியத்தைச் சார்ந்த 57 ஊரக குடிருப்புகள், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மேலும், திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	45.70	0.92	18%

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை கோடியில்	பயன்பெறும் மக்கள்தொகை இலட்சத்தில்	பணி முன்னேற்ற விவரம் (%)
17.	*கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகமலை ஒன்றியங்களைச் சார்ந்த 253 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்*	*52.75*	*0.69*	*பணிகள் துவங்கப்பட்டு உள்ளன.*
18.	*பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 306 குடியிருப்புகள், அரும்பாவூர் மற்றும் பூலம்பாடி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்*	*61.11*	*2.57*	*சோதனை ஓட்டத்தில் உள்ளது. 306 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக்கப் படுகிறது.*
19.	*திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 101 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்)*	*4.11*	*0.43*	*சோதனை ஓட்டத்தில் உள்ளது. 57குடியிருப்பு களுக்கு குடிநீர் விநியோகிக்கப் படுகிறது.*
20.	*திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 109 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்)*	*4.08*	*0.59*	*சோதனை ஓட்டத்தில் உள்ளது. 78 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக்கப் படுகிறது.*
21.	*திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 201 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின்கீழ்)*	*8.96*	*0.86*	*சோதனை ஓட்டத்தில் உள்ளது. 94 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக்கப் படுகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2017 ஜூன் 20

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை கோடியில்	பயன்பெறும் மக்கள்தொகை இலட்சத்தில்	பணி முன்னேற்ற விவரம் (%)
22.	பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 17 தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 69 வழியோர குடியிருப்புகள் மற்றும் கொடியம்பாளையம் குடியிருப்புக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்	19.14	0.38	ஒப்பந்தப்புள்ளி நிலை
23.	திருச்சி மாவட்டம் வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஒன்றியங்களில் உள்ள 135 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்	46.32	0.29	ஒப்பந்தப்புள்ளி நிலை
24.	ஆண்டிப்பட்டி மற்றும் கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த கண்டமனூர் மற்றும் 15 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்	5.50	0.12	ஒப்பந்தப்புள்ளி நிலை
	மொத்தம்	901.33	22.71	

6.5 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,751 குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ₹315.70 கோடி மதிப்பீட்டில் 7.63 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2016-17 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்டுள்ளது. 10 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ₹2,572.56 கோடி மதிப்பீட்டில் 53.28 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் குறைந்தபட்ச தேவை திட்டம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிதியம், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய ஊரக குடிநீர் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான

2017 ஜூன் 20]

நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி, ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கப்படுகின்றன. திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (கோடியில்)	பயன்பெறும் மக்கள்தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
1.	தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, அதிராமபட்டினம் மற்றும் பெருமகளூர் பேரூராட்சிகள் மற்றும் 1153 ஊரக குடியிருப் புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	495.70	7.00	95%
2.	புதுக்கோட்டை மாவட்டம், 1766 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் 125 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	301.50	6.65	93%
3.	கடலூர் மாவட்டம், கடலூர் நகராட்சி, புவனகிரி, பரங்கிப்பேட்டை பேரூராட்சிகள் மற்றும் 812 ஊரக குடியிருப் புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	260.54	7.75	90%
4.	நாகப்பட்டினம் மாவட்டம், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	105.70	3.70	77%
5.	சேலம் மாவட்டம், நங்கவள்ளி மற்றும் மேச்சேரி ஒன்றியங்களைச் சார்ந்த 698 ஊரக குடியிருப்புகள் மற்றும் 6 பேரூராட்சிகளுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்	158.64	3.93	77%
6.	கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர், 6 பேரூராட்சிகள் மற்றும் 134 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	130.46	1.83	76%

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (கோடியில்)	பயன்பெறும் மக்கள்தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
7.	திண்டுக்கல் மாவட்டம், நத்தம் மற்றும் 2 பேரூராட்சிகள், 1276 ஊரக குடியிருப்புகளுக்கான (திண்டுக்கல் மாவட்டம் 2 பேரூராட்சிகள், 354 ஊரக குடியிருப்புகள் மற்றும் திருச்சி மாவட்டம் 135 ஊரக குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன்கூடிய) கூட்டுக் குடிநீர்த் திட்டம்	636.00	11.27	69%
8.	விருதுநகர் மாவட்டம், 755 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	234.00	6.51	63%
9.	கன்னியாகுமரி மாவட்டம், அழகியபாண்டிபுரம், 8 பேரூராட்சிகள் மற்றும் 246 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	109.80	2.96	55%
10.	திருச்சி மாவட்டம், முசிறி, துறையூர், தாத்தையங்கார்பேட்டை மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	140.22	1.68	3%
	மொத்தம்	2,572.56	53.28	

6.6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் புனரமைத்தல்

நீராதாரங்களின் கொடுதிறன் குறைவு அல்லது மின்னிறைப்பான்களின் செயல் திறன் குறைவு அல்லது குடிநீர் குழாய்கள் மற்றும் தடுக்கிதழ்கள் சேதம் போன்ற காரணங்களுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை முழுமையாக செயல்பாட்டிற்கு கொண்டு வரவும், வடிவமைக்கப்பட்ட அளவிற்கு குடிநீர் வழங்கலை மேம்படுத்தவும் இவ்வித புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2016-17 ஆம் ஆண்டில், மாநில அரசின் பங்களிப்பு நிதி, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்ட நிதி, மத்திய இயற்கை இடர்பாடு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை நிதியுதவியுடன் ₹98.57 கோடி

2017 ஜூன் 20]

செலவில் 1,898 புனரமைப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	வகை	பணிகளின் எண்ணிக்கை	தொகை (₹ கோடியில்)
	தேசிய ஊரகக் குடிநீர்த் திட்ட நிதியுதவி / மாநில அரசின் பங்களிப்பு நிதி		
1.	நீராதாரங்களை மேம்படுத்துதல்	11	1.34
2.	பைப்லைன் சீரமைப்புப் பணிகள்	380	24.35
3.	நீண்டகால பயன்பாட்டிலுள்ள மின் மோட்டார், வால்வுகள், குடிநீர் அளவுமானி மாற்றும் / பழுது நீக்கும் பணிகள்	217	11.08
	மத்திய அரசின் இயற்கை இடர்பாடு நிதி / மாநில அரசின் பங்களிப்பு நிதி		
4.	நீராதார மேம்பாட்டுப் பணிகள் மற்றும் இதர பணிக ள்	642	30.63
	மாநில அரசின் பேரிடர் மேலாண்மை நிதி / வறட்சி நிவாரண நிதி		
5.	ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளை சீரமைக்கும் பணிகள்	238	20.00
	கூடுதல் வறட்சி நிவாரண நிதி		
6.	நீராதார மேம்பாட்டுப் பணிகள், கேபிள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளை சீரமைக்கும் பணிகள்	410	11.17
	மொத்தம்	1,898	98.57

6.7 குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு, மாநில அளவிலான ஒரு குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம், மாவட்ட அளவிலான 31 குடிநீர் தரப் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் உப மாவட்ட அளவிலான 51 குடிநீர் தரப் பரிசோதனைக் கூடங்களை நிறுவியுள்ளது. இந்த பரிசோதனை கூடங்களில் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் உள்ளிட்ட அடிப்படை தரக் காரணிகளுக்கான பரிசோதனைகள் மற்றும் குடிநீர் தரக் கண்காணிப்பு பணிகள் செய்வதற்கான வசதிகள் உள்ளன. மத்திய அரசு, சென்னையில் உள்ள மாநில குடிநீர் தரப் பரிசோதனைக் கூடத்தை மாநில வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக அங்கீகரித்துள்ளது.

மாநில அளவிலான தரப்பரிசோதனைக் கூடத்திற்கு, NABL அங்கீகாரம் (National Accreditation Board for Testing and Calibration Laboratories) பெறப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில் 2016-17 ஆம் ஆண்டில் 50,000 குடிநீர் மாதிரிகள் தரப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 12,524 நீர் பரிசோதனை பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. 10,000 அடிப்படை பணியாளர்களுக்கு நீர் பரிசோதனை பெட்டி உபயோகிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதிகப்படியான குடிநீர் மாதிரிகளைப் பரிசோதிப்பதன் மூலமும், அடிப்படை பணியாளர்களுக்கு குடிநீர் பரிசோதனை பெட்டி உபயோகிக்க பயிற்சி அளிப்பதன் மூலமும் மேலும், குடிநீர் பரிசோதனை பெட்டிகள் வழங்குவதன் மூலமும் 2017-2018-ம் ஆண்டில் பரிசோதனைக் கூடங்களின் செயல்பாட்டினை மேலும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.8 குடிநீர் பாதுகாப்பு வாரம்

குடிநீரின் தரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு குடிநீர் பாதுகாப்பு வாரம் நடத்தி வருகிறது.

27.6.2016 முதல் 3.7.2016 வரை குடிநீர் பாதுகாப்பு வாரம் நடத்தப்பட்டது. குடிநீர் தர விழிப்புணர்வு ஏற்படுத்த 31 மாவட்ட பேரணிகள், 385 ஒன்றிய பேரணிகள், 6,262 கிராமசபை கூட்டங்கள் நடத்தப்பட்டன. 3,000 நீர் பரிசோதனைப் பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. இந்த குடிநீர் பாதுகாப்பு வாரத்தின்போது 26,374 ஆசிரியர்கள் மற்றும் 13,187 விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு நீர் மாதிரி சேகரிப்பு மற்றும் பரிசோதனை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. சுமார் 2 இலட்சம் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.

6.9 நகர்ப்புற தனி குடிநீர் திட்டம்

நகர்ப்புற தனி குடிநீர் திட்டப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு செயல்படுத்த, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திட்ட செயலாக்க முகமையாக செயல்படுகிறது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், பராமரிப்பிற்காக சம்பந்தப்பட்ட நகரக உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

27 குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள், 2 மாநகராட்சிகள், 15 நகராட்சிகள் மற்றும் 10 பேரூராட்சிகளில் உள்ள 18.26 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹949.88 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2017 ஜுன் 20]

மேலும், தமிழ்நாடு அரசு 9 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை (5 மாநகராட்சிகள், 4 நகராட்சிகள்) ₹2,244.65 கோடியில், 43.99 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், மாநில அரசு மற்றும் மத்திய அரசின் நிதியுதவியுடன் அம்ரூத் (2015-16) திட்டத்தின்கீழ் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

6.10 கூட்டுக் குடிநீர்த் திட்டம் - இயக்குதல் மற்றும் பராமரிப்பு

ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், அரசு ஆணை (நிலை) எண் 84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.3.1994-ன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இன்றைய தேதியில், 8 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 324 பேரூராட்சிகள், 47,136 ஊரக குடியிருப்புகள் மற்றும் 532 தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், 553 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 4.21 கோடி மக்கள் பயன்பெறும் வண்ணம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நிலவி வரும் கடுமையான வறட்சி நிலையிலும் ஜுன் 2017-ல் நாளொன்றுக்கு சராசரியாக 1,440 மில்லியன் லிட்டர் குடிநீர் இந்த 553 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலமாக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டது:

வ. எண்	பயனாளிகள்	பயனாளிகளின் எண்ணிக்கை	திட்டத்தில் வடிவமைக்கப்பட்டபடி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்.எல்.டி)	தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்.எல்.டி) ஜுன் 2017
1.	மாநகராட்சிகள்	8	265	137
2.	நகராட்சிகள்	66	264	162
3.	பேரூராட்சிகள்	324	334	263
4.	ஊரகக் குடியிருப்புகள்	47,136	1,066	859
5.	தொழிற்சாலைகள்/ கல்வி நிறுவனங்கள் / வணிக நிறுவனங்கள்	532	144	19
	மொத்தம்	48,066	2,073	1,440

2016-17 ஆம் ஆண்டில், இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான செலவு ₹667.37 கோடி மற்றும் குடிநீர் கட்டணங்களின் மூலமாக பெறப்பட்ட வருமானம் ₹269.84 கோடி ஆகும்.

தமிழ்நாடு அரசு, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் வருவாய்க்கும், செலவினத்திற்கும் உள்ள இடைவெளியை சரிசெய்ய 2014-15 ஆம் நிதியாண்டில் ₹140.00 கோடியும், 2015-16 ஆம் நிதியாண்டில் ₹207.11 கோடியும், 2016-17 ஆம் நிதியாண்டில் ₹103.79 கோடியும் சிறப்பு மானியமாக அளித்துள்ளது.

6.11 ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

6.11.1 குடிநீர்த் திட்டங்கள்

136.98 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹14,434.04 கோடி மொத்த மதிப்பீட்டில் 34 குடிநீர் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் 2016-17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விபரம் பின்வருமாறு:

வ. எண்	விபரம்	குடிநீர் திட்டங்கள் (எண்ணிக்கை)	பயனாளிகள்	மக்கள் தொகை (இலட்சத்தில்)	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)
1.	அரசின் அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப் படவுள்ள திட்டங்கள்	6	8 நகராட்சிகள் 11 பேரூ ராட்சிகள் மற்றும் 643 ஊரகக் குடி யிருப்புகள்	13.08	1,257.74
2.	நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ள திட்டங்கள்	9	5 நகராட்சிகள், 25 பேரூ ராட்சிகள் மற்றும் 4638 ஊரகக் குடி யிருப்புகள்	28.61	2,944.12
3.	ஆய்வு/விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணியில் உள்ள திட்டங்கள்	19	2 மாநகராட்சிகள், 10 நகராட்சிகள், 42 பேரூ ராட்சிகள் மற்றும் 14173 ஊரகக் குடியிருப்புகள்	95.29	1,0232.18

2017 ஜூன் 20]

வ. எண்	விபரம்	குடிநீர் திட்டங்கள் (எண்ணிக்கை)	பயனாளிகள்	மக்கள் தொகை (இலட்சத்தில்)	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)
	மொத்தம்	34	2 மாநகராட்சிகள், 23 நகராட்சிகள், 78 பேரூ ராட்சிகள் மற்றும் 19,454 ஊரகக் குடியி ருப்புகள்	136.98	14,434.04

6.11.2 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள்

5 மாநகராட்சிகள் மற்றும் 5 நகராட்சிகளுக்கான பாதாள சாக்கடை திட்டங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் ₹2,936.84 கோடியில் 2016-17 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு, மேற்படி திட்டங்கள் ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன.

6.11.3 சென்னை பெங்களூருக்கிடையே தொழிற்சாலைகளுக்கு பிரத்தியேக நீராதார குழாய் அமைப்புத் திட்டம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தொழிற்சாலைகளின் நீர்த்தேவையினை பூர்த்தி செய்யவும், சென்னை பெங்களூரு வழித் தடத்தில் புதிய தொழிற்சாலைகள்அமைவதை ஊக்குவிக்கவும் ஒரு குடிநீர் திட்டத்திற்கான விரிவான ஆய்வு மேற்கொண்டது. சென்னை மற்றும் ஒசூருக்கு இடையே, 10,881 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு 46 தொகுப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைத் தொகுப்புகளுக்கு நீர்த்தேவையை ஈடுசெய்யும் வகையிலான திட்டத்திற்கு முன்சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பொன்னேரி மற்றும் ஒசூர் தொழிற்சாலை முனையங்களுக்கான விரிவான திட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சி வாரியத்தின் (TNIDB) அறிவுரையின்படி தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடம், பொன்னேரி தொழிற்சாலை முனையம் சார்ந்த பணிகளை அரசு ஒப்படைத்துள்ளது. ஒசூர் தொழிற்சாலை முனையத்திற்கான

விரிவான திட்டமதிப்பீடு தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. குடிநீர்த் தேவையை மதிப்பிடும் பணி நடைபெற்று வருகிறது.

6.12 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட தலைநகரங்கள் மற்றும் பிற நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் அமைக்கும் தமிழக அரசின் நோக்கத்தை கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 3 மாநகராட்சிகள், 117 நகராட்சிகள் மற்றும் 516 பேரூராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கென ₹20,820 கோடி மதிப்பீட்டில் 636 விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

6.12.1 பாதாள சாக்கடைத் திட்டங்களின் நிலை

பெரம்பலூர் நகராட்சி (விடுபட்ட பகுதிகள்), அரியலூர் நகராட்சி (விடுபட்ட பகுதிகள்) மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள் ₹50.25 கோடி மதிப்பீட்டில் 74,848 மக்கள் பயன்பெறும் வகையில் 2016-17 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 22 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ₹1,260.49 கோடி மதிப்பீட்டில் 15.80 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், திருப்போரூர், பொன்னேரி, வல்லம் பேரூராட்சிகள் மற்றும் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு ₹222.99 கோடி மதிப்பீட்டில் 1.45 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

6.12.2 கழிவுநீர் கசடு மேலாண்மை

முன்னோடி திட்டமாக, கருங்குழி பேரூராட்சியில் கழிவுநீர் கசடு மேலாண்மை திட்டப்பணி ₹4.93 கோடி மதிப்பீட்டில் 12,000 மக்கள் பயன்பெறும் வகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

கருங்குழி பேரூராட்சியில் இம்முன்னோடி திட்டத்தின் செயல்பாட்டின் அடிப்படையில் மக்கள்தொகை அடர்த்தி

2017 ஜூன் 20]

குறைவாக உள்ள இதர பேரூராட்சிகளுக்கும் இத்தொழில் நுட்பத்தை விரிவுபடுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

6.13 நிலநீர் பிரிவின் செயல்பாடுகள்

அறிவியல் பூர்வமாக நீராதாரங்களைத் தேடும் பணிகள் மற்றும் நீராதாரங்களின் நீடித்த நிலைத்தன்மைக்காக அமைக்கப்படும் நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகளுக்கான இடங்கள் தேர்வு செய்யும் பணிகளில் தொலையுணர்வு நுட்பம் (Remote sensing) *மற்றும் புவியியல் தகவல் முறைமை* (Geographical Information Systems) *ஆகிய நவீன தொழில்நுட்பங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.*

மத்திய அரசின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகத்தால், நிலத்தடி நீர் வளங்களை குறிக்கும் வரைபடங்கள் மற்றும் மாவட்ட வாரியான வரைபடங்கள் தயாரிக்கும் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு, அதன்படி வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், நிலநீர் தன்மை குறித்த வரைபடங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் தயாரிக்கப்பட்டு வரைவு வரைபடங்கள் தேசிய தொலையுணர்வு மையம், ஐதராபாத் மற்றும் மத்திய அரசுக்கு இறுதி ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

எதிர்காலத் தேவைக்காக குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மை குறித்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்று வடிநில பகுதியில் மூன்றாண்டு காலத்தில் மேற்கொள்ள ₹2.75 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. 5 இடங்களில் தானியங்கி தட்பவெப்ப அளவுக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. 10 இடங்களில் நீர் அளவை கருவிகள் நிறுவப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மிகத் துல்லியமான செயற்கை கோள் தொலையுணர்வு படங்கள், தேசிய தொலையுணர்வு மையம், ஐதராபாத்தில் இருந்து வாங்கப்பட்டு, பகுப்பாய்வு முடிக்கப்பட்டுள்ளது.

பயனற்ற கற்குவாரிகளை மழைநீர் சேகரிப்பு மற்றும் குடிநீர் ஆதாரங்களாக உபயோகப்படுத்தும் வகையில் சாத்தியக் கூறு ஆய்வினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ₹48.20 இலட்சம்

[2017 ஜூன் 20

மதிப்பீட்டில் மேற்கொண்டது. காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 6 பயனற்ற கற்குவாரிகளில் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் 2015-16 ஆம் ஆண்டின்கீழ் ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த லாகம்பாளையம் கிராம ஊராட்சியில் மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் மற்றும் மழைநீர் சேகரித்தல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து 24X7 குடிநீர் வழங்குதலை உறுதி செய்ய, ஒரு முன்னோடி திட்டம் ₹99.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் லாகம்பாளையம் கிராம ஊராட்சியில் நீரின் பயன்பாட்டை அறிந்து கொள்ள நீர் இருப்பு, கிராம மக்கள் மூலமே கணக்கிடப்படும். தற்போது உள்ள நில நீரின் வளத்தின் அடிப்படையில் குடிநீரின் பாதுகாப்பு தன்மை கணக்கிடப்படும். மழைநீர் சேகரிப்பு முறைகள் அமைத்திடவும், அத்தியாவசியமான பகுதிகள் மற்றும் குடிநீர் முழுமையாக கிடைக்கப்பெறாத பகுதிகள் ஆகியன கண்டறியப்பட்டு சீரான குடிநீர் வழங்க சமுதாயத்துடன் இணைந்து விரிவான திட்டம் தயாரிக்கப்படும்.

நீடித்த, நிலையான குடிநீர் வழங்க, ஒரு விரிவான இயக்கம் மற்றும் பராமரிப்பு திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை பெறுவதின் ஒரு பகுதியாக திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத சுத்தமான சுற்றுப்புற சூழலை அடைவதற்கான சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இது நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு எய்த வழிவகுக்கும்.

நீடித்த நிலைத்த குடிநீர் பாதுகாப்பு இயக்கத்திற்கான ("SuWaSeM") *நிர்வாக ஒப்புதல் ₹20.00 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்டிடங்களின் கூரையில் விழும் மழை நீரை சேகரித்தல், கூரையல்லாமல் கட்டிடங்களின் தளங்களில் விழும் மழைநீரை சேகரித்தல், மழைநீர் வடிகால்மூலம் பெறப்படும் நீரை சேகரித்தல், நீர்நிலைகளை மீட்டமைத்தல் மற்றும் புனரமைத்தல், வீட்டு சமையலறை மற்றும் குளியல் அறைகளில் இருந்து வெளிவரும் நீரை மறுசுழற்சி செய்தல், நீரின் பயன்பாட்டை குறைத்தல், மறுபடியும் சுத்திகரித்து உபயோகித்தல், ஆராய்ச்சி பணிகள் மற்றும் சமுதாய விழிப்புணர்வு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். இத்திட்டம் சென்னை நீங்கலாக இதர நகரக பகுதிகளில்*

2017 ஜூன் 20]

செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முதன்மை நிறுவனமாக செயல்படும்.

6.14 கட்டுமான பொருள் சோதனை ஆய்வகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

நான்கு தர கட்டுமான பொருள் சோதனை ஆய்வகங்கள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூர் மற்றும் மதுரை சோதனை கூடங்களுக்கு ISO 9001:2008 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட கட்டுமான பொருள் சோதனை ஆய்வகங்கள், இந்திய தரக்கட்டுப்பாடு பணியகம் குறிப்பிட்டுள்ள சோதனை செயல்முறைகளின்படி, சோதனை செய்வதற்கு தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகளுடன் முழுமையான உபகரணங்கள் கொண்டவையாகும். தரம் மற்றும் இந்திய தரக்கட்டுப்பாட்டை உறுதி செய்யும் வகையில் கீழ்க்கண்ட பொருள்களை பரிசோதனை செய்வதற்கான வசதிகள் உள்ளன:

- ❖ *சிமெண்ட், கம்பி, மணல், ஜல்லி, செங்கல், கான்கிரீட் கண மாதிரிகள் போன்ற கட்டுமான பொருட்கள்*
- ❖ *வடிகட்டி மணல், ஹாலோ பிளாக்குள், பேவர் பிளாக்குகள்*
- ❖ *பி.வி.சி. குழாய், எச்.டி.பி.இ. குழாய், இரும்பு குழாய், நீள்மையுடைய இரும்பு குழாய்கள், அடுமண் குழாய்கள்*
- ❖ *எம் 30 - கான்கிரீட் வடிவமைப்பு*
- ❖ *மின் கேபிள்கள்*

கட்டுமான பொருட்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சோதனை ஆய்வகங்களில் தர சோதனை செய்வதன் மூலம், ஒவ்வொரு திட்டப் பணியிலும் தர கட்டுப்பாடு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தனியாரிடம் இருந்து வரப்பெற்ற பொருட்களும் சோதனை செய்யப்படுகின்றன.

2016-17 ஆம் நிதியாண்டில், 4,716 கட்டுமான பொருள்களின் தர சோதனைகள் மேற்கண்ட நான்கு சோதனை ஆய்வகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6.15 மேலாண்மை தகவல் அமைப்பு

அனைத்து திட்டங்கள், திட்ட மேலாண்மை, நிதி கணக்கியல், மனித வளம், பட்டிகள் தயாரித்தல் மற்றும் இதர பணிகள் சம்பந்தமான தகவல் பரிமாற்றங்களை மேலாண்மை செய்ய TWADNEST எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தியுள்ளது. பணி மற்றும் நிதி முன்னேற்றம், குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை மற்றும் பராமரிப்பு திட்டங்களின் செயல் திறன்கள் மற்றும் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் போன்றவற்றின் தகவல்கள் உடனுக்குடன் இணையத்தின் வழி (on line) பெறப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தலைமை நீரேற்று நிலையங்களில் உந்தப்படும் குடிநீரின் அளவு தினமும் பதிவேற்றம் செய்யப்பட்டு உடனுக்குடன் இணையத்தின் வழி (online) கண்காணிக்கப்படுகின்றது.

குடிநீர் பகிர்மானக் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் குழாய் வடிவமைப்பு மற்றும் பகுப்பாய்வு, கட்டமைப்புகள் பகுப்பாய்வு போன்றவற்றில் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தலை மேம்படுத்த வடிவமைப்பு மென்பொருள் (CAD Software) பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்றத்தினை காலமுறையாக ஆய்வு செய்யும்பொருட்டு, சென்னை தலைமை அலுவலகம், கோவை, மதுரை, தஞ்சாவூர், தருமபுரி மற்றும் வேலூரில் உள்ள ஐந்து தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் திருச்சி, கடலூர், சேலம், திருநெல்வேலியில் உள்ள நான்கு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகங்கள் காணொளி காட்சி மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் சிறந்த முறையில் கண்காணிக்க போதுமான அளவு வசதிகளை பெற்றுள்ளது.

2017 ஜூன் 20]

7. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்

தமிழ்நாடு அரசு, தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) என்ற பொது வரையறை நிறுவனத்தை, ₹2 கோடி அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகையுடன் நிறுவியது. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ₹1 கோடியில், தமிழக அரசின் பங்கு ₹49 இலட்சம் ஆகும். இதன் மற்ற பங்குதாரர்கள், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்&எப்.எஸ் ஆகிய நிறுவனங்கள் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் மற்றும் பல்வேறு மானிய நிதியங்கள், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. மேலும், திட்ட மேம்பாடு, திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகிய பல பிரதான பணிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனமானது, நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரையிலான அனைத்திற்குமான முழு தீர்வையும் அளித்து வருகிறது. தொடங்கப்பட்டது முதல் இன்று வரை ஆதாயம் ஈட்டி வருவதோடு ஆதாயப் பங்குத் தொகையையும் இந்நிறுவனம் தொடர்ந்து வழங்கி வருகிறது.

7.1 தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF)

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) என்ற பொறுப்பாட்சியை, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்&எப்.எஸ் ஆகிய தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் தோற்றுவித்தது.

இம்மாநிலத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நிதி இடையீட்டாளராக செயல்படுதல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட மற்றும் நீடித்த நிலைத்தன்மையுடைய அமைப்புகளாக வளரவும் அவை தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புற சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக செயல்படுவது

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

நகர்ப்புற உட்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின்மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு பங்களிப்பது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோளாகும்.

7.1.1 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதியளிப்பதன் மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்
- நகர்ப்புற வளர்ச்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படும் அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதியுதவி அளிப்பதோடு மட்டுமல்லாமல், வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றுக்கும் நிதியுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியமானது, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனத்தின் (TNUITCL) மூலம் நிர்வகிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தில், தமிழக அரசு ₹142.91 கோடியும், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்.&எப்.எஸ்

2017 ஜூன் 20]

ஆகிய நிறுவனங்கள் ₹56.69 கோடியும் பங்களிப்பு செய்துள்ளன. இந்த நிதியத்தின் மொத்த மூலதனம் ₹199.60 கோடியாகும்.

7.2 வெளி ஆதாரத் திட்டங்கள்

ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதியுதவி - தமிழ்நாடு (SMIF-TN) திட்டம் (நிலை II - பகுதி 1 மற்றும் பகுதி- 2) மற்றும் உலக வங்கியின் நிதி உதவியுடனான தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP) ஆகிய இரண்டு வெளி ஆதாரக்கடன்கள் இந்த நிதியத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்றன. மேற்சொன்ன வெளி நிதி ஆதாரங்களின் மொத்தம் ₹5,286.55 கோடியாகும். அவற்றின் விபரம் பின்வருமாறு:

(₹ கோடியில்)

வ. எண்	உட்கூறுகள்	TNSUDP	SMIF-TN		மொத்தம்
			நிலை II பகுதி 1	நிலை II பகுதி 2	
1.	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன்	1,225.92	289.08	407.15	1,922.15
2.	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம்	1,225.92	289.08	407.15	1,922.15
3.	மாதிரி நகரங்களுக்கான மானியம்	389.48	0	0	389.48
4.	தொழில்நுட்ப உதவி மானியம்	344.80	0	22.39	367.19
5.	பங்கு பத்திரம் & மற்றவை	644.88	0	40.70	685.58
மொத்தம்		3,831.00	578.16	877.39	5,286.55

7.2.1 ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்

ஜெர்மன் நிதி நிறுவனமான (KfW) நிதியுதவியுடன், நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி-தமிழ்நாடு, எனும் திட்டம் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்து நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

இரண்டு நிலைகளைக் கொண்ட இத்திட்டத்தின் முதல் நிலை டிசம்பர் 2015-ல், நிறைவடைந்தது. இரண்டாவது நிலை இரண்டு பகுதிகளை (பகுதி 1 & பகுதி- 2) கொண்டது.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு திட்டத்தின் இரண்டாம் நிலை-பகுதி-1-ன் செயல்பாட்டு கால அளவு டிசம்பர் 2012-ல் இருந்து ஜூன் 2018 வரை ஆகும். இதன் மொத்த மதிப்பீடு ₹578.16 கோடி (80 மில்லியன் யூரோ) ஆகும். இது நகர்ப்புற அடிப்படை வசதி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் மற்றும் மூலதன மானியமாக வழங்கப்படும்.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு திட்டத்தின் இரண்டாம் நிலை-பகுதி-2-ன் செயல்பாட்டு கால அளவு ஜூன் 2014-ல் இருந்து டிசம்பர் 2019 வரை ஆகும். இதன் மொத்த மதிப்பீடு ₹877.39 கோடி (107.75 மில்லியன் யூரோ). இதில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக ₹814.30 கோடி (100 மில்லியன் யூரோ) கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக ₹22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) வழங்கப்படும். மூலதனச் சந்தையிலிருந்து நகராட்சிகளுக்கு கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திற்கு ₹40.70 கோடி (5 மில்லியன் யூரோ) கடனாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி- தமிழ்நாடு திட்டத்தின், இரண்டாம் நிலை-பகுதி-1 மற்றும் பகுதி-2 திட்டங்களின்கீழ், 33 துணை திட்டப் பணிகளுக்காக ₹1,389.53 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

7.2.2 உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP)

உலக வங்கியின் நிதியுதவியுடன், ₹3831 கோடி (600 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பீட்டில், தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP), மார்ச் 2015-ல் தொடங்கப்பட்டது. இதில், உலக வங்கியின் நிதியுதவி ₹2,554 கோடி (400 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்திற்கான கால அளவு ஜூன் 2015 முதல் மார்ச் 2022 வரை ஆகும். இத்திட்டத்தின்கீழ், 16

2017 ஜூன் 20]

துணை திட்டப் பணிகளுக்காக ₹2,413.91 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

7.2.3 ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP)

புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டத்திற்கு (TNUFIP) நிதிதேவை, ₹4,790 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில் ₹3,350 கோடி (500 மில்லியன் அமெரிக்க டாலர்) நிதியுதவியை ஆசிய மேம்பாட்டு வங்கியிடம் (ADB) இருந்து பெறுவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு 2016 ஆம் ஆண்டு மே மாதம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த கருத்துருவை மத்திய அரசு, ஆசிய மேம்பாட்டு வங்கிக்கு (ADB) நவம்பர் 2016 இல் பரிந்துரை செய்தது. நிதியுதவிக்கான மதிப்பீட்டு ஆய்வு ஆசிய மேம்பாட்டு வங்கியால் (ADB) செய்யப்பட்டு வருகிறது.

7.3 குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

தமிழ்நாடு அரசு, குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) என்ற அறக்கட்டளையை, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி திரட்டவும் உருவாக்கியது. இந்த அறக்கட்டளை இலாப நோக்கமற்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- *உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்*
- *கூட்டு நிதி அமைப்பின்கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்*
- *நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்*
- *நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்*
- *குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய / மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்*

வரி விதிக்கத்தக்க மற்றும் வரியில்லா பத்திர வெளியீட்டின் மூலமாக, ₹222.30 கோடி நிதியை குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் பின்வருமாறு திரட்டியுள்ளது:

வ. எண்	விவரங்கள்	₹ கோடியில்
1.	***9.20 சதவீதம் - 15 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு*** *2002 ஆம் ஆண்டு 13 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை*	*30.41*
2.	***7.25 சதவீதம் - 10 ஆண்டுகள் - கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ்வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு*** *2008 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை*	*6.70*
3.	***7.50 சதவீதம் - 10 ஆண்டுகள் - கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு*** *2010 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை*	*83.19*
4.	***10.60 சதவீதம் - 10 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு*** *2012 ஆம் ஆண்டு 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை*	*51.00*

2017 ஜூன் 20]

வ. எண்	விவரங்கள்	₹ கோடியில்
5.	***8.71 சதவீதம் - 10 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு*** *2013 ஆம் ஆண்டு 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை*	*51.00*
	மொத்தம்	*222.30*

7.4 சென்னை பெரு நகர வளர்ச்சித் திட்டம் (Chennai Mega City Development Mission)

தமிழ்நாடு அரசு, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMCDM) என்ற திட்டத்தை தொடங்கி, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தை (TNUIFSL) மைய முகவராக நியமித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டங்களைச் செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்கப்படும். இதற்கான நிதி, ஒவ்வொரு ஆண்டும், அரசின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் இது வரை, ₹3,209.16 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மூலதன மானியமாக ₹2,492.10 கோடியும் தொழில்நுட்ப மானியமாக ₹7.90 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், ₹1,853.55 கோடி பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகியவற்றிற்கு ஆலோசனை மற்றும் கட்டணங்களுக்காக பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட நிதி

வ. எண்	முகமை பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	ஒப்பளிக்கப்பட்ட மானியம்	வழங்கப்பட்ட மானியம்
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	*1,487.55*	*1,274.24*	*1,175.73*
2.	சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்	*1,721.61*	*1,217.86*	*675.03*
3.	ஆலோசனை மற்றும் கட்டணங்கள்	*7.90*	*7.90*	*2.79*
	மொத்தம்	*3,217.06*	*2,500.00*	*1,853.55*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

தமிழ்நாடு அரசு, நதிகள் மற்றும் நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த உறுதி கொண்டு அதற்குறிய சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது. சென்னை பெருநகரத்திற்குட்பட்ட கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பக்கிங்காம் கால்வாய் இன்னும் பிற சிறு கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கான சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள, தேவையான திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல், மற்றும் சீரமைப்பு பணிகளை கண்காணித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுமாறு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அரசு அறிவுறுத்தியுள்ளது. மேற்கண்ட இலக்குகளை அடைய, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றி அனைத்து சார்துறைகளின் பங்களிப்புடன் பல்வேறு சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

8.1 அடையாறு கழிமுகப் பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசு, ஈரப்புலங்களை பாதுகாக்கும் நோக்கத்தின் முன்னோடி திட்டமாக, 358 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட அடையாறு நதியின் முகத்துவாரம் மற்றும் உப்பங்கழியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தை உருவாக்கியது. இதன் முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அடையாறு உப்பங்கழியினை சீரமைத்துள்ளது. இச்சீரமைப்பு பணிகள் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2010 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. இச்சீரமைப்பின் முக்கிய அம்சங்களாக (i) கடல் ஓதத்தின் தொடர்பை இணைத்து நீர் பரப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது (ii) உள்ளூர் தாவரங்களான உலர்வெப்ப மண்டல பசுமைமாறாக் காடுகளை சார்ந்த தாவரங்கள் மற்றும் சதுப்பு நிலத் தாவரங்கள் நடப்பட்டுள்ளன (iii) சுற்றுச்சூழல் சார்ந்த கல்வியினை தொடர்புபடுத்தும் வகையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சுற்றுச்சூழல் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கு அளிப்பதற்காக, சுற்றுச்சூழல் கல்வி திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2017 ஆம் ஆண்டு மார்ச் 31-ந்தேதி வரை 853 பள்ளிகளைச் சேர்ந்த 62,455 மாணவர்கள் மற்றும் 3,832 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்குபெற்று பயனடைந்ததுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதியை (CSR) ஆண்டுதோறும் பெற்று, அடையாறு பூங்காவில் சுற்றுச்சூழல் கல்வி பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் உயிரின பாதுகாப்பு குறித்து, அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட பொது மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். 2014-ஆம் ஆண்டு ஜூலை முதல் 2017 ஆம் ஆண்டு மார்ச் 31-ந் தேதி வரை, 2,449 பேர் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சீரமைப்பினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்த கண்காணிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டு விதிமுறைகளை ஒப்பிடுகையில் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவின் நீரின் தரம் ‘வகுப்பு D’ பிரிவின்கீழ் உள்ளது. இத்தன்மையினால், தண்ணீரில் மீன்கள் மற்றும் பிற உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலை கொண்டுள்ளதால், அடையாறு பூங்காவின் சீரமைப்பு நிலையை மேம்படுத்தும் வகையில் நீரின் தன்மை அமைந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. அடையாறு பூங்காவில் காணப்படும் பல்லுயிரி வகைகள் பின்வருமாறு:

அடையாறு பூங்காவில் காணப்படும் பல்லுயிரினங்கள்

விலங்குகள்	2007–2008	2009 – 2010	2011–2012	2013–2014	2014–2015	2015–2016	2016–2017
மெல்லுடலிகள்	–	–	–	6	6	6	8
நண்டுகள்	–	–	4	9	9	9	9
தும்பிகள்	–	–	12	15	17	19	25
பட்டாம்பூச்சிகள்	–	–	51	55	56	60	73
மீன்கள்	14	27	27	10	10	6	10
இருவாழ்விகள்	7	10	10	10	10	10	10
ஊர்வன	19	19	19	19	19	19	19
பறவைகள்	88	90	98	100	97	99	103
பாலூட்டிகள்	13	13	13	15	15	16	16
மொத்தம்	141	159	234	239	239	244	273

8.2 அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

தனித்துவ பண்புகளை கொண்ட சுற்றுச்சூழல் மண்டலமான அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியை சீரமைக்கும்பொருட்டு இரண்டாம் கட்டப்பணியின்கீழ் குப்பைகள் மற்றும் கட்டடக்கழிவுகளை அகற்றுதல், உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகளை அகற்றுதல், உயிரி பொறியியல் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு அடையாறு உப்பங்கழியின் கரைகளை திடப்படுத்தி அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தினை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. இச்சீரமைப்புத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக அரசு, அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை ₹24.93 கோடி செலவில் மேற்கொள்ள 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனுமதி வழங்கியுள்ளது. சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் அகற்றப்பட்டு, அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப்பகுதியின் கரைகளைத் திடப்படுத்தும் பணிகள் நிறைவடைந்து நெகிழி மற்றும் கட்டடக்கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகளை அப்புறப்படுத்தி நீர் பரப்பினை அதிகரித்து, ஓதங்களின் தொடர்பை இணைக்கும் வகையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் சோழ மண்டல கடற்கரைத் தாவரங்கள் 35,000 மற்றும் சதுப்புநிலத் தாவரங்கள் 57,000 நடப்பட்டுள்ளன.

[*2017 ஜூன் 20*

8.3 ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

சென்னையிலிருந்து சுமார் 70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவள்ளூர் மாவட்டம், கூவம் என்னும் கிராமத்தில் கூவம் நதி தோன்றுகிறது. இந்நதி, புனித ஜார்ஜ் கோட்டையின் தென்பகுதியிலுள்ள நேப்பியர் பாலத்தின் கீழ்நோக்கி சென்று இறுதியாக வங்கக்கடலை சென்றடைகிறது. சென்னை ஆவடி அருகேயுள்ள பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான (32 கி.மீ) கூவம் நதி பகுதிகளை சீரமைக்க ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டமிடல், பல்லுயிர் பெருக்கத்தை மீட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்தி நதியின் கரையோரங்களில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டப் பணிகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளன. குறுகிய கால திட்டப் பணிகள் மூன்று ஆண்டுகள் நடைபெறும். இத்திட்டம் அதிக எண்ணிக்கையிலான துணைத் திட்டங்களை கொண்டுள்ளது. குறுகிய கால திட்டப் பணிகளை மேற்கொள்ளும் சார் துறைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, சுமார் ₹1,646.52 கோடி மதிப்பிலான 60 துணைத் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. குறுகிய கால திட்டப் பணிகளுக்காக ₹604.77 கோடிக்கான நிருவாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதற்கான துணைத் திட்டங்கள் பொதுப் பணித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக ஆணையரகம், ஊரக வளர்ச்சி இயக்குநரகம், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகிய துறைகளின் மூலம் தொடங்கப்பட்டுள்ளது. ₹604.77 கோடி மதிப்பீட்டிற்கான பணிகளில், ₹144.48 கோடிக்கு பணிகள் சார் துறைகளால் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் ₹74.40 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு சார் துறைகளால் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

2017 ஜூன் 20]

₹146.96 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை, இச் சீரமைப்பு திட்டத்திற்கு ₹67.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

8.4 அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான மூன்றாம் கட்டப் பணியின் பெருந்திட்டம்

அடையாறு நதி கூடுவாஞ்சேரி அருகே உள்ள ஆதனூர் ஏரியில் தொடங்கி, திருநீர் மலை அடிவாரத்தில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் கலக்குமிடத்தில் முழுமையான ஆறாக முழுவடிவம் பெற்று, சுமார் 42 கிலோ மீட்டர் காஞ்சீபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் பாய்ந்து வங்கக்கடலில் கலக்கிறது. நகரமயமாதல் மற்றும் நகர்ப்புற பகுதிகளின் சுற்றுச்சூழல் நவீனமயமாக்கலின் விளைவாக அடையாறு நதி மாசடைந்துள்ளது. ஆகவே, அடையாறு நதியின் தொடக்கம் (ஆதனூர் ஏரி) முதல் முகத்துவாரம் வரை சீரமைக்க பெருந்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய கூறுகள், கழிவுநீர் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், நகர்ப்புரத்தில் நதியின் கரையோரங்களில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல். மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

8.5 சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளின் சீரமைப்பிற்கான பெருந்திட்டம்

சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட மாசடைந்த ஏரிகள், குளங்கள், நதிகள் மற்றும் நீர்வழிகளை சீரமைக்க முழுமையான அணுகுமுறையை பின்பற்றும் நோக்குடன் அரசு, பெருந்திட்ட அறிக்கை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில், 200 நீர்நிலைகள் கண்டறியப்பட்டுள்ளன. 38 ஏரிகளுக்கான கருத்துரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

8.6 நீர்நிலைகள் மற்றும் நீர்வழிகள் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை

அரசு, சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட கீழ்காணும் நீர்நிலைகளை சீரமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நாராயணபுரம் ஏரி, ஜமீன் பல்லாவரம் பெரிய ஏரி, கீழ்க்கட்டளை ஏரி	இத்திட்டம் உலக வங்கி நிதியின் (TNSUDP) கீழ் செயல்படுத்தப்பட உள்ளது
பருத்திப்பட்டு ஏரி, ஆவடி	விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது
கடப்பாக்கம் ஏரி, நெசவாளர் நகர் ஏரி, கொளத்தூர் ஏரி, வேளச்சேரி ஏரி, நன்மங்கலம் ஏரி, கோவிலம்பாக்கம் ஏரி	வரைவு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது
கூவம் வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல், இடைமறித்து மாற்று வழிகளை அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு	விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது
அடையாறு வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல், இடைமறித்து மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு	விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது
சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட எண்ணூர் கழிமுகப் பகுதி முதல் முட்டுக்காடு உவர்நீர் பகுதி வரை பக்கிங்காம் கால்வாயில் கலக்கும் பிரதான நீரோடைகளை சீரமைத்தல்.	விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது

2017 ஜூன் 20]

9. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனமானது (டுபிட்கோ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல் மற்றும் வழிகாட்டுதல் ஆகிய முக்கிய நோக்கங்களுக்காக 21-3-1990 அன்று கம்பெனிகள் சட்டம் 1956-ன்கீழ் உருவாக்கப்பட்டது. மத்திய அரசின் முன்னோடி திட்டங்களான சீர்மிகு நகரங்கள் திட்டம் (Smart Cities Mission) *மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டங்களுக்கு* (AMRUT) *டுபிட்கோ நிறுவனம் திட்ட இயக்குனரகமாக செயல்படுகிறது. டுபிட்கோ நிறுவனம் அரசின் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தும் முகவரமைப்பாக உள்ளது.*

1. *ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் - நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டம்* (Jawaharlal Nehru National Urban Renewal Mission - Urban Infrastructure and Governance)

2. *சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்* (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns)

3. *துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம்* (Urban Infrastructure Development Scheme for Satellite Towns)

4. *பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி* (Metropolitan Infrastructure Development Fund)

5. *ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்* (Integrated Urban Development Mission)

டுபிட்கோ நிறுவனம் கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி, கல்வி நிதி (நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை), உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றிற்கு நிதி மேலாளராகவும் செயல்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[2017 ஜூன் 20

9.1 சீர்மிகு நகரத் திட்டம்

இந்தியா முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 109 நகரங்களில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்தோடு, மத்திய அரசு ஜூன் 2015 ஆம் ஆண்டு சீர்மிகு நகரங்கள் எனும் திட்டத்தை துவக்கியது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிலுள்ள 12 மாநகராட்சிகளையும் இத்திட்டத்திற்கு பரிந்துரைத்துள்ளது.

இந்த திட்டத்திற்கான காலம் 5 ஆண்டுகள் (2015-16-லிருந்து 2020 வரை) ஆகும். மத்திய அரசு ஒவ்வொரு நகரத்திற்கும் ₹500 கோடி நிதியுதவி அளிக்கும். அதற்கு இணையாக தமிழக அரசும் ஒவ்வொரு நகரத்திற்கும் ₹500 கோடி நிதியுதவி அளிக்கும். தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் இந்த திட்டத்தின் திட்ட இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2015-16 ஆம் நிதியாண்டில், முதல் சுற்றில் மத்திய அரசு சீர்மிகு நகரங்களாக உருவாக்க நாடு முழுவதும் உள்ள 20 நகரங்களை தேர்ந்தெடுத்ததில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் அடங்கும். இரண்டாவது சுற்றில் (2016-17 ஆம் நிதியாண்டில்) இந்தியா முழுவதும் 40 சீர்மிகு நகரங்கள் தெரிவு செய்யப்பட்டதில் தமிழகத்தின் மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு 2017-18 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 49 நகரங்களை சீர்மிகு நகரங்களாக தேர்ந்தெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் பரிந்துரையின்படி, மீதமுள்ள 6 மாநகராட்சிகள், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் திண்டுக்கல் தங்களுடைய சீர்மிகு நகரத் திட்டங்களை மேம்படுத்தி மூன்றாம் கட்ட தேர்வுக்காக மத்திய அரசிடம் மார்ச் 31, 2017-ல் சமர்ப்பித்துள்ளன.

சீர்மிகு நகரத் திட்ட வழிகாட்டுதலின்படி சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் சீர்மிகு நகரங்களுக்கான திட்டத்தை நிறைவேற்ற சிறப்பு நோக்க அமைப்புகள் (Special Purpose Vehicle) ஏற்படுத்தப்பட்டுள்ளன. டுபிட்கோ நிறுவனமானது தொண்டு நிறுவனங்கள், கல்வியாளர்கள், வல்லுநர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய 7 அமைப்புகளை மேற்கண்ட சீர்மிகு நகரங்களில் ஏற்படுத்தி செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களுக்கு வடிவம் கொடுத்து இறுதி செய்யப்பட்டுள்ளது.

2017 ஜூன் 20]

9.2 அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

மத்திய அரசு, அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தை (அம்ரூத்) கீழ்க்காண்பவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து 2015 ஆம் ஆண்டு துவக்கியது.

1. குடிநீர் வசதி,
2. கழிவு நீர் வசதி மற்றும் கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மை,
3. மழை நீர் வடிகால் வசதி,
4. நடந்து செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், பொதுமக்களுக்கான வாகனம் சாராத போக்குவரத்துக்கள் அமைத்தல், வாகனங்களை,
5. நிறுத்தும் வசதி அமைத்தல் மற்றும்
6. சிறுவர்களுக்கான பூங்காக்கள், பொழுதுபோக்கு பகுதிகள் உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

பின்வரும் நகரங்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன:

வ.எண்	உள்ளாட்சியின் பெயர்	வ.எண்	உள்ளாட்சியின் பெயர்
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	15.	தாம்பரம்
2.	கோயம்புத்தூர் மாநகராட்சி	16.	கடலூர்
3.	மதுரை மாநகராட்சி	17.	காஞ்சிபுரம்
4.	திருச்சி மாநகராட்சி	18.	ஈரோடு மாநகராட்சி
5.	சேலம் மாநகராட்சி	19.	திருவண்ணாமலை
6.	திருநெல்வேலி மாநகராட்சி	20.	கும்பகோணம்
7.	திருப்பூர் மாநகராட்சி	21.	இராஜபாளையம்
8.	ஆவடி	22.	புதுக்கோட்டை
9.	தூத்துக்குடி மாநகராட்சி	23.	ஓசூர்
10.	நாகர்கோயில்	24.	ஆம்பூர்
11.	தஞ்சாவூர் மாநகராட்சி	25.	காரைக்குடி
12.	பல்லவபுரம்	26.	நாகப்பட்டினம்
13.	திண்டுக்கல் மாநகராட்சி	27.	வேளாங்கண்ணி
14.	வேலூர் மாநகராட்சி	28.	இராமேஸ்வரம்

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் இந்த திட்டத்தின் திட்ட இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

9.2.1 நிதிக்கூறு

மத்திய, மாநில அரசுகள் இத்திட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு நிதி பங்களிப்பு செய்கின்றன:

வ. எண்	மக்கள் தொகை	மத்திய அரசின் பங்கு – மானியம்	மாநில அரசின் பங்கு – மானியம்	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
1.	10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்	33.33%	20%	46.67%
2.	10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்	50%	20%	30%
3.	பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ரூத் நகரங்கள்)	50%	20%	30%

9.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JnNURM) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டம் (UIG)

உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டத்தின்கீழ், தமிழகத்தில் 3 திட்ட செயலாக்க மாநகரங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் 2005 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான 9 ஆண்டு காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த துணை திட்டத்தின் மூலம் மத்திய அரசு ₹5,250.15 கோடியில் 48 திட்டங்களை செயல்படுத்த ஒப்புதல் வழங்கியது.

2017 ஜூன் 20]

(₹கோடியில்)

மாநகரங்களின் பெயர்கள்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	மத்திய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	நகர்ப்புற உள்ளாட்சி / தன்னாட்சி அமைப்புகளின் பங்கு
சென்னை	35	3,585.43	1,294.40	533.42	1,757.61
மதுரை	8	838.52	419.26	167.70	251.56
கோயம்புத்தூர்	5	826.20	413.10	165.24	247.86
மொத்தம்	48	5,250.15	2,126.76	866.36	2,257.03

ஒப்புதல் பெறப்பட்ட 48 திட்டங்களில், 34 திட்டங்கள் நிறைவுற்றன. மீதமுள்ள 14 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

9.3.1 இடைப்பட்ட காலத் திட்டங்கள்

மொத்தம் 17 திட்டங்களுக்கு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணைத் திட்டத்தின்கீழ் இடைப்பட்ட காலத்தில் ₹867.83 கோடியில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

9.4 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டத்தின்கீழ் வரும் 67 நகரங்கள் தவிர மற்ற அனைத்து நகரங்களின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் ₹882.73 கோடி மதிப்பீட்டில் 122 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட 122 திட்டங்களில், 116 திட்டங்கள் நிறைவுற்றன. மீதமுள்ள 6 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

9.4.1 இடைப்பட்ட காலத் திட்டங்கள்

மத்திய அரசு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இடைப்பட்ட காலத்தில் 13 திட்டங்களுக்கு ₹507.41 கோடியில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

[2017 ஜூன் 20

9.5 துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாடு (UIDSST)

மத்திய அரசு, பெரிய மாநகரங்களின் அருகேயுள்ள துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி உருவாக்குவதற்காக "துணை நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தை" துவக்கியது. ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி இத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் தேர்வு செய்யப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் மூன்று திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது:

வ.எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு ₹கோடியில்
1.	குடிநீர் வழங்கல்	40.71
2.	பாதாள சாக்கடை	56.22
3.	திடக்கழிவு மேலாண்மை	4.43
	மொத்தம்	101.36

ஒப்புதல் வழங்கப்பட்ட மூன்று திட்டங்களில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள இரண்டு திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

9.6 பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி (MIDF)

பெருநகரத் திட்டத்தின்மூலம் சுழற்சி நிதியாக உருவாக்கப்பட்ட ₹2,090.00 கோடி பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான மூலதன நிதியாகும்.இத்திட்டத்தின் குறிக்கோளானது சென்னை பெருநகரப் பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி உதவி செய்வதாகும். பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 34 திட்டங்களுக்கு ₹4,342.65 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட 34 திட்டங்களில், 22 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. மீதமுள்ள 12 திட்டங்கள் பணி முன்னேற்ற நிலையில் உள்ளன.

9.7 டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம்

டுபிட்கோ, உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் என்னும் திட்டத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு

2017 ஜூன் 20]

நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதியளிக்கும் நோக்கோடு உருவாக்கியது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேமநிதி, உபரிநிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவையாகும்.

2016-17 ஆம் ஆண்டில், ₹212.08 கோடி மதிப்பீட்டிலான கீழ்க்காணும் 3 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன:

(₹கோடியில்)

வ. எண்	பெயர்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	டுபிட்கோ உட்கட்ட மைப்பு வசதி நிதித் திட்டத்தின் கீழ் கடன் தொகை	நகர்ப்புற உள்ளாட்சியின் பங்கு
1.	*டைடல் பார்க் கோயம்புத்தூர்*	*அதிக வட்டியிலான கடனுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் நிதி அளித்தல்*	*171.00*	*171.00*	*இல்லை*
2.	*கிருஷ்ணகிரி நகராட்சி*	*அங்காடி வளாகம் கட்டுதல்*	*1.35*	*1.21*	*0.14*
3.	*மதுரை மாநகராட்சி*	*கழிவுநீர் குழாய்களை செப்பனிடுதல்*	*39.73*	*39.73*	*இல்லை*
மொத்தம்			*212.08*	*211.94*	*0.14*

9.8 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக மாநில அரசு 2011 ஆம் ஆண்டு "ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை துவக்கியது.

[2017 ஜூன் 20

மொத்தம் 13,445 திட்டங்களுக்கு ₹10,773.22 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பின் தேவைக்காக (முழு நிதி / பகுதி நிதி), பின்வருமாறு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. திட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(₹கோடியில்)

திட்டப் பணிகள்	மொத்த திட்டங்கள்	திட்ட மதிப்பீடு	பிற திட்டங்களின் நிதி / உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு	IUDM பங்கு
குடிநீர் வழங்கல்	1,061	3,900.83	2,558.47	1,342.36
பாதாள சாக்கடை	66	4,589.96	3,587.92	1,002.04
சாலைகள்	3,713	923.13	82.51	840.62
மழைநீர் வடிகால்	2,078	366.42	63.24	303.18
திடக்கழிவு மேலாண்மை	1,091	231.3	4.93	226.37
தெரு விளக்குகள்	2,963	551.8	315.87	235.93
திறந்தவெளி மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம்	2,066	160.1	105.65	54.45
மற்றவை	407	49.68	6.44	43.24
மொத்தம்	13,445	10,773.22	6,725.03	4,048.19

ஒப்புதல் வழங்கப்பட்ட 13,445 திட்டங்களில் 12,974 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சிய திட்டங்கள் செயலாக்கத்தின் பல்வேறு நிலையில் உள்ளன.

9.9 அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை

கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி, கல்வி நிதி (நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை), உட்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளியை நிரப்பும் நிதி போன்ற திட்டங்களை மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும்பொருட்டு தமிழக அரசு ஏற்படுத்தியது. டுபிட்கோ நிறுவனத்தை தமிழக அரசு இத்திட்டங்களுக்கு நிதி மேலாளராக நியமித்துள்ளது. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி (IGFF)யின்கீழ் ₹236.68 கோடியும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&MGFF)யின்கீழ் ₹105.07 கோடியும் 2016-17 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டது.

2017 ஜூன் 20]

10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

திருப்பூர் நகராட்சி, அதன் சுற்றுப்புற பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு, நீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் நோக்கோடு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு அரசால், சிறப்பு நோக்கு நிறுவனமாகத் துவக்கப்பட்டது. திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளாடை மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளின் நீர் தேவையை நிறைவு செய்யும் திட்டமான 185 MLD நீர் திட்டத்தை அமலாக்குவதற்கான சலுகை ஒப்பந்தம் ஒன்றினை, தமிழ்நாடு அரசும், அப்போது இருந்த திருப்பூர் நகராட்சியும் (தற்போது மாநகராட்சி) மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகமும் செய்து கொண்டுள்ளன. இது நாட்டிலேயே முதன் முறையாக பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பின்மூலம் செயல்படுத்தப்பட்ட நீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டமாகும். இத்திட்டத்திற்கான அடிக்கல் 20-6-2002 அன்று நாட்டப்பட்டு, திட்டப் பணிகள் முடிவடைந்து, பிப்ரவரி 2006-ல் இத்திட்டம், பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இத்திட்டத்திற்கான செலவு தொகை ₹1,023 கோடியாகும். 15 நிறுவனங்கள்மூலம் பெறப்பட்ட அசல் சமபங்கு தொகை ₹322.70 கோடியாகும்; 19 நிதி நிறுவனங்கள் மூத்த கடனாக அளித்த தொகை ₹613.80 கோடியாகும்; மற்றும் இரண்டாம் தர கடனாக அளித்த தொகை ₹86.50 கோடியாகும்.

திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர் தேவையான சுமார் 38.957 MLD மற்றும் 8 ஊராட்சிகள் மற்றும் 5 வழியோர ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 600 கிராமப்புற குடியிருப்புகளின் குடிநீர் தேவையான சுமார் 18.26 MLD இத்திட்டத்தின்மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் பாதாள கழிவுநீர் அகற்றும் வசதியும் நிறைவேற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. 15,246 பாதாள கழிவுநீர் இணைப்புகள்மூலம் பெறப்படும் சுமார் 7.5 MLD கழிவுநீர் தற்போது சுத்திகரிக்கப்படுகிறது. மேலும், திருப்பூர் மாநகராட்சியில் உள்ள நகர்ப்புற ஏழை மக்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள் (31 சுகாதார வளாகங்கள்) செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை உயர் நீதிமன்ற ஆணை நாள் 31-1-2011-ன்படி பல்வேறு சாய தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும் தண்ணீரை மறு உபயோகம் செய்வதற்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் கொண்டுவரப்பட்டதாலும், திருப்பூர் மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரின் அளவு பிப்ரவரி 2011 முதல் வெகுவாக குறைந்துவிட்டது. இருப்பினும், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் திருப்பூர் மாநகராட்சி, ஊராட்சிகள் மற்றும் வழியோர கிராமங்கள் ஆகியவற்றிலுள்ள மக்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.

திருப்பூரிலுள்ள தொழிற்சாலைகள் தண்ணீரை குறைந்த அளவில் நுகர்வு செய்வதால், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறை நிலைமை 2011-2012-ல் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின்மூலம் சமாளிக்கப்பட்டது. அதன்படி கடனுதவி செய்த நிதி நிறுவனங்கள் கடனை மறு பரிசீலனை செய்து, கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்தும், 15% கடன் தொகையினை சம பங்குகளாக மாற்றியும், மேலும் அரசாங்கம் கூடுதலாக நாள் ஒன்றிற்கு 100 மில்லியன் லிட்டர் வரை குடிநீரை வீட்டு உபயோகத்திற்காக இந்நிறுவனம்மூலம் வாங்கிக் கொள்ளவும் வழிமுறைகள் செய்யப்பட்டன. தற்சமயம் இந்நிறுவனத்தின்மூலம் நாள் ஒன்றிற்கு 54 மில்லியன் லிட்டர் குடிநீர் திருப்பூர் மாநகராட்சிக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அரசாங்கம் ₹150 கோடி சம பங்குகளை உள்முதலீடு செய்வதற்காக ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக அமைப்பினை விரிவாக்கம் செய்ய அனுமதி அளித்துள்ளது. அதன்படி, இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் பகுதியிலும், ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை பகுதியிலும், வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூன்று கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த ஈரோடு, பெருந்துறை, சென்னிமலை மற்றும் ஊத்துக்குளி யூனியன் பகுதிகளுக்குட்பட்ட 68 கிராம பஞ்சாயத்துக்களைச் சார்ந்த 461 குடியிருப்புகளுக்கு கோண வாய்க்கால், கங்காபுரம், வாவிக்கடை, சரளை, பெருந்துறை, விஜயமங்கலம், பல்லக்கவுண்டம்பாளையம், செங்கப்பள்ளி, சர்க்கார்பெரியபாளையம், அக்ரஹார-

2017 ஜூன் 20]

பெரியபாளையம் ஆகிய இடங்களில் இருந்து குடிநீர் வழங்க திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளது. இதன்மூலம் 11 MLD குடிநீர் கூடுதலாக விநியோகம் செய்யப்படுகிறது. அதாவது 65 MLD குடிநீர் கூடுதலாக இத்திட்டத்தின் குடிநீர் தேவைகளுக்காக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தற்சமயம் விநியோகத்தில் உள்ள 35 MLD தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது. தமிழக அரசின் சமபங்கு முதலீடு, திருப்பூர் மாநகராட்சி மற்றும் மற்ற உள்ளாட்சி அமைப்புகளால் நாள் ஒன்றிற்கு 65 மில்லியன் லிட்டர் தண்ணீரை கூடுதலாக வாங்குவது மற்றும் நிறுவனத்தின் சேவை பகுதியை விரிவுபடுத்தி திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஒப்புதல் அளித்து திட்ட செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் ஆகியவைகள் இந்நிறுவன வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்துள்ளன. 2015-2016 முதல் இந்த நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. இதனால், இந்நிறுவனமானது இப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு தனது சேவையை தொடர்ந்து செய்ய இயலும்.

திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கான வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையையும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் தயார் செய்து உள்ளது.

[2017 ஜூன் 20

11. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் உள்ளடங்கிய புதிய திருப்பூர் குடிநீர்த் திட்டத்தினை (185 MLD ₹1,023 கோடி) தனியாருடன் இணைந்து செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசும் உட்கட்டமைப்பு நிறுவனமான IL & FS நிறுவனமும் இணைந்து, நிறுவனங்கள் சட்டம், 1956-ன்கீழ் தனிப்பட்ட நோக்கம் கொண்ட நிறுவனமாக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) என்ற நிறுவனத்தை தொடங்கினர். நகர்ப்புற குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அமைப்புகள், உப்பு நீக்கம், தொழில் துறை கழிவுப்பொருள் மேலாண்மை மற்றும் மறுசுழற்சி ஆகியவற்றிலும் மற்றும் ஒரு நிலையான கட்டமைப்பிற்குள் வாழ்க்கைச் சுழற்சி செலவினங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு மாதிரியின்மூலம் திட்டங்களின் கருத்தாக்கம் முதல் செயல்படுத்துகை வரை உதவுவதிலும் இந்நிறுவனம் நிபுணத்துவம் கொண்டுள்ளது.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு 46% மூலதனப் பங்குகள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளில் தொழிற்சாலை கழிவுப்பொருள் மேலாண்மை மற்றும் நகர்ப்புற நீர் மேலாண்மை ஆகியவற்றில் இந்த நிறுவனம் முன்னணி இடத்தை அடைந்துள்ளது. மேலும், பிரத்யேக பூஜ்ஜிய அளவு கழிவுநீர் வெளியேற்ற தொழில்நுட்பம் மற்றும் உப்பு மறுபயன்பாட்டு தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது. காடாயாம்பட்டி, ஈரோடு மாவட்டதில் ஸ்ரீபவானி மற்றும் பெருந்துறை SIPCOT மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளைத்தில் பசுமை காவேரி மற்றும் பசுமை சுற்றுச்சூழலில் பூஜ்ஜிய அளவு கழிவுநீர் வெளியேற்ற அடிப்படையிலான கூட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு தமிழக அரசால் திட்ட மேலாண்மை ஆலோசனை வழங்கும் நிறுவனமாகவும் ஜவுளி பூங்காக்களை நிறுவுவதிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது. TNUIFSL மூலம் தண்ணீர் விநியோக விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வது, கோபிச்செட்டிபாளையத்திற்கான நீர் ஆதார மேம்பாடு, TUFIDCO AMRUT நகரங்களுக்காக ஆற்றல் தணிக்கை, விஜயவாடா மாநகராட்சிக்காக 24x7 குடிநீர் விநியோக விரிவானத் திட்ட அறிக்கையை தயார் செய்வது, ஜார்கண்ட் மாநிலத்தில் 2 நகரங்களுக்காக குறிப்பாக சோட்டாகோவிந்த்பூர்

2017 ஜுன் 20]

மற்றும் பக்பேராவுக்கு 24x7 குடிநீர் விநியோகத்திற்காக குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துதல், குஜராத் தொழிற்சாலை மேம்பாடு கழகம் தகேஜ்ஜுக்காக புவியியல் தகவல் அமைப்பு படமிடல் மற்றும் டாஷ்போர்டு மேம்பாட்டுடன் குடிநீர் பாதுகாப்புக் கொள்கை மற்றும் தேவை மதிப்பீட்டை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

கூடுதலாக, கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் உள்ள மூன்றாம் நிலை சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையத்தின் கட்டுமான மேற்பார்வை மற்றும் ஆலோசனைக்கு, சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்தால் இந்நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. AMRUT நிதி உதவியுடன் குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டத்தை தஞ்சாவூர் மாநகராட்சியில் செயல்படுத்திட திட்ட மேலாண்மை ஆலோசனை வழங்கும் நிறுவனமாக பணியாற்ற இந்த நிறுவனம் அமர்த்தப்பட்டுள்ளது. கூடுதலாக விஷ்டெக் தோல் பதனிடும் ஆலையின் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைக்காக தோல் ஏற்றுமதிகளுக்கான கவுன்சில்மூலம் இந்நிறுவனம் திட்ட மேலாண்மை ஆலோசனை வழங்கும் நிறுவனமாக அமர்த்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கான ஏழு கூட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (அருள்புரம், இராயபுரம், முருகம்பாளையம், சின்னக்கரை, காசிப்பாளையம், குனகல்பாளையம், ச.பெரியபாளையம்) சாயக் கழிவுகளுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து பூஜ்ஜிய அளவு கழிவுநீர் வெளியேற்ற ஏதுவாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளைச் செய்து வருகின்றது. மேலும், கடலூரில் உள்ள ITPCL, கல்பாக்கத்தில் உள்ள பாபா அணு ஆய்வு மையங்களுக்கு உப்பு நீக்கம், கழிவுநீர் மற்றும் மறுசுழற்சி ஆகிய நீர் மேலாண்மை நடவடிக்கைகளை வழங்குகிறது.

இந்நிறுவனம் பெற்றுள்ள குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பராமரிப்பு பணிகள் செய்வதற்கான அனுபவத்தை சிறந்த முறையில் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்து, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை திட்ட மேலாண்மை நிறுவனமாக அமர்த்தி கீழ்க்கண்ட சேவைகளை செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது:

அ) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் அவற்றின் இயக்குதல் / பராமரிப்பு பணிகளைச் செய்வதற்கான சிறப்பு நிறுவனமாக செயல்படுதல்

ஆ) கழிவுநீர் உப்புத்தன்மை நீக்கம் மற்றும் கழிவுநீர் மறுஉபயோகம் செய்து தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்குதல்

ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்திய அரசாங்கத்தால் நிதியுதவி அளிக்கப்படவிருக்கும் சிறு வர்த்தக சாயத் தொழிலாளர்களுக்கு ஏற்ப வடிவமைப்பதற்காக ஸ்ரீபவானி மற்றும் காடாயாம்பட்டியில் பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றத்துடன் கூடிய இரண்டு கூட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளுக்காக விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வதற்கான உத்தரவை இந்நிறுவனம் பெற்றுள்ளது.

உத்திரபிரதேசத்தில் உள்ள ஜாஜ்மாவில் நான்கு ஜவுளி தொகுப்புகளுக்காகவும் மற்றும் ஒரு தோல் தொகுப்புக்காகவும் தேசிய திட்டத்தின்கீழ் தூய கங்கைக்காக இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது. பானிபட்டில், ஜவுளி தொகுப்புகளில் பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புக்காக ஹரியானா நகர்ப்புற வளர்ச்சி ஆணையத்திற்காக இந்நிறுவனம் ஈடுபடுகிறது. WBG-IFC (World Bank Group - International Finance Corporation) மூலம் பங்களாதேஷில் கொனாபாரி ஜவுளி தொகுப்பிற்கு முழு ஆய்வு மற்றும் செயலாக்கத்தினையும் இந்நிறுவனம் நடைமுறைப் படுத்தியுள்ளது.

செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்திலிருந்து நிறுவனத்தின் வருவாய் 2015-2016 ஆம் ஆண்டில் ₹18.89 கோடியிலிருந்து 2016-17 ஆம் ஆண்டில் ₹22.14 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும் ஆலோசனை சேவைகளில் இருந்து வருவாய் 2015-16 ஆம் ஆண்டில் ₹5.16 கோடியிலிருந்து 2016-17 ஆம் ஆண்டு ₹6.83 கோடியாக உயர்ந்துள்ளது.

இணைப்பு II

(130 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018

1. முன்னுரை:

"எங்களுடைய செயல் மற்றும் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்காகத்தான். எங்களுக்கென்று எந்த சுய நலமும் இல்லை; பொது நலன் மற்றும் மக்கள் நலன் மட்டும் தான்."

- மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் நலன் மற்றும் வளர்ச்சியே சமூகப் பொருளாதார கொள்கைகளை உருவாக்கி, அக்கொள்கைகளை நிறைவேற்ற பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைக்க, இந்த அரசின் உந்து சக்தியாக திகழ்கிறது. நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை ஊரகப் பகுதிகளில் வழங்குவதன்மூலம் வறுமையை ஒழிப்பதே, பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முதன்மை நோக்கங்களாகும்.

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம் இந்த அரசின் சிறப்புமிக்க முயற்சிகளில் ஒன்றாகும். இத்திட்டம், கிராமப்புறங்களில் வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்த வகையில் நாட்டிலேயே செயல்படுத்தப்படும் முதல் திட்டமாகும். 2011-12 முதல் 2015-16 வரை, ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவுடன் கட்டப்பட்டு, சோலார் விளக்குகளும் பொருத்தப்படுகின்றன. இத்திட்டம், 2016-17 ஆம் ஆண்டு முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 20

ஊரகப் பகுதிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஊரகச் சாலைகள் முக்கிய பங்காற்றுகின்றன. சாலைகள், ஊரகப் பகுதிகளுக்கு பல்வேறு சமூகப் பொருளாதார பலன்களை அளிப்பதன் வாயிலாக, வேளாண்மை சார்ந்த ஊரகப் பொருளாதாரத்தினை வலுவடையச் செய்கிறது. தமிழ்நாட்டில் 1.48 இலட்சம் கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் உள்ளன. இந்த ஊரகச் சாலைகள் தொகுப்பின் மேம்பாட்டிற்கு, சீரான இடைவெளியிலும், உரிய நேரத்திலும் நிதி அளிப்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது. பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து 2015-16 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS) மற்றும் இந்த அரசால் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கை ஆகியன இந்த சவாலுக்கு தீர்வாக அமைந்துள்ளது.

2011-12 ஆம் ஆண்டு குக்கிராமங்களை அலகாகக் கொண்டு தமிழக அரசால் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. வள ஆதாரங்களை விகிதாச்சார முறையில் பகிர்ந்தளித்ததன்மூலம் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தாய் திட்டம் சமமான வாய்ப்பினை அளித்தது. தாய் திட்டம் 2011-12 முதல் 2015-16 வரை 5 ஆண்டுகளில் ரூ.3,680 கோடி நிதி ஒதுக்கீட்டில் 79,394 குக்கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. தாய் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சாலைகள், சுடுகாடு / இடுகாடு, சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும், அங்கன்வாடி மையம், பொது விநியோகக் கடை, சுய உதவிக் குழு கட்டடம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அனைத்து குக்கிராமங்களிலும் அடிப்படை வசதிகள் பெரும்பாலான அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஊரகப் பகுதி மக்களின் தேவைக்கேற்ப 2016-17 ஆம் ஆண்டில் தாய் திட்டத்தின் முன்னுரிமைகள் மாற்றம் பெற்றன. அதற்கிணங்க, சிறுபாசன ஏரிகளை புனரமைத்தல், ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல், குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், தெருக்கள் மேம்பாடு செய்தல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2017 ஜுன் 20]

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்த இந்த அரசு பல முயற்சிகளை எடுத்ததன்மூலம், தமிழ்நாடு, தேசிய அளவில், இத்திட்ட செயலாக்கத்தில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. உடல் மற்றும் மன அளவிலான மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக, தனித்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளில் அவர்கள் பங்கேற்றிட ஏதுவாக சிறப்பு விலை விகித அட்டவணை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சிக்காக, 2012-13 ஆம் ஆண்டு 'சமூக உள்ளாக்கம்' என்ற தலைப்பின்கீழ் சிறந்த மாநிலத்திற்கான தேசிய அளவிலான விருது தமிழ்நாட்டிற்குக் கிடைக்கப்பெற்றது.

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களை "தூய்மைக் காவலர்களாக" நியமனம் செய்து, தினசரி திடக்கழிவுகளை ஊரக குடியிருப்புகளிலிருந்து அகற்ற பயன்படுத்துவது இந்த அரசின் மற்றுமொரு தனித்துவம் வாய்ந்த முன் முயற்சியாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் உரக்குழிகளை அமைத்து, சேகரிக்கப்படும் கழிவுகள், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அவைகள் முறையே உரமாகவும், மறுசுழற்சிக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சுற்றுச்சூழல் சீர்கேட்டின் தீய விளைவுகளைத் தடுக்க, பசுமைப் பரப்பை இந்த அரசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. புவி வெப்பமயமாதல், மண் அரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும், உயிர் பன்முகத்தன்மையைக் காத்து உயிரியல் சமநிலையை பேணும் நோக்கத்திலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மிக அதிக அளவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய காடு வளர்ப்புப் பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தனியாகவும், வனத் துறையோடு ஒருங்கிணைந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி/ வருவாய்த் துறைக்கு சொந்தமான மற்றும் பொது இடங்களிலும், சாலையோரங்களிலும் நிழல் தரும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமூக,பொருளாதார மற்றும் உடல் நலம் சார்ந்த குறியீடுகளுக்கும், சுகாதார வசதிகளுக்கும் இடையே நேரடி தொடர்பு இருப்பதையும், ஊரக மக்களின் நல வாழ்விற்கு சுகாதாரம் அடித்தளமாக

உள்ளது என்பதையும் இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டிலுள்ள வலுவான சமூக மூலதனமாகத் திகழும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம அளவில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், சுகாதார நலனில் தொடர்புடைய துறைகளான சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக் கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய துறைகளின் களப்பணியாளர்களை ஒருங்கிணைத்து விழிப்புணர்வு மற்றும் மனமாற்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய முன்முயற்சிகள் காரணமாக ஊரக சுகாதார நிலை கடந்த ஓராண்டில் 62 விழுக்காட்டிலிருந்து 73 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து தூய்மை காவலர்களை ஈடுபடுத்தி செயல்படுத்தப்படும் புதுமையான மாதிரி திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு சிறந்த நடைமுறைக்கான நல் ஆளுமை விருது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15-8-2016 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டம் தேசிய அளவில் பாராட்டுதல்களை பெற்றதுடன், மத்திய அரசு இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களை பிற மாநில அரசுகளுக்கு அனுப்பி இதனை முன்மாதிரியாக கொண்டு செயல்படுத்த அறிவுரை வழங்கியுள்ளது. மேற்கண்ட முன்முயற்சிகள் நமது மாநிலத்தை “முழு சுகாதார தமிழகம்-முன்னோடி தமிழகம்” என்ற இலக்கினை நோக்கி விரைந்து செல்வதற்கு வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிருக்கு நிதி சார்ந்த நடவடிக்கைகளுக்கு உதவி அளிப்பதன்மூலம் அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தி மகளிரை அதிகாரப்படுத்துவதற்காக 1983 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சேமிப்புப் பழக்கம் ஏற்படுத்துதல், அடிப்படை பயிற்சியை வழங்குதல், அவர்களுக்குள் உட்கடன் பழக்கம் ஏற்படுத்துதல், வங்கிக் கடன் இணைப்பு தருதல், தொழில் வாய்ப்பு உருவாக்குதல் என பல்வேறு வழிகளில் துணை நின்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

2017 ஜூன் 20]

மகளிர் சுய உதவிக் குழுவினரிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தி, அவர்கள் கடன் சுமையில் விழாமல் பாதுகாக்கிறது. மேலும் அவர்கள் வங்கிக் கடன் பெற்று வருமானம் ஈட்டக்கூடிய தொழில்கள் தொடங்கி, தங்கள் வாழ்வாதாரத்திற்கான வருவாயினை ஈட்டவும் ஊக்குவிக்கிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் விடுபட்ட ஏழை மக்கள் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் ஆகியோரை சுய உதவிக் குழுக்கள் இயக்கத்திற்குக் கொண்டு வந்து அவர்களின் வறுமையை முற்றிலுமாக நீக்கவும் இதற்கு துணை புரிகின்ற சமுதாய நிறுவனங்களை ஏற்படுத்தி அவைகளை வலுப்படுத்தியும், சமூக மூலதனம் மற்றும் நிதி உள்ளாக்கம் உள்ளிட்ட பல்வேறு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏழை மக்களுக்கு உருவாக்கி அவர்களின் திறமையை வளர்த்து முழுமையாக வறுமையை ஒழிப்பதும் இதன் தலையாய நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 265 ஊராட்சி ஒன்றியங்களில் 3 கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அடித்தட்டு அளவில் ஏழைகளுக்கான வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன்மூலம் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் ஏழ்மை மற்றும் நலிவுற்ற தன்மையினைக் குறைத்து, இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டினை உறுதி செய்வதே தீன் தயாள் அந்தியோதய யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NULM) நோக்கமாகும். இத்திட்டம் 2014-15 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசுத் திட்டமான தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2015-16ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2005 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் துவக்கப்பட்ட தமிழ்நாடு புது வாழ்வு திட்டம் மாநிலத்தின் 26 மாவட்டங்களில் உள்ள 120 பின்தங்கிய வட்டாரங்களில் 4,174 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமுதாயம் முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சி அணுகுமுறைமூலம் மகளிரை ஆற்றல்படுத்துவதும், கிராமப்புற வறுமையை திட்டப் பகுதியில் குறைப்பதும் உலக வங்கி நிதியுதவியுடன்கூடிய இத்திட்டத்தின் நோக்கமாகும். சமுதாய

அமைப்புகளை கட்டமைத்தல், அவைகளைத் தகுதிப்படுத்துதல், வங்கிகளின் வாயிலாக நிதி ஆதாரங்களுக்கு வழி காட்டுதல் மற்றும் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை ஊக்கப்படுத்தி ஏழைகளின் வாழ்வு நிலையை உயர்த்துதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். மிகவும் ஏழை, ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற இலக்கு மக்களைக் கண்டறியவும், உதவி செய்யவும் புது வாழ்வு திட்டத்தின் சிறந்த செயல்பாடுகளில் ஒன்றாக மக்கள் நிலை ஆய்வு திகழ்கிறது. இத்திட்டத்தின்கீழ் சமுதாய அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள், மக்கள் கற்றல் மையங்கள் போன்றன ஆற்றலளிப்பு மற்றும் வறுமை நீக்கும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணியவாறு, அமைதி, வளம் மற்றும் வளர்ச்சிக்கான காலகட்டத்திற்கு தமிழகத்தை அழைத்துச்செல்ல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் தனது கடமையினை தொடர்ந்து ஆற்றும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

2. ஊராட்சி நிருவாகம்

"உண்மையான ஜனநாயக இந்தியாவின் அடிப்படை அலகு கிராமம். ஒவ்வொரு கிராமத்தின் மக்களாலும் கீழிருந்து உண்மையான ஜனநாயகம் உருவாக்கப்பட வேண்டும். என்னால் உருவாக்கப்படும் கிராம அலகு என்பது வலிமையிலும் வலிமையானது. இத்தகைய அலகுகள் சுயசார்பு அடிப்படையில் நன்கு அமைக்கப்பட்டால் இவைகள் தங்களுடைய சிறப்பான தன்மையை வெளிப்படுத்தும். இப்படிப்பட்ட ஒரு சிறந்த மாதிரி கிராமத்தை ஒருவர் உருவாக்கினால், அவர் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கே ஒரு மாதிரி அமைப்பினை உருவாக்கி கொடுக்கிறார்".

-மகாத்மா காந்தி

தமிழ்நாட்டில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்று காலத்திலேயே வளர்ச்சி அடைந்த உள்ளாட்சி நிருவாகம் நடைமுறையிலிருந்தது. உள்ளூர் சுயாட்சி அமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்தில் சிறப்பாக செயல்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் அமைந்துள்ள ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் உள்ளன. அக்காலத்தில் கிராமக் கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள் விரிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள், பராந்தகச் சோழர் ஆட்சி செய்த கி.பி.920 ஆம் ஆண்டினைச் சார்ந்ததாகும். இத்தகைய மக்களாட்சி அமைப்பில் கிராமக் குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிருவாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர்.

சோழர் ஆட்சிக் காலத்தின் இரகசிய வாக்குப்பதிவே இன்றைய தேர்தல் முறையின் அடித்தளமாகும். பெரிய குடம் ஒன்று கிராமத்தின் முக்கியமான பகுதியில் வைக்கப்பட்டு, வாக்குப் பெட்டியாகப் பயன்படுத்தப்பட்டது. வாக்குரிமை பெற்றோர் தங்களுக்கு விருப்பமான வேட்பாளரின் பெயரை பனை ஓலையில் எழுதி அக்குடத்தில் போடுவர். இறுதியாகக் குடத்தில் உள்ள ஓலைகள் வெளியே எடுக்கப்பட்டு, வேட்பாளர்கள் வாரியாக எண்ணப்பட்டு அதிக வாக்குகள் பெற்றவர்கள் கிராமக் குழுவின்

உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

சுதந்திரத்திற்குப் பின், அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு 40-ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, 1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமர்ப்பித்த அறிக்கையில் ஜனநாயக அடிப்படையில் அதிகார பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரம் வழங்கிட பரிந்துரைத்தது.

இதன் அடிப்படையில் மதராஸ் அரசு கீழ்க்கண்ட முக்கிய அம்சங்களை கொண்ட மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம், 1958 மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம், 1958 ஆகியவற்றை இயற்றியது.

1. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் என்ற இரண்டு அடுக்கு முறை.

2. சமுதாய வளர்ச்சி வட்டார எல்லையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.

3. கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக இருப்பர். ஊராட்சி ஒன்றியக் குழு தலைவரை நேரிடையான / மறைமுகமான தேர்தல் செய்தல்மூலம் தேர்வு செய்தல்.

4. பல்வேறு வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைத்தல்.

5. மாவட்டக் கழகங்களை கலைத்தல்.

6. மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு என்ற ஆலோசனை வழங்கும் அமைப்பினை ஏற்படுத்துதல்.

2.1 73-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்

73-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து

2017 ஜூன் 20]
நடைமுறைக்கு வந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243 ஜி ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிக்க வகை செய்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் 11-வது அட்டவணையில் 29 இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. 74-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மாவட்ட திட்டக் குழு அமைக்க வகை செய்கிறது. இவற்றின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ஐ இயற்றியது. இச்சட்டமானது 22-4-1994 அன்று நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

2.2 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 கீழே குறிப்பிட்டவாறு பல மாறுதல்களை தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில் கொண்டு வந்தது:

i) *தமிழ்நாட்டில் கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி என மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.*

ii) *உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவற்றின் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக கட்டாய தேர்தல் அல்லது அவை கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாத காலம் முடிவதற்கு முன்பு தேர்தல் நடத்துதல்.*

iii) *ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பதவியிடங்கள் (வார்டு உறுப்பினர்கள்) மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு (ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் / ஊராட்சித் தலைவர்) சுழற்சி முறையுடன்கூடிய இட ஒதுக்கீடு கொண்டு வருதல்.*

iv) *மொத்தப் பதவி மற்றும் தலைமைப் பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு சுழற்சி முறையுடன்கூடிய இட ஒதுக்கீடு செய்யும் முறையை கொண்டு வருதல்.*

v) *ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய காலத்தில் தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்ற சுதந்திரமான அமைப்பினை ஏற்படுத்துதல்.*

[2017 ஜூன் 20

vi) *மாநில அரசின் நிதி ஆதாரங்களை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரை செய்யும் வகையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தினை ஏற்படுத்துதல்*

vii) *ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்துள்ள திட்டங்களைத் தொகுத்து மாவட்டத்திற்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திட ஏதுவாக மாவட்ட திட்டக் குழுவினை ஏற்படுத்துதல்.*

viii) *கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய 'கிராம சபை' என்ற அமைப்பினைக் கொண்டு வருதல்.*

2.3 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன்கீழ் வெளியிடப்பட்ட முக்கிய விதிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் பிரிவுகளின் அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்புடைய அனைத்து விதிகளையும் வெளியிட அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசால் உருவாக்கப்படும் விதிகள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ல் தெரிவிக்கப்பட்ட அம்சங்களை செயல்படுத்த தொடர்புடைய அமைப்புகளுக்கும், அலுவலர்களுக்கும் உறுதுணையாகத் திகழ்கின்றன.

2.3.1 தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சி கூட்டத்தினை கூட்டுவது மற்றும் நடத்துவதற்கான (குறைவெண் வரம்பு மற்றும் நடைமுறைகள்) விதிகள், 1999

ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்கிடையிலான கால இடைவெளி, கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பு மற்றும் பொருட்கள் சார்வு செய்தல், குறைவெண் வரம்பு, வருகைப் பதிவு, தீர்மானம் நிறைவேற்றுதல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் தயார் செய்தல் மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3.2 கிராம சபை நடத்துவது தொடர்பான விதிகள்

தமிழ்நாடு கிராம சபை (கூட்டுதல் மற்றும் நடத்துவதற்கான நடைமுறைகள்) விதிகள் 1998 மற்றும் அவ்விதிகளுக்கு 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருத்தங்களில் கிராம சபை

2017 ஜூன் 20]

கூட்டம் நடத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசாணையின்படி குறைந்தபட்சம் ஆண்டுக்கு 4 முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபை நடத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிராம சபை நடத்துவதற்கான நெறிமுறைகள், குறைவெண் வரம்பு, கூட்டப்பொருள், வருகைப் பதிவு, தீர்மானங்கள் இயற்றுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளைத் தயார் செய்தல் ஆகியவை குறித்த நெறிமுறைகள் இவ்விதிகளில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

2.3.3 தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்களை நடத்துவது குறித்து இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், வாக்குப்பதிவு, வாக்குகளை எண்ணுதல், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் செலவினங்கள், தேர்தல் வழக்குகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.3.4 தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை) விதிகள், 1995

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவியிடங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை ஆகியவை குறித்து இவ்விதிகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

2.3.5 தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997

ஊரகப் பகுதிகளில் மனைப் பிரிவுகள் அங்கீகாரம் மற்றும் கட்டட வரைபடங்களை அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கான நடைமுறைகள் இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி, 200 சதுர மீட்டருக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்களுக்கும், 100 சதுர மீட்டருக்கும் மிகாத வணிக

[2017 ஜூன் 20

கட்டடங்களுக்கும் சில வரைமுறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி அளிக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. பின்னர், கட்டட வரைபட அனுமதி அளிக்கும் அதிகார வரம்பு குடியிருப்பு கட்டடங்களுக்கு 4000 சதுர அடியாகவும், வணிக கட்டடங்களுக்கு 2000 சதுர அடியாகவும் உயர்த்தி நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பரப்பளவிற்கு மிகையான கட்டட வரைபடங்களுக்கும், அனைத்து மனைப்பிரிவுகளுக்கும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அனுமதி அளிக்க இவ்விதிகள் வகை செய்கின்றன.

2.3.6 தமிழ்நாடு ஊராட்சிகள் (வரிவிதிப்பு மற்றும் வசூலித்தல்) விதிகள், 1999

கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி நிர்ணயித்தல், வீட்டு வரி செலுத்துவோர் பட்டியல் தயாரித்தல், வீட்டு வரி விதிப்பின் மீதான மேல்முறையீடு, வீட்டு வரியை வசூல் செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.3.7 தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) விதிகள், 2007

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் பொது நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளின்மூலம் பெறப்படும் திட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3.8 தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகள், 2015

ஊரகப் பகுதிகளில், ஆழ்துளைக் கிணறுகள், குழாய் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக் கிணறுகள் வெட்டும் பணிகளை மேற்கொள்ளும்போது எதிர்பாராத விதமாக நேரக்கூடிய

2017 ஜுன் 20]

விபத்துக்கள் மற்றும் குழந்தைகள் மரணத்தைத் தவிர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி கிணறு தோண்டும் இயந்திர உரிமையாளர் மற்றும் இயக்குபவர் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விதிகளில் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்தும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

2.4 மாநிலத் தேர்தல் ஆணையம்

மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்கள் நடத்துவதற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான தன்னாட்சி அதிகாரம் கொண்ட அரசியலமைப்பு நிறுவனமாக 1994 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல் தயாரித்தலைக் கண்காணித்து, இயக்கி, கட்டுப்படுத்தும் அதிகாரம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239 உட்பிரிவு (3)-ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் மற்றும் நிருவாக பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். மாநில தேர்தல் ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவருக்கு 65 வயது நிறைவடையும் நிலையில் அவருக்கு ஓய்வளிக்கப்பட வேண்டும்.

2.5 உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்

தமிழ்நாட்டில், 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996-ம் ஆண்டு நடத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது, மூன்றாவது, நான்காவது சாதாரண தேர்தல்கள் முறையே அக்டோபர் 2001, அக்டோபர் 2006 மற்றும் அக்டோபர் 2011-ல் நடத்தப்பட்டது.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்களை கட்சி அடிப்படையில் நடத்த மாநில தேர்தல் ஆணையம் அறிக்கை வெளியிடுகிறது. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள்

[2017 ஜூன் 20

மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. 2011-ம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விவரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 2.1

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரம்

வ. எண்	பதவியிடம் குறித்த விவரம்	எண்ணிக்கை
1.	கிராம ஊராட்சி வார்டுகள்	99,333
2.	ஊராட்சி ஒன்றிய வார்டுகள்	6,471
3.	மாவட்ட ஊராட்சி வார்டுகள்	655
4.	கிராம ஊராட்சித் தலைவர்கள்	12,524
5.	ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள்	385
6.	மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்	31
	மொத்தம்	1,19,399

2.6 கிராம ஊராட்சிகளில் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாட்டில் மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் உறுப்பினர் வார்டு முறை இருந்தாலும் கிராம ஊராட்சியில் ஓர் உறுப்பினர் வார்டு மற்றும் பல உறுப்பினர் வார்டு என்ற இரண்டு நிலையும் இருந்தது. இந்நிலையின் அடிப்படையில் அக்டோபர் 2006 ஆம் ஆண்டு வரை சாதாரண தேர்தல் நடத்தப்பட்டது.

அரசாணை எண் 63 ஊரக வளர்ச்சி (ப.ரா 2) ஊராட்சித் துறை நாள் 14-9-2011-ன்படி, 2011-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகளை பிரித்தல்) விதிகள் 1995-ல் திருத்தம்

2017 ஜூன் 20]

கொண்டு வரப்பட்டு, கிராம ஊராட்சியில் ஒரு உறுப்பினர் வார்டு முறை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். 2001-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி வார்டுகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 99,333 ஆக உள்ளது.

2.7 ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள்தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243D-ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் ஆதி திராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக, 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவுகள் 11, 20, 32, 57 மற்றும் 1995-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் ஆகியவற்றில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி செய்வது குறித்து தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

2.8 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21, 1994)-ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக்குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை

பதவியிடங்கள் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சி நிருவாகத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிருக்குரிய அதிகாரம் வழங்கிடவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் எனக் கருதியதால், மகளிருக்கான இட ஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை 50 விழுக்காடாக இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995-ல் திருத்தம் செய்து, அதன் அடிப்படையில் அரசு ஆணை எண் 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள் 23-5-2016-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, எதிர்வரும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் மகளிருக்கான உயர்த்தப்பட்ட இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வரும்.

2.9. கிராம ஊராட்சி

31 மாவட்டங்களில் 79,394 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சி என்பது, அதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதற்கூட்டத்திலிருந்து 5 ஆண்டு காலம் ஊராட்சி நிருவாகம், செயல்பாட்டில் இருக்கும். கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, 31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விவரம் ஆகஸ்ட் 2014-ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள்தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

2017 ஜூன் 20]

அட்டவணை 2.2
2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை
அடிப்படையில் கிராம ஊராட்சிகள் விவரம்

வ. எண்	மக்கள்தொகை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	500 மற்றும் அதற்குக் கீழ்	46
2.	501-1000	833
3.	1001-3000	6,821
4.	3001-5000	2,781
5.	5001-10000	1,753
6.	10,000க்கு மேல்	290
	மொத்தம்	12,524

மாவட்ட வாரியாக ஊரக மக்கள்தொகை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.3
மாவட்ட வாரியான ஊரக மக்கள்தொகை விவரம்

வ. எண்	மாவட்டம்	ஊரக மக்கள் தொகை	பெண்கள்	பழங் குடியினர்	பழங் குடியினர் விழுக்காடு	ஆதி திராவிடர்	ஆதி திராவிடர் விழுக்காடு
1.	காஞ்சிபுரம்	18,61,789	9,24,124	29,706	1.60	6,24,458	33.54
2.	திருவள்ளூர்	15,85,280	7,90,170	37,708	2.38	5,04,115	31.80
3.	கடலூர்	18,00,133	8,91,507	10,082	0.56	6,25,788	34.76
4.	விழுப்புரம்	29,12,960	14,45,062	71,289	2.45	9,19,308	31.56
5.	வேலூர்	24,82,556	12,41,612	65,230	2.63	6,05,248	24.38
6.	திருவண்ணாமலை	20,39,049	10,14,486	87,096	4.27	5,02,044	24.62
7.	சேலம்	19,57,105	9,45,014	1,12,334	5.74	3,54,545	18.12
8.	நாமக்கல்	10,87,895	5,37,918	55,417	5.09	2,48,100	22.81
9.	தருமபுரி	12,90,530	6,24,646	60,609	4.70	2,13,538	16.55
10.	கிருஷ்ணகிரி	14,65,743	7,17,175	20,980	1.43	2,20,945	15.07
11.	ஈரோடு	11,30,722	5,59,797	19,084	1.69	2,16,689	19.16
12.	திருப்பூர்	11,39,466	5,68,772	1,947	0.17	2,63,539	23.13

வ. எண்	மாவட்டம்	ஊரக மக்கள் தொகை	பெண்கள்	பழங் குடியினர்	பழங் குடியினர் விழுக்காடு	ஆதி திராவிடர்	ஆதி திராவிடர் விழுக்காடு
13.	கோயம்புத்தூர்	10,21,359	5,10,409	19,565	1.92	2,13,492	20.90
14.	நீலகிரி	3,10,591	1,59,447	22,767	7.33	91,446	29.44
15.	தஞ்சாவூர்	16,67,809	8,46,926	1,465	0.09	3,84,291	23.04
16.	நாகப்பட்டினம்	12,61,288	6,37,194	2,214	0.18	4,60,876	36.54
17.	திருவாரூர்	10,06,482	5,06,528	939	0.09	3,88,740	38.62
18.	திருச்சிராப்பள்ளி	14,71,945	7,39,563	14,519	0.99	3,05,109	20.73
19.	கரூர்	6,68,360	3,36,684	201	0.03	1,59,718	23.90
20.	பெரம்பலூர்	4,68,017	2,34,113	2,136	0.46	1,50,504	32.16
21.	அரியலூர்	6,71,100	3,37,847	9,946	1.48	1,63,770	24.40
22.	புதுக்கோட்டை	13,41,111	6,75,896	845	0.06	2,51,552	18.76
23.	மதுரை	13,00,481	6,44,431	4,896	0.38	2,72,494	20.95
24.	தேனி	5,75,394	2,84,527	1,377	0.24	1,43,589	24.95
25.	திண்டுக்கல்	14,57,412	7,25,917	4,580	0.31	3,34,064	22.92
26.	இராமநாதபுரம்	10,09,270	5,01,016	526	0.05	2,13,583	21.16
27.	விருதுநகர்	12,86,543	6,44,603	1,197	0.09	3,15,796	24.55
28.	சிவகங்கை	9,52,610	4,77,215	518	0.05	1,88,454	19.78
29.	திருநெல்வேலி	16,45,509	8,32,916	4,099	0.25	3,58,487	21.79
30.	தூத்துக்குடி	9,71,273	4,92,268	1,921	0.20	2,48,752	25.61
31.	கன்னியாகுமரி	6,46,441	3,25,257	3,893	0.60	26,546	4.11
	மொத்தம்	4,04,86,223	2,01,73,040	6,69,086	1.65	99,69,580	24.62

2.10 மாவட்டவாரியான ஊரக பரப்பளவு விவரம்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு 1,04,149.61 சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான ஊரக பரப்பளவு விவரம் பின்வருமாறு:

2017 ஜூன் 20]

அட்டவணை 2.4

மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் சராசரி பரப்பளவு விவரம்

வ. எண்	மாவட்டம்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை	பரப்பளவு (சதுர கி.மீ)	ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ)
1.	காஞ்சிபுரம்	633	3,512	6	3,851.45	6.08
2.	திருவள்ளூர்	526	3,862	7	2,859.84	5.44
3.	கடலூர்	683	2,403	4	2,942.24	4.31
4.	விழுப்புரம்	1,099	3,487	3	6,509.43	5.92
5.	வேலூர்	743	6,109	8	4,022.30	5.41
6.	திருவண்ணாமலை	860	4,267	5	4,826.27	5.61
7.	சேலம்	385	5,109	13	4,561.41	11.85
8.	நாமக்கல்	322	2,520	8	3,119.43	9.69
9.	தருமபுரி	251	2,835	11	4,407.43	17.56
10.	கிருஷ்ணகிரி	333	3,983	12	4,965.73	14.91
11..	ஈரோடு	225	3,199	14	2,626.99	11.68
12.	திருப்பூர்	265	2,455	9	4,545.50	17.15
13.	கோயம்புத்தூர்	228	1,200	5	2,534.24	11.12
14.	நீலகிரி	35	1,282	37	1,170.39	33.44
15.	தஞ்சாவூர்	589	2,260	4	3,657.67	6.21
16.	நாகப்பட்டினம்	434	2,054	5	2,400.31	5.53
17.	திருவாரூர்	430	1,704	4	2,322.69	5.40
18.	திருச்சிராப்பள்ளி	404	2,210	5	4,028.00	9.97
19.	கரூர்	157	2,179	14	2,656.25	16.92
20.	பெரம்பலூர்	121	314	3	1,609.54	13.30
21.	அரியலூர்	201	710	4	1,710.17	8.51
22.	புதுக்கோட்டை	497	4,062	8	4,433.78	8.92
23.	மதுரை	420	1,946	5	3,183.18	7.58
24.	தேனி	130	607	5	1,159.89	8.92
25.	திண்டுக்கல்	306	3,083	10	4,401.34	14.38
26.	இராமநாதபுரம்	429	2,306	5	4,116.19	9.59
27.	விருதுநகர்	450	1,760	4	3,282.08	7.29
28.	சிவகங்கை	445	2,723	6	3,075.90	6.91
29.	திருநெல்வேலி	425	2,337	5	4,283.06	10.08
30.	தூத்துக்குடி	403	1,761	4	4,260.78	10.57
31.	கன்னியாகுமரி	95	1,155	12	626.14	6.59
	மொத்தம்	12,524	79,394	6	1,04,149.61	8.32

2.10.1 கிராம ஊராட்சிகளின் வருமான அடுக்கு

மாநிலத்தில் மொத்தம் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2016-2017ம் ஆண்டின் ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 2.5

கிராம ஊராட்சிகளின் ஆண்டு வருவாய் விவரங்கள்

வருமான அடுக்கு	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
ரூ. 8-10 இலட்சம்	271
ரூ.10-20 இலட்சம்	7168
ரூ. 20- 50 இலட்சம்	4470
ரூ. 50 இலட்சம் - 1 கோடி	510
ரூ. 1 கோடிக்கும் மேல்	105
மொத்தம்	12524

2.11 கிராம சபை

கிராம சபை என்பது ஒவ்வொரு கிராம ஊராட்சி அளவிலும் உள்ள அடித்தள ஜனநாயக அமைப்பாகும். பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், சமூக தணிக்கை ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை உறுதிபடுத்தி வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பான நிருவாகத்திற்கு வழிவகுக்கிறது. சட்டப்படி, இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். கிராம ஊராட்சியில் உள்ள மக்கள்தொகை அடிப்படையில் அரசு கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு நிர்ணயம் செய்துள்ளது:

அட்டவணை 2.6

கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு

வ. எண்	கிராம ஊராட்சியின் மக்கள்தொகை	கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு
1.	500 வரை	50
2.	501 முதல் 3,000 வரை	100
3.	3,001 முதல் 10,000 வரை	200
4.	10,000க்கு மேல்	300

2017 ஜூன் 20]

கிராம சபை கூட்ட நடவடிக்கைகளை முறையாக பதிவேடுகளில் பதிவு செய்வது மற்றும் புகைப்பட ஆவணங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்கிறது:

1. *கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.*

2. *கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.*

3. *அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து தகவல் தெரிவித்து வளர்ச்சிக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.*

4. *பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான பணி பட்டியல்களுக்கு ஒப்புதல் வழங்குதல்.*

5. *திட்டப் பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.*

6. *கிராம ஊராட்சி தணிக்கை அறிக்கை மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான சமூக தணிக்கை அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.*

7. *இன மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.*

2.12 கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110-ன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும்.

i) *அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)*

ii) குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக் கழிவு மேலாண்மை செயல்பாட்டின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) சமுதாய சொத்துக்களை பராமரித்தல்

ix) கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்

2.12.1 குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. 31-3-2017 அன்றைய நிலையில் ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

2017 ஜூன் 20]

அட்டவணை 2.7

பயன்பாட்டில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் குறித்த மாவட்ட வாரியான விவரம்

வ.எண்	மாவட்டம்	கைப்பம்பு எண்ணிக்கை	மின்விசைப்பம்பு எண்ணிக்கை	சிறு மின்விசைப்பம்பு எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	காஞ்சிபுரம்	5996	4178	4007	20	69
2.	திருவள்ளூர்	4140	3598	2340	9	36
3.	கடலூர்	7944	3529	3518	12	60
4.	விழுப்புரம்	8095	5039	7197	11	78
5.	வேலூர்	7376	6419	10685	20	46
6.	திருவண்ணாமலை	10472	4531	7648	25	240
7.	சேலம்	3142	3967	2860	9	262
8.	நாமக்கல்	1320	2736	1084	12	298
9.	தருமபுரி	9864	3492	3789	8	66
10.	கிருஷ்ணகிரி	6706	3218	2948	18	93
11.	ஈரோடு	2735	5203	2168	40	192
12.	திருப்பூர்	1390	3464	780	17	265
13.	கோயம்புத்தூர்	115	2550	560	9	228
14.	நீலகிரி	18	1207	0	1	4
15.	தஞ்சாவூர்	7618	5078	3097	6	90
16.	நாகப்பட்டினம்	24445	2773	1966	12	291
17.	திருவாரூர்	6294	2734	1714	4	96
18.	திருச்சிராப்பள்ளி	9132	4127	5556	25	327
19.	கரூர்	2011	2701	3128	12	92
20.	பெரம்பலூர்	2876	704	894	4	65
21.	அரியலூர்	837	1434	973	7	168
22.	புதுக்கோட்டை	6601	3802	5211	46	208
23.	மதுரை	2752	2585	4361	7	182
24.	தேனி	623	817	1095	24	106
25.	திண்டுக்கல்	1557	4599	3281	32	116
26.	இராமநாதபுரம்	690	1216	1248	52	429
27.	விருதுநகர்	4109	3166	3487	12	153
28.	சிவகங்கை	3586	2925	5455	33	129
29.	திருநெல்வேலி	4124	3728	3913	26	388
30.	தூத்துக்குடி	7282	2085	2174	22	354
31.	கன்னியாகுமரி	85	1206	1473	13	44
	மொத்தம்	**1,53,935**	**98,811**	**98,610**	**548**	**5,175**

ஏற்கெனவே உள்ள குடிநீர் ஆதாரங்களுடன், 2016-17-ம் ஆண்டில் 51,895 குடிநீர் பணிகள் தமிழ்நாடு குக்கிராம வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி திட்டம், மாநில நிதிக்குழு மானியம் மற்றும் கிராம ஊராட்சிகளின் பொது நிதி ஆகிய திட்டங்களில் ரூ.544.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.12.2 வறட்சிக் காலத்தில் குடிநீர் விநியோகம்

2016-17-ம் ஆண்டில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, மாநிலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கடந்த ஆண்டு மிகக் குறைந்த அளவில் மழை பெய்தது. இதன் விளைவாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததோடு மட்டுமல்லாமல் குடிநீர் ஆதாரங்களும் வறண்டு விட்டதால், ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணி ஊராட்சி நிருவாகத்திற்கு சவாலாக இருந்தது. இருப்பினும் இப்பிரச்சினைகளை சமாளிக்க அனைத்து நிதி ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து தேவையான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு, முறையாக குடிநீர் விநியோகம் செய்தது.

2.12.3 நிலைமையை கையாள பின்பற்றிய வழிமுறைகள்

கீழ்க்காணும் நடவடிக்கைகளை குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பின்பற்றுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது:

- அனைத்து குடிநீர் ஆதாரங்களும் டிசம்பர் 2016-ல் மதிப்பீடு செய்யப்பட்டு குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள கிராம ஊராட்சி வாரியாக செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. மொத்தம் 18510 பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

- போர்க்கால அடிப்படையில் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் ஆதாரங்கள் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.

- ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் வாரந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

2017 ஜூன் 20]

- மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.15 கோடி குடிநீர் பணிகளுக்காக செலவிடப்பட்டது.
- குடிநீர் பற்றாக்குறை நிலவும் ஊரகப் பகுதிகளில் மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி ஆகியவற்றை குடிநீர் விநியோக பணிகளுக்கு மட்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்தின.
- குடிநீர் விநியோகத்தை கிராம ஊராட்சி அளவில் கண்காணிப்பதற்கு மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வட்டார அளவில் கண்காணிப்பதற்கு உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.
- குடிநீர் தட்டுப்பாடு தொடர்பான புகார்களை பதிவு செய்ய மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறை தீர் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மே 2017 வரை, 12461 புகார்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு குறைகள் தீர்க்கப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கூறுகளும் குடிநீர் விநியோகப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

2.12.4 குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம்மூலம் கண்காணித்தல்

தேசிய தகவலியல் மையத்தின் உதவியோடு ஊரகப் பகுதிகளில் குக்கிராம அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை தினசரி இணையதளம்மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2.12.5 தெரு விளக்குகள் பராமரித்தல்

ஊரக பகுதிகளில் தெரு விளக்குகளை பராமரிப்பது, கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும். 31-3-2017 அன்றைய நிலையில் மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் 27.35 இலட்சம் தெரு விளக்குகள் உள்ளன. கிராம ஊராட்சிகளில் பராமரிக்கப்படும் பல்வேறு வகையான தெரு விளக்குகள் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.8

மாவட்ட வாரியான தெரு விளக்குகள் விவரம்

வ.எண்	மாவட்டம்	குழல் விளக்கு	பாதரச ஆவி விளக்கு	சோடியம் ஆவி விளக்கு	ஆடர் ஒளி விளக்கு	சூரியசக்தி தெரு விளக்கு	எல்இடி விளக்கு	மொத்தம்
1.	காஞ்சிபுரம்	38405	514	12163	23082	1538	40099	115801
2.	திருவள்ளூர்	6496	664	4622	83035	1122	39911	135850
3.	கடலூர்	32235	596	10150	30461	2001	41494	116937
4.	விழுப்புரம்	27717	26	6412	36404	1020	62295	133874
5.	வேலூர்	84504	772	4767	9784	2529	58102	160458
6.	திருவண்ணாமலை	47013	883	5792	21110	1485	40742	117025
7.	சேலம்	83419	341	2566	14854	1514	48418	151112
8.	நாமக்கல்	34250	96	856	15587	1451	22958	75198
9.	தருமபுரி	8887	543	1287	11343	420	26679	49159
10.	கிருஷ்ணகிரி	2679	295	864	39470	1235	28900	73443
11.	ஈரோடு	52174	170	1975	3061	1075	23764	82219
12.	திருப்பூர்	32762	349	1451	3627	1611	23164	62964
13.	கோயம்புத்தூர்	30277	370	1828	12389	840	19740	65444
14.	நீலகிரி	2945	0	1173	1415	220	6459	12212
15.	தஞ்சாவூர்	79000	1887	6478	46083	1980	33250	168678
16.	நாகப்பட்டினம்	52044	95	1991	29074	1315	28284	112803
17.	திருவாரூர்	40280	352	792	44403	898	18409	105134
18.	திருச்சிராப்பள்ளி	61372	611	3394	5720	1546	38212	110855
19.	கரூர்	23267	182	750	11013	760	13667	49639
20.	பெரம்பலூர்	6404	37	547	9056	105	13670	29819
21.	அரியலூர்	15245	369	2565	8340	650	9054	36223
22.	புதுக்கோட்டை	44338	205	3200	12200	1910	30086	91939
23.	மதுரை	34878	110	1261	5786	610	25211	67856
24.	தேனி	20852	1173	78	1343	616	11708	35770
25.	திண்டுக்கல்	28364	259	646	29551	1369	3051	63240
26.	இராமநாதபுரம்	21819	182	1385	38887	633	20505	83411
27.	விருதுநகர்	65166	511	1700	15699	1574	23366	108016
28.	சிவகங்கை	25667	61	1285	13530	840	15430	56813
29.	திருநெல்வேலி	67091	420	3840	1210	1860	43770	118191
30.	தூத்துக்குடி	58332	88	1435	3926	1500	16862	82143
31.	கன்னியாகுமரி	36133	7	1051	11937	506	13655	63289
	மொத்தம்	1164015	12168	88304	593380	36733	840915	2735515

2017 ஜூன் 20]

2.13 அடிப்படைப் பணிகளுக்கான பயன்பாடு மற்றும் பராமரிப்பு செலவின வழிமுறைகள்:

அரசு ஆணை எண் 157 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி) துறை நாள் 21-12-2015-ல் அடிப்படை பணிகளுக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்கான வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் செலவின அளவை திருத்தி கீழ்க்கண்டவாறு அரசு உத்தரவிட்டுள்ளது:

(i) கைப் பம்பு (கூலி மட்டும்)

கைப் பம்பு	ரூ.1000/- (கூலி மட்டும்)

(ii) மின்விசை பம்பு பராமரிப்பிற்காக பொருட்கள் மற்றும் கூலியாக ஓர் ஆண்டுக்கு நிருணயிக்கப்பட்ட தொகை

2 குதிரை திறன் மின்விசை பம்புகள்	ரூ.7,500
5 குதிரை திறன் மின்விசை பம்புகள்	ரூ.10,000
7.5 குதிரை திறன் மின்விசை பம்புகள்	ரூ.12,000

(iii) தெரு விளக்குகள் பொருத்துவதற்கான கூலி

தெரு விளக்கு மற்றும் சோடியம் ஆவி விளக்கு	ரூ.50/-
சோக் / ஸ்டார்ட்டர் / கன்டன்ஸர்	ரூ.25

2.14 புதிய முயற்சிகள்

2.14.1 ஊரகப் பகுதிகளில் குழல் விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110-ன்படி ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

கிராம ஊராட்சியின் வருவாயில் பெரும்பகுதி மின் கட்டணம் செலுத்துவதற்கும், தெரு விளக்குகள் பராமரிப்பதற்கும் செலவிடப்படுகிறது. மின்திறன் மேம்பாடு, நீடித்த தன்மை மற்றும் திறம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்திட ஊரக பகுதியில் உள்ள அனைத்து குழல் தெரு விளக்குகளையும் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றிட அரசு முடிவு செய்தது.

[2017 ஜூன் 20

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையில் விதி 110-ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள 17.06 இலட்சம் குழல் தெரு விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையின்மூலம் இந்தியாவில் ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து குழல் தெரு விளக்குகளையும் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றும் மாபெரும் திட்டத்தை மேற்கொள்ளும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

2.14.2 மின் இணைப்புகளை முறைப்படுத்துதல்

மின் நுகர்வினை திறம்பட மேலாண்மை செய்யும் வகையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஒருங்கிணைப்போடு அனைத்து நிலைகளிலும் பல தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக கீழ்க்காணும் மும்முனை உத்திகள் பின்பற்றப்பட்டன:

- அனைத்து மின் இணைப்புகளையும் ஒழுங்குபடுத்தி மின் மீட்டர்கள் பொருத்துதல்.
- கிராம ஊராட்சி நிருவாகத்திற்கு தொடர்பில்லாத மின் இணைப்புகளை பயன்பாட்டு துறைக்கு மாற்றுதல்.
- கிராம ஊராட்சிகளுக்கு தொடர்புடைய பயன்பாட்டில் இல்லாத மின் இணைப்புகளை துண்டித்தல்.

மேற்கண்ட நடவடிக்கைகளினால் கிராம ஊராட்சி நிருவாகத்திற்கு தொடர்பில்லாத 22,587 மின் இணைப்புகளுக்கு ஊராட்சிகளினால் மின் கட்டணம் செலுத்துவது தவிர்க்கப்பட்டது, 713 மின் இணைப்புகளுக்கு புதிய மீட்டர்கள் பொருத்தப்பட்டன. மேலும் 12,617 பயன்பாட்டில் இல்லாத மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

2.14.3 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறையின் இயங்குதள வழங்கிகளை (Server) ஒருங்கிணைத்தல்

மின் நுகர்வு கட்டண விவரங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் ஊரக வளர்ச்சி துறையின் இயங்குதள வழங்கியும்

2017 ஜூன் 20]

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இயங்குதள வழங்கியும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த இயங்குதள வழங்கிகளை ஒருங்கிணைத்தன்மூலம் மின் இணைப்புகள் வாரியான தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் கேட்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் இணையதளத்தில் பிரதிபலிப்பதால் கிராம ஊராட்சி அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் மின் கட்டணங்களை ஒத்திசைவு செய்வது எளிமையாக உள்ளது. இனி வரும் காலங்களில் புதிய மின் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் அதற்கான படிவம் ஊரக வளர்ச்சி துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, புதிய மின் இணைப்புகளை பெற வழிவகை செய்யப்படும்.

2.15 சுகாதாரம்-கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுத்தத்தினைப் பேணிக் காத்தல்.

ஊரகப் பகுதிகளை சுத்தமான நிலையிலும் தூய்மையாகவும் வைத்திருப்பது கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன:

i) *தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.*

ii) *கழிவு நீர்க்கால்வாய் கட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை முறையாக வெளியேற்றுதல்.*

iii) *குப்பை குவியல்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.*

iv) *பொதுக் கழிப்பிடங்களைப் பராமரித்தல்.*

v) *சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.*

vi) *பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல்,*

ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை பராமரித்திட 2013-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட 16,726 கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் உட்பட தற்போது மொத்தம் 26,622 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் மாநில அரசு திட்டங்களை ஒருங்கிணைத்து திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 65,988 பணியாளர்கள் தூய்மை காவலர்களாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2.16 ஊரகப் பகுதிகளில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள்

ஊரகப் பகுதிகளை சுத்தமாக பராமரித்து, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் ஊராட்சி நிறுவனங்கள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து செயல்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய்களைத் தடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i) அனைத்து வகையான தொடர்பு சாதனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள்மூலம் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, பொது மக்களிடையே தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

iii) ஒட்டுமொத்த துப்புரவு நடவடிக்கைகள்மூலம் குப்பைகளை அகற்றி அனைத்து பகுதிகளும் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

iv) அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெறும் நோயாளிகளின் பட்டியலை தினந்தோறும் சுகாதாரத் துறையிடமிருந்து பெற்று, கள அளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

v) சுகாதாரத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களிடையே ஒருங்கிணைப்பு கூட்டம் முறையாக நடத்தப்பட்டு வருகிறது.

vi) தீவிர கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில் மஸ்தூர்கள் தேர்வு செய்து, வட்டார மருத்துவ அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிய ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

2017 ஜுன் 20]

2.17 விருப்புரிமைப் பணிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 111-ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றிட வேண்டும்.

i) *மரங்களை நட்டு பாதுகாத்தல்.*

ii) *குடியிருப்பு இல்லாத பொது இடங்கள் மற்றும் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்*

iii) *சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்*

iv) *விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை ஒழுங்குபடுத்துதல்.*

v) *வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.*

vi) *விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள், உடற்பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.*

2.18 நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் வரி, வரியில்லா வருவாய் மற்றும் மானியம்மூலம் வருமானம் பெறுகின்றன.

2.18.1 வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன.

i) *வீட்டு வரி / சொத்து வரி*

ii) *தொழில் வரி*

iii) *விளம்பர வரி*

i) வீடு / சொத்து வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172 மற்றும் அரசாணை எண் 255, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 13-12-1999-ன்படி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2017 ஜூன் 20

ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. பொது கட்டடங்கள் மற்றும் அரசு கல்வி நிலையங்களுக்கு இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டு முதல் அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.9

2016-2017 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம்

(ரூபாய் கோடியில்)

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	வீட்டு வரி ரூ. கோடியில்	சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்து வரி ரூ. கோடியில்	மொத்தம் ரூ. கோடியில்
1.	காஞ்சிபுரம்	35.80	3.16	38.96
2.	திருவள்ளூர்	15.50	2.32	17.82
3.	கடலூர்	7.79	0.55	8.34
4.	விழுப்புரம்	6.16	0.47	6.63
5.	வேலூர்	5.40	1.44	6.84
6.	திருவண்ணாமலை	5.81	0.74	6.55
7.	சேலம்	5.84	2.18	8.02
8.	நாமக்கல்	3.09	2.09	5.18
9.	தருமபுரி	1.90	0.39	2.30
10.	கிருஷ்ணகிரி	5.74	0.44	6.18
11.	ஈரோடு	6.57	1.45	8.02
12.	திருப்பூர்	7.66	0.49	8.15
13.	கோயம்புத்தூர்	15.49	1.79	17.28
14.	நீலகிரி	2.47	0.11	2.58
15.	தஞ்சாவூர்	8.65	0.72	9.36
16.	நாகப்பட்டினம்	3.04	0.37	3.41
17.	திருவாரூர்	2.66	0.16	2.83
18.	திருச்சிராப்பள்ளி	6.93	1.14	8.07
19.	கரூர்	4.73	0.56	5.29
20.	பெரம்பலூர்	1.88	0.65	2.54

2017 ஜூன் 20]

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	வீட்டு வரி ரூ. கோடியில்	சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்து வரி ரூ. கோடியில்	மொத்தம் ரூ. கோடியில்
21.	அரியலூர்	4.25	0.24	4.50
22.	புதுக்கோட்டை	4.59	0.80	5.39
23.	மதுரை	8.01	0.65	8.66
24.	தேனி	2.59	0.25	2.84
25.	திண்டுக்கல்	7.93	0.61	8.53
26.	இராமநாதபுரம்	5.39	0.30	5.70
27.	விருதுநகர்	8.23	0.79	9.02
28.	சிவகங்கை	4.46	0.28	4.73
29.	திருநெல்வேலி	5.54	0.36	5.90
30.	தூத்துக்குடி	4.15	0.27	4.42
31.	கன்னியாகுமரி	3.23	0.45	3.68
	மொத்தம்	**211.48**	**26.22**	**237.70**

ii) தொழில் வரி

கிராம ஊராட்சிகள் தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198 B-ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும் உரிமை உள்ளது. தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திடவும் வகை செய்கிறது. அதன்படி 2016-17 ஆம் ஆண்டில் ரூ.104.00 கோடி தொழில் வரி வசூலிக்கப்பட்டது.

அட்டவணை 2.10
மாவட்ட வாரியான தொழில் வரி விவரம் - 2016-2017

(ரூபாய் கோடியில்)

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	வசூல்
1.	காஞ்சிபுரம்	11.93
2.	திருவள்ளூர்	6.55
3.	கடலூர்	2.75
4.	விழுப்புரம்	5.40
5.	வேலூர்	5.85
6.	திருவண்ணாமலை	4.43

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	வசூல்
7.	சேலம்	3.54
8.	நாமக்கல்	2.24
9.	தருமபுரி	1.79
10.	கிருஷ்ணகிரி	3.34
11.	ஈரோடு	2.13
12.	திருப்பூர்	1.72
13.	கோயம்புத்தூர்	5.57
14.	நீலகிரி	0.58
15.	தஞ்சாவூர்	3.18
16.	நாகப்பட்டினம்	2.05
17.	திருவாரூர்	3.12
18.	திருச்சிராப்பள்ளி	3.93
19.	கரூர்	2.03
20.	பெரம்பலூர்	0.86
21.	அரியலூர்	2.35
22.	புதுக்கோட்டை	2.55
23.	மதுரை	2.64
24.	தேனி	1.69
25.	திண்டுக்கல்	3.42
26.	இராமநாதபுரம்	3.62
27.	விருதுநகர்	5.05
28.	சிவகங்கை	2.60
29.	திருநெல்வேலி	3.26
30.	தூத்துக்குடி	2.56
31.	கன்னியாகுமரி	1.27
மொத்தம்		104.00

iii) விளம்பர வரி

தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994, பிரிவு 172, 220 மற்றும் 242-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் தகுதி பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சி (உரிமம் வழங்குதல் மற்றும் வரி விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதி 1999-ன்படி ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட

2017 ஜூன் 20]
வேண்டிய ஒரு ஆண்டிற்கான குறைந்த மற்றும் அதிகபட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வகை செய்கிறது.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிருவாக அலுவலர் ஆண்டு கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

2.18.2 வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) *மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்*

ii) *அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்*

iii) *சந்தைக் கட்டணம்*

iv) *குடிநீர் கட்டணம்*

v) *வண்டி நிலையங்களுக்கான கட்டணம்*

vi) *சமூகக் காடுகள் ஏலம்*

vii) *மீன்பாசி குத்தகை*

viii) *2சி பட்டா கட்டணம்*

ix) *சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்*

x) *படகுக் குழாம்மூலம் பெறப்படும் கட்டணங்கள்*

xi) *அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை.*

xii) *கனிமம் மற்றும் சுரங்க உரிம தொகை*

i) மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997-ல் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 3-ன்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் முன் அனுமதியுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும். மனைப்பிரிவு அனுமதிக்கான விண்ணப்பம் கிராம ஊராட்சித் தலைவரிடம் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர், அவ்விண்ணப்பத்தை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு தொழில்நுட்ப அனுமதிக்காக பரிந்துரைக்க வேண்டும். விண்ணப்பதாரரால் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்பளிப்பு செய்திட வேண்டிய பொது உபயோகத்திற்கான திறந்த வெளி இடம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால் மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில் கிராம ஊராட்சித் தலைவரால் மனைப்பிரிவுகளுக்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 4-ன்படி குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி கிராம ஊராட்சித் தலைவரால் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 4,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம். இவ்வரம்பிற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியுடன் கட்டட வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட சில கிராம ஊராட்சிகள், சென்னை பெருநகரப் பகுதிக்குள் 1975-ம் ஆண்டு முதல் கொண்டு வரப்பட்டு, மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபட அனுமதிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக்கூடிய தொழில்களுக்கான உரிமங்களை கிராம

2017 ஜூன் 20]

ஊராட்சிகள் வழங்குகின்றன. அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய பொருட்கள் தொடர்புடைய தொழில் அல்லது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 159-ல் தெரிவித்துள்ள இயந்திரங்களைக் கொண்டு புதிய தொழில் தொடங்கவோ அல்லது புதுப்பிக்கவோ விரும்பும் விண்ணப்பதாரர், தொடர்புடைய கிராம ஊராட்சியில் விண்ணப்பித்திட வேண்டும்.

அதன்படி 2016-2017-ம் ஆண்டில் 2,47,747 வணிக நிறுவனங்களுக்கு கிராம ஊராட்சிகளில் தொழில் தொடங்க / புதுப்பிக்க உரிமம் வழங்கப்பட்டதுடன் உரிமக் கட்டணமாக ரூ.12.42 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

iii) குடிநீர் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சிகள் குடிநீர் கட்டணம் விதிக்கின்றன. தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு பிணையத் தொகை ரூ.1,000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக் கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி, 2016-17-ம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக ரூ.75.49 கோடி வசூலிக்கப்பட்டது. மாவட்ட வாரியான குடிநீர் கட்டண விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.11

2016-2017 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வாரியான குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்ட விவரம்

(ரூபாய் கோடியில்)

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	வசூல்
1.	காஞ்சிபுரம்	2.87
2.	திருவள்ளூர்	2.28
3.	கடலூர்	1.44
4.	விழுப்புரம்	0.34
5.	வேலூர்	4.35
6.	திருவண்ணாமலை	2.70
7.	சேலம்	1.98
8.	நாமக்கல்	1.68
9.	தருமபுரி	0.25
10.	கிருஷ்ணகிரி	0.27

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	வசூல்
11.	ஈரோடு	1.83
12.	திருப்பூர்	3.62
13.	கோயம்புத்தூர்	8.33
14.	நீலகிரி	0.14
15.	தஞ்சாவூர்	6.01
16.	நாகப்பட்டினம்	1.04
17.	திருவாரூர்	2.34
18.	திருச்சிராப்பள்ளி	6.01
19.	கரூர்	2.55
20.	பெரம்பலூர்	0.89
21.	அரியலூர்	1.69
22.	புதுக்கோட்டை	1.23
23.	மதுரை	1.78
24.	தேனி	3.38
25.	திண்டுக்கல்	2.39
26.	இராமநாதபுரம்	2.00
27.	விருதுநகர்	3.08
28.	சிவகங்கை	1.94
29.	திருநெல்வேலி	2.10
30.	தூத்துக்குடி	1.26
31.	கன்னியாகுமரி	3.72
	மொத்தம்	75.49

2.18.3 மானியம்

i) மாநில நிதிக் குழு மானியம்

73-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 198-ன்படி, தமிழ்நாட்டில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் வரம்பெல்லைகள் மற்றும் வரையறைகளாவன:-

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள்மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.

2017 ஜூன் 20]

2. *ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.*
3. *மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.*
4. *ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.*

தமிழ்நாடு அரசு ஆணை எண் 350 நிதித் துறை நாள் 23-04-2014-ன்மூலம் தமிழகத்தில் "முதல் மாநில நிதிக் குழு" ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில நிதிக் குழு அமைத்த முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட இதுவரை ஐந்து மாநில நிதி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2.19 முதல் மாநில நிதி ஆணையம்

முதல் மாநில நிதி ஆணையம் 1997-98 முதல் 2001-2002 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. முதல் மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மாநில நிதிக் குழு மானிய தொகையை ஊரக மற்றும் நகர்புற அமைப்புகள் 55:45 என்கிற விகிதத்தில் பகிர்ந்துகொள்ள அரசு ஆணை (நிலை) எண் 225 நிதி (வருவாய் இனங்கள்) துறை நாள் 2-5-1997 மூலம் உத்தரவிடப்பட்டது. ஊரக உள்ளாட்சிகளுக்கான 55 விழுக்காடு முறையே கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றிற்கு 45:45:10 என்கிற விகிதத்தில் முறையே பகிர்வு செய்யப்பட்டது.

2.20 இரண்டாவது மாநில நிதி ஆணையம்

இரண்டாவது மாநில நிதி ஆணையம் 2002-2003 முதல் 2006-2007 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய மானிய தொகையானது முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி ஆகியவற்றிற்கு 8:45:47 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்க அரசு ஆணை எண்284, நிதி (நி.கு iv) துறை நாள் 12-08-2002-ல் உத்தரவிடப்பட்டது.

2.21 மூன்றாவது மாநில நிதி ஆணையம்

மூன்றாவது மாநில நிதி ஆணையம் 2007-2008 முதல் 2011-2012 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. மூன்றாவது மாநில நிதிக்

குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 9 சதவீதம், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58:42 என்கிற விகித அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகையானது கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றிற்கு முறையே 60:32:8 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்க அரசு ஆணை (நிலை) எண் 199 நிதி (நி.கு.iv)துறை நாள் 25-5-2007 மூலம் உத்தரவிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

2.22 நான்காவது மாநில நிதி ஆணையம்

நான்காவது மாநில நிதி ஆணையம் 2012-13 முதல் 2016-17 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. இப்பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நான்காவது மாநில நிதி ஆணைய பரிந்துரைகளில் கீழ்க்கண்டவை முக்கியமானவைகளாகும்:

அ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58:42 என்ற விகிதத்தில் பகிர்வு மானியம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60:32:8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இ) 2013-2014 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டது.

ஈ) கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கீட்டின்படி ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை, ஆதி திராவிடர்/பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் 60:20:20 என்ற விகிதத்தில் நிதி விடுவிக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2011-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 100 விழுக்காடு நிதி விடுவிக்கப்படுகிறது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.30 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டது.

2017 ஜூன் 20]

2.23 ஐந்தாவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்த ஐந்தாவது மாநில நிதி ஆணையம், 2017-2018 முதல் 2021-2022 வரையிலான காலத்திற்கு தனது பரிந்துரையை டிசம்பர் 2016-ல் அளித்தது. ஐந்தாவது மாநில நிதிக் குழு பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி சட்டமன்றப் பேரவையில் 24-3-2017 அன்று வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்காணும் முக்கிய பரிந்துரைகளின்மீது அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்தியில் நிலையான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8:37:55 ஆகும்.

ஈ) 2017-18-ம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுக்குகளுக்கிடையேயான மாநில நிதிக் குழு மானியத் தொகை பகிர்வு கீழ்க்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

1.	2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை	60%
2.	பரப்பளவு	15%
3.	ஆதி திராவிடர்/ மலைவாழ் மக்கள் தொகை	15%
4.	தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி	10%

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் 10 விழுக்காடு தொகையினை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2017-2018-ம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் அரசு ரூ.5159 கோடி ஊரக உள்ளாட்சியில் அமைப்புகளுக்கு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

2.24 மூலதன மானிய நிதி

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த இதில் 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், நிதித் துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர் செயலர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்பிற்கு இடையேயான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினால் வெளியிடப்படும் அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2.25 பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டுமொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினைக் கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி

2017 ஜூன் 20]

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 40 விழுக்காடு தொகை அதாவது ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒட்டுமொத்த பகிர்மான நிதியில் 4 விழுக்காடு, கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். இதில் 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாவட்ட ஊராட்சிகளுக்கு, மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இத்தொகையினை மானியமாக வழங்க வேண்டும். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டு குடிநீர் திட்டத்திலுள்ள பற்றாக்குறையினைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

2.26 கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

உள்ளூர் சுயாட்சி அமைப்பான கிராம ஊராட்சிகள் உள்ளூர் குடிமக்களுக்குத் தேவையான அடிப்படை சேவைகளை வழங்குவதோடு ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் பாதிப்பை சரி செய்யும் பொறுப்புள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 240-ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஓர் ஆண்டு வளர்ச்சித் திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் தயார் செய்திட வேண்டும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டமிடல், நியாயமான, வெளிப்படையான மற்றும் தரமான வகையில் நிதி மற்றும் பிற வளங்களை பயன்படுத்துவதை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும். அதற்கிணங்க 14-வது நிதிக் குழு மானியத்தை அடித்தள அளவிலான திட்டமிடல் அடிப்படையில் பயன்படுத்திட அரசாணை எண் 34 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை நாள் 2-3-2016-ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2.27 மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது நிதி ஆணைய குழு கிராம ஊராட்சிகளுக்கு அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் ஆகிய இரு மானியங்களை பரிந்துரை செய்துள்ளது. மொத்த மானிய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மானியமாகும். 10 விழுக்காடு செயலாக்க மானியமாகும். 2015-16 முதல் 2019-20-ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு விவரம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது;

அட்டவணை 2.12

மத்திய நிதி ஆணைய மானிய விவரம்

(ரூபாய் கோடியில்)

மானியம்	2015–16	2016–17	2017–18	2018–19	2019–20	மொத்தம் (2015–20)
அடிப்படை மானியம்	947.65	1312.19	1516.12	1753.87	2369.86	7899.69
செயலாக்க மானியம்	--	172.12	194.78	221.20	289.64	877.74
மொத்தம்	947.65	**1484.31**	**1710.90**	**1975.07**	**2659.50**	**8777.43**

i) 14-வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்

2015-16-ம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியத் தொகையாக ரூ.947.65 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதேபோன்று 2016-2017 ஆம் ஆண்டிற்கு ரூ.1312.19 கோடி நிதியினை மத்திய அரசு விடுவித்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள்தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்தவும் இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது. இத்தொகை மாநில அரசின் மானியத்தோடு இணைக்கப்பட்டு கிராம ஊராட்சியின் விருப்புரிமை பணிகளான அம்மா பூங்கா, உடற்பயிற்சி கூடம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஜூன் 20]

ii) 14-வது மத்திய நிதி ஆணைய செயலாக்க மானியம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்க தேவையான விரிவான நடைமுறைகள், செயல்பாட்டு அளவுகோல் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய ஊக்கத்தொகையின் அளவு உள்ளிட்ட அனைத்தையும் மாநில அரசே தீர்மானித்திட 14-வது நிதிக்குழு ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

1. கிராம ஊராட்சிகள் செயலாக்க மானியம் கோரும் ஆண்டின் முந்தைய இரண்டு ஆண்டுகளுக்கு மிகாத ஊராட்சி கணக்கு தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.

2. கிராம ஊராட்சிகளின் சொந்த வருவாய் முந்தைய ஆண்டைவிட அதிகரித்திருப்பது அத்தணிக்கை அறிக்கையில் பிரதிபலிக்க வேண்டும்.

கிராம ஊராட்சிகள் பதினான்காவது மத்திய நிதி ஆணைய செயலாக்க மானியம் பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசு ஆணை எண் 55 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை, நாள் 05-05-2016-ல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழ் எண் 117 நாள் 20-05-2016-ல் இதற்கான அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி செயலாக்க மானியம் பெற கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்க வேண்டும்:

1. சம்பந்தப்பட்ட ஆண்டுகளின் தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.

2. கிராம ஊராட்சியின் சொந்த வருவாய் முந்தைய ஆண்டை விட குறைந்தது 5 விழுக்காடு அதிகரித்து தணிக்கை அறிக்கையில் பிரதிபலிக்க வேண்டும்.

2015-16 ஆம் ஆண்டில் செயலாக்க மானியம் பெற தகுதியுடைய 6,482 கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசால் ரூ.172.12 கோடி அனுமதிக்கப்பட்டு, பெறப்பட்ட தொகை தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டது.

2.28 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் வருவாயினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. அதன்படி, 2016-2017 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.666.45 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டது.

i) 50 விழுக்காடு தொகையினை ரூ.333.23 கோடி நிதி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 மக்கள்தொகை அடிப்படையில் பிரித்தளிக்கப்பட்டது. அவ்வாறு ரூ.223.26 கோடி கிராம ஊராட்சிகளுக்கும், ரூ.109.97 கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரையறுக்கப்படாத நிதியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.333.22 கோடி குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களுக்காகவும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் (தாய்) 50:50 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.29 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், பாலங்கள், சாலைகள் போன்ற கட்டமைப்புப் பணிகளை செயல்படுத்துவதற்காக 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.166.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.30 கிராம ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

2.30.1 அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் நிலையான அலுவலக கட்டடங்கள் உள்ளன. இருப்பினும்

2017 ஜுன் 20]

நீண்டநாள் பயன்பாட்டிற்குப் பின் பழுதடைந்த கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி மற்றும் மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் ஆகியவற்றின்கீழ் 2011-12 முதல் 2014-15-ம் ஆண்டு வரை ரூ.128.75 கோடி செலவில் 1,481 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிதி/மாநில அரசு நிதியைக் கொண்டு பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்பு பணிகளும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 2011-12-ம் ஆண்டு முதல் 2014-15-ம் ஆண்டு வரை ரூ.64.64 கோடி செலவில் 6,561 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 12524 கிராம ஊராட்சி சேவை மையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் பொது சேவை மைய பயன்பாட்டிற்காக அளிக்கப்பட்டுள்ளது.

2.30.2 கணினி மற்றும் இணைய வசதிகள்

மக்களாட்சியின் அடித்தள அலகான கிராம ஊராட்சிகள் தொழில்நுட்ப ரீதியிலும் வலுப்பெறும் வகையில் 12,524 கிராம ஊராட்சிகளிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. கிராம ஊராட்சிகளில் அகன்ற அலைவரிசை இணையதள வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.31 ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5000 மக்கள்தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின்மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

அட்டவணை 2.13

கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை
10- மற்றும் அதற்கு குறைவாக	23
11 முதல் 20 வரை	80
21 முதல் 30 வரை	80
31 முதல் 40 வரை	83
41 முதல் 50 வரை	65
51 மற்றும் அதற்கு அதிகமாக	54
மொத்தம்	385

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம் பின்வருமாறு:-

அட்டவணை 2.14

மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

வ.எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை	ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை	ஊரக பரப்பளவு (ச.கிமீ)	ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ)
1.	காஞ்சிபுரம்	13	633	49	3,851.45	296.27
2.	திருவள்ளூர்	14	526	38	2,859.84	204.27
3.	கடலூர்	13	683	53	2,942.24	226.33
4.	விழுப்புரம்	22	1,099	50	6,509.43	295.88
5.	வேலூர்	20	743	37	4,022.30	201.12
6.	திருவண்ணாமலை	18	860	48	4,826.27	268.13
7.	சேலம்	20	385	19	4561.41	228.07
8.	நாமக்கல்	15	322	21	3,119.43	207.96
9.	தருமபுரி	8	251	31	4,407.43	550.93

2017 ஜூன் 20]

வ.எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை	ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை	ஊரக பரப்பளவு (ச.கிமீ)	ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ)
10.	கிருஷ்ணகிரி	10	333	33	4,965.73	496.57
11.	ஈரோடு	14	225	16	2,626.99	187.64
12.	திருப்பூர்	13	265	20	4,545.50	349.65
13.	கோயம்புத்தூர்	12	228	19	2,534.24	211.19
14.	நீலகிரி	4	35	9	1,170.39	292.60
15.	தஞ்சாவூர்	14	589	42	3,657.67	261.26
16.	நாகப்பட்டினம்	11	434	39	2,400.31	218.21
17.	திருவாரூர்	10	430	43	2,322.69	232.27
18.	திருச்சிராப்பள்ளி	14	404	29	4,028.00	287.71
19.	கரூர்	8	157	20	2,656.25	332.03
20.	பெரம்பலூர்	4	121	30	1,609.54	402.39
21.	அரியலூர்	6	201	34	1,710.17	285.03
22.	புதுக்கோட்டை	13	497	38	4,433.78	341.06
23.	மதுரை	13	420	32	3,183.18	244.86
24.	தேனி	8	130	16	1,159.89	144.99
25.	திண்டுக்கல்	14	306	22	4,401.34	314.38
26.	இராமநாதபுரம்	11	429	39	4,116.19	374.20
27.	விருதுநகர்	11	450	41	3,282.08	298.37
28.	சிவகங்கை	12	445	37	3,075.90	256.33
29.	திருநெல்வேலி	19	425	22	4,283.06	225.42
30.	தூத்துக்குடி	12	403	34	4,260.78	355.07
31.	கன்னியாகுமரி	9	95	11	626.14	69.57
மொத்தம்		385	12,524	33	1,04,149.61	270.52

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிருவாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112-ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவைகள் பின்வருமாறு:

[2017 ஜூன் 20

1. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

2. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

3. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்

4. தொற்றுநோய் பரவாதவண்ணம் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114-ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

2.32 நிதி

1. ஊராட்சி ஒன்றிய குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.

2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட/ பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை.

3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள்தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்தபட்ச மானியம், ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு மானியங்களாக வழங்கப்படுகிறது. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையில குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2017 ஜுன் 20]

2.33 ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

2.33.1 அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினை கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011-12-ம் ஆண்டு முதல் 2015-16-ம் ஆண்டு வரை ரூ.148.25 கோடி செலவில் 78 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2016-17 ஆம் ஆண்டில் ரூ. 28.35 கோடி மதிப்பீட்டில் 10 புதிய ஊராட்சி ஒன்றிய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கோள்ளப்பட்டுள்ளது.

2.33.2 கணினி மற்றும் இணையதள வசதிகள்

அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கூடிய கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2.33.3 ஊராட்சி ஒன்றிய சேவை மையம்

வட்டார அளவில் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதற்கும் வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையான இணையதள பரிமாற்றங்களை மேற்கொள்ளவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2013-14-ம் ஆண்டில் ரூ.32.81 கோடி மதிப்பீட்டில் 120 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதேபோல, 2014-15-ம் ஆண்டில் ரூ.45.28 கோடி மதிப்பீட்டில் 150 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுக்கப்பட்டன.

2.34 நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துக்களில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு:

அட்டவணை 2.15

மாவட்ட வாரியாக சிறுபாசன கண்மாய்கள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்

வ.எண்	மாவட்டம்	சிறுபாசன கண்மாய்கள்	ஊரணிகள்/ குட்டைகள்	மொத்தம்
1.	காஞ்சிபுரம்	1,100	1,240	2,340
2.	திருவள்ளூர்	649	2,059	2,708
3.	கடலூர்	254	2,304	2,558
4.	விழுப்புரம்	1,257	3,551	4,808
5.	வேலூர்	633	854	1,487
6.	திருவண்ணாமலை	1,250	2,027	3,277
7.	சேலம்	242	375	617
8.	நாமக்கல்	152	422	574
9.	தருமபுரி	555	628	1,183
10.	கிருஷ்ணகிரி	1,172	1,211	2,383
11.	ஈரோடு	19	597	616
12.	திருப்பூர்	10	1,434	1,444
13.	கோயம்புத்தூர்	9	709	718
14.	நீலகிரி	0	225	225
15.	தஞ்சாவூர்	63	3,131	3,194
16.	நாகப்பட்டினம்	0	3,979	3,979
17.	திருவாரூர்	0	3,602	3,602
18.	திருச்சிராப்பள்ளி	1,406	705	2,111
19.	கரூர்	108	388	496
20.	பெரம்பலூர்	477	1,615	2,092
21.	அரியலூர்	138	753	891
22.	புதுக்கோட்டை	3,824	1,795	5,619
23.	மதுரை	1,029	3,233	4,262
24.	தேனி	26	319	345
25.	திண்டுக்கல்	1,577	1,000	2,577
26.	இராமநாதபுரம்	818	2,499	3,317
27.	விருதுநகர்	300	1,730	2,030
28.	சிவகங்கை	2,776	4,156	6,932
29.	திருநெல்வேலி	769	769	1,538
30.	தூத்துக்குடி	397	1,148	1,545
31.	கன்னியாகுமரி	599	300	899
	மொத்தம்	21,609	48,758	70,367

2017 ஜூன் 20]

2.35 மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24-ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல்மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, சம்பந்தப்பட்ட துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

2.35.1 செயல்பாடுகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிருவாக அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.

3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதி (குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய வீட்டு வசதி திட்டங்களை) திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்

5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

2.35.2 நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் 8 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

2.35.3 மாவட்ட திட்டக் குழு

மாவட்டத் திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74-வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்டத் திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையிலான விவரங்களைப் பெறுதல்.

2017 ஜூன் 20]

2. *தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்*

3. *மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.*

4. *மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.*

5. *மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.*

6. *வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.*

7. *மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.*

8. *மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.*

மேலே விவரிக்கப்பட்ட பணிகளை தவிர 5-வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி 80% மூலதன மாநில நிதி பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வது மாவட்ட திட்டக்குழுவின் பொறுப்பாகும். மூலதன மாநில நிதியில் 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்பிற்கு இடையேயான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினால் வெளியிடும் அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2.36 மாவட்ட ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

மாநில அளவில் 31 மாவட்ட ஊராட்சிகளுக்கும் சொந்த கட்டடங்கள் உள்ளன. 31 மாவட்ட ஊராட்சிகளிலும் கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2017 ஜூன் 20

2.37 விருதுகள்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளன.

2.37.1 ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் விருதினை ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது என மாற்றி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் 6 கிராம ஊராட்சிகளுக்கும் 2 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கும் விருதுடன் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. விவரங்கள் வருமாறு:

ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது 2015–16 மாவட்ட ஊராட்சி	
வ.எண்	மாவட்ட ஊராட்சியின் பெயர்
1.	கோயம்புத்தூர்

ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது 2015 – 16 வட்டார ஊராட்சி		
வ.எண்	மாவட்ட ஊராட்சியின் பெயர்	வட்டார ஊராட்சியின் பெயர்
1.	சேலம்	எடப்பாடி
2.	திருவண்ணாமலை	பெரணமல்லூர்

ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது 2015 – 16 கிராம ஊராட்சி			
வ.எண்	மாவட்ட ஊராட்சியின் பெயர்	வட்டார ஊராட்சியின் பெயர்	கிராம ஊராட்சியின் பெயர்
1.	கடலூர்	அண்ணா கிராமம்	அகரம்
2.	வேலூர்	வாலாஜா	திருப்பாற்கடல்
3.	சேலம்	பி என் பாளையம்	சி.கே.உறில்ஸ் வடக்கு நாடு
4.	நீலகிரி	கோத்தகிரி	கொடநாடு
5.	திருச்சி	மணச்சநல்லூர்	இருகளூர்
6.	கரூர்	கடவூர்	தென்னிலை

2.37.2 ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது

வலுவான கிராம சபையின்மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது.

2015-16-ம் ஆண்டிற்கான விருதிற்கு ஈரோடு மாவட்டம் நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எம்மபூண்டி கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து விருதுடன் ரொக்கப்பரிசும் வழங்கியுள்ளது.

3. மாநில அரசுத் திட்டங்கள்

3.1. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தமிழக அரசின் சிறப்புமிக்க முயற்சியான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், கிராமப்புற ஏழை மக்களின் வீட்டு வசதி தேவைகளை பூர்த்தி செய்வதோடு பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதால், இத்திட்டமானது "அனைவருக்கும் வீடு" திட்டத்திற்கு முன்னோடியாக உள்ளது. விலையில்லா வீடு வழங்கும் இத்திட்டத்தின்கீழ் 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

நாட்டிலேயே இதுபோன்ற விலையில்லா வீடு வழங்கும் திட்டத்தில், 300 சதுர அடி பரப்பளவு மற்றும் சூரிய மின்சக்தி கொண்ட வீடுகள் வேறெங்கும் வழங்கப்படவில்லை. இத்திட்டமானது பயனாளிகள் நலன் கருதியே உள்ளதாலும் மற்றும் இதர குடியிருப்புத் திட்டங்களைக் காட்டிலும் அலகுத் தொகை கூடுதலாக உள்ளதாலும் தமிழக மக்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டம் மேலும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு, ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களின் நலனுக்காக 2016-2017 முதல் அடுத்த ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 20,000 வீடுகள் வீதம் 1 இலட்சம் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் (ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.30,000 சூரிய மின்சக்தி விளக்கு அமைப்பதற்கும்) கட்டப்படும். கட்டுமான பணிகளுடன் சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணிகளும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையாலேயே மேற்கொள்ளப்படும்.

3.1.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- *ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் மாநில அரசின் முழுமையான நிதி உதவியால் கட்டப்படுகிறது.*

2017 ஜூன் 20]

- *ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை தாழ்வாரம் ஆகியவற்றுடன் மழைநீர் சேகரிப்பு அமைப்பும் கொண்டிருக்கும்.*
- *ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகள், படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றில் தலா ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். பயனாளிகளின் விருப்பத்தின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மீட்டர் அளவீடுடன் கூடிய மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*
- *ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.2.10 இலட்சம் ஆகும். இதில் ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும் ரூ.0.30 இலட்சம் சூரிய சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.*
- *பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்கு சொந்தமான இடங்களில் கட்டப்பட வேண்டும்.*

3.1.2 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

- *ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையுடன் கூடுதலாக மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு பயனாளிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து தினக்கூலி அடிப்படையில் 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.*
- *மேலும் பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும்.*

3.1.3 பயனாளிகளின் தகுதிகள்

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்:

- *சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும், ஏழ்மை நிலையிலும் இருக்க வேண்டும்.*

- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.

- குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டும்.

- தொடர்புடைய கிராமத்தில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.

- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

3.1.4 பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறை

- இத்திட்டத்தின்கீழ் பயனாளிகள் ஏழை மக்களிலிருந்து தேர்வு செய்யப்படுவர். புது வாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தால் தயார் செய்யப்பட்டுள்ள மக்களின் பங்கேற்புடன் கண்டறியப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலிலிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

- மேற்படி பட்டியல் தயார் செய்யப்படும்போது நலிவுற்றவர்கள் என்று தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, அவை கிராம சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெற வேண்டும்.

- பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும்போது, கீழ்க்கண்ட நபர்களுக்கு, அதாவது மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊரகப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநரால் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் வழங்கப்பட்ட ஹெச்ஐவி/எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், தீ விபத்து, வெள்ளம் போன்ற

2017 ஜூன் 20]

இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

- *ஓராண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 20,000 வீடுகளில் 29 விழுக்காடு அதாவது 5,800 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், 1 விழுக்காடு அதாவது 200 வீடுகள் பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 70 விழுக்காடு அதாவது 14,000 வீடுகள் இதர இனத்தவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.*
- *மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.*
- *பயனாளிகள் தேர்வு, வீடுகள் ஒதுக்கீடு, கட்டுமானப் பொருட்கள் விநியோகம் மற்றும் இத்திட்டம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண் 60, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி-1) துறை நாள் 6-6-2017-ல் உள்ளது.*

3.1.5 முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்ட சாதனைகள்

மூன்று இலட்சம் பசுமை வீடுகள் ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் 2011-12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2016-17 ஆம் ஆண்டில் ரூ.420 கோடி மதிப்பீட்டில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 2017-18 ஆம் ஆண்டில் ரூ.420 கோடி மதிப்பீட்டில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்பட உள்ளன.

3.2 தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

தாய் திட்டம் - I

தமிழ்நாட்டில் மொத்தம் 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ளன. இருப்பினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு

அளித்தது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்றதாழ்வுகளையும் உருவாக்கியது. எனவே இந்த வேறுபாடுகளை களையும் வகையில் குக்கிராமங்களை அடிப்படை அலகாகக் கொண்டு ஆண்டிற்கு ரூ.750 கோடி வீதம் மாநில அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் (தாய்) 2011-12-ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம், 5 கட்டங்களாக 2011-12 முதல் 2015-16 வரை மொத்தம் ரூ.3,680 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள், சுடுகாடு / இடுகாடு மேம்பாடு, சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும், அங்கன்வாடி மையம், பொது விநியோகக் கடை, சுய உதவிக்குழு கட்டடம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் போன்ற கூடுதல் தேவைகளும் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளும் எடுத்து செயல்படுத்தப்பட்டன. மொத்தம் 2,31,807 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. எனவே, குக்கிராமங்களை அடிப்படை வளர்ச்சி அலகாக கொண்டு இம்முன்னோடித்திட்டத்தை செயல்படுத்தும் ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

தாய் திட்டம் II

இன்னும், ஒருபடி முன்னோக்கி செல்லும் பொருட்டு கிராம ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை நிலைத்த தன்மையுடன் உருவாக்கிடவும், மேம்பாடு செய்திடவும் தாய் திட்டம் 2016-17-ம் ஆண்டில் தாய் II திட்டமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

1. திட்ட செயலாக்கம்

2016-2017-ம் ஆண்டில் தாய் II திட்டம் ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தாய் II திட்டத்தின்கீழ் பணிகள் தெரிவு செய்தல் மற்றும் இறுதி செய்வதற்கு ஊராட்சி ஒன்றியம் / வட்டாரம் அலகு ஆகும்.

2. திட்டக் கூறுகள்

தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் "தாய் I" திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள

2017 ஜூன் 20]

நிலையில், 2016-17ம் ஆண்டில் "தாய் II" திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

1. *சிறுபாசன ஏரிகள் புனரமைத்தல்/மேம்படுத்துதல்*

2. *அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலைகள்.*

2.1 சிறு பாசன ஏரிகள் புனரமைத்தல்/மேம்படுத்துதல்

2016-17-ம் ஆண்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்110-ன் கீழ் 'தாய்-II' திட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள 1,200 சிறுபாசன ஏரிகள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் விரிவான முறையில் மேம்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

சிறுபாசன ஏரிகளில் சீரமைக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ள அடிப்படைக் கட்டமைப்புகளான நீர் வழிந்தோடிகள் மற்றும் மதகுகள் ஆகியவற்றை விரிவான முறையில் புனரமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் குக்கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாட்டினை களையவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், சிறுபாசன ஏரிகளின் முழு கொள்ளளவினை மீட்கவும், நீர்நிலைகளில் அதிகப்படியாக வழிந்தோடும் நீரினை தடுத்திடவும், குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கான நீரினை சேமித்து முறைப்படுத்தி தடையில்லா குடிநீர் விநியோகம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன்மூலம் கிராமப்புற விவசாயிகளின் நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

2016-17-ம் ஆண்டில் சிறுபாசன ஏரிகளில் உள்ள முட்புதற்களை அகற்றி இயந்திரங்களின் மூலம் ஏரிகளை தூர்வாரவும், மதகு மற்றும் கலங்கல்களை புதிதாக கட்டவும், பழுதுபார்த்திடவும், கரைகளை பலப்படுத்திடவும் விரிவான முறையில் சிறுபாசன ஏரிகளை புனரமைப்பு செய்திடவும் 1,200 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2 அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலைகள்

தாய் II திட்டத்தின்கீழ் குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள், ஆதி திராவிடர் காலனிகள், முக்கிய குடியிருப்புகள் அரசால் செயல்படுத்தப்படும் குடியிருப்புத் திட்டங்களின்கீழ், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பில் உள்ள

இடைவெளிகளைக் கண்டறிந்து நிறைவு செய்ய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், தெருக்கள் மற்றும் சந்துகள் மேம்படுத்துதல், சுடுகாடு மற்றும் இடுகாடு மேம்பாடு மற்றும் சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலைகள் ஆகிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தார் இடப்படாத சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துதல், சேதமடைந்த தார்ச்சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் தார்ச்சாலைகளை பராமரித்தல் போன்ற சாலைப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

3. திட்ட செயலாக்கம் 2016-17

- தாய் II திட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ரூ.300 கோடி மதிப்பீட்டில் 1,200 சிறுபாசன ஏரிகள் புனரமைத்தல்/மேம்படுத்துதல் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள், சுடுகாடு / இடுகாடு மேம்பாடு, சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் போன்ற 7,282 அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் ரூ.150 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.
- 1,369 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

3.3 அம்மா பூங்கா

முன்னுரை

ஊரகப் பகுதிகளிலுள்ள மக்களின் நலனுக்காக விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், விளையாட்டு மன்றங்கள் மற்றும் கலாச்சார மையங்கள் ஆகியவற்றை அமைத்தல் கிராம ஊராட்சியின் விருப்பக் கடமைகளில் (Discretionary duty) ஒன்றாகும்.

அதனடிப்படையில், 2016-17 ஆம் நிதியாண்டில் நகர பகுதிகளுக்கு இணையாக ஊரக பகுதிகளில் கேளிக்கை உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பூங்கா ஒன்றுக்கு ரூ.20 இலட்சம் வீதம் 500 அம்மா பூங்காக்கள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2017 ஜுன் 20]

அம்மா பூங்காக்கள் தெரிவு செய்தல் மற்றும் அதன் திட்டக்கூறுகள்

அம்மா பூங்காக்கள், ஆண்டு வருமானம் ரூ.20 இலட்சத்திற்கு மேலாகவும் மற்றும் 14-வது நிதிக்குழு மானியத்தின்மூலம் ரூ.20 இலட்சத்திற்கு மேலாக வருமானம் பெறக்கூடியதாகவும் உள்ள கிராம ஊராட்சிகளில் அமைக்கப்படும். அம்மா பூங்கா கிராம ஊராட்சிகளில் குடியிருப்புகளுக்கு நடுவில் சுமார் 15,000 முதல் 20,000 சதுர அடி வரை கிராம ஊராட்சிக்கு சொந்தமான நிலம் அல்லது ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளி பாதுகாக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்படும்.

அம்மா பூங்கா அமைக்கப்படும் புற நகரம் / நகரத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை மகிழ்விக்கும் வகையில் விளையாட்டு சாதனங்களுடன்கூடிய அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

அம்மா பூங்கா கீழ்க்கண்ட வசதிகளுடன் அமைக்கப்படும்:

அ) சிமெண்ட் கான்கிரீட் அல்லது பேவர் பிளாக் நடைபாதை

ஆ) LED விளக்குகளுடன் கூடிய ஒளி அமைப்புகள்.

இ) சிமெண்ட்/கிரானைட் பெஞ்சுகள் அல்லது எஃகினால் (Stainles steel) ஆன பெஞ்சுகள்.

ஈ) பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கான கழிப்பறை.

உ) குடிநீர் வசதிகள் மற்றும் தோட்டப் பராமரிப்பு, கழிப்பறைகளுக்கு தேவையான தண்ணீர் வசதி.

ஊ) விளையாட்டு பொருட்களுடன்கூடிய குழந்தைகள் விளையாடும் பகுதி.

எ) கொடிகளுடன் கூடிய நல்வரவு வளைவு மற்றும் வெளியே செல்லும் வழி.

ஏ) பாதுகாப்பு கம்பிகளுடன் (Grill or precast materials) கூடிய சுற்றுசுவர் வசதிகள்.

ஐ) தலைப்புகளுடன் கூடிய தகவல் மற்றும் அறிவிப்பு பலகைகள் உரிய இடங்களில் வைக்கப்படும்.

[2017 ஜூன் 20

ஒ) கூழாங்கல் நடைபாதை மற்றும் எட்டு வடிவிலான கூழாங்கல் நடைபாதை தேவையான இடங்களில் அமைக்கப்படும்.

3.4 அம்மா உடற்பயிற்சி கூடம்

முன்னுரை

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 111-ன்படி ஊரகப்பகுதியிலுள்ள மக்களின் நலனுக்காக உடற்பயிற்சி கூடங்கள், பூங்காக்கள், விளையாட்டு மன்றங்கள் மற்றும் கலாச்சார மையங்கள் போன்ற தேவையான வசதிகளை வழங்குதல் கிராம ஊராட்சியின் விருப்பக் கடமைகளில் (Discretionary Duty) ஒன்றாகும். அதனடிப்படையில், 2016-17 ஆம் நிதியாண்டில் ஊரக இளைஞர்களின் உடல் ஆரோக்கியத்தையும் மன வளத்தையும் மேம்படுத்த அம்மா உடற்பயிற்சி கூடம் ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் வீதம் ரூ.50 கோடி மதிப்பீட்டில், 1,161 சதுர அடி பரப்பளவில் 500 அம்மா உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

அம்மா உடற்பயிற்சி கூடத்தின் நன்மைகள்

- ஊரகப் பகுதி இளைஞர்கள் உடற்பயிற்சி செய்யவும், தங்களது உடலினை கட்டுக்கோப்பாக வைத்திருக்கவும் உதவுகிறது.
- ஊரகப் பகுதி மக்களின் சுகாதார உணர்வினை (Health consciousness) அதிகரிக்கிறது.
- இளைஞர்களின் மன உறுதியை மற்றும் ஒருமித்த உணர்வினை (Team spirit) வளர்க்கிறது.
- விளையாட்டு போட்டிகளுக்கு இளைஞர்களை தயார்படுத்துகிறது.

அம்மா உடற்பயிற்சி கூடம், அம்மா பூங்காவிற்குள் அமைக்கப்பட்டு கிராம ஊராட்சிகளால் பராமரிக்கப்படும்.

3.5 ஊரக உட்கட்டமைப்பு - சாலைகள்

சாலை இணைப்பு வசதி மற்றும் ஊரகச் சாலைகளின் நிலை ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஊரகச் சாலைகளின் மேம்பாடு ஊரக வளர்ச்சித்

2017 ஜூன் 20]

துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள பரந்த ஊரகச் சாலைகள் தொகுப்பினை பயன்படுத்தத்தக்க வகையில், ஏற்கெனவே உள்ள சாலைகளை பராமரிக்கவும் புதிய சாலைகள் அமைக்கவும், உகந்த அளவில் நிதியினை வழங்குவது இந்த அரசின் நோக்கமாகும்.

ஊரகச் சாலைகளின் ஒட்டுமொத்த தொகுப்பினுள், இணைப்பு வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலையினை ஏற்படுத்துதல், பேருந்து செல்லும் சாலைகள், சந்தைகள், கல்வி மற்றும் சுகாதார சேவைகளை இணைக்கும் முக்கிய இணைப்புச் சாலைகள் மேம்பாடு ஆகியவை இத்துறையின் முன்னுரிமைகளாகும்.

கடந்த 6 ஆண்டுகளில், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இத்துறையின் அணுகுமுறையை நன்கு வரையறுக்கும் அளவீடாக உள்ளது.

- *2011-12-ம் ஆண்டில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கையினை இத்துறை மேற்கொண்டது. ஒவ்வொரு சாலைக்கும் தனி சாலைக் குறியீடு* (Road code) *வழங்கப்பட்டு, அனைத்து கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் பட்டியல்* www.tnrd.gov.in *இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.*
- *2012-2013, 2013-2014 மற்றும் 2014-2015-ம் ஆண்டுகளில் தாரிடப்படாத சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்திட இத்துறை விரிவான மேம்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் முன்னுரிமைச் சாலைகளை திட்ட வடிவில் மேம்பாடு செய்வதை உறுதி செய்துள்ளது.*
- *2015-16-ம் ஆண்டில், அனைத்து வகையான சாலைகளை மேம்பாடு செய்யவும், தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு வழங்கவும், பல்வேறு வகையான சாலைத் திட்டங்களை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற உள்ளடக்கிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.*
- *2016-17-ம் ஆண்டில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பிற்காக விரிவான*

செயல்பாட்டு வழிமுறைகள் வடிவமைக்கப்பட்டது. இது சாலைப் பணிகளின் சரியான திட்டமிடல் மற்றும் செயல்பாட்டிற்கு வழிவகை செய்துள்ளது.

ஊரகச் சாலைகள் தொகுப்பு

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மார்ச் 2017 வரையிலான புதுப்பிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

அட்டவணை 3.1.

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்

வ. எண்	மேற்பரப்பு வகை	கிராம ஊராட்சி சாலைகள்	ஊராட்சி ஒன்றிய சாலைகள்	மொத்தம்
		நீளம் (கி.மீ)		
1.	தார் சாலை	67,900	29,195	97,095
2.	சிமெண்ட் சாலை	2,942	304	3,246
3.	ஈரடுக்கு கப்பிசாலை	2,356	355	2,711
4.	ஓரடுக்கு கப்பிசாலை	6,742	435	7,177
5.	சரளைக்கல் சாலை	6,024	278	6,302
6.	மண்சாலை	31,110	1,131	32,241
	மொத்தம்	1,17,074	31,698	1,48,772

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிப்பது, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும். இந்த அரசு, பெருகி வரும் ஊரகச் சாலைகள் தொகுப்பின் மேம்பாட்டிற்கு பல்வேறு மாநில மற்றும் மத்திய திட்டங்களின் வாயிலாக தொடர்ந்து நிதியுதவி வழங்குகிறது.

அரசாணை எண் 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-II) துறை நாள் 3-9-2015-ன் வாயிலாக, அரசு, ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கைக்கு அனுமதி அளித்து, அதற்கு ரூ.200 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கையினை செயல்படுத்துவதற்காக, இதற்கான செயல்பாட்டு வழிமுறைகளுக்கு, அரசாணை எண் 140, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-II) துறை நாள் 24-11-2016-ன் வாயிலாக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2017 ஜூன் 20]

கடந்த 6 ஆண்டுகளில், 62,999 கி.மீ. நீளம் என்ற அளவிலிருந்த தார்ச்சாலைகள் 97,095 கி.மீ. நீளமாக அதிகரித்துள்ளது. இது 50%-க்கும் அதிகமானதாகும்.

ஊரகச் சாலைகளுக்கு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொடர் முயற்சிகள் மேற்கொண்டபோதிலும், மண்சாலைகள் தொடர்ந்து அதிகரித்துள்ளது, 2011-ஆம் ஆண்டில், 12,731 கி.மீ. ஆக இருந்த மண் சாலைகளின் நீளம் 32,241 கி.மீ. என கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அளவிற்கு அதிகரித்துள்ளதே இதற்கு சான்றாகும்.

இந்த பின்னணியில், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் திட்டங்களில் சில நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த இத்துறை உத்தேசித்துள்ளது.

i. *வட்டார அளவில், அனைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளும் பல்வேறு பயன்பாட்டு காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும்.*

ii. *ஒவ்வொரு நிதியாண்டிற்கும், வட்டார அளவிலான சாலை ஆண்டு வரவு செலவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் வாயிலாக ஊரகச் சாலைகளை மேம்படுத்தவும், பராமரிக்கவும், கால வரையரையுடனான திட்டம் வகுக்கப்படும்.*

iii. *ஊரகச் சாலைகளின் தொடர் பராமரிப்பு தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கை மற்றும் செயல்பாட்டு வழிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படும்.*

iv. *புதிய சாலை மேம்பாட்டுப் பணிகள், சாலை வகைப்பாட்டின் அடிப்படையில் சரியான முறையில் தேர்வு செய்யப்படும்.*

v. *மாற்று தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் மண்சாலைகளை மேம்பாடு செய்வது ஊக்குவிக்கப்படும். இதன் வாயிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த, குறைந்த செலவிலான அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகள் உருவாக்கப்படும்.*

3.6 தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS)

கடந்த 2015-16 ஆம் ஆண்டில், பல்வேறு சாலைத் திட்டங்களை இணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மாநில நிதியளிப்பின்மூலம் ரூ.800 கோடி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

i. இத்திட்டம் மூன்று பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், ஏற்கெனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் ஏற்கெனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை புதுப்பித்து பராமரித்தல் ஆகியவை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

ii. மாவட்டங்களில் உள்ள பல்வேறு வகையான சாலைகளை தேவையின் அடிப்படையில் தேர்வு செய்ய போதிய நெகிழ்வுத்தன்மையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் அளிக்கிறது.

அட்டவணை - 3.2

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

வ. எண்	ஆண்டு	எண்ணிக்கை	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூ.கோடியில்)
1.	2015-16	2,386	4,225	800
2.	2016-17	2,563	4,650	800
மொத்தம்		4,949	8,875	1,600

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017-18-ம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.7 நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD-RIDF)

விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் சாலை இணைப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன், அரசு, நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி

2017 ஜூன் 20]

நிதி மூலமாக ஊரகச் சாலை மேம்பாட்டிற்கு தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

கடந்த 6 ஆண்டுகளில், 6,042.50 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் 127 பாலங்கள் ரூ.1,500.61 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 6 ஆண்டுகளில், நபார்டு திட்டத்தின்கீழ் ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் பின்வருமாறு-

அட்டவணை 3.3

கடந்த 6 ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் (2011-12 முதல் 2016-17 வரை)

வ. எண்	ஆண்டு	எண்ணிக்கை	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	2011-12	958	2,598.65	451.77
2.	2012-13	381	1,000.46	198.07
3.	2013-14	185	367.63	100.00
4.	2014-15	615	1,183.03	339.61
5.	2015-16	232	369.92	160.20
6.	2016-17	300	522.81	250.96
	மொத்தம்	2,671	6,042.50	1,500.61

அட்டவணை 3.4

திட்ட வாரியாக கடந்த 6 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் (2011-12 முதல் 2016-17 வரை)

வ.எண்	திட்டத்தின் பெயர்	நீளம் (கி.மீ)	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்	9,723.97	1,487.54
2.	தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	8,875.72	1,600.00

வ.எண்	திட்டத்தின் பெயர்	நீளம் (கி.மீ)	மதிப்பு (ரூ. கோடியில்)
3.	நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி	6,042.50	1,500.61
4.	பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்	4,045.19	1,876.74
5.	ஊரக உட்கட்டமைப்பு திட்டம்	4,318.92	616.67
6.	பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	1,399.28	300.00
7.	பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச்சாலை அமைத்தல்	429.87	37.50
8.	மாநில நிதிக் குழு மானியம்	1,552.46	304.30
9.	ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம்	1,211.46	412.22
10.	13வது நிதிக் குழு மானியம்	6,573.13	622.00
11.	ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்	3,649.19	381.07
12.	சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	1,399.79	226.31
13.	பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	823.93	134.81
14.	இதர திட்டங்கள்	6,358.56	1,536.41
	மொத்தம்	56,403.97	11,036.18

தரக் கட்டுப்பாடு

ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப் பணிகளுக்கும் தரக்கட்டுப்பாடு என்பது ஒரு அடிப்படை கோட்பாடாக கருதப்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறை பணிகளைக் கண்காணிக்க, அகநிலை தரக்கட்டுப்பாட்டு மற்றும் தனிப்பட்ட மூன்றாந்தரப்பு தரக்கட்டுப்பாட்டு தணிக்கை முறை ஆகியவை இணைந்த ஒரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. மேலும், உள்தரக்கட்டுப்பாட்டு அமைப்பை வலுப்படுத்த இத்துறை சீரான தொடர் முயற்சிகளை எடுத்து வருகிறது. ஏற்கெனவே உள்ள மாவட்ட தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுடன் சேர்த்து

2017 ஜூன் 20]

மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்று திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. களப்பொறியாளர்களுக்கு தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகள் குறித்த செய்முறைப் பயிற்சி அளிக்க, 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. புதிய முயற்சியாக, இத்துறை 5 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடங்களை நிறுவியுள்ளது. இது மாவட்ட அளவில் உள்ள தரக்கட்டுப்பாட்டு செயல்முறைகளை மேம்பாடு செய்வதில் இன்னொரு மைல் கல்லாகும்.

மேலும், இத்துறைமூலம், 120 உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அவர்களின் திறனை மேம்படுத்தவும், புதிய நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணையாக அவர்களை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாகவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள், முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் என 1,612 பொறியாளர்களுக்கு தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் (IMTI) துவாக்குடி, திருச்சியில் சிறுபாசன ஏரிகளைப் புனரமைத்தல் குறித்து சிறப்பு பயிற்சி, மொத்தம் ரூ.59.38 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது. இது தவிர, 110 பொறியாளர்களுக்கு இந்திய நெடுஞ்சாலைப் பொறியாளர் கழகம் (IAHE), புதுடெல்லி மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிலையம், ஹைதராபாத் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு தொழில்நுட்ப முயற்சிகள்

பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச் சாலைகள் அமைப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பினை ஊக்குவிக்கும் வகையில் அரசு 2011 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி மையங்கள் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்தது. பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி நபார்டு, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ஊரக உட்கட்டமைப்புத் திட்டம், ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம், 13-வது நிதிக் குழு மானியம் மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ்,

இதுவரை 11,575 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.1,625 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ், ஊரக வளாச்சித் துறை சிமெண்ட்டின்மூலம் நிலைப்படுத்துதல், மண் நிலைப்படுத்துதல், தென்னை நார், பிளாஸ்டிக் கழிவுகள், மிக நுண்ணிய தொழில்நுட்பம், தார் குளிர்கலவை தொழில்நுட்பம் போன்ற பல்வேறு மாற்றுத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தியுள்ளது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் பகுதி-VIII, IX மற்றும் X-ன்கீழ் 886 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.445.99 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

சொத்து உருவாக்கம் மற்றும் மேலாண்மை

ஊரக வளர்ச்சித் துறை, ஊரகப் பகுதிகளில் பல்வேறு நோக்கங்களை பூர்த்தி செய்யும் வகையில் பலவகையான தனிநபர் மற்றும் பொது பயன்பாட்டு உட்கட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. இக்கட்டமைப்புகளின் திட்ட வடிவமைப்புகள், இக்கட்டமைப்புகளைப் பயன்படுத்துவோரின் தன்மைகள், செயல்பாட்டுத் தேவைகள் மற்றும் செலவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பள்ளிக் கட்டடங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான அலுவலக கட்டடங்கள் மற்றும் பொது கழிப்பிடக் கட்டடங்கள் போன்ற 28 வகையான கட்டடங்களுக்கு மாதிரி வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரி வடிவமைப்புகள், அவ்வப்போது தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சித் துறையின் வடிவமைப்பு அலகின் மூலமாக மேம்படுத்தப்படுகிறது அல்லது மாற்றி அமைக்கப்படுகிறது. மேலும், ஊரக வளர்ச்சித் துறையில் கட்டப்படும் உயர் மதிப்புக் கட்டடங்களின் கட்டுமான வடிவமைப்பினை சரிபார்க்கும் பொறுப்பும் இத்துறையின் வடிவமைப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்துறைக்கு சொந்தமான பொது சொத்துகளை புவிசார் அமைப்புமூலம் நிருவகிப்பதற்காக இத்துறை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த தொலை உணர்வு நிலையத்துடன் (IRS) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த புவிசார் தகவல் அமைப்பில் குக்கிராமங்கள், சாலைகள், நீர் நிலைகள்

2017 ஜூன் 20]

ஆகியவற்றின் வெளிசார்ந்த தகவல்கள் இருக்கும். இது ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தில் உள்ள புவிசார் அமைப்பு அலகின் 3 உதவிப் பொறியாளர்கள்மூலம் கண்காணிக்கப்படுகிறது.

3.8 ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இந்த அரசு "ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" எனும் திட்டத்தை 2011-12-ம் ஆண்டு துவங்கியது. ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான புதிய கட்டடங்கள், சமையல் அறை, குடிநீர்வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், இத்திட்டம் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்படுகிறது; அவை புதிய வகுப்பறை அல்லது கான்கிரீட் கூரைகளுடன்கூடிய கூடுதல் கட்டடங்களாக அமைத்துத் தரப்படுகின்றன. உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளும் வகையில் கூடுதல் அறைகளுடன்கூடிய புதிய சமையல் அறைக் கட்டடங்களும் கட்டித் தரப்படுகிறது. அவசியமான இடங்களில் தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது மற்றும் தேவைப்படும் இடங்களில் புதிய குடிநீர் இணைப்புகளும் வழங்கப்படுகிறது.

சுத்தமான சூழ்நிலையை அமைக்கவும், சுகாதார பழக்க வழக்கங்களை சிறுவர், சிறுமியர்களிடையே ஏற்படுத்தவும், அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியாக கழிப்பறைகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

திட்ட செயலாக்கம் 2011-12 முதல் 2015-16 வரை

2011-12 முதல் 2015-16 வரை இத்திட்டத்திற்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்தம் 48012 பணிகள் ரூ.497.29 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.5

ஆண்டு வாரியான பணிகளின் விவரம்:

வ. எண்	பணிகளின் விவரம்	பணிகளின் எண்ணிக்கை					மொத்தம்
		2011–12	2012–13	2013–14	2014–15	2015–16	
I. புதிய பணி							
1.	பள்ளி கட்டடம்	155	58	113	84	152	562
2.	சமையல் கூடம்	1049	618	232	107	41	2047
3.	கழிப்பறை	847	523	563	375	302	2610
4.	குடிநீர் வழங்கல்	2217	893	1267	924	455	5756
5.	சுற்றுச் சுவர்	9	1191	544	1108	571	3423
துணை மொத்தம்		4277	3283	2719	2598	1521	14398
II. பழுதுபார்ப்பு பணிகள்							
1.	பள்ளி கட்டடம்	1228	2063	3536	4590	4664	16081
2.	சமையல் கூடம்	1397	1189	1099	839	652	5176
3.	கழிப்பறை	3516	2534	2686	2024	1597	12357
துணை மொத்தம்		6141	5786	7321	7453	6913	33614
பெரு மொத்தம்		10418	9069	10040	10051	8434	48012

திட்ட செயலாக்கம்-2016-17

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2016-17-ன்கீழ் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் மொத்தம் 6,138 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

3.9 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.2 கோடி ஆகும்.

2017 ஜூன் 20]

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிருவாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்கத் துறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.10 கோடியில் குடிநீர் பணிகள் மட்டுமே எடுத்துச் செய்யப்பட வேண்டும். வரையறுக்கப்படாத கூறு நிதி ரூ.90 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பணிகளை தேர்வு செய்யலாம்.

வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.10 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்: (2017-18 ஆம் ஆண்டில் குடிநீர் திட்டப் பணிகள் மட்டும்)

2016-ம் ஆண்டில் தமிழ்நாட்டில், வடகிழக்கு பருவமழை வழக்கத்தைவிட 62 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளதன் காரணமாக முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் வறட்சி நிலவுவதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததோடு, குடிநீர் ஆதாரங்களில் நீர் இருப்பும் வறண்டுவிட்டது. எனவே, சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யவும் குடிநீர் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ரூ.1.10 கோடியில் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த முன்னுரிமை ஒதுக்கீடு 2017-18-ம் ஆண்டுக்கு மட்டும் பொருந்தும்.

வரையறுக்கப்படாத தொகையான ரூ.90 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

வரையறுக்கப்படாத கூறு நிதியினை, "எதிர்மறை பட்டியல்/ தடை செய்யப்பட்ட பணிகள்" தவிர பிற எந்தப் பணிகளையும் மேற்கொள்ள பயன்படுத்தலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.90.00 இலட்சத்தில் இருந்து மேற்கொள்ளலாம். பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள் பட்டியல்:

1. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத் துறை நிறுவனங்கள் உட்பட), கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும்

சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல். விதிவிலக்கு:- i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல். ii) அரசாணை நிலை எண் 179, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள் 19-12-2013-ன்படி, மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல். iii) மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர் மற்றும் கான்க்ரீட் தளம் அமைத்தல்.

2. தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துகளை உருவாக்குதல். (விதிவிலக்கு:- பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)-ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்.)

3. அனைத்து வகையான புதுப்பித்தல் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் மற்றும் பணிகள் மேற்கொள்ளுதல். விதிவிலக்கு:- அரசுத் திட்டங்களின்கீழ் 31-12-2007 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு, தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மிகாமல் பழுது நீக்கம் செய்தல். இவ்வாறு, வீடுகளை பழுது நீக்கம் செய்யும் பணிகளை எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்:-

விதிவிலக்கு: i) 2016-17-ம் ஆண்டில் 15-வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14-வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் 15-வது சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser/Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை

2017 ஜூன் 20]

இணையதள இணைப்பு வசதி (Broadband/Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் அவ்வாறு கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2017-18-ம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை எண் 95, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை நாள் 18-8-2016-ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல். ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். iii) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். iv) போலியோ மற்றும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல். v) உடற்பயிற்சி / ஜிம்னாசிய கூடத்தில் (physical fitness centre/ Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipment) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

5. அரசு நிதி உதவிபெறும் பள்ளிகள், அரசு நிதி உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

6. அனைத்து வணிக நிறுவனங்கள்/அலகுகள் குறித்த பணிகள்.

7. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/ குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்.

13. சரளை/கப்பி சாலைகள் (தார்ச் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

14. உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

2016-17 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்

2016-17 ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.470 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன:

அட்டவணை - 3.6

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

வ.எண்	பணிகள்	பணிகளின் எண்ணிக்கை
1.	கட்டடங்கள்	2002
2.	சாலைகள்	2074
3.	குடிநீர் வழங்கல்	2506
4.	வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள்	950
5.	இதர பணிகள்	1926
	மொத்தம்	**9458**

இத்திட்டத்தின்கீழ் 2017-18 ஆம் ஆண்டில் ரூ.470 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017 ஜூன் 20]

3.10 தன்னிறைவுத் திட்டம்

ஊரகப் பகுதி மக்களிடையே சுயசார்பு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டம் 2011-12-ம் ஆண்டு முதல் அரசால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. சுயசார்பு மற்றும் சுய உதவி மனப்பான்மையை ஊக்குவித்து மக்கள் தங்களது தேவையை தங்களின் பங்கேற்புடன் செயல்படுத்துவதற்கான திட்டமே தன்னிறைவுத் திட்டமாகும். மக்களின் உணரப்பட்ட தேவைகள் இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகிறது. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் தேர்வு செய்யப்பட்ட பணியின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் பங்களிப்பு செய்யவேண்டும்.

பணிகளை தேர்வு செய்தல்

1) *தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் பெருநிறுவனங்கள் அல்லது சமூக அமைப்புகள் மூலமாக உருவாகலாம்.*

2) *தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பமும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.*

3) *மாவட்ட ஆட்சித் தலைவர், மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து பரிசீலனை செய்வார். பணியின் தேவை நிறைவு அளிக்கும்பட்சத்தில், திட்டப் பணியினை மேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.*

4) *உள்ளாட்சி அமைப்பு, பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

5) பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதி, நிருவாக அனுமதி வழங்குவதற்கு முன் பெறப்படவேண்டும்.

6) உருவாக்கப்படும் சொத்துகள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின்கீழ் இருக்கவேண்டியிருப்பின், அச்சொத்துகளை உருவாக்க, உள்ளாட்சி அமைப்பு/ துறையின் ஒப்புதலை பெறவேண்டும்.

7) இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு போதுமானதாக இல்லாத நிலையில் பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள், மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

பணிகளை நிறைவேற்றுதல்

சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பெரிய அளவிலான மக்கள் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. பொது மக்களின் பங்களிப்பு, மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ அப்பணியை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் மற்றும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீராதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் மேலாக பொதுமக்களின் பங்களிப்புத் தொகை இருப்பினும், ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

2011-12 முதல் 2015-16 வரையிலான திட்ட செயல்பாடு

2011-12 முதல் 2015-16 வரை மொத்தம் 10,781 சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க சொத்துகள் ரூ.454.74 கோடி அரசு மானியம்

மற்றும் ரூ.248.86 கோடி பொதுமக்கள் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ளன.

திட்ட செயலாக்கம் - 2016-17

தன்னிறைவுத் திட்டம் 2016-17-ன்கீழ் மொத்தம் 708 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

திட்ட செயலாக்கம் - 2017-18

2017-18-ம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.11 முழு சுகாதார தமிழகம்

சமூக, பொருளாதார மற்றும் சுகாதார குறியீடுகளில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மக்களுக்கு தீமை ஏற்படுத்தும் பழக்கமான திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அமைந்துள்ளது. எனவே, அனைத்து பங்கேற்பாளர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைமூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கத்தினை களைவது என்பது அவசியமாகிறது. அதனடிப்படையில் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற "முழு சுகாதார தமிழகம்" என்ற குறிக்கோளை அடைய அனைத்து பங்கேற்பாளர்களையும் மக்கள் இயக்கமாக ஒருங்கிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில அரசின் முன்முயற்சிகள்

மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் மேற்கொள்ளும்பொருட்டு ஊராட்சிக்கு ஒன்று வீதம், அப்போது இருந்த 12,618 கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் 2001-04 வரையிலான காலத்தில் கட்டப்பட்டன. முழுமையான சுகாதாரத்தை எய்துவதற்கான தாக்கத்தினை ஏற்படுத்தும்பொருட்டு, 2003 ஆம் ஆண்டு, தூய்மையான கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட அப்போது இருந்த அலகுத் தொகை குறைவாக இருந்ததால், 2012-13 ஆம் ஆண்டில் மாநில அரசின் கூடுதல் பங்குத் தொகையாக கழிப்பறை ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் வழங்கப்பட்டது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதைப் போன்று, 2012-13 ஆம் ஆண்டு

ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தப்படுதல் என்பது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறப்பான உத்தியாக அமைந்துள்ளது. தமிழகத்திலுள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில், “தூய்மைக் காவலர்கள்” அறிமுகப்படுத்தியதன்மூலம் மேற்படி கிராமங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுவதை தெளிவாக உணர முடிவதுடன் அது வெளிப்படையான ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரகப் பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் சுகாதார வசதிகளை தொடர்ந்து பராமரித்திட தேவையான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளி கழிப்பறைகள் சுத்தமாக பராமரிப்பதுடன் அவை பயன்பாட்டில் உள்ளதையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் இந்த அனைத்து முன்முயற்சிகளும் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கின்றன.

3.12 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல்

2001-2004 ஆம் ஆண்டுகளில், மகளிருக்கான சுகாதார வளாகங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சுமார் 750 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டது. ஒவ்வொரு வளாகத்திலும் 14 கழிப்பறைகள், 2 குளியலறைகள், 1 விசைப்பம்பு அறை, 1 தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கும் மேடை ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டன. குளிக்கவும், துணி துவைக்கவும், தேவையான தண்ணீர் வசதியும் ஏற்படுத்தப்பட்டது. தண்ணீர் வசதி மற்றும் விளக்குகளுக்கு தேவையான மின் வசதியைக் கிராம ஊராட்சிகள் செய்து கொடுக்கின்றன. ஒவ்வொரு வளாகத்திலும் நாப்கின்களை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்திட எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பயன்படுத்தாமல், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2011-12ம் ஆண்டு ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சுகாதார வளாகங்களின்

2017 ஜுன் 20]

தொடர் பராமரிப்பினை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளும், தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களும் மேற்கொள்கின்றன.

3.13 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்

மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்து கொடுத்தது போன்ற சுகாதார வசதிகள் அமைத்துக் கொடுக்குமாறு ஊரகப் பகுதிகளிலுள்ள ஆடவர்கள் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில், 2012-13 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு வளாகமும், 570 சதுர அடி பரப்பளவில் 8 கழிப்பறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. இதில் முதியோர் / மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு நவீன கழிப்பறையும், இளம் சிறார்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் குழந்தை நேயக் கழிப்பறையும் (Baby Friendly Toilet), தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் மேடை ஆகியவை உள்ளடக்கியதாகவும் அமைக்கப்படுகிறது. இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவதுபோல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பு பயன்படுத்துவோர் குழுக்களால் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில், இதுவரை 1,199 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.

3.14 தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியினை உருவாக்கும் முனைப்பில், 2003 ஆம் ஆண்டில் “தூய்மையான கிராம இயக்கம்” என்ற திட்டம் இந்த அரசால் தொடங்கப்பட்டது. தனிநபர் சுகாதாரத்தை மேம்படுத்துவதுடன், சுற்றுச் சூழல் மாசுபடாமல் பாதுகாப்பாக கழிவுகளை அப்புறப்படுத்தச் செய்வதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் விருது தொகை ரூபாய் 5 இலட்சம் பெற பரிந்துரை செய்ய தகுதியானதாகும்.

2006-ம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம் 2011-12 ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு, 31 கிராம

[2017 ஜூன் 20

ஊராட்சிகளுக்கும் ஒரு ஊராட்சிக்கு ரூ.5 இலட்சம் என்ற அடிப்படையில் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

3.15 தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் அரசினால் மேற்கொள்ளப்படும் உத்திகள்

தமிழ்நாட்டை திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலம் என்ற குறிக்கோளை அடைய பல்முனை உத்திகளை மேற்கொண்டு, அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து, மக்கள் இயக்கமாக சுகாதார எழுச்சி உருவாக்கி, அதன்மூலம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் வேரறுக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சி அளவில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடுதல், நடைமுறைபடுத்துதல் மற்றும் அதன் பயன்பாட்டை கண்காணித்தல் மற்றும் ஊக்கத்தொகை அளித்தல் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டி நெறிமுறைகளின் நோக்கமானது, திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே ஒழிக்க, பல்வேறு பங்கேற்பாளர்களான ஊராட்சி அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பல்வேறு அரசுத் துறைகளின் களப்பணியாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் ஆகியோரை ஈடுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

மேற்குறிப்பிட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள், கிராம ஊராட்சி அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் ஈடுபாட்டுடன், சுகாதார மேம்பாட்டில் இணைந்துள்ள பங்கேற்பாளர்களை விரிவடையச் செய்து உரிய நோக்கத்தினை அடையும் முயற்சிகள் வலுப்பெற்றுள்ளது. தற்போது திறந்தவெளியில் மலம் கழிக்கும் குடும்பத்தினர், கழிப்பறையைக் கட்டிப் பயன்படுத்திட, நேர்முக தகவல் பரிமாற்றம் (Inter-Personal communication) மற்றும் தகவல் தொடர்பினால், அவர்களின் பழக்க வழக்கத்தை மாற்றம் செய்வது சாத்தியம் ஆகும். எனவே, சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைய பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர்.

2017 ஜூன் 20]

இத்திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல்படுத்திட வசதியாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன:

(அ) சமுதாய மூலதனத்தை பயன்படுத்துதல்:

தமிழ்நாட்டின் மாபெரும் சமுதாய மூலதனம், மாநிலத்தில் சிறப்பாக செயல்படும் பெண்கள் சுய உதவிக் குழு அமைப்புகளே ஆகும். எனவே, தமிழகத்தை திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை விரைவாக எய்த மகளிர் திட்டம்/புது வாழ்வு திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளை சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள், முழு சுகாதார தமிழகம் என்ற சுகாதாரத்தை மேம்படுத்தும் நேர்முக தகவல் பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(ஆ) சுகாதாரத்தோடு தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்தல்:

திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம், சிறார்களின் உடல் வளர்ச்சிக்கும் மற்றும் மன வளர்ச்சிக்கும் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, அவர்களுக்கு இரத்த சோகை மற்றும் குடற்புழு தொற்று ஏற்படுவதற்கும் மூல காரணமாக அமைந்துள்ளது. எனவே, திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கமுடைய மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவது என்பது மிக முக்கியமானதாகும். அதன்மூலம் மட்டுமே திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற நிலையை அடைவதுடன், அவர்கள் தொடர்ந்து கழிப்பறை பயன்படுத்தும் பழக்கத்தை தக்க வைக்க இயலும். எனவே, பல்வேறு இதர துறைகளின் பங்கேற்பாளர்கள் மூலமாகவும் சுகாதாரம் குறித்த தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதின் மூலமாகவே இந்த நோக்கம் சாத்தியமாகும். மேற்படி வழியில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக்கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய அரசு துறைகளின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள்மூலம் செயலாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(இ) ஊக்குவிப்பாளர்களை ஈடுபடுத்துதல்:

சமூக அணுகுமுறையில் பயிற்சி அளிக்கப்பட்ட ஊக்குவிப்பாளர்கள் (Motivators) கிராம சமுதாயத்தை தூண்டுதல்

(Triggering) மூலம் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடையவும், கழிப்பறை பழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்து அந்நிலையை தக்க வைக்கும் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த ஊக்குவிப்பாளர்கள், பெரும்பாலும் சுய உதவிக் குழுக்கள்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து கண்டறியப்படுகிறார்கள். திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சியாக மாற்ற இலக்கிடப்பட்ட கிராம ஊராட்சியில், சமூக அணுகுமுறையில் பயிற்சிபெற்ற, அதிகபட்சமாக இரண்டு ஊக்குவிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

(ஈ) தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி:

மாதிரி வடிவமைப்புகள் மற்றும் விரிவான மதிப்பீடு வழங்கப்பட்டதன்மூலம் கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை குறித்த குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு அனைத்து தொழில்நுட்ப பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறும்படத்தில் கழிப்பறை கட்டுமானத்தின் பல்வேறு மாதிரிகளான உறிஞ்சு குழி மாதிரி (தேன்கூடு வடிவமைப்பு மற்றும் வட்ட வடிவிலான உறை வடிவமைப்பு) மற்றும் கழிவுத் தொட்டி மாதிரி முதலியன குறித்து எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் காண்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படும் தொழில்நுட்பம் சார் பணியாளர் மற்றும் தொழில்நுட்பம் சாரா பணியாளர் ஆகிய இருதரப்பினரும் இதன்மூலம் பயனடைந்துள்ளனர். கழிப்பறை கட்டுமானம் குறித்து கொத்தனார்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(உ) ஊக்கத் தொகை விடுவித்தல்:

இத்திட்டத்தின்கீழ் பயனாளிக்கு இரண்டு தவணைகளில் நிதி விடுவிப்பதை விரைவுபடுத்த வேண்டி, பணி மதிப்பீட்டுச் சான்று அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம் தொழில்நுட்ப அலுவலர் (பணி மேற்பார்வையாளர்) அளவீடுகள் செய்யும் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், பணிப் பார்வையாளர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறை பணிகளை பார்வையிட்டு பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் பணி மதிப்பீட்டுச் சான்று வழங்குவார்கள். இதன்மூலம் தொகை விடுவிப்பு நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

2017 ஜூன் 20]

ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் அதிகபட்ச ஊக்க நிதியாக ரூ.300 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு இரண்டு கட்டமாக வழங்கப்படுகிறது. முதல் கட்ட ஊக்கத்தொகை ரூ.200, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டு தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு பயன்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக ரூ.100, மேற்படி கழிப்பறை ஒரு ஆண்டிற்கு மேல் தொடர்ச்சியாக பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்த பின்னர் விடுவிக்கப்படுகிறது.

(ஊ) கண்காணிப்பு:

கழிப்பறைகள் தரமான முறையில் கட்டுவதையும், அதன் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும் வட்டார, மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள்மூலம் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாநில தர கண்காணிப்பு அலுவலர்கள்மூலம் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து பிரத்யேகமாகவும் ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்படுகின்றனர்.

(எ) திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைதல்:

கிராம ஊராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைவதற்கு சமூக அணுகுமுறை விரிவாக பயன்படுத்தப்படுகிறது. திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற நிலையினை அடையும் கிராம ஊராட்சிகள் கிராம சபை கூட்டங்கள் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் அல்லது சிறப்பு கிராம சபை கூட்டங்களில், இது தொடர்பான அறிவிப்பினை செய்வதுடன் தொடர்ந்து அதே நிலை நீடித்திட தீர்மானம் இயற்றப்படுகிறது. மேற்படி கிராம ஊராட்சியின் அறிவிப்பின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாவட்ட அளவிலான சரிபார்த்தலும் அதன் பிறகு மாநில அளவிலான சரிபார்த்தலும் நடத்தப்பட்டு, திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை அங்கீகாரம் மற்றும் உறுதி செய்யப்படும். 2015-16 மற்றும் 2016-17 ஆகிய ஆண்டுகளில், இதுவரை 5,738 கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக தாங்களாகவே அறிவிப்பு செய்துள்ளன.

3.16 ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

கிராம ஊராட்சிகள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் இருப்பதற்கு, அரசு தொடர்ந்து அதிக முன்னுரிமை அளித்து

வருவதுடன் கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான வசதிகளுடன்கூடிய முறையான திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஏற்படுத்த, விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. முதற்கட்டமாக, 10,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகள், நகர்ப்புறத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மற்றும் புனிதத்தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய தொழிற்சாலைகள்/வணிக அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் செயல்படும் கிராம ஊராட்சிகள் ஆகிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தன்மைகள் கொண்ட கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு, ரூ.110 கோடி மதிப்பீட்டில் 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், மாநகராட்சி ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், மாவட்ட தலைநகரங்கள் உள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் 300 குடும்பங்களுக்கு மேலாக உள்ள கிராம ஊராட்சிகள் போன்ற குறிப்பிட்ட தன்மைகள் உடைய கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு, ரூ.300 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் கட்டமாக 7,000 கிராம ஊராட்சிகளில் விரிவுபடுத்தப்பட்டது. பின்னர், இத்திட்டம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் உள்ள இதர 3,524 கிராம ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு

- பொதுவாக, ஒரு கிராம ஊராட்சியே இத்திட்டம் செயல்படுத்துவதற்கான அலகாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட குக்கிராமங்கள் இருப்பின் ஒரு குக்கிராமம் அல்லது குக்கிராமங்களின் தொகுப்பு இத்திட்டம் செயல்படுத்தும் அலகாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

- அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 300 வீடுகளுக்கு ஒரு மூன்று சக்கர மிதி வண்டி / தள்ளு வண்டி வீதமும், 900 குடும்பங்களுக்கும் கூடுதலாக உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கு கூடுதலாக ஒரு மூன்று சக்கர வண்டி/ தள்ளு வண்டி திடக் கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

2017 ஜூன் 20]

- *அனைத்து கிராம ஊராட்சிகளிலுள்ள ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் தெருவில் வைக்கும் குப்பைத் தொட்டி ஒன்று வீதமும், 7,500-க்கும் அதிகமாக மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சியில் உள்ள ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் கூடுதலாக ஒரு குப்பைத் தொட்டியும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.*

- *திட்ட நிதியிலிருந்து தூய்மைப்படுத்தத் தேவையான உபகரணங்கள், தூய்மைக் காவலர்களுக்கு மேல் சட்டை, கையுறை, தொப்பி, வெட்டும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகிறது.*

- *திடக்கழிவுகள், அப்புறப்படுத்துவதற்கு முன்பு அவை மக்கும் குப்பை* (Bio-degradable) *மற்றும் மக்காத குப்பைகளாக* (Non-Biodegradable) *பிரிக்கப்படுகிறது.*

- *மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், மக்கும் கழிவுகள்மூலம் உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகளும், மீதமுள்ள மீள மறுசுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகளை சேகரித்து வைப்பதற்கு ஒரு குழியும் தோண்டப்படுகிறது.*

- *கிராம ஊராட்சியில், 150 குடும்பங்களுக்கு ஒரு பணியாளர் வீதம் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் கழிவுகளை குழிகளில் இருந்து அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.*

- *இப்பணியாளர்களுக்கான ஊதியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே பணி வழங்க முடியும் என்பதால் குறிப்பிட்ட நிதியாண்டில், ஏற்கெனவே 100 நாட்கள் பணி முடித்த தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பதில், புதிய தொகுப்பு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் தூய்மைக்*

காவலர்களாக ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதேபோல, பணித்தள மேற்பார்வையாளர்கள், ஒவ்வொரு 100 நாட்களுக்கு பிறகு மாற்றப்படுகிறார்கள். இதன்மூலம் புதிய நபர்கள் மேற்பார்வை பணியில் அனுபவம் பெறுவதை உறுதி செய்யப்படுகிறது.

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவை, தூய்மைக் காவலர்களின் பணிகளை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

பயிற்சி திட்டங்கள்:

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் உள்ள அலுவலர்கள், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்கும் தகுந்த பயிற்சியும், திட்டம் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

கணக்குகளை பராமரித்தல்:

கிராம ஊராட்சிகள், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துகிறது. இத்திட்டத்திற்காக பெறப்படும் நிதியினை கண்காணிக்கவும், திட்டம் நீடித்து செயல்படுவதை உறுதி செய்யவும், கிராம ஊராட்சிகள் இதற்கென சேமிப்பு வங்கி கணக்கினை தனியாக பராமரிக்க வேண்டும். மக்கிய உரம், மண்புழு உரம், மறு சுழற்சி கழிவுகளை விற்பனை செய்வதன்மூலம் கிராம ஊராட்சிக்கு கிடைக்கும் வருமானத்தை, கிராம ஊராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட வங்கிக் கணக்கில் மட்டுமே செலுத்தப்படவேண்டும்.

சமூகத் தணிக்கை:

சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியைப் பொருத்தமட்டில், திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளுக்கான சமூக தணிக்கையை கிராம சபை மேற்கொள்ளும். இத்திட்டத்தின் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலும், ஆலோசனைக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும், அனைத்து செயல்பாடுகள் குறித்த வரவு-செலவுத் திட்டம் மற்றும் செலவினங்கள் ஆகியவை அனைத்து கிராம சபை கூட்டங்களிலும் வைக்கப்படவேண்டும்.

2017 ஜூன் 20]

பள்ளிக் கழிப்பறை பராமரித்தல்:

மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி, அவர்களது உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தை பேணுவதில் சுகாதார வசதிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊரக பகுதிகளிலுள்ள 28,031 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப/நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் 6,916 அரசு பள்ளிகளிலும் போதுமான அளவில், மாணவ, மாணவியருக்கு தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அரசு பள்ளிகளிலுள்ள பள்ளிக் கழிப்பறைகளைச் சுத்தமாக பராமரிப்பதற்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது இதர தனியார் நிறுவனங்கள் மூலமாக ஈடுபடுத்தப்படும் சுகாதார பணியாளர்களின் மாத ஊதியத்திற்கும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களையும் வாங்குவதற்கும் அரசால் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து 2015-16 மற்றும் 2016-17 ஆகிய ஆண்டுகளில், ரூ.84.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்கள் பள்ளிகளில், பெண் சுகாதார பணியாளர் மட்டுமே ஈடுபடுத்தப்படுகிறார்கள். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் இருமுறை கழிப்பறைகள் சுத்தம் செய்யப்படுகிறது.

பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதை கண்காணிப்பது, சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரின் பொறுப்பாகும். குறைந்தபட்சம் வாரத்தில் ஒருமுறை, கிராம ஊராட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதை பார்வையிட்டு ஆய்வு செய்வார்கள். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வட்டார வள மையத்தின் மேற்பார்வையாளர் மற்றும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்/ கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோர் இணைந்து ஒவ்வொரு காலாண்டும், பள்ளிக் கழிப்பறை சுத்தமாக பராமரிப்பது குறித்து பள்ளி தலைமை ஆசிரியர்களை ஆய்வு செய்வார்கள். மேலும், பள்ளிக் கழிப்பறை சுத்தமாக பராமரிப்பதை ஆய்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பள்ளிக் கல்வித் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையை சார்ந்த மாவட்ட அலுவலர்களை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மண்டல அலுவலர்களாக நியமனம் செய்துள்ளார்கள்.

[*2017 ஜூன் 20*

3.17 சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நக்சலைட்டுகளின் பிரச்சினைகளை தடுத்திடும் வகையில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003-04 ஆம் ஆண்டு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு முறையே தலா ரூ.700 இலட்சம் மற்றும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், வேளாண் கூலி விவசாயிகளுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் 2015-16 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டன.

2016-17 ஆம் நிதியாண்டிற்கும் இத்திட்டத்திற்காக ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. மத்திய திட்டங்கள்

4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2-2-2006-ல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு குறையாமல் வேலைவாய்ப்பினை அளிக்க இச்சட்டம் உறுதி செய்கிறது. ஊரகப் பகுதியில் வாழும் ஏழை மக்களுக்கு அடிப்படை உரிமையான 'சமத்துவ உரிமையை' உணர்ந்துகொள்ளும் விதமாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே "வேலை செய்யும் உரிமையை" உறுதிப்படுத்தும் சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதன்மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துகளை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்.

இ) சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2-2-2006-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் படிப்படியாக அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

4.1.1 திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1) ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள, பதிவு

செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்தல்.

2) 10 முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:
 i) வேலை அட்டை (Job Card) உரிமை
 ii) வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
 iii) வேலைவாய்ப்பில்லா படி பெறுவதற்கான உரிமை
 iv) பணிகள் தொகுத்தல் மற்றும் திட்டமிட்டு தயார்செய்தல்
 v) 5 கி.மீ.-க்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
 vi) பணிதளத்தில் அத்தியாவசிய தேவைகள் பெறுவதற்கான உரிமை
 vii) அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை
 viii) பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை
 ix) காலங்கடந்து ஊதியத்தொகை வழங்கியதற்கான இழப்பீடு
 x) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட அனைத்து செலவுகள், தொடர் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் துயர்தீர் நடவடிக்கைகள் எடுத்து உரிய காலத்திற்குள் பதிலளித்தல்.

3) கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகிறது. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

4) அனைத்து ஊராட்சிகள் (ம) முகமைகள்மூலம் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் (ம) பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.

5) ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.

6) திறன்சாரா உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், திறன்சாரா வேலையினை மேற்கொள்வதற்கான விருப்பத்தினை வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

7) ஊரகப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும் பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளது. ஒவ்வொரு 5 ஆண்டிற்கு ஒருமுறை புதிய வேலை அட்டை வழங்கப்படுகிறது.

8) அனைத்து ஊராட்சிகளிலும் தினசரி வருகைப்பட்டியல் இருப்பு பதிவேடு மற்றும் வேலை அட்டை வழங்கும் இருப்பு பதிவேடு ஆகிய 2 பதிவேடுகள் உட்பட, 9 புதிய பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

9) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வேலை முடிகிறது.

10) வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குமேல் இருக்கும்பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

11) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை I-ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன்கூடிய 8 மணி நேர பணியில் பெறக்கூடிய (அதாவது 7 மணி நேர வேலை) ஊதியத்திற்கு சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

12) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியல் தயாரித்து அரசாணை வெளியிடப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு நடவடிக்கைகள் அல்லது சிறப்பு விதிகள் மண் வேலை தொடர்பான பணிகளில் இருக்கவேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலாக வேலை வழங்கும் பொருட்டு, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை ஒரு தொகுப்பாக உருவாக்கி, கூடுதலாக பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

14) ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் நாளொன்றுக்கு ரூ.203 ஆகும். 2017-18 ஆம் ஆண்டுக்கு அறிவிக்கப்பட்ட ஊதியம் 1-4-2017-லிருந்து ரூ.205 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

15) 7-11-2016 முதல் தேசிய நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் ஊதியம் செலுத்தப்படுகின்றது.

16) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

17) வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படும்.

18) கிராம சபா கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

19) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" மூலம் கிராம சபை மேற்கொள்கின்றது.

20) குறைகளை தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லா தொலைபேசி சேவை (Toll free Helpline) "1299" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

4.1.2 அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

2017 ஜூன் 20]

அட்டவணை 4.1

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்

வகைப்பாடு – அ	வகைப்பாடு – ஆ	வகைப்பாடு – இ	வகைப்பாடு – ஈ
இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப் பணிகள்	நலிவுற்ற இனத்திற்கான தனிநபர் சொத்துக்கள் / பொது சொத்துக்களை உருவாக்குதல்.	பொது உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவிக் குழுக்கள் உட்பட.	ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்
• நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் • நீர் மேலாண்மைப் பணிகள் • சிறு மற்றும் குறு நீர்ப்பாசனப் பணிகள் • பாரம்பரிய நீராதாரங்களை சீரமைத்தல் • காடு வளர்ப்பு • மரக்கன்றுகள் நடுதல் • பழ மரக் கன்றுகள் நடுதல் • பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள்	• கிணறுகள் • பண்ணைக் குட்டைகள் • இதர நீராதாரப் பணிகள் • தோட்டக்கலை சார்ந்த பணிகள் பட்டு வளர்ப்பு மரக் கன்றுகள் நடுதல் மற்றும் காடு வளர்ப்பு • தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல் • மாநில அல்லது மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத்தினை மேற்கொள்ளல் • மாட்டுக் கொட்டகை, ஆட்டுக் கொட்டகை, கோழிக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, அமைத்தல் • கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்தல் • மீன் உலர் களம் • சேமிப்பு வசதிகள் • பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல் • தனி நபர் இல்லக் கழிப்பறைகள்	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட சுய உதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல்	• ஊரக சுகாதார பணிகள் • சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல் • விளையாட்டு மைதானம் அமைத்தல் • பேரழிவினை தடுக்கும் ஆயத்தப்பணிகள், சாலைகளை சீரமைத்தல் • வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் தடுப்புபணிகள் உட்பட பொது உட்கட்டமைப்பு பணிகள் • கிராம ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுதல் • மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல் • புயல் நிவாரணக் கூடங்கள் • அங்கன்வாடி கட்டடங்கள் • கிராம சந்தை, கிராமங்களில் இடுகாடு மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல் • உணவு சேமிப்பு கட்டடங்கள் கட்டுதல் • சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொள்ளுதல் • இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஊரக பொது சொத்துகளை பராமரித்தல்

4.1.3 2011-12 முதல் 2016-17 வரை எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

- அண்ணா பல்கலைக்கழக தொலை உணர் தொடர்பு நிறுவனத்தில் (Institute of Remote Sensing) உள்ள தொழில்நுட்ப உதவியாளர்கள்மூலம் வள ஆதார வரைபடங்கள் (Resource Map) தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோள் வரைபடங்கள் பணிகளை திட்டமிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் உதவுகிறது.

- பலவகையான வேலைகளுக்கு உரிய கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion Study) மேற்கொள்ளப்பட்டு, செய்ய வேண்டிய வேலையின் அளவு நிர்ணயிக்கப்பட்டு திருத்திய ஊரக விலைப்புள்ளி பட்டியலின்படி ஊதிய விகிதத்தினை உயர்த்தி வழங்கப்படுகிறது.

- பசுமைப் பகுதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசுக்கு சொந்தமான இடங்கள், பொது இடங்கள், கிராம ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் தனி நபர் விவசாயிகளது நிலங்களில் மரம் வளர்ப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், நபார்டு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் நெடுஞ் சாலைகள் ஆகியவற்றில், சாலைகளின் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- காடு வளர்ப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பல்வேறு மாவட்டங்களில், கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களே நாற்றங்கால் அமைக்க ஊக்குவிக்கப்படுகிறது.

- அனைத்து அரசுத் துறைகளின் சேவைகளையும் எளிதில் அடையும் பொருட்டு கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2016-2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சியால் வறட்சி தடுப்பு நடவடிக்கை மற்றும் ஊரக குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக வேலை நாட்கள் 100 நாட்களிலிருந்து 150 நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

2017 ஜூன் 20]

4.1.3.1 2011-2012 முதல் 2016-2017 வரை உள்ள சாதனைகள்

- *2011-2012 முதல் 2016-2017 வரை இந்த அரசால் 211.85 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு நிதியளவில் ரூ.24,006.33 கோடி ஊதியமாகவும் வழங்கப்பட்டுள்ளன.*

4.1.4 எடுக்கப்பட்ட உன்னத முயற்சிகள்:-

4.1.4.1 பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

- *விவசாயிகள் பயன்பெறும்வகையில், 8 டெல்டா மாவட்டங்களில், 15,000 பண்ணைக் குட்டைப் பணிகள் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் டெல்டா மாவட்டங்களில் டெல்டா அல்லாத பகுதிகளிலும், டெல்டா அல்லாத 23 பிற மாவட்டங்களிலும், 50,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

4.1.4.2 பிற துறைகளுடன் ஒருமுகப்படுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை பிற துறைகளுடன் ஒருங்கிணைப்பதன்மூலம் பல்வேறு வகையான சேவைகளை பெற இயலும். நில மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தனி நபர்கள் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், பட்டு வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படும் பட்டுப் பண்ணைகளில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், மல்பெரி செடி வளர்த்தல் உள்ளிட்ட பணிகள் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுகிறது.

4.1.4.3 மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளுதல்

ஊரகப் பகுதிகளை பசுமை மயமாக்கும் முயற்சியாக, ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், நெடுஞ்சாலைகள், பிரதம மந்திரியின் கிராம சாலைகள் ஆகியவற்றின் இருமருங்கிலும் 2015-2016 ஆம் ஆண்டில் 2,000 கி.மீ. நீளத்திற்கு மற்றும் 2016-2017 ஆம் ஆண்டில் 16,959.72 கி.மீ. நீளத்திற்கும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாபெரும் மரம் நடவு (Massive Tree Plantation) *பணிகள் வனத் துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

இதன்மூலம் பசுமையாக்குதல் அதிகரிக்கப்படுவதுடன், சுற்றுச் சூழல் மாசுபடுத்தும் காரணிகள் கட்டுப்படுத்தப்பட்டு மனிதன் மற்றும் விலங்கினங்களின் வாழ்க்கை பாதுகாக்கப்பட்டுள்ளது. அரசு நிலங்கள், அரசு மற்றும் பொது நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், இதர அரசு நிறுவனங்கள், பொது பூங்காக்கள் மற்றும் பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2014-2015 ஆம் ஆண்டில் 25.70 இலட்சம் மரக்கன்றுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நடப்பட்டுள்ளன. 2015-2016 ஆம் ஆண்டு 32.63 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன மற்றும் 2016-2017 ஆம் ஆண்டில் 68 இலட்சம் மரக்கன்றுகள் இத்திட்டத்தில் நடப்பட்டுள்ளன. செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு தனியாக ஊரக விலைப்புள்ளி பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

குடியிருப்புகளுக்கான பிரத்யேக மரம் வளர்க்கும் திட்டத்தின்மூலம் 54,000 இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள் மற்றும் 60,000 முதலமைச்சரின் சூரிய ஒளியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டப் பயனாளிகளின் வீடுகளில் ஒரு வீட்டிற்கு 4 மரக்கன்றுகள் வீதம் மொத்தம் 4.56 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருமளவு மரம் வளர்க்கும் திட்டத்திற்கான செடிகளின் (Saplings) தேவையை பூர்த்தி செய்யும் வகையில், 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் நாற்றங்கால்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.1.4.4 ஊரக விலைப்புள்ளி பட்டியல் (Rural Schedule of Rates)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட திருத்திய அட்டவணை I பத்தி 7-ன்படி தொழிலாளர்களுக்கான ஊதியம் அவர்கள் செய்கின்ற பணி அளவின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் எனில் ஒவ்வோர் ஆண்டும் மாநில வேலை உறுதி மன்றத்தினை கலந்தாலோசித்து பல்வேறு பணிகளுக்கு ஊரக விலைப்புள்ளி பட்டியல் நிர்ணயம் செய்து மாநில அரசு ஊதியம் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கால நிர்ணய வேலை அளவு (Time and Motion Study) நடத்தப்பட்டு, முதலில் ஊரக விலைப்புள்ளி பட்டியல் (அரசாணை (நிலை) எண் 110, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள் 05.11.2012-ல்) வெளியிட்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒரு மாநிலமாகும்.

2017 ஜுன் 20]

மரக்கன்றுகள் நடும் பணிக்கு தனியாக ஊரக விலைப் புள்ளி பட்டியல் அரசாணை (நிலை) எண் 104, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.1) துறை, நாள் 9-11-2012-ன்படி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியல் சிறப்பு வகை வேலைகளுடன் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை பெரும்பாலான மற்ற மாநிலங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன மற்றும் மத்திய அரசால் திருத்திய அட்டவணை 1-ல் மாற்றுத் திறனாளிகளுக்கு தனியாக ஊரக விலைப் புள்ளி பட்டியல் கொண்டுவரப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 83% தொழிலாளர்கள் பெண்கள் என்பதால், மண் எடுக்கும் உயரம் மற்றும் கொட்டும் தூரம் ஆகியவற்றினை கருத்தில்கொண்டும் புதிய ஊரக விலைப்புள்ளி பட்டியல் தயாரிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 29, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள் 28.03.2013 உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, கடின மண் உள்ள இடங்களில் செய்ய வேண்டிய மண் வேலையின் அளவு 57 கன அடியிலிருந்து 42 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, அரசாணை (நிலை) எண் 25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள் 27-2-2014-ன்படி, ஒரு பணியாளர் 37 கன அடி மண் வேலை செய்தாலே முழு ஊதியம் பெற இயலும்.

4.1.5.1 கட்டட பணிகள்:

2015-16 ஆம் ஆண்டில் 3890 கிராம ஊராட்சி சேவை மையங்கள், 7.50 இலட்சம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2016-17 ஆம் ஆண்டில் 7.50 இலட்சம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள், 1000 அங்கன்வாடி கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.1.5.2 திடக்கழிவு மேலாண்மை திட்டத்துடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை ஒருங்கிணைத்தல்

மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் அட்டவணை I மற்றும் II-ல் திருத்தங்கள் மேற்கொண்டு ஜனவரி 3, 2014-ம் தேதியிட்ட அறிவிக்கைமூலம் வகைப்பாடு D-ல் ஊரக உட்கட்டமைப்பு (i) ஊரக தூய்மை பணி பிரிவு 4(1) (IV)-ன்கீழ் "திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை" பணிகளை எடுத்துச்

செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள வழிகாட்டு செயல்முறைகளில், பின் இணைப்பு 2-ல் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்த மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005-ல் அட்டவணை-I-ல் கூறப்பட்டுள்ள விதிகளின்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்த தனியாக ஊரக விலைப்புள்ளி பட்டியலை நிர்ணயிக்கும் பொருட்டு கால நிர்ணய வேலை அளவீடு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2015-16 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளிலும், இரண்டாம் கட்டமாக 7,000 கிராம ஊராட்சிகளிலும் மற்றும் மூன்றாம் கட்டமாக 3,524 கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்பட்டு 150 குடும்பங்களுக்கு ஒரு தூய்மைக் காவலர் வீதம் தூய்மை காவலர்கள் 100 நாட்களுக்கு மட்டும் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்படுவர். தூய்மைக் காவலர்கள் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் கிடங்கில் சென்று கொட்டுதல் போன்ற திடக் கழிவு மேலாண்மை பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தொடர்ச்சியான 2 குழிகள் மக்கும் குப்பைகளுக்கும், ஒரு குழி மக்காத குப்பைகளுக்கும் தோண்டப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு விரிவான கால நிர்ணய வேலை அளவீடு மேற்கொள்ளப்பட்டு ஊரக விலைப்புள்ளி பட்டியல் நிர்ணயிக்கப்பட்டது. (அரசாணை (நிலை) எண் 87, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள் 8-6-2015). அதனடிப்படையில் அதிக நெருக்கமான வீடுகள் கொண்டிருக்கும் சமவெளி பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 75 குடியிருப்புகளுக்குச் சென்று 40 கி.கி. எடை குப்பையினையும், மலைப்பாங்கான பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 50 குடியிருப்புகளுக்கு சென்று 30 கி.கி. எடையுள்ள குப்பையினையும் சேகரிக்க வேண்டும்.

2017 ஜூன் 20]

பரவலான மக்கள்தொகை கொண்ட சமவெளி பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 50 குடியிருப்புகளுக்குச் சென்று 30 கி.கி. எடையுள்ள குப்பையினையும் மலைப்பாங்கான பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 30 குடியிருப்புகளுக்குச் சென்று 20 கி.கி. எடையுள்ள குப்பையினையும் சேகரிக்க வேண்டும்.

4.1.5.3 பொதுப் பணித் துறை கால்வாய்களை தூர்வாருதல்

மழைநீரை சேகரிக்கவும், அதனை பொதுப் பணித் துறை ஏரிகள், கண்மாய்களுக்கு கால்வாய்கள் வாயிலாக வழிந்தோட செய்திடவும் மற்றும் நீர் ஆதார அமைப்புகள் முந்தைய கொள்ளளவை பெற்றிடவும், நிலத்தடி நீரின் அளவை உயர்த்தும் பொருட்டும் 10,000 கி.மீ. தூரத்திற்கு பொதுப் பணித் துறையின் C மற்றும் D பிரிவு கால்வாய்களைத் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது.

4.1.6 2016-17-ல் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள்

4.1.6.1 கிணறுகள்

விவசாயம் சார்ந்த பணிகளை ஊக்குவிக்க, தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் 250 தனி நபர் கிணறுகள் மற்றும் அரசு / பொது நிலங்களில் 250 குழு கிணறுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

4.1.6.2 மண்புழு உர அலகு அமைத்தல்

மண்புழு உரம், உயிரி உரத்தினை உருவாக்கும் ஒரு முறையாகும். இந்த உயிரி உரம் மண்புழு உரத்தில் மூலப்பொருளாக பயன்படுத்தப்படும். இந்த உயிர் உரம் பெருமளவு மரம் வளர்க்கும் திட்டத்திலும், ஊராட்சிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் மண்புழு உரம் தமிழக ஊரக வாழ்வாதார இயக்கத்தில் செயல்படும் மாவட்ட விநியோகம் மற்றும் விற்பனை சங்கத்தின்மூலம் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாய் கிராம ஊராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும். மண்புழு உரமானது விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

2016-17 ஆம் ஆண்டில் ஒரு வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 மண்புழு உர அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

4.1.7 வங்கிகள்மூலம் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் / பொது நிதி மேலாண்மைமூலம் ஊதியம் வழங்குதல்

வங்கிகள்மூலம் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமலிருப்பதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு 2013-14 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது. 01.04.2014 முதல் மாநிலத்திலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ஊதியம் மின்னணு நிதி மேலாண்மை முறையின்கீழ் மட்டுமே வழங்கப்படுகிறது.

10.4.2015 முதல் வங்கி பரிமாற்றம் ஒற்றைக் கணக்கு முறையில் மாற்றம் செய்யப்பட்டு பொது நிதி மேலாண்மை முறை (PFMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது. 07.11.2016 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பயனாளிகளுக்கு, தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் நேரடியாக மத்திய அரசால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஊதியத்தொகை வரவு வைக்கப்படுகிறது.

4.1.8 தொழிலாளர்களின் கணக்குகளுடன் ஆதார் எண்ணை இணைத்தல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது கணக்கில் ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியத்தினை ஈடு செய்யும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட வலைதளத்தில் அனைத்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது ஆதார் எண்களும் இணைக்கப்பட்டு வருகின்றன. ஆதார் எண்களை இணைப்பதன்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தகவல்தளம் சீராவதோடு தொழிலாளர்களுக்கு ஊதிய மாற்றம் செய்யப்படுவதை விரைவானதாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்குகிறது. இதுவரை மொத்தம் உள்ள 84.80 இலட்சம் தொழிலாளர்களில், 82.29 (97%) இலட்சம் தொழிலாளர்களின் ஆதார் எண்கள் வலைதளத்தில் இணைக்கப்பட்டு 56.10 இலட்சம் (66%) தொழிலாளர்களுக்கு ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2017 ஜூன் 20]

4.1.9 சொத்துகளுக்கு புவிக் குறியிடுதல் (Geo tagging):

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் புவிசார் (Geo MGNREGA) *குறிக்கோளானது, புவிசார் தகவல் மைய தீர்வை உருவாக்கி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சொத்துகளின் தகவல்களை காட்சிப்படுத்தி ஆராய்வதேயாகும். இதன்மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் இந்தியா முழுவதும் உருவாக்கப்பட்ட சொத்துகளை வரைபடத்தில் காணலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின்* (Indian Space Research Organisation) *ஒரு அமைப்பான தேசிய தொலை உணர்வு மையம்* (National Remote Sensing Corporation) *மூலம் புவன் என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின்* (NREGASoft) *என்ற இணையதளத்திலிருந்து சொத்து குறித்த விவரங்களை புவன் மென்பொருள்மூலம் பயன்படுத்தப்படுகிறது.* NREGASoft *மற்றும் புவன் மென்பொருளின் தனித்துவ திறமைகளை ஒருங்கிணைத்து, புவிசார் சொத்து மேலாண்மை கருவியாக உருவாக்கப்பட்டு அதற்கு ஜியோ எம்ஜிநரேகா* (Geo MGNREGA) *எனப் பெயரிடப்பட்டுள்ளது.*

4.1.10 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட விருதுகள்:

அ) மாநிலத்திற்கான தேசிய விருது

முதன்முறையாக சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களுக்கான விருதுகள் மூன்று வகைப்பாட்டின்கீழ் 2012-13 முதல் அறிவிக்கப்பட்டன. இவற்றில் தமிழ்நாடு "சமூகப் பங்களிப்பு" (Social inclusion) *என்ற வகைப்பாட்டில் சிறந்த மாநிலமாக தெரிவு செய்யப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கப்பட்டுள்ளது.*

"ஒருங்கிணைத்தல்மூலம் நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துதல்" என்கிற முயற்சிக்காக 2014-15 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தேசிய விருது பெற்றது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான முயற்சிகள் குறித்து நடத்தப்பட்ட கண்காட்சிக்கான தேசிய விருது தமிழ்நாட்டுக்கு அளிக்கப்பட்டது.

ஆ) மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்

ஒவ்வோர் ஆண்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தேசிய அளவில் நன்றாக செயல்படும் மாவட்டங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011-12 முதல் 2015-16-ம் ஆண்டுவரை இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காகப் பெறப்பட்ட விருதுகள் விவரம் கீழ்கண்டவாறு:

அட்டவணை 4.2

மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்

வருடம்	மாவட்ட விருது	கிராம ஊராட்சிக்கான விருது
2011-12	தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி	காடம்பாடி கிராம ஊராட்சி, சூலூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2012-13	நீலகிரி	தாணிக்கோட்டகம் கிராம ஊராட்சி, வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்.
2013-14	தேனி	எப். கீழையூர் கிராம ஊராட்சி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2014-15	திருவள்ளூர் புதுக்கோட்டை	-
2015-16	மதுரை	-

4.1.11 2017-18 ஆம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் நீர் வளப் பாதுகாப்பு இயக்கத்தை, (Mission Water Conservation) பிரதம மந்திரி விவசாய நீர்ப்பாசன திட்டத்தின் மொத்த கட்டமைப்பின்கீழ் மேற்கொள்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நீர் சேமிப்பு கட்டமைப்புகள், பண்ணைக் குட்டைகள், சிறிய தடுப்பணைகள் மற்றும் எல்லை வரப்பு (Contour Bund) போன்றவை இவற்றுள் அடங்கும்.

2017 ஜூன் 20]

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் நிதியினைக் கொண்டு நீர்வள ஆதார பாதுகாப்பை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சிறப்பான முறையில் செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும். நீர்வளத்தினை மேம்படுத்துவதும், வறட்சியற்ற கிராம ஊராட்சிகளை உருவாக்குவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும் (Ridge to Valley Treatment).

மாவட்ட நீர்ப்பாசன திட்டம் (District Irrigation Plan) இந்திய அரசின் வழிகாட்டுதலின்படி, மாவட்டத்தின் முழுமையான பாசன வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழும் வகையில் தயாரிக்கப்படவேண்டும். மாவட்ட நீர்ப்பாசன திட்டம் (DIP) மாவட்டத்தில் தற்போது முன்மொழியப்பட்ட நீர்வள, நீர் ஆதார கட்டமைப்பு முறைகளை முழுமையாக உள்ளடக்கியதாகும். அதன்படி, மாவட்ட நீர்ப்பாசன திட்டம் (DIP) அனைத்து மாவட்டங்களிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

நீர்வள பாதுகாப்பு இயக்க வழிகாட்டுதலின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வருடாந்திர திட்டம் / தொழிலாளர் வரவு-செலவு ஒதுக்கீட்டை முறையாக மாவட்ட நீர்ப்பாசன திட்டத்துடன் இணைத்து குறைந்தபட்சம் 65% மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் இயற்கை வள மேலாண்மை பணிகளை (Natural Resources Management) அதிகமாக நீர் உறிஞ்சப்பட்ட மற்றும் மிக அதிகமாக நீராதாரம் உறிஞ்சப்பட்ட (Over exploited and critical) நிலையிலுள்ள 200 ஊராட்சி ஒன்றியங்களில் செலவினம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் அட்டவணை I-ன்படி 153 வகையான பணிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் 100 இயற்கை வள மேலாண்மை பணிகளில் 71 பணிகள் நீர் சம்பந்தப்பட்ட பணிகளாகும். மாவட்ட திட்டமிடல் குழு பொதுப் பணித் துறை, மத்திய நிலத்தடி நீர் வாரியம், விவசாயம், விவசாய பொறியியல் துறை, இந்திய தொழில்நுட்ப கல்லூரி, தமிழ்நாடு நீர்வடிகால் மேம்பாட்டு முகமை, விவசாய கல்லூரி (ம) பிற தொழில்நுட்ப கல்லூரிகள் (ம) மாவட்ட நீர் வள பாசன முகமை உள்ளடங்கிய உறுப்பினர்களுடன் கலந்து ஆலாசனை செய்து அந்தந்த பகுதிக்கு தேவையான முன்னுரிமை பணிகளைத் தயாரித்துள்ளது.

4.1.12 சமூக தணிக்கை

சமூக தணிக்கை என்பது சமூக தணிக்கை அலுவலர்களின் வழிகாட்டுதலுடன் மக்களாலேயே செய்யப்படும் ஒரு முழுமையான தணிக்கை ஆகும். நிதி செலவினம் மட்டுமல்லாது, திட்டத்தின் செயல்முறை மற்றும் சமூக அம்சங்கள் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்தும் சமூக தணிக்கையின்போது ஆய்வு செய்யப்படுகிறது. சமூக தணிக்கை தகவல் தொடர்பு மற்றும் கல்விக்கான கருவியாக இருப்பதுடன் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை அமல்படுத்த உதவுகிறது. சமூக தணிக்கை வளர்ச்சித் திட்டங்களில் எல்லா நிலைகளிலும் (திட்டமிடுதல், வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்) மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த உதவும். சமூக தணிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஆறு மாதத்திற்கொருமுறை சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட தணிக்கை விதிகள் 2011 மூலம் சமூக தணிக்கை நடைமுறைகளை நிர்ணயித்துள்ளது.

4.1.13 நிர்வாகம்:

1. அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 27.07.2012-ன் படி, ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த கூடுதல் இயக்குநர் பதவி நிலையிலான இயக்குநர் அவர்களைக்கொண்டு சார்பற்ற தன்மையுடன் சமூக தணிக்கை அலகு ஒன்று 2013-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இயக்குநரது பணிகளில் உதவும் வகையில் ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த இரு இணை இயக்குநர்கள் மற்றும் ஒரு உதவி இயக்குநருடன் அலுவலகப் பணியாளரும் பணிபுரிகின்றனர்.

2. அரசாணை (நிலை) எண் 125, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21-12-2012-ல் தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கிட உப விதிகளுக்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் தேதி தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பணியாளர்கள்:

மாவட்ட வள அலுவலர்கள்	: 31	சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் சமூக தணிக்கையை கண்காணித்து தணிக்கையின் முடிவுகள் மற்றும் அதன் மீதான சிறப்பு அறிக்கையை மாநில சமூக தணிக்கை சங்க இயக்குநருக்கு அனுப்புதல்.
உதவி பணியாளர்கள்	: 31	மாவட்ட தலைமையிடத்தில் மாவட்ட வள அலுவலர்களின் அன்றாட பணிகளுக்கு உதவி புரிதல்.
வட்டார வள அலுவலர்கள்	: 770	வருடாந்திர நாட்காட்டியின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை நடத்துவதற்கு உதவுதல் மற்றும் தணிக்கையின் முடிவுகளை கிராம சபையின் முன் வைப்பதை உறுதி செய்தல்.

4.1.14 திறன் வளர்த்தல்:

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம், சமூக தணிக்கையின் முக்கியத்துவம், அவசியம் மற்றும் நடைமுறை ஆகியவை அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சியினை இத்துறை சார்ந்த அனைத்து அலுவலர்கள், கிராம ஊராட்சி தலைவர்கள் மூன்று அடுக்குகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு அளித்துள்ளது. 2013-14 ஆம் ஆண்டு திட்டத்தின் பங்கேற்பாளர்கள் 24,874 நபர்களுக்கும், 2014-15 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் 92,109 நபர்களுக்கும், 5 கட்டங்களாக சமூக தணிக்கை பயிற்சி அளிக்கப்பட்டது. ஆக மொத்தம் 1,16,983 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சமூக தணிக்கை சங்கத்தின்மூலம் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி கையேடுகள் 2, கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சி கையேடு 1, கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான பயிற்சி கையேடு 1, கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான பயிற்சி கையேடு 1 மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

துறை அலுவலர்களுக்கான பயிற்சி கையேடு 1 ஆகிய 6 வகையான பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டது. சமூக தணிக்கை குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

4.1.15 வள அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்:

வள அலுவலர்களின் திறமையினை மேம்படுத்தும் பொருட்டு 02.11.2016 முதல் நான்கு கட்டங்களாக சமூக பொறுப்புடைமை மற்றும் சமூக தணிக்கை தொடர்பாக 30 நாட்கள் பயிற்சி மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மறைமலை நகர் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி ஊராட்சி நிறுவனங்கள் எஸ்.வி.நகரம், பவானிசாகர், பட்டுக்கோட்டை மற்றும் தே.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து மையங்களில் 29 மாவட்ட வள அலுவலர்கள், 22 உதவி பணியாளர்கள் மற்றும் 647 வட்டார வள அலுவலர்கள் என மொத்தமாக 698 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

4.1.16 சமூக தணிக்கை செயல்பாடுகள்:

புதியதாக தேர்வு செய்யப்பட்ட மாவட்ட வள அலுவலர்கள் மற்றும் வட்டார வள அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதமாக 24.01.2015 முதல் 07.03.2015 வரையிலான காலத்தில் 1,140 கிராம ஊராட்சிகளில் மாதிரி சமூக தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டவிதிகள் 2011-ன்படி 2015-16 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நாள்காட்டி தயாரிக்கப்பட்டு 12,523 கிராம ஊராட்சிகளில் 2014-15-ம் நிதியாண்டிற்கான சமூக தணிக்கை 8,344 கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள 4,179 கிராம ஊராட்சிகளில் 2016-2017 ஆம் ஆண்டு சமூக தணிக்கை முடிக்கப்பட்டது. 2015-2016 ஆம் நிதியாண்டிற்கான சமூக தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, 2016-2017 ஆம் ஆண்டில் வருடாந்திர நாள்காட்டி தயாரிக்கப்பட்டு, 31-3-2017 வரை 9,821 கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2017-2018 ஆம் ஆண்டில் வருடாந்திர நாள்காட்டி தயாரிக்கப்பட்டு 23.05.2017 அன்று முடிவுற்ற நான்காம் சுற்று வரை 2016-2017 ஆம் ஆண்டிற்கான 12,523 ஊராட்சிகளில் 2,348 ஊராட்சிகளிலும் மற்றும் நிலுவையிலுள்ள 2,702 கிராம ஊராட்சிகளில் 1,514 கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2017 ஜுன் 20]

4.1.17 சமூக தணிக்கையின் தாக்கம்:

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளான மக்களே மேற்கொள்வதால் சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும் திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால் இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பயன்களை அறிந்து கொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாக அமைகிறது. இந்த சிறப்பு கிராம சபையிலேயே சமூக தணிக்கையில் கண்டறியப்படும் குறைபாடுகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகிறது. மேலும் வட்டார அளவில் மற்றும் ஊராட்சி அளவில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவத்தினையும் உணர வைக்கப்பட்டுள்ளது.

4.2 பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

மத்திய அரசின் பங்களிப்பு வீட்டு வசதி திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், 2016-2017 ஆம் ஆண்டு முதல் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொருத்தமான மற்றும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயனாளிகளால் தரமான மற்றும் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வீடுகள் கட்டுவதை நோக்கமாகக் கொண்ட திட்டம் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) ஆகும்.

சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ன் அடிப்படையில் கிராமச் சபைமூலம் பயனாளிகளைக் கண்டறிந்து, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் மொத்த ஒதுக்கீட்டில் 60 விழுக்காடு ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர் வகுப்பினருக்கும், 40 விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையின வகுப்பினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட இரு இனங்களில் 3 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு வீடும் 269 சதுர அடி பரப்பளவில் கட்டப்படுகிறது.

ஒரு வீட்டிற்கான மத்திய அரசின் அலகுத் தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு 60:40 என்ற விகிதத்தில் உள்ளது (மத்திய அரசு ரூ.72,000 மற்றும் மாநில அரசு ரூ.48,000). தமிழக அரசு, கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக அலகுத் தொகையைவிட ரூ.50,000 கூடுதல் நிதியாக மாநில நிதியிலிருந்து வழங்குகிறது. எனவே தமிழ்நாட்டில் 2016-17 ஆம் ஆண்டிற்கு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட (ஊரகம்) த்தின்கீழ் ஒரு வீட்டின் மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும்.

அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது.

மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

2015-16 ஆம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் பயனாளிகளிடமிருந்து பெறப்படும் புகார்களை பரிசீலனை செய்து, பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்க்கவும்/நீக்கவும் மற்றும் தீர்வு செய்யவும் ஒரு குறை தீர்க்கும் அமைப்பாக மேல்முறையீட்டுக் குழு மாவட்ட அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 2016-17 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு மத்திய அரசால் 1,31,831 வீடுகள் கட்ட முதலில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் 45,507 வீடுகள் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 2016-2017 ஆம் ஆண்டிற்கு 1,76,338 வீடுகள் என ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு, ரூ.2,997.75 கோடி மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

2017-18 ஆம் நிதியாண்டில், 1,30,214 வீடுகள், ரூ.2213.64 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன.

2017 ஜூன் 20]

4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்புதல் என்பதே நோக்கமாகும். இத்திட்டத்திற்கான நிதியை 2011-2012 ஆம் ஆண்டு முதல் ரூ.5 கோடியாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்பு பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின்கீழ் எடுத்து செய்ய இயலாது.

2016-17 ஆம் ஆண்டில், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.295 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 4.3

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

வ.எண்	பணிகள்	பணிகளின் எண்ணிக்கை
1.	கட்டடங்கள்	503
2.	சாலைகள்	807
3.	குடிநீர் வழங்கல்	333
4.	வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள்	861
4.	இதர பணிகள்	1211
	மொத்தம்	3715

இத்திட்டத்தின்கீழ், 2017-18-ம் ஆண்டில் ரூ.295 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

4.4 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம், 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச்சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு அனைத்துப் பருவகாலங்களிலும் பயன்படுத்தத் தக்க வகையில் சாலை இணைப்பு வசதியினை ஏற்படுத்தித் தருவதற்காக 2000 ஆம் ஆண்டில் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. 2015-16 ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் 60% மத்திய அரசு நிதி மற்றும் 40% மாநில அரசு நிதி பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் பகுதி I முதல் VII

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் பகுதி VII வரை (அதாவது 2000 முதல் 2008 வரை) மொத்தம் 4,946 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.4

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

பகுதி I முதல் VII வரை

வ. எண்	பகுதி	வருடம்	எண்ணிக்கை	நீளம் கி.மீ.	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	I	2000-01	862	1,442.12	152.91
2.	II	2001-02	444	795.09	114.27
3.	III	2003-04	491	1,096.40	159.07
4.	IV	2004-05	393	778.31	111.35
5.	V	2005-06	365	799.59	170.84
6.	VI	2006-07	810	2,049.02	459.82
7.	VII	2007-08	1,581	3,010.32	853.72
மொத்தம்			**4,946**	**9,970.85**	**2021.98**

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் பகுதி VIII முதல் X வரை (2012-13 முதல் 2016-17 வரை)

கடந்த 2012-13 ஆம் ஆண்டிற்குப் பிறகு, மொத்தம் 5,409.17 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள், இதர மாவட்ட சாலைகள் மற்றும் 73 பாலங்கள் ரூ.2,241.81 கோடி

மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் ரூ.755.89 கோடி மாநில அரசின் பங்குத் தொகையும் அடங்கும்.

இதுமட்டுமல்லாது, இந்தச் சாலைகளின் 5 வருட தொடர் பராமரிப்பிற்கு ரூ.141.54 கோடி நிதியினை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த 6 ஆண்டுகளில், பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் விவரம் கீழ்க்கண்டவாறு:-

அட்டவணை 4.5

கடந்த 6 ஆண்டுகளில் பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் விவரம்

வ. எண்	பகுதி	வருடம்	எண்ணிக்கை	நீளம் கி.மீ.	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	VIII	2012-13	1,340	3,090.90	1,128.74
2.	IX	2014-15	405	951.47	354.63
3.	X	2016-17	605	1,366.80	758.44
மொத்தம்			2,350	5,409.17	2,241.81

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் II

மத்திய அரசு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்-II-ஐ 2013 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தி, விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II, தற்போதுள்ள ஊரகச் சாலைகள் தொகுப்பினை வலுப்படுத்துவதன் வாயிலாக, பொதுமக்கள், சரக்கு மற்றும் சேவைகளுக்கான போக்குவரத்து வசதி அளிப்பதில் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்த வழிவகுக்கிறது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II-ன் குறிக்கோள், முக்கிய வழித்தடங்கள் (Through Routes) மற்றும் பிரதான ஊரக இணைப்புகள் (Major Rural Links) ஆகியவற்றினை, அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையிலும், ஊரகச் சந்தைகள் மற்றும் ஊரக மையங்களின் வளர்ச்சியில் அவை ஆற்றும் பங்கின் அடிப்படையிலும் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்வதே ஆகும்.

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்-II-ன் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்-I-ல்

இணைப்புச் சாலைகள் 100%-மும் மற்றும் சாலை மேம்பாடு பணிகள் 75%-மும் மேற்கொண்ட மாநிலங்கள் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II-ற்கு தகுதி பெறுகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் காரணமாக தமிழ்நாடு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்-II-ன்கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள தகுதி பெற்றுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II-ன் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, இத்திட்டத்தின்கீழ் முன்மொழிவுகள் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மாவட்ட ஊரகச் சாலைகள் திட்டத்தின் (DRRP) மூலமாகவே மேற்கொள்ளவேண்டும்.

அதற்கிணங்க, 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மாவட்ட ஊரகச் சாலைகள் (DRRP) திட்டம், விரிவான மேம்பாடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியல் (CUCPL) ஆகியவற்றை தமிழ்நாடு அரசு தயாரித்துள்ளது. இந்த DRRP மற்றும் CUCPL-க்கு மாநில அளவிலான நிலைக் குழுவினால் (SLSC) 13-3-2017-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாடு மற்றும் பாலங்கள் கட்டும் பணிகளுக்கு பிரேரணை மத்திய அரசிற்கு சமர்ப்பித்துள்ளது.

4.5 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

சுகாதாரம் மற்றும் சுத்தமான சுற்றுச்சூழல் ஆகியவை வளர்ச்சிக்கு உதவும் முக்கிய குறியீடாக கருதப்படுவதால், முழுச் சுகாதார திட்டம் 1999 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 2012-க்குள் அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் இல்லக் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளினை அடைய இத்திட்டம் 2004-க்குள் அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டமானது, 1.4.2012 முதல் "நிர்மல் பாரத் அபியான்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு மத்திய அரசால் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள்

2017 ஜூன் 20]
மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்களுக்கு மட்டும் விரிவுபடுத்தப்பட்டது.

மகாத்மா காந்தியடிகளின் 150-வது பிறந்த நாளில் அவருக்குப் பொருத்தமான அஞ்சலி செய்யும் வகையில் மத்திய அரசால் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் முதல், "தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" தொடங்கப்பட்டு, அனைவருக்குமான சுகாதார வசதிகள் முழுமையாக அடைவதன்மூலம் 2019 ஆம் ஆண்டிற்குள்ளாக தூய்மை பாரதம் என்ற நிலையை எய்தும்வகையில் அனைத்து முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டன.

திட்டத்தின் நோக்கங்கள்

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, ஊரகப் பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி, பொதுவான வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றம் அடைய செய்தல்.

ஆ) 2-10-2019-க்குள் தூய்மை பாரதம் என்ற இலக்கினை எய்த, ஊரகப் பகுதிகளில் முழு அளவிலான சுகாதார செயல்பாடுகளை முடுக்கி விடுதல்.

இ) சுகாதார கல்வி மற்றும் விழிப்புணர்வுமூலம் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கிடையே ஆர்வத்தை தூண்டி, சுகாதார வசதிகள் மற்றும் நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட செய்தல். நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்.

ஈ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்த அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை தேவையான இடங்களில் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்:

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

[2017 ஜூன் 20

(அ) தனி நபர் இல்லக் கழிப்பறை

முறையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த தொகை 2015-16 ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத் தொகையினை 60:40 என்ற விகிதத்தில் அதாவது மத்திய அரசு ரூ.7,200 மற்றும் மாநில அரசு ரூ.4,800 ஆக மாற்றியமைத்துள்ளது.

2013-14 முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை, 27.48 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டில், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும், தனிநபர் இல்லக் கழிப்பறைப் பணிகள், 2017-18 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(ஆ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த தனிநபர் இல்லங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

(இ) சமூக சுகாதார வளாகங்கள்

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள் கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின்கீழ் அமைக்கலாம். ஒவ்வொரு சமூக சுகாதார வளாகம் அமைப்பதற்கு நிதி உதவி அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை, மத்திய அரசு, மாநில அரசு

2017 ஜூன் 20]
மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

4.6 தேசிய ரூர்பன் இயக்கம் (National Rurban Mission)

கிராமத் தொகுப்புகளை உருவாக்கி, அதில் பொருளாதார, சமூக மற்றும் அடிப்படை வசதிகளையும், நகர்ப்புறங்களுக்கு இணையான வளர்ச்சியையும் ஏற்படுத்த "தேசிய ரூர்பன் இயக்கம்" (National Rurban Mission) *என்ற திட்டம் மத்திய அரசால் 16.09.2015 அன்று துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய "ரூர்பன் தொகுப்பினை" உருவாக்குவதாகும்.*

ரூர்பன் தொகுப்பினை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்

தேசிய ரூர்பன் இயக்க வழிகாட்டுதலின்படி "ரூர்பன் தொகுப்பு" என்பது பூகோள அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ள ஊராட்சிகளில் 25000 முதல் 50000 வரை மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பாகும்.

தேசிய ரூர்பன் இயக்க திட்டத்தின்படி பழங்குடியினர் தொகுப்பு மற்றும் பழங்குடியினர் அல்லாத தொகுப்பு என இரண்டு பிரிவுகளில் ரூர்பன் தொகுப்புகள் உள்ளன. தமிழ்நாட்டிற்கு பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை தேர்வு செய்ய புதுடெல்லி, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் கீழ்க்கண்ட அளவுகோலின்படி ரூர்பன் தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

• 10 ஆண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி	முக்கியத்துவம்
• நிலங்களின் மதிப்பு உயர்வு • 10 ஆண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு • நடுநிலைப் பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை சதவீதம்	80 %
• பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் (PMJDY) வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ள குடும்பங்களின் சதவீதம் • தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின் செயல்பாட்டு சாதனை	20 %

அதன்படி மத்திய அரசு முதற்கட்டமாக (Phase-I) 5 தொகுப்புகளை (Cluster) உருவாக்கிட அனுமதி வழங்கி உள்ளது. அவை திருவள்ளூர் மாவட்டம் (குத்தம்பாக்கம்), சிவகங்கை மாவட்டம் (வாணியன்குடி), திருப்பூர் மாவட்டம் (வேலாயுதம்பாளையம்), கோயம்புத்தூர் மாவட்டம் (மதுக்கரை) மற்றும் திருநெல்வேலி மாவட்டம் (சுத்தமல்லி) ஆகும்.

மேலும் தேசிய ரூர்பன் இயக்கம் இரண்டாம் கட்டமாக, தமிழ்நாட்டிற்கு காஞ்சிபுரம் மாவட்டம் (சிங்கபெருமாள் கோவில்), மதுரை மாவட்டம் (கோவில்பாப்பாக்குடி) மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் (திருமலை சமுத்திரம்) என மூன்று தொகுப்புகளுக்கு மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான அதிகாரக் குழு அமைத்தல்

மத்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி மாநில அளவிலான அதிகாரக் குழு அமைக்கப்பட்டு அரசாணை எண் 14, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி -2) துறை, நாள் 30.01.2016 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான குழு அமைத்தல்

ரூர்பன் இயக்க திட்ட செயல்பாடுகளை செயல்படுத்த மாவட்ட திட்ட நிர்வாக அலகு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராக கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு திருவள்ளூர், சிவகங்கை, திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி தேசிய ரூர்பன் இயக்க மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவானது, திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் முக்கிய மாவட்ட அளவிலான அலுவலர்களை உள்ளடக்கியதாகும்.

ஒருங்கிணைந்த தொகுப்பு செயல் திட்டம்

இத்திட்டத்திற்கான இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) மற்றும் மத்திய, மாநில அரசு திட்டங்களின் நிதியினை ஒருமுகப்படுத்தி (Convergence) ஒருங்கிணைந்த தொகுப்பு செயல்திட்டத்திற்கு (ICAP) திருவள்ளூர், சிவகங்கை, திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்களால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. 27-9-2016 அன்று நடைபெற்ற தேசிய

2017 ஜூன் 20]

அளவிலான அதிகாரக் குழு கூட்டத்தில் 5 ஒருங்கிணைந்த தொகுப்பு செயல் திட்டத்திற்கு மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநில அளவிலான அதிகாரக் குழு, ஒருங்கிணைந்த தொகுப்பு செயல் திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கியுள்ளது.

நிதி செயல்பாடு

ஒரு தொகுப்பிற்கு தேவையான நிதிகள், மாநில மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பணிகளை நிறைவேற்றிட இடைநிரவல் நிரப்பு நிதியினை மத்திய அரசு வழங்குகிறது. இடைநிரவல் நிரப்பு நிதி திட்ட மதிப்பீடு செலவில் 30 சதவீதம் அல்லது ரூபாய் 30 கோடி இவற்றில் எது குறைவோ அத்தொகை ஒவ்வொரு தொகுப்புகளுக்கும் வழங்கப்படுகிறது.

தேசிய ரூர்பன் இயக்கத்தின் இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) *பகிர்வானது மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 5 தொகுப்புகளுக்கு ஒருங்கிணைந்த தொகுப்பு செயல்திட்டம் தயாரிக்க ரூபாய் 1.75 கோடியும், நிலை 2-ன்கீழ் அனுமதிக்கப்பட்ட மூன்று தொகுப்புகளுக்கு ரூபாய் 1.05 கோடியும் ஒரு தொகுப்பிற்கு ரூபாய் 35 இலட்சம் வீதம் மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

மேலும் தேசிய ரூர்பன் இயக்கத் திட்ட செயல்பாட்டு ஆண்டான மூன்றாண்டுகளுக்கு (2016-2017, 2017-2018 மற்றும் 2018-2019) கீழ்க்கண்டவாறு நிதி விடுவிக்கப்படும்.

(ரூபாய் கோடியில்)

வ. எண்	நிதி ஆண்டு	மத்திய அரசு பங்கு (ஒரு தொகுப்பிற்கு)	மாநில அரசு பங்கு (ஒரு தொகுப்பிற்கு)	மொத்தம் (ஒரு தொகுப்பிற்கு)	மொத்தம் (ஐந்து தொகுப்பிற்கு)
1.	2016-2017	5.40	3.60	9.00	45.00
2.	2017-2018	5.40	3.60	9.00	45.00
3.	2018-2019	7.20	4.80	12.00	60.00
மொத்தம்		18.00	12.00	30.00	150.00

2016-2017 ம் ஆண்டிற்கு இடைநிரவல் நிரப்பு நிதியின்கீழ் மத்திய அரசின் 60 சதவீதம் பங்குத்தொகையாக ரூபாய் 27 கோடி மாநில அரசுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் 40 சதவீத பங்குத்தொகையான ரூபாய் 18 கோடி மற்றும் மத்திய அரசின் நிதி ரூ. 27 கோடியுடன் ஆக கூடுதலாக ரூ.45 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்பு நிதி மற்றும் இடைநிரவல் நிரப்பு நிதியின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள், பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி, வேளாண்மை தொடர்பான திட்டப்பணிகள், கல்வி, சுகாதாரம், குடிநீர், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, கிராம தெருக்கள் மற்றும் வடிகால், தெரு விளக்கு, சாலை வசதிகள், போக்குவரத்து, சமையல் எரிவாயு இணைப்பு, டிஜிட்டல் எழுத்தறிவு மற்றும் மக்கள் சேவை மையம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

4.7 நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11-10-2014-ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in *வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.*

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, மாதிரி கிராமங்களில் செயல்படுத்தி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப் பகுதிகளில் மக்கள்தொகை 3000 முதல் 5000 வரையும், மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில், மக்கள்தொகை 1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள்தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின்/ கணவனின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து

மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும், அதில் ஒன்று 2016-க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024-க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமைச் செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண் 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி. 2) துறை, நாள் 13-2-2015-ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளின் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும்வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள்/மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கும்வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

4.8 தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் (NBMMP)

மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் நோக்கம், இயற்கை கழிவுகளை பயன்படுத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றம் செய்து திறம்பட பயன்படுத்துவதே ஆகும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

i) *ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள இல்லங்களில் இயற்கை கழிவுகளை மாசற்ற எரிபொருளாக உருவாக்கிட, முக்கியமாக சமையல் செய்வதற்கு கரிமவாயு எரி கலன்கள் அமைத்தல்.*

ii) *ஊரக பகுதிகளில் உள்ள மகளிர், காடுகளுக்கு சென்று எதிர்கொள்ளும் கடினமான சுமையை குறைத்து சமூக நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.*

iii) *கிராமப்புற பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்திட கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்கள் அமைத்தல்.*

iv) *மேம்படுத்தப்பட்ட உயிர் செரிமானம் மூலம் (திட திரவ நிலையில் மற்றும் உலர்த்தப்பட்ட) இரசாயன உரங்களை செறிவூட்டல்/அல்லது அவற்றுக்கு இணையாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவினை குறைத்தல்/உயிர் செரிமானக் குழம்பினை செறிவூட்டும் அலகான மண்புழு உர அலகுகளுடன் இணைத்தல்.*

v) *திட்ட குழுவின் ஒருங்கிணைந்த ஆற்றல் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு சமைப்பதற்கான உயிர்சக்தி ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்தல்.*

இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2017 ஜூன் 20]

அனுமதிக்கப்படும் மானிய விவரம் பின்வருமாறு

வ. எண்	பிரிவுகள்	தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு கலன்களின் மானிய விவரங்கள் (1 முதல் 6 கன அடி வரை)	
		1 கன அடி (ரூ.)	2–6 கன அடி (ரூ.)
1.	*பொது பிரிவு*	*5,500*	*9,000*
2.	*ஆதிதிராவிடர் / பழங்குடியினர்*	*7,000*	*11,000*
3.	*மலைப்பகுதி*	*7,000*	*11,000*
4.	*கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்களுக்கு கூடுதல் மானியம்*	*ஒரு கலனுக்கு ரூ.1,200 வீதம்*	
5.	*பணி கட்டணம் (Turn key Cost)*	*ஒரு கலனுக்கு ரூ.1,500 வீதம்*	

2016-17 ஆம் நிதி ஆண்டில் 300 கரிமவாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. மனித வள மேம்பாடு

5.1 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் பணியமைப்பு

ஊரக கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் பராமரிப்பு, இணைப்பு சாலைகள், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குதல், உள்ளாட்சி நிர்வாகம் ஆகியன ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பொறுப்பாகும். இப்பணிகள் அனைத்தும் இத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்மூலம் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

அட்டவணை 5.1

வகை வாரியான பணியாளர்கள் விவரம்

அரசு பணியாளர்கள் – அரசிதழ் பதிவு பெற்றவர்கள்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர்	19	ரூ.37400-67000+8800 தர ஊதியம்
2.	இணை இயக்குநர்	89	ரூ.15600-39100+7600 தர ஊதியம்
3.	உதவி இயக்குநர்	406	ரூ.15600-39100+5400 தர ஊதியம்
4.	வட்டார வளர்ச்சி அலுவலர்	1,036	ரூ.9300-34800+5100 தர ஊதியம் + 1000 சிறப்பு படி
	மொத்தம்	1,550	

அரசு போதுமான பணியிடங்களை அனுமதித்து உத்தரவிட்டும், பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்கள் வழங்கப்படுவதையும் உறுதி செய்கிறது.

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், கூடுதல் இயக்குநர் நிலையில் 19 அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 3 கூடுதல் இயக்குநர்கள் பிற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டில் இணை இயக்குநர் நிலையில் 89 அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 14 இணை

2017 ஜூன் 20]

இயக்குநர்கள் பிற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் 406 அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 2 உதவி இயக்குநர்கள் பிற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.

விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 600-க்கும் அதிகமான ஊராட்சிகள் உள்ளதால் கூடுதலாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளது

5.2 பொறியியல் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பிரிவில் மொத்தம் 5,280 பொறியியல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அட்டவணை 5.2

வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்

வ. எண்.	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்	ஊதிய விகிதம்
1.	கண்காணிப்பு பொறியாளர்	2	ரூ.37400–67000+ தர ஊதியம் ரூ.8700
2.	செயற்பொறியாளர்	45	ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.6600
3.	உதவி செயற்பொறியாளர்	189	ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5400
4.	உதவிப் பொறியாளர்	947	ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.5100
5.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	34	ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.5100
6.	இளநிலைப் பொறியாளர்	311	ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4400
7.	பணிப்பார்வையாளர்/இளநிலை வரைதொழில் அலுவலர்	2603	ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4200
8.	சாலை ஆய்வாளர்	1149	ரூ.5200–20200+ தர ஊதியம் ரூ.2400
மொத்தம்		5,280	

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 38 செயற்பொறியாளர்களும் இதர துறைகளில் 7 செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 178 உதவி செயற்பொறியாளர்களும், மாற்றுப்பணியில் இதர துறைகளில் 11 உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- தொழில்நுட்ப துறையில் பல்வேறு பிரிவுகளில் 947 உதவிப் பொறியாளர்களும், 311 இளநிலைப் பொறியாளர்களும், 34 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 2,603 பணிப்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், அரசாணை (நிலை) எண் 49 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை (இ3), நாள் 31-3-2015-ல் சாலை ஆய்வாளர் நிலை-2 மற்றும் சாலை ஆய்வாளர் நிலை-1 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சாலை ஆய்வாளர் என ஆணையிடப்பட்டு, 1,149 சாலை ஆய்வாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

5.3 முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநில திட்டக்குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS), தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), பேரூராட்சிகள் இயக்ககம், மாநில நலவாழ்வு சங்கம் (TNHSP), தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை

(NRRDA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இத்தகைய பல்துறைப் பட்டறிவு, அலுவலர்களது அறிவாற்றல் மற்றும் அனுபவத்தைப் பெருக்கி, அவர்கள் உயர் பொறுப்புக்களை வகிக்க வழி வகுக்கிறது.

5.4 அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பு

அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின்கீழ் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், உதவியாளர், இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர், தட்டச்சர், பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், ஓட்டுநர், மற்றும் இதர அடிப்படை பணியாளர்களின் பணியமைப்பு கவனிக்கப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி, ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி பணியாளர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின்கீழ் வரும் பணியாளர்களின் வகை, அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அவற்றின் ஊதிய கட்டு விகிதம் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது.

அட்டவணை 5.3

I. வகைவாரியாக பணியாளர்களின் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை	ஊதிய விகிதம்
அ) அரசுப் பணியாளர்கள்			
1.	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	3938	ரூ.9300–34800 தர ஊதியம் 4800 + தனி ஊதியம் 500/–
2.	உதவியாளர்	5563	ரூ.5200–20200 + தர ஊதியம் 2800/–
3.	இளநிலை உதவியாளர்	3137	ரூ.5200–20200 + தர ஊதியம் 2400/–
4.	சுருக்கெழுத்து தட்டச்சர்	182	ரூ.5200–20200 + தர ஊதியம் 2800/–
5.	தட்டச்சர்	1042	ரூ.5200–20200 + தர ஊதியம் 2400/–
6.	ஓட்டுநர்	899	ரூ.5200–20200 + தர ஊதியம் 2400/–
7.	பதிவுரு எழுத்தர்	137	ரூ.4800–10000 + தர ஊதியம் 1400/–
8.	அலுவலக உதவியாளர்	716	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை	ஊதிய விகிதம்
9.	இரவுக் காவலர்	128	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
10.	மசால்ஜி	14	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்			
ஆ)ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்			
1.	ஓட்டுநர்	770	ரூ.5200–20200 + தர ஊதியம் 2400/–
2.	பதிவுரு எழுத்தர்	387	ரூ.4800–10000 + தர ஊதியம் 1400/–
3.	அலுவலக உதவியாளர்	1521	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
4.	இரவுக் காவலர்	377	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
5.	மசால்ஜி	9	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
இ)கிராம ஊராட்சிப் பணியாளர்கள்			
1.	ஊராட்சி செயலர்	12,524	ரூ.2500–5000 + தர ஊதியம் 500/– + சிறப்புப்படி ரூ.500/–
2.	துப்புரவு பணியாளர்	25,155	ரூ.1300–3000 + தர ஊதியம் 300/– (3 வருடம் பணி முடித்தவர்களுக்கு) ரூ.2000/–தொகுப்பு ஊதியம் + அகவிலைப்படி ரூ.40/– ஒரு அரையாண்டிற்கு) (மற்றவர்களுக்கு)
3	மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்	35,548	ரூ.2000/– தொகுப்பு ஊதியம் – அகவிலைப்படி ரூ.40/– ஒரு அரையாண்டிற்கு

1) காலிப் பணியிடங்களை நிரப்புதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2016-2017 ஆம் ஆண்டில், 161 இளநிலை உதவியாளர், 101 தட்டச்சர் மற்றும் 4 சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய காலிப்பணியிடங்கள் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை பணியிட நிலைகளில் ஏற்படும் காலிப்பணியிடங்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும், பத்திரிகை விளம்பரங்கள்மூலம் விளம்பரப்படுத்தியும் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலர் மற்றும்

2017 ஜூன் 20]
ஊராட்சி செயலர்களுக்கு முறையே 10% மற்றும் 20% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலை பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 2016-17 ஆம் ஆண்டில் அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலராக பணியாற்றிய 35 நபர்கள் 10% இட ஒதுக்கீட்டின் கீழும், 127 ஊராட்சி செயலர்கள் 20% இட ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

மேற்கண்ட பதவி உயர்வுகள் மட்டுமின்றி, 2011-12 முதல் 2016-17 வரை 1,236 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், 1,795 உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் மற்றும் 2,610 தட்டச்சர் / இளநிலை உதவியாளர்கள் உதவியாளர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

2) கருணை அடிப்படை பணி நியமனம்

பணியிடைக்காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களின் தகுதியின் அடிப்படையில், அடிப்படை பணிகள் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் ஆகிய அரசுப் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. பணியிடைக்காலமான அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் இச்சலுகை, 2016-17 ஆம் ஆண்டு முதல் பணியிடை காலமாகும் ஊராட்சி செயலாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படை பணி நியமனத்தின்கீழ் 2011-12 முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை பணியிடைக்காலமான அனைத்து நிலை அரசு பணியாளர்களின், 649 வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது.

3) கிராம ஊராட்சி செயலர்களுக்கான சலுகைகள்

கிராம ஊராட்சி செயலர்களின் நலனை உறுதி செய்யும் பொருட்டு, சிறப்பு காலமுறை ஊதியம், சிறப்பு படிகள், நிரந்தர பயணப்படி, வேலைவாய்ப்பு, பெண் ஊராட்சி செயலருக்கு மகப்பேறு விடுப்பு 180 நாள்கள் நீட்டிப்பு, சிறப்பு ஓய்வூதியம், பணியிடை காலமான ஊராட்சி செயலர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி போன்ற பல சலுகைகளை 2011 முதல் 2016 வரையான ஆண்டுகளில் அரசு பல ஆணைகள்மூலம் வழங்கியுள்ளது.

ஊராட்சி செயலர்களுக்கு ஓய்வு பெறும்போது வழங்கப்படும் ஒட்டு மொத்த தொகையான ரூ.50,000-ஐ ரூ.60,000 ஆக உயர்த்தியும், சிறப்பு ஓய்வூதிய தொகையான பிரதி மாதம் ரூ.1,000-ஐ ரூ.1,500 ஆக உயர்த்தியும் அரசாணை (நிலை) எண் 141, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 25.11.2016 வெளியிடப்பட்டுள்ளது.

4) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் ஒரு மைல் கல்

நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்காகவும், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடையே தொடர்புடைய மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வேலைப்பளுவை சரிசமமாக பகிர்ந்து வழங்குவதற்காகவும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள், தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என அரசால் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இதன் பயனாக, கிராம ஊராட்சியின் நிர்வாகத் திறனை மேம்படுத்திடவும், அரசின் பல திட்டங்களை செயல்படுத்திடவும், கிராம ஊராட்சிகளை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திறம்பட வழிநடத்துகின்றனர். அதுமட்டுமல்லாமல், கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கும், ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்கும் ஒரு பாலமாக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செயல்படுகின்றனர்.

5) அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி

அலுவலக நடைமுறையினை அறிவது மற்றும் அவை தொடர்பான திறன்களை அடிப்படை பயிற்சிமூலம் பெறுவது ஆகியவை அரசுப் பணியில் முக்கியமானதாகும். பணியாளரின் அலுவலக ரீதியான முன்னேற்றத்திற்கும் அது தேவையாகும். எனவே, இப்பயிற்சியினை அடைவதற்கான பின்னடைவுகளை களைய சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, 1200 பணியாளர்கள் அடிப்படைப் பயிற்சியினை தாமதமின்றி நிறைவு செய்துள்ளனர்.

6) கணினி உதவியாளர்களை இளநிலை உதவியாளர்களாக ஈர்த்துக் கொள்ளுதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பகம்மூலம் பணியமர்த்தப்பட்டு, தொகுப்பூதியத்தில்

2017 ஜூன் 20]

பணிபுரிந்து 30.09.2015 தேதியன்று 5 ஆண்டுகள் பணிமுடித்த கணினி உதவியாளர்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக சிறப்புத் தேர்வு வைத்து முறையான காலமுறை ஊதியத்தில் இளநிலை உதவியாளர்களாக ஈர்த்துக் கொள்ள அரசாணை (நிலை) எண் 37, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பஅ5) துறை, நாள் 22-03-2017-ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

5.5 திறன் மேம்பாடு

கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில் பொருத்தமாக கூறியவாறு, "சிறப்புடைமை என்பது பயிற்சி மற்றும் பழக்க வழக்கங்களால் வென்றெடுக்கப்படும் கலையாகும். நாம் எதை மீண்டும் மீண்டும் செய்கிறோமோ அதுவாகவே ஆகிறோம்".

எந்த ஒரு செயலாக்கத்திற்கும் அல்லது திட்டத்திற்கும் பயிற்சியானது முதுகெலும்பு ஆகும். அரசின் திட்டங்கள் வெற்றி பெறுவது பெருமளவில் சிறப்பான திறன் வளர்ப்பு மற்றும் அதனைச் சிறப்பாக செயல்படுத்துவது ஆகியவற்றை சார்ந்ததாகும். பயிற்சியாளர்களது திறன், அறிவு, செயல்திறன், திறன் வெளிப்பாடு மற்றும் செயல்பாட்டினை பயிற்சி மேம்படுத்துகிறது.

ஊராட்சி நிர்வாகத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களது திறன் மேம்பாடு என்பது தேவையான அம்சமாகும். பல்வேறு திட்டங்களை ஊரக மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காக செயல்படுத்துவதில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இப்பயிற்சியானது, அவர்களின் திறன் மற்றும் அறிவினை மேம்படுத்தவும், அவர்தம் பொறுப்புகளை, அவர்கள் சிறப்பாக செயல்படுத்துவதற்கும் உதவுகிறது. மேலும் ஊரகப் பகுதியின் வளர்ச்சி மற்றும் ஊரக மக்களின் நலன் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்ட பல்வேறு முயற்சிகளை செயல்படுத்துவதற்கான சிறந்த தொழில் நுட்ப ஆலோசகராகவும், செயல்படுத்துபவராகவும் விளங்கிட பயிற்சி உதவி செய்கிறது.

திறன் மேம்பாடு என்பது பயிற்சிக்குத் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள், கட்டமைப்பு வசதிகள், பயிற்சிகளை தொகுத்து வைத்தல், பயிற்சி பாடத்திட்ட பகுதிகளை தயார்படுத்துதல், பயிற்சி வழிமுறைகள், பயிற்சியின்போது வழங்கப்படும் கையேடுகள் மற்றும் பயிற்சி சார்ந்த செயல்பாடுகள்,

பயிற்சியினை செயல்படுத்த திட்டமிடல், கண்காணித்தல், ஆய்வு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மாநில அளவில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்தியவிஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்மூலம், பல்வேறு நிலை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பொறுப்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5.4

ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்

வ. எண்	மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் பெயர்	மாவட்டத்தின் பெயர்	எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்	துவங்கப் பட்ட ஆண்டு
1.	ச.வி.நகரம்	திருவண்ணாமலை	காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை (5 மாவட்டங்கள்)	**1956**
2.	கிருஷ்ணகிரி அணை	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தருமபுரி, வேலூர் (5 மாவட்டங்கள்)	**1958**
3.	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை (6 மாவட்டங்கள்)	**1954**
4.	பவானிசாகர்	ஈரோடு	ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்)	**1972**
5.	டி.கல்லுப்பட்டி	மதுரை	மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (7 மாவட்டங்கள்)	**1948**

2017 ஜூன் 20]

5.5.1 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் அனைத்து உள்ளாட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

5.5.2 பயிற்சி திட்டங்கள்

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள், தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, ஆளுமை வளர்ச்சி, மனவியல் மேலாண்மை, சமூகத் தணிக்கை திட்டம், கணினி மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகிய பொருள்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் போன்ற தொழில்நுட்ப பணிகள் குறித்த பயிற்சிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்க இயலும்.

5.5.3 பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர்/ இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

5.5.4 நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்குகிறது. மத்திய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி திட்டம் தொடர்பான

சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் பயிற்சி உபகாரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசு தொடரா செலவினத்தின்கீழ் 100% நிதியினை வழங்குகிறது.

2016-17 ஆம் ஆண்டின் சாதனைகள்

அட்டவணை 5.5

ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் எய்தப்பட்ட பயிற்சி சாதனைகள் (வழக்கமான பயிற்சி , கணினி பயிற்சி மற்றும் சிறப்பு பயிற்சிகள்)

வ. எண்	பயிற்சியின் பெயர்	அணிகள்		பயிற்சியாளர்கள்	
		இலக்கு	சாதனை*	இலக்கு	சாதனை
1.	வழக்கமான பயிற்சி	300	297	9000	8802
2.	கணினி பயிற்சி	130	135	3250	3300
	இதர பயிற்சிகள்				
3.	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்-பயிற்றுநர் பயிற்சி	10	10	300	300
4.	ஊரக மேம்பாட்டு திட்டம் (VPDP) பயிற்சி அட்டவணை தயாரித்தல் பற்றிய கருத்தரங்கு	1	1	75	75
5.	ஆர்ஜிபிஎஸ்ஏ-விபிடிபி *மற்றும் திறன் மேம்பாடு	102	58	3621	1992
6.	தூய்மை இந்தியா இயக்கம் தொடர்பான வெளிவளாக பயிற்சி	3	3	230	224
7.	சமூக நல தணிக்கை சான்றிதழ் பயிற்சி	13	13	558	543
8.	புது வாழ்வு திட்டத்தின் திறன் வளர்க்கும் பயிற்சி	9	9	450	474

9.	பண மதிப்பிழத்தல் மற்றும் பணமில்லாத பரிவர்த்தனை தொடர்பான பயிற்சி	2	2	70	68
10.	மையப்படுத்தப்பட்ட இணையதள மென்பொருள் உபயோகப்படுத்துதல் தொடர்பான பயிற்சி	32	32	1120	1117
11.	சமூக நலம் தொடர்பான புத்தறிவு பயிற்சி	2	2	71	71
12.	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்	19	19	732	570
	மொத்தம்	623	572	19477	17435

2016-17 ஆம் ஆண்டில், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில், மாநில அரசு, மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், பணியாளர் மற்றும் பயிற்சி துறைநிதி உதவியுடன் அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட 17,435 நபர்களுக்கு 623 அணிகளில் பலவகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில் 20,000 நபர்களுக்கு 730 அணிகளில் 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

5.5.5 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (மா.ஊ.வ.(ம) ஊ.நி.)

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகளுக்கும், அலுவலர்களுக்கும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல் அலுவலர்களுக்கும், மாநில அளவில் பயிற்சி அளிக்கும் தலைமை நிறுவனமாகும். இந்நிறுவனமானது, 1961 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் ஓர் சங்கமாக 1990 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில் தனது சொந்த இடத்தில் இயங்கி வருகிறது. இதன் மொத்த பரப்பளவு 25 ஏக்கர் ஆகும்.

5.5.6 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் குறிக்கோள்

பல்வேறு நிலையிலான இலக்கு மக்கள் பயிற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதும், அவர்களின் தனிநபர் திறனை உயர்த்துவதும் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை மாற்றுவதன் மூலமும் அரசின் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த வைப்பதே இந்நிறுவனத்தின் முதன்மை குறிக்கோளாகும்.

ஊரகப் பகுதி மற்றும் ஊரக மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை கண்டறிந்து தொடர்புடைய துறைகளுக்கு ஆய்விற்கு ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்குதல்.

- பயிற்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் பயிற்சி வகுப்புகளை நடத்துதல், கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகளை நடத்துதல்.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் தனித்தோ அல்லது இதர பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் சேர்ந்தோ ஆய்வுகளை மேற்கொள்ளுதல் அல்லது அதற்கான உதவிகளை வழங்குதல்.
- ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அது போன்ற பிற திட்டங்களை வகுக்கும் போதும்/செயல்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வளித்தல்.
- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதற்கு கீழ்க்கண்ட பிரிவுகள் தோற்றுவிக்கப்படும்;

i) திட்டங்களை ஆராய்ந்து அறிமுகப்படுத்த பள்ளிகள் நிறுவுதல்

ii) பயிற்சி மற்றும் அறிவுரை வழங்குதல்

iii) ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு போன்ற இதர பல பிரிவுகளை தோற்றுவித்தல்

iv) இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இது போன்ற ஒத்த நோக்கத்தினை உடைய பிற நிறுவனங்கள், அமைப்புகள், சங்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணிபுரிதல்

2017 ஜுன் 20]

v) *தமிழக அரசின் கொள்கை வகுத்தல் மற்றும் முறைப்படுத்துவதில் உதவி செய்தல்*

5.5.7 விரிவுரையாளர்கள் / தொழில் முறை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள்

இந்நிறுவனத்தில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் உள்ளாட்சி நிறுவன பிரதிநிதிகள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு பயிற்சிகள் நடத்துதல் மற்றும் அது சார்ந்த பணிகளை மேற்கொள்ள விரிவுரையாளர்கள், தொழில் முறை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஐந்து சிறப்பு விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மேலாண்மை, வாழ்வாதாரம், சுகாதாரம் தகவல் தொழில்நுட்பம்(கணினி வல்லுநர்) கூட்டுறவு மற்றும் விரிவாக்க கல்வி ஆகிய பிரிவுகளில் பயிற்சிகள் எடுக்க மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

5.5.8 பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில/ மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பயிற்சிகள் நடத்துவதற்கு கீழ்க்கண்ட விவரப்படி நிதி உதவியினை பெறுகிறது.

அ. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் பல்வேறு மத்திய அரசு திட்டங்களின் 100 சதவீத நிதி உதவியுடன் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

ஆ. மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 100 சதவீத அரசின் நிதி உதவியுடன் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க ஏற்பாடு செய்தல்.

இ. தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத்

இந்நிறுவனம் கீழ்க்கண்ட தலைப்பில் நடத்தப்படும் பயற்சிகளுக்கு 100 சதவீத நிதி உதவி வழங்குகிறது.

- *ஒருங்கிணைந்த நீர் ஆதார மேம்பாட்டு திட்டங்கள்.*
- *அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நிர்வாக திறன் மேம்பாடு*

- கணினி பயன்பாட்டிற்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சிகள்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பயிற்சிகள்
- பிரதம மந்திரி கிராம சாலைகள்
- பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம்
- புவி சார்ந்த தகவல் முறை பயிற்சி
- பேரிடர் மேலாண்மை பயிற்சி
- கிராமப்புறங்களில் பணமில்லா பரிவர்த்தனை குறித்த பயிற்சி.
- ஆராய்ச்சி செயல்பாடுகள் குறித்த பயிற்சி

ஈ. மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத் துறை, அமைச்சகம்

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தில் பயிற்சிகள் மேற்கொள்ள நிதி உதவி அளிக்கிறது.

உ. மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித் துறை

மத்திய அரசுத் துறை மற்றும் அமைச்சகத்தில் உள்ள சார்பு செயலர்கள் மற்றும் முதுநிலை பிரிவு அலுவலர்களுக்கு களப்பணியுடன் கூடிய பயிற்சிகளுக்கான நிதி உதவி அளிக்கிறது.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கு நிதி உதவியினை (Grants-in-aids) தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசு பங்குத்தொகையாக 50 : 50 என்ற அடிப்படையில் பெறுகின்றது. பயிற்சி தொடர்பான அடிப்படை ஆதார வசதிகளான பயிலரங்கு கூடங்கள், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் ஊரக அமைச்சகம் 100% நிதி உதவி வழங்குகிறது.

5.5.9 பயிற்சி பங்கேற்பாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு

2017 ஜூன் 20]

உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் (PLF), சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர பிற துறை அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்குகிறது.

5.5.10 பயிற்சி முறைகள்

இந்நிறுவனத்தில் நடத்தப்படும் பங்கேற்பாளர் பயிற்சிகளில் விரிவுரை மற்றும் கலந்துரையாடல் அடிப்படையிலான பயிற்சி முறை கடைபிடிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் இதர பயிற்சி அணுகு முறைகளான பொருளடக்கத்தினை அறிமுகப்படுத்தும் முறை, விளையாட்டுகள், தனி நடிப்பு, புத்துணர்வு நடவடிக்கைகள், மனஇறுக்கத்தை தளர்த்தும் பயிற்சிகள், பங்கேற்பு அணுகுமுறைகள், வல்லுநர் விவாதங்கள், களப்பணி வெற்றிக் கதைகளை கூறுதல், அனுபவப் பகிர்வு, பட்டறிவுப் பயணங்கள், பயிற்சி அட்டைகள் (Charts Preparation) தயாரித்தல் மற்றும் குழு விவாதங்கள் ஆகிய முறைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

5.5.11 பயிற்சிகள் நடத்துதல்

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலை நகரில் உள்ள அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. பிற பயிற்சிகள் வெளி வளாக பயிற்சிகளாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்மூலம் வழங்கப்படுகிறது.

5.5.12 வல்லுநர்கள்

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் ஐதராபாத், தேசிய தகவல் தொழில்நுட்ப மையம் சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து வல்லுநர்கள் பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள், பிற துறையில் பணியில் உள்ள மற்றும் பணி ஓய்வு பெற்ற அலுவலர்கள், மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட முதன்மை பயிற்றுநர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

[2017 ஜுன் 20

5.5.13 நிறுவன உட்கட்டமைப்பு

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான குளிரூட்டப்பட்ட பயிற்சி அரங்குகள், ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், படிப்பகத்துடன் கூடிய நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி கூடங்கள், பயிற்சியாளர்கள் தங்கி உணவருந்தக் கூடிய வகையில் விடுதி வசதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உள்ளன.

5.5.14 2016-17 ஆம் ஆண்டிற்கான பயிற்சிகள் விவரம்

இந்நிறுவனம் 2016-17 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளபடி ஊராட்சி துறை அலுவலர்களுக்கு களப்பயிற்சி, பிற துறை பணியாளர்களுக்கான பயிற்சி மற்றும் வள அலுவலர்களுக்கு பயிற்றுநர் பயிற்சி ஆகிய பயிற்சிகளை அளித்துள்ளது.

அட்டவணை 5.6

மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தின் 2016-17 ஆம் ஆண்டு சாதனைகள்

திட்டம்	பயிற்சி பெற்றவர்கள் விவரம்					
	அணிகளின் எண்ணிக்கை	அலுவலர்கள்	பணியாளர்கள்	சுய உதவி குழு உறுப்பினர்கள்	இதரர்கள்	பயிற்சி பெற்ற மொத்த நபர்கள் விவரம்
பயிற்சி வைப்பு நிதி	1	11				11
ராஜிவ் காந்தி கிராம சுயராஜ்ய யோஜனா தகவல் தொழில் நுட்பம்	6	173	0	0	0	173
பணியாளர் மற்றும் பயிற்சித் துறை	2	60				60
தேசிய ஊரகவளர்ச்சி (ம) ஊராட்சி பயிற்சி நிறுவனம்	4	121				121
மகா.தே.ஊ.வ. திட்டம்	9	331				331
வெளியிட பயிற்சி	14	792				792
மண்புழு உரம் தயாரிப்பு	5			253		253
சுகாதாரம்	4			350		350

2017 ஜுன் 20]

திட்டம்	பயிற்சி பெற்றவர்கள் விவரம்					
	அணிகளின் எண்ணிக்கை	அலுவலர்கள்	பணியாளர்கள்	சுய உதவி குழு உறுப்பினர்கள்	இதரர்கள்	பயிற்சி பெற்ற மொத்த நபர்கள் விவரம்
தேசிய ஊரக வளர்ச்சி (ம) பயிற்சி நிறுவனம் இணைய தளப் பயிற்சி	3	93				93
சமுக தணிக்கையின் ஒரு மாத கால சான்றிதழ் பயிற்சி	12		519			519
கிராம தொழில் நுட்ப வள மையம்	14			455		455
உள்ளாட்சி பிரதிநிதிகள் பயிற்சி II	5	93				93
சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்ட பயிற்சி	981		51172			51172
ராஜிவ் காந்தி ஊராட்சிகளை வலிமைப் படுத்தும் திட்டம்	5	151				151
மொத்தம்	**1065**	**1825**	**51691**	**1058**		**54574**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனம் 2016-17-ஆம் ஆண்டில் மொத்தம் 54,574 நபர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய, மாநில அரசு உள்ளாட்சி பிரதிநிதிகள், மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனம் ஐதராபாத் ஆகிய நிறுவனங்களில் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இவைகள் 2017-18 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

இதில் ராஜீவ்காந்தி பஞ்சாயத்து சசக்திகரன் அபியான் (RGPSA) திட்டத்தின்கீழ், ரூபாய் 44.74 கோடியும், சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், ரூபாய் 4.58 கோடியும் திறன் வளர்ப்பு பயிற்சிக்காக 2017-18 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.5.15 சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம்

சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்பது கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு

[2017 ஜூன் 20

பகுதி ஆகும். இத்திட்டத்தினை உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு 12 கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. ஊரக வளர்ச்சித் துறையில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பாக உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் கால கட்டங்களில் கடலோர பகுதி வாழ் மக்களின் பாதிப்புகளைக் குறைக்க மற்றும் அவ்வாறான காலங்களில் ஏற்படும் இடையூறுகளை சமாளிக்க அவர்களுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்த ஆபத்து குறைப்பு திட்ட வரைவினை தயார் செய்தல் ஆகும். கடலோர பகுதிகளில் வசிக்கக் கூடிய பாதிப்புக்குள்ளாகும் சமுதாயத்தினர் மற்றும் பள்ளி மாணவர்கள் இத்திட்டத்தின் முதன்மை பங்காளர்களாக உள்ளனர். மேலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பயிற்றுநர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் இரண்டாம் தர பங்காளர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் 12 கடலோர மாவட்டங்களில் 45 வட்டார வளர்ச்சி அலுவலக எல்லைக்குட்பட்ட 561 கடலோர கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ.15.00 கோடி ஆகும். ஜூன் 2013 முதல் ஜூலை 2018 வரையிலான காலகட்டத்திற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது

இத்திட்டத்தின்கீழ் கிராம பேரிடர் மேலாண்மை குழு ஒவ்வொரு ஊராட்சியிலும் மற்றும் கிராம ஊராட்சி அளவில், 5 வகை குழுக்களை கடலோர கிராமங்களிலும் அமைத்து, இவர்களைகொண்டு பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய உத்திகளை கையாளும் முறைகள் குறித்து, சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரித்து, அதனை பேரிடர் அபாய காலத்தில் செயல்படுத்த வேண்டும். இத்திட்டத்தில் பேரிடர் காலங்களில் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய திறனுடையவர்களில் முதன்மையானவர்களாக உருவாக்குதல் போன்ற செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிராம பேரிடர் மேலாண்மை குழு உறுப்பினர்கள் (VDMC) மற்றும் ஐந்து கிராமப் பேரிடர் மேலாண்மை அணி உறுப்பினர்களுக்கும் (VDMT) முன்னெச்சரிக்கை, இடம்பெயர்தல்,

2017 ஜூன் 20]

தேடுதல் மற்றும் மீட்பு, பாதுகாப்பு புகலிடம் மற்றும் முதல் உதவி ஆகியவற்றில் அந்தந்த துறை வல்லுநர்கள்மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் VDMT அணிகளில் உள்ள முதல் பொறுப்பாளர்கள் பேரிடர் காலங்களில் சவால்களை எதிர்கொண்டு மேலாண்மை செய்வார்கள்.

மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய கடலோரக் கிராமங்களிலிருந்து, நல்ல திறமை வாய்ந்த 1500 இளைஞர்களை முதன்மை பொறுப்பாளர்களாக கண்டறிந்து அவர்களுக்கு தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்புப்படை மற்றும் தீயணைப்புத்துறை மூலமாக 2017-18 ஆம் ஆண்டில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

2016-17 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தில் 981 பயிற்சிகளின் மூலமாக 51,172 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

5.5.16 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு மையம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு மையத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை,திறன் வளர்ப்பு மற்றும் இத்திட்டம் தொடர்பான பயிற்சியினை மேற்கொள்ள உள்ளது. இந்த பயிற்சியானது ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரோஸிஸ் அபாயத்தை குறைக்கும் திட்டத்தின்கீழ் வருகிறது.

5.5.17 ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சிகளை மறு சீரமைத்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தெளிவான மூன்றடுக்குப் பிரிவுகளைக் கொண்டதாகும். மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும்வகையில் தினக்கூலி வேலைகளை வழங்குவதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி, சாலைவசதிகள், குடிநீர், தெருவிளக்கு சுகாதாரம் ஆகியவற்றை கொடுப்பதற்கான உரிய முயற்சிகள் எடுப்பதே இந்தத் துறையின் கட்டாயக் கடமையாகும். கிராம, வட்டார, மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் நல்ல உள்ளாட்சி நிர்வாகத்தை கொடுக்க இத்துறை உதவுகிறது. மேலும் இத்துறையில் வாழ்வாதாரத்தை மையமாக வைத்துச் செயல்படும்

பிரிவுகளாக தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தைச் செயல்படுத்தும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதியுதவியுடன் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஆகியன உள்ளன. இப்பிரிவுகளின்மூலம் சமுதாயத்தின் பல்வேறு வகையான பிரிவினரும் இலக்காக நிர்ணயிக்கப்படுவதுடன் அவர்களின் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான நிறுவன கட்டமைப்பு, நிதி உள்ளாக்கம் போன்றவைகளை முன்னேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு பிரிவின் செயல்பாடுகளிலும் செயல்பாட்டுத் திறன் மேம்பாடு என்பது ஒரு அங்கமாக உள்ளது. ஊரகப் பகுதிகள் குறைந்து வருதல், நகரமயமாக்குதல், ஊரக வளர்ச்சியின் நோக்கத்தில் மாறுபாடு போன்றவற்றின் அடிப்படையில் திறன் வளர்ப்பு பயிற்சி நடவடிக்கைளிலும் ஒரு மாறுதல் தேவைப்படுகிறது. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தை சீர்மிகு மையமாக மாற்றவும், பலப்படுத்தவும் நடடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

1. ஊரக வளர்ச்சித் துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்து பயிற்சிகளையும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளாக சீரமைத்து குறிப்பாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நிறுவனங்களில் மேற்கொள்ளும் பயிற்சிகளை ஐதராபாத்தில் இயங்கிவரும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் நிறுவனம் ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

2. கள அளவில் உள்ள அலுவலர்கள்/ பணியாளர்கள், மக்கள் பிரதிநிகள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுடன் பல்வேறு நிலைகளில் கலந்தாய்வு செய்த அனுபவத்தின் அடிப்படையில் பயிற்சிகளின் தேவைகள் கண்டறியப்பட்டுள்ளன.

3. உயர் நிலை கல்வி நிறுவனங்கள் மற்றும் அனுபவமிக்க வள ஆதார அமைப்புகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்துடன் இணைந்து ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையில் பங்கேற்பாளர்களின் திறனை மேம்படுத்தவும், அந்நிறுவனங்களின் பணியின் தரத்தை ஊரகப் பகுதிகளில் மேம்படுத்தவும் ஆலோசனைகள் நடத்தப்பட்டது.

2017 ஜூன் 20]

4. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறையில் உள்ள பல்வேறு பயிற்சி நிறுவனங்கள் தற்போது நடத்தும் பயிற்சிகள், பயிற்சி பாடத் திட்டங்கள், பயிற்சி முறைகள், உரிமைக் கட்டண பயிற்சிகள் பயிற்றுனர்களின் திறன் வளர்ப்பு ஆகியவற்றை ஆராய்ந்து, மேம்படுத்தி, மாற்றங்களை கொணடு வர தேவையான ஆலோசனைகளை வழங்க துறை சார்ந்த ஒரு குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. இவ்வாறு துறை அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்படும் குழுவானது மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களை பார்வையிட்டு நிறுவனத்தின் எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள், பங்கேற்பாளர்கள், தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகள், சொந்த வருவாய் தன்மை உள்ள வழிவகைகள், நிலம் மற்றும் பண்ணை போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் பயிற்சி பாடத்திட்டங்கள் ஆகியவற்றை ஆய்ந்து அறிக்கையினை சமர்ப்பிக்கும்.

6. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களை வலுப்படுத்த மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை உயர்நிலை திறன் வளர்ப்பு மையமாக உருவாக்குவதன்மூலம் 2017-18 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி துறை சார்ந்த திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் அடுத்த உயர்நிலைக்கு கொண்டு செல்லப்படும். இதற்காக ஒரு தனிப்பிரிவு ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் உருவாக்கப்பட்டு அதன் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தை உயர்நிலை திறன் வளர்ப்பு மையமாக்கவும் மற்றும் மண்டல ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துதவும் அரசு உத்தரவுகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. கண்காட்சி மற்றும் பொது அறிவை பரப்புவதற்கான மையம் ஒன்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் நிறுவி அதனை உள்ளாட்சி அமைப்புகள், பொதுமக்கள் மற்றும் அலுவலர்களுக்கான வள மற்றும் ஆலோசனை மையமாக செயல்பட வைப்பதற்கு தேவையான முயற்சிகள் 2017-18 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

8. ஊரக வளர்ச்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு ஊரக திட்டப் பணிகளை நிறைவேற்ற தேவையான தொழில் நுட்ப பயிற்சி மையம் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் தோற்றுவிக்கப்படும்.

2017-18 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ள வழக்கமான பயிற்சிகள் மற்றும் கணினி பயிற்சிகள் தவிர கீழ்க்காணும் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இதில் தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் பயிற்றுநர் பயிற்சி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள், சாலை ஆய்வாளர்கள், தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி, கிராம அளவில் திட்டங்களை ஒருங்கிணைக்கும் பயிற்சி, கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டத்தில் பயிற்சியின் தேவைகள் குறித்த ஆய்வு, முழு சுகாதார திட்டத்தில் வெளி வளாகப்பயிற்சி, பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்), பழங்குடியினர் மற்றும் பட்டியல் இனத்தவருக்கான ஊராட்சி நிர்வாகம் பற்றிய பயிற்சி, பெண் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான ஊராட்சி நிர்வாகம் பற்றிய பயிற்சி, சமூகத் தணிக்கை சான்றிதழ் பயிற்சி, புதுவாழ்வுத் திட்டத்தில் திறன் வளர்த்தல் பயிற்சி மற்றும் ஆறு மாவட்டங்களில் பணமில்லா பரிவர்த்தனை பற்றிய பயிற்சி ஆகிய பயிற்சிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திலும், அனைத்து ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களிலும், மேற்கொள்ளப்படும்.

மாநில மற்றும் மண்டல ஊராட்சி நிறுவனங்களில் கட்டமைப்பை வலுப்படுத்துதல்

2017-18 ஆம் ஆண்டில், 6,06,354 பயிற்சியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில், 1,04,732 நபர்களுக்கு ரூ.4.58 கோடி நிதியில் 2242 அணிகளில் சமுதாய பேரிடர் மேலாண்மை திட்டத்தின்கீழ் 12 கடலோர மாவட்டங்களில் பயிற்சி அளிக்க மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் தோராயமாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூலம் 6,06,354 நபர்களுக்கு 14,954 அணிகளில் பயிற்சி நடத்தவும் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் 20,000 நபர்களுக்கு 730 அணிகளில் பயிற்சி நடத்தவுன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 20]

நிறைவாக 2017-18 ஆம் ஆண்டில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்மூலம் ஊரக வளர்ச்சி துறையில் 6,26,354 நபர்களுக்கு 15,684 அணிகளில் பயிற்சிகள் நடத்தப்பட உள்ளது. இதற்கு 2017-18 ஆண்டில் ரூ. 7.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை மேலும் மேம்படுத்தி, வலுவான அமைப்பாக மாற்றி. பயிற்சிகளை செம்மைப்படுத்தி அகில இந்திய அளவில் முதன்மை நிறுவனங்களில் ஒன்றாக உருவாக்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

6. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிருக்கு நிதி சார்ந்த நடவடிக்கைகளுக்கு உதவி அளிப்பதன்மூலம் அவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தி மகளிரை அதிகாரப்படுத்துவதற்காக 1983 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல ஆண்டுகளாக அதன் இலக்கு மற்றும் நோக்கங்களை மறுஆய்வு செய்து அவற்றை அடைவதற்காக திறன் வளர்த்தல், தொடர்ச்சியாக திறனை மேம்படுத்துதல் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்கி, பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் வாயிலாக பெண்களது சமூக பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கீழ்க்காணும் மூன்று முக்கிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

I. **மகளிர் திட்டம்:** பெண்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெறுவதற்காக மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்.

II. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:** ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

III. **தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்:** நகர்ப்புர ஏழை மக்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

6.1 மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண் சார் தொழில்களில் ஈடுபட்டிருந்த

2017 ஜூன் 20]
மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்தியது. இத்திட்டம் முதலில் தருமபுரி மாவட்டத்திலும் பின்னர் சேலம், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவு படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டத்தில், தேவைக்கு ஏற்ப சில மாற்றங்களை செய்து 'மகளிர் திட்டம்' என்ற பெயரில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க தேவையான வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது. சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தவும், செயல்திறனை மேம்படுத்தவும், வாழ்வாதார நடவடிக்கைகளில் உயர்வு பெற்று பயனடைந்திடவும் சுய உதவிக் குழுக்களை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளாக ஒருங்கிணைத்து அவர்களை சமூக மற்றும் பொருளாதார சுய சார்பு அடையச்செய்து ஆற்றல்படுத்துகிறது. இத்தகைய முயற்சிகளின் காரணமாக பெண்கள் பொது சேவையில் பங்குபெறுவது உயர்ந்து வருகிறது.

6.1.1 சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்துதல் மற்றும் ஒருமித்த முடிவுகள்மூலம் உட்கடன் வழங்குதல் ஆகியவை சுய உதவிக் குழுக்களின் நோக்கமாகும். பொருளாதார சுரண்டலை ஏற்படுத்தக்கூடிய கந்துவட்டிக்காரர்கள், அடகுக்கடைக்காரர்கள் மற்றும் இதர சமுதாய கொடுமைகளிலிருந்து மகளிரை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டு, சுய உதவிக் குழுக்களுக்கு சேமிப்பு பழக்கம், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல், வங்கிக்கடன் பெற்றுத்தருதல் மற்றும் கடன்களை திரும்பச் செலுத்துதல் ஆகியவற்றில் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

அட்டவணை - 6.1

சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்

1.	சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை	6.30 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	95.02 இலட்சம்
2.	ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	4.38 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	65.54 இலட்சம்
3.	நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	1.93 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	29.49 இலட்சம்
4.	மொத்த சேமிப்பு	ரூ.6,839.21 கோடி
5.	சுழல் நிதி/ஆதார நிதி பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	5.35 இலட்சம்
6.	சுய உதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு	ரூ.44,452.08 கோடி

6.2 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற சிறப்பு திட்டத்தினை தமிழ்நாடு அரசு 2012-13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் மற்றும் நலிவுற்ற பிரிவினர் இலக்கு மக்கள் ஆவர்.

6.2.1 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

1) பிற திட்டங்களைப்போல் அல்லாது ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடத்து சிறப்பு கவனம் செலுத்துதல்.

2017 ஜூன் 20]

2) விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.

3) ஊரகப் பகுதிகளில் ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.

4) சமூக மேம்பாட்டிற்கான திறம் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை மேம்பாடு அடையச் செய்தல்

5) சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி சந்தைப்படுத்துதலை எளிதாக்குதல்.

6) சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

7) ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாடு பயிற்சி அளித்தல்.

8) அரசுத் துறைகள்மூலம் கிடைக்கப்பெறும் பல்வேறு நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை ஒருங்கிணைத்து திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.

9) கிராமப்புற ஏழை மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

6.2.2 திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ் நாட்டின் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், புதுவாழ்வுத் திட்டம் 120 வட்டாரங்களிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மீதமுள்ள 265 வட்டாரங்களிலும் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. அவற்றுள் 4 மாவட்டங்களில் உள்ள 16 வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டமும் (NRLP) அடங்கும்.

அட்டவணை - 6.2

திட்டம் வாரியாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விவரம்

வ. எண்	திட்டம்	மாவட்டங்கள்	வட்டாரங்கள்	பகுதிகள்	ஊராட்சிகள்
1.	தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் - முதற் கட்டம்	4	16	48	450
2.	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - முதற் கட்டம்	11	44	151	1800
3.	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - இரண்டாம் கட்டம்	27	110	317	3391
4.	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - மூன்றாம் கட்டம்	21	95	226	2451
	மொத்தம்	**31**	**265**	**742**	**8,092**

முதற் கட்டம்:- முதல் கட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 1,873 கிராம ஊராட்சிகளில் 1,800 கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமும், 73 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும், 450 கிராம ஊராட்சிகள் தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டாம் கட்டம்:- 27 மாவட்டங்களிலுள்ள 110 வட்டாரங்களை சார்ந்த 3,491 கிராம ஊராட்சிகளில் 3,391 கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின்மூலம் 2013-14 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 100 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மூன்றாம் கட்டம்:- 2014-15 ஆம் ஆண்டு முதல் 2,451 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் மூன்றாம் கட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

2017 ஜூன் 20]

6.2.3 இயக்க செயலாக்க அமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை மாநில அரசு நியமித்துள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளை கண்காணித்தல் பணிகளுக்காக மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், முதன்மைச் செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட, வட்டார மற்றும் தொகுதி அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

6.2.4 தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்

1) *தகவல் கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள்*

2) *சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலவரங்கள் தொடர்பான அடிப்படைத் தகவல் சேகரித்தல் (செயல்பாட்டிலுள்ள, செயலிழந்த மற்றும் கலைந்த குழுக்கள்)*

3) *மக்கள் நிலை ஆய்வு*

4) *கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைத்தல்*

5) *திட்டப் பணியாளர் மற்றும் சமுதாயத்திற்கான திறன் வளர்ப்பு பயிற்சிகள்*

6) *விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்*

7) *கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல்*

8) *வங்கி இணைப்பின் மூலம் நிதி உள்ளாக்கம்*


[2017 ஜூன் 20

9) வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி

10) வாழ்வாதார மேம்பாடு

11) சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை மேம்படுத்துதல்

6.2.5 வரிசைபடுத்தப்பட்ட நடவடிக்கைகள்



6.3 திட்ட செயல்பாடுகள்

6.3.1 தகவல் கல்வி மற்றும் தொடர்பு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பேரணி, தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், ரதம், சுவர் விளம்பரங்கள், சுவரொட்டிகள், இயக்க தகவல் பலகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் போன்ற பல செயல்பாடுகளின்மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி இலக்கு மக்களை கண்டறிவதற்கும் அவர்களை பயன்பெற செய்வதற்கும் வழிவகை செய்கிறது.

6.3.2 அடிப்படை விவரக் கணக்கெடுப்பு

புது வாழ்வு திட்ட சமூக வல்லுநர்களைக்கொண்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்பாட்டில் உள்ள

2017 ஜூன் 20]

சுய உதவிக் குழுக்கள், செயலிழந்த மற்றும் கலைந்துவிட்ட சுய உதவிக் குழுக்களின் விவரங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இந்த அடிப்படை விவரக் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது. செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் வளர்ப்பு பயிற்சிகள் மூலமாக மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

6.3.3 மக்கள் நிலை ஆய்வு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரை கண்டறிந்திட அனைத்து சமுதாயத்தினரின் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறை மற்றும் பிற யுக்திகளான நடைப்பயணம், சமுதாய வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு பகுதிகளில் அதனை சரிபார்த்தல் போன்ற வழிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலை அனைத்து குக்கிராமத்திலுள்ள முக்கியமான இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, எதிர்ப்புகள் மற்றும் புதியதாக சேர்ப்பது போன்ற விவரங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றையும் பெற்று இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்படுகிறது.

இத்தகைய மக்கள் நிலை ஆய்வு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களை சார்ந்த அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது.

6.3.4 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சுய சார்பு அமைப்பாகவும், கிராம அளவில் இயக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முழுப் பொறுப்பு ஏற்பதோடு கிராம சபைக்கு விளக்கம் அளிக்கக்கூடிய அமைப்பாகவும் திகழ்கிறது. இந்த அமைப்புகள் சமுதாயத்திற்கும், திட்டத்திற்கும் இடையே மிக முக்கிய இணைப்பாக செயல்படுகிறது. ஊராட்சி மன்றத் தலைவர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் தலைவராகவும் பதவியில் இருப்பார்.

ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திலும் 10 முதல் 20 உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கிராம சபை ஒப்புதலுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

1. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து ஒரு சுய உதவிக் குழு உறுப்பினர்.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தவர் 30 விழுக்காடு.

3. மாற்றுத்திறனாளி மற்றும் இளைஞர் பிரதிநிதி ஒருவர்.

4. 50 விழுக்காடு பெண்களாக இருத்தல் வேண்டும்.

இதுவரை மூன்று கட்டங்களை சார்ந்த 8,269 கிராம ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.3

வறுமை ஒழிப்புச் சங்கங்களின் விவரங்கள்

கட்டங்கள்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட ஊராட்சிகளின் எண்ணிக்கை	பொது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை	பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை	மொத்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை
முதற் கட்ட மாவட்டம்	2,323	73	2,250	66	2,316
இரண்டாம் கட்ட மாவட்டம்	3,491	100	3,388	85	3,473
மூன்றாம் கட்ட மாவட்டம்	2,499	48	2,451	29	2,480
மொத்தம்	**8,313**	**221**	**8,089**	**180**	**8,269**

6.3.5 சமுதாய முதலீட்டு நிதி

சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதி.

2017 ஜூன் 20]

சமுதாய முதலீட்டு நிதியானது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிலிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாற்றப்பட்டு பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.75,000/- வீதம் ஆண்டிற்கு 9% வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகை சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் சுய உதவிக் குழுமூலம் கடனாக விடுவிக்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள் சமுதாய முதலீட்டு நிதியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடமிருந்து பெறுவதற்கான தகுதிகள்

அ) தரம் பிரித்தலில் வெற்றி பெற்ற சுய உதவிக் குழுக்கள்.

ஆ) வெளிக் கடனை தவணை தவறாமல் முறையாக திரும்பச் செலுத்தும் சுய உதவிக் குழுக்கள்.

இ) சுய உதவிக் குழுக்களால் நுண்நிதி திட்டம் தயாரித்திருத்தல்.

ஈ) கடன் பெற தகுதியிருந்தும் வங்கியிலிருந்து கடன் பெற இயலாத சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

உ) புதியதாக அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதார திட்டத்திற்காக கடன் வழங்க முன்னுரிமை அளித்தல்.

6.3.6 சமூகத் தணிக்கை குழு

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை குழுவில் 5 முதல் 7 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். மாற்றத்தகாத கோட்பாடுகளை திட்ட செயலாக்கத்தில் முறையாகப் பின்பற்றப்படுவதை சமூகத் தணிக்கை குழு கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் நடைமுறை உள்ளது.

6.3.7 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

மக்கள் நிலை ஆய்வின்மூலம் கண்டறிந்த, விடுபட்ட ஏழை மகளிரைக்கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள்

அமைக்கப்படுகின்றன. 2016-17 ஆம் ஆண்டில் 7,839 புதிய சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளன. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழு செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தகம் பராமரிப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. ஆறு மாதங்கள் முழுமையடைந்த சுய உதவிக் குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, பொருளாதார செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது.

6.3.8 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தி பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஒரு சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு பெற்ற அமைப்பாகும். சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அடிப்படைத் தளமாக விளங்கும்.

6.4 திறன் வளர்ப்பு

6.4.1 திட்டப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அதன் திட்டக் கூறுகள் மற்றும் கோட்பாடுகளை பணியாளர்கள் அறிந்து கொள்ளவும் மற்றும் சீரான முறையில் செயல்படுத்தவும் திட்டம் குறித்த பல்வேறு பயிற்சிகளை கீழ்க்கண்டவாறு வழங்குகிறது:

- தூண்டல் பயிற்சி I
- தூண்டல் பயிற்சி II
- கருப்பொருள் சார்ந்த பயிற்சி

6.4.2 சமுதாய அடிப்படையிலான அமைப்புகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சமுதாய அளவில் கவனம் செலுத்தி, ஏழை நல அமைப்புகளின் திறனை அறிந்து அவற்றை வலுப்படுத்தும் வகையில் செயல்படுகிறது. மேலும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் ஆளுமை திறன், நிதி மேலாண்மை மற்றும் கூட்டு முயற்சி ஆகியவற்றையும் மேம்படுத்திட பயிற்சி அளிக்கப்படுகிறது.

2017 ஜூன் 20]

வழங்கப்படும் சில பயிற்சிகளின் விவரங்கள் பின்வருமாறு:

- *சமுதாய செயல்பாட்டிற்கான விளக்கக் கையேடு குறித்து கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சி.*
- *புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி மற்றும் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சீ .*
- *ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு, நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த பயிற்சி.*
- *ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.*
- *ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்களுக்கும், குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கான பயிற்சி மற்றும் சமூகத் தணிக்கை குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.*

6.4.3 முதன்மைப் பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல்வேறு கருப்பொருள்களில் வள பயிற்றுநர்களை உருவாக்குவதற்காக பயிற்றுநர்களுக்கான பயிற்சிகளை வழங்கி அவர்களை பயிற்சியாளர்களாக பட்டியலிட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் மாவட்ட, மாநில, வட்டார அளவில் சமுதாய வள பயிற்றுநர்களை தேர்ந்தெடுத்து அவர்களை முதன்மை பயிற்றுநர்களாக உருவாக்குவதற்காக பல்வேறு வகையான பயிற்சிகளை முனைப்புடன் செயல்படுத்துகிறது.

சமுதாய வளப் பயிற்றுநர் மற்றும் சமுதாய வள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

***சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள்** - ஒவ்வொரு 10 முதல் 15 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர் என்ற விகிதத்தில் பயிற்றுநர்களை கிராம அளவில் கண்டறிந்து பயிற்றுவித்தல்.*

***சமுதாய வல்லுநர் (வேலைவாய்ப்பு)** - இளைஞர்களுக்கான பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை கண்காணித்திட*

ஊராட்சிக்கு ஒருவர் என்ற அளவில், இளைஞர்களை கண்டறிந்து அவர்கள் சமுதாய வல்லுநர்களாக உருவாக்கப்படுகின்றனர். அவர்கள் ஊராட்சியிலுள்ள இளைஞர்களின் புள்ளிவிவரங்களை பராமரித்து பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகளுக்காக தகுதியான இளைஞர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.

சமுதாய மாற்றுத்திறனாளிகளுக்கான வழிநடத்துநர் - மாற்றுத்திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அவர்களுக்கு பெற்றுத்தந்திடும் பொருட்டு ஓர் ஊராட்சிக்கு ஒருவர் என்ற விகிதத்தில், மாற்றுத்திறனாளிகள் பற்றிய புள்ளி விவரங்களை பராமரிக்கவும், அவர்களின் தேவையை கண்டறியவும் மற்றும் இதர அரசுத் துறை நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு பல்வேறு திட்டப் பயன்களை மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைந்து பெற்றிடவும், சமுதாய மாற்றுத்திறனாளிகளுக்கான வழிநடத்துநர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் - ஒரு தொகுப்பிற்கு 4 நபர்கள் வீதம் சுய உதவிக் குழுக்களிலிருந்து, சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வங்கி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்துதல், உறுப்பினர்களுக்கு கடன் பெற வழிகாட்டுதல், கடன் திரும்ப செலுத்துதல் மற்றும் காப்பீடு ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் நிதி சார்ந்த கல்வியறிவு மற்றும் ரொக்கமில்லா பணப் பரிவர்த்தனை சார்ந்த கருத்துக்கள் பற்றி சுய உதவிக் குழுக்களுக்கு எடுத்துரைக்கும் பொருட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

6.4.4 வங்கியாளர்கள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நிதி உள்ளாக்கத்திற்கு பல்வேறு நிலைகளில் முக்கியத்துவம் வழங்கி வருகிறது. மாவட்ட வாரியாக சுய உதவிக் குழு வங்கி இணைப்பு, நிதி உள்ளாக்கம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த பயிற்சிகள் வழங்கிட பயிற்சியாளர்கள் உருவாக்கப்பட்டு மாவட்ட மற்றும் வட்டார அளவில் வங்கியாளர்களுக்கான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

6.4.5 2016–17 ஆம் ஆண்டின் திறன் வளர்ப்பு செயல்பாடுகள்:

- 1,64,860 கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு இயக்க வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி முதல் 4 தொகுதிகளில் வழங்கப்பட்டுள்ளது.
- மூன்றாம் கட்ட வட்டாரங்களில் அமைக்கப்பட்ட 7,569 சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மூன்றாம் கட்ட வட்டாரங்களில் அமைக்கப்பட்ட 7,558 சுய உதவிக் குழுக்களுக்கு உறுப்பினர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 4,803 வங்கியாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலக நிர்வாகிகள் நிதி உள்ளாக்கம் குறித்த பயிற்சி பெற்றுள்ளனர்.
- தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின்கீழ் செயல்படும் 4 மாவட்டங்களில் உள்ள 458 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள அனைத்து அலுவலக நிர்வாகிகளும் கூட்டமைப்பு தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.
- 845 கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள் புத்தகப் பராமரிப்பு குறித்த பயிற்சி பெற்றுள்ளனர்.

6.5 திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி திட்டம்

6.5.1 வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது வரும் 2023 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை ஊரகப் பகுதியிலுள்ள ஏழை எளிய இளைஞர்கள் அனைவருக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதன் வாயிலாக ஒரு திறன் பெற்ற மாநிலமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டமானது 2012-13 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநில அரசானது இத்திட்டத்தை மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலம் நிரந்தர பதிவெண் பெற்ற பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்போடு செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்தில் கீழ்க்கண்ட முக்கிய பிரிவுகளில் திறன் மேம்பாடு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஆட்டோமொபைல்	விருந்தோம்பல்
சுகாதாரம்	மின் மற்றும் மின்னணு
தோல் மற்றும் தோல் பொருட்கள்	கட்டுமானம்
தகவல் தொழில்நுட்பம்	விவசாய உபகரணங்கள் பராமரிப்பு
சில்லறை வர்த்தகம்	வெல்டிங்
ஆயத்த ஆடைகள்	தொழிற்சாலைகளில் உற்பத்தி சம்பந்தமானவை

திறன் பயிற்சியின் தனித்துவ சிறப்பம்சங்கள்:

1. சந்தை தேவையின் அடிப்படையிலும், வேலைவாய்ப்புடன் கூடியதாகவும் திறன் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

2. பயிற்சி பெற்றவர்களில் குறைந்தது 70% இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதம்.

3. வேலைவாய்ப்புச் சந்தையிலுள்ள தொழில் மற்றும் திறன் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சியானது 3 முதல் 12 மாதங்கள் வரை வழங்கப்படுகிறது.

4. பயிற்சிகளானது உண்டு உறைவிட பயிற்சியாகவும் அவை அல்லாமலும் வழங்கப்பட்டு வருகின்றன.

5. ஊரகப் பகுதியில் உள்ள ஏழை குடும்பங்களில் உள்ள 18 முதல் 35 வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சிக்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்கள். (பெண்கள், பழங்குடியினர், விதவைகள், கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டவர்கள். மற்றும் திருநங்கைகள் ஆகியவர்களுக்கான அதிகபட்ச வயது வரம்பு 45 ஆகும்).

6. சமூக உள்ளாக்கத்தின்கீழ் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர்களுக்கான ஒதுக்கீடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது (அட்டவணை வகுப்பினர் 50%, சிறுபான்மையினர் 15%, மாற்றுத்திறனாளிகள் 3%, பெண்கள் (அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கி) -33%

7. ஆங்கிலத்தில் பேசுதல், அடிப்படை கணினி அறிவு, மென் திறன் மற்றும் வேலை சார்ந்த பயிற்சிகள் போன்ற கள அறிவு மற்றும் கள அறிவு சாராதவைகளும் பயிற்சி திட்டங்களுக்குள் உள்ளடங்கியதாகும்.

8. பயிற்சியில் தேர்ச்சியுற்ற மாணவர்களுக்கு அரசு சான்றிதழ்கள் தேசிய தொழிற்சார் பயிற்சி கவுன்சில் (NCVT) மற்றும் துறை திறன் கவுன்சில் (SSC) மூலம் வழங்கப்படுகிறது.

9. இத்திட்டப் பயனாளிகள் பயிற்சிக்குப் பின்னர் குறைந்தபட்ச மாத வருமானம் ரூ.6000/- அல்லது மாநிலத்தில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சம் ஊதியம் பெறுகின்றனர்.

10. பயிற்சிக்கு பின் வேலைவாய்ப்பு, பணி முன்னேற்றம் மற்றும் இடப்பெயர்வு ஆதரவு மையம் (Migration Support Centre).

11. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு கிடைத்திட வழிவகை செய்கிறது.

12. இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்ற பின்னரும் பணியில் தொடர்ந்து நீடிப்பதை உறுதி செய்ய ஒரு வருடத்திற்கு கண்காணிப்பு செய்யப்படுகிறது.

13. பெற்றோர்களுக்கு இளைஞர்கள் மேம்பாடு சம்பந்தமாக ஆலோசனை வழங்கப்படுகிறது.

அட்டவணை 6.4

மாவட்ட வாரியாக கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு இலக்கு மற்றும் சாதனை 2012 - 13 முதல் 2015-16 வரை)

வ. எண்	மாவட்டம்	இலக்கு	முடிவுற்றது	பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
1.	அரியலூர்	285	285	221
2.	கோயம்புத்தூர்	2,245	2,245	1,753
3.	கடலூர்	1,560	1,560	1,288
4.	தருமபுரி	325	325	282
5.	திண்டுக்கல்	1,180	1,180	910
6.	ஈரோடு	1,745	1,745	1,509
7.	காஞ்சிபுரம்	1,914	1,914	1,308

[2017 ஜுன் 20

வ. எண்	மாவட்டம்	இலக்கு	முடிவுற்றது	பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
8.	கன்னியாகுமரி	620	620	330
9.	கரூர்	510	510	445
10.	கிருஷ்ணகிரி	960	900	739
11.	மதுரை	660	660	302
12.	நாகப்பட்டினம்	907	907	716
13.	நாமக்கல்	1,156	1,156	913
14.	நீலகிரி	345	345	271
15.	பெரம்பலூர்	492	492	414
16.	புதுக்கோட்டை	1,410	1,410	1,067
17.	இராமநாதபுரம்	1,200	1,200	946
18.	சேலம்	1,055	939	662
19.	சிவகங்கை	840	840	709
20.	திருவண்ணாமலை	1,910	1,910	1,614
21.	தஞ்சாவூர்	1,533	1,513	1,166
22.	தேனி	613	613	533
23.	திருவள்ளூர்	1,720	1,720	1,377
24.	தூத்துக்குடி	150	150	42
25.	திருநெல்வேலி	980	980	650
26.	திருப்பூர்	2,850	2,850	2,553
27.	திருவாரூர்	745	745	506
28.	திருச்சி	1,060	1,060	642
29.	வேலூர்	2,340	2,340	1,637
30.	விழுப்புரம்	1,775	1,745	1,420
31.	விருதுநகர்	1,570	1,570	1,302
புதுவாழ்வுத் திட்டம்		3,600	3,600	2,940
மொத்தம்		**40,255**	**40,029**	**31,167***

* மீதமுள்ள இளைஞர்களுக்கு சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்கள்மூலம் வேலையில் அமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2017 ஜூன் 20]

அட்டவணை 6.5

திறன் மற்றும் பணியமர்வு திட்டத்தின்கீழ் தொழில் வாரியான இலக்கு மற்றும் சாதனை (2012-13 முதல் 2015-16 வரை)

வ. எண்	தொழில் வர்த்தகம்	பயிற்சி பெற்றவர்கள்	பணியமர்வு செய்யப்பட்டவர்கள்
1.	தொழில்கள்	3,783	2,934
2.	தகவல் தொழில்நுட்பம்	12,876	10,957
3.	ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை	9,423	7,273
4.	விருந்தோம்பல்	2,837	2,134
5.	கட்டுமானம்	771	573
6.	ஆட்டோமொபைல்	3,938	2,717
7.	அழகுக் கலை	786	653
8.	தீ மற்றும் பாதுகாப்பு	8	7
9.	சுகாதாரம்	1,539	1,247
10.	சில்லறை வணிகம்	1,683	1,153
11.	தோல் பொருட்கள்	270	233
12.	ஓட்டுநர்	2,115	1,286
	மொத்தம்	**40,029**	**31,167**

இது வரை 20,859 இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இதுவரை 15,839 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

6.5.2 வேலைவாய்ப்பு முகாம் வாயிலான பணியமர்வு

வேலை தேடுபவர்களுக்கும் வேலை வழங்குபவர்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்திட தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின்கீழ் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெறும் இடம், தேதி மற்றும் பங்கேற்கும் நிறுவனங்களின் விவரங்கள் ஆகியவை மாவட்ட நிர்வாகத்தினால் பல்வேறு தகவல் தொடர்பு முறைகளின் வாயிலாக பொது மக்களிடையே தெரிவிக்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு முகாம்களின்போது பங்கேற்கும் நிறுவனங்கள், இளைஞர்கள் வேலையில் சேர்ந்த பிறகு அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் பயன்கள் பற்றிய விவரங்களை தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு இளைஞரின் தகுதிக்கும், ஆர்வத்திற்கும் ஏற்ற சரியான வேலையை தேர்ந்தெடுக்க இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்களிலேயே தனியாக அறிவுரை பகர்தல்/வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.

2015-16 ஆம் ஆண்டில் 190 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 68,180 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2016-17 ஆம் ஆண்டில் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அதில் நாளதுவரை 328 வட்டாரங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களின் வாயிலாக 24,850 இளைஞர்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பகுதிகளிலும் 7,177 இளைஞர்கள் புதுவாழ்வு திட்டத்தின் பகுதிகளிலும் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அட்டவணை 6.6

வேலைவாய்ப்பு முகாம்கள் 2016-17

வ. எண்	மாவட்டம்	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்			புதுவாழ்வு திட்டம்			மொத்தம்		
		நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
1.	அரியலூர்	2	4	377	3	2	312	5	6	689
2.	கோயம்புத்தூர்	2	4	232	3	2	316	5	6	548
3.	கடலூர்	4	8	982	4	2	298	8	10	1,280
4.	தருமபுரி	3	3	60	4	3	298	7	6	358
5.	திண்டுக்கல்	4	10	585	3	2	213	7	12	798
6.	ஈரோடு	7	12	2,321	0	0	0	7	12	2,321
7.	காஞ்சிபுரம்	2	4	601	7	3	487	9	7	1,088
8.	கன்னியாகுமரி	3	9	512	0	0	0	3	9	512

வ. எண்	மாவட்டம்	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்			புதுவாழ்வு திட்டம்			மொத்தம்		
		நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
9.	கரூர்	2	8	35	3	3	265	5	11	300
10.	கிருஷ்ணகிரி	4	7	534	3	3	294	7	10	828
11.	மதுரை	5	10	154	3	3	301	8	13	455
12.	நாகப்பட்டினம்	3	10	846	3	2	296	6	12	1,142
13.	நாமக்கல்	6	15	957	3	3	302	9	18	1,259
14.	நீலகிரி	4	4	495	0	0	0	4	4	495
15.	பெரம்பலூர்	1	4	83	3	2	287	4	6	370
16.	புதுக்கோட்டை	2	9	408	3	2	296	5	11	704
17.	இராமநாதபுரம்	1	3	160	4	2	253	5	5	413
18.	சேலம்	5	10	1,317	3	2	265	8	12	1,582
19.	சிவகங்கை	3	8	782	3	3	312	6	11	1,094
20.	திருவண்ணாமலை	6	11	1,054	2	3	136	8	14	1,190
21.	தஞ்சாவூர்	3	9	534	0	0	0	3	9	534
22.	தேனி	3	5	301	3	2	238	6	7	539
23.	திருவள்ளூர்	3	10	376	5	3	357	8	13	733
24.	திருவாரூர்	8	10	700	3	2	205	11	12	905
25.	தூத்துக்குடி	3	12	1,108	4	2	275	7	14	1,383
26.	திருநெல்வேலி	6	12	785	4	3	287	10	15	1,072
27.	திருப்பூர்	6	11	804	0	0	0	6	11	804
28.	திருச்சி	6	12	869	0	0	0	6	12	869
29.	வேலூர்	4	17	2,032	3	3	258	7	20	2,290
30.	விழுப்புரம்	1	4	4,531	3	2	274	4	6	4,805
31.	விருதுநகர்	3	11	315	3	3	352	6	14	667
	மொத்தம்	**115**	**266**	**24,850**	**85**	**62**	**7,177**	**200**	**328**	**32,027**

[2017 ஜூன் 20

அட்டவணை 6.7

வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் வேலை வழங்கப்பட்ட பிரிவு வாரியான பட்டியல் 2016-17

வ. எண்	தொழிலின் பெயர்	பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை		
		தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்	புது வாழ்வு திட்டம்	மொத்தம்
1.	கைபேசி ஒருங்கிணைத்தல்	644	32	676
2.	கணினி	1,607	218	1,825
3.	கட்டடப் பணி	1,192	420	1,612
4.	ஆயத்த ஆடைகள்	5,172	2,213	7,385
5.	தொழில் நிறுவனங்கள்	3,101	2,588	5,689
6.	ஓட்டுநர்	907	1,042	1,949
7.	மருத்துவ பயன்பாடுகள்	848	5	853
8.	அழகுக்கலை	12	11	23
9.	கோழி வளர்ப்பு	9	0	9
10.	சமையல் கலை	347	312	659
11.	சில்லறை வர்த்தகம்	2,245	75	2,320
12.	சேவை சார்பு	1,932	0	1932
13.	பொதுவான தொழில்கள்	6,834	261	7,095
மொத்தம்		**24,850**	**7,177**	**32,027**

6.6 நிதி உள்ளாக்கம்

6.6.1 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி

மூன்று மாதம் முடிவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு சிறிய தொகையாக ரூ.15,000 வீதம் ஆதார நிதி வழங்கப்படுகிறது. இந்த ஆதார நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உட்கடனை பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

2017 ஜூன் 20]

6.6.2 சுய உதவிக் குழு - வங்கி இணைப்பு

சுய உதவிக் குழு வங்கி இணைப்பு திட்டத்தில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலமாக திகழ்கிறது. போதுமான கடனுதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்குவதன் வாயிலாக பெண்களை பொருளாதாரத்தில் அதிகாரப்படுத்த வழிவகை செய்கிறது.

2016-17 ஆம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பு இலக்காக 6,000 கோடி ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டு 2,16,738 சுய உதவிக் குழுக்களுக்கு 6,387.52 கோடி ரூபாய் எய்தப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் மட்டும் 32,848.25 கோடி ரூபாய் வங்கிகளின் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

6.6.3 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம்

வட்டி மானிய திட்டம் மத்திய அரசால் தர்மபுரி, வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களில் நேரடியாக செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 22 மாவட்டங்களில் இத்திட்டம் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்மூலம் செயல்படுத்தப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளிடமிருந்து பெறப்படும் 3 இலட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில் அதிகபட்சமாக 5.5 விழுக்காடு வரை வட்டி மானியமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை பொதுத் துறை வங்கிகள், வட்டார கிராம வங்கிகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் பெற்ற 1,19,920 சுய உதவிக் குழுக்களுக்கு 25.85 கோடி ரூபாய் வட்டி மானியத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டு, 6,606 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத் தொகையாக 0.99 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தனியார் வங்கிகள் மற்றும் விவசாய கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வழங்கப்படும் சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களையும் வட்டி மானியத் திட்டத்தில் சேர்த்து பயன் பெற ஏதுவாக மாநில அரசால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.6.4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்

சுய உதவிக் குழுக்களின் வளரும் தேவைகளையும் மற்றும் அவர்களுடைய நிதி ஆதாரங்களையும் இணைக்கும் வகையில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கியிடமிருந்து பெருங்கடனைப் பெற்று தேவையான கடன் வசதிகளை வழங்குவதை உறுதி செய்கிறது. கடந்த 6 ஆண்டுகளில் 563 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள்மூலம் பெருங்கடனாக 129.04 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டு 42 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 14.92 கோடி ரூபாய் பெருங்கடன் வழங்கப்பட்டுள்ளது.

6.7 வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழிலில் ஈடுபடும் மகளிரின் வருமானத்தை அதிகப்படுத்தும் பொருட்டு பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவை பின்வருமாறு:

6.7.1 பண்ணைத் தொழில் (Farm Activity) முதன்மை உற்பத்தியாளர் குழு:

விவசாயத்தில் ஒரே வகையான பயிர் சாகுபடி செய்யும் 30 மகளிரை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழு அமைக்கப்படுகிறது. பயிர் உற்பத்திக் குழுக்களைப் போலவே ஆடு வளர்ப்பு மற்றும் மாடு வளர்ப்பு மகளிரையும் ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

இக்குழு உறுப்பினர்களுக்கு, அவர்கள் விளைவிக்கும் பயிருக்கு ஏற்றாற்போலும் மற்றும் அவர்கள் வாழும் பகுதிக்கு ஏற்றாற்போலும் (Crop and area specific) திறன் பயிற்சி மற்றும் நவீன தொழில்நுட்ப பயிற்சிகள், வேளாண் மற்றும் பிற துறை அலுவலர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது.

மேலும், ஒவ்வொரு குழுவிற்கும், தேவையான பொது வசதிகளான விவசாயக் கருவிகள், விதைகள், மருந்துகள் போன்ற இடு பொருள்கள் கொள்முதல் செய்தல் மற்றும் சந்தை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றிற்காக ரூ.30,000 நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம், 758 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 22,740 மகளிர் பயன்பெறுவர்.

2017 ஜூன் 20]

6.7.2 பண்ணை சாரா தொழில் மேம்பாடு: (Non-Farm Activity)

பண்ணை சாரா தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 10 நபர்கள் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்மூலம் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10,000 கடனுதவி வழங்கப்படுகிறது. இத்தொகையினை அவர்கள் புதிதாக தொழில் தொடங்கவோ, ஏற்கெனவே செய்து வரும் தொழிலை மேம்படுத்தவோ அல்லது மாற்றி அமைக்கவோ பயன்படுத்தலாம். இத்திட்டமானது 800 கிராம ஊராட்சிகளில் முதல் கட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இதற்கென தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களுக்கு 4.58 கோடி ரூபாயும், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களுக்கு சமூக முதலீட்டு நிதியிலிருந்து 3.42 கோடி ரூபாயும் செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 8,000 மகளிர் பயன்பெறுவர்.

6.7.3 ஒத்த தொழில் குழு

ஒரு கிராம ஊராட்சியைச் சார்ந்த, ஒரே தொழில் புரியும் மகளிரை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பண்ணை மற்றும் பண்ணை சாரா பல தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்நிதியானது பொது கட்டமைப்பு உருவாக்கம், திறன் வளர்ச்சி, சந்தை இணைப்பு மற்றும் மூலப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களில் இதுவரை 919 ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

6.7.4 வாழ்வாதார சமூக வள பயிற்றுநர்கள்:

சமூக மக்களே தங்கள் சமூகத்தை திறம்பட மேலாண்மை செய்திட வேண்டும் என்பது தேசிய ஊரக வாழ்வாதார வழிகாட்டு நெறிமுறை ஆகும். இக்குறிக்கோளை அடையும் வகையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் வாழ்வாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு ஒருவர் கண்டறியப்பட்டு அவரை சமூக வள பயிற்றுநராக்க (CRP) பயிற்சி அளிக்கப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில் வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் மொத்தம் 758 சமூக வள பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

[2017 ஜூன் 20

6.7.5 பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் - மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP)

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைக் கூறாக "பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்" மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், விவசாய தொழிலில் ஈடுபடும் மகளிரைக் கண்டறிந்து விவசாயத்தில் அவர்களது பங்கேற்பினை அதிகப்படுத்தவும் அவர்கள் விளைவிக்கும் பயிருக்கு ஏற்றாற்போல் நவீன யுக்திகள் மற்றும் நிலைத்த வேளாண்மை (Sustainable Agriculture) *உள்ளிட்ட பல தொழில்நுட்ப பயிற்சிகளை அளித்து அதன்மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து, அவர்களின் வருமானத்தை பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.*

இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 166 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. மொத்தம் 15.96 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 16,800 மகளிர் பயன்பெறுவர்.

6.7.6 ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 25.88 இலட்சம் குடும்பங்கள் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்டுள்ளனர். இக்குடும்பங்களுக்கு நேரடியாக உதவி செய்யும் வகையில், சுய தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி அளித்திடும் சிறப்புத் திட்டம் அரசு ஆணை எண் 82 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை (ம.அ.தி 3) நாள் 25-5-2015 மூலம் தமிழக அரசால் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்டுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதியானது தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலமாகவும், ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும் மற்ற வாழ்வாதார திட்டங்களில் இருந்தும் பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென பிரத்யேகமாக 2,522 பெண்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு 3.14 கோடி ரூபாய் தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கத்தின்மூலம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் 2016-17 ஆம் ஆண்டில்

2017 ஜுன் 20]

1940 மகளிர் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ், இதுவரை மொத்தமாக 56,394 பெண்கள் பயன்பெற்றுள்ளனர்.

6.7.7 சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

i) கண்காட்சிகள்

மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பிரபலப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி சமயங்களில் "மகளிர் மேளா" என்ற பெயரில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை உயர்த்துவதற்கும், சுய உதவிக் குழு பெண்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும், மொத்த கொள்முதல், தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றில் திறனை வளர்ப்பதற்கும் இப்பொருட்காட்சிகள் வாய்ப்புகளை உருவாக்குகிறது. கைவினைப் பொருட்கள், கைத்தறிப் பொருட்கள், மூலிகைப்பொருட்கள், உணவுப்பொருட்கள், இதர பிற வீட்டு உபயோகப்பொருட்கள் ஆகியவை இக்கண்காட்சிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. 2016-17 ஆம் ஆண்டில் 262 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இக்கண்காட்சிகளில் கலந்து கொண்டு 97.02 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

ஊரக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு வசதியாக மாவட்டங்களில் நடைபெறும் கோயில் திருவிழாக்கள் மற்றும் இதர முக்கிய பண்டிகை காலங்களில் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

தேசிய அளவில், புதுதில்லியில் நடைபெறும் இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் பிற மாநிலங்களில் நடத்தப்படும் மண்டல அளவிலான "சாராஸ்" கண்காட்சிகள் ஆகியவற்றில் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்கின்றனர்.

2016-17 ஆம் ஆண்டில், தேசிய அளவில் நடைபெற்ற 6 "சாராஸ்" கண்காட்சிகளின்மூலம் 499 மகளிர் சுய உதவிக் குழுக்கள் 88.32 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

ii) மாநில / மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்

தேசிய மற்றும் மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு,

மாநில, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

iii) மதி அங்காடி (Mathi KIOSK)

மதி அங்காடி என்பது மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட பிரத்யேகமான விற்பனை மையம் ஆகும். இதுவரை 137 அங்காடிகள் நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா இடங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மூலிகைப் பொருட்கள், கைவினைப்பொருட்கள், நவீன சணல் பொருட்கள். செயற்கை ஆபரணங்கள், சிறுதானியங்கள், பொம்மைகள் ஆகியவை சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் முக்கிய பொருட்கள் ஆகும். இதுவரை 224.90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் இந்த மதி அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

6.8 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இதர திட்டங்கள்

6.8.1 கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களிடையே மறைந்துள்ள திறனை கண்டறிவதற்கும், அவர்களிடையே ஒற்றுமை மற்றும் கூட்டு முயற்சியை ஏற்படுத்தவும் கலாச்சாரப் போட்டி நிகழ்வுகள் வட்டார மற்றும் மாவட்ட அளவில் வருடந்தோறும் பொங்கல் திருநாள் சமயத்தில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அதிகமான சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பல்வேறு விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

6.8.2 கல்லூரிச் சந்தைகள்

கல்லூரிச் சந்தைகள் இளைஞர்களிடையே மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்தும் ஒரு விற்பனை தளமாகும். இளைய சமுதாயத்தின் மத்தியில் பிரபலமடைந்துள்ள மற்றும் புதுமையான பொருட்களை கண்டறிந்து உருவாக்குவதற்கும் மற்றும் தரத்தை நிலைப்படுத்துவதற்கும்

2017 ஜூன் 20]

புதுமையான யுக்திகளை மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெறுவதற்கு இது போன்ற சந்தைகள் ஒரு தளமாக அமைகிறது. 2016-17 ஆம் ஆண்டில், 14 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டு, அவற்றில் 244 சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 13.93 இலட்சம் ரூபாய்க்கு உறுப்பினர்கள் தங்களது பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

6.8.3 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையம்

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகிறது. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் சிறப்பு முயற்சியாக மாநிலத்தில் 35 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாடுகளுக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் "பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி" பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை 221.84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 791.10 டன் பிளாஸ்டிக் கழிவுகள் துகள்களாக்கப்பட்டு, அவற்றைக் கொண்டு 1,212.63 கி.மீ. பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

6.9 தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம்

பல்வேறு முக்கிய பங்காளர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காக 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாக தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இம்மையமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் - 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், பல்வேறு நிலைகளில் உள்ள முதன்மை பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குதல் போன்ற பல்வேறு பயிற்சிகளை ஏற்பாடு செய்து நடத்துதல் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் / வழிகாட்டி கையேடுகள் தயாரித்தல் போன்ற

முக்கியப் பணிகளை மேற்கொள்கிறது. மேலும், இம்மையம் திறன் வளர்ப்பு மற்றும் பணியமர்த்துதல் அலகாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

6.10 முற்றம் - மாத இதழ்

முற்றம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் 1998 ஆம் ஆண்டிலிருந்து பிரத்யேகமாக வெளியிடப்படும் மாத இதழாகும். மகளிருக்கான உடல் நலம், சுகாதாரம், மகளிர் மேம்பாடு, கல்வி, வறுமை ஒழிப்பு, நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள், பெண்களுக்கான சட்ட உரிமைகள் போன்ற பல்வேறு விவரங்களை தெரியப்படுத்துவதற்கு முற்றம் மாத இதழ் உதவி புரிகிறது. இவ்விதழ் பகுதி வாரியான சமூக பொருளாதார மேம்பாட்டின் வெற்றிக் கதைகள், மகளிர் அதிகார பகிர்வு, சுய உதவிக் குழுக்களின் சாதனைகள் மற்றும் நடவடிக்கைகளின் சிறப்புகளை வெளிக்கொணர்கிறது.

15 இலட்சம் சுய உதவிக் குழு மகளிர் படித்து பயன்பெறும் வகையில் 75,000 மகளிர் சுய உதவிக் குழுக்களை சந்தாதாரர்களாக முற்றம் இதழ் கொண்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் இதர நிறுவனங்கள் முற்றம் இதழ்களுக்காக சந்தா செலுத்துவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு கருப்பொருள்களில் தகவல்களையும் வழங்குகின்றன.

6.11 தீன்தயாள் அந்தியோதய யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM)

தீன்தயாள் அந்தியோதய யோஜனா-தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கமானது (DAY-NULM) நகர்ப்புற ஏழைகளுக்கான ஒரு வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இவ்வியக்கம் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு அடித்தட்டு அளவில் ஏழைகளுக்கு வலுவான சமுதாய அமைப்புகளை உருவாக்கித் தருவதன்மூலம், இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டினை உறுதி செய்கிறது. இத்திட்டம் 2014-15 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய நிதியுதவி திட்டமான தீன்தயாள் அந்தியோதய யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2017 ஜூன் 20]

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கூறுகள் பின்வருமாறு:

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)
2. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T)
3. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மற்றும் பணியமர்வுப் பயிற்சி (EST&P)
4. சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)
5. நகர்ப்புற நடைபாதை வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம் (SUSV)
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH) மற்றும் புதிய முயற்சிகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் (I&SP) என்ற பிரத்யேகத் திட்டக் கூறினையும் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், நான்கு முக்கிய திட்டக்கூறுகளான சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID), திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T) வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி (EST&P) மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP) ஆகியவற்றை செயல்படுத்தும் நிறுவனமாக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று திட்டக்கூறுகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தினால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அட்டவணை 6.8

2016-17ல் இத்திட்டத்தினால் எய்தப்பட்ட சாதனைகள்

வ. எண்	விவரம்	இலக்கு	சாதனை
1.	நகர்ப்புரங்களில் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்	15,000	8,514
2.	சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்குதல் எண்ணிக்கை	15,000	1,214
3.	சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்கியத் தொகை (ரூ. கோடியில்)	15.00	1.21
4.	பகுதி அளவிலான கூட்டமைப்புகள் எண்ணிக்கை	458	161
5.	நகர அளவிலான கூட்டமைப்புகள் எண்ணிக்கை	49	10
6.	சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவி பெற்ற தனிநபர்கள் எண்ணிக்கை	13,000	1,895

வ. எண்	விவரம்	இலக்கு	சாதனை
7.	சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தனிநபர்கள் பெற்ற தொகை (ரூ.கோடியில்)	-	13.31
8.	சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவி பெற்ற குழுக்கள் எண்ணிக்கை	3,680	403
9.	சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் குழுக்கள் பெற்ற தொகை (ரூ.கோடியில்)	-	14.17
10.	நகர்ப்புரங்களில் சுய உதவிக் குழுக்கள் பெற்ற வங்கிக்கடன் எண்ணிக்கை	-	71,577
11.	நகர்ப்புரங்களில் சுய உதவிக் குழுக்கள் பெற்ற வங்கிக்கடன் தொகை (ரூ.கோடியில்)	-	2,236.33
12.	EST&P-ன் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள் எண்ணிக்கை	15,000	2,200

6.12 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டம் (MGNREGS - Project LIFE)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ன் படி ஊரக குடும்பங்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளி குடும்பங்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி திட்டம் உருவாக்கப்பட்டது ஆகும்.

இத்திட்டமானது 2015-16 முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கி வேலையில் அமர்த்தப்பட்டு அக்குடும்பங்களின் குறைவான வருவாய் நிலையிலிருந்து நிரந்தர வருவாய் நிலைக்கு செல்வதை உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- இத்திட்டமானது மக்கள் பங்கேற்பு முறையிலான திட்ட உருவாக்க செயலாக்கம் (IPPE-II) நடைமுறைப்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியில் ஈடுபட்ட பணியாளர்களின் குடும்பங்களைச்

சார்ந்த இளைஞர்களுக்கு பகுதி நேர வேலைவாய்ப்பை மாற்று முழுநேர வேலைவாய்ப்பு பெறும் நிலைக்கான திறன் பயிற்சி வழங்கப்படுகிறது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டத்தை (MGNREGS - Project LIFE) செயல்படுத்திடும் பொறுப்பு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- இப்பயிற்சியின் மூன்று முக்கிய கூறுகள்: ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள், சுய வேலைவாய்ப்பு திறன் சார்ந்த பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள்

- இத்திட்டமானது ஏற்கெனவே நடைமுறையில் உள்ள தீனதயாள் உபத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

- பயிற்சி நிறுவனங்களான (PIA's) திட்ட செயலாக்க நிறுவனங்களை அவற்றின் உள்கட்டமைப்பு மற்றும் வேலை வாய்ப்பு பெற்றுத்தரும் திறனை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும்.

- பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 வீதம் ஊக்கத்தொகையாக அவர்களுடைய உணவு மற்றும், போக்குவரத்து செலவாக வழங்கப்படுகிறது.

- பல்வேறு வகையான திறன்மேம்பாட்டு பயிற்சிகள்: ஓட்டுநர் பயிற்சி, தகவல் தொழில் நுட்பம், ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை, விருந்தோம்பல், கட்டுமானம், சுகாதாரம், சில்லறை வணிகம் மற்றும் அழகுக் கலை.

- சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கிகளால் நடத்தப்படும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் (RSETI's) மூலமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்டவாறு மூன்று வகையான திட்டக் கூறுகளுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 20

அட்டவணை 6.9

வ. எண்	திட்ட கூறுகள்	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள்	20,941
2.	சுய வேலைவாய்ப்பு திறன் பயிற்சிகள்	7,500
3.	வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள்	3,500
	மொத்தம்	31,941

ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகளை நடத்திட ஏதுவாக இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் 46.14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

- இது வரையில் ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகளுக்காக 12,724 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்க நிர்வாக அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை 8,560 பயனாளிகளுக்கு பயிற்சிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.
- சுய வேலைவாய்பப்பு திறன் பயிற்சியின்கீழ் 4,395 பயனாளிகளுக்கு கிராம ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின்மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- வாழ்வாதார முன்னேற்ற திறன் பயிற்சியின்கீழ் 3,376 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

6.13 அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

தொலை தூரத்திலுள்ள வேலை செய்யும் இடங்களுக்கும் எளிதில் சென்று வேலை பார்ப்பது மகளிர் அதிகாரப்படுத்துதலில் ஒரு முக்கிய அம்சமாகும். அம்மா இருசக்கர வாகனத் திட்டமானது மகளிர் மேம்பாட்டிற்காக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகும். இந்த தொலைநோக்குத் திட்டத்தை பூர்த்தி செய்யும் விதமாக "அம்மா இருசக்கர வாகனத் திட்டம்" என்ற பெயரில் ஒரு சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஆண்டு தோறும் 200 கோடி ரூபாய் மானிய உதவியுடன் ஒரு இலட்சம் பணிபுரியும் ஏழை மகளிர் பயன்பெறுவர்.

2017 ஜூன் 20]

7. தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்

தமிழ்நாடு புது வாழ்வு திட்டம் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் நாள் துவங்கப்பட்டு, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சமுதாயப் பங்கேற்பு முறையில் செயல்பட்டு வறுமையை ஒழிப்பதும் இலக்கு மக்களை சமூக, பொருளாதார ரீதியாக ஆற்றல் பெறவும் மற்றும் வளர்ச்சியடையச் செய்தலுமே ஆகும். இத்திட்டம் ஏழை மக்களை மேம்படுத்தும் வலிமை மிக்க, துடிப்புமிக்க சமுதாய அமைப்புகளை ஏற்படுத்துதல், அவர்களது தகுதி மற்றும் திறன் ஆகியவற்றை உயர்த்துதல், தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் வணிக வங்கிகளின் வாயிலாக நிதியாதாரங்களைப் பெற வழிவகை செய்தல் மற்றும் அவர்களுக்கு நிலையான வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. ஏழை மக்கள் மேலும் வளர்ச்சியடையும் வண்ணம் சமுதாய பாதுகாப்பு திட்டங்களையும், அவர்களுக்கு உரிய உரிமைகளையும் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. புது வாழ்வு திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் வறுமையில்லா தமிழ்நாடு என்னும் குறிக்கோளை உருவாக்கவும் தேவையானவர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும் மிகவும் ஏழை, எளியோர், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மலைவாழ் சமுதாயத்தினர் நலத்தில் உரிய அக்கறை காட்டவும் இத்திட்டம் வழிவகுக்கிறது. புது வாழ்வு திட்டம் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையான "தமிழகத்தை இந்தியாவிலேயே ஏழ்மை இல்லாத வளர்ச்சி அடைந்த வளமான மாநிலமாக உருவாக்க வேண்டும்" என்ற இலட்சியத்தை நனவாக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற வலுவான, துடிப்பான செயல்பாடுகள் கொண்ட சமுதாய அமைப்புகளை உருவாக்கியதிலும் அவைகளை வலுப்படுத்தியதிலும் புது வாழ்வு திட்டத்தின் வெற்றி அமைந்துள்ளது. இலக்கு மக்களின் திறன் வளர்த்து, நீடித்த நிலைத்த வாழ்வாதாரங்களை உருவாக்கவும், வெளிப்படையான நிர்வாக செயல்பாடுகள் மற்றும் சமுதாய பங்கேற்பினை உறுதிபடுத்துவதிலும் இச்சமுதாய அமைப்புகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

7. 1 செயலாக்க பகுதிகள்

இத்திட்டம் 2005 ஆம் ஆண்டில் முதல்கட்டமாக 16 மாவட்டங்களில் 70 வட்டாரங்களில் உள்ள 2,509 கிராம பஞ்சாயத்துகளில் துவக்கப்பட்டது. திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து 2011 ஆம் ஆண்டில் மேலும் 10 மாவட்டங்களில் 50 வட்டாரங்களில் உள்ள 1,665 கிராம ஊராட்சிகளுக்கு விரிவாக்கப்பட்டு, தற்போது 26 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 120 வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. புது வாழ்வு திட்டம் 9.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.1,871.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.2 திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- வலுவான மற்றும் துடிப்புடன் கூடிய சமுதாய அமைப்புகள் மூலம் வறுமையை நீக்குதல், ஏழை மற்றும் நலிவுற்றோரின் வாழ்க்கைத்தர மேம்பாடு மற்றும் சமூக பொருளாதார வளர்ச்சி அடைய வழிவகை செய்தல்.

- ஏழை, எளிய, நலிவுற்ற மக்களின் ஆற்றலை மேம்படுத்தி அவர்களின் நிலைத்த வாழ்வாதார வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவியினை “மாறா கோட்பாடு அணுகுமுறையினை” பின்பற்றி வழங்குதல்.

- ஏழை மக்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் நலிவுற்றோர் தகுதி மற்றும் திறன் மேம்பாட்டினை உயர்த்துதல்.

7.3. சமுதாயம் சார்ந்த வளர்ச்சி அணுகுமுறை

புது வாழ்வு திட்டம் ஏழை மக்களின் தேவைகளை கண்டறிந்து மக்களுக்காக மக்களே திட்டமிட்டு செயலாற்றும் சமுதாயம் சார்ந்த வளர்ச்சி அணுகுமுறையைப் பின்பற்றி, நிலையான வாழ்வாதாரம்மூலம் வருவாய் பெருகிட முனைப்புடன் செயல்படுகிறது. மேலும், இத்திட்டம் இலக்கு மக்களை பல்வேறு அரசு திட்டங்களின்மூலம் வழங்கப்படும் பயன்களை மற்றும் தங்கள் உரிமைகளை பெற்றிட ஆற்றல்படுத்தவும் பிற துறைகளுடன் சீரிய முறையில் இணைந்து செயலாற்றவும் வழிவகை செய்கிறது.

2017 ஜூன் 20]

புது வாழ்வு திட்ட நோக்கங்களை அடைந்திட கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

- *சமூக திரட்சி மற்றும் சமூக அமைப்புகளை ஏற்படுத்துதல்.*
- *திறன் மேம்பாடு*
- *நிதி சேவை*
- *திறன் வளர்ப்புப் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு*
- *வாழ்வாதார மேம்பாடு*
- *நலிவடைவு நீக்கம்*
- *நீர், சுத்தம், சுகாதார வளர்ச்சித் திட்டங்கள்மூலம் ஆரோக்கிய வாழ்வு மற்றும் சுற்றுச் சூழல் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு அளித்தல்.*

7.4 திட்ட செயலாக்க அமைப்பு

7.4.1 மாநில திட்ட செயலாக்க அலகு

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமான தமிழ்நாடு மாநில புது வாழ்வு சங்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலர் தலைமையில் செயல்படுகிறது. திட்ட இயக்குநர் தலைமையில் மாநில திட்ட மேலாண்மை அலகு செயல்படுகிறது. அவருக்கு உறுதுணையாக திட்ட செயல்பாடுகளை சரியான முறையில் வழிநடத்த கூடுதல் திட்ட இயக்குநர்கள் மற்றும் பல்துறை வல்லுநர் குழு பணியமர்த்தப்பட்டுள்ளனர். இச்சங்கம் மாநில அளவில் திட்டத்தின் நிர்வாகம், செயலாக்கம், வழிநடத்துதல், நிதி விடுவித்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

7.4.2 மாவட்ட திட்ட செயலாக்க அலகு

புது வாழ்வு மாவட்ட சங்கங்கள், மாவட்ட அளவில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்களது தலைமையில் செயல்படுகின்றன. மாவட்ட திட்ட அலகின்மூலம் மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் திட்ட செயலாக்க அணியினரை கொண்டு இத்திட்டத்தின் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.4.3 பகுதி அலகு

கிராம மக்கள் அமைப்புகளுக்கு உறுதுணையாக செயல்பட 10 முதல் 15 கிராம ஊராட்சிகளை இணைத்து களப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்களப்பகுதி அமைப்புகளை ஒரு அணித்தலைவர் மற்றும் 4 ஒருங்கிணைப்பாளர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு நிர்வகிக்கிறது.

7.4.4 அடித்தள அளவிலான சமுதாய அமைப்புகள்

கிராம ஊராட்சி அளவில் வலுவான சமுதாய அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சமூக தணிக்கை குழு, ஒத்த தொழில் குழு மற்றும் ஒத்த தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு இலக்கு மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.5 திட்ட செயல்பாடுகள்

7.5.1 தகவல், கல்வி மற்றும் தொடர்பு

புது வாழ்வு திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளைக் பரப்புவதில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பிரச்சாரம் மிகவும் முக்கிய பங்காற்றுகிறது. தேவையின் அடிப்படையில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பிரச்சாரம் தெருமுனை நாடகங்கள், கொள்கை பரப்பு ரதம், சிறு புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவர் ஓவியங்கள் போன்றவற்றின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

7.5.2 மக்களின் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு

மக்கள் நிலை ஆய்வு என்பது மிகவும் ஏழைகள், ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகிய மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களை கண்டறிவதற்காக மக்கள் பங்கேற்புடன் கிராமம் முழுவதிலும் நடைப்பயணம், சமூக வரைபடம், மும்முனை ஆய்வு மற்றும் பொருளாதார நிலை மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொண்டு அதன் அடிப்படையில் செயல்படுத்தப்படும் ஒரு முறையாகும். மக்கள் பங்கேற்புடன் கூடிய வெளிப்படையான இலக்கு மக்கள் தேர்வு பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்படுகிறது. இந்த இலக்கு மக்கள் பட்டியல் அனைத்து தரப்பு மக்கள் மற்றும் பிற துறைகளின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

2017 ஜூன் 20]

7.5.3 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள்

கிராம வறுமை ஒழிப்பு சங்கமானது இலக்கு மக்களின் அனைத்துப் பிரிவு உறுப்பினர்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட சுய சார்பு மிக்க சமூக அமைப்பாகும். 11 முதல் 19 உறுப்பினர்களை கொண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்பானது திட்ட செயல்பாடுகளை நிறைவேற்றவும் கண்காணிக்கவும் திட்டப் பயன்களை கடைநிலை ஏழை எளிய மக்களுக்கு கொண்டு சேர்ப்பதை உறுதி செய்யவும் கிராம அளவில் உறுதுணையாக உள்ளது. இச்சங்கத்தில் ஊராட்சி மன்ற தலைவர் அலுவல்சாரா மரபுவழித் தலைவராக செயல்படுவார்.

கிராம வறுமை ஒழிப்பு சங்கம், கிராம கற்றல் மையமாகவும் செயல்பட்டு மின் ஆளுமை சேவை மற்றும் மின் வணிக சேவை வழியாக மக்கள் தங்களுக்கு உரியவற்றைப் பெறுவதற்கும் பல்வேறு அரசு நலத் திட்டங்களை அறிவதற்கும் உதவி வருகிறது.

திட்ட நிதி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றது. சராசரியாக ரூ.15 இலட்சம் நிதி 3 தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. இந்நிதியில் 40 விழுக்காடு திறன் மேம்பாட்டிற்காகவும், 40 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறப்பு உதவிக்கும், 20 விழுக்காடு இளைஞர்கள் திறன் வளர்ப்புக்கும் திட்ட இலக்குகளின்படி பயன்படுத்தப்படுகிறது.

அட்டவணை 7.1

கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதி செலவினம் 31–5–2017 வரை

ஊராட்சிகளின் எண்ணிக்கை	கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் எண்ணிக்கை	கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கான நிதி செலவினம் 31-05-2017 வரை	
		எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ. கோடியில்)
4,174	4,465	4,465	711.67

7.5.4 சமூகத் தணிக்கை குழுக்கள்

திட்டத்தின் உயிர் மூச்சு கொள்கைகளான அனைவரும் சேர்ந்து முடிவு எடுத்தல், நலிவுற்றோருக்கு முன்னுரிமை

[2017 ஜூன் 20

அளித்தல், பொறுப்புணர்வுடன் நடத்தல் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை பின்பற்றி மக்கள் அமைப்புகள் செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக 5 முதல் 7 உறுப்பினர்கள் கொண்ட 'காவல் குழுவாக' சமூகத் தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்டப்பகுதிகளில் 4,465 சமூக தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டு திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது.

7.5.5 சுய உதவிக் குழுக்கள்

இத்திட்டத்தின்கீழ் ஏழை எளிய மக்களை கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்போது இலக்கு மக்கள் அனைவரையும் குழுக்களில் இணைக்கப்படுவதில் கவனம் செலுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரை 12 முதல் 20 நபர்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கென குழுக்கள் அமைக்கும்பொழுது உறுப்பினர்களின் எண்ணிக்கை அளவு தளர்த்தப்படுகிறது. சேமிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கவும் உறுப்பினர்களின் திறனை வளர்க்கவும் கடன் இணைப்பு பெற்று உறுப்பினர்கள் வாழ்வாதாரம் மேம்படவும் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. புது வாழ்வு திட்டம் புதிய குழுக்களை அமைப்பதோடு மட்டுமல்லாமல் ஏற்கெனவே செயல்படும் குழுக்களையும் ஒருங்கிணைத்து வலுப்படுத்தி வருகிறது. திட்டப்பகுதியில் 1,07,436 சுய உதவிக் குழுக்கள் செயல்படுகிறது. இதில் 3,709 பழங்குடியினர் குழுக்களும் அடங்கும்.

அட்டவணை 7.2

சுய உதவிக் குழுக்களின் விவரம் 31–5–2017 வரை

விவரம்	31-5-2017 வரை சாதனை
அ.புதிய குழுக்கள்	
பெண்களுக்கான சுய உதவிக் குழுக்கள்	22,861
மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்கள்	13,286
திட்டத்தினால் உருவாக்கப்பட்ட மொத்த சுய உதவிக் குழுக்கள்	36,147
ஆ. ஏற்கெனவே செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள்	71,289
மொத்தம் (அ+ஆ)	1,07,436

2017 ஜூன் 20]

7.5.6 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

ஒரு ஊராட்சியில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களையும் உள்ளடக்கிய அமைப்பான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுய உதவி குழுக்களுக்கான நிதி மற்றும் பிற சேவைகளை பெற்றுத்தரும் இடைநிலை அமைப்பாக செயலாற்றுகிறது. திட்ட இலக்கீடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் சராசரியாக ரூ.12 இலட்சம் அமுத சுரபி நிதியாக திட்டத்திலிருந்து இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. இந்த அமைப்பு உறுதியான மற்றும் சிறப்பான சேவையின்மூலம் வட்டிக் கடைக்காரர்கள் மற்றும் நுண்நிதிக்கடன் நிறுவனங்களது பிடியிலிருந்து மிகவும் ஏழ்மையில் உள்ளவர்களை விடுவிப்பது இத்திட்டத்தின் பெருமைமிக்க சாதனைகளுள் ஒன்றாகும். குழுக்களை வலுப்படுத்தி அதன் செயல்பாடுகளை கண்காணிப்பதுடன் இதுவரை இக்கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட திட்ட நிதி ரூ.519.40 கோடி சுழற்சி முறையில் 7,75,378 உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டு, அத்தொகை ரூ.1693.49 கோடியாக சுழற்சி பெற்றுள்ளது. கூட்டமைப்புகள் புது வாழ்வு திட்டத்தின் வாயிலாகதான் பெற்ற நிதியை 3.26 மடங்கு சுழற்சி செய்துள்ளன.

அட்டவணை 7.3

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான நிதி செலவினம் 31–5–2017 வரை

ஊராட்சிகளின் எண்ணிக்கை	கூட்டமைப்புகள் எண்ணிக்கை	அமுதசுரபி நிதி விடுவிப்பு 31-5-2017 வரை செலவினம்	
		எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ. கோடியில்)
4,174	4,464	4,463	519.40

7.5.7 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

பெண்கள் சமூக எழுச்சி மற்றும் பொருளாதார ரீதியிலான சுயசார்பு மற்றும் சுயஆற்றல் பெறுவதற்கு முக்கிய பங்காற்றும் அமைப்புகளில் வங்கிகளும் ஒன்றாகும். சுய உதவிக் குழுக்களுக்கு சுலப கடனுதவி வழங்குவதன்மூலமும், கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் அளிப்பதன்மூலமும் ஏழைகளுக்கு உதவுகின்ற ஒரு சிறந்த வாய்ப்பை வங்கிகளுக்கு புது வாழ்வு திட்டம் வழங்கியுள்ளது.

[2017 ஜூன் 20

அட்டவணை 7.4

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வங்கிக் கடன் இணைப்பு 31–5–2017 வரை

விவரம்	31-5-2017 வரை சாதனை	
	குழுக்களின்/ எண்ணிக்கை	நிதி சாதனை (ரூ. கோடியில்)
அ. முதல் வங்கி கடன் இணைப்பு பெற்ற சுய உதவி குழுக்கள்	1,06,211	696.20
ஆ. வங்கியிலிருந்து இரண்டாம் மற்றும் அதற்கு மேல் வங்கிக் கடன் இணைப்பு பெற்ற குழுக்கள்	98,376	4789.73
வங்கி கடன் இணைப்பு பெற்ற மொத்த குழுக்கள் விவரம் (அ+ஆ)		**5485.93**
ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பெருங்கடன்	847	234.19
மொத்த கடன் நுகர்வு		**5720.12**

2016-2017 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கடன் இணைப்பு இலக்கு ரூ.1211.61 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு. ரூ.1376.36 கோடி சாதனை எய்தப்பட்டது. சாதனை சதவீதம் 122 ஆகும்.

7.5.8 திறன் மேம்பாடு

புது வாழ்வு திட்ட பணியாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்து ஆற்றலை மேம்படுத்தி வறுமையொழிப்பு பணிகளை செய்வது திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். திட்ட பணியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு தகுந்த திட்ட வழிகாட்டி பயிற்சிகள், கருத்துரு பயிற்சிகள், தேவையின் அடிப்படைலான பயிற்சிகள் சரியான கால இடைவெளியில் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றவும் இலக்கு மக்களுக்கான சேவைகளை சமுதாய அமைப்புகள்மூலம் வழங்கவும் உதவுகின்றன. திறன் மேம்பாட்டுப் பரிமாற்றம் மற்றும் அறிவுப் பகிர்வு முறைகள்மூலம் கிராம வறுமை

2017 ஜூன் 20]

ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுய உதவிக் குழுக்கள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மகமை ஆகிய சமூக அமைப்புகள் திறம்பட சுயமாகச் செயல்படும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இலக்கு மக்களைக் கண்டறிந்து அவர்களின் திறன்களை மேம்படுத்தி சமூக வல்லுநர்களாக உருவாக்கி வலிமையான சமூக சொத்துகளாக அவர்களை உருவாக்குதல் திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் குறிக்கோள்களில் ஒன்றாகும். அவ்வாறு உருவாக்கப்பட்ட சமூக வல்லுநர்கள், தற்போது திட்டத்தில் சமுதாய வள பயிற்றுநர்களாக செயல்பட்டு வருகின்றனர். இச்சமூக வல்லுநர்கள் சமூக அமைப்புகளுக்கு வழிகாட்டுபவர்களாவும் உறுதுணை மிக்கவர்களாகவும் அவ்வமைப்புகள் பொறுப்புணர்வுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் திறம்பட செயல்பட உதவுகின்றனர்.

அட்டவணை 7.5

திறன் மேம்பாடு பயிற்சி விவரங்கள் 31–5–2017 வரை

வ. எண்	பயிற்சிகள் விவரம்	எண்ணிக்கை	நிதி பயன்பாடு (ரூ. கோடியில்)
1.	திட்ட பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு பயிற்சிகள்	3,270	4.54
2.	திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புக்களுக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட திறன் வளர்ப்பு பயிற்சிகள்	17,90,002	180.17
	மொத்தம்	**17,93,272**	**185.07**

7.5.9 ஒத்த தொழில் குழுக்கள்

ஒரே மாதிரியான அல்லது ஒத்த வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரை ஊராட்சி அளவில் ஒருங்கிணைத்து அவர்களுக்கு தேவைப்படும் பொது உட்கட்டமைப்பு, பொதுவான கொள்முதல், சந்தைபடுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு ஆகிய தேவைகளை பெற்று தருவதற்காக புதிய முயற்சியாக ஒத்த தொழில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒத்த தொழில் குழுக்கள், உறுப்பினர்களின் வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தை உயர்த்துவதன்மூலம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கின்றன. இவ்வகையில் திட்ட நிதியிலிருந்து பொது உட்கட்டமைப்பு வசதியை உருவாக்கவும் பிற ஒருங்கிணைப்பு

நடவடிக்கைகளுக்காகவும் ஒவ்வொரு குழுவிற்கும் அதிக பட்சமாக 1 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

அட்டவணை 7.6

ஒத்த தொழில் குழுக்கள் நிதி செலவினம் 31–5–2017 வரை

ஊராட்சிகளின் எண்ணிக்கை	ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை	குழுக்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி	
		31-5-2017 வரையிலான செலவினம்	
		எண்ணிக்கை	நிதி செலவினம் ரூ. கோடியில்
4,174	5,264	5,264	45.65

7.5.10 ஒத்த தொழில் கூட்டமைப்பு

ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபடுகின்ற ஒத்த தொழில் குழுக்களை வட்டாரம், மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து ஒத்த தொழில் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இக்கூட்டமைப்பின்கீழ் உள்ள குழுக்களுக்கு மூலப்பொருட்கள் கொள்முதல், உற்பத்தி வளர்ச்சி, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான மேல் நிலை ஆலோசனைகள் கூட்டமைப்பின்மூலம் வழங்கப்படுகிறது. ஒத்த தொழில் கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டத்தின்கீழ், பதிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டமைப்பிற்கும் அவற்றின் செயல் திட்ட அறிக்கை அடிப்படையில் 75 விழுக்காடு திட்ட நிதி, 20 விழுக்காடு இதர ஒருங்கிணைப்பு நிதி மற்றும் 5 விழுக்காடு உறுப்பினர்கள் பங்களிப்பு என்ற வகையில் நிதி ஆதாரம் ஏற்படுத்தப்படுகிறது. விவசாயம், பால் பண்ணை தொழில், வெள்ளாடு வளர்ப்பு, காபி, ஆயத்த ஆடை தயாரிப்பு போன்ற 23 ஒத்த தொழில் கூட்டமைப்புகள் இதுவரை அமைக்கப்பட்டு ரூ.5.39 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

7.5.11 மற்ற துறைகளுடன் வாழ்வாதார ஒருங்கிணைப்பு

அ. அகத்தி மரக் கன்று வளர்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் கால் நடை பராமரிப்புத் துறை ஒருங்கிணைப்பு மூலமாக வழங்கப்பட்ட ரூ.1.54 கோடி நிதியினை பயன்படுத்தி சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஒத்த தொழில் குழு மூலமாக

2017 ஜூன் 20]

புது வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் 26 மாவட்டங்களில் 19.24 இலட்சம் அகத்தி மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டன. இதன்மூலம் கால்நடைப் பாரமரிப்புத் துறை, கால்நடைகளுக்குத் தேவையான அகத்தி மரக் கன்று தீவனத்தை உற்பத்தி செய்து உதவியதுடன், திட்ட உறுப்பினர்கள் வருமானம் ஈட்டியும் பயனடைந்துள்ளனர். இதனால், ஒத்த தொழில் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வருமானமும், நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கு அனுபவமும் கிடைக்கப்பெற்றுள்ளது. வளர்க்கப்பட்ட 19.24 இலட்சம் அகத்தி மரக் கன்றுகளும் மாவட்டங்களில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மூலமாக பயனாளிகளின் நிலங்களில் நடுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆ. நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டம்

கால்நடை பராமரிப்புத் துறையின் ஒருங்கிணைப்பு உதவியுடன் இத்திட்டத்தின்கீழ், தருமபுரி, தேனி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், திருவாரூர், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட புதுவாழ்வுத் திட்ட பகுதிகளைச் சேர்ந்த சுய உதவிக் குழு மற்றும் ஒத்த தொழில் குழுக்களில் இருந்து 1,880 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு நாட்டுக் கோழி வளர்க்க நிதி உதவி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் மொத்த நிதி உதவியாக ஒரு பயனாளிக்கு ரூ.61,800 என நிர்ணயிக்கப்பட்டு அதில் ரூ.37,550 கடனாகவும் ரூ.24,250 அரசு மானியமாகவும் வழங்கப்பட்டு ஒரு பயனாளி ஒரு முறை 100 கோழிகள் வீதம் 3 முறை வளர்க்க உதவி செய்யப்படுகிறது. இதன் மூலமாக, சுய உதவிக் குழு மற்றும் ஒத்த தொழில் குழு உறுப்பினர்களுக்கு நிரந்தர கூடுதல் வருமானம் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

7.5.12 வாழ்வாதார மேம்பாட்டு முன் முயற்சிகள்

வேளாண் வணிக மையம்

வேளாண் வணிக மையங்கள் காஞ்சிபுரம், தேனி, திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், விழுப்புரம், சேலம், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய பத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் பொருட்கள் விற்பனையில் இடைத்தரகர்களை நீக்கி நேரடி விற்பனையை ஊக்குவித்து

வேளாண் மக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், சிறு தானியங்கள் மற்றும் காபி, நறுமண பொருட்கள் போன்ற வேளாண் பொருட்களில் இருந்து அதிக லாபம் பெற வழிவகை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக ரூ.44.30 இலட்சம் நிதி வழங்கப்பட்டு 10 மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் வேளாண் மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பெற்று அவற்றினை சேமிப்பு கிடங்கில் தரம் பிரித்து பாதுகாத்து விற்பனை செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது.

7.5.13 மக்கள் கற்றல் மையம் (மகமை)

மக்கள் கற்றல் மையம் உயர்நிலை மையமாக உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்மையங்கள் புதுவாழ்வு திட்டத்தின்கீழ் 16 முதற்கட்ட மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு, சிறப்பான நடவடிக்கைகள் மற்றும் அறிவுத்திறன்களைக் கண்டறிந்து, அதனை பயிற்சிகள்மூலம் இலக்கு மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்த பயன்படுத்துகின்றன. மக்கள் கற்றல் மையங்களில் உள்ள சமூக வல்லுநர்களுக்கு நிறுவன கட்டமைப்பு, வாழ்வாதார மேம்பாடு, கணக்கு மற்றும் தணிக்கை, வரவு செலவு கணக்கு பராமரித்தல், நிதி மேலாண்மை, உடல் நலம் மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மகமைகள் வட்டார மற்றும் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன.

7.5.14 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான உதவிகள்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்ய முனைப்புடன் கூடிய சிறப்பான சேவைகளை மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்ற நபர்களுக்கு வழங்குகின்றன. புது வாழ்வுத் திட்டத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதியில் இருந்து 40 விழுக்காடு நிதி நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வாதார நலம் பேணுவதற்கும், உடனடி தேவைகளுக்கும் செலவிடப்படுகிறது. அவர்களுடைய ஆயுள், உடைமைகள், சுகாதாரம் மற்றும் பிற அரசு துறைகளில் உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இணைத்தல்மூலம் புது வாழ்வுத் திட்டம் அவர்களின் தனிப்பட்ட வாழ்விற்கான பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் ஆற்றல் மேம்பாடே திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளாகும் இதற்காக

2017 ஜூன் 20]

திட்ட செயல்பாடுகள்மூலம் அவர்களுக்கு போதுமான உதவிகள் வழங்கப்படுகிறது.

அட்டவணை 7.7

மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான திட்டம் மற்றும் பிற துறை உதவிகள் 31–5–2017 வரை

விவரம்	31-5-2017 வரை சாதனை	
	எண்ணிக்கை	நிதி சாதனை (ரூ. கோடியில்)
நிதி உதவி	3,59,179	216.89
உபகரணங்கள்	43,837	16.24
பராமரிப்பு நிதி	22,471	3.37
ஓய்வூதியம்	1,72,045	145.46
சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உதவி	12,185	77.55

7.5.15 மாற்றுத் திறனாளிகள் திட்டத்தில் முன் முயற்சி

திட்டத்தின்மூலம் மாற்றுத் திறனாளிகளை தொழில் முனைவோராக மாற்றும் நோக்கத்தில் 76 வட்டாரங்களில் வட்டார அளவிலான தொழில்நுட்ப மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, மையம் ஒன்றிற்கு ரூ.1,50,000 துவக்க நிதியாக திட்டத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. பயிற்சியளிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இந்த மையத்தில் இருந்து கிராம கற்றல் மையம் உட்பட உள்ளூரில் உள்ள கணினி, கைபேசி மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைப் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

7.5.16 புது வாழ்வு மனநலத் திட்டம்

புது வாழ்வு மனநலத் திட்டம் ஜப்பான் மனிதவள மேம்பாட்டு திட்ட நிதியுதவியுடன் அக்டோபர் 2012 முதல் செப்டம்பர் 2016 வரை செயல்படுத்தப்பட்ட பெருமைக்குரிய முன் முயற்சித் திட்டமாகும். இத்திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள்மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோர், மனநலம் குன்றியோர் மற்றும் அவர்கள் குடும்பத்தார் பயன்பெறும் விதமாக மக்கள் பங்கேற்பு முறையில் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் 15 மாவட்டங்களில்/ ஒன்றியங்களில் 578 கிராம ஊராட்சிகளில் உள்ள 609 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் வாயிலாக செயல்படுத்தப்பட்டது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் தனிநபர் தகவல் தொடர்புமூலம்

தானாக சிகிச்சை எடுத்துக் கொள்ளும் செயல், தொடர்ந்து மருந்து உட்கொள்ளுதல் மற்றும் சிகிச்சை பெறுதல் ஆகியவற்றை உறுதி செய்வதன்மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோரின் பாதிப்பிலிருந்து விடுபட நடவடிக்கை எடுக்கப்படுவதே பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள், முழுமையாக குணம் அடைந்தவர்கள் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டது நல்ல விளைவுகளைத் தந்தது. வாழ்வாதார செயல்பாட்டு உதவிகள்மூலம் தங்களுடைய வாழ்வை பொருள் பொதிந்த வாழ்வாகவும் நேர்மறையான வளர்ச்சி அடையவும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்கிறது.

அட்டவணை 7.8

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநலம் குன்றிவர்களுக்கான உதவிகள் 31–5–2017 வரை

வ. எண்	விவரம்	மன நோய்	மனநலம் குன்றியவர்	மொத்தம்
1.	கண்டறியப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோர்கள்	2,741	4,336	7,077
2.	மனநல ஆலோசனை பெற்றவர்கள்	2,690	3,954	6,644
3.	மருத்துவ உதவி பெற்றவர்கள்	2,633	1,734	4,367
4.	வாழ்வாதார உதவி பெற்றவர்கள்	2,612	3,502	6,114
5.	மருத்துவமனை சிகிச்சை பெற்றவர்கள்	810	602	1,116
6.	சிகிச்சை பெற்று நல்வாழ்விற்கு கொண்டுவரப்பட்டவர்கள்	810	-	810
மொத்த நிதி செலவினம்		**ரூ.18.06 கோடி**		

7.5.17 புது வாழ்வுத் திட்டத்தில் பழங்குடியினர்களுக்கான மேம்பாட்டு பணிகள்

புது வாழ்வுத் திட்டமானது 26 மாவட்டங்களில் வாழும் பழங்குடியினர்களுக்கும் பல வகையான முன்னேற்றம் மற்றும் ஆற்றல்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதில் 212 ஊராட்சி ஒன்றியங்களில் 351 பழங்குடியினர் கிராம

2017 ஜூன் 20]

வறுமை ஒழிப்பு சங்கங்களும் 3,613 சுய உதவிக் குழுக்களும், 351 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (வாழ்வாதார துணைக் குழுக்கள் உட்பட) 259 ஒத்த தொழில் குழுக்களும், 6 ஒத்த தொழில் கூட்டமைப்புகளும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 106 பழங்குடியினர் ஊராட்சிகளில் கிராம கற்றல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு மின் ஆளுமை திட்டத்தில் உள்ள பயன்களை பழங்குடியினர் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தில் ரூ.29.77 கோடி நிதி உதவியின்மூலம் 84,343 குடும்ப உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர்.

மேலும் இத்திட்டத்தில், திட்ட நிதியுடன் பிற துறைகளின் மூலமாகவும் பழங்குடியினர் பல உதவிகளை பெற்று வருகின்றனர். கிராம வறுமை ஒழிப்பு சங்க உதவியோடு பழங்குடியினர் நல அட்டைகள், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்பு திட்ட அட்டைகள் மற்றும் ஜாதி சான்றிதழ்கள் பெற்று பயன் அடைந்து வருகின்றனர். குறிப்பாக முதியோர் மற்றும் விதவைகள் உதவித் தொகையும் பெற்று வருகின்றனர். மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவியோடு முதலமைச்சரின் சூரிய சக்தி பசுமை வீடுகள் மற்றும் பாரத பிரதமர் குடியிருப்பு வீடுகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

அட்டவணை 7.9

திட்டம் மற்றும் பிற துறைகள்மூலம் பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்ட நலத் திட்ட உதவிகள் 31–5–2017 வரை

வ. எண்	விவரம்	எண்ணிக்கை
1.	திறன் வளர்ப்பு பயிற்சி பெற்ற பழங்குடி இளைஞர்கள்	18,069
2.	திட்டத்தின்மூலம் வாழ்வாதார உதவி பெற்ற பழங்குடியினர்கள்	36,161
3.	பழங்குடியினர் சாதி சான்றிதழ் பெற்றவர்கள்	30,842
4.	நலவாரிய அட்டை பெற்றவர்கள்	19,734
5.	மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதியளிப்பு திட்ட அட்டை பெற்றவர்கள்	47,984
6.	முதியோர் உதவித் தொகை மற்றும் விதவைகள் உதவித் தொகை பெற்றவர்கள்	8,853
7.	பசுமை வீடுகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம்மூலம் பயன் பெற்றவர்கள்	14,474
	மொத்தம்	**1,76,117**

[2017 ஜூன் 20

7.5.18 இளைஞர்கள் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்த்துதல்

தமிழ்நாடு, இந்தியாவில் தொழில் துறையில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இருப்பினும் வறுமை மற்றும் போதிய திறன் பயிற்சியின்மையும் இளைஞர்களின் வாழ்க்கையில் முன்னேறத் தடையாக உள்ளது. ஆகையால், வேலைவாய்ப்பு மற்றும் சந்தைத் தேவையின் அடிப்படையில் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதும் மற்றும் அவர்களுக்கு வழிகாட்டுவதும் புதுவாழ்வுத் திட்டத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறது. இதற்காக, அனைத்து ஊராட்சிகளிலும் வேலைவாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பினை பெற இயலாத 18 முதல் 35 வயது வரையிலான இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களின் சொந்த விவரங்களை சேகரித்து இளைஞர் புள்ளிவிவரப் பட்டியல் தயார் செய்யப்படுகிறது. இளைஞர்களின் விருப்பம், தேவை மற்றும் அவர்களின் ஆர்வத்திற்கேற்ப பல்வேறு துறைகளில் அடிப்படை மற்றும் மேல்நிலை பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

மேலும், புது வாழ்வுத் திட்டம், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவதன்மூலம் வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கும் சிறந்த தொழில் நிறுவனங்களுக்கும் இடையே வேலைவாய்ப்பினை பெற்றுத்தரும் பாலமாக செயல்படுகிறது. பிரபல தொழில் நிறுவனங்களான எல்&டி, ஹூண்டாய், டி.வி.எஸ். செயின்ட் கோபெயின், இன்டிமெட் பேஷன், ட்ரயம்ப், நிஸ்சான் போன்ற நிறுவனங்களை, வேலைவாய்ப்பு முகாம்களில் பங்குகொள்ள செய்து இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் தன்னார்வமுள்ள குறைந்தது ஒரு நபரை தேர்வு செய்து அவருக்கு உரிய பயிற்சி வழங்கி சமூக வல்லுநராக்கப்பட்டு (வேலைவாய்ப்பு) இளைஞர்களை திறன் வளர்ப்பு பயிற்சிக்கு அனுப்புதல், வேலைவாய்ப்புப் பெற்றுத் தருதல் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

2016-17 ஆம் நிதியாண்டில், 30,326 இளைஞர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு, 27,074 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

2017 ஜூன் 20]

அட்டவணை 7.10

இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சி 31–5–2017 வரை

விவரம்	2016-17	31-5-2017 வரை
	எண்ணிக்கை	எண்ணிக்கை
பயிற்சி பெற்ற இளைஞர்கள்	30,326	4,63,597
வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள்	27,074	3,96,441

அட்டவணை 7.11

துறை வாரியாக பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை

வ. எண்	துறை /பயிற்சியின் பெயர்	இளைஞர் மொத்தபயிற்சி பெற்றவிவரம் (எண்ணிக்கை)	இளைஞர் வேலைவாய்ப்பு பெற்றவிவரம் (எண்ணிக்கை)	வேலை வாய்ப்பு சதவீதம்
1.	வாகனம் ஓட்டுநர் பயிற்சி	1,64,997	1,44,591	88
2.	ஆயத்த ஆடை தயாரித்தல்	77,422	66,801	86
3.	கணினிப் பயிற்சி	67,734	55,163	81
4.	தொழில் துறை இயக்கப் பயிற்சி	45,353	37,537	83
5.	கட்டுமானப் பயிற்சி	20,352	17,581	86
6.	செவிலியர் பயிற்சி	14,285	11,682	82
7.	அழகுக் கலை பயிற்சி	8,814	7,182	81
8.	கைபேசிபழுதுபார்த்தல் மற்றும் தயாரித்தல் பயிற்சி	6,880	5,908	86
9.	தோல்பொருள்தயாரித்தல் பயிற்சி	6,346	5,552	87
10.	விருந்தோம்பல் சேவை பயிற்சி (உணவு தயாரித்தல் மற்றும் ஹோட்டல் மேலாண்மை)	6,107	4,776	78
11.	சில்லரை வணிகப் பயிற்சி	364	296	81
12.	இதரப் பயிற்சிகள்	45,033	39,372	87
	மொத்தம்	**4,63,687**	**3,96,441**	**86**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏழை மகளிரை குடும்பத் தலைவராக கொண்ட குடும்பங்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கி, சுய அல்லது நிறுவனம்மூலம் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த புதிய சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் 2016-17 ஆம் ஆண்டில் இதுவரை 6,576 மகளிரை குடும்பத் தலைவராக கொண்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் ஆட்டோ ஓட்டுநர் திட்டம்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 100 மகளிர்க்கு ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி வழங்கி, ஆட்டோ வாங்குவதற்கு தேவையான நிதியுதவியை மானியத்துடன்கூடிய வங்கி கடனாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் 100 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு இதுவரை 60 மகளிருக்கு ஆட்டோ வழங்கப்பட்டுள்ளது.

7.5.19 கிராம கற்றல் மையங்கள்

புது வாழ்வுத் திட்டப் பகுதியில் உள்ள 4,174 ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் கிராம கற்றல் மையங்களாகவும் செயல்பட வலுப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராம கற்றல் மையங்களுக்கும் இணையதள வசதியுடன் கூடிய கணினி, வலைத்தள புகைப்படக் கருவி, பயோமெட்ரிக் கருவி, கல்வி கற்பதற்கான குறுந்தகடுகள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், ஆகியன மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கடைநிலை மக்களும் சந்தை நிலவரம், தொலைதூர மருத்துவ வசதி, இளைஞர்களுக்கான தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் மற்றும் மாணவர்களுக்கான உயர்கல்வி பற்றிய தகவல்களை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராம கற்றல் மையங்கள் மின் ஆளுமை மையங்களாக செயல்பட்டு. சாதி, வருமானம், பிறப்பு, இறப்பு மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள் உதவித் தொகை மற்றும் நலத் திட்டப் பயன்களைக் பெற ஏதுவாகவும் இந்திய அரசின் மின் வணிக செயல்பாடுகளை மேற்கொள்ளவும் வழிவகை செய்கின்றன. இதுவரை 6,05,654 மின் ஆளுமைச் செயல்பாடுகள் மக்களைச் சென்றடைந்து பயனளித்துள்ளன. மேலும், அலைபேசி கட்டணம்

2017 ஜூன் 20]

செலுத்துதல், ஆதார் அட்டை அச்சடித்தல், ஆதார் வழி பணம் வழங்கும் முறை மற்றும் பல்வேறு சேவைகளுக்கான கட்டணம் செலுத்துதல் போன்ற மின் வணிக பரிவர்த்தனைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு இதுவரை 44,133 நபர்கள் சேவைகளைப் பெற்றுள்ளனர். ஆதார் அட்டை பணப்பரிவர்த்தனைமூலம் எளிய முறையில் 5,815 மக்கள் தங்களது வங்கி கணக்கில் இருந்து பணம் பெறுவதற்கான சேவைமூலம் பயனடைந்துள்ளனர். கிராமப்புற மக்கள் தங்களின் மின் கட்டணத்தை எளிய முறையில் செலுத்துவதற்காக தமிழக அரசின் மின் சேவை வாயிலாக 81,947 மின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுவரை கிராம கற்றல் மையம் வாயிலாக சுமார் ரூ.1.76 கோடி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு வருவாயாக கிடைக்கப்பெற்றுள்ளது.

7.5.20 சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம்

அ) சுற்றுச்சூழல்

தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டம் வறுமை ஒழிப்பு மற்றும் ஆற்றலளிப்புப் பணியில் சுற்றுச்சூழலும் மற்றும் சுகாதாரமும் ஒரு பிரிக்க முடியாத அங்கம் என்பதை முன்னிலைப்படுத்துகிறது. இத்திட்டம் பயனாளிகளுடைய வீடு, அதன் சுற்றுப்புறம் மற்றும் கிராமங்களை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருக்க ஊக்கம் அளிக்கிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒரு பகுதியாக 5,264 ஒத்த தொழில் குழுக்களின்மூலம் மேற்கொள்ளப்படும் தொழில்களுக்கான உட்கட்டமைப்பு நிதியினை விடுவிக்கும் முன் இத்தொழில்கள் சுற்றுப்புறச்சூழலுக்கு தகுதியானதா என்று ஆய்வு செய்யப்பட்ட பின்னரே விடுவிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையாக திட்டப் பகுதிகளில் சுமார் 1.33 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. 26 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்ட பின், 963 சிறு விவசாயிகளுக்குச் சொந்தமான 1,342 ஏக்கர் நிலத்தில் இயற்கை வேளாண்மையும் மற்றும் 6,271 எண்ணிக்கையில் அசோலா சாகுபடி, மண் புழு உரம் தயாரித்தல், பஞ்சகவ்யா தயாரித்தல் மற்றும் இயற்கை உரம் தயாரித்தல் போன்ற சுற்றுப்புறச்சூழலுக்கு ஏதுவான செயல்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

[2017 ஜூன் 20

ஆ) நீர், சுத்தம் மற்றும் சுகாதார முன் முயற்சிகள்

1. இத்திட்டத்தின்கீழ் வறுமை ஒழிப்புச் சங்கத்தின்மூலம் 4,174 கிராம ஊராட்சிகளில் சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்த 4,311 சமூக வல்லுநர்கள் (சுகாதாரம்) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2. இத்திட்டத்தின்மூலம் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட 91,680 பயனாளிகளுக்கு துவக்க நிதியாக நபருக்கு ரூ.5000 வீதம் ரூ.45.84 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

3. புது வாழ்வுத் திட்டத்தின்கீழ் சுகாதார மேம்பாட்டிற்காக, சுகாதார கடன் உதவி என்ற திட்டத்தை உருவாக்கி சுத்தம் செய்யும் உபகரணங்கள், கருவிகள், மருத்துவ வசதி, கட்டுமான பணிகள், தண்ணீர் தொட்டி நிறுவுதல், கழிப்பறை சீரமைத்தல் மற்றும் தொடர்புடைய சுகாதார பொருட்கள் தயாரிக்க 2,514 பயனாளிகளுக்கு ரூ.1.73 கோடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளில் 4.48 இலட்சம் பயனாளிகள் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டி உபயோகிக்க ஊரக வளர்ச்சித் துறை திட்டங்களுடன் இணைந்து வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. திட்ட பகுதிகளில் 1,050 கிராம ஊராட்சிகள் திறந்தவெளி கழிப்பிடம் அற்ற ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளதற்கு ஊரக வளர்ச்சித் துறைக்கு இத்திட்டம் உறுதுணையாக உள்ளது.

6. இத்திட்டம் ரூ.8 கோடி செலவில் 2,524 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களில் நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை செயல் விளக்க மாதிரிகளை நிறுவி மக்களிடம் சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வினை 4,465 வறுமை ஒழிப்பு சங்கங்களிலும் ஏற்படுத்தி வருகிறது.

7. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மே மாதம் 2016 ஆம் ஆண்டில் அறிவித்ததன்படி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிகள் வழங்கப்படுள்ளன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 796 மகளிர்க்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்களில் 315 உறுப்பினர்களுக்கு

2017 ஜூன் 20]

ரூ.53.52 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு 397 சுகாதாரம் சார்ந்த சிறு தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. இவர்கள் தயாரிக்கும் பொருட்களை உள்ளாட்சி அமைப்புகளின் தேவைக்கேற்ப வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7.5.21 தேசிய வள நிறுவனம்

தமிழக அரசின் புது வாழ்வுத் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தி, அதன் பயனாக கிடைக்கப் பெற்ற அனுபவத்தாலும், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக முன் மாதிரிகளை ஏற்படுத்தியதன் விளைவாகவும் தேசிய வாழ்வாதார இயக்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அமைச்சகத்தின்மூலம் புது வாழ்வுத் திட்டத்தினை தேசிய வள நிறுவனமாக 2012 ஆம் ஆண்டு அங்கீகரித்தது. இதன் பின்பு உலக வங்கி நிதியுதவி பெறும் பிற மாநில திட்டப் பயனாளிகளுக்கும், பணியாளர்களுக்கும் பிற மாநில ஊரக வாழ்வாதார இயக்கப் பணியாளர்களுக்கும் பல்வேறு கட்ட புத்தாக்கப் பயிற்சிகள் மற்றும் களப்பயணம் மூலம் பட்டறிவு நிகழ்வுகளையும் தேசிய வள நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

நாளது வரை புது வாழ்வுத் திட்ட தேசிய வள நிறுவனம் புதுச்சேரி, மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகிய 3 மாநிலங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு நிறுவனங்களை அமைத்தல், திறன் வளர்த்தல், நிறுவனக் கூட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வாழ்வாதார மேம்பாடு உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் தேசிய வள நிறுவன அமைப்புக்கும் பராமரிப்புக்கும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் ரூ.1 கோடி நிதியினை அனுமதித்துள்ளது.

7.6 திட்டத்தின் தாக்கம்

உலக வங்கியின் சமூக கண்காணிப்புக் குழு ஆய்வு மேற்கொண்ட அறிக்கையில் புது வாழ்வுத் திட்டத்தின் தாக்கம் குறித்த முக்கிய முடிவுகள்

- *வேளாண்மை சாராத வாழ்வாதார நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காக பெறப்பட்ட கடன்களின் விகிதம் 49 சதவீதம் அதிகரித்துள்ளது.*
- *வீட்டு உபயோகப் பொருட்கள், பழுது பார்ப்பதற்காக செலவிட்ட குடும்பங்களின் விகிதம் 29 சதவீதம் அதிகரித்துள்ளது.*

- *குடும்ப உறுப்பினர்களில் திறன் பெற்ற தொழிலாளர்களின் விகிதம் 37 சதவீதம் அதிகரித்துள்ளது.*
- *கிராமச் சபைகளில் பெண்களின் பங்கேற்பு 60 சதவீதம் உயர்ந்துள்ளது.*
- *குடும்பங்களில் வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்து மகளிர் முடிவு எடுக்கும் விகிதம் 14 சதவீதம் அதிகரித்துள்ளது.*

7.7 நிதி செயலாக்கம்

அமெரிக்க டாலர்- இந்திய ரூபாய் இடையிலான மதிப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு ரூ.1667.10 கோடியிலிருந்து ரூ.1871.85 கோடியாக உயர்ந்து ரூ.204.75 கோடி கூடுதலாகக் கிடைத்துள்ளது. தற்போதைய திட்ட ஒதுக்கீடான ரூ.1871.85 கோடியில் 2017 மே மாதம் வரை ரூ.1818.16 கோடி அளவிற்கு திட்டம் செலவினம் மேற்கொண்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள், உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு புது வாழ்வுத் திட்ட இலக்கு ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் 12 ஆண்டுகளாக செயல்பட்டு 30-6-2017 அன்று நிறைவடைய உள்ளது.

7.8 தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) புதுவாழ்வுத் திட்டம் - II

புது வாழ்வுத் திட்டத்தினைத் தொடர்ந்து, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) - புதுவாழ்வுத் திட்டம் - II என்ற புதிய திட்டம் ஊரக தொழில்களை உருவாக்கவும், மேம்படுத்தவும் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், புதுவாழ்வுத் திட்டம் அல்லாத 120 புதிய வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

2017 ஜூன் 20]

8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களை 26 டிசம்பர் 2004 ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக தாக்கிய ஆழிப்பேரலையால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள், கால்நடைகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மின் விநியோகம், வீடுகள் மற்றும் குடிநீர் இணைப்புகளும் பெரிதும் சேதமாகி செயலற்றுப் போயின. மக்களின் நல் வாழ்வையே தனது கடமையாகக் கருதும் மாநில அரசால், பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு விரைவான துயர் துடைப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கடலோர சமுதாய மக்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை உறுதி செய்ய அரசின் உன்னத மற்றும் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூன்று முக்கிய உட்கூறுகள் 1) கடலோர வள ஆதார மேலாண்மை, 2) ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள், 3) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி போன்றவைகள் ஆகும்.

1. திட்டப் பகுதிகள்:

இத்திட்டம், 2007-2008 ஆண்டில் முதற் கட்டமாக ஆறு கடலோர மாவட்டங்களில் மேம்படுத்தப்பட்டு தற்போது, தமிழ்நாட்டில், சென்னை தவிர ஆறு கடலோர மாவட்டங்களுக்கும் 2016-17-லிருந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அ. ஏற்கெனவே திட்டம் செயல்பட்டு வரும் மாவட்டங்கள்

திட்டக் காலம்	:	2007 -08 முதல் 2018-19 வரை
திட்ட மதிப்பீடு		ரூ.283.69 கோடி
திட்டப் பகுதிகள்	:	திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி

ஆ. கூடுதலாக திட்டம் செயல்படுத்தப்படும் புதிய மாவட்டங்கள்

திட்டக் காலம்	:	2016 - 17 முதல் 2018-19 வரை
திட்ட மதிப்பீடு		ரூ.279.49 கோடி
திட்டப்பகுதி	:	திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி

[2017 ஜூன் 20

2. செயலாக்க அமைப்பு:

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் "மாநில திட்ட வழிகாட்டுக் குழு" அமைக்கப்பட்டு திட்ட செயல்பாடுகள் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. மத்திய திட்ட மேலாண்மை அலகில் முதன்மை செயலாளர் அவர்கள் திட்ட இயக்குநராக தலைமையேற்க, கூடுதல் இயக்குநர், நிதி (ம) நிருவாக மேலாளர், முதுநிலை ஊரக நிதி மேலாளர், செயற்பொறியாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு மேலாளர் மற்றும் தகவல் (ம) தொழில்நுட்ப மேலாளர் ஆகியோரைக் கொண்டு திட்ட மேலாண்மை அலகு மாநில அளவில் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் "மாவட்ட அளவிலான செயல்பாட்டு ஆலோசனைக் குழு" அமைக்கப்பட்டு, மாவட்ட செயலாக்க அலுவலர், உதவி செயற் பொறியாளர், கணக்கு அலுவலர், சமுதாய வளர்ச்சி அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு அலுவலர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோருடன் மாவட்ட செயலாக்க அலகு மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றது.

3. நோக்கங்கள்:

கடலோர சமுதாய மக்களின் தற்சார்புடைய நீடித்த வாழ்வாதாரத்தை கூட்டு முயற்சியுடன் ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமுதாய மக்களின் ஒத்துழைப்புடனும், பல்வேறு நிறுவனங்களின் உதவியுடனும், நீடித்து செயல்படக்கூடிய நுண் தொழில்களை ஏற்படுத்தி, திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி, கடன் வசதிகளை ஏற்படுத்தி, இடர்பாடுகளை தவிர்க்க காப்பீடு வசதிகள் செய்து தருவதுடன், மீன் வள ஆதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளையும் உருவாக்கி நிலைத்த வாழ்வாதார நடவடிக்கைகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

4. திட்டப் பயனாளிகள்:

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் வசிக்கும் கீழ்க்கண்ட பிரிவினர்:

- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன் பிடிக்கும் மீனவர்கள்

2017 ஜூன் 20]

- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- கடலோரப் பகுதிகளில் மீன் பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம்.- சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்

5. கடலோர வள ஆதார மேலாண்மை:

அ. சமுதாய ஆதரவு:

திட்ட செயலாக்கத்திற்கு உறுதுணையாக கள அளவில் 5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகளை உள்ளடக்கிய கூட்டு வள மையம் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது திட்டம் செயல்பட்டுவரும் 6 மாவட்டங்களில் 28 கூட்டு வள மையங்கள் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் கூடுதல் மாவட்டங்களில் 36 கூட்டு வள மையங்கள் துவக்கப்படும். ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட செயலாக்குநர், வியாபார ஊக்குநர் மற்றும் கூடுதல் வியாபார ஊக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கூட்டு வள மையங்களுக்கு அலுவலகக் கட்டடம், தகவல் தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை கள அளவில் செயல்படுத்தக்கூடிய சமுதாய அமைப்பாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டடம், தகவல் தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், புது வாழ்வுத் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் போன்ற திட்டங்களின்மூலம் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் நுண்தொழில்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த நிறுவனங்களை திறமையான நிருவாகம் செய்வதில் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இடங்களுக்கு பட்டறிவுப் பயணங்கள் ஆண்டுதோறும் அழைத்து செல்ல ஏற்பாடு

செய்யப்படுகின்றன. இதன்மூலம் தகவல் பரிமாற்றம், அறிவு சார் பரவல், சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தப்படுகின்றது. 2016-2017-ல் ரூ.34.60 இலட்சம் செலவில் நான்கு கூட்டமைப்பு கட்டடங்களும், ரூ.139.20 இலட்சம் செலவில் 17 வலை பின்னும் கூடங்களும், ரூ.16.75 இலட்சம் செலவில் மூன்று மீன் உலர் களங்களும், ரூ.30.00 இலட்சம் செலவில் இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கட்டித் தரப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆ. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்:

திட்ட செயல்பாடுகள் ஆரம்பிக்குமுன், அடிப்படை வள ஆதாரக் கணக்கெடுப்பு, வாழ்வாதார வரைபடம், தர மதிப்பீடு போன்ற பணிகள் கடலோர சமுதாய பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கடற்கரையோர கிராம சமுதாய மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாக்கும் வகையில் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான வலை பின்னும் தளம், மீன் உலர் களம், மீன் கொள்முதல் நிலையம், மீன் ஏலக்கூடம், கூட்டமைப்பு அலுவலகக் கட்டடம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் போன்ற நுண்திட்டங்கள்மூலம் தேர்வு செய்யப்படுகின்றன. 2017-18 ல் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் 129 திட்ட ஊராட்சிகளில் ரூ.38.70 இலட்சம் மதிப்பீட்டில் வாழ்வாதார வரைபடம் தயாரித்தல், ரூ.12.90 இலட்சம் மதிப்பீட்டில் நுண் திட்டம் தயாரித்தல், ரூ.20.64 இலட்சம் மதிப்பீட்டில் அரையாண்டு திட்டமிடல் ஆகிய பணிகள், ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

இ. மீன் வள ஆதார மேலாண்மை:

மீன் வளத்தைப் பெருக்கும் பொருட்டு, மத்திய கடல்சார் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயற்கை பவளப் பாறைகள் 3 வடிவில் தயார் செய்யப்பட்டு 6 இடங்களில் கடற்கரையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 2016-17 ஆம் ஆண்டில் செயற்கை பவளப் பாறைகள் நிறுவ 12 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மீன் வள மேலாண்மை தொடர்பான பிரச்சினைகளை கண்டறிந்திட மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், கண்டறியப்படும் பிரச்சினைகளுக்கு தக்க வல்லுநர்களின் உதவியுடன் தீர்வு காணப்படுகின்றன.

2017 ஜூன் 20]

6. ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள்:

அ. சுய உதவிக் குழுக்களுக்கு நுண் கடனுதவி:

சுய உதவிக் குழுக்களின் நிலைத்த வாழ்வாதாரத்திற்கு எவ்வித தடையின்றி குறித்த காலத்தில் கடன் வழங்குவதே முக்கிய காரணியாக அமைகிறது. மாவட்ட அளவிலான கருத்தரங்குகள்மூலம் திட்டப் பகுதியிலுள்ள திறன்மிகு சுய உதவிக் குழுக்களை வங்கியாளர்களுக்கு அறிமுகப்படுத்தி தர மதிப்பீடு செய்து எளிதில் கடன் இணைப்பு பெற்று தரப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் சீரிய நுண்தொழில்களை நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு வங்கியாளர்களுக்கு பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஐசிஐசிஐ வங்கி, தேசிய வேளாண் வளர்ச்சி வங்கியின் துணை நிறுவனமான நாபின்ஸ், பல்லவன் கிராம வங்கி போன்ற வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நியமனம் செய்யப்பட்டு சமுதாய கண்காணிப்புடன் கூடிய கடன் வழங்குதல் மற்றும் திரும்ப செலுத்துதல் செயல்பாட்டில் உள்ளது. 2016-17 ல் 1,204 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளின்மூலம் ரூ.4,094.77 இலட்சம் கடன் வழங்கப்பட்ட வகையில் 16,756 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 656 கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு ரூ.1,561 இலட்சம் மதிப்பில் வாழ்வாதாரக் கடன் உதவிமூலம் 3,280 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆ. இடர்பாடு மேலாண்மை :

- <u>துயர் குறைப்பு நிதி</u> : ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் துயர் குறைப்பு நிதி நிருவகிக்கப்பட்டு, எதிர்பாராமல் ஏற்படும் இடர்பாடுகளால் வாழ்வாதாரப் பாதிப்பு, சுகாதார பாதிப்பு, விபத்து மற்றும் குடியிருப்பு சேதம் ஆகிய இழப்புகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. இதற்கான வட்டி விகிதம் 6 சதவீதமாகவும், திருப்பி செலுத்தும் காலம் 12 முதல் 18 மாத தவணைகளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் 5-ல் 4 பங்கு (4/5) திட்ட நிதியாகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் வரையறுக்கப்படுகிறது. இக்கடன் தொகை ரூ.1000/- முதல் ரூ.7500/- வரை வழங்கப்படுகிறது.

துயர் குறைப்பு நிதியின் பயன்பாடு விவரம்

வருடம் வாரியாக	பயனடைந்த பயனாளிகள்	தொகை (ரூ.இலட்சத்தில்)
2010 - 11	1875	61.02
2011 - 12	1622	66.72
2012 - 13	3391	151.96
2013 - 14	3860	206.78
2014 - 15	6582	324.28
2015 - 16	6786	345.75
2016 - 17	3660	225.71
மொத்தம்	**27776**	**1382.22**

- **நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி:** புதிய உத்தியை கையாளும் விதமாக சமையலறைக் கழிவுகளிலிருந்து 564 எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. பயனாளிகள் ஒரு கலன் அமைப்பதற்கான மதிப்பீடு தொகை ரூ.20,900/-ல், 30 சதவீதம் திட்ட மானியமாகவும், 24 சதவீதம் குறைந்த வட்டிக்கும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கடனாக 36 விழுக்காடாகவும் மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை 10 சதவீதமாகவும் உள்ளது. சமையலறைக் கழிவுகளை மறுசுழற்சி செய்யப்பட்டு உபயோகப்படுத்துவதால், சுற்றுச்சூழல் தூய்மையாக பராமரிக்கப்படுகின்றது. 2016 - 17 ஆம் ஆண்டில் ரூ.40.96 இலட்சம் மதிப்பீட்டில் சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் 196 கலன்கள் நிறுவப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

- **நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி:** நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதிமூலம் கடன் வழங்க ரூ.7.00 கோடி சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திலிருந்து நாபின்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, இதிலிருந்து ஒவ்வொரு தொழில் கடன் மொத்த தொகையில் 25 சதவீதத் தொகைக்கு 4 சதவீத வட்டி விகிதமும், 70 சதவீதத் தொகைக்கு பாரத ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்ட வட்டி விகிதமும், நிர்ணயிக்கப்பட்டுள்ள இத்தொகையில் 5 விழுக்காடு பயனாளிகளின் பங்குத்

தொகையாகும். இதன்மூலம் அதிகமான குறுந்தொழில்கள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலமாக திட்டப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 1296 வருவாய் ஆதார நுண் தொழில்கள் ரூ.3092.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, 6204 மகளிர் பயனடைந்துள்ளனர்

7. வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி

அ. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு.

திட்ட இலக்கு குழுக்களின் வாழ்வாதாரத்தை திறன் வளர்ப்பின்மூலம் நிலைப்படுத்தும் வகையில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை, நிருவாகம், கணினி பயிற்சி, மகளிருக்கு அதிகாரம் வழங்குதல் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பயன்பாட்டிற்காக டேலி மென்பொருள் வடிவமைக்கப்பட்டு, உறுப்பினர் சுய உதவிக் குழுக்களின் அன்றாட பரிவர்த்தனைகளை பதிவு செய்யப்படுகின்றது. சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 200 சமுதாய வள ஆதார பணியாளர்களுக்கு திட்டக் காலம் முடிவடைந்த பின்னர் திட்டச் செயல்பாடுகளைத் தொடர்ந்திட தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஆ. மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்குதல்:

சிறு படகுகள், கட்டுமரம் மற்றும் வள்ளம்மூலம் மீன் பிடிப்போர் ஆகியோரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட 60 மீன் விற்பனை சங்கங்கள் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளன. மீன் விற்பனை சங்க உறுப்பினர்களை இடைத்தரகர்களிடமிருந்து மீட்கும் பொருட்டு ரூ.15,000/- முதல் ரூ.30,000/- வரை கடன் மீட்பு நிதி வழங்கப்பட்டுள்ளது. மீன் விற்பனை சங்கங்களுக்கு அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீனவர்கள் சங்கங்களின் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கு மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பு விழுப்புரம் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும்

[2017 ஜூன் 20

நிலையங்கள் மூன்றும் மற்றும் மூன்று படகு கட்டும் தளங்களும் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் பயன்படுத்திட நான்கு மீன் ஏலக் கூடங்கள் மற்றும் நான்கு மீன் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இ. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி:

நுண்தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில் குறிப்பாக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்காக 17,092 சமுதாய மக்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஈ. நுண் தொழில் மேம்பாடு: உற்பத்திக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ளோர் நுண் தொழில்களை துவங்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வெற்றிகரமாக நுண்தொழில்களை உருவாக்குவதற்கு வழிகாட்ட ஆலோசகர்கள் / இளம் வல்லுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளிலிருந்து, மரபு சார்ந்த மற்றும் புதுமையான உத்திகளின் அடிப்படையிலான நுண்தொழில்களை பயனாளிகள் மேற்கொள்ளச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். மா விவசாயம், காய்கறி மற்றும் மூலிகைச் செடிகள், மலர்த் தோட்டம், மீன் மற்றும் கருவாடு விற்பனை, கோழி வளர்ப்பு, தென்னை விவசாயம், கயிறு தயாரித்தல், தென்னை ஓலை முடைதல், பொம்மை செய்தல், கடற்சிப்பி பொருட்கள் தயாரித்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், புடவை வண்ணம் தீட்டுதல், மளிகை வியாபாரம், சிற்றுண்டியகம், அழகுக் கலை நிலையம், மின்னணு சேவை மையத்துடன் இணைந்த நகல் மையம் போன்ற தொழில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

உ. வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சி:

திட்டப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தகுந்த தொழில் பிரிவுகளில் மூன்று மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான காலத்திற்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை 6,821 ஊரக இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் கட்ட

2017 ஜூன் 20]

மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் ரூ.195 இலட்சம் மதிப்பீட்டில் 1500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

8. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு:

மாநிலம், மாவட்டம், கூட்டு வள மையம் மற்றும் ஊராட்சி அளவில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்ட செயல்பாடுகளின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் அடிப்படையிலான முன்னேற்றம் இணையதளம் வாயிலாக தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முன்னேற்றங்களை கால வரையறையுடனான தனிப்பட்ட திட்ட நடவடிக்கைகளை மாதாந்திர நேரடி ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் காணொளிமூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சமூக ஊடகங்களின்மூலம் தகவல் பரிமாற்றம், சிறந்த செயல்பாடுகளை கற்றுக்கொள்ளவும் மற்றும் சாதனைகளை அறிந்து கொள்ளவும் மற்றும் அறிவுசார் பகிர்வு போன்றவை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வரையிலும் அறிந்து கொள்ள வழி வகை செய்யப்படுகிறது.

9. அறிவுசார் மேலாண்மை:

சமுதாயம் மற்றும் கூட்டு வள மைய அளவில் அறிவுசார் தேவை குறித்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு திட்ட அறிவுசார் மேலாண்மை யுக்தி தயாரிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் நிகழ்வுகள் குறிப்பாக கூட்டங்கள், பயணங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் பயிற்சிகள் ஆகியவற்றை "முற்றம்" மாத இதழில் கட்டுரைகளாக வெளியிடப்பட்டு வருகின்றன. துண்டுப் பிரசுரங்கள், குறும்படங்கள் ஆகியவையும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

9. வரவு செலவுத் திட்டம், 2017-2018

2017-2018 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.16,665.426 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.15,236.985 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.1,428.441 கோடியும் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.0.25 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 20

10. முடிவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குடன் கூடிய வழிகாட்டுதலின்கீழ், இந்த அரசு, ஊரக வளர்ச்சிக்கு, ஒரு முழுமையான அணுகுமுறை தேவை என்பதை நன்கு உணர்ந்து, அதற்காக, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், தூய்மை காவலர்கள் மூலமாக திடக்கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுபோன்ற தன்னிகரற்ற புதுமையான திட்டங்கள், நாடு முழுவதும் பின்பற்றக் கூடிய வகையில் அமைந்துள்ளன. ஊரக வளர்ச்சித் துறையின் முன் தற்போது உள்ள தெளிவான பணி, இத்திட்டங்களை மேம்படுத்தி, அதன் மூலமாக, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே ஆகும்.

ஊரகப் பகுதியின் வளர்ச்சியில் கிராம ஊராட்சிகள் துடிப்புடன் பங்கேற்பது, கிராம ஊராட்சி அளவில் கிடைக்கக் கூடிய நிதி ஆதாரங்களை பொறுத்தே அமைகிறது. கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் செலவினத்தில் பெரும் பகுதி மின்சார கட்டணத்திற்கே செல்வதை கருத்திற்கொண்டு, தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றுதல், மின்சார இணைப்புகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கணினி வழங்கியுடன் ஊரக வளர்ச்சித் துறையின் கணினி வழங்கியை இணைத்தல் போன்ற அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் கிராம ஊராட்சியில் உள்ள நிதி பற்றாக்குறையை கணிசமான அளவில் குறைக்கும். மேலும் ஐந்தாவது மாநில நிதிக்குழு மானியத்தின் பரிந்துரைகளை செயல்படுத்தி, நிதி ஆதாரங்களை சிறந்த முறையில் பகிர்ந்தளித்து உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த இந்த அரசு உத்தேசித்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் சிறந்த முறையில் ஒருங்கிணைந்து பல்வேறு தனிநபர் மற்றும் பொது சொத்துகளை உருவாக்கி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் ஒரு புதிய பரிமாணத்தினை இந்த அரசு கொண்டு வந்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி மீள்

2017 ஜூன் 20]

நிரப்பு குழாய் (Recharge shaft), தடுப்பணை, கற்களால் ஆன கரை அமைத்தல், மண்ணால் ஆன கரை அமைத்தல், மற்றும் இதர மழைநீர் சேகரிப்பு பணிகள் போன்ற வறட்சியை மட்டுப்படுத்தும் பணிகள் 2017-2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவது முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டினை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் அணுகுமுறையில், பரவலாக்கப்பட்ட சமூகம் சார்ந்த அணுகுமுறைக்கு முக்கியத்துவம் தரும் வகையில் புதிய கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்ப உதவி, ஊக்குவிப்பு மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் வாயிலாக, சுகாதார நடவடிக்கைகள் சிறந்த முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அரசு மேற்கொண்ட தொடர் முயற்சியின் பலனாக, கடந்த 2 ஆண்டுகளில் 4,364 கிராம ஊராட்சிகள் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

திடக்கழிவு மேலாண்மை முறையை செயல்படுத்துவதற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களை தூய்மை காவலர்களாக பயன்படுத்தியது நாட்டிற்கே முன்னோடியாகும். அரசு, இந்த முறையை தொடர்ந்து செயல்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தரும்.

குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது விநியோகக் கடைகள் போன்ற பல்வேறு வசதிகளை உருவாக்குதல் மற்றும் ஊரகச் சாலைகளை முழுமையான முறையில் பராமரிக்கவும் மேம்படுத்தவும் தொடர்ந்து உறுதுணை அளிப்பது இந்த அரசின் மையக் குறிக்கோளாக விளங்கும்.

தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டம் (TNPVP) மற்றும் தமிழ்நாடு மாநில வாழ்வாதாரத் திட்டத்தினை (TNSRLM) செயல்படுத்துவதன்மூலம் ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழைகள் மற்றும் பெண்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரகப் பெண்களுக்கு அதிகாரமளித்தல், திறன் மேம்படுத்துதல் மற்றும் நிதியுதவி அளிப்பதன்மூலம் அவர்களை சுயசார்பு உள்ளவர்களாக மாற்றுவதே இந்த அரசின் குறிக்கோளாகும். சமூக பங்கேற்பின்மூலம், வறுமை மற்றும் வேலையின்மையைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது

ஏழை மற்றும் இயலாதவர்களை கண்டறிதல் என தொடங்கி, பயிற்சி அளித்தல் மற்றும் திறன் மேம்படுத்துதல், வங்கி கடன் இணைப்பு ஏற்பாடுகள் மற்றும் இறுதியாக சுய தொழில் மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்குதல் என முழு வடிவம் பெறுகிறது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களின்மூலம் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை கொண்டுவர இந்த அரசு தொடர்ந்து முயற்சிக்கும்.

வறுமை ஒழிப்பு என்ற இலக்கினை அடைந்து, தமிழகத்தை நாட்டிலேயே மிகச் சிறந்த மாநிலமாக உருவாக்கிட, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடி ஊரக வளர்ச்சித் திட்டங்கள், இந்த அரசு பின்பற்றக் கூடிய கலங்கரைவிளக்கமாக அமையும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

(130 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 53—சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018

1. முன்னுரை

சமூகத்தில் உள்ள பல்வேறு பிரிவினர், குறிப்பாக பின்தங்கிய, நலிவுற்ற பிரிவில் உள்ள ஏழை மக்கள் மற்றும் மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் விதமாக தமிழக அரசு ஏராளமான சமூகத் திட்டங்கள் மற்றும் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு, ஏழைகளுக்கு கறவைப்பசு வழங்குதல், வறியவர்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்குதல், திருமண உதவித் தொகையுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 8 கிராம் விலையில்லா தங்க நாணயம் வழங்குதல் மற்றும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசால் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதற்காகவும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணிப்பதற்காகவும், தமிழக அரசால் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, மே திங்கள் 2011 இல் உருவாக்கப்பட்டது.

வேளாண்மை, எரிசக்தி, கல்வி, நல்வாழ்வு, ஊரக வளர்ச்சி, தொழில் மற்றும் உள்கட்டமைப்பு போன்ற முக்கிய பிரிவுகளில் நிலையான மற்றும் சரிசமமான வளர்ச்சியை எய்திட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு திட்டங்களின் செயலாக்கத்தை இத்துறை கண்காணித்து வருகிறது.

அரசின் அனைத்து துறைகளாலும் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தை சம்பந்தப்பட்ட

துறைகளுடன் ஒருங்கிணைந்து, கண்காணித்து, திட்டங்களின் பயன்கள் ஏழை மக்களுக்குச் சென்றடைவதை இத்துறை உறுதி செய்கின்றது.

2. துறையின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்:

2.1 சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் பின்வரும் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- ❖ அரசால் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்த முன்னேற்றத்தினைக் கண்காணித்தல்.
- ❖ அரசின் சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகளைத் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.
- ❖ கள ஆய்வுகள் மேற்கொள்ளுதல், மண்டல மற்றும் மாவட்ட அளவில் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல் மற்றும் திட்டச் செயலாக்கத்தில் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் களைவதற்குரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.
- ❖ செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் தரம் மற்றும் அளவீடு போன்ற அம்சங்கள் குறித்து அரசுக்குத் தேவையான குறிப்புகள் வழங்குதல் மற்றும் உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.
- ❖ மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகளைத் (கள ஆய்வு மற்றும் ஆய்வறிக்கைகளின் அடிப்படையில்) தொகுத்தும் கொள்கை அளவில் மாற்றங்கள் தேவைப்படும் இனங்கள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு தலைமைச் செயலாளர் வழியாக அறிக்கை சமர்ப்பித்தல்.
- ❖ வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்கு ஏதுவாக தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகளில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் பரிந்துரைத்தல்.
- ❖ தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, கூர்ந்தாய்வுமூலம் திட்டங்களை மறுசீரமைத்தல் மற்றும்

2017 ஜூன் 20]

திட்ட நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்துவதற்கும், அரசு நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கான வழிவகைகளைச் செய்தல்.

❖ *அரசுக்குத் தேவையான சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.*

2.2 அரசின் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்படுவதைப் உறுதி செய்யும் விதமாக ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்பினை பிரத்தியேகமாக தலைமைச் செயலகத்தில் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. அறிவிப்புகள் நிறைவேற்றப்படுதல் மற்றும் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம் ஆகியவற்றை அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் மாவட்ட அளவில் காலமுறை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்வதன்மூலம் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

3. கண்காணிப்பு:

திட்டங்களின் பயன்கள் பயனாளிகளுக்கு குறித்த காலத்தில் சென்றடைவதை உறுதி செய்வதற்கு கண்காணிப்பு முறை தவிர்க்க முடியாததாகும். அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் நிறைவேற்றப்படுவதைச் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிக்கின்றது.

3.1 கண்காணிப்பு முறைகள்:

அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்க நிலை தொடர்பான விவரங்களை தொடர்ச்சியாக பதிவு செய்வதற்கு கண்காணிப்பு எனும் நிருவாக முறை சிறந்த பங்களிப்பாற்றி வருகின்றது. கண்காணிப்புமூலம் பல்வேறு திட்டங்களின் செயல் மற்றும் நிதி ஆகியவற்றின் முன்னேற்ற நிலைகள் குறித்த விவரங்களைக் கால இடைவெளிகளில் அரசுக்கு இத்துறை அளித்து வருகின்றது. திட்டங்களின் பயன்கள், பயனாளிகளுக்குச் சென்றடைவதை சீர்படுத்துவதற்கும் மேலும் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பு தேவைப்படுகின்றது.

திட்டங்கள் திறமையாக செயல்படுத்தப்படுவதற்கு தேவையான விவரங்களை கண்காணிப்பு அளிக்கின்றது. திட்டப் பயன்கள் இலக்கு மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை

[2017 ஜூன் 20

உறுதி செய்வதற்கும், கள அளவில் திட்டங்களின் செயல்பாட்டில் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்டறிவதற்கும் தேவையான விவரங்களை அளிக்கின்றது. மேலும், குறித்த கால இடைவெளிகளில் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்த நிலையினை மதிப்பீடு செய்வதையும் கண்காணிப்பு உறுதி செய்கின்றது. திட்டங்கள் செயல்படுத்தப்படும்போதே, அவற்றின் முன்னேற்றம் குறித்த விவரங்களை முறையாக சேகரிக்கவும், பகுப்பாய்வு செய்வதற்கும் தொடர் கண்காணிப்பு வழிவகை செய்கின்றது.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு திட்டங்களின் தற்போதைய முன்னேற்ற நிலை குறித்த விவரங்களைச் சேகரித்து பதிவு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும், அரசின் திட்டங்கள், திட்டமிட்டப்படி செயல்படுத்தப்படுகின்றனவா என்பதையும், திட்டச் செயலாக்கத்தில் உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து செயலாக்கத்தினை மேம்படுத்துவதற்கும் கண்காணிப்பு வழிவகை செய்கின்றது. பல்வேறு துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிலையினை உன்னிப்பாக கண்காணிப்பதுடன், குறிப்பாக அரசின் சிறப்புத் திட்டங்களின் மீது தனிக் கவனம் செலுத்தி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிக்கின்றது.

3.2 அரசின் சிறப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்:

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும், மக்களின் நீண்டநாள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அரசுத் துறைகளின் பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்கத்தின் நிலை குறித்த தகவல்களை உரியத் தகவல் தொழில்நுட்பங்களைக் கொண்டு பதிவு செய்வதற்கு ஏதுவாக உடன்நிகழ் (online) முறையினை இத்துறை உருவாக்கி உள்ளது.

3.3 செயல்திறன்மிக்க கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட நுட்பங்கள்:

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, திறமையான கண்காணிப்பினை உறுதி செய்வதற்கு பின்வரும் நுட்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

2017 ஜுன் 20]

(அ) அறிவிப்புகளைக் கண்காணித்தல்:

சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பெறும் மாண்புமிகு ஆளுநர் உரையில் உள்ள அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையில் உள்ள அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்படும் அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் அறிவிக்கப்படும் அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்படும் அறிவிப்புகள் ஆகியவற்றின் முன்னேற்றங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்க நிலை குறித்த முன்னேற்ற விவரங்கள் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து இத்துறையால் சேகரிக்கப்படுகின்றன. மேலும், தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்படும் "அனைத்து துறை செயலாளர்கள்" ஆய்வு கூட்டத்திற்கு தேவையான விவரங்களை இத்துறை வழங்குகிறது. இரண்டு வாரத்திற்கு ஒருமுறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு முன்னேற்ற அறிக்கையினை இத்துறை சமர்ப்பிக்கிறது. அறிவிப்புகளின் தற்போதைய முன்னேற்ற விவரங்களை சம்பந்தப்பட்ட துறையினர் உடனுக்குடன் இத்துறைக்கு வழங்கிட ஏதுவாக இணையவலைப் பக்கங்கள் இத்துறையால் ஏற்படுத்தப்பட்டு, தலைமைச் செயலக உள்வலையதளத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், பலவிதமான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாக பிரத்தியேக உள்உறைவிட (in-house) *மென்பொருள் ஒன்று வடிவமைக்கப்பட்டு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் தங்களின் துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் தொடர்பான நிலையினை உடன் நிகழ்வு முறையில் வலைப்பக்கத்தில் பதிவு செய்வதற்கு ஒருங்கிணைப்பு அலுவலர்களை நியமித்துள்ளது.*

பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டு, அறிவிப்புகளின் முன்னேற்ற நிலைகள் வகைப்படுத்தப்பட்டு, தொகுப்பு அறிக்கைகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் இத்துறையால் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு தொகுக்கப்பட்ட அறிக்கைகள், அரசின் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்புப் பணியானது திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகப்படுத்தவும் / திட்டங்களை விரிவுபடுத்தவும் / புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் / நடைமுறையில் உள்ள திட்டங்களில் மாற்றங்களைச் செய்வதற்கும் தேவைப்படும் உள்ளீடுகளை வழங்குகின்றது.

(ஆ) அரசின் முதன்மைத் திட்டங்களைக் கண்காணித்தல்:

கிராமப்புற ஏழை மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும், அதன் வாயிலாக அவர்களின் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்திடவும் கறவைப்பசு, வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்குதல், தகவல் தொழில்நுட்ப இடைவெளியைக் குறைப்பதற்காக மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல், ஏழைகளின் நல்வாழ்வினைப் பாதுகாத்திட விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கருவுற்ற பெண்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், ஏழை மற்றும் நலிவடைந்த மகளிருக்கு பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ் நிதியுதவியுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 8 கிராம் தங்க நாணயம் வழங்குதல் மற்றும் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்ற முதன்மைத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற இத்திட்டங்களை, கூர்ந்து கண்காணிக்கும் பணி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து இத்துறை சேகரிக்கின்றது. அவ்வறிக்கைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் தொகுப்பு அறிக்கைகள் அரசின் ஆய்வுக் கூட்டங்களுக்கு அடிப்படை விவரங்களாக அமைகின்றன.

(இ) உயர்நிலை கண்காணிப்புக் குழு:

அரசின் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும் கண்காணிப்பதற்காகவும் உயர்நிலை கண்காணிப்புக் குழு ஒன்று அரசால் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:

2017 ஜூன் 20]

வ. எண்	அலுவலரின் பதவி	நிலை
1.	அரசு தலைமைச் செயலாளர்	தலைவர்
2.	அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை	உறுப்பினர்
3.	அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை	உறுப்பினர் -செயலர்
4.	தொடர்புடைய துறைகளின் அரசு முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள்	உறுப்பினர்கள்

உயர்நிலை கண்காணிப்புக் குழுக் கூட்டங்களில் அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம் குறித்த விவரங்கள் விவாதிக்கப்படுவதுடன், செயலாக்கத்தில் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அதற்கான தீர்வுகள் குறித்தும் முடிவு செய்யப்படுகின்றது. தேவைப்படும்போது கூட்டப்படும் உயர்நிலைக் கண்காணிப்புக் குழுகூட்டங்களில் சிறப்புத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்படுவதுடன் அதன் தற்போதைய நிலை, செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவைகுறித்தும் விரிவாக விவாதிக்கப்படுகின்றன.

இக்கூட்டத்தில் நடைபெறும் விவாதங்களின் அடிப்படையிலும், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகளின் அடிப்படையிலும், துறைகளின் பின்புல அறிக்கைகளின் அடிப்படையிலும், அலுவலர்களின் கருத்துக்களின் அடிப்படையிலும் கொள்கை அளவிலான மாற்றங்கள் மற்றும் சிறப்புத் திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள் புதுப்பிக்கப்படுகின்றன.

(ஈ) மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:

மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருங்கிணைப்பு அலுவலர்கள், திட்டங்களைச் செயல்படுத்தும்

துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதுடன், திட்டங்கள் குறித்த தகவல்களைப் பெற்றிடவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு அலுவலர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் தேவையான உதவிகளை வழங்குகின்றனர்.

(உ) கள ஆய்வுகள்:

மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன்கள் குறித்து இத்துறையின் அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

(ஊ) மண்டல ஆய்வுக் கூட்டங்கள்:

அரசின் சிறப்புத் திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டங்கள், மண்டல அளவில் மாவட்ட ஆட்சியர்களுடன் நடத்தப்படுகின்றன. இதுபோன்ற மண்டல ஆய்வுக்கூட்டங்களில் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள், திட்டச்செயலாக்க நடைமுறைகள் குறித்த விரிவான கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு பயன்பெறுகின்றனர். வழங்கப்படும் சேவையின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு நடத்தப்பெறும் இத்தகைய ஆய்வுக்கூட்டங்கள், கள அளவிலான இடர்ப்பாடுகள்/ திட்டங்களில் மாறுதல்கள் / முன்னேற்றங்கள் ஆகியன குறித்து மாவட்ட அலுவலர்கள் எடுத்துரைப்பதற்கு வழிவகை செய்கின்றன.

3.4 கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசுச் செயலாளர்கள்/முதன்மைச் செயலாளர்கள்/ கூடுதல் தலைமைச் செயலாளர்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, முக்கிய திட்டங்களைக் கள ஆய்வு மேற்கொண்டு, திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதில் இடர்ப்பாடுகள் ஏதேனுமிருப்பின் தக்க ஆலோசனைகளையும், தீர்வுகளையும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்குகின்றனர்.

2017 ஜூன் 20]

மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்,துறைகளுக்கிடையேயான இடர்ப்பாடுகளைக் களைவதற்கு ஏதுவாக துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு, நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசளவில் மேற்கொள்ளப்படவேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைகளை அளிக்கின்றனர். பொதுமக்களின் பெருகிவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் களஅளவிலான தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கொள்கைகளைத் தொடர்ந்து செம்மைப்படுத்திட நடைமுறையில் உள்ள ஏற்பாடுகள் வழிவகை செய்கின்றன. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் தங்களின் ஆய்வுக் குறிப்புகள், திட்டங்களின் மேம்பாடு குறித்து எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாறுதல்கள் குறித்த பரிந்துரைகள் ஆகியவற்றை அரசுக்கு அளிக்கின்றனர். கண்காணிப்பு அலுவலர்களின் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் திட்டங்கள்:

அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைக் கண்காணிப்பதுடன், பின்வரும் இரண்டு முதன்மைத் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையைச் சார்ந்ததாகும்.

1. *மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்.*
2. *மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல்.*

4.1 மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்:

இந்திய மாநிலங்களிலேயே மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்வதுடன், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீட்டில் உலகளவில் விரும்பப்படும் மாநிலமாகவும் திகழ்ந்து வருகின்றது. ஹார்வார்டு பல்கலைக்கழகத்தின் பன்னாட்டு வளர்ச்சி மையம், கணினிக் கல்வியை ஊக்குவிப்பதிலும் கணினி சார்ந்த அரசு சேவைகளை வழங்குவதிலும் தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதிலும் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளது, தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகத்தின்

வளர்ச்சிக்குச் சான்றாகும். இந்த தொழில்நுட்ப சகாப்தத்தில், உலகம் ஒரே பெருங்கிராமமாக உருவானதுடன் கணினிக் கல்வியறிவு உலக வேலைவாய்ப்புச் சந்தையில் பல்வேறு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், தகவல் தொடர்பு தொழில்நுட்பமானது எதிர்வரும் உலக சமூகப் பொருளாதார மாற்றத்திற்கான நுழைவாயிலாக அமைகிறது. இருப்பினும், ஊரக மற்றும் நகர்ப்புறங்களில், ஏழை மற்றும் வசதிபடைத்தோருக்கிடையே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப இடைவெளி உள்ளது.

இத்தகைய தகவல் தொழில்நுட்ப இடைவெளியை உணர்ந்து அதனை இணைக்கும் முயற்சியாக தமிழக அரசு, தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் முன்னோடித் திட்டத்தினை 2011-2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. கணினி அறிவைப் போதிக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த திட்டமான மாணாக்கர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம், மாநிலம் முழுவதிலும் உள்ள ஏழைக் குடும்பங்களில் உள்ள மாணக்கர்களுக்கு உயர்க் கல்வியை அடைய உதவும் உன்னத நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டு உயர்க்கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்கள், தொழில்நுட்பத்தின் சமீபத்திய நுட்பங்களை அறிந்து கணினி பயன்பாட்டில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏதுவான தொழில்நுட்ப அறிவுத்திறன் பெற்று வேலைவாய்ப்புச் சந்தைகளில் வெற்றி பெறச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம், மாநில அரசின் கல்விக் கொள்கையின் முக்கிய அம்சங்களான “அணுகுதல், பங்கேற்பு, வெற்றிபெறல்” ஆகியவற்றை அடைவதற்கு உறுதுணையாய் உள்ளது.

2011-12 மற்றும் 2012-13 ஆம் ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. 2013-14 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், அரசு

2017 ஜூன் 20]

மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைகின்றனர்.

ஆண்டு வாரியாக / கல்வி நிறுவனங்கள் வாரியாக மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல்

ஆண்டு	பள்ளிகள்	கலை/ அறிவியல் கல்லூரிகள்	பொறியியல் கல்லூரிகள்	பல்தொழில் நுட்பக் கல்லூரிகள்
2011-12	12-ஆம் வகுப்பு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு	இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு
2012-13	12-ஆம் வகுப்பு	மூன்றாம் ஆண்டு	இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு
2013-14 முதல்	12-ஆம் வகுப்பு	-	-	முதலாம் ஆண்டு

அரசின் சிறப்புத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதைக் கண்காணித்திட சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை 2011 ஆம் ஆண்டு அரசால் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. இத்துடன், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வல்லுநர்கள் இத்துறையில் இல்லாத காரணத்தினால், மடிக்கணினி கொள்முதல் செய்வதற்கு "கொள்முதல் முகமையாக" தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) செயல்படும் வகையில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை எல்காட் வசம் கொள்முதல் பணியினை ஒப்படைத்தது. இத்திட்டத்தின்கீழ் மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்வதற்கான நிருவாக ஒப்புதல் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் வழங்கப்படுகிறது. இதற்குத் தேவையான நிதி எல்காட் நிறுவனத்திற்குச் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் விடுவிக்கப்பட்டு வருகிறது.

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலமாக 2011-12 மற்றும் 2012-13 ஆகிய ஆண்டுகளில்

மடிக்கணினிகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2013-14 ஆம் ஆண்டு முதல் மடிக்கணினிகள் பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மடிக்கணினிகள் "Windows 10 pro" தேசிய கல்வி பதிப்பு மற்றும் மேம்பட்ட கணினி பயன்பாடு வளர்ச்சி மையத்தின் BOSS / LINUX ஆகிய இரட்டை தொடக்க வசதி உடையதாகவும், வைரஸ் எதிர்ப்பு மென்பொருளுடனும், தமிழ் இணைய தொடக்கக் கல்விக் கழகம் மற்றும் கல்வித் துறைகளின் பாடத்திட்டங்களை உள்ளடக்கியும், ஆங்கிலம் மற்றும் தமிழ் எழுத்துக்களுடன் நாணயக் குறியீட்டுடன் கூடிய ஒருங்கிணைந்த தொடு தளம் (Touch Pad) அடங்கிய தரமான விசைப்பலகையும் வழங்கப்படுகிறது. பார்வைத் திறன் குறைபாடுள்ள மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினிகளில் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. மேலும், மடிக்கணினியின் பாதுகாப்பிற்காக தோள் பையுடன் (Back Pack) கூடிய மடிக்கணினி வழங்கப்படுகிறது. மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் வாயிலாக, பரவுத்தாள் (Spread Sheet), விளக்கக் காட்சி (Power Point Presentation) மற்றும் சொற்செயலி (Word Processing) ஆகிய தொழில்நுட்ப அறிவுத் திறன்களை மாணாக்கர்கள் ஆர்வமுடனும் விரைவாகவும் கற்க இயலுகிறது.

மடிக்கணினிகள் மற்றும் அதனில் உள்ள மின்கலன்களுக்கும் ஓராண்டு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. மடிக்கணினிகள் நன்கு செயல்படுவதற்கான தொடர் பராமரிப்பினை உறுதி செய்யும்பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் சேவை மையங்களை தொடர்புடைய நிறுவனங்கள் அமைத்துள்ளன. இச்சேவை மையங்கள்மூலம் பராமரிப்பு மேற்கொள்ளுதல் குறித்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, தற்போதைய தலைமுறை மாணாக்கர்களுக்கு முழு அறிவுசார் வாய்ப்புகளுக்கு வழிவகை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் வேலை தேடத் துவங்கும் காலத்திலேயே, நவீன தொழில்நுட்பங்களை அறிந்து பயனடையும் வாய்ப்பினை இத்திட்டத்தின் வாயிலாக அரசு வழங்குகிறது.

2017 ஜூன் 20]

மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் ஒரு வெற்றிகரமான திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்கள் கணினியின் பல்வேறு பயன்பாடுகளைக் கண்டறிந்து அதனை உபயோகித்துக்கொள்ள முடிகிறது. மேலும், குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள், குறிப்பாக இளம் தலைமுறையினர் கணினி குறித்த தொழில்நுட்பத்தை அறிந்துகொள்வதற்கும், இயக்குவதற்கும் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதும் தெரிய வருகிறது. இந்த வளர்ச்சியானது எதிர்காலத் தலைமுறையினர் கணினி தொழில்நுட்ப கல்வியறிவிற்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், கணினி தொழில்நுட்ப உலகின் அபரிமிதமான வாய்ப்புகள் வாயிலாக உலக அளவில் சிறந்து விளங்கவும் வழிவகை செய்துள்ளது. குடும்பத்தின் இளம் தலைமுறையினர் இதன்மீது கொண்டுள்ள ஆர்வம், சமூகத்தில் நிகழவிருக்கும் ஒரு மாற்றத்தின் அறிகுறியினை வெளிக்கொணர்கிறது. மொத்தத்தில், மாணவர்கள் மடிக்கணினியை ஒரு கருவியாக மட்டும் பார்க்காமல், ஏற்றமிகு எதிர்காலத்திற்கான சாளரமாகவும், சமூக நிலையில் உயர்ந்து விளங்க ஓர் ஏணியாகவும் கருதுகின்றனர்.

இந்தத் திட்டம், மாணாக்கர்களின் திறன் மதிப்பை கூடுதலாக்குவதோடு, அவர்களின் படைப்புத் திறனை தூண்டுவதற்கு ஒரு தூண்டுகோலாய்த் திகழ்கிறது. மேலும், காலப்போக்கில் இத்திட்டத்தின்மூலம் ஏற்படும் மாற்றமானது, மாணவர் சமுதாயத்தின் நிறைவான வெற்றியின் அடையாளமாகத் திகழும்.

தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதுமையான திட்டங்கள் பிற மாநிலங்களால் பின்பற்றப்படுவதைப்போலவே இத்திட்டமும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை ரூ.4,842.30 கோடி மதிப்பில் 31.78 இலட்சம் மடிக்கணினிகள் விலையேதுமின்றி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2016-17 ஆம் ஆண்டிற்கு 5.35 இலட்சம் மடிக்கணினிகள் மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு,

[2017 ஜூன் 20

ரூ.867.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், நடப்பாண்டு 2017-18-லும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கென ரூ.758.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் இதன்மூலம் உத்தேசமாக 5.65 இலட்சம் மாணாக்கர்கள் பயன்பெற உள்ளனர்.

4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்:

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைமூலம் மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது, மகளிருக்கு சிரமமான வீட்டு வேலைகளிலிருந்து நிவாரணம் அளிப்பதாகும். ஏறத்தாழ 1.75 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு இச்சாதனங்கள் ரூ.7,622.00 கோடி செலவில் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டன. இச்சாதனங்கள் அவர்களின் இல்லங்களை அலங்கரித்ததன்மூலம், ஏழை மகளிரின் வாழ்க்கைத் தரம் பெருமளவில் மேம்பட்டதுடன், அவர்களின் சமுதாய நிலையையும் உயர்த்தியுள்ளது. இத்திட்டம் மகளிர், தங்களை பிற பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக்கொள்ள வாய்ப்பு அளிப்பதன்மூலம் பொருளாதாரத்தில் தங்களின் பங்களிப்பினை உயர்த்திடவும் அங்கீகாரம் அளிக்கின்றது.

4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP)

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மடிக்கணினிகள், மாணவர்களுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்க, நிறுவன வளத் திட்டமிடல் குறித்த ஓர் உயரிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மேலாண்மை மென்பொருள், நிறுவனத்தின் அனைத்து பணிகளையும் ஒருங்கே நிருவகிக்க உதவுகின்றது. இந்த நிறுவன வளத்

2017 ஜூன் 20]

திட்டமிடல் மென்பொருள், பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கிய ஒரு மென்பொருளாகும். மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தைக் கண்காணிப்பதற்காக இந்த மென்பொருள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் (எல்காட்) உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) மூலம் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தினைக் கண்காணிப்பதற்கு இம்மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.

5. முடிவுரை:

தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இந்நலத்திட்டங்கள், சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மாற்றி தமிழகத்தை முன்னோடி மாநிலமாக நிலை நிறுத்துகின்றது. ஆரோக்கியமான தாய்மார்கள், ஆரோக்கியமான மகவை பெற்றிடுவதை உறுதி செய்தல், மாணாக்கர்களின் திறன் மற்றும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல், ஏழை எளியோருக்கான வாழ்வாதாரங்களை மேம்படுத்தி அவர்களின் வருமானத்தைப் பெருக்குதல், ஊரக ஏழை மக்களுக்கு சுற்றுச்சூழலுக்குத் தகுந்த வீடுகள் வழங்குதல், சமுதாயத்தில் கைம்பெண்கள் மற்றும் நலிவடைந்தோருக்கு உதவுதல் மற்றும் தேவையுள்ள அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு வழங்குதல் போன்ற நலத்திட்டங்களின்மூலம் நற்பயன்களை தமிழக மக்கள் அடைந்து வருகின்றனர்.

அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள், அறிவிப்புகள், தேர்தல் வாக்குறுதிகள் ஆகியவற்றை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஒரு பிரத்தியேகமான மென்பொருள்மூலம் கண்காணிக்கின்றது. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் மாற்றம் செய்வதற்குத் தேவையான விவரங்களை அளிப்பதன்மூலம் திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்கின்றது.

பல்வேறு தரப்பு மக்களின் நன்மைக்காகவும், செழிப்பான வாழ்விற்காகவும் தமிழக அரசு அறிவித்த புதுமையான சிறப்புத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்திட சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சிறந்த முறையில் திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்து வருகின்றது. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கண்காணிப்புப் பணியானது இம்மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.
